எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

விஷ்ணுப்ரியா

அத்தியாயம் 1

மதுரை.. சிவகங்கை மாவட்டம்.. கீழடி அகழ்வாராய்ச்சிப் பிரதேசம்.

“அண்ணா.. கொஞ்சம் மெதுவா.. அகழ்வாராய்ச்சிக்காக தோண்டுறோம்.. கொஞ்சம் நிதானமா தான் தோண்டணும்.. இல்லைன்னா.. பல தொல்லியல் பொருட்கள் சிதைஞ்சு போக வாய்ப்பிருக்கு.. அதனாலே மெதுவா..” என்று அங்கிருந்த அகழிகளுள்..ஓர் அகழியில் நின்று அங்கு மணலைத் தோண்டிக் கொண்டிருந்த ஒரு பணியாளிடம் கூறிக் கொண்டிருந்தாள் அவள்.

அவள், அந்தச் சுந்தரக் குரலுக்கு சொந்தக்காரியான அவள், யாழினி!!

ஃபுல் ஸ்லீவ் டீஷேர்ட்டும், முழங்காலுக்கு சற்று கீழே வரையான டெனிமும், இடது கையில் வாட்ச்சும் அணிந்திருந்தவள்,

தன் அடர்ந்த கூந்தலை எல்லாம் திரட்டி..உச்சந்தலையில் ஹேர் இன் பன் ஸ்டைலில் அடக்கியிருந்தாள்.

கண்களில் இருக்க வேண்டிய கூலர்ஸ்... அவள் உச்சந்தலையில் அடைக்கலமாகியிருந்தது.

மதுரையில் அடித்துக் கொண்டிருந்த அக்னி நட்சத்திர வெய்யிலில்.. அந்த முற்பகல் வேளையிலேயே.. டீஷேர்ட்டின் முதுகுப்புறம் முழுதும் வியர்வோடு நனைந்து தோளோடு ஒட்டித் தெரிந்தது.

அவளுடைய பால் நிற வர்ண சருமத்துக்கும்.. வெயிலுக்கும் எப்போதும் ஏழாம் பொருத்தம் தான்.

இருப்பினும் வெயிலை சுகித்துக் கொள்ள வேண்டிய அவசியம் அவளுக்கு! அவள் செய்யும் தொழில் அப்படி!!

அவளுடைய கன்னம், மூக்கு எங்கிலும் பிசுபிசுத்துக் கொண்டிருந்தது “சன் ப்ளாக் லோஷன்” .

ஆகமொத்தத்தில் யாழினி.. அக்மார்க் மாடர்ன் பெண்!! சில சமயங்களில் அல்ட்ரா மாடர்னாகவும்.. தேவைப்பட்டால் அக்மார்க் டிரெடிஷனல் பெண்ணாகவும் அவதாரம் எடுப்பதுவுமுண்டு.

அதை கால, சூழல், நேரமே முடிவு செய்யும்!!

அதே அகழியில்... தோன்றி எடுத்த மணல் தாழியை எடுத்து..

அகழியின் மேலே இருந்த இன்னொரு பணியாளுக்கு மாற்றிக் கொடுத்துக் கொண்டிருந்த.. முப்பது, முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண்ணொருத்தியை நோக்கியவள்,

“என்ன காமாட்சிக்கா?.. நேத்து உங்க பையனுக்கு காய்ச்சல்னு சொன்னீங்க? வீட்டுல இருந்து பார்த்துக்காமல் இன்னைக்கு வேலைக்கு வந்திருக்கீங்க?” என்று கேட்டாள் யாழினி. அந்த காமாட்சியக்காவை மாத்திரமல்ல. அங்கே.. கீழடியில் இவர்களுடன் இணைந்து அடிமட்ட தொழிலாளிகளாக வேலை பார்க்கும் அத்தனை பேரையும் யாழினி..

வயதுக்கு ஏற்றாற் போல ‘அக்கா’ என்றோ, ‘அண்ணா’ என்றோ, ‘தாத்தா, பாட்டி, அங்கிள்’ என்றோ முறை சொல்லி அழைத்துத் தான் பழக்கம்!! அதனால் அங்கே பணிபுரிந்த இருபத்தைந்து ஆய்வாளர்களுக்குள்ளும், யாழினி அவர்களுக்குத் தனி!! யாழினி தராதரமே பாராமல்.. அவர்களோடு அமர்ந்து உண்பாள்; அவர்கள் வீட்டுச்சாப்பாட்டில் எல்லாம் எந்த ஆசாரமும் பார்க்க மாட்டாள்;

அவளுடைய வெள்ளந்தியான முத்து மூரல் சிரிப்பு அனைவரையும் கவர்ந்து தானிருந்தது. ஆக,

அவள் அவர்களோடு பிணைந்து ஐக்கியமாகியே போனாள்.

அந்தப் பெண்மணியும் தாழியைக் கைமாற்றிக் கொண்டே, “என்ன பண்றதுமா.. நாள் கூலி கிடைக்குதுல்ல?..வந்து தான் ஆகணும்?” என்று பெருமூச்சு விட,

நாள் கூலிக்காக.. குடும்ப வருமைக்காக உழைக்கும் காமாட்சியக்காவை எண்ணி ஒரு கணம் பரிதாபமாக இருந்தது யாழினிக்கு.

அவள் முகம் பரிதாப பாவத்தைக் காட்டிய நேரம்.. அவள் சிந்தனையைக் களைத்தது.. சக ஆய்வாளினி தியாவின் குரல்.

“யாழீஈஈஈ??”

குரல் வந்தது அந்த அகழியின் மேலேயிருந்து. மெல்ல திரும்பி அண்ணாந்து பார்த்தாள் யாழி என்கின்ற யாழினி.

யாழினி அண்ணாந்து பார்க்கையிலே.. ‘என் மனையாள் உஷை தான் இவளோ?’ என்று சூரிய பகவானும் கன்பியூஸ் ஆனாரோ என்னவோ?

அவருடைய ப்ரைட்னஸை கொஞ்சம் அதிகமாகவே இவள் முகத்தில் பாய்ச்ச.. கண்கள் பச்சக்கென்று கூசியது யாழினிப் பெண்ணுக்கு.

கூச்சத்தில் மூடிக் கொண்ட கண்களுக்கு.. கூலர்ஸைப் போட்டு குடை பிடித்தவள், தற்போது தெளிவாகவே தியாவைப் பார்த்தாள்.

“ப்ச்சு.. தியா வேலை பண்ணிட்டிருக்குறது புரியலையா? எதுவா இருந்தாலும் அப்புறம் பார்த்துக்கலாம்..” என்று சிம்ப்பிளாக தியாவின் பேச்சைக் கத்தரித்துக் கொண்டவள், மீண்டும் தன் வேலைக்குத் திரும்பினாள்.

மேலேயிருந்து திரும்பக் கேட்டது தியாவின் குரல்.

“ஐய்யோஓஓ யாழூஊஊஊ!!!... யூ ஷூட் கம் அப்.. சம்திங் சீரியஸ் இஸ் ஹேப்பனிங்.” — தியாவின் பதற்றமான குரல் இவளையும் கொஞ்சம் பதறவைத்தது.

“அப்படி என்ன சீரியஸ்.. சரி இரு வரேன்” என்று புருவங்கள் இடுங்க, நெற்றி சுருங்க, முணுமுணுத்தவள், அகழிக்குள் போடப்பட்டிருந்த சின்ன மூங்கில் படி ஏணியில் ஏறி மேல்தரைக்கு வந்தாள்.

தன் கண்ணிலிருந்த கூலர்ஸை உச்சந்தலைக்கு இடம்மாற்றிக் கொண்டே , இடுப்பில் கை வைத்து நின்று, சின்னஞ்சிறு மூச்சுக்கள் வாங்கி விட்ட வண்ணம், ‘‘என்னடீ?’’ என்று கேட்டாள் யாழினி.

அடுத்து தியா சொன்ன விஷயத்தில் கொஞ்சமில்லை.. கொஞ்சம் ஓவராகவே கடுப்பாகிப் போனாள் யாழினி.

அப்படி கோபத்தை மூட்டுமளவுக்கு என்ன சொன்னாள் தியா?

சக ஆய்வாளினி தியா சொன்னதெல்லாம் இவை தான்.

முகத்தில் கவலையும், களேபரமும் ஒருங்கே ஓட, ‘‘வேலையெல்லாம் நிறுத்த சொல்லி மேலிடத்துல இருந்து ஆர்டர் வந்திருக்கு.. இதைப் பாரு’’ என்று சில பல காகிதங்களை யாழியினிடம் மற்றவள் ஒப்படைக்க,

யாழினியின் கண்கள் ‘மூன்று தலை சிங்கத்தின்’ இலட்ச்சனை பொறிக்கப்பட்டிருந்த அந்த காகிதத்தில் அவசர அவசரமாக அலைபாய்ந்தது.

இரண்டு மூன்று தாள்களுக்கு மேலாக.. ஏதேதோ ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்டிருந்த செய்தியின் சாராம்சமோ..

அந்த தியாவை விடவும், யாழினையைத் தான் கொஞ்சம் அதிகமாகவே அதிரவைத்தது.

ஏனெனில் தியாவுக்கு அந்த செய்தி பழையது தான். ஆனால் யாழினிக்கு அந்த செய்தி முற்றிலும் புதிது மற்றும் எதிர்பார்க்காதது.

நிதிப்பற்றாக்குறை காரணமாக.. இரண்டாம் கட்ட கீழடி அகழ்வாராய்ச்சிப் பணிகளை தற்காலிகமாக நிறுத்துவதாகவும்,

மேலும் இந்தக் கீழடி அகழ்வாராய்ச்சிகளுக்குப் பொறுப்பாகவிருந்த ஆய்வாளர் டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன், உடனடியாக அஸாம் மாநிலத்தின் அருங்காட்சியகத்துக்குப் பொறுப்பாக மாற்றப்பட்டிருப்பதாகவும் எழுதப்பட்டிருந்தது.

அதிலிருப்பவற்றை உதடுகள் மட்டும் அசைய, சத்தமேயின்றி வாசித்து முடித்தவள், நிமிர்ந்த போது அவள் கண்கள் கோபத்தில் சிவந்திருந்தது.

“வாட் தி ஹெல் இஸ் கோயிங்க் ஓன்?”- கடிதத்தை இரு கைகளாலும் கசக்கியவள், தியாவைப்

பார்த்துக் கத்திக் கொண்டே, ஆய்வாளர்கள் இருந்த கூடாரத்தை நோக்கி தன் பார்வையைத் திருப்பினாள் சுந்தரப்பெண் யாழினி.

அவர்கள் தயாரித்திருந்த கூடராத்தின் சற்று அருகாமையில் வரிசையாக நின்றிருந்தன ஐந்து வெள்ளை நிற ஜீப்கள்.

அதைக்கண்டதும்... இவளுக்கோ ஏகத்துக்கும் பல்ஸ் எகிற, அதன் விளைவாக தன் தனங்கள் ஏறி இறங்க மூசு மூசு என்று மூச்சு வாங்கிக் கொண்டிருந்தவள்,

ஆங்கிலத்தில் வாய் திறந்த போது அத்தனையும் வந்து விழுந்தது இடையிடையில் பீப் போட வேண்டிய நாரசமான வார்த்தைகள்!!

"வாட் த ****.!!! இரண்டாவது கட்ட அகழ்வாராய்ச்சிகள் போய்ட்டிருக்கு.. ********* இப்போ வந்து நிறுத்த சொன்னால் எப்படி? ஃபக்******* *** கவர்மென்ட்... இதுக்கு சாரும் ஒத்துக்கிட்டாரா..? இதை நான் இப்படியே விடப் போறதில்லை.." என்று செம்மையாகவே அர்ச்சித்துக் கொண்டே கூடாரத்தை நோக்கி நகர முயன்றாள் அவள்.

ஃபேக்ஸில் வந்த தகவலை யாழினியிடம் இப்போதே சொல்லியிருக்கக் கூடாதோ? என்று காலம் தவறி கைசேதப்பட்டாள் தியா.

பின்னே முன்கோபக்காரி யாழினி.. கூடாரத்துக்குள் நுழைந்து, அங்கே கூட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் மீது எக்குத்தப்பாக வார்த்தைக்கணைகளை வீசி விடுவாளோ?

என்ற பயம் எழுந்து கறையானாக அவளை அரிக்கவே,

சட்டென யாழினியின் கைச்சந்தை இரு கைகளாலும் பற்றிக் கொண்டாள் மற்றவள்.

தியாவின் கண்களில் மன்றாட்டம் தெரிந்தது; சுந்தரப்பெண் யாழினியின் கண்களிலோ கோபம் சுடர்விட்டு எரிந்தது.

“ஹேய் யாழி.. உன் கோபத்தால ஒண்ணும் நடக்கப் போறது இல்லை.. ப்ரோஃபசர் இஸ் இன் மீட்டிங்.. அவங்க கூட தான் பேசிட்டிருக்காரு.. அவர் வந்ததும் என்ன? ஏதுன்னு தெரிஞ்சிக்கலாம்.. அப்புறம் நிதானமா பேசிக்கலாம்..”- என்று மெல்ல பேசி யாழினியை மலையிறக்க முயன்றாள் தியா.

தன்னில் பதிந்த தியாவின் கையை அழுத்தமாகப் பற்றி அகற்றிய வண்ணமே,

“நீ வேணா அவர் வந்ததும்... நிதானமா.. நின்னு.. பேசிக்க .. என்னால முடியாது.. கையை விடு..” என்றவள் ,

விறுவிறுவென அந்த கூடாரத்தை நோக்கி நடக்க.. “ஹேய் ப்ளீஸ்டீ.. வேணாம்டீ.. நான் சொல்றதைக் கேளு” என்றபடி யாழினியின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாதபடி பின்னாலேயே ஓடினாள் தியா.

யாழினி அந்த கூடாரத்தை நெருங்கி வருவதற்குள்ளாகவே, உள்ளிருந்து டர்பன் அணிந்த.. சுமார் ஆறரை அடி உயரத்துக்கும் அதிகமாக.. பருத்த உடலுடன், ராட்சச சீக்கியனொருவன் வெளியே வர..

அந்த மாமிசப் பருவதத்தின் நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல்,

நெஞ்சைப் பிடித்துக் கொண்டே கிட்டத்தட்ட மெல்லோட்டமொன்றுடனேயே வெளியே வந்து கொண்டிருந்தார் டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன்.

கீழடி அகழ்வாராய்ச்சிகளுக்குப் பொறுப்பான டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன். அவர் பின்னாடி அந்த ஆய்வில் பங்கு கொண்டிருக்கும் இதர ஆய்வாளர்கள்!!

அவர்கள் என்ன பேசிக் கொண்டே நடந்து வருகிறார்கள் என்று புரியவில்லை தான்.

இருப்பினும் பேராசிரியர், சீக்கியரை கன்வின்ஸ் செய்ய முனைவதும், சீக்கியன் கெத்தாக மறுதலித்துக் கொண்டே நடையைத் துரிதப்படுத்துவதும் புரிந்தது.

நேரே சென்று தன் பேராசிரியரை அடைந்தாள் அவள்.

அவள் எதிரே வந்ததும் பேராசிரியரின் நடை அப்படியே நின்றது.

அந்த சீக்கியனோ.. தன்னுடன் வராத பேராசிரியருக்காக கவலை கொள்ளாமல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டே போனான்.

யாழினியோ தன் கையிலிருந்த பேப்பர்ஸை அவர் முன்னே காட்டி,

"என்ன சார் இது..? கால்வாய்கள், கிணறுகள், பாதைகள்னு வியக்க வைக்குற பல விஷயங்கள் இன்னும்... இந்த அகழிக்குள் புதைஞ்சிருக்கு..

இப்போ போய் நிறுத்த சொல்லி ஆர்டர்??.. உங்களை வேற அஸாம்க்கு இடமாற்றம் பண்ணியிருக்குறதா ஃபேக்ஸ் வந்திருக்கு.. என்ன சார் இது?" என்ற அவள் கேள்வியின் ஆதங்கத்தின் இறுதியில் அவளது கண் மை அஞ்சனம் தீட்டா விழிகளின் ஓரம் இலேசாக நீர் துளிக்கவாரம்பித்தது.

யாழினிப் பெண்ணின் ஆதங்கம், கவலை, கோபம் எல்லாம் அவருக்குள்ளும் இருக்கத் தான் செய்தது. யாழினி இளரத்தம் அல்லவா?? ஆதலால் சீறுகிறாள்!!

இவர் அனுபவ முதிர்ச்சியாளர் அல்லவா?? ஆதலால் புன்முறுவல் பூத்தார்.

தன் உணர்ச்சிகள் அத்தனையையும் ஒற்றைப் புன்முறுவலுக்குள் மறைத்து விட்டு, யாழினியைப் பார்த்தவர் சொன்னார்,

"என்ன பண்றதுமா?? நாங்க ஒண்ணு நினைச்சோம்.. கடவுள் ஒண்ணு நினைக்குறான்.." என்று.

அதைக் கேட்டு அவளது விழிகள் அகல விரிந்தன. பிற நேரமாயிருந்தால் பேராசிரியரின்

நிதானத்தைக் கண்டு அவள் மெய்மறந்து நின்றிருக்கக் கூடும்!!

ஆனால் சூழ்நிலை தான் அதற்கு கை கூடவில்லை.

"ஸோ.. இதை ஸ்டாப் பண்ண போறீங்களா? சிந்து நாகரிகத்தை விட பழமையான நாகரிகம்!!.. இந்தியாவின் நம்ம தமிழ் நாட்டில் இருக்குன்றதுக்கான ப்ரூஃப் சார் இது..

இதை நிறுத்தணுமா? கால்வாய்கள், கிணறுன்னு இந்த ஐம்பது சென்ட்..நிலத்திலேயே இத்தனை ஆர்ட்டிஃபேக்ட்ஸ் கிடைச்சிருக்கு.. முழுசா நூத்திப்பத்து ஏக்கர்லேயும் பண்ணோம்னா இன்னும் ஆர்ட்டிஃபேக்ட்ஸ் கிடைக்கும் சார்..

ஆப்கானிஸ்தானில் இருந்து சூதுபவளம் பொறிக்கப்பட்ட ஆபரணம்!! ரோமில் இருந்து வந்த மண்பாண்டம்..!! சாயப்பட்டறைகள்!! னு அந்தக்காலத்திலேயே நாகரிகமா வாழ்ந்திருக்கான் தமிழன்னு காட்டுறதுக்கான ஆதாரம் சார் இது.." என்று உணர்ச்சி வசப்பட்டு, மூச்செடுக்கக் கூட இடைவெளியே அற்று பேசிக் கொண்டே போனவள்,

இறுதியில் ஒரு கட்டத்தில் நிறுத்தினாள்; தன் பேராசிரியரின் முகம் பார்த்தாள்; பின்பு மிக மிக ஒடிந்து போன மெல்லிய குரலில் சொன்னாள்,

"இந்த அகழ்வாராய்ச்சியின் முடிவில்.. இந்திய சரித்திரமே ம்மாறும் சார்..!!" என்று.

அதுக்கும் அவரிடமிருந்து சிறு புன்முறுவலே வந்தது.

"அது தான்மா அவங்க பிரச்சினையே!"- இத்தனை சதிராட்டத்துக்கும் பின்னாலுள்ள முதன்மைக் காரணத்தை எளிமையாக சொன்னார் பேராசிரியர்.

அதற்குள்.. அந்த ராட்சத பர்வதத்தின் குரல் காற்றில் காரசாரமாக ஒலிக்க மெல்ல திரும்பிப் பார்த்தாள் யாழினி.

அந்த சீக்கியன் அங்கிருந்து சென்றிருக்கவேயில்லை. அங்கேயே தான் நின்றிருந்தான்.

ஆனால் என்ன? கூடாரத்தை விட்டும் வெளியே வந்து, அகழ்வாராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கும் இடத்தில் நின்றிருந்தான்.

அகலமாக கால்களை விரித்து நின்று, பணியாட்களை நோட்டமிட்டவன்..

வாயிலிருக்கும் வெற்றிலைச்சாறைக் காறி உமிழ்ந்து துப்ப.. அங்கே ஓர் ஓரத்தில் வேப்பமரத்தடியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புராதன நூதன பொருட்களின் மேல் இலேசாக பட்டுத் தெறித்தது அது!!

அவன் செய்கையில் அறுவெறுப்பும், கோபமும் தோன்ற.., தன் பேராசிரியரைப் பார்த்தவள்,

“நீங்க வேணா இங்கே நடக்குறதைப் பார்த்துட்டு.. பொறுமையா இருக்கலாம்.. பட் என்னால முடியாது.. இருபத்தைஞ்சு ஆய்வாளர்களின் கடின உழைப்பு இது..!!என்னுடைய இரண்டு வருஷ தியாகம் இது..!!” என்றவள், அங்கிருந்த எல்லா ஆய்வாளர்களையும் ஓர் பார்வை பார்த்து விட்டு..

அந்த சீக்கியனை நோக்கி நகர்ந்தாள் யாழினி.

யாழினி தன்னை நோக்கி வருவது புரியாமல் ஹிந்தியில் ஏதோ கத்திக் கொண்டிருந்தான் அவன்.

“ஊப்பர் சே ஆர்டர் ஆயா ஹை.. சப் காம் ரோக்கா.. ஸ்டாப்” (மேலிடத்துல இருந்து ஆர்டர் வந்திருக்கு... வர்க்கை எல்லாம் நிறுத்துங்க)- என்று

சொல்ல அங்கிருந்தவர்கள் பெரும்பாலானவர்களுக்கு ஹிந்தி புரியவில்லை தான்,

இருப்பினும் “ஸ்டாப்” என்பது புரிய.. தங்கள் வேலையை விட்டவர்கள்.. தலையிலும், இடுப்பிலும் கட்டியிருந்த துண்டுகளை அவிழ்த்துக் கொண்டே, புரியாமல் தலை சொறிந்தவாறு முணுமுணுக்கலானார்கள்.

“டேய் தடியா..!!” என்று குரல் கேட்டு மெல்லத் திரும்பிப் பார்த்தவனின் முன்னால் நின்றிருந்தாள் யாழினி.

அவனோ, அவளை ‘என்ன? ஏது?’ என்று புரியாமல் பார்க்க, இவளோ, இருந்த சீற்றத்தில் கத்திக் கொண்டே போனாள்.

“டூ யூ ஹேவ் சென்ஸ்??? அர்ர்றிவ்விர்ருக்கா ? நீயும் ஆர்க்கியோலொஜி டிபார்ட்மென்ட் தானே? இப்படி தொல்லியல் பொருட்கள் மேலே எச்சில் துப்புற?” என்று அவள் கத்த,

பாஷை தெரியாமல் தலையை சொறிந்தான் அந்த சீக்கியன்.

“ஹேய்.. யே லட்கி.. க்யா பக் ரஹி ஹை..?(ஹேய் இந்த பொண்ணு என்ன உளறுது?) ” என்று தன்னுடன் வந்த இதர அதிகாரிகளிடம் கேட்டவனுக்கு, அதிகாரிகள் அதற்கு மொழிபெயர்ப்பாக்கம் செய்யும் வரை பொறுமையே இருக்கவில்லை.

மாறாக, அவனாகவே ஏதோ ஒரு பொருளை கற்பிதம் செய்து கொண்டு, “ஸ்டாப் தி வர்க்..சம்ஜா?”என்று கேட்டான் அவன்.

அவன் நிறுத்த சொன்னதும், இன்னும் கொஞ்சம் ஆத்திரம் பொங்கவே, அவனருகிலேயே சென்றவள்,

அவன் கண்களை தைரியத்துடன் எதிர்கொண்டு, “நாங்க ஏன் நிறுத்தணும்..? நிதிப்பற்றாக்குறைன்னு யார்கிட்ட பூ சுத்துறீங்க?

குஜராத் தொலவிராவில் பதின்மூணு வருஷமா எக்ஸ்கவேஷன் நடக்குது.. அதுக்கு உங்களுக்கு நிதிப்பற்றாக்குறை ஆகலையா?ஆந்திரா நாகர்ஜூனகொண்டாவுல.. பத்து வருஷமா ப்ராஸஸிங் போய்ட்டிருக்கு.. அப்போ நிதிப்பற்றாக்குறை ஏற்படலை? கீழடி ப்ரோஜக்ட்க்கு மட்டும் நிதிப்பற்றாக்குறையா? நாங்க ஏன் நிறுத்தணும்?

திராவிடர்கள் தான் பாரதத்தின் மூத்தகுடின்னு ஹிஸ்ட்ரி புத்தகத்திலிருந்து வந்துரும்னு பயமா?'' என்று கேட்டாள் அவள்.

அவள் உரைத்தது அத்தனையும் அந்த சீக்கியனுக்கு புரியாமல் இருக்காமலும்.. அவனோடு வந்த மற்ற தமிழ் அதிகாரிகளுக்கு நன்றாகவே புரிந்தது.

இருந்த உச்சபட்ச கொதிப்பில்.. அவள் நாவில் தாய்மொழியே சரசரவென பட்டாசாக வெடித்தது.

சீக்கியனுக்கு.. அந்த இளம்பெண்.. தன் எதிர்ப்பைத் தெரிவிக்கிறாள் என்பது மட்டும் தெள்ளத் தெளிவாகவே புரிந்தது.

அதனால் அவனும், கொஞ்சம் காண்டானாலும் அடக்கிய கோபத்துடன், ''ஆப்கோ குச் பீ போல்னா ஹோ தா.. ஊப்பர் பாத் கரோ.. முஜ்சே பக்வாஸ் மத் கர்னா.. சம்ஜே? (என்கிட்ட எந்த பேச்சுவார்த்தையும் வேணாம்.. எல்லாம் மேலிடத்துல பேசிக்குங்க)'' என்றவன்,

அவள் கோபத்தில் அவனையே பார்த்திருப்பது கண்டு.. ஏதேதோ தகாத வார்த்தைகள் சொல்லித் திட்டலானான்.

“ *********... ஃப***** திராவிடியன்ஸ்.. யே மதராஸியோ கே வஜஹ சே.. ஹம்கோ போஹோத் பரேஷானி ஹோத்தி ஹை.. (இவனுங்களால நமக்கு தான் எப்பவும் பிரச்சினையும், பிரஷரும்.. புதுசா ஏதாவது பிரச்சினைய தூக்கிட்டு வந்துட்றானுங்க)” என்று திட்டிக் கொண்டே, அவளுக்கு புறமுதுகிட்டுத் திரும்பி தலையில் கை வைத்தான் அவன்.

அவன் மொழிந்த நாராசமான வார்த்தை.. யாழினியின் காதுகளில் அறைகுறையாக விழுந்து விட, மூக்கு நுனி சிவக்கும்படியளவுக்கு வந்தது கோபம்!!

“என்ன சொன்ன??. சொல்லு..? என்ன சொன்ன? கம் அகேய்ன்” என்று யாழினி, அவன் பின்னால் போக முனைய, அவளை மேற்கொண்டு சண்டை வளர்க்க விடாமல்,

“விடுங்க, அவன் என்ன சொன்னான்னு கேட்டீங்களா.. சார்.. விடுங்க சார் என்னை.” என்று அவள் கத்தக் கத்த

இரு கைச்சந்தையும் பற்றி கூடாரத்துக்கு இழுத்து வந்து அமர வைத்தார் பேராசிரியர்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் கோபம் மட்டுப்படவும், அவளை நோக்கியவர்,

"நீ.. தமிழ்நாடு ஆர்க்கியோலொஜி டிபார்ட்மென்ட் பண்ண ரிக்வெஸ்ட்டின் பேரில்.. ஸ்ரீ லங்கா கவர்மென்ட் உன்னை இங்கே அனுப்பி வைச்சதால் வந்திருக்க!! .. இப்போ.. நீ அவன் கூட சண்டைக்குப் போய் ஏதாவது ஆனால்?? ஸ்ரீ லங்கா கவர்மென்ட்க்கு நாங்க தான் பொறுப்பு சொல்லணும்...." என்று சொன்னதெல்லாம் யாழினி காதில் விழுந்ததோ இல்லையோ?

மார்புக்கு குறுக்காக கைகளை கட்டிய வண்ணம், தனங்கள் ஏறி இறங்க மூச்சு வாங்கியவாறு..

வெளியே புழுதியைக் கிளப்பிக் கொண்டு செல்லும் ஜீப்களை சுட்டெரிப்பது போல பார்த்துக் கொண்டிருந்தாள் யாழினி.

யாழினி. ஆம், இலங்கைப் பெண்ணே தான்!! தமிழ்நாட்டு அகழ்வாராய்ச்சித் துறையின், ஸ்பெஷல் கோரிக்கையில்.. இலங்கை அரசு பரிசளித்த முத்து தான் யாழினி. யாழினி மகேந்திரன்!!

அவள் ஆய்வுக்கட்டுரைகளும், எழுதிய புத்தகங்களும்.. அகழ்வாராய்ச்சித்துறை மற்றும்

வரலாறு மாணவர்களிடையே பிரசித்தமான அளவுக்கு.. அத்துறையில் ஓர் பிரபலம் தான் யாழினி மகேந்திரன்!!

யாழினி என்னும் காட்டாறின் பிறப்பிடம் இலங்கை!! அதை தான் பேராசிரியர் நினைவுறுத்தினாலும் அமைதியாகவே இருந்தாள் யாழினி.

அவள் முன்னே வாட்டர் பாட்டிலை வைத்தவர், அமைதியாக, “விடுமா அமைதியா இரு.. இதை குடி.. இப்போ அவங்க நிறுத்த சொன்னாலும்.. ஹை கோர்ட்னு எதுக்கு இருக்கு? பார்த்துக்கலாம்..” என்று சொல்ல,

அவர் கேள்வியின் பின்னர் வெளிவந்தது அவள் கோபத்தின் பின்னுள்ள உண்மை ஆதங்கம்!!

“பார்த்துக்கலாம் தான் சார்.. அதுவரை இந்த ஆர்ட்டிஃபேக்ட்ஸ்லாம்.. பாதுகாப்பா இருக்கணுமே?? இப்போவே பாதுகாப்பில்லாமல் இருக்கு..

ஆயிரத்து முந்நூறு பொருட்களைப் பாதுகாப்பா வைக்கவே இடம்தராத கவர்மென்ட்டா.. இதுக்கு நிதி ஒதுக்கப் போகுது.?.

அப்படியே... திரும்ப அகழ்வாராய்ச்சி ஆரம்பிக்கும் போது.. இந்த தொல்லியல் பொருட்கள் இருக்குமா..?

நூத்திப்பத்து ஏக்கரில் பாதி.. தனியார் வசம் இருக்கு... அதில் அவங்க இன்னும் இன்னும் பில்டிங்ஸ் கட்டினாங்கன்னா.. ஒரு நாகரிகத் தடயமே இல்லாமல் போயிரும்.. இந்த தனியார் நிலங்களை அரசு தன் கைவசப்படுத்தணும்.. பாதுகாக்கணும்.. இது எதுவுமே செய்யாமல் திடீர்னு வந்து நிறுத்த சொன்னா.... இருக்குறதும் இல்லாமல் தானே போகும்??'' என்றவளை ஒரு சில கணங்கள் ஆச்சரியமாகவே பார்த்தார் பேராசிரியர்.

பின்னே?? இளரத்தம் கொதிக்கிறது.. எய்தவன் இருக்க அம்பை நோகுகிறது என்று தான் எண்ணியிருந்தார் அவர்.

ஆனால் அதற்குள்ளும்.. அவள் இத்தனை சிந்தித்திருப்பது நிஜமாகவே அவரை வியக்க வைத்திருந்தது.

அவளது தோளை ஆதரவாகப் பற்றி நம்பிக்கையுடன், ''எல்லாம் பார்த்துக்கலாம் .. பொறுத்தார் தான் பூமியாழ்வார்.. பொறுமையா இரு..

பார்த்துக்கலாம்" என்றவர் சொல்லிக் கொண்டிருந்த போதே செல் சிணுங்கியது.

அவளைப் பாராமல் தன் செல்லை எடுத்து பேசிக் கொண்டே வெளியே வந்த அந்த நொடி, மீண்டும் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்தது சில பல கேரவன்கள்!!

எங்கிருந்து தான் மீடியாவும் மோப்பம் பிடித்ததோ?. அந்த இடமே பளீச்.. பளீச் என ப்ளேஷ்லைட் ஒளியில் மூழ்க, பரபரப்பாக,

பேராசிரியர் அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களின் அஸாம் இடமாற்றத்தைப் பற்றி சரமாரியாக கேள்விகள் தொடுக்கப்படவாரம்பித்தது.

இவளோ கோப முகம் மாறாமல், கூடாரத்துக்குள்ளிருந்து.. ஒவ்வொரு சேனல் ஆட்களையும் உச்சாதி, பாதம் வரை இலக்கே அற்று நோட்டம் விட்டுக் கொண்டிருந்த போது.. இவளது அலைபேசியும் ஒலிர்க்கவாரம்பித்தது.

வேலை டென்ஷன், சினம் மாறாமலேயே எடுத்தவள், "என்ன? வர்க்கிங்க் ஹவர்ஸ்ல கால் பண்ணாதீங்கன்னு சொல்லியிருக்கேன்ல..?" என்று சிடு சிடுவென்றே கேட்டாள்.

"………………………………"

"அப்.. அப்பாவுக்கு?..." என்று தட்டுத் தடுமாறி உரைத்துக் கொண்டே நாற்காலியில் இருந்து எழுந்தவளுக்கு, கண்களில் நில்லாமல் வழிந்தது கண்ணீர்.

அவள் கைகள் தானும் வலுவிழக்க.. அவள் கையிலிருந்து விழுந்தது செல்ஃபோன்!

அத்தியாயம் 2

மூன்று மாதங்களுக்கு முன்பு,

அது கொழும்பின் காலி முகத்திடல் என தமிழிலும், “கோல் ஃபேஸ்” (Galle face) என ஆங்கிலத்திலும் அழைக்கப்படும் கொழும்பின் கடற்கரை.

நேரம்: இரவு 11:32.

“ஹேப்பீஈஈ.. நிவ் யஅஅஅஅர்ர்ர்ர்!!!!!” என்று விக்னேஷ், தன் முன்னால் தரித்து வைத்திருந்த ஜீப்பின் பின்பகுதியில் தாவிக் குதித்து ஏறி நின்று,

காற்றில் இரு கைகளை அகல நீட்டி..

ஓயாது இரைந்து கொண்டிருக்கும் அலைகடலும் ஒரு நிமிஷம் நின்று பார்க்கும் வண்ணம் கத்தினான்.

அவனுடைய வலது கையில் விஸ்கி பாட்டில் ஒன்று தஞ்சமடைந்திருந்தது.

அவனுடைய நிற்றலிலும், குரலிலும் தோன்றிய தள்ளாட்டத்திலிருந்தும் பாட்டில் பாதி காலியாகியிருப்பதில் இருந்தும், விக்னேஷ்

குடித்திருக்கிறான் என்பது தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.

வானத்திலோ.. நிமிடத்திற்கு நிமிடம் பற்பல வண்ணங்களில் வான வேடிக்கைகள் வெடிக்க.. அதன் விம்பம் கடற்கரையில் இருந்த மனிதர்களின் கண்களில் ஜெகஜோதியாக மிளிரவாரம்பித்தது.

ஆம், அவன் நின்று கொண்டிருந்தது கொழும்பு கடற்கரையின் பார்க்கிங் ஏரியாவிற்கு அண்மித்திருக்கும் பாதையோரப் பகுதியில்.

அதுவும் தனியாக அல்ல. கூட்டமாகத் தான்!!

அவன் ஏறி நின்ற ஜீப்பிற்குப் பின் கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து பைக்குகள் நிறுத்தப்பட்டிருந்தன.

ஆனாலும் அந்த பைக்கிற்கு உரிமையாளர்கள் வட்டமடித்திருந்தது அங்கேயிருந்த ஒற்றை ‘டுகாட்டி’ வண்டியைத் தான்.

தரித்து வைக்கப்பட்டிருந்த ‘டுகாட்டி’ வண்டிக்கு சொந்தக்காரன் அவன், யாதவன்!! யாதவ் மகாதேவன்.

தன் டுகாட்டி வண்டியில் சாய்ந்து அமர்ந்திருந்தவாறு,

கையிலிருந்த டின்பீரை மிடர் மிடராகப் பருகிக் கொண்டே தன் நண்பன் விக்னேஷின் சேட்டைகளையெல்லாம் இரசித்துக் கொண்டிருந்தான் யாதவ் மகாதேவன்!!

அந்தக் காலத்தில் ஓர் ஆண் மகனுக்கு புரவிகள் அழகு என்றால்.. இந்த நவீன காலத்தில் இயந்திரப் புரவியான பைக்குகள் அழகு!!

கழுத்தைத் தாண்டித் தொங்கும் அலைஅலையான கேசம் யாதவனுக்கு.

பரந்த நெற்றியின் கீழே… கருகருவென அடர்ந்த புருவங்களும், ஆளை வெட்டும் கூர்மையான கண்களும் அவனுக்கு கூடுதல் அழகு!!

சரியாக சவரம் செய்யப்படாத தாடியுடன் அவன் இருந்தாலும் கூட.. அவன் அழகனாகவே இருந்தான்!!

அவனைக் கடந்து சென்ற பெண்களின் பார்வைகள்.. அவனைத் துளைக்காமல் கடந்து செல்லவும் இல்லை.

இவனும் பார்ப்பது அட்டு ஃபிகரோ, லட்டு ஃபிகரோ.. ஓரவஞ்சனையே காட்டாமல் சிறிதும் சளைக்காமல் அவர்களைப் பார்த்து மந்தகாசப் புன்னகை சிந்துவதை தவிர்க்கவும் இல்லை!!

தன்னுடைய உடல் வனப்பை மறைக்கும் வண்ணம்.. அவன் ஜாக்கெட் அணிந்திருந்தாலும் கூட.. அவனுடைய உடலின் அபரிமிதமான வளர்ச்சி ஆடையைத் தாண்டித் தெரியவே செய்தது!!

யாதவனின் நண்பன் விக்னேஷ் கத்தியதில், அங்கே அவர்களைக் கடந்து சென்று கொண்டிருந்த, நான்கைந்து அரிவைப் பருவ பெண்கள் திரும்பிப் பார்த்து…

அவன் செய்கையில் தன் முத்துமூரல்கள் பளீரிட நகைக்கவாரம்பித்தனர்.

விக்னேஷுக்கோ “வாலிப வயசு” அல்லவா? உள்ளே அந்த பெண்களின் பார்வையில் கொஞ்சம் காதல் மூட் தொற்றிக் கொள்ளவாரம்பித்தது.

ஜீப்பின் கம்பியில் கை வைத்து நின்று சாய்ந்து, தன் கேசத்தை ஸ்டைலாக கோதி விட்ட வண்ணம், பாடத் தொடங்க..

அவன் சைட் அடிப்பதற்கு அழகாகவே உதவி புரிந்தனர் அவர்களது இதர நண்பர்களும்

“நீ நடந்தால் நடையழகு..”

“அழகு!”

“நீ சிரித்தால் சிரிப்பழகு!”-

“அழகு!” — கோரஸாகவே ஒத்துப் பாடினர் நண்பர்கள்!

பெண்களோ அவனது செய்கையில் இன்னும் கொஞ்சம் நகைக்கத் தொடங்க, விக்னேஷூக்கோ போதையில் சுதி ஏறிப் போனது போலும்!!

தலை குனிந்து வெட்கப்பட்ட படியே அவர்களைப் பார்த்து, “நெருங்கி வரும் இடைய்...” என்ற படியே நிமிர்ந்தவனின் கண்கள்..

அந்தப் பெண்களுக்குப் பின்னே முறுக்கு மீசையுடனும், முறைப்புப் பார்வையுடனும் பத்துப் பேரை ஒரே நேநேரத்தில் சமாளிக்கக் கூடிய பயில்வான் தோற்றத்தில் ஓர் பெரியவர் நின்று இவனை சுட்டெரிப்பது போல முறைப்பதைக் கண்டதும்.. உள்ளே பக்கென்றானது விக்னேஷூக்கு.

அவரைப் பார்க்கும் போதே.. அந்தப் பெண்களின் தந்தையாகவோ, பாதுகாவலனாகவோ இல்லை நெருங்கிய உறவினராகவோ அவர் இருக்கக் கூடும் என்பது புலப்பட...

குடித்த ஒட்டு மொத்த சரக்கின் போதையும் சர்ரென்று இறங்குவது போல இருந்தது விக்னேஷூக்கு.

உள்ளெழுந்த பீதியை மறைத்துக் கொண்டு, சட்டென தன் கையிலிருந்த விஸ்கி பாட்டிலை முதுக்குக்குப் பின் நைஸாக மறைத்துக் கொண்டு,

விறைப்பாக நின்று, சல்யூட் அடித்து ‘‘ஹேப்பீஈஈ நிவ் யர் சர்!! தங்கச்சிங்களை பத்திரமா கூட்டிப் போங்க சர்!!’’ என்று இராணுவ வீரர்கள் ஸ்டைலில் கூறிய வண்ணம்,

இத்தனை நேரம் சைட் அடித்துக் கொண்டிருந்த பெண்டிர்களை ‘‘தங்கச்சி’’ என்று கூற, அந்தப் பெண்களோ அதற்கும் கூட நகைத்துக் கொண்டே நகரவாரம்பித்தனர்.

அந்த முறுக்கு மீசைக்காரரும், மீசையை நீவி விட்டுக் கொண்டே,

அவனை முறைத்துப் பார்த்தபடி அங்கிருந்து அகன்றதன் பின் தான், விக்னேஷூக்கு நிம்மதிப் பெருமூச்சு விட முடிந்தது.

இடது கையை நெஞ்சில் வைத்து, "ஹப்பாடா!!" என்று பெருமூச்செறிந்தவன், ஜீப்பை விட்டு இறங்க, அவன் பின்னேயிருந்து வெடிச்சிரிப்பு கிளம்பியது.

யாதவ் மகாதேவன் வாயில் சரித்துக் கொண்ட பீர் அத்தனையும் குபீர் சிரிப்பில் வெளியே தெரிக்கவாரம்பித்தது.

அவனுடைய முரட்டு அதரங்களில் நின்றும் பீர் வழிந்தாலும் கூட.. நண்பன் பல்ப் வாங்கியதில் .. அவனது கம்பீரமான ஆளை அசர வைக்கும் சிரிப்பு மட்டும் ஓயவேயில்லை.

ஒட்டு மொத்த நண்பர்கள் குழாமும் அவனைப் பார்த்து நகைக்க, அசடு வழிந்து கொண்டே உச்சந்தலை சொறிந்தான் விக்கி.

அமைதியாக தன்னை நோக்கி நடந்து வந்த விக்கியின் சிரிப்பின் உச்சத்தில், ஷோல்டரைத் தள்ளி விட்டுக் கொண்டே,

"ஒன்ஸ் மோர் மச்சி ஹஹஹா.. ஒன்ஸ் மோர்.." என்று யாதவன் சொல்லிக் கொண்டே, அடக்க மாட்டாமல் நகைத்துக் கொண்டிருந்த வேளை,

அவர்களை நோக்கி, இல்லையில்லை குறிப்பாக யாதவனை நோக்கி,

அசுர வேகத்தில் ஒரு ‘சிபிஆர்’ வாகனம் ஒன்று, ஆளை அடித்துத் தூக்குவது போல வந்தது.

யாதவனின் சிரிப்பு அப்படியே தடைப்பட்டு நின்றாலும் கூட, தன்னை மோதுவது போல வந்த அந்த பைக்காரனின் ஹெல்மட் வழியாகத் தெரிந்த விழிகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்!!

பைக்காரனின் வேகத்திலும் சரி.. அந்த பைக் போட்ட உறுமலிலும் சரி.. இம்மியளவேனும் கூட யாதவனின் விழிகள் அச்சத்தைக் காட்டவேயில்லை.

அதில் வந்த ஆடவனோ, ஜாக்கெட்டும், கையுறைகளும் அணிந்திருந்தவன் நேரே யாதவன் அருகேயே வந்து தன் வண்டியை நிறுத்தினான்.

யாதவனின் பாங்கற் கூட்டமோ, சொற்ப நேரத்துக்கு முன் விக்னேஷ் வாங்கிய பல்பை மறந்து, சீரியஸான முகத்துடன், தங்கள் யாதவனை முட்ட வந்த, அந்த பைக்கிலேயே கவனம் வைத்திருந்தனர்.

தலைக்கவசம் அணிந்திருந்த அந்த பைக்காரனின் கண்களில் குரோதமும், கோபமும் துளிர் விட்டு எரிந்து கொண்டிருந்தாலும் கூட,

யாதவனின் விழிகள் அந்தக் குரோதத்தையும், கோபத்தையும் அசிரத்தையாகவே எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

மொத்தத்தில் அவன் யாருக்கும் அஞ்சாதவனாக நின்றிருந்தான்.

பைக்காரன் இறங்கி வர, யாதவனோ அந்தக் குரோதம் துளிர்க்கும் விழிகளைப் பார்த்துக் கொண்டே,

நடந்து சென்று மீண்டும் தன் டுகாட்டி மீது சாய்ந்து கொண்டான்.

அவனுடைய அடிடாஸ் இலட்ச்சணை பொறிக்கப்பட்டிருந்த ஷூ ஏந்திய பாதங்களில் ஒன்று தரையில் நடப்பட்டிருக்க மற்ற பாதத்தை ஸ்டேன்ட்டின் மேல் வைத்து வலது கையில் டின் பீரை ஏந்தியபடி நின்றிருந்தான் அவன்.

வந்தவனோ ஹெல்மட்டைக் கழற்ற.. அவன் முகத்தைத் தெள்ளத் தெளிவாகப் பார்த்ததும் யாதவனின் பாங்கற் கூட்டத்தில் ஓர் சிரிப்பலை பரவியது.

'டேய் இவன்டா..' என்பது போன்ற சிரிப்பு அது!!

எல்லாருக்கும் மேலாக விக்னேஷ் தான் ஓர் படி மேலே போய், ஓடி வந்து யாதவன் டுகாட்டி பின்னால் மறைந்தவனாக

“ஐய்யோ மச்சி... பயமா இருக்கு மச்சி..” என்று யாதவன் ஷோல்டரைப் பற்றிக் கொண்டு சொல்ல,

இப்போது தான் வாய் விட்டு சிரித்தான் யாதவ் மகாதேவன்!!

அவன் சிரிக்கும் போது பளீரிட்ட அந்த முத்து மூரல்களின் வெண்மையில் மின்னல் தோற்கும்!!

“ஹஹஹா.. விடு மச்சி..” என்று விக்னேஷைப் பாராமலேயே, விக்னேஷை சற்றே அதட்டிய யாதவ்,

மற்றவனை நோக்கி, “என்ன இந்தப்பக்கம் பிரகாஷ்? நிவ் யர் ஈவ் செலிப்ரேட் பண்ணலாம்னு வந்தியா? வூட் யூ லைக் டூ ஜோய்ன் வித் அஸ்? ம்?” என்ற வண்ணம் தான் அருந்திக் கொண்டிருந்த டின் பீரை வந்தவன் பக்கமாக நீட்டினான் யாதவ்.

ஆம், புதிதாக வந்த பிரகாஷின் முகத்தில் போலிக்காகவேனும் புன்முறுவல் மலரவேயில்லை.

இரண்டடி முன்னே எடுத்து வைத்து வந்த பிரகாஷ், தன் முன்னே நீட்டப்பட்டிருந்த டின்பீரைத் தள்ளி விட்ட வண்ணம்,

யாதவன் விழிகளோடு தன் விழிகளை உறவாட விட்டான்.

யாதவனோ கடைசி வரை அந்த பிரகாஷ் பூச்சாண்டிக்கு அஞ்சவும் இல்லை;அடிபணியவும் இல்லை.

அடிபணியும் வம்சத்தில் பிறந்தவனா அவன்??

“உன் க்கூட ந்நின்னு த்தண்ணியடிக்கவோ, ந்நிவ் ய்யர் ஈவ் செலிப்ரேட் ப்பண்ணவோ நான் இங்கே வரலை.. என் ரெஜினா கிட்டே இருந்து விலகி நிற்குறது தான் உனக்கு நல்லதுன்னு உன்னை வார்ன் பண்ணிட்டு போகலாம்னு தான் வந்தேன்!!” என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கூட்டிய வண்ணமே சொன்னான் பிரகாஷ்!!

இதுவரை அத்தனையையும் சுவாரஸ்யமான கண்களுடன் கேட்டுக் கொண்டிருந்த யாதவனின் முகம் சட்டென ஒளியிழந்தது.

யாதவனின் எதிரே இருக்கும் பிரகாஷ்.. யாதவனுக்கு உற்ற நண்பனும் அல்ல. பரம எதிரியும் அல்ல.

அந்த இரு வட்டாரத்துக்குள் அவனை சேர்க்க முடியாவிட்டாலும் “தெரிந்தவர்கள்” எனும் பட்டியலில் சேர்க்கக் கூடியவர்களுள் ஒருவன் தான் “பிரகாஷ்!”.

எங்கேயோ பார்த்துக் கொண்டே அசிரத்தையான குரலில், “உன் ரெஜினாவுக்கு என் கூட பழகாதேன்னு சொல்ல வேண்டியது தானே..? ” என்றவன் டுகாட்டியை விட்டும் எழுந்தான்; பிரகாஷ் பக்கம் வந்தான்.

அவன் நெஞ்சோடு.. தன் பரந்த மார்புகள் மோத.. தன் கண் பார்வை மட்டத்துக்கு கீழான பிரகாஷின் பார்வையை உற்று நோக்கிக் கொண்டே, “லுக்!! உன் ரெஜினா மேல எனக்கு எந்த இன்ட்ரஸ்ட்டும் கிடையாது.. முடிஞ்சா என்னைத் தேடிப் போகாதேன்னு அவள்க்கிட்ட சொல்லு.. அதை விட்டுட்டு.. இங்கே வந்து குதிக்குற?” என்றான்.

யாதவன் அதை நார்மலாக சொன்னாலும் கூட, அவன் குரலில் வீரம் இருந்தது. எதிராளியை

வீழ்த்தாமல் வீழ்த்தும் அச்சத்தைக் கொடுக்க வல்லது அவன் குரல்!!

மற்ற நண்பர்களும், தங்களுடைய முழுநீளக்கை சட்டையை மடக்கிய படி, யாதவன், “உம்” என்று சொன்னால் பிரகாஷை பிளந்து விடும் வெறியில் இருந்தனர்.

டின் பீரை ஒற்றைக் கையால் நசுக்கி விட்டு, முதுகுக்குப் பின் எறிந்த, இடுப்பில் கை வைத்து நின்றதுவும் கூட ராஜதோரணையே!!

“சரி உனக்கும் வேணாம்.. எனக்கும் வேணாம்.. நாம வேணா ஒரு பந்தயம் வெச்சுக்கலாம்.. அதுல நீ ஜ்ஜெயிச்சுட்டேன்னா.. ரெஜினா என்னைத் தேடி வரும் போது அவாய்ட் பண்ணிட்றேன்…. அதே நான் ஜ்ஜெயிச்சுட்டேன்னா.. ரெஜினா என் கூட ப்பழகுறதைப் பத்தி ந்நீ க்கேட்கக் கூடாது.. என்ன சொல்ற? டீலா.. நோ டீலா??” என்றவன் அவன் முன்னே தன் கட்டை விரலை உயர்த்தி, கவிழ்த்திக் காட்டிக் கேட்டான்.

இத்தனைக்கும் ரெஜினா.. பிரகாஷின் பெண்தோழியாக இருந்தாலும் கூட.. யாதவனின் செல்வச் செழிப்பில், வனப்பில் மயங்கி அடிக்கடி யாதவனை அவள் தேடி வருவது உண்மை!!

ஆயினும் யாதவன் ரெஜினாவின் வலையில் சிக்காமல் தண்ணி காட்டிக் கொண்டு தான் இருந்தானே ஒழிய, அவளுடன் எந்தவிதமான உறவையும் அவன் வைத்துக் கொள்ளவேயில்லை!!

இப்படியான ஓர் பெண்ணுக்காக பிரகாஷ் தன்னை நாடி வந்திருப்பது, யாதவனுக்கு சுவாரஸ்யத்தையே கொடுத்தது.

எப்படிப்பட்ட பெண்ணாக இருந்தாலும் சரி ஓர் ஆண்மகன் அவளை உண்மையாக நேசிக்கும் பட்சத்தில்,

அவளை எப்போதும் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ளவே அவன் துடிப்பான் என யாதவன் அப்போது அறிந்து வைத்திருக்கவில்லை.

அவனை அக்கணம் காதல் பலவீனம் தாக்கவுமில்லை

விடிந்தால் புத்தாண்டு வேறு!! விளையாடித் தான் பார்ப்போமே என்றது யாதவனின் இள ரத்தம்!!

அதனால் தான் அவனும், ‘ரெஜினாவுக்கும், அவனுக்கும்’ தொடர்பு இருப்பது போலவே கடைசி வரை பிரகாஷிடம் பேச ஏகத்துக்கும் எகிறியது பிரகாஷின் பல்ஸ்.

தலை கோதிக் கொண்டே பெருமூச்சு விட்டவன், யாதவனை நோக்கி, “என்ன நினைச்சுட்டிருக்க உன் மனசுல??.. அவள் என் கேர்ள்ப்ரெண்ட்!!.. நீ இடையில் வந்தவன்.. இடையிலேயே விலகிக்குறது தான் உனக்கு நல்லது.. இல்லை நடக்குறதே..?” என்று சுட்டுவிரல் காட்டி எச்சரிக்க,

“ஏய்!!” என்றது யாதவனின் மொத்த பாங்கற் கூட்டமும்.

பிரகாஷின் எதிரே வந்து நின்ற விக்கி, சற்றே காட்டமான குரலில்,

“யார் கிட்ட கை நீட்டி பேசிட்டிருக்க? அவன் மேல கையை வைச்சுத் தான் பாரேன்.. கூட்டத்தோடு கூட்டமா இருக்குற அவன் பாடி கார்ட்ஸ் உன்னை சுட்டுத் தள்ளிட்டுப் போயிட்டே இருப்பாங்க.. கேட்டா லைஃப் த்ரெட்னு ஒரு வார்த்தை தான்.. கோர்ட்டு, கேஸூன்னு போனாலும் ஒரு மயிரும் புடுங்க முடியாது..” என்று கேசத்தை பிடுங்குவது போலக் காட்டி விக்கி சொல்ல,

கை உயர்த்தி தன் பாங்கற் கூட்டத்தோடு, கடற்கரையில் கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்த

தன் மெய்க்காப்பாளர்களும், ‘வேண்டாம் என்பது போல சைகை காட்டியவன்,

“இருங்கடா பேசி தீர்த்துக்கலாம்..” என்று கொஞ்சம் அவர்களை ஆசுவாசப்படுத்த முயன்றான்.

பின்பு… பிரகாஷின் சீரியஸான முகத்துக்கு எதிராக ரொம்ப ரொம்ப சாதாரணமாக முகத்தை வைத்துக் கொண்டவன்,

“என்ன என் கூட போட்டி போட பயப்பட்றீங்களா ப்ரகாஷ் தம்பி..? இல்லை சினிமா வில்லன் பேரு வச்சுக்கிட்டு மிரட்டினா நாங்க தான் பயந்துருவோமா?” என்று கேட்டான்.

பிரகாஷோ… கோபம் கிஞ்சித்தும் குறையாமல் அப்படியே தான் நின்றிருந்தான்.

இவனோ தன் ரோலெக்ஸ் டிஜிட்டல் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தவன், “இப்போ மணி சரியா இலெவன் ஃபோர்ட்டிஃபைவ்.. நிவ் யர்க்கு இன்னும் ஃபிப்ட்டீன் மினிட்ஸ் இருக்கு.. அதுக்குள்ள கோல்ஃபேஸ் ரோடை சுத்திட்டு.. இதே இடத்துக்கு முதல் ஆளா யாரு வர்றாங்களோ.. அவங்களுக்கு தான் ரெஜினா.. என்ன சொல்ற?” என்று கேட்டவனின் விழிகள்,

சுவாரஸ்யத்தில் மிளிர்ந்து கொண்டிருந்தது.

பிரகாஷின் முகம் சிந்தனை பாவத்தைக் காட்டியது. ஒத்துக் கொள்ளாவிட்டால் “பயந்தாங்கொள்ளி” என்று முடிவு கட்டி விடிவார்களோ என்ற பயம் அவனை ஆட்கொண்டது.

ரெஜினா அவனை விட்டும் போனாலும் கூட.. ரெஜினாவை விட்டும் இவனால் இருக்க முடியுமா?? வாழ முடியுமா??

ரெஜினாவின் அழகான மயக்கும் முகமே பிரகாஷை அந்தப் பந்தயத்துக்கு ஒத்துக் கொள்ள வைத்தது.

சிறிது நேரத்திற்கு முன் கழற்றிய ஹெல்மெட்டை மௌனமாக எடுத்துப் போட்ட படி.. தன் சம்மதத்தை சொல்லாமல் சொன்னான் பிரகாஷ்.

யாதவனின் முகம் அளவுக்கதிகமாகவே மலர்ந்தது. அதே சமயம், போயும் போயும் ஓர் பெண்ணிற்காக எல்லாப் இதை செய்யவில்லை அவன்.

காசா? பணமா? ஜஸ்ட் ஓர் பந்தயம். அதுவும் நள்ளிரவில். சுவாரஸ்யமாக இருக்கும் என்று தோன்றியது அவனுக்கு.

பைக் ஹேன்டிலில் இருந்த தன்னுடைய கறுப்பு நிற ஹெல்மெட்டை எடுத்துப் போட்டுக் கொண்டான் யாதவன். பைக்கில் அநாயசமாக ஏறியவன், ப்ரகாஷ் நின்றிருந்த இடத்துக்கு வண்டியை எடுத்துப் போய் நின்றான்.

விக்னேஷுக்கு உள்ளே சிரிப்பு சிரிப்பாய் வந்தது.

பின்னே? யாதவன் தூசியாகக் கூட மதிக்காத ரெஜினாவை வைத்து பிரகாஷுக்குள் தீமூட்டி விட்டு, பந்தயத்துக்கு அழைக்கும் நண்பனை என்னவென்று தான் சொல்வது?

தன் நண்பனின் திறமைக்கு முன், பிரகாஷின் திறமை தூசுக்குச் சமம் என்று எண்ணியவனாக, நண்பன் அருகில் இதர நண்பர்களுடன் வந்தான் விக்கி

யாதவனைப் பார்த்து.. "வர வர உனக்கு குசும்பு ஜாஸ்தி ஆகிருச்சு…" என்று சொல்லி கண்ணடிக்க,

அந்த கண்ணடிப்பின் அர்த்தம் புரிய யாதவனும் புன்னகைத்துக் கொண்டே கை முஷ்டியைக் காட்ட, இரு நண்பர்களின் முஷ்டியும் ஹை ஃபை இட்டுக் கொண்டது.

பிரகாஷை நோக்கி வந்தவன், கைச்சந்தில் பலமாகத் தட்டி, “இருந்தாலும் உனக்கும் கட்ஸ் அதிகம்டா மவனே! ஆல் தி பெஸ்ட்!” என்று வாழ்த்த,

அந்த வாழ்த்தை ஏற்காமல் திமிரான முகபாவத்துடனேயே விட்டத்தை வெறித்தான் மற்றவன்.

அவன் முகபாவத்தில் கடுப்பான விக்கி, முதுகுக்குப் பின்னே கை கட்டிய வண்ணம், “பார்ரா!!…. இரு உன்னை ரேஸ் முடிஞ்சதும் வைச்சுக்குறேன்!” என்று கொஞ்சம் கறுவவே செய்தான்.

பிரகாஷோ யாதவன் மேல் இருக்கும் கோபத்தை, பைக்கில் காட்டிக் கொண்டிருந்தான்.

பைக்கின் எஸ்லேட்டரில் கை வைத்து முறுக்கி.. அதன் இரைச்சலை அதிகப்படுத்தி பந்தயத்துக்கு தயார் என்பதை சொல்லாமல் தெரியப்படுத்தினான் அவன்.

விக்னேஷோ.. அந்த இரு ஆடவர்களின் நடுவே வந்து சாம்ப்பையின் பாட்டிலைக் குலுக்கித் திறக..

உள்ளிருந்த ஆல்கஹாலும் ஊற்றுத் தண்ணீர் பாய்வது போல குபீரிட்டுப் பாய,

அதையே ஆரம்பக் கட்டளையாகக் கொண்ட இரு இயந்திரப் புரவி வீரர்களும், வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக விரைந்து புறப்பட்டனர்.

யாதவனுக்கு இந்தப் பந்தயம் சுவாரஸ்யமான போராட்டம்!!

பிரகாஷுக்கோ இந்தப் பந்தயம் வாழ்க்கைப் போராட்டம்!!

எப்படியும் ரெஜினா தனக்கு வேண்டும் என்ற வெறியில் பிரகாஷ் வேகமாகவே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அங்கே விக்னேஷோ, அவர்கள் குழாமில் புதிதாக இணைந்திருந்த ஓர் நண்பனை நோக்கி,

“பாரேன்.. நான் வேணா பெட் பண்றேன்.. நம்மாளு தான் ஜெயிப்பான்.. அவனுக்கு லாஸ் வேகாஸ், நிவ்யோர்க் என்ட் டோக்கியோ ரோட்ஸே எம்மாத்திரம்!!! அந்த ஊரு போலீஸ் கண்ணுல விரல் விட்டு ஆட்டி.. எஸ்ஸாகிறவன் நம்மாளு.. அவனுக்கு கலம்போ ரோட் தூசு மாதிரி..

நம்மாளு யாரு?.. சாம்ராட் யாதவ் மகாதேவன்… அவன் இம்னு சொன்னால்.. ஸ்ரீலங்கா பிரஸிடென்ட் கூட அவனோட நிவ் யர் ஈவ் செலிப்ரேட் பண்ண ரெடி தான்..

எந்த வாட்டியும் அவன் நிவ்யர் ஈவ்க்கு உலகம் சுற்றும் வாலிபனா எல்லா இடமும் போவான்.. இன்னைக்கு தான் கொஞ்சம் வித்தியாசமா ஸ்ரீலங்காவுலேயே செலிப்ரேட் பண்ணுறான்

ஜெயிச்சதுக்கு அப்புறம் உன் ரெஜினா எனக்கு தேவையே இல்லைன்னு விட்டுக் கொடுத்துட்டுப் போயிட்டே இருப்பான்..” என்று நண்பனின் மனதை அச்சொட்டாகப் படித்தவன் போல கூலாக நின்று பேசிக் கொண்டிருந்தான் விக்கி.

ஆம், இந்த பந்தயம் முடிந்ததும் ரெஜினாவை, பிரகாஷூக்கே விட்டுக் கொடுக்கும் எண்ணம் தான் அவனுக்கு.

முதலில் பிரகாஷை முன்னே போகவிட்டு.. கொஞ்சம் பிரகாஷை சந்தோஷ பரபரப்புள்ளாக்கியவன்,

“இட்ஸ் டைம் டு ப்ளே” என்று தனக்குத் தானே சொன்ன வண்ணம்,

அவனுடைய வலிய பாதத்தினால் நான்கு கியர்களை போட அவனுடைய அதி நவீன டுகாட்டி வண்டி வேகமெடுத்தது.

யாதவ் கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் வேகமெடுத்து முன்னே செல்வதைக் கண்டு பதற்றமடைந்த பிரகாஷும் கியர் போட்டு வேகமெடுத்தான்.

பிரகாஷோ, யாதவன் அருகில் வந்தாலும் கூட.. யாதவனை நெருங்கக் கூட முடியவில்லை.

யாதவனோ சரியாக அந்த பாதையின் வளைவுகளுள் உடலையும், வண்டியையும் வளைத்து வளைத்து கை தேர்ந்த பந்தயக்காரன் போலவே சென்று கொண்டிருந்தான்.

இலங்கையில் இப்படி அதிவேகமாக வண்டியோட்டுவது, பந்தயம் வைப்பது முற்றிலும் தடை!!

அதிலும் கடற்கரையோர பாதை வேறு!! இந்த விஷயங்களுக்காக தடை செய்யப்பட்ட பிரதேசம்.

போலிஸில் மாட்டினால் சிறை வாசம் தான்!!

ஆனால் இங்கே நள்ளிரவில் பந்தயங்கள் வைப்பது அரசியல்வாதிகளின் புத்திரர்களும், பெரும்

பெரும் செல்வந்தர்களின் புத்திரர்களுமாகையால் சட்டம் அவர்களை நோக்கி பாயாது பம்மத் தான் செய்கிறது.

தடை மற்றும் சிறை வாசம் என இரு வாலிபர்கள் அறிந்திருந்தாலும் இளங் கன்றுகளுக்கு பயமிருக்கவில்லை.

அந்த பெரிய பாதையினை இரண்டாகப் பிரிக்க நடுவே வைக்கப்பட்டிருந்த நாக மரங்களும்,

அவைகளுக்கிடையே வானைத் தொட்டுக் கொண்டிருந்த கட்டிடங்களும்,

மஞ்சள் ஒளி சிந்தும் தெருவிளக்குகளும் அந்தப் பாதையை இன்னும் இன்னும் மெருகூட்டின.

யாதவனின் எதிரில் ஹில்டன், தாஜ் போன்ற சர்வதேச தரம் வாய்ந்த ஹோட்டல் கட்டிடங்கள் பார்வைக்கு விரிந்தன.

கண்களை உயர்த்தி.. அந்த வானளாவ உயர்ந்திருந்த கட்டிடங்களைப் பார்த்தான் அவன்.

அப்படியே திரும்பி தனக்குப் பின்னே சில பல மீட்டர்கள் தொலைவில் வந்து கொண்டிருந்த பிரகாஷிற்கு,

தன் வலக்கையை காற்றில் நீட்டி.. கட்டை விரலை கவிழ்த்திக் காட்டியபடியே இன்னும் கொஞ்சம் வேகமெடுத்தான் அவன்.

பிரகாஷூக்கோ யாதவனின் செய்கை எரிச்சலைத் தந்து விட, எஸ்லேட்டரை இன்னும் இன்னும் முறுக்கிய படி பேரிரைச்சலை ஏற்படுத்திய வண்ணம் விரைந்தான் அவன்.

நவலோக்க மருத்துவமனை, லிபட்டி சினிமா தியேட்டர் ஆகிய இடங்களைத் தாண்டி மீண்டும் கோல்ஃபேஸ் வீதிக்கு யாதவனும், பிரகாஷூம் வந்த போது சரியாக பதினொன்று ஐம்பத்தெட்டு.

புது வருஷம் பிறக்க இன்னும் இரண்டு நிமிடங்களே பாக்கி!!

யாதவனின் வேகத்துக்கு என்ன தான் முயன்றும் இறுதி வரை பிரகாஷினால் வேகமெடுக்கவே முடியவில்லை.

யாதவனின் கண்களில் இன்னும் இரண்டு நிமிடத்துக்க்ள் தான் அடையப் போகும் இலக்கு மட்டுமே தெரிந்தது.

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

தூரத்திலே தன் நண்பன் விக்கி, கை தட்டி ஆரவாரம் செய்து கொண்டு, ‘‘கமான் மச்சி! கமான்!! ..’’என்று பெருங்குரலில் கத்தும் ஒலியை மாத்திரம் உன்னிப்பாக செவிமடுத்தன அவன் காதுகள்.

இன்னும் சொற்ப நேரம்!! இன்னும் சொற்ப நேரம்.. இன்னும் கொஞ்ச நொடிக்குள் அவன் இலக்கு!!

அப்போது தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

சரியாக அந்த நேரம் பார்த்து பாதைக்குக் குறுக்காக ஓர் பெண் இவன் வண்டியோட்டி வருவது பற்றி கொஞ்சம் கூட சட்டையே செய்யாமல் பாதையை நிதானமாக கடந்து கொண்டிருக்க,

இது வரை நேரமும் எந்த பதற்றமுமே இல்லாமல் வண்டியோட்டிக் கொண்டிருந்தவனின் இதயம்.. அவளைக் கண்டதும் வேகவேகமாகத் துடிக்கவாரம்பித்தது.

இதுவரை யாதவன் சந்தித்த பெண்களிலேயே ரொம்பவும் அழகான பெண் என்றொரு எண்ணம் அந்நொடியும் தோன்றியது அவனுக்கு.

அந்தப் பெண்ணின் யௌவனக் கண்களும், யாதவனின் தீட்சண்யமான கண்களும் இரண்டறக் கலந்தன.

யாதவனுக்கு சுற்றம் மறந்தது; பந்தயம் மறந்தது; சொற்ப கணங்களில் அடையவிருக்கும் இலக்கும் மறந்தது.

அவன் நினைவை, மூளையை ஆக்கிரமித்ததெல்லாம் தனக்கு குறுக்கே சொற்ப தூரத்தில் சென்று கொண்டிருந்த அந்தப் பெண்ணின் மதிமுகத்தில் இருந்த நயனங்களில் தெரிந்த அன்பும், பரிவும் தான்!

தன் தாயின் விழிகளில் கசியும் இரக்கத்தைக் கண்டான் அந்தக் கண்களில்!!

இத்தனைக்கும் அந்த கண்கள் தனித்துவமான கண்கள் அல்ல தான்!

இருப்பினும், அது சிந்தும் காதல் கதிர்கள்.. இந்த வலிய சத்திரியனையும் தாக்க, சிந்தையிழந்தான் அவன்!!

பால்வண்ண நிலாவுக்கு திருத்தப்பட்ட புருவங்களும் நயனங்களும், நாசியும்..

அடர் சிவப்பு நிற ரோஜாப் பூவின் இரு இதழ்களப் போன்ற இரு அதரங்களையும்,

வரைந்தாற் போன்றிருந்தது அவள் முகம்!

அவள் கண்களில் இருந்த ஏதோவொன்று இந்த இயந்திரப் புரவி வீரனை கட்டிப்போட்டது.

இலக்கும்.. அவள் அருகாமையும்.. அருகருகே வந்த போது தான்.. நடக்கப் போகும் விபரீதத்தை உணர்ந்தான் அவன்.

அவள் மீது மோதி விடும் அபாயம் இருப்பது புரிய, ஹேண்டிலில் இருந்த கையை எடுத்து,

'விலகும்' சைகை செய்து,

"ஹேய் தூரப் போஓஓஓ!! … கெட் அவுட் ஆப் மை வே..!!" என்று கத்திக் கொண்டே சென்றவனின் மொழிகள் அனைத்தையும் அவள் கிஞ்சித்தும் பொருட்படுத்தவேயில்லை.

அந்த இளம் ஆணை.. விழிகளால் மொய்த்துக் கொண்டே, சட்டென நின்று.. தன் பற்கள் காட்டி.. ஒரேயடியாக புன்னகைத்து,

யாதவனின் இதயத்தை தாருமாறாக துடிக்கச் செய்தாள் அவள்.

அவளை இடித்து விடுமளவுக்கு அவன் வந்து விட.. செய்வதறியாமல் அவசரமாக ப்ரேக் போட்டு வண்டியை இடப்பக்கம் ஒடித்துத் திருப்பினான் யாதவன்.

வண்டியோடு அவனும் உருண்டு வீழ்ந்து சென்ற வேளையிலும் கூட.. அவனுடைய மனம்,

அவளுக்கு என்னானதோ என்று தான் பதறவாரம்பித்தது.

உருட்டிவிட்ட ஸ்நோவிங் போல் போல தரையில் சரிந்து சென்ற வண்ணமே கூட..

பந்தயத்தின் இலக்கை முதல் ஆளாக அடைந்திருந்தான் யாதவ் மகாதேவன்.

தன்னுடல் தரையுடன் உராய்ந்து சென்ற வலியிலும் கூட, தலை திருப்பி.. அங்கே நின்றிருந்த.. அந்த அழகியின் கண்களையே பார்த்தான் அவன்.

அவனது ஒட்டுமொத்த பாங்கற் கூட்டமும் தலையில் கை வைத்த படி ஜர்க்காகி நிற்க, .

“டேய் மச்சீஈஈஈ…” என்று உயிர் போக கத்திய வண்ணம் யாதவனிடம் ஓடி வரலானான் விக்னேஷ்.

கூட்டத்தோடு கூட்டமாக நின்று.. அவனை தொந்திரவு செய்யாமல், யாதவனையே கண்காணித்துக் கொண்டிருந்த அவன் மெய்க்காப்பாளர்களும் அங்கே ஓடோடி வரத் தொடங்கினர்.

தன் காதலை வைத்து யாதவன் பந்தயமாடியிருந்தாலும் கூட, ப்ரகாஷூக்கு ஓர் உயிர் என்றதும் அதிக பதற்றத்தைக் கொடுத்தது.

வண்டியை சடன் பிரக் போட்டு நிறுத்தி விட்டு, தலைக்கவசத்தை கழற்றிய படியே யாதவன் பக்கம் ஓடினான் ப்ரகாஷ்.

யாதவன் தலைக்கவசம் விக்னேஷால் கழற்றப்பட்டது.

யாதவனின் நெற்றியின் ஓரத்திலிருந்து கடுஞ்சிவப்பு நிற இரத்தம் பீறிட்டு ஓடிக் கொண்டிருந்தது.

கால்களில் இருந்தும் வந்த இரத்தம் பாதையை நனைக்க, அவனது முரட்டு அதரங்கள் திறந்து தான் இருந்தன.

பெரும் பெரும் மூச்சுக்களை எடுத்து விட்டுக் கொண்டே,

அங்கே கூடிய கூட்டத்தில் தென்பட்ட தலைகளில் அவள் முகம் தென்படுகிறதா? என்றே சுற்றிவர பார்த்தான்.

பிரகாஷோ, யாதவனின் கன்னத்தைத் தட்டித் தட்டி, "யாதவ்.. யாதவ்.. கமான் கண்ணைத் திற!" என்று எழுப்பிக் கொண்டிருக்க,

சொருகத் துடித்த கண்கள்.. கூட்டத்தில் அவளைத் தான் தேடியது.

அவனது கண்கள், அவளைக் கண்டு கொண்டது. அவளுக்கு ஏதாவது காயமோ?? என்ற படபடப்பு ஓட, உச்சாதி பாதம் வரை அவளை ஆராய்ந்து

அவளுக்கு அடியேதும் படவில்லை என்றதும் தான் ஆசுவாசப்பட்டது அவன் இதயம்!

தன்னால் தான் அவனுக்கு அப்படி ஆகிவிட்டதே என்ற கவலை, பதற்றம் அவளில் கொஞ்சம் கூட இல்லவேயில்லை.

மாறாக அவன் நிலை கண்டு மென்னகை செய்து கொண்டே.. அவனைப் பார்த்தாள் அவள்.

உயிர் போகும் அந்நிலையிலும் கூட.. அவன் கை அனிச்சையாக அவளை நோக்கி நீண்டது. அவள்

தீண்டல் ஒன்றாவது கிடைக்காதா என்று ஏங்கியது யாதவன் நெஞ்சம்!

அவளும் சிறிதும் தாமதிக்காமல் அவன் கையைப் பற்றிக் கொண்டவள்,

தன் செம்பவள வாய் திறந்து சொன்னாள்

“உனக்கு ஒண்ணும் ஆகாது.. நானிருக்கேன்..” என்று.

அவன் செவிகளும், அவள் குரலைக் கேட்கத் தான் இத்தனை நேரம் காத்திருந்ததுவோ?.

கண்கள் அதன் பின் தானாக மூடிக் கொள்ள, எங்கும் வெள்ளை வெளேரென்ற வெளிச்சம் பரவலானது. .

அத்தியாயம் 3

இன்று,

கொழும்பு மாநகரத்திலுள்ள,

தனியார் மருத்துவமனை..

அந்த மருத்துவமனைப் படிகளை, உச்சபட்சப் பதற்றத்துடனேயே கடந்து ஓடி வந்தாள் யாழினி!!

ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினி மகேந்திரன்!

அவளுடைய கீழிமையும், மூக்குநுனியும் செக்கச் செவேலென சிவந்து போய்,

கன்னம் வழியாக கண்ணீர்க்கோடுகள் காய்ந்து போயிருப்பதிலிருந்து அவள் நன்றாக அழுதிருக்கிறாள் என்பது புரிந்தது.

அவளுடைய தந்தை 'மகேந்திரன்' அனுமதிக்கப்பட்டிருக்கும் அறையை, ஆயா 'லக்ஷ்மியம்மா' மூலம் அறிந்து வைத்திருந்தவளின் கால்கள்,

யார் துணையுமின்றி தந்தை அறையை நோக்கியே அசுர வேகத்தில் விரைந்தன.

எதிரே வந்தவர் யார்? போனவர் யார்? அவள் கண்ணீர் பார்த்து எதிர்ப்படுபவர்கள் என்ன நினைக்கக் கூடும்? என எதுவுமே அந்த சுந்தரப் பெண்ணின் ஞாபகத்தில் நிலையாய் இல்லை.

அவள் கண்களும், மனமும் ஒருங்கே தன் தந்தையின் வாத்சல்யமான முகத்தையே தேடிக் கொண்டிருந்தது.

இந்த உலகத்தில் யாழினிக்கென்றிருக்கும் ஒரே உறவு, பரிவு என எல்லாமுமே என்றால் அது அவள் தந்தையே தான்!!

தந்தைக்கு என்று ஒன்றானதும்.. அங்கே அகழ்வாராய்ச்சி இடம்பெற்றுக் கொண்டிருந்தாலுமே கூட ஏதும் ஓடியிருக்காது அவளுக்கு.

அதனாலேயே அடுத்த அரை மணித்தியாலத்தில் இலங்கைக்கு டிக்கெட் போட்டு ஓடி வந்திருந்தாள் யாழினி.

மூடப்பட்ட.. இறுக்கமான கண்ணாடிக் கதவுகளை கடினப்பட்டு,

திறந்து கொண்டு உள்ளே நுழைந்த யாழினியின் காந்த நயனங்கள் தன் தாயுமானவரைக் கண்டு கொண்டன.

அந்த அறை முழுவதும் ஹாஸ்பிட்டலுக்கே உரித்தான மருந்து நெடி கமகமத்துக் கொண்டிருக்க,

தன்னைக் காண தன் இன்னுயிர் மகள் வந்தது கூட அறியாமல்.. நிர்ச்சலன உடலுடன் படுத்துக்கிடந்தார் மகேந்திரன்.

பக்கத்திலே ஈசிஜி மானிட்டர் அவர் இதயத் தாளத்திற்கு ஏற்ப அமைதியாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

அந்த வெள்ளந்தி மனசுக்காரரின் கழுத்திலே அசைக்கவே முடியாதவாறு கட்டு போடப்பட்டிருக்க, புறங்கையிலே ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

இத்தனை நேரம் இருந்த படபடப்பு.. தந்தையைக் கண்டதும் மெல்ல நீங்கப் பெற்றது அந்த சுந்தரப் பெண்ணுக்கு!

இருப்பினும் என்ன? காய்ந்திருந்த கண்ணீர் சுவடுகள் வழியாக மீண்டும் உயிர்ப்பெற்றது உவர் நீர்!!

இரு கைகளாலும் தன் அதரங்களை இறுகப் பற்றிக் கொண்டவள், தந்தை தூக்கம் களையாத வண்ணம் சத்தம் எழுப்பாமல் அழலானாள்.

ஐம்பது வயதுக்கு மேலே இருக்கும் அவள் தந்தைக்கு.

அவள் தந்தை பயங்கர சைவ உணவுப் பிரியர்!! அவருடைய இயற்கையோடு இணைந்த உணவுப் பழக்கவழக்கமும்,

நாளாந்தம் அவர் செய்யும் தியானமும், மந்திர உச்சாடனங்களும் இன்னும் அவரை கட்டுமஸ்த்தான உடல்வாகுடையவராகவே காட்டிக் கொண்டிருந்தது.

பிறந்ததிலிருந்து தாய் முகம் கண்டதில்லை அவள். தாய்க்கு நிகராக நின்று பாசம் காட்டி வளர்த்தவர் தான் தந்தை மகேந்திரன்!!

ஆனால் அவள் குழந்தைப் பருவம், கட்டிளமைப் பருவம் எல்லாமே ஆசிரம வாசம் தான்!!

என்ன ஆசிரமா? அப்படியானால் யாழினி அநாதையா என்ன? என்ற வாசகர் மனக்கேள்விக்கு பதலளிப்பதே உசிதம்!!

“மேனகா ஆசிரமம்”- அவள் தாயின் நினைவாக, தந்தை மகேந்திரன் தொடங்கிய நற்தொண்டு நிறுவனம்!!

அங்கேயே தந்தையுடன் பொழுதுகளைக் களித்தவளுக்கு, அநேகமாக ஆசிரம வாசம் தானே அமையும்??

தாயுமானவரைக் கண்டதும் தாய்ப்பாசம் மீதூறலாயிற்று.

அவள் கைகளில் ஒன்று மேலெழுந்து தந்தையின் தலையை வாஞ்சையுடன் வருடி விடவே..

அந்த மென்மையான ஸ்பரிசம்!!

இந்த நான்கு மாதங்களாக அவர் ஏங்கிய தன் மகளின் ஸ்பரிசம்!!

அந்த ஸ்பரிசம் கிடைக்க.. ‘இன்றும் அந்த ஸ்பரிசம் கனவு தானோ?’ என்ற நப்பாசை உள்ளுக்குள் பிறக்க,

மெல்ல கடினப்பட்டுக் கண்களைத் திறந்த மகேந்திரன் இனிதாக அதிர்ந்தார்.

அவரின் கண்கள்.. யாழினியைக் கண்டதும்… சுருசுருவென கண்ணீர்ச்சுரப்பிகளை சுரந்து கலங்கவாரம்பித்தது.

வலுவிழந்திருந்த கைகளுக்கும் தான் எங்கிருந்து பலம் வந்ததுவோ?

தன் மகளின் கைகளைப் பற்றி நெஞ்சோடு அழுத்திக் கொண்டவர்,

தழுதழுத்த குரலில், ‘‘அம்மாடி.. நான் பார்க்குறது நிஜந்தானா? என் முன்னாடி நிற்குறது என் யாழினி தானா?’’என்று கேட்டவரின் கண்கள் இலேசாகக் கலங்கியிருந்தது

‘‘ஆமாப்பா..உங்க யாழினியே தான்..’’ — சொன்னவளின் கண்ணீர்த்துளி அவரது மார்புச்சட்டை நனைக்க, அவர் முகம் சட்டென இறுகலானது.

மகளின் கண்ணீர் எந்த தந்தையுமே காணச் சகியாத ஒன்று. அவருக்கு மட்டும் சகிக்குமா என்ன??

மகளின் கண்ணீர் கண்டு ஆத்திரம் பிறந்தது அவருக்குள்.

மகளின் உதவியின்றி, கொஞ்சம் சிரமத்துடனேயே எழுந்து, கட்டிலில் சாய்ந்து அமர்ந்தவர்,

சற்றே கறாரான குரலில், ‘‘முதல்ல கண்ணைத் துடை.. அப்பாவுக்கு ஒண்ணும் இல்லை.. பாரு நான் நல்லா தான் இருக்கேன்!! எதுக்கெடுத்தாலும் அழும்.. சாதாரண பெண்குழந்தைங்க மாதிரியா நான் உன்னை வளர்த்தேன்? .. பெண்கள் அழும் காலம் மலையேறி

போயாச்சு.. எது வந்தாலும் தில்லா நின்னு சமாளிக்குற தைரியத்தோடு தானே நான் உன்னை வளர்த்திருக்கேன்!! ..'' என்று கூற தந்தைக்காக,

சிரித்த முகத்துடன் கண்களை துடைத்து விட்டுக் கொண்டாள் அவள்.

யாழினிக்கோ சட்டென வந்து போனது 'கீழடியில்' வைத்து நடந்த நிகழ்வுகள்!!

தந்தை அறியாத முணுமுணுக்கும் குரலில், 'அந்த தைரியம் தான் என் எதிரியே!! .. கொஞ்சம் விட்டிருந்தா.. இந்த நேரம் அந்த சீக்கியன் மூக்கில் இரத்தம் ஒழுகிட்டிருந்திருக்கும்..!!' என்றாள்.

அப்போதும் கூட மகேந்திரன், யாழினியின் கையை விடவேயில்லை.

நான்கு மாதங்களுக்குப் பிறகு கிடைத்திருக்கும் மகளின் நெருக்கத்தை ஒவ்வொரு செக்கனும் கூட அனுபவித்துக் கொண்டிருந்தார் அவர்.

மகள் வருத்தப்படக் கூடும் என்பதற்காக, தன் வருத்தம் மறைத்தவர்,

''அப்பாவுக்கு ஒண்ணும் இல்லைமா.. ஆசிரமத்துல தியானம் முடிச்சிட்டு வெளியில் வர்றப்போ.. வாசலில் விளக்கெண்ணெய் கொஞ்சம்

கொட்டியிருந்திருக்கு.. பசங்க கையில் தவறுதலா கொட்டிப்பட்டிருக்கு போல.. அதை க்ளீன் பண்ண முன்ன.. அப்பாவும் பார்க்காமல் காலை வைச்சிட்டேன்.. வழுக்கி விழுந்ததுல கொஞ்சமா அடிபட்டிருச்சு.. இதுக்குப் போய் இந்த பந்தா....” என்று அவர் நடந்ததையெல்லாம் மகளிடம் ஒன்றுவிடாமல் சொல்லிக் கொண்டே வர,

யாரும் எதிர்பாராத நேரம் சட்டென இடையிட்டுக் கேட்டது ஓர் ஆண்குரல்!!

“கொஞ்சம் அடி மட்டுமா பட்டது அங்கிள்?”

அந்தக் கூற்று தாங்கி வந்த ‘அங்கிள்’ என்ற பிரத்தியேக அழைப்பில், யாழினியின் அடி நெஞ்சுக்குள் ஆயிரம் மத்தாப்பு வெடித்தது போன்ற சந்தோஷம் குமிழியிடவாரம்பித்தது.

சத்தம் வந்த திசையை நோக்கித் திரும்பியவளின்கண்கள் பளீரென மலர்ந்தது.

அங்கே, இள நீல நிறத்தில் ஸ்லிம்பிட் ஷேர்ட்டும், பேன்ட்டும் அணிந்து,

நெற்றியில் சின்ன விபூதிக் கீற்றுடன்...

ரொம்பவும் தெளிந்த முகத்துடன், சுவற்றில் சாய்ந்தவாறு, மார்புக்கு குறுக்காக கை கட்டி,

ஒரு கால் தரையில் நடப்பட்டிருக்க, மறு கால் சுவரில் பதிந்திருக்க ஸ்டைலாக நின்றிருந்தான் அவன்.

அவளது ஸ்ரீராம்!!

இருவர் விழிகளும் ஒரு செகன்ட் இரண்டறக் கலக்க.. அவனது ஆரோக்கியமான விழிகள், அவளிடம் ஆயிரம் காதல் கதைகள் மொழிந்தன.

அந்த ஒற்றைப் பார்வை பரிமாற்றத்தில் ஏதேதோ உள்ளே நடக்கக் கண்டாள் அவள்.

அவன் விழிகள் தற்போது மகேந்திரனை நோட்டமிட, கட்டிலை நோக்கி நடந்து வந்த வண்ணம்,

‘‘யாரு பந்தா காட்டுறது அங்கிள்? நாங்களா? அடிபட்டதும் மூச்சு பேச்சில்லாமல் போனால் யாருக்குத் தான் பயம் வராது?’’ என்று கூற, அவன் சொன்ன தகவலில் அதிர்ந்து போனாள் யாழினி.

‘‘என்ன சொல்ற ராம்? மூச்சு பேச்சில்லாமலா?’’- தன் அகன்ற நயனங்கள் இன்னும் கொஞ்சம் விரித்து அவள் கேட்க,

அந்த விழிகளின் நாட்டியத்தில் ஒரு நிமிஷம் நின்று துடித்தது ஸ்ரீ ராமின் நெஞ்சம்.

மகள் பயப்படுவாள் என்பதற்காக.. நடந்தவைகளை அவர் மேம்போக்காக கூற, இந்த ஸ்ரீராம் அனைத்தையும் உளறிக் கொட்டி விட்டானே? என்றிருந்தது பெரியவருக்கு.

கலக்கத்துடனேயே மகளைப் பார்த்து திரும்பியவர்,

“ஐய்யோம்மா.. கொஞ்சம் நேரம் என்னை அப்படியே விட்டிருந்தா.. நானே எழுந்திருச்சிருப்பேன்.. இந்த ராம் பய தான்.. ரொம்ப அலப்பறை பண்ணிட்டிருக்கான்..!!” என்று அதையும் ஏதேதோ கூறி சமாளிக்க முன்வர, அதற்கும் விடவில்லை ராம்!!

அவன் குரல் எளிமையாக மாற, “என்ன கொஞ்ச நேரமா? .. முழுசா ஒரு நாள் அங்கிள்!! ஒரு நாள்!!.. நீங்க சுயநினைவில்லாமல் இருந்திருக்கீங்க! உங்களுக்கு ஏதாவது ஆனால்? ஆசிரமத்தை, குழந்தைங்கள, பெரியவங்களை யார் பார்த்துக்குறது?” என்றவன்,

அத்தோடு விட்டானா?

யாழினியையும் வம்புக்கிழுக்க நாடி,

“இந்தா நின்னுட்டிருக்காளே மினி சொர்ணாக்கா.. இவளுக்கு நான் என்ன பதில் சொல்றது..?” என்று கூற,

தன்னை ‘மினி சொர்ணாக்கா’ என்றழைத்த ராமின் மேல் சுருசுருவென கோபம் பொங்கியது அவளுக்கு.

சுற்று முற்றும் ஏதாவது கைக்கு அகப்படுகிறதா என்று தேடியவள் கண்களுக்கு,

கட்டிலுக்கு பக்கத்திலே இருந்த டிராயர் மேல் இருந்த பூ வாஸிலேயே கண்கள் பதிய,

அதை எடுத்து ராமுக்கு அடிக்க ஓங்கியவள், போலிக் கோபம் மீதூறும் குரலில்,

“அடீஈஈஈங்க்.. நான் மினி சொர்ணாக்காவா?” என்று கேட்க,

ராமுக்கும், யாழினி தனக்கு அடிக்கப் போவதில்லை என நன்றாகவே தெரிந்திருந்தது.

இருப்பினும் பயந்து பின்வாங்குவது போல பாவ்லா செய்து கொண்டே,

“பார்த்தீங்களா அங்கிள்?... அற வழியில் ஆசிரமம் நடத்துற உங்களுக்குப் போய் இப்படி ஒரு

ரவுடி மகள்!!... ஆமா நீ மினி சொர்ணாக்கா தான்..!” என்றான் அவனும் சிறிதும் பின்வாங்காமல்.

இந்தத்தடவை நிஜமாகவே, அவன் மண்டையிலேயே போட வேண்டும் போல் தான் இருந்தது.

அதற்குள் அவள் தந்தை தான்.. அந்தரத்தில் இருந்த அவள் ஓங்கிய கையை மரித்து,

அதிலிருந்த பூவாஸை பிடுங்கி.. அதை பழையபடி இருந்த இடத்திலேயே வைத்து விட்டு,

தன் ஆசிரமத்திலேயே பிறந்து வளர்ந்த, ஸ்ரீராமை நோக்கினார்.

வெகுநாட்கள் கழித்து.. இருவரும் எலியும், பூனையுமாக சண்டை பிடித்துக் கொள்வதில் பழைய சுவாரஸ்யம் எட்டிப் பார்த்தது மகேந்திரன் கண்களில்.

போன உற்சாகமும், தேஜஸூம் திரும்பி வந்தது போன்ற குரலில், “ஹஹஹா விடும்மா..அப்பாக்காக வேலையை விட்டு வந்திருக்க? எப்போ திரும்பி போகப் போற..?” என்று கேட்டார்.

தந்தை கேட்ட கேள்வியில் தான் தன் வேலை நிறுத்தம் குறித்து ஞாபகம் வந்தது அந்த சுந்தரப் பெண்ணுக்கு.

சுட்டு விரலில் தான் அணிந்திருந்த மோதிரத்தை சுழற்றிக் கொண்டே,

மென்மையான குரலில், “எங்கே திரும்பிப் போறது?..இனி இங்கே தான் டேரா போடணும்னு நினைக்குறேன்..”என்று மெல்ல விஷயத்தை அவிழ்த்து விட்டாள் யாழினி.

அவள் சொன்னதைக் கேட்டு.. இரு ஆடவர்களின் புருவங்களும் ஒரு கணம் இடுங்கி, உயர்ந்தது.

அவள் தொனியே, அங்கே ஏதோ நடந்திருக்கிறது என்பதை சொல்லாமல் சொல்லியதை இருவருமே அவதானிக்கத் தான் செய்தனர்.

தந்தை தான் அவள் மனம் கோணாமல், நிதானமாக, “ஏன்..என்னாச்சும்மா?” என்று கேட்டார்.

ஆனால் ஸ்ரீராமோ… எப்போதும் யாழினியை சீண்டிப் பார்க்கும் எண்ணம் கொண்டவனாயிற்றே? இந்த தடவையும் சீண்டிப் பார்க்கும் எண்ணம் பிறந்தது போலும்!!

பேன்ட் பாக்கெட்டுக்குள் கையிட்ட வண்ணம் நின்றவன்,

இதழ்க்கடையோரம் பூத்த சிரிப்பை கடினப்பட்டு மறைத்துக் கொண்டு,

ரொம்ப ரொம்ப சீரியஸான குரலில்,

“ஆமா.. இவ முன்கோபம்.. எங்களுக்கு தெரியாதா? .. ப்ரப்போசர் கூடவே சண்டை போட்டிருப்பா.. ‘அம்மா தாயி.. ஸ்ரீலங்கா கவர்மென்ட்க்கிட்ட.. உன்னை அனுப்ப சொல்லி தமிழ்நாட்டு தொல்லியல் துறை சார்பா ரிக்வெஸ்ட் பண்ணது தப்பு தான்.. நீ ஸ்ரீலங்காவுக்கே கிளம்பிரு’ன்னு கால்ல விழாத குறையா அனுப்பி வச்சிருப்பாங்க..இது தான் நடந்திருக்கும்!!” என்று கூறிய தினுசில்,

அவள் தந்தைக்கும் அப்படி ஏடாகூடமாக நடந்திருக்க வேண்டும் என்று தோன்றியதோ என்னவோ?

தன் அடர்ந்த புருவங்கள் கொண்ட கண்களால் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தவர்,

அறிவுரை பகரும் குரலில்,

“யாழினி.. அப்பா உனக்கு, ‘ரௌத்திரம் பழகு’ன்னு தான் சொல்லி கொடுத்துருக்கேன்.. எடுத்ததுக்கு எல்லாம் ‘ரௌத்திரப்படு’ன்னு சொல்லிக் கொடுக்கலை..” என்று கூற,

என்றும் நின்று நிதானித்து பேசும் தந்தையையே, தனக்கு அட்வைஸ் செய்ய வைத்து விட்டானே என்று ராம் மேல் சீற்றம் மிகுந்தது அவளுக்கு.

பற்களைக் கடித்துக் கொண்டு, "ய்யூஊ…. ர்ராம்!!!…." என்று காற்றைப் பிடித்து அவள் நசுக்க,

அவனோ ரொம்ப ரொம்ப கூலாக சொன்னான்,

"யெஸ்.. ஐ ஆம் ராம்..!" என்று.

வெண்ணையில் குழைத்துக் குழைத்து செய்தாற் போன்றிருந்த அவள் முகத்தில், தற்போது எள்ளும், கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது.

சுட்டெரிக்கும் விழிகளால், 'என்ன இன்னைக்கு இந்த பிட்டு போதுமா ஐய்யாச்சாமி' என்பது போல சிரித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தவள்,

அடிக்குரலில், "இரு உன்னை அப்புறம் கவனிச்சுக்குறேன்.." என்றவள் தந்தையை நோக்கித் திரும்பினாள்.

அவரது கரங்களைப் பற்றிக் கொண்டாள். அகல்வாராய்ச்சி நின்று போன சோகம் அப்பிய குரலில்,

“அப்படிலாம் இல்லைப்பா.. கொஞ்சகாலத்துக்கு அகழ்வாராய்ச்சியை தள்ளி வைக்க சொல்லிட்டாங்க..” என்றாள்.

“ஏன் என்னாச்சு?”- அவள் சொன்னதைக் கேட்டு இரு ஆடவர்களிடமிருந்து அட் அ டைமில் பாய்ந்து வந்தது ஒரே கேள்வி!!

கனிவான முகத்துடன், தந்தையின் கைகளை வருடிவிட்டவள், “இப்போ எதுவும் கேட்காதீங்கப்பா.. நாளை காலையில் நிவ்ஸ் பேப்பர் படிக்கும் போது.. உங்களுக்கே புரியும்..?” என்று கூற, விஷயம் என்னவோ ரொம்பப் பெரிது தான் என்றே தோன்றியது மற்றிருவருக்கும்.

மகள் கோரிக்கையின் பிரகாரம், மகேந்திரன் அமைதியாகி விட, ஸ்ரீ ராம் தான் அப்போதும் அவளை சீண்டிக் கொண்டே இருந்தான்.

மேடம்? “கீழடியின் இரகிசயங்கள்” என்று காற்றில் கோடிட்டுக்காட்டியவன்,

“அப்படின்னு புக் எழுதி வாசகர்களை சாகடிக்கப் போற? ஏம் ஐ கரெக்ட்?”என்று கேட்டான்.

என்ன அவள் புத்தகம் எழுதி வாசகர்களை சாகடிக்கிறாளாமா??

நாசித்துவாரம் விடைத்து அடைங்க, தன் தனங்களுக்கு குறுக்காக கை கட்டிக் கொண்டவள், முயன்று கோபத்தை அடக்கிக் கொண்டு,

'இல்லை' என்பது போல மறுப்பாகத் தலையாட்டிய வண்ணம் அவனையே முறைத்தாள்.

அந்த முறைத்தலுக்கெல்லாம் பின்வாங்குபவனா அவன்?

ரொம்ப ரொம்ப பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு, நெஞ்சில் கை வைத்தவனாக, "என் நேரம்!! அதே கீழடி இரகசியங்களில்.. உன் அட்வென்ச்சர்ஸ்ன்னு.. பொய் சொல்லி... என்னை சாகடிக்கப் போற? இப்போ கரெக்ட்டா?" என்று சொல்ல,

ஸ்ரீராமின் கேலியில் வாய் விட்டே நகைத்து விட்டார் மகேந்திரன்.

அவனுடன் சேர்ந்து தந்தையும் சிரித்ததில், இன்னும் கொஞ்சம் சீற்றம் மிக,

காலை தரையில் அடித்து சிணுங்கியவள், "அப்பாஆஆ!!"என்று கத்த,

அங்கே மருந்துத் தட்டுடன் வந்த நர்ஸூம், இவள் கத்துவதை தவறாக எண்ணிக் கொண்டார் போலும்,

“உஷ்ஷ்ஷ்!! ப்ளீஸ் பி கொயட்...!!அதிக நேரம் பேஷன்ட்டை டிஸ்டர்ப் பண்ணக் கூடாது.. கொஞ்சம் வெளியே இருங்க..”என்று இரு இளசுகளையும் விரட்டி விட,

பெருமூச்சை விட்டு தன் கோபத்தை சமப்படுத்தியவாறு,

“ஸாரி சிஸ்டர்” என்ற வண்ணம், ஸ்ரீராமுடன் வெளியே வந்தாள் யாழினி .

வெளியே வந்தவள், ஸ்ரீராமுடன் தாருமாறாக சண்டை பிடிக்கக் கூடும் என்று தான் ஸ்ரீராமும் சுவாரஸ்யமான விழிகளுடன் காத்திருந்தான்.

ஆனால் யாழினியோ அதற்கு முற்றிலும் மாற்றமாக, ஸ்ரீராம் மீது கோபப்பட்டதையே மறந்து போனவளாக அமைதியாக அவனுடன் இணைந்து நடக்க,

ஆடவன் கண்கள் யோசனையில் சுருங்கியது.

இப்படி அமைதியாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தால், அது அவனுக்குத் தெரிந்த யாழினி அல்லவே அவள்?

தன் கைச்சந்தினால், யாழி கைச்சந்துக்கு இடித்தவன், மிருதுவான விழிகளுடன் அவளை நோக்கி,

“ஹேய் யாழி ஏன் டல்லா இருக்க? உள்ளே உன்னை கலாய்ச்சிட்டேன்னு கோவமா?”என்று கேட்டான்.

சின்ன புன்னகை பூத்துக் கொண்டே வாய் திறந்தவள், கவலை மீதூறும் குரலில்,

“அதெல்லாம் இல்லை ராம்.. அப்பாவை லாஸ்ட்டா நாலு மாசத்துக்கு முன்னாடி வந்து பார்த்ததை விட.. இன்னும் சோர்ந்து இளைச்சுப் போய் தெரியுறாரு..?”என்றாள்.

அவள், அவ்வாறு சொன்னதும்.. தன் பேன்ட் பாக்கெட்டுக்குள் கையிட்டு நடந்து வந்து கொண்டிருந்த அந்த ஆண்மகனின் பார்வை கொஞ்சம் மாறியது.

அதில் ஒரு வகையான காதல் மயக்கம் குடிகொள்ளவாரம்பித்தது.

தன் தாடையை வலது கையால் தடவிய வண்ணமே, கடைக்கண்ணால்,

அவளது நெற்றியோரம் தவழும் கார்குழலை இரசித்துக் கொண்டே,

“அங்கிள் மட்டுமா சோர்ந்து இளைச்சுப் போய் தெரியுறாரு?.. உன் கண்ணு முன்னாடி இத்தாம்பெரிய உருவம் நிற்குதே.... நான் இளைச்சுப் போயிருக்கேன்னு தெரியலையா?..” என்று வெகு வெகு மிருதுவாகக் கேட்டான்.

அவன் கேட்ட கேள்வியில் யாழினியின் நடை அப்படியே தடைப்பட்டு நின்றது. கூடவே அவன் நடையும் தான்!

அவர்கள் நின்ற இடமும் கூட யார் கண்ணுக்கும் உறுத்தாத ஓர் இடமாக அமையவே,

ராமின் கைச்சந்தைப் பற்றித் தன்னை நோக்கித் திரும்பியவள்,

தன் ஆண்மகனை உரிமையுடன் உச்சாதி பாதம் வரை ஓர் பார்வை பார்த்தாள்.

பின்பு கண்கள் சுருங்க அவனை நோக்கி, “அவ்ளோ ஒண்ணும் இளைச்சுப் போன மாதிரி தெரியலையே..?”என்று கேட்க,

அவனும், யார் கண்ணுக்கும் உறுத்தாத அந்தத் தனிமையில் கொஞ்சம் தைரியம் வரவே, அவளை நோக்கிக் குனிந்து,

மந்தகாசப் புன்னகையுடன் கேட்டான்,

“நிஜமாவே தெரியலையா?”என்று.

ராம் கண்களுக்குள் பார்த்த பார்வையில், பூவை அவளுக்குள் உள்ளே ஆயிரம் பட்டாம்பூச்சி அட் அ டைமில் பறந்தது போன்ற குளுகுளு சலனம்!!

அவள் இந்த நான்கு மாத இடைவெளியில்.. வேலையின் பளுவில் மறந்து விட்டிருந்த,

பெண்மைக்கேயுரித்தான மென்மை அவளுள் படர,

யாழினியின் கீழிமையும், மேலிமையும் ‘பச்சக் பச்சக்’ என்று முத்தம் வைத்துக் கொள்ள,

தன் காதோரக்குழலை அப்புறப்படுத்திக் கொண்டே.. தன் அகன்ற நயனங்கள் விரிய தன் தலைவனைப் பார்த்தாள் மங்கை.

அவள் தலைவன் ஸ்ரீராமும், தொடர்ந்து சொன்னான்.

அவன் இயம்பியவை அனைத்தும், ஆண்மகனாக அவனுள் எழும் ஆதங்கமோ?

இருக்கவும் செய்யலாம்? யார் கண்டார்?

“இந்த காலத்தில் இன்னைக்கு ஃபேஸ்புக்குல ரிக்வெஸ்ட் அனுப்பி, ஈவ்னிங் வாட்ஸ்ஆப்ல சேட் பண்ணி… நைட் ரூம் போட்டு, மேட்டரை முடிச்சிட்டு.. அடுத்த நாள் காலையில நீ யாரோ.. நான் யாரோன்னு போய்ட்டே இருக்க.. யங்க்ஸ்டர்ஸ் மத்தியில்..”என்று பேசிக் கொண்டே வந்தவனுக்கு

இறுதியில் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

பின் மீண்டும் சொன்னான்,

“நீ வெக்கேஷனுக்கு வந்துட்டுப் போன இந்த நாலு மாசமும்,

வெறும் ‘ஹாய், குட்மார்னிங், குட்நைட் மெஸேஜோட..’, அப்போ அப்போ சின்ன சின்ன வீடியோ சேட்டோட.. அதுவும் இவ்ளோ லவ்வோட உனக்காக மாமன் காத்திருக்குறது அபூர்வம் தெரியுமா??” என்றவன்,

தன் சட்டை காலரை கெத்தாக தூக்கி விட்டுக் கொண்டே, ‘‘நூத்துல ஒருத்திக்கு தான்.. அந்த ஸ்ரீராமனே கிடைப்பான் தெரியுமா?.. இட்ஸ் ஆல் லவ் யூ நோவ்?’’ என்றபடி அவளைப் பார்க்க,

அவளோ இத்தனை நேரமும் தன் மார்புக்கு குறுக்காக கைகளை கட்டிக் கொண்டு, அவன் பேசும் போது அசைந்த அந்த வன்மையான உதடுகளை பார்த்திருந்தவள்,

மிக மிக சாந்தமான குரலில்,

‘‘நீங்க ஸ்ரீராமனா சார்? நம்ம ஆசிரமம் ஆயா லக்ஷியம்மா பொண்ணையே அப்படி பார்ப்ப..?’’ என்று இழுக்க, இத்தனை நேரமும் கேஷுவலாக இருந்த அவன் முகம் சட்டென இருளத் தொடங்கியது.

கோபம் குமிழியிடும் குரலில், ‘‘தப்பா பேசாதே யாழினி.. ஷி இஸ் லைக் மை ஓவ்ன் சிஸ்டர்..’’ என்று சொன்னவனாக,

கோபத்தை அடக்க பெருமூச்சு விட்டு அவன் தலைகோதி நிற்க,

தன் கலியுக ராமனை பெருமிதம் மீதூற பார்த்தாள் அவள்.

இதுவே வேறு யாராவது ஆடவன் என்றால், அவள் வேலைக்கும், பாதி நாள் உள்ளூரில் இல்லாத அவள் நிலைப்பாட்டுக்கும்,

வேறு பெண்ணைத் தேடி சென்றிருக்கக் கூடும்!!

ஆனால் அவளுடனே ஆசிரமத்தில் வளர்ந்த உயிர் நண்பன் மற்றும் காதலனான ஸ்ரீராம், அவளுக்காக காத்திருப்பது அவளுள் காதலை மலரச் செய்ய,

“சரி.. ஜோக்ஸ் அபார்ட்.. அந்த காலத்தில் போருக்கு போன ஆண்கள், இதை விட ஜாஸ்தி லவ்வோட தன் மனைவிக்காக காத்திருக்கல?” என்று வேண்டுமென்றே, அவனை ‘நோஸ்கட்’ செய்யும் எண்ணத்துடன் கேட்டாள்.

அப்படிக் கேட்ட போது யாழினியின் அடர்ந்த புருவங்கள் கொஞ்சம் உயரவும் செய்தது.

அவள் புருவமுயர்த்திய தினுசில், சட்டென உள்ளே ஓர் இனிய அதிர்வலை தோன்ற,

திக்கும் தொனியில், “அ.. அப்போ.. பேஸ்புக், வாட்ஸ்ஆப்பா இருந்தது மணிக்கணக்கா கடலை போட? இல்லைல?” என்று கேட்க, அதை கேட்டு தலை சிலுப்பி நகைத்தாள் யாழினி.

அவனே எதிர்பார்த்திராத நேரம் சட்டென அவன் சட்டைக் காலரைப் பற்றி தன்னை நோக்கி இழுத்தாள் யாழினி.

அவனது பரந்த விரிந்த மார்பில், இவள் மென்மையான தனங்கள் பச்சக்கென்று மோதிக் கொள்ள, ஏதோ செய்தது.

அவன், அந்த அவஸ்தையான நொடிகளில் தடுமாறி நின்ற கணம், அவளோ காதலுடன் அவள் உதடுகள் பார்த்த வண்ணமே கேட்டாள்,

“சரி இப்போ என்ன தான்டா உன் பிரச்சனை?..” என்று.

அவனுக்கோ அவளுடன் ஒன்ற சந்தர்ப்பம் கிடைத்தும், அவளை அணைக்காமல், அந்தரத்தில் கை நீட்டி அவளிடமிருந்து விலக முயன்று கொண்டே,

“இதோ இப்படி சட்டையைப் பிடிச்சு கிட்ட வர்றது தான் பிரச்சினை??” என்று சொல்ல, அப்போதும் அந்த அப்பாவி ஆண்மகனை விட்டாளா இவள்?

அவன் மூச்சுக்காற்று அவள் நெற்றியோடு மோதிச் செல்ல.. அதுவும் கூட புதுமையான போதையைத் தோற்றுவித்தது யாழினுக்குள்.

இன்னும் கொஞ்சம் அவன் சட்டைக் காலரைப் பற்றித் தன்னோடு இழுத்தவள்,

காதல் தூறல் போடும் மென்மையான குரலில்,

“ஏன்.. நான் உன்னைக் கட்டிக்கப் போறவள்.. நான் உன்னை கட்டிப் பிடிக்கக் கூடாது?..” என்று கேட்டாள்.

அவள் பேசும் போது அசைந்த அந்த செவ்வதரங்களையே பார்த்திருந்தது அந்த ஆண்வண்டு.

கூடவே அவன் குரலும் அடங்கிப் போக,

“கூடாதுன்னு இல்ல? நான் இன்னைக்கு விரதம்..!! விரதத்தில் இருக்கும் ஒரு ஆண்மகன்.. சிந்தனையை களைக்குறது கூடாது..” என்று கூற, பட்டென அவனது சட்டைக்காலரை விட்டவள்,

ஏமாற்றம் அப்பிய குரலில்,

“விர.. தமா?” என்று கேட்டாள்.

“இன்னைக்கு என்ன விரதம்?”- ஏதாவது விஷேசமான விரதங்களா என்று தன் நாடியைத் தடவிய வண்ணம் யோசிக்கலானாள் அழகுப் பெண்.

“அங்கிளுக்காக.. அங்கிள் கண் விழிக்கணும்ன்றதுக்கா…” மென்மையாக நகைத்த வண்ணம் சொன்னான் இவன்.

அட்லீஸ்ட் ஒரு முத்தமாவது கொடுக்க விடாமல், இவன் விரதம் என்று விட்டானே என்ற போது யாழினிக்குள் உள்ளே ‘வட போச்சே’ ஃபீல் தான்!!

சலிப்புடன் நெற்றயில் அடித்துக் கொண்டவளாக,

“பொம்பளைப்புள்ளைங்க விரதம் இருக்குறது ஓகே.. ஆனால் நீ??… இருந்தாலும் இது எல்லாம் ஜாஸ்தி ராம்.. .. உன்னை மாதிரி பக்திப் பழத்தைக் கட்டிக்கிட்டு நான் பியூட்ச்சர்ல என்ன பண்ண போறேனோ…??ராமா!!..”என்று அவள் இரு கை உயர்த்தி அந்த ஸ்ரீராமச்சந்திரனை அழைக்க,

இவனோ, வழக்கம் போல தன் ட்ரேட் மார்க் புன்னகை சிந்தி,

“யெஸ் ஐம் ஆம் ராம்..!!”என்றான்.

கடுகடுவென முகத்தில் சீற்றம் வெடிக்க,

“இதுக்கு மட்டும் ஒண்ணும் குறைச்சலில்லை.. கல்யாணத்துக்கப்புறம் விரதம்னு சொல்லிட்டு வந்தேன்னு வை.. டிரக்டா டைவர்ஸ் தான்.. இப்போவே சொல்லிட்டேன்..” என்றவளுக்கு பசி எடுத்திருக்க வேண்டும் போலும்.

விடுவிடுவென ஹாஸ்பிடல் கேன்டீனை நோக்கி விரைந்தாள் யாழினி.

அவளது வேகநடைக்கு ஈடுகொடுக்க முடியாமல்,

“ஹேய் யாழி.. நில்லு..” என்ற வண்ணம் பின்னாடியே விரைந்தான் ஸ்ரீராம்.

அதே ஹாஸ்பிட்டலின்,

விவிஐபிக்கள் மட்டும் சிகிச்சை பெறும் தளம்,

தளத்தின் இரு மருங்கிலும், லிப்ட்டின் இரு ஓரத்திலும் ஆயுதம் தாங்கிய திடகாத்திரமான ஆடவர்கள் காவல் காத்து நிற்க,

சிகிச்சையளிக்க டாக்டரே உள் நுழைந்தாலும் கூட, அவர் முற்றுமுழுதாக பரிசோதனை செய்யப்பட்டே.. அறைக்குள் அனுப்பபப்படும் அளவுக்கு,

பாதுகாப்புக்கள் இருக்கும் தளம் அது!!

பின்னே அங்கே இந்த மூன்று மாதங்களாக கோமாவில் படுத்திருப்பவன் சாமான்ய மனிதனா என்ன?

பல்லாயிரக் கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு உடையவனான, ஆசியாவின் வன் ஆப் மோஸ்ட் லீடிங் பிஸினஸ் டைக்கூன், சாம்ராட் யாதவ் மகாதேவன் ஆயிற்றே!!

சரியாக நிவ் யர் ஈவ் அன்று நடந்த அந்த விளையாட்டுப் பந்தயம் வினையான பந்தயமாகத் தான் முடிந்தது அவனுக்கு.

உள்ளே அறையில் மிதமான ஏசி குளிர் பரவியிருக்க, சேலைன் பாட்டில்களும், இதயத்துடிப்பை கணிக்கும் கருவிகளும் அதனதன் வேலைகளை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்க,

நிர்ச்சலனமான முகத்துடன் படுத்திருந்தான் யாதவன்!!

அவனது திடாகாத்திரமான உடலுக்கும், உயரத்துக்கும் அந்த கட்டில் கூட குறுகலானதாகவே இருந்தது.

அந்த நிமிஷம் தான் அவன் வாழ்வில் எதிர்பார்த்திராத பல திருப்பங்கள் நடந்தேறிக் கொண்டிருந்தது.

அவனது இதயத்துடிப்பைக் காட்டும் மானிட்டர் கருவி..தாருமாறாக ஏறி இறங்கித் துடிக்க,

யாதவனின் மூடிய கண்களின் கருமணிகள் அங்குமிங்கும் அலைந்து திரிந்தன.

அவன் கண்களை மூடிக் கொண்ட போது பரவிய அதே வெளிச்சம்!!

கண்களை கூசச்செய்யும் அதே வெளிச்சம் அவனது மூடிய விழிகளுக்குள் பரவ,

அந்த வெளிச்சத்துக்குள் ஓயாது எதையோ தேடவாரம்பித்தான் அந்த வலிமையான ஆண்மகன்!!

அதோ அவன் தேடல் ஓய்வுக்கு வந்தது; அவன் கண்கள் அந்த அழகிய நயனங்கள் கொண்ட பெண்ணை கண்டு கொண்டன.

அவள் முகம் தற்போது ரொம்ப ரொம்ப பரிச்சயமான முகமாக இருந்தது அவனுக்கு.

அன்று அவன் விபத்தின் பின் கண் மூடிய நேரம் சொன்ன அதே வார்த்தையை இன்றும் சொன்னாள் அவள்.

அவள் தலை கோதியவளாக, காதலுடன், உயிர் கரைக்கும் மையலுடன், ‘‘உன் கூட நானிருக்கேன்..’’ என்ற அந்தப் பெண்..

அவனுடைய உச்சந்தலையை மெல்ல வருட அடுத்த செக்கன், இதழ்களைத் திறந்து மூச்சு விட்ட வண்ணம்,

நனவுலகம் வந்தவன்,

‘‘ஜாஆஆனு!!..’’என்று கத்திக் கொண்டே கண் திறந்தான் யாதவ்.

அத்துடன் நின்றானா அந்த சத்திரியன்?

தன் பக்கத்திலேயே நின்றிருந்த நண்பன் விக்னேஷையும்,

யாதவனுக்கு என்றிருக்கும் ஒரே உறவு அவன் சித்தப்பாவையும்,

இன்னும் ஏன் அவனை பரிசோதித்துக் கொண்டிருந்த டாக்டர் மற்றும் நர்ஸ்களையும் பதற வைத்துக் கொண்டே,

கட்டிலில் இருந்து எழுந்து வெளியே ஓடப் போனான் யாதவன்!!

ஏதேதோ நினைவுகளின் தாக்கம்!!

அவனை எரிக்கும் சில ஈரமான நினைவுகளின் தாக்கம்!!

அவள் மதிமுகத்தைக் காண வேண்டும்!! அவள் அருகாமை வேண்டும்!! அவளது சுகந்தம் அவன் நாசி நிரட வேண்டும்!!

இப்படி ஏகப்பட்ட வேண்டும்களை மனதுக்குள் தேக்கியிருந்தவன்,

மரணத்திலிருந்து ஜனித்து வந்தவன் போலவா நடந்து கொண்டான்??

சர்வ நிச்சயமாக இல்லை!!

அவன் கால்களில் இன்னும் வலு இருந்தது. அவன் நெஞ்சில் இன்னும் காதல் பளு இருந்தது.

அவன் அணிந்திருந்த ஹாஸ்பிட்டல் சட்டை கூட.. அவன் திண்ணிய மேனியையும், திரண்டிருந்த புஜங்களையும், உரமேறிப் போய் முறுக்கேறித் தெரிந்த கைகளையும் மறைக்க,

பகீரத பிரயத்தனம் செய்தது.

ஏதோ வெறி வந்தவன் போல.. அவன் அறையை விட்டும் அசுர கதியில் முன்னேற அவன் வேகத்தைத் தாக்குப் பிடிக்க யாராலும் முடியாமல் போனது.

அவன் நனவுடன் இருந்த நாளிலும் சரி, மரித்து ஜனித்த இப்பொழுதிலும் சரி.. அவன் வேகத்துக்கு ஈடுகொடுக்க இன்னொரு ஆண்மகன் பிறந்து தான் வர வேண்டும்!!

சட்டென விக்னேஷும், அங்கே காவலுக்கு நின்றிருந்த காவலாளிகளும்,

நர்ஸும் அவனைப் பிடிக்க முயல, அந்த மராமரம் போன்ற வலிய உடல் உடையவனை கட்டுக்குள் கொண்டு வருவது,

ஜல்லிக்கட்டு காளையை அடக்குவதை விடவும் சிரமமாவே இருந்தது.

“டேய் என்னை விடுங்க.. நான்.. என் ஜானுவைப் பார்க்கணும்.. என் ஜானுவை ஒரு தடவை நான் மிஸ் பண்ணது போதும்.. இன்னொரு தடவை மிஸ் பண்ண நான் தயாரில்லை…” என்று ஏதேதோ அரற்றிக் கொண்டே போனவனை,

இழுத்து வந்து… கட்டிலில் விடாப்பிடியாக கிடத்தி… மயக்க ஊசி செலுத்திய போது..

அவனது கையின் உரம் தாங்காமல் ஸ்ரிஞ்சின் முனைப்பகுதி உடைந்து போனது.

கோமாவில் இருந்து வந்தவனின் உடல் காட்டிய அதிசயத்தில், டாக்டர் வியந்து நிற்க,

ஒருவாறு ஊசி போட்டு, அவனைத் தேற்றலாயினர் மற்றவர்கள்.

அருகில் நின்றிருந்த விக்னேஷ் தான், அவனது பரந்த நெஞ்சை நீவி விட்ட வண்ணம், “மச்சான்..காம் டவுன்!! … காம் டவுன்…!!!ஜானுவைப் பார்த்துக்கலாம்டா..இப்போ கொஞ்சம் ரெஸ்ட் எடு..” என்று உரைக்க,

யாதவனின் கருமணிகள் மருந்தின் வீரியத்தில்… அதுவும் மூன்று சாமான்ய மனிதர்களுக்கு கொடுக்கும் மருந்தை.. ஒற்றையாளுக்கு ஏற்றிய பின் தான் மெல்ல கண்ணயர்ந்தான்.

அவன் சித்தப்பா.. யாதவனுக்கு என்றிருக்கும் ஒரே உறவு!!

கோட்சூட் அணிந்து, கைகளில் ஸ்டிக்குடன் நின்றிருந்தவரின் வயது.. அநேகமாக பின் நாற்பதுகளில் இருக்கக் கூடும்.

காதுக்கு மேலாக வளர்ந்திருந்த தலைமயிர் கொஞ்சம் நரைத்துப் போயிருந்தது.

அவர் விழிகளும், விக்னேஷின் விழிகளும் ஒன்றையொன்றை ஆழமான சிந்தனையுடன் பார்த்துக் கொண்டன.

விக்னேஷைக் கண்களாலேயே வெளியே வருமாறு அழைத்தவர்,

முன்னே செல்ல,

இப்போது எதற்கு அழைக்கிறாரோ? என்ற வண்ணம் பின்னாலேயே நகர்ந்தவனுக்கு,

யாதவன் ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்ட அன்று, அவரிடம் இருந்து கிடைத்த திட்டுக்கள் தற்போதும் செவியை நிறைக்கவாரம்பித்தன விக்னேஷூக்கு.

“அவனுக்கு தான் வீண் பிடிவாதம்னா.. உங்களுக்கு எங்க போச்சு புத்தி? ஃப்ரன்ட்ஸ்னா நல்லது, கெட்டது சொல்லிக் கொடுக்கணும்.. அவன் எது பண்ணாலும் அதுக்கு ஜால்றா அடிக்குறது பேரு ஃப்ரண்ட்ஷிப் இல்ல..” என்ற யாதவ் சித்தப்பா, சங்கர்தேவன் மொழிந்தவை ஞாபகம் வந்தது விக்னேஷூக்கு.

அண்ணன் மகனாக இருந்தாலும், யாதவன் மேலே எப்போதும் அன்பும், பாசமும், உரிமையும் ஜாஸ்தி சங்கர்தேவனுக்கு.

அவர் முகத்தில் சந்தோஷமும், குழப்பமும், கலக்கமும் போட்டி போட்டுக் கொண்டு, மிளிர்ந்து கொண்டிருந்தது.

இளையவன் விக்கியைப் பார்த்த, யாதவனின் சித்தப்பா,

“விக்கி..அவன் கண்ணு முழிச்சதும் ஒரு சந்தோஷம்னா.. அவன் உளறுறதைப் பார்க்குறப்போ பயமா இருக்கு!!! யாருடா அந்த ஜானு?” என்று தான் முதன் முதலாக கேட்டார்.

எதுவுமே அனுமானிக்க முடியாதவனாக, தாடையை சொறிந்து கொண்டே, சித்தப்பாவை நோக்கியவன், சிறுத்துப் போன குரலில்..

“தெரியலையே சித்தப்பா.. அவன் திரும்பவும் வந்ததில் எனக்கும் சந்தோஷம் தான்.. யாதவன் என் உயிர்.. அவனுக்கு ஒண்ணுன்னா… என் உயிரைக் கொடுத்தாவது அவனைக் காப்பாத்துவேன் சித்தப்பா.. ஆனால்.. சின்னவயசுல இருந்து நானும் அவன் கூட

ஒண்ணா தான் சுத்துறேன்... ஐ ஹேவ் நோ ஐடியா அபௌட் தேட் ஜானு..” என்று கூற,

இருவர் பார்வையும் ஒருவரையொருவர் யோசனையுடன் தழுவிக் கொண்டது.

அத்தியாயம் 4

கொழும்பு, ‘கொள்ளுப்பிட்டிய’ வில் அமைந்திருக்கும்,

‘வோக்ஸ் ஜூவெல்லர்ஸ்’ கட்டிடத்தின்,

எந்தவிதமான நகைகளும், ஆபரணங்களுமோ காட்சிக்கு வைக்கப்படாத மேல் தளம்!

நூறுக்கும் மேற்பட்ட வெல்வட் சீட்களைக் கொண்ட...

நாற்பக்கமும் அடைக்கப்பட்ட சுவர்களைக் கொண்டு, முழுதும் ஏசி காற்று நடமாடும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் மேல்தளம்!!

அதன் சுவர்கள் கூட ‘சவுண்ட் ப்ரூஃப்’ தொழில்நுட்பத்தைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்ததாகையால்,

அங்கிருந்த மேடையின் ஒலிபெருக்கியின் வழியாக ‘ஹை டெஸிபளில்’ உயிர் போகக் கத்தினாலும் கூட வெளியே கேட்க வாய்ப்பிருக்காது.

ஆங்காங்கே பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களைக் கண்காணிக்க,

இலங்கை இராணுவத்தில் தொழில்நுட்ப பிரிவில் கடமையாற்றும் இராணுவ வீரர்கள் இருவரும் கூட பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கும்,

அதி பாதுகாப்பு நிறைந்த இடம் அது!!

அந்த தளத்தில் அமைக்கட்டிருந்த மேடையில், முழுதும் கண்ணாடியிலான,

நின்று பேச உபயோகிக்கப்படும் ‘போடியம்’ பின்னாடி நின்றிருந்தாள் யாழினி!!

நம் கதாநாயகி யாழினி மகேந்திரன்!!

அவள் சரும நிறத்தையும், உடலையும் பிரித்தறிய முடியாத நிறத்தில் கோர்ட்டும்,

முழங்கால் முட்டியின் ரோஸ் நிறச் சிவப்புத் தெரியும் வண்ணம்,

கோட்டுக்குத் தோதான, தன் தொடையை இறுக்கிப் பிடித்திருக்கும் ஸ்கேர்ட்டும் அணிந்து,

அதே நிறத்தில் அதிக உயரமில்லாத ‘கோட் ஷூ’ அணிந்து,

அந்த இடத்திற்கு பக்காவாக பொருந்திப் போகும் பெண்ணாக நின்றிருந்தாள் யாழினி!!

இலேசான ஒப்பனையும்.. இதழ்களில் இருந்த கடுஞ்சிவப்பு வண்ண நிறப்பூச்சும் கூட, யாழினிக்கு அழகாகவே இருந்தது.

தன் கூந்தல் முழுவதையும் வாரி எடுத்து, ‘குதிரை வால்’ ஹேர் ஸ்டைலொன்றைப் போட்டிருந்தவள்,

வெல்வெட் சீட்டில் அமர்ந்திருந்த கணவான்களைப் பார்த்தாள்.

அங்கே அமர்ந்திருந்த பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள் அல்ல என்று பார்த்ததுமே புரிந்தது யாழினுக்கு.

உடம்பு முழுவதையும் மறைத்து, தலையையும் சால்வை போட்டு மறைத்து சில பல அரேபியர்களும்,

குட்டை மூக்குடனும், சிறிய கண்களுடனும், கோர்ட் சூட் போட்டு அமர்ந்திருக்கும் சில சீனர்களும்,

பெரிய இதழ்களையும், கறுப்புத் தோற்றத்தையும் கொண்டு விகாரமாக அமர்ந்திருந்த ஆபிரிக்கர்களும்,

தென்னாசிய நிறத்தைக் கொண்ட ஒரு சில மனிதர்களும் அங்கே இருக்க, அநேகமாக அவர்கள் இந்தியர்களாகவோ, பாகிஸ்தானியர்களாகவோ இருக்கக் கூடும் என்று எண்ணிக் கொண்டாள் யாழினி.

இன்னும் ஏன் சில ஐரோப்பிய, அமெரிக்கர்களும் கூட அந்த கூடத்தில் அமர்ந்திருந்தனர்.

அவர்கள் அனைவரையும், பொதுவாகப் பார்த்து ,மரியாதை நிமித்தம் மிருதுவாக புன்னகை பூத்தாள் யாழினி.

பதிலுக்கு அந்த சர்வதேசத்தவர்களும் புன்னகை பூக்க, பல மொழி இனத்தவர்களும் அங்கே இருக்க,

தாய் மொழியிலேயே தன் உரையைத் தொடங்கினாள் யாழினி!!

அங்கிருந்த பல் தேசத்தவர்களுக்கு, ஹெட்ஸெட் வழியாக, அவள் உரைப்பவை அனைத்தும் டக்டக்கென்று மொழிபெயர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அவளது இனிமையான குரல்.. அந்த மூடப்பட்ட தளம் எங்கும் கணீர் என்று எதிரொலிக்க, செம்மையாகவே தன் உரையாடலைத் தொடர்ந்தாள் யாழினி!!

“ நெக்ஸ்ட்.. இரண்டாவதாக நடக்கப் போகும் ஒக்ஷன்.. ஆன்டிக் ரிங்க்..” என்று சொல்ல,

கையில் வெள்ளை கையுறையுடன், ப்ளேசர் அணிந்து வந்த.. அங்கே பணிபுரியும் ஓர் ஆடவன் ஒருவன்,

நீல நிற வெல்வட் பாக்ஸிலிருந்து, ஒரு மோதிரத்தை எடுத்துப் பார்வைக்கு வைத்து விட்டு பின்னாடி சென்று,

கைகட்டி பவ்யமாக நிற்க, யாழினியோ, அந்த மோதிரத்தை சுட்டிக்காட்டிய வண்ணம் தொடர்ந்தாள்.

"இந்த மோதிரத்தையுடைய பூர்வீகம் இந்தியா.. மகாபாரத காவ்யத்தின் ஹீரோக்களான.. பஞ்ச பாண்டவர்களின் முன்னோர்கள் யூஸ் பண்ண ஒரு ராஜ மோதிரம் தான் இது!!

கிட்டதட்ட சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு பழைமையான இந்த மோதிரம்..

நூறு வருஷங்களுக்கு முன்னாடி இந்தியாவில் நடந்த ஓர் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டது.

ரோமிலிருந்து கொண்டு வரப்பட்ட விஷேச பவளமணிகள் பதிக்கப்பட்டிருக்கும் மோதிரம்..

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்தேழில்.. ஸ்ரீலங்கா ப்ரஸிடென்ட் பிரேமதாச அவர்களுக்கு, இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களால்.. இலங்கை, இந்திய நல்லிணக்கத்தின் அடிப்படையாக அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

இருந்தாலும்.. யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தைச் சேர்ந்த.. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த.. சுமார் நூத்திப்பத்துக் குடும்பங்களை மீள்குடியேற்றம் செய்யும் நிதிக்காக..

இந்திய அரசின் சம்மதத்தின் பேரில்.. இந்த மோதிரத்தை அரசு ஏலத்துல விடலாம்னு முடிவெடுத்திருக்கு..!!

பிடர்ஸ் தாராளமாக இதை ஏலத்தில் கேட்கலாம்.. இதனுடைய ஆரம்ப விலை…” என்று அவள் ஏலத்தைத் தொடங்கப் போக,

நந்திப் போல குறுக்கிட்டுக் கேட்டது ஓர் குரல்!! அது யார் குரலும் இல்லை!!

இன்று, ‘வோக்ஸ்’ ஜூவெல்லர்ஸில் நடக்கும் ஏலத்தின் பொறுப்பதிகாரியான திரு. மூர்த்தியே தான்!!

சுமார் நாற்பது, நாற்பத்தைந்து வயதிருக்கும் மூர்த்திக்கு. இருந்தாலும் சின்னப்பெண் யாழினியின் பதவிநிலை காரணமாக, மரியாதையுடனேயே அவளை விளித்தார் அவர்.

“மேடம்..!!” என்று பவ்யமாகவே குறுக்கிட்ட அந்த குரலில் அனிச்சையாய் திரும்பியவள்,

“ம்?”என்று கேட்டாள்.

அவரோ··· இலங்கையின் பிரசித்தமான தொல்லியலாளரை நோக்கி, குசுகுசுக்கும் குரலில்,

“இன்னும் வை. எம். டி ஆட்கள் வரலை···” என்று இழுக்க, அவளிடமிருந்து பாய்ந்து வந்தது பதில்.

"ஸோ வாட்..?"- தன் அடர்ந்த புருவங்களை உயர்த்தி, அமைதியாகவே கேட்டாள் அவள்.

மூர்த்தியின் முகமோ அவஸ்தையில் தெளிந்தது. அந்த ஏசியிலும் உதடுகளுக்குக் கீழே சுர்ரென்று வியர்க்க,

"அவங்க வந்தப்பறம் ஆரம்பிக்கலாமே.. அதுவரைய்ய்ய்….." என்று இழுக்க, நம் முன்கோபியான கதாநாயகிக்குப் போனது கோபம்!!

இருந்தாலும் இடம்பொருள், ஏவல் கருதி, கடினப்பட்டு அடக்கிக் கொண்டவள்,

மூர்த்தியைப் பார்த்து, "மிஸ்டர். மூர்த்தி.. ஃபங்ச்சுவேலிட்டின்னு ஒண்ணு இருக்கா இல்லையா??.. இப்போ லெவன் ஃபைவ்..!! இது செகன்ட் ஒக்ஷன் நடக்கும் டைம்ல? அவங்க வந்திருக்கணும்..!! வராதது அவங்க தப்பு..!!என் கடமையை செய்ய விடுங்க.." என்று சொன்னவள் மீண்டும் ஏலத்தை ஆரம்பிக்க முயல,

படாரெனத் திறக்கப்பட்டது அந்த ஆடிட்டோரியத்தின் பாரிய கதவுகள்!!

தன் இடது பக்கம் திரும்பிப் பார்த்தாள் யாழினி.

கண்களை இலேசாகக் கூசச் செய்யும் வண்ணம், வெளியிலிருந்து வந்த சூரிய வெளிச்சம் பரவ,

தன்னிரு கால்களையும் அகட்டி வைத்தவாறு,

ஒரு கை பேன்ட் பாக்கெட்டுக்குள் அடைக்கலமாகியிருக்க, ரோலெக்ஸ் வாட்ச் தாங்கிய மறுகை சுயாதீனமாகத் தொங்க,

கம்பீரமாக நின்றிருந்தான் ஓர் ஆடவன்!!

அவனோடு இருந்த மற்றொரு ஆடவன், கூட்டத்தைக் களைக்குமாக, “ ஒரு நிமிஷம்!!” என்று சொன்னதெல்லாம், அவள் காதுகளில் விழுந்ததோ என்னவோ?

அவள் பார்வை சூரிய வெளிச்சத்தில், கண்களை கூசச் செய்த வண்ணம் நின்றிருந்த அந்த ஆடவனிலேயே பதிந்திருந்தது.

அவளை ரொம்ப நேரம் கண்களை சுருக்கச் செய்யாமல், தன் அழுத்தமான காலடி எடுத்து வைத்து உள்ளே வந்தான் அவன்!!

“இரு மலைகளை அருகருகே வைத்தாற் போன்ற திண்ணிய புஜம் உடையான்” என்று கம்பன் ராமனை வர்ணித்திருந்ததை இதுவரை ஏட்டில் மட்டுமே பார்த்திருந்தவள்,

நேரில் முதன் முறையாக பார்க்கிறாள் இன்று!!

அந்த திண்ணிய புஜங்களை மறைக்க, பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தது அவன் அணிந்திருந்த கோட்!!

கன்னியர்கள் மயங்கும், மயக்கும்.. இளங் காளையனைப் போல நின்றிருந்தான் யாதவன்.

அவன், சாம்ராட் யாதவ் மகாதேவன்!!

அவனைப் புடைச்சூழ, ஒரே மாதிரியான சீறுடையில், சிற்சில காவலாளிகள் நின்றிருக்க ,

அவன் கண்களோ அந்த மேடையில் நின்றிருந்த அவளின் கண்களேயே தான் இமைக்காமல் பார்த்திருந்தது.

அவளது கூந்தல் அலங்காரம், இடத்துக்குப் பொருந்தினாற் போன்றிருக்கும் உடை,

கறுமையே படாத, ரோஸ் நிறத்தினாலான முழங்கால்கள்!! என உச்சாதி பாதம் வரை அவளைக் கண்களாலேயே ஆராய்ந்தவன் கண்கள்,

சற்றே மேலெழுந்து.. அவளுடைய கடுஞ்சிவப்பு நிற உதட்டுச்சாயம் பூசப்பெற்ற,

அவள் இதழ்களில் நிலைத்து நின்றது. அவன் கண்கள் எந்த பெண்களைப் பார்க்கும் போதும் உருவாக்கிக் கொள்ளும் ஓர் இரும்புத் திரையை இன்று தகர்த்துத் தான் இருந்தது.

தன் முன்னே இருந்த சுந்தரப்பெண்ணை.. கொஞ்சம் என்ன? நன்றாகவே ஓர வஞ்சனை

இல்லாமல் கண்களாலேயே விழுங்கிக் கொண்டிருந்தான் யாதவன்!!

யாழினிக்கோ.. முதலில் வியப்பு என்றால்.. இரண்டாவது அவன் பார்த்த பார்வையில், ஓர் அறுவெருப்பு தோன்றி மறையலாயிற்று.

யாதவன், தன் முன்னே சிலையென நின்றிருந்தவளின் கண்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தான்.

அதே விழிகள்!! மூச்சு மறந்து இமைகள் மூடிக் கொள்ள எத்தனித்த போதும் அவன் கண்களுக்குள் வந்து நின்ற அதே விழிகள்!!

யாதவனுக்கு, அவள் விழிகளில் உலகம் சுழன்றது; யாவும் மறந்தது.

அவன் தன்னை மறந்தான்;தன் சுற்றம் மறந்தான்; இடம், பொருளை மறந்தான்.

அவன் நினைவில் இருந்ததெல்லாம் அவன் ஆண்; இவள் பெண்!!

அவனுக்கே அவனுக்கென்று சொந்தமான பெண் என்பது மட்டும் தான்.

அவள் விழிகள் பார்த்தவன், மன்னன் மகள் அமராவதியைப் பார்த்து மையலுற்ற, கம்பனின் மகன் அம்பிகாபதி ஆனான்.

“உன் ஒற்றை விழிப் பார்வையில்

அடங்காது தறிகெட்டுப்

பாயும்

என் மனமும்

அடங்கிப் போவது ஏனோ

கண்மணியே!”

என்று அவன் இதழ்கள் திறவாமல், முணுமுணுக்காமல், மனதுக்குள் வாசித்த கவிதை,

உலகாதிசயமாக.. போடியத்தின் பின் நின்றிருந்த இவள் காதுகளுக்குள் கேட்க… தன் கண்களை அகல விரித்து ஜர்க்காகி நின்று விட்டாள் யாழினி.

அவள் இமைகளும் சரி, இதயமும் சரி, அட் அ டைமில், காற்றுக்கு ஆடும் ஜன்னலைப் போல படபடவென்று அடித்துக் கொண்டன.

‘எ.. என்ன சொன்னான்? அவன் தான் வாய் திறக்கவேயில்லையே??.. அப்புறம் எப்படி.. அவன் ஹஸ்கி குரல் அவள் காதோரம் ஒலித்தது?’

குப்பென்றது வியர்க்கத் தொடங்கியது அவளுக்கு.

ஒரு நிமிஷம் உலகம் சூன்யமானது அவளுக்கு.

பிரம்மையோ? தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள் அவள்.

ஒரு கணம் கால்கள் தள்ளாட அந்த மேடையைப் பிடித்துக் கொண்டு நின்றவள்,

தன்னைத் தானே சமன் செய்ய, மேசையில் இருந்த தண்ணீர் க்ளாஸை எடுத்து,

அவனை படபடப்பாகப் பார்த்துக் கொண்டே தண்ணீர் அருந்தலானாள்.
யாதவனின் பார்வையோ அப்போதும் அவளை விட்டும் அகலவேயில்லை.

அவள் படபடப்பில், ஓர் விஷமச்சிரிப்பை அவன் மறைத்துக் கொண்டாலும் அவன் பார்வை?

அந்த பொல்லாத பார்வை இருக்கிறதல்லவா? அந்த பொல்லாத பார்வை.. தண்ணீர் திரள்கள் ஏறி இறங்கிய அந்த வெண்சங்குக் கழுத்தையே தான் வட்டமிட்டது.

யாதவனைக் கண்டதும் அந்த ஏல ஏற்பாட்டாளரான மிஸ்டர். மூர்த்தி தான் சட்டென தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்து,

யாதவன் முன்னிலையில் கூழைக்கும்பிடுப் போட்டவராக,

“வாங்க சார் உள்ளே வாங்க சார்.. இன்னும் ஏலம் தொடங்கவேயில்லை.. உள்ளே வாங்க சார்.. உங்களுக்காகத் தான் வெயிட்டிங்க்” என்று அவனை..

கூன் முதுகிட்டவராக வரவேற்ற அந்த நொடிகளை அறவே வெறுத்தாள் யாழினி.

அங்கிருந்து ஓட துடித்த கால்களை.. இழுத்துப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள் அவள்.

யாதவனும், அவனுடன் வந்த இன்னோர் ஆடவனும் இருக்கைகளில் போய் அமர,

அங்கே வந்திருந்த பெரும்பாலான சர்வதேச பணக்காரர்கள் எல்லாரும் எழுந்து வந்து அவனுடன் கைகுலுக்கிக் கொள்ள,

அவனும் அவர்களுடன் கை கைகுலுக்கி உரையாற்றவே செய்தாலும் அவன் பார்வை மட்டும் யாழினியை விட்டும் இம்மியளவும் அசையவில்லை.

‘இவன் என்ன அவ்வளவு பெரிய அப்பாடக்கரா?’ என்று உள்ளே எண்ணம் எழுந்தாலும் கூட, அவளுடைய அழுந்த மூடிய இதழ்கள்.. அழுந்த மூடிய இதழ்களாகவே தான் இருந்தன.

முகமன், கைகுலுக்கல்.. அந்தக் கணவான்களின் கட்டிப்பிடி வைத்தியம் என எல்லாம் நீங்கி.. நிலைமை சுமூகமடைய… இன்னும் பத்துப் பதினைந்து நிமிடங்கள் வீணாகிப் போனது.

இதில் மூர்த்தி வேறு அவள் எரிச்சலைக் கிளப்பும் வகையில், அவனிடம், ‘‘ஆரம்பிக்கலாமா சார்?’’ என்று வெகு வெகு பவ்யமாகக் கேட்க,

யாதவனும் கண்ணிமை மூடித்திறந்து, ராஜ தோரணையில், ‘அப்படியே ஆகட்டும்!’ என்பது போல.. சைகை செய்ய,

அங்கே மீண்டும் ஏல விற்பனை தொடங்கப்பட்டது.

இவள் தான், இரண்டாவதாக இடம்பெறும் ஏல விற்பனைக்கு பொறுப்பாளினி.

இவளிடம் தான் மூர்த்தி அப்படி கேட்டிருக்க வேண்டும். ஆனால் ஒரு புதியவனிடம் போய், அதுவும் இடுப்பளவு வரை குனிந்து ஒரு பணியாளனைப் போல மூர்த்தி கேட்ட விதம்,

அவளுள் கோபத்தைக் கிளப்ப,

பெருமூச்சு விட்டு சீற்றத்தை அடக்கிக் கொண்டாள் யாழினி.

மீண்டும் மேடைக்கு ஏறி வந்த மூர்த்தி அவளை நோக்கி, முன்பிருந்த பதற்றம் கிஞ்சித்தும் குறையாத தொனியில்,

“மேடம்.. மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிங்க..” என்று சொல்லிய வண்ணம் மேடையில்

போடப்பட்டிருந்த இருக்கைகளில் ஒன்றில் போய் அமர்ந்து கொள்ள..

அவளா கேட்பாள்?

நம் யாழினியா கேட்பாள்??

யாராவது மிடுக்குடன் கூடிய பார்வையுடன், மரியாதை நிமித்தம் வெள்ளந்தியாக புன்னகைக்க முடியுமா என்ன?

இவளால் முடிகிறதே!!

புன்னகைத்துக் கொண்டே பார்வையாளர்களை நோக்கித் திரும்பியவள், விட்ட இடத்திலிருந்தே தான் தொடங்கினாள்.

“இந்த மோதிரத்துக்கான ஆரம்ப விலை பத்து கோடியே இருபத்தைந்து லக்ஷம்..!!” என்று அவள் சொல்ல,

“லக்ஷம்” என்று யாழினி உச்சரித்த விதமும் கூட கொள்ளை அழகாகவே இருந்தது.

யாதவன் அசைந்த அந்த கடுஞ்சிவப்பு நிற அதரங்களையே கள்ளுண்ட மந்தியாய் பார்த்திருக்கலானான்.

இவளுக்கோ உள்ளே ஜிவுஜிவு என்று பற்றியெரிய இதழ்களை அழுந்தக் கடித்துக் கொள்ள,

அவள் இதழ் கடித்த தினுசில், இருக்கையின் கைப்பிடியில் முழங்கை ஊன்றி நாடி தாங்கியிருந்தவன் கை கொஞ்சம் தளர்ந்தது.

இதயமோ தடம் புரண்டது.

வீணையென தன்னவளை மடியில் கிடத்தி, அவள் உடலை மீட்டிட ஆசை கொண்டது இந்தக் காதல் கலைஞனின் உள்ளம்!!

‘மேனர்ஸ் தெரியாத முண்டம்!’-செம்மையாகவே உள்ளுக்குள் அர்ச்சித்துக் கொண்டாள் அவள்.

அவனைப் பார்த்தால்.. ஏதோ…. அவன் கண்களில் அப்பட்டமாக வழியும் தாபம்.. அந்த சிவந்த நயனங்களின் வெம்மை என எல்லாமும்,

ஒட்டு மொத்தமாக இவளையும் தொற்று நோய் போலத் தாக்குவதை உணர்ந்தாள் தலைவி.

ஏலத்தில் வார்த்தை பரிமாற்றங்கள் அது பாட்டுக்கு நடந்தேற, இங்கே அவன் பார்வை பரிமாற்றமோ சத்தமின்றி நடந்தேறிக் கொண்டிருந்தது.

"கோட்டி தஹயக் சஹ லக்ஷ ஹத்தலியய்!! (பத்து கோடியே நாற்பது லக்ஷம்..!!) "- கூட்டத்திலிருந்து கேட்டது ஓர் சிங்கள கனவானின் குரல்.

"அர்பஊன் குரூர்! (நாற்பது கோடி)" — தனக்கென்று ஒதுக்கப்பட்ட இலக்க அட்டையைக் காட்டி மொழிந்தார் ஓர் அரபி!!

யாதவன் வந்ததற்கு வாய் திறக்கவேயில்லை! யாழினி அவன் பார்வையின் வீரியம் தன்னைத் தாக்குவது உணர்ந்தாலும் கூட, அவன் பக்கம் மறந்தும் திரும்பவேயில்லை!!

படிப்படியாக அந்த விலை ஏறி ஏறி….

“சென்த்தாவென்ட்டிச்சிங்க்குவே குரோரே.. ச்சிங்குவான்த்தா லாக்யா!! (நூற்றிருபத்தைந்து கோடியே ஐம்பது லக்ஷம்!!)” என்னும் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஓர் தனவந்தரின் தொகையை அடுத்து கூட்டத்தில் சிறு சலசலப்பு மிகுந்தது.

அந்த விலை அறிவுப்புக்குப் பிறகு.. யாரும் இன்னொரு விலை சொல்ல தயங்கியே நின்றனர்!!

“நூற்றிருபத்தைந்து கோடியே ஐம்பது லட்சம்!!..- ஒரு தரம்..”

“நூற்றிருபத்தைந்து கோடியே ஐம்பது லட்சம்!!..- இரண்டு தரம்”

“நூற்றிருபத்தைந்து கோடியே ஐம்பது லட்சம்!!..- மூ…” - என்று அங்கிருந்த அறிவிப்பாளரும் உரத்து சொல்லிக் கொண்டிருக்க,

யாதவன் பக்கத்தில் இதுவரை அமைதியாக அமர்ந்திருந்த விக்கி, யாதவன் முகத்தைப் பார்த்தான்.

இதற்காகத் தானே யாதவனும் அமைதியாக அமர்ந்திருந்தான்!! அந்த மோதிரம் அவனுக்கு வேண்டும்!!.

“வேண்டும்!” என்பதை அடைந்தே பழகியிருந்த யாதவனுக்கு, இந்த மோதிரமும் வேண்டும்!! கூடிய சீக்கிரம் அந்த சுந்தரப்பெண்ணும் வேண்டும்!!

யாதவன், விழிகளாலேயே சம்மதம் சொல்ல, தன் இலக்க அட்டையைக் காட்டிக் கொண்டே எழுந்த விக்னேஷ், அந்த அறிவிப்பை பின்னிறுத்தியவனாக,

தன் அறிவிப்பை சொல்லும் வகையில்..

“நூற்றிஎண்பது கோடியே தொண்ணூற்றொன்பது லட்சம்!!” என்று தமிழில் உரத்த குரலிலேயே விக்கி சொல்ல, கூட்டத்தில் இன்னும் கொஞ்சம் சலசலப்பு கூடியது.

‘என்ன??வன் ஹன்ட்ரன்ட் என்ட் எய்ட்டி க்ரோர் என்ட் நைன்ட்டி நைன் லேக்காஆஆஆஆ? சில்லறை காசு மாதிரி.. அசாதாரணமா

சொல்லுறானுங்க?'' என்று கொஞ்ச நஞ்சமல்ல, அதிகமாகவே ஆச்சரியமாக இருந்தது யாழினுக்கு!!

உடம்பெல்லாம் புல்லரித்தது அவளுக்கு!!

யாதவ்.. சாம்ராட் யாதவ் மகாதேவனின் ஒரு செக்கனுக்குண்டான நெட்வர்த்.. கூகுளில் அடித்தால் தெரியும் என்னும் நிலையில் இருக்கையில்..

இந்தக்காசு அவனுக்கு சில்லறைத் தொகை தான்!!

அவன் அந்த மோதிரத்தை அதை விட கம்மி விலை கொடுத்தே வாங்கியிருக்கவும் முடியும் .

ஓர் நல்ல காரியத்துக்கு அரசு செலவழிக்கின்றது என்றானதும்.. சற்றும் யோசியாமல் விலையை உயர்த்தியே சொன்னான் அவன்!!

அறிவிப்பை சொல்லி விட்டு அமர்ந்த விக்கியைப் பாராமல், தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்த வண்ணம்,

“ஃபைனலைஸ் பண்ணி முடிச்சிடு!!” என்று கம்பீரக்குரலில் சொன்னவன், தன் இருக்கையில் இருந்தும் எழுந்து கொண்டே, தன் கூலர்ஸை எடுத்தவாறு,

தன்னையே விழியகலப் பார்த்திருக்கும் தன் மனதுக்கு உகந்த பெண்ணை நோக்கி,

மெர்ஸலாகிப் போகும் வண்ணம் கண்ணடித்துக் கொண்டே கூலர்ஸ்ஸைப் போட்டான்.

அவளோ இவன் தன்னைப் பார்த்து கண்ணடித்தானா? இல்லை கண்ணடித்தது தானும் பிரம்மையோ என்பது போல பல தடவைகள் இமைகளை அடித்துக் கொண்டு,

தன்னைக் கடந்து வாயிலை நோக்கி செல்லும் யாதவனையே பார்த்துக் கொண்டிருந்தது ஐந்தரையடி உயர பட்டாம்பூச்சி!!

அவள் பொறுப்பேற்று செய்த இரண்டாவது ஏலம் முடிந்து.. மூன்றாவது ஏலத்துக்கான ஆட்களும், பொறுப்புதாரரும் வந்து விட,

அமைதியாக நான்காம் தளத்தில் இருந்து.. ‘வோக்ஸ் ஜூவெல்லர்ஸ்’ ஸின் கீழ்த்தள படிகளில் இறங்கி வந்தவளையே,

இரண்டாம் தளத்தின் கண்ணாடியிலான காரிடோரிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் யாதவன்.

அவள் படியிறங்கி வந்த போது, அவள் உடலின் ஆட்டம் காரணமாக அசைந்தாடிய சிற்றிடையழகிலும்,

அளவுக்கதிகமாகவே கொழுப்பு சேர்ந்திருக்கும் அவள் பின்னழகின் ஆட்டத்திலும்..

அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்த சத்திரியனின் மனமும் ஆட்டம் காணத் தொடங்கியது.

அங்கே கைகளில் இரு கூல் ட்ரிங்க்ஸூடன் வந்த விக்கி, ஒரு க்ளாஸை யாதவனிடம் கொடுத்து விட்டு,

“நம்மளுக்கு வேண்டியது கிடைச்சிருச்சு.. பட் அந்த மோதிரத்துக்கு அந்த விலை அதிகமோன்னு தோணுது மச்சி” என்று சொல்ல,

நண்பனை நோக்கித் திரும்பாமல், யாழினியையே பார்த்தவனாக, ஒரு சிப் அடித்தபடி,

அழுத்தமான குரலில், “அந்த மோதிரத்துக்கு என் உயிரைக் கேட்டிருந்தாலும் கொடுத்திருப்பேன் விக்கி.. அதுக்கு நான் கொடுத்த விலை கம்மி தான்!!” என்று சொல்ல,

நண்பன் சொன்னால் அதில் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கும் என்று தோன்ற..

அதற்குப் பிறகு அந்த மோதிரத்தப் பற்றிப் பேசவேயில்லை விக்னேஷ்.

நண்பனின் பார்வை போன இடத்தை நோக்கித் தன் கண்களையும் திருப்பிய விக்கி,

அங்கே யாழினி இருப்பதைக் காணவும் சத்தமின்றி நகைத்தவண்ணம்,

‘அதானே நானும் பார்த்தேன்’ என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டவன்,

யாதவை நோக்கி, “யாதவ்.. உன் ஜானு ரொம்ப அழகு!! நீ ரொம்ப லக்கிடா!! ”என்று சொல்ல,

ட்ரிங்க்ஸைப் பருகிக் கொண்டே, “தேங்க்ஸ்” என்றான் யாதவன்.

இவனோ தன் தலைவியின் அங்கலாவண்யங்களைப் பார்த்திருக்க, அவளோ யாதவன் தன்னைப் பார்ப்பதை அறியாமல்,

கீழ்த்தளத்தில் காட்சிக்காக வைக்கப்படிருக்கும், வைர நெக்லஸ்களை எல்லாம் பார்வையிட்ட வண்ணமே நடந்து வந்து கொண்டிருந்தாள்.

சும்மா.. அத்தனை ஆபரணங்களையும் மேம்போக்காக பார்த்துக் கொண்டே வந்தவள், அங்கே கண்ணாடிப் பெட்டிக்குள்,

டம்மி கழுத்தில் மாட்டப்பட்டிருந்த நெக்லஸ் கண்டதும் அப்படியே ஒரு கணம் ஜர்க்காகித் தான் நின்றாள்.

முழுதும் வைரத்தால் செய்யப்பட்டிருந்தது அது. அணிந்தால் கழுத்திலேயே நின்று உறுத்தாமல்,

மார்புக்குழியோடு உரசாமல்,

கழுத்துக்கும் மார்புக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் அப்படியே பொருந்தி நிற்கும் கனகச்சிதமான நெக்லஸ் தான் அது!!

நீல நிறத்தில் சின்னதாக வைரக்கற்கள் மிளிர வேலைப்பாடு வேறு.. அதற்கு கூடுதல் அழகைக் கொடுக்க,

அதைத் தொட்டுப் பார்க்க அனிச்சையாய் நீண்டது அவள் கைகள்.

அங்கே பணிக்கு அமர்த்தப்பட்டிருந்த வேலையாள் வேறு, அவள் அதை பர்ச்சேஸ் செய்யப் போவதாக எண்ணிக் கொண்டு,

“மே ஐ ஹெல்ப் யூ மேம்?” என்றவாறு முன்னே வர, இவள் அந்நிமிடம் தான் சிந்தை தெளிந்தாள்.

“இது எல்லாம் நமக்கு சரிப்பட்டு வராது. விலை லக்ஷக்கணக்குல இருக்கும்” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டே இலேசாக தலையைக் குலுக்கியவளாக,

அந்த பணியாளைப் பார்த்தவள், “நோ தேங்க்ஸ்!!” என்று புன்னகைத்த வண்ணமே நடந்தாள்.

நடப்பது அனைத்தையும் கட்டிடத்தோடு இருந்த ஒளி ஊடுருவா ஜன்னல் கண்ணாடி மீது சாய்ந்தவனாக… அவதானித்துக் கொண்டிருந்த..

கூலர்ஸின் பின் ஒளிந்திருந்த அவன் காந்தல் பூக்களைப் போன்ற கண்கள் அதைக் கண்டு கொண்டன.

அவள் கீழ்த்தளம் அடைந்து… வாசற்படிகளைக் கடக்கும் வரை.. அவளையே மென்னகையுடன் பார்த்திருந்த திடகாத்திரமான ஆண்மகன் முகம்..

அங்கே புதிதாக வந்த இன்னோர் ஆடவனைக் கண்டதும் செந்தாமரையாகப் பூத்திருந்த முகம் வெண்டாமரையாகக் கூம்பிப் போனது.

கூலர்ஸை சட்டெனக் கழற்றியவன், நடப்பவற்றை உன்னிப்பாக அவதானிக்கலானான்.

வந்திருந்த புதிய ஆடவன் வேறுயாருமல்ல.. அவளது ஃபியான்சி 'ஸ்ரீராமே' தான்!!

ஏலம் முடிந்ததும், தன்னைக் காக்க வைக்காமல்,

சொன்ன நேரத்துக்கு சமத்துப்பிள்ளையாக வந்து நின்ற தன் காதலனின் பைக்கை நோக்கி சந்தோஷத்துடன் ஓடியவள்,

தாடி மயிர்கள் முரட்டுத்தனமாக முளைத்திருந்த அவனது கன்னம் பிடித்து.. இழுத்துக் கிள்ளி,

குழந்தைகளைக் கொஞ்சுவது போல, “ய்யூஊஊ ச்சோஓஓ ச்வீட் ராம்.. சொன்ன நேரத்துக்கு வந்துட்ட?” என்று கூறியவளை இரசிக்கத் தான் முடியவில்லை ராமினால்.

பின்னே..? கன்னத்தை இழுத்தாட்டும் போது மீசை மயிர்களும் அவள் கைகளுக்குள் அகப்பட்டு விட.. வலியில் உயிர் போனது அவனுக்கு.

அவள் கைப்பற்றி..தன்னிலிருந்தும் விலக்க முயன்றவனாக, “ஸ்ஸ்ஸ்··· ஆஆஆஆ.. கையை எடுடீ.. ர்ராட்ச்சஸீஈஈ” என்று கத்திக் கூச்சலிட்டு போராடித் தான் அவளிடமிருந்து அகன்று கொண்டான் ஸ்ரீராம்.

அவன், கையை எடு என்றதும் அதை வேறாக அர்த்தம் கற்பித்துக் கொண்டவள்,

இடுப்பில் கை வைத்து நின்று, “ஏன்? இன்னைக்கும் விரதமா?” என்று அவள் கேட்க,

இன்னும் வலித்த மீசையை, கைகளால் ஒத்தி ஒத்தி ஒத்தடம் கொடுத்துக் கொண்டே, பைக் கண்ணாடி பார்த்தவனாக,

இருந்த கடுப்பில், “ஆமா” என்றான் காட்டமாக.

அவன் சொன்ன, ‘ஆமா’ வை மெய்யெனக் கொண்டவளுக்கு போலிக் கோபம் மிக,

வண்டியில் ஏறாமல், மார்புக்கு குறுக்காக கைகட்டி நின்றவள், “போடா.. நான் உன் கூட வரலை.. ஆட்டோலேயே போய்க்குறேன்” என்றவளாக கோபித்துக்கொண்டே விரையப் போக,

அவளை விடாமல், முன்னங்கைப் பற்றியிழுத்துத் தடுத்தவன், “ஹேய்.. ஹேய்.. விளையாட்டுக்கு சொன்னேன்மா..நான் இன்னைக்கு எந்த விரதமும் இல்லை…வா..வண்டியில் ஏறு!!” என்றவனாக,

தான் கொண்டு வந்திருந்த ஹெல்மட்டை அவள் தலையில் மாட்டி விட்டு,

எதிர்பாராத நேரத்தில் கன்னத்தில் முத்தமும் வைக்க, மூச்சை உள்ளே எடுத்தவள், வெளியே விட மறந்து போனவளாக நின்றாள்.

ஸ்ரீராமாகத் தரும் முத்தங்கள் அரிது!! அரியவை எல்லாம் பொக்கிஷங்கள் அல்லவா?

ஸ்ரீராமின் கன்னத்து முத்தமும் அவளுக்கு பொக்கிஷம் தான்!!

ஸ்ரீராம், யாழினியின் கன்னத்தில் முத்தம் வைத்த அந்நொடி.. யாதவன் கையிலிருந்த க்ளாஸ்…

அவன் தந்த அழுத்தம் தாங்காமல், ‘‘சுரீரென்று’’ துண்டு துண்டாக நொறுங்கி உடைய யாதவன் கையெங்கும் இரத்தம் குபீரிட்டுப் பாய்ந்தது.

பக்கத்தில் இருந்த விக்னேஷ்,

தரையில் தொப் தொப்பென்று விழுந்த அவன் இரத்தத் துளியைக் கண்டு, ‘‘டேய் என்னடா பண்ணி வைச்சிருக்க?’’என்று பதற,

இரத்தம் தோய்ந்த கையால் ஓங்கி சுவற்றுக்குக் குத்தியவன், பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்துடன்,

“ஜ்ஜானு.. எனக்க்கு.. ம்மட்டும் தான் வ்விக்கி..!!” என்று கத்த,

இவன் கத்துவது அறியாமல்.. தன் காதலுடன் வண்டியில் ஏறி பறந்தாள் யாழினி.

அந்த “எனக்கு மட்டும் தான் விக்கி” என்றதில் அவன் கொடுத்த அழுத்தத்தில், அதன் அர்த்தம் புரிந்து கொண்டான் விக்னேஷ்.

இரவு ஏழரை மணியைத் தாண்டியிருக்கும்,

கொழும்பு மாநகரிலுள்ள,

க்ளாஸிக் அப்பார்ட்மெண்ட்.. யாழினி தங்கியிருக்கும் இடம்!!

தந்தை ஆசிரம வாசம் என்றால் மகள் பெரும்பாலும் அபார்ட்மென்ட் வாசம் தான்!!

வெய்யிலில் தூசு, மாசுவுக்கு இடையில் அலைந்ததால் தன் சரும அழகு கெட்டு விடாமல் இருக்க,

முகத்தில் கோல்டன் பேக்கையும் போட்டுக் கொண்டு, கையில் ஸ்நேக்ஸ் போவ்லுடனும், சோபாவில் அமர்ந்திருந்தவள்,

தன் வீட்டுக் கதவின் அழைப்பு மணி ரொம்ப நேரமாகத் தட்டுப்பட,

“இதோ வரேஏஏன்!! ” என்று இரைந்து கத்தியவளாக, தன் கூந்தலை எல்லாம் உச்சந்தலையில் எளிய ஹேர் இன் அ பன் ஸ்டைலில் அடக்கிக் கொண்டே,

கதவை நாடிப் போய் திறந்தாள்.

அங்கே கை நிறைய மலர்கள் அடங்கிய பொக்கேயை ஏந்திய வண்ணம் நின்றிருந்தான் விக்னேஷ்!!

யாழினி முகத்தில் கோல்ட் பேக் போட்டிருந்ததால், ‘இது யாழினி தானா?’ என்று புரியாமல் குழம்பிப் போன விக்கி,

சந்தேகத்துடன், “இது ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினீஈஈ.. மகேந்திரன்! வீடு தானே?” என்று தயங்கியவனாகக் கேட்டான்.

இவளும் வாய்க்குள் தான் அதக்கியிருந்த ஸ்நேக்ஸை கொறித்துக் கொண்டே, “ஆமா.. நான் தான் யாழினி மகேந்திரன்..!!” என்று சொல்ல,

அவள் முகத்தை சரிவர பார்க்கா விட்டாலும், குரல் அவள் தான் யாழினி என்று காட்டிக் கொடுக்க,

தன் நண்பனின் ஜானுவைப் பார்த்துப் புன்னகைத்தான் விக்னேஷ்.

விக்னேஷ் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள முன்னர்… ஏதோ நினைவு வந்தவளாக இவளும், அவனை நோக்கி சுட்டு விரல் நீட்டி,

“நீ.. நீங்க…? இன்.. இன்னைக்கு.. ஒக்ஷனுக்கு வந்திருந்தீங்கள்ல? ஆ.. ஐ காட் இட்.. வைஎம்டி சிஇஓ கூட உட்கார்ந்திருந்தீங்க..?” என்று இவள் சரியாக கண்டுபிடித்துக் கேட்க,

நண்பன் பேரைக் கூட சரிவரத் தெரியாதிருக்கிறாளே என்று தோன்றியது விக்னேஷுக்கு.

அதனால் விளைந்த சிறிய களேபரத்துடன், “ஐய்யைய்யோ.. முதலுக்கே மோசமாகிரும் போல இருக்கே?? .. வைஎம்டி இல்லைமா என் நண்பன் பேரு.. யாதவன்!!.. யாதவ் மகாதேவன்.. அதான் சுருக்கமா வை எம்டி``` என்ட் நான் விக்னேஷ்!!” என்று சொல்ல அப்போது தான் யாதவனின் பேரை முழுமையாக அறிந்தாள் யாழினி.

‘யாதவ் மகாதேவன்!’ உள்ளுக்குள் யாரும் அறியாமல் மென்மையாக அவன் பேரை உச்சரித்துப் பார்த்தாள் யாழினி.

ஏனென்று தெரியாமல் ஓர் பரவசம் உடம்பெங்கும் சிலிர்த்து அடங்க,

“ஓஹ்!!..” என்றவளின் புருவம் மென்மையாக ஏறி இறங்கியது.

அவனோ தன் கையிலிருந்த பொக்கேயை அவள் புறமாக நீட்டி, “இது அபூர்வமான மலர், சாக்லேட் ஓர்க்கிட்!! ..உங்களுக்கு ரொம்ப பிடிக்குமாமே?அதுக்காகவே மெக்ஸிக்கோவிலிருந்து வர வைச்சிருக்கான் என் நண்பன்…”

என்று சொல்ல ‘இவளுக்கு சாக்லேட் ஆர்க்கிட் பூக்கள் பிடிக்கும்’ என்று அவனுக்கு எப்படி தெரியும்?’ என்று யோசிப்பதற்குள், அவள் கைகளில் திணிக்கப்பட்டது பொக்கேயும், சின்ன பாக்ஸூம்.

“இந்த பொக்கே.. என்ட் இது என் நண்பனுடைய சின்ன கிப்ட்..!!” என்று ரொம்ப மரியாதையாகவே சொன்னான் விக்னேஷ்.

“ஓ.. பட் இதெல்லாம்.. எதுக்கு?” — விழிகள் சுருக்கியவளாக மிக மிக மென்மையான குரலில் கேட்டாள் யாதவனின் ஜானு.

அந்த கேள்விக்கு, விக்கி என்ன பதில் தான் சொல்வான்? ‘என் நண்பன் உன்னை உயிருக்குயிராக காதலிக்கிறான்மா’ என்ற உண்மையை

அவசரப்பட்டு அவனால் சொல்லவும் தான் முடியுமோ?

குரலில் சிறு பிசிறு தட்டினாலும் தன் பதற்றம் வெளியே விளங்கி விடுமோ என்று தோன்ற,

ஒரே மூச்சில், "அது அவனே உங்களை கான்டாக்ட் பண்ணும் போது சொல்வான்.." என்று கூறி முடித்தான் விக்கி.

"தேங்க்ஸ்" - தன் முத்து மூரல்களைப் பளிச்சென்று காட்டி நகைத்தவளின் கண்கள், அந்த மலர்களை ஆசையுடன் முகர்ந்தன.

அப்படியே சாப்பிடும் சாக்லேட்டின் மணம்!! ஒரு முறை மெக்ஸிக்கோவிலிருக்கும் மாயன் நாகரிகத்தின் அடிச்சுவடுகளை அகழ்வாராய்ச்சி செய்ய சென்ற போது தான்,

அப்படியே இந்த மலர்கள் மீதும் ஓர் பிணைப்பு ஏற்பட்டிருந்தது அவளுக்கு.

அவள் அதிகம் விரும்பும் மணம்.. சாக்லேட் ஆர்க்கிட்டின் மணம்.. அவள் மேனியில் தொற்றிக்கொள்ளவாரம்பித்தது.

பொக்கேயின் ஓரத்தில், "ஃபோர் மை ஜானு.."என்று எழுதப்பட்டிருப்பதை முணுமுணுத்தவளாக வாசிக்க , யாழினி ஏதேனும் தூண்டித் துருவி கேட்கும் முன்னர், அங்கிருந்து நழுவிட நாடினான் விக்னேஷ்.

"அப்போ நான் வரேங்க..கூடிய சீக்கிரம் மீட் பண்ணலாம்…" என்று விடைகொடுக்க ஆயத்தமான விக்னேஷின் குரலில் தான் மலர்களின் மோகத்திலிருந்து வெளியே வந்தாள் யாழினி.

அப்போது தான் தன்னை தேடி வந்திருப்பவனை வீட்டுக்கு வெளியே வைத்தே பேசிக் கொண்டிருக்கும் மடத்தனம் புரிய,

"இல்லை உள்ளே வந்து.. ஒரு.." என்று அவள் ஏதோ சொல்ல, அவளை சொல்ல விடாமல்,

"இல்லைங்க.. இன்னொருநாள் நண்பன் கூட ஜாலியா.. வர்றேன்" என்றவன், அவளுடன் பேசி விட்டு செல்ல பொறுமையேயில்லாமல்,

பேசிக் கொண்டே பாதி தூரம் சென்றிருந்தான்.

இவனுக்கு என்ன அவசரமோ? என்று தோளைக் குலுக்கிக் கொண்டு உள்ளே வந்தவள்,

அந்த கிப்ட்டை 'என்னவாக இருக்கும்?' என்ற ஆர்வத்துடன் திறந்து பார்த்தவள் அதிர்ந்தாள்.

அவள் கைகளில் இருந்ததன் மதிப்பு.. நூற்றிஎண்பது கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சம்!!

இன்று காலை அவள் ஏலம் விட்ட பொருள், பின்னந்தி மாலையில் அவள் கைகளில்!!

அவளுக்கோ கைகள் கடகடவென நடுக்குறத் தொடங்கியது. ஒருவேளை ஏதாவது மாற்றி தந்து விட்டானா என்ன? இதை வைத்திருப்பதற்கு

கொஞ்சம் கூட தகுதியே இல்லாதவள் அல்லவா அவள்??

மோதிரப் பெட்டகத்தை எடுத்துக் கொண்டு, கதவு திறந்து காரிடார் வழியாக ஓடியவள், சட்டென்று தன் ஓட்டத்தை நிறுத்தி..

மேல்தளத்திலிருந்து கீழே எட்டிப்பார்த்தாள் யாழினி.

விக்னேஷ் அதிநவீன பென்ஸ் காரில் ஏறுவதைக் கண்டவள், மேலிருந்தே, “ஹலோ.. ஹலோ.. விக்னேஷ்.. ட்டேய் விக்னேஷ்!!” கொஞ்சம் மரியாதை கொடுத்து அழைத்துப் பார்த்தும் அவனுக்கு கேட்கவேயில்லை.

கேட்கவேயில்லையா? .. இல்லை கேட்காதது போல நடித்தானா?

கண்ணிமைக்கும் நொடியில் அவன் கார் சென்று விட்டிருந்தது.

சோர்ந்து போனவளாகவே வீட்டுக்கு வந்தவள், முகத்தில் இருந்த பேக்கைக் கழுவி விட்டு வந்து, அறையில் ஓய்வாக அமர்ந்தாள்.

அவள் கட்டிலுக்கு பக்கத்தில் இருந்த ட்ரஸ்ஸிங் டேபிளில் வைக்கப்பட்டிருந்த, சின்னச் சின்ன நீலக்கற்களுக்கு மத்தியில், பெரிதாக ஓர் சிவப்பு வைரம் பதித்து செய்யப்பட்டிருந்த அந்த பழைமையான மோதிரம் பார்க்கையில்.. பயமாக இருந்தது அவளுக்கு.

சின்ன வயதிலிருந்து வீட்டு லாக்கரில் கூட இவ்வளவு பெறுமதியான பொருள் இருந்து பழகியிராதவளுக்கு, அதைப் பார்க்கப் பார்க்க,

“நூற்றியெண்பது கோடி.. நூற்றியெண்பது கோடி.. நூற்றியெண்பது கோடி” என்றே மைன்ட்டில் இலக்கங்கள் சுற்றிச் சுழலவாரம்பித்தது.

இல்லை மீதி தொண்ணூற்றொன்பது லட்சத்தை விட்டுட்டியே யாழினி?? என்று சமயாசந்தர்ப்பமே பாராது நினைவுறுத்தி பயம் காட்டியது மனம்!!

என்ன செய்வது? யாதவன் நம்பரும் கிடையாது? பின்னாடி சூடு வைத்த மாதிரி நிற்காமல் ஓடிய அந்த விக்னேஷ் நம்பரும் கிடையாது..?

பிறகெப்படி இந்த மோதிரத்தை மீள கையளிப்பது?

தீர யோசனைக்குப் பிறகு மூர்த்திக்கு அழைப்பெடுத்தவள்,

"ராத்திரியில் டிஸ்டர்ப் பண்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க மிஸ்டர். மூர்த்தி.. எனக்கு யாதவ் மகாதேவன் நம்பர் அனுப்ப முடியுமா?" என்று கேட்டாள்.

அவருக்கோ, என்ன ஏதென்று விஷயம் புரியவில்லை தான் இருப்பினும் உதவ முன்வந்து, "அவரு எப்பேர்ப்பட்ட ஆளு..அவருடைய பர்சனல் நம்பர்லாம் நம்மள மாதிரி ஆட்கள் கிட்ட இருக்குமா..?.. கலம்போ ஹெட் ஆபிஸ் நம்பர் இருக்கு.."என்று கூற,

வேறு வழியேயின்றி, கம்மிப் போன குரலில்,

“சரி.. தாங்க..” என்று அந்த இலக்கங்களை வாங்கிக் கொண்டவள், அந்த இரவு நேரத்தில் ஆபிஸ் நம்பருக்கு அழைப்பெடுக்க முடியாமல் திண்டாடிப் போனாள்.

அன்றைய இரவு அவஸ்த்தையான இரவாகிப் போனது அவளுக்கு

ரொம்ப ரொம்ப எக்ஸ்பென்ஸிவ்வான கணையாழியை வைத்துக் கொண்டு, அவளால் சரியாக சாப்பிடவும் முடியவில்லை. அந்த இரவு அவளால் உறங்கவும் முடியவில்லை.

மஞ்சத்தில்.. தன் நைட்டியில்··· கருவறைக் குழந்தைப் போல கை, கால்களைக் குறுக்கிக் கொண்டு அமர்ந்திருந்தவளின் கண்கள்,

உறங்கேவயாமல் ட்ரஸ்ஸிங் டேபிளில் பாதி திறந்திருந்த பாக்ஸில் இருந்த அந்த மோதிரத்தையே தான் பார்த்திருந்தன.

'தூங்காதே.. தூங்காதே..' என்று விழிகளுக்கு எத்தனையோ கட்டளையிட்டவள், கட்டளையிட்டதையே மறந்து போனவளாக,

ஓர் குழந்தை போல.. காதுகளோடு கன்னத்தையும் சேர்த்து பொத்திக் கொண்டு உறங்கிப் போயிருந்தாள்.

நேரம் சரியாக இரவு பன்னிரண்டு ஆனதும்.. அன்றைய பௌர்ணமி நிலவு வழமைக்கு மாறாக.. கொஞ்சம் பெரிதாகத் தெரிந்தது.

சூரியனின் ஒளியை அன்று கொஞ்சம் அதிகமாக கடன் வாங்கிக் கொண்டதுவோ பூரணை நிலவும்?

சூரியன் தான் ஓவர் நைட் டியூட்டி பார்க்க வந்து விட்டானோ என்று ஐய்யுறத்தக்களவுக்கு, செந்நிறமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது நிலவு.

சாளரங்களை மூடாது அவள் படுத்ததன் விளைவாக, சாளரத் திரைச்சீலைகளை தழுவிக் கொண்டு தென்றல் காற்று வீச,

காற்றோடு காற்றாக.. செந்நிற நிலவின் ஒளி.. அந்த மோதிரத்தின் சிவப்பு நிற பவளக்கல்லில் மோதியது.

அங்கே பிறந்தது ஓர் விந்தை!!

அந்தக் கல்லில் பட்டுத் தெறிப்படைந்தது ஒரு வகை சிவப்பு நிற ஒளி!! சந்திரனின் ஒளிக்கு மட்டுமே துலங்கலைக் காட்டும் ஒருவிதமான ஒளி!!

சந்திரனின் ஒளியும், கல்லின் ஒளியம் இரண்டறக் கலந்ததில்.. அறையெங்கும் எழுந்தது… இனிய புல்லாங்குழல் நாதத்தை ஒத்த மெல்லி குழல் ஓசை!!

அந்த இதமான ஓசை கூட.. ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தவளுக்கு.. இன்னும் கொஞ்சம் தூக்கத்தைத் தருவிக்கவே…

தலையணையில் முகத்தைத் தேய்த்து புரட்டி, பஞ்சின் சுகத்தை அனுபவித்துக் கொண்டே,

துயின்றாள் அம்மாது.

மோதிரத்துக்கு நேரெதிரே படுத்திருந்தவளின் வெண்ணிற மேனி.. கல்லில் இருந்து வந்த ஒளியால்,

பொன்னிறமாக மாறலாயிற்று.

மோதிரம் ஒளிர்வது அறியாமல், அந்த மோதிரம் சந்திர ஒளியில்.. இசைப்பது அறியாமல்… அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் யாதவனின் யாழினி!!

அத்தியாயம் 5

அடுத்த நாள் காலை,

மேனகா ஆசிரமம்... கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் ‘வெள்ளவத்தை’ எனும் இடத்தில் அமைந்துள்ள யாழினியின் தந்தை மகேந்திரனுக்கு சொந்தமான ஆசிரமம்.

அழகான அடர் நீல நிற சேலையில், விரிந்த தோகை போன்ற கூந்தலில்.. மல்லிகைப்பூச்சூடி...

அந்த மேனகை தான் இந்திரலோகம் விட்டு தரையிறங்கி வந்தாளோ? என்று பார்ப்பாரை ஐயங்கொள்ள வைக்கும் வண்ணம்.. ஆசிரமத்துக்குள் நடந்து வந்தாள் மாது.

யாழினி காலையிலேயே குளித்திருக்க வேண்டும். சோப்பு வாசனையுடன் மல்லிகை மலரின் வாசனையும்...

இதமான தண்ணீரின் குளிர்மையும்.. அவளைச் சூழ உணர முடியுமானதாகவே இருந்தது.

அவள் கைகளோ என்றுமே இல்லாதவாறு.. தோள்களில் தொங்கிக் கொண்டிருந்த ஹேன்ட்பேக்கின் வாரினை இறுகப் பற்றியிருந்தன.

காரணம்..அதற்குள் இருப்பது ஒரு சினிமாவொன்றையே எடுக்கும் அளவுக்கு பெறுமதியான விலை கொண்டதாயிற்றே??

ஆம், பையில் இருந்தது கணையாழியே தான்!!

“ஹை!!.. யாழினிக்கா!..”என்று ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த ஓர் குழந்தை,

ஆசிரம மைதானத்தில் நடந்து வந்து கொண்டிருந்தவளைப் பார்த்து கைகாட்ட,

அவள் நுழைவதை, விளையாட்டுப் பூங்காவில் உலகம் மறந்து விளையாடிக் கொண்டிருந்த மற்ற ஆசிரமக் குழந்தைகள் கண்டு கொண்ட மறு விநாடி...

அந்தக் குழந்தைகள் முகமெங்கும்.... வெள்ளந்தியான சிரிப்பு பரவலாயிற்று.

குழந்தைகள் அனைவரும் அவளிடம் பாய்ந்தடித்துக் கொண்டு ஓடி வர அவர்கள் உயரத்துக்கு மண்டியிட்டவள்,

“வாங்க.. வாங்க குட்டீஸ்..!!”என்றபடி, தன்னாலியன்ற மட்டும் காற்றில் அகல கை நீட்டி.. அனைவரையும் அணைத்துக் கொள்ள முயன்றாள் அவள்.

அதிலும் மூன்று வயதேயான ஓர் குட்டி வாண்டு, இடுப்பில் கைவைத்து நின்று,

பெரிய மனுஷி போன்ற தோரணையில்,

“எங்களுக்காக என்ன வாங்கி வந்திருக்கீங்க?”என்று ஆசையுடன் கேட்க, அந்தக் குழந்தை கன்னம் வருடி பதில் சொல்லும் முன்னம் குறுக்கிட்டது இன்னோர் குரல்.

மார்புக்கு குறுக்காக கை கட்டு நின்று எங்கோ பார்த்தவாறு, தன் கோபம் காட்டிய சிறுவனொருவன்,

“இப்போல்லாம் யாழினிக்கா.. எங்களை கண்டுக்கவே மாட்டேங்குறீங்க!!.. எங்களையெல்லாம் பார்க்கவே வர மாட்டேங்குறீங்க!!.” என்று சொல்ல,

அந்த சின்னஞ்சிறுசுகளின் கோபத்தையும், அதன் பின்னால் ஒளிந்திருக்கும் அவர்களது பரிசுத்தமான அன்பையும் ரசித்தாள் அவள்.

கை கட்டி நின்றவன் உச்சந்தலைக் களைத்து, மென்மையான குரலில் இவள் சொன்னாள்,

“அப்படியெல்லாம் இல்லைடா கண்ணா.. அக்கா வேலை அப்படி.. லங்கா வந்ததிலிருந்து.. உங்களையும், அப்பாவையும் பார்க்க முடியாதளவுக்கு வர்க் பிஸியில் அலைஞ்சிட்டிருக்கேன்.. இப்போ கூட ஒரு முக்கியமான வேலை தான்... இருந்தாலும் அப்படியே அப்பாவையும், உங்களையும் பார்த்துட்டு போகலாம்னு தான் ஓடி வந்துருக்கேன்..” என்று.

தாய், தந்தை அரவணைப்பில், அவர்கள் சிறகின் கீழ் சுருண்டு வளர்ந்திராத குழந்தைகளாயிற்றே அவர்கள்.

யாழினியின் வேலைப்பளுவை, பக்குவமாகவே புரிந்து கொண்டார்கள்.

ஹேண்ட் பேக்கிலிருந்து ஒரு பையை எடுத்து அவர்கள் முன் ஆட்டிக் காட்டியவள், “இங்கே பாருங்க.. நான் என்ன கொண்டு வந்திருக்கேன்னு..?” என்று கேட்க,

அந்த பையில் இருந்த சாக்லேட் கண்டதும் இரட்டிப்பு சந்தோஷமாகிப் போனது அவர்களுக்கு.

“ஹை!! சாக்லேட்..!!”- என்று கண்கள் விரித்த குழந்தைகள் பையை வாங்கிக் கொண்டே ஓட, மண்டியிட்டமர்ந்திருந்தவளோ, தனக்கு புறமுதுகிட்டு ஓடும் குழந்தைகளின் செயல் கண்டு.. தலை சிலுப்பி சிரித்தாள்; பின் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்தாள்.

தூர சென்று கொண்டிருந்தவர்களை நோக்கி இரைந்த குரலில், “ஆளுக்கு ஒண்ணு எடுத்துக்குங்க.. சண்டை பிடிச்சிக்கக் கூடாது..”என்று இலவச அறிவுரை வேறு வழங்கியவள்,

புன்சிரிப்புடனேயே தந்தையை நோக்கி செல்லலானாள்.

அந்த ஆசிரமத்தின் நடைபாதைகளுக்குக் கூட ஓட்டுக்கூரை மூலம் நிழல் கொடுக்கப்பட்டிருக்க.. மிகுதி இடமெங்கும் பச்சைப் பசேலென்ற புற்களும்,

அலங்காரத் தாவரங்களும் கண்ணுக்கு குளிர்ச்சியாக இருந்தன.

பெஸேஜில் நடந்து வந்தவளின் முன்னே, தியான மண்டபத்துக்கு வெளியே எதிர்ப்பட்டார் ஆசிரம ஆயா லக்ஷ்மியம்மா.

அவரைக் கண்டதும் மரியாதை நிமித்தம் இதழ்கள் மலர, கையை ஆட்டிக் கொண்டே வந்தவள், ‘‘ஹாய் லக்ஷ்மியம்மா.. எங்கே அப்பா..?’’ என்று கேட்டாள்.

‘‘தியான மண்டபத்துல இருக்காரு..’’- வெளியே நின்று பேசினால் கூட உள்ளே கேட்டுவிடுமோ என்ற அச்சத்தில்.. ரொம்ப ரொம்ப இரகசியமான குரலில் சொன்னார் லக்ஷ்மியம்மா.

அவளும் அவரைப் போலவே, இரகிசயம் பேசும் ஹஸ்கி குரலில், ‘‘ஓகே..’’ என்றவளாக தியான மண்டபத்தை நோக்கி நடக்க,

நெஞ்சமெல்லாம் பதற லக்ஷ்மியம்மாவும், “இப்போ போனா.. ஐயா கோபப்படுவாரு..”என்று சொல்ல, பக்கென கிளுக்கி நகைத்தாள் யாழினி.

வாய் மூடி சிரித்தவள், “ஹஹஹா... அது மத்தவங்களுக்கு.. என் முன்னாடி அப்பா கோபம் ஒருநாளும்.. செல்லாது..”என்று கட்டை விரல் ஆட்டி உரைத்தவள்,

மகேந்திரனின் கோபத்துக்கு சிறிதும் அஞ்சாமல்.. வெளியே தன் பாதணிகளைக் கழற்றி வைத்து விட்டு, ஒலியெழுப்பாமல் மண்டபத்துக்குள் நுழைந்தாள் .

பத்மாசன முறையில் அமர்ந்து, தொடைகளின் மேல் விரல் வைத்த வண்ணம், கண்கள் மூடி ஆழ்ந்த தியானத்தில் இருந்தார் அவளது தந்தை.

அந்த மண்டபம் முழுவதும், அவள் தந்தையின் ‘ஓம்’ மந்திரம் எதிரொலியைத் தோற்றுவித்ததோடு அல்லாமல்,

கேட்பாரையும் ஈர்க்கும் ஒருவிதமான காந்த சக்தியையும் அந்த அறை முழுவதும் பரப்பியிருந்தது .

அரவமே எழுப்பாமல்... அடி மேல் அடி வைத்து வந்தவள்,

தந்தை ‘ஓம்’ மந்திரம் கணிப்பதற்காக திறந்திருந்த இறுதி விரலையும் மடிக்கப் போகிறார் என்று தெரிந்ததும்,

அவர் முன்னிலையில் சம்மணம் கொட்டி அமர்ந்தவள் முகத்துக்கு நேராக, மென்னகையுடன் நின்றாள்.

தியானம் முடிந்ததும் அமைதியே உருவாக.. அவர் கண் திறந்ததும், அவர் முதலில் கண்டது அவள் முகம்.

அவளை, எதிர்பார்த்திராத தந்தை.. கண்டதும் அதிரக்கூடும் என்று எண்ணி ஆசையோடு விழிகள் திறந்து காத்திருந்தவள் ஏமாற்றமடைந்தாள்.

எந்தவிதமான அதிர்ச்சியையும், வியப்பையும் காட்டவேயில்லை அவர் முகம். மாறாக சாந்தத்துடன் அவளை நோக்கி பாசத்துடன் புன்னகை சிந்தியவர்,

“அப்பாவை இப்போ தான் பார்க்கணும்னு தோணிச்சா?..”என்று தான் கேட்டார்.

எந்த வயதிலும் தந்தைக்கு மகள் குழந்தையன்றோ? அவளும் தந்தை முன்னிலையில் குழந்தையாகிப் போனாள்.

அவள் இதழ்கள் வளைந்து அலுத்துக் கொள்ள, “நான் வந்து நின்னது உங்களுக்கு ஷாக்கிங் சர்ப்ரைஸாகவே இல்லையாப்பா?..”என்று கேட்க,

அவளது தந்தையோ.. வளைந்த உதடுகளை... சிரிப்பது போல இழுத்துப் பிடித்தவராக,

“ம்ஹூஹூம்.. நீ.. குழந்தையா இருக்கும் போது எடுத்து வைச்ச எட்டின் சத்தத்தையே என்னால் இன்னும் மறக்க முடியல.. இப்போ மட்டும் மறப்பேனா சொல்லு??.. மண்டப வாசல்ல செருப்பைக் கழற்றி வைக்கும் ஓசையிலேயே

அப்பாவுக்கு வந்திருப்பது யார்னு புரிஞ்சிருச்சு!!..''என்றார் யாழினியின் தந்தை.

அதைக் கேட்டு , கைகள் உதறி, மழலைகள் போல சிணுங்கினாள் ஓர் அழகிய இளம் பெண்.

தன் கன்னம் கிள்ளும் தந்தை கைகள் தள்ளி விட்டவளாக இவளும், ''போங்கப்பா!!.. தியானம் செய்றதுனால உங்க ஐம்புலன்களும்.. விழிப்பா இருக்கு ஓகே.. பட் எனக்காக ஷாக்கான மாதிரி.. அட்லீஸ்ட் நடிச்சிருக்கலாமேப்பா..''என்று சொல்ல,

அவரது மென்னகை பூத்த இதழ்கள் இன்னும் சற்றே திறந்தன. பிறகு அந்த விரிந்த நகை.. ஒலிகள் சிந்தும் சிரிப்பு நகையாக மாறியது.

''ஹஹஹா அடுத்தவாட்டி நடிச்சிட்றேன்.. போதுமா?''- மகள் உச்சந்தலையில் கை வைத்து அவள் ஆறுதலுக்காக சொன்னார் தந்தை.

அதன் பிறகே.. அங்கு வந்ததன் நோக்கம் ஞாபகம் வர, ஹேன்ட் பேக்கில் எதையோ கையிட்டுத் துலாவியவளாக,

“ம்.. இந்தியாவுல இருந்து வரும் போது.. உங்களுக்கு ஒண்ணு எடுத்து வந்தேன்ப்பா.. ஆனால் வந்ததுமே உங்களை ஹாஸ்பிடலில் வைச்சு பார்க்கும்படியானதனால.. என்னால இதை அப்போ கொடுக்க முடியலை.. அப்புறம் இடையில் வந்த வர்க்கில் மறந்துட்டேன்..இன்னைக்கு காலையில் தான் ஞாபகம் வந்தது.. சரி இதை கொடுத்துடலாம்னு அப்படியே எடுத்துட்டு வந்துட்டேன்” என்று பேசிக் கொண்டே தேடுதல் பணியில் தீவிரமாக இறங்கியிருந்தாள் அவள்.

“என்னம்மா?..”- அவரும் சுருங்கிய கண்களால், அவள் ஹேன்ட்பேக்கைத் துலாவிய வண்ணமே கேட்டார்.

தன் ஹேன்ட்பேக்கினுள் இருந்து , ஒரு தங்க அருணாக்கயிறை எடுத்து, அவர் முன் நெடுஞ்சாண் கிடையாகத் தொங்க விட்டவள்,

புன்னகையுடன், “இது தான்ப்பா..!!” என்று சொல்ல

இதுவரை அவர் முகத்தில், தியானத்தில் விளைந்திருந்த அமைதி சிறுகச் சிறுக காணமலாகிப் போனது.

முகம் இறுக, கைகள் நடுங்க.. அந்த தங்க அருணாக்கயிறை லபக்கெனப் பற்றியவர், கண்கள் உச்சபட்ச பதற்றத்தில் கலங்கவாரம்பித்தது.

அதைப் பார்த்து யாழினிப் பெண் தான் அதிர்ச்சியாகப் போனாள்.

சற்று முன் தந்தை முகத்தில் இருந்த அமைதியும், ஆசுவாசமும் எங்கே?

சட்டென அவள் கைச்சந்தைப் பற்றிக் கொண்டவர், ‘‘இ.. இது.. இது.. எப்படி உன்கிட்ட வந்தது??..’’என்று பதறியபடி கேட்ட கேள்வி..

அவளுக்கு குழப்பத்தைத் தோற்றுவித்தாலும், எந்தவிதமான உணர்ச்சிகளையும் காட்டாது, நிர்மலமான முகத்துடன்,

“அங்கே மதுரையில் கீழடி எக்ஸ்கவேஷன்ல இருந்தப்போ.. ஒருநாள் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் போயிருந்தேன்.. அங்கே ‘வெறும்மேல்’ சித்தர்னு ஒரு சித்தர்ப்பா.. அவர் தான் இதை உங்ககிட்ட கொடுக்க சொல்லி கொடுத்தாரு..”என்றார்.

“எ.. என்ன பேர் சொன்ன?”- தட்டுத் தடுமாறி வந்தது மகேந்திரனின் குரல்.

அவளும் தந்தை கேட்பதன் உள்நோக்கம் புரியாமல்,

“வெறும்மேல் சித்தர்ப்பா.. மேல் சட்டை எதுவும் போடாம.. கீழே ஒரு துண்டு மட்டும் கட்டிக்கிட்டு.. வெறும் மேனியுடன் இருக்குறதனால.. எல்லாரும் அவரை வெறும்மேல் சித்தர்னு கூப்பிடுறாங்க.. பட் அவர் யாரு? அவர் உண்மையான பேர் என்ன?.. எங்கேயிருந்து வந்தார்னு யாருக்கும், எதுவும் தெரியலைப்பா..”என்று தனக்குத் தெரிந்த அனைத்தையும் ஒன்று விடாமல் தந்தையிடம் சொன்னாள் அவள்.

அந்த வெறும்மேல் சித்தருக்கும், தந்தைக்கும் என்ன தொடர்பு என்று புரியவில்லையாயினும்.. ஏதோ சீரியஸான விஷயமொன்று உள்ளே பதுங்கியிருப்பது மட்டும் புரிந்தது அவளுக்கு.

ஆனால், அவருக்கோ உள்ளே ஆயிரமாயிரம் எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தது. இந்த தங்க அருணாக்கயிறைக் கொடுத்த நபர்... யாழினியை சந்தித்திருக்கவும் கூடுமோ??

உண்மைகள் அனைத்தையும் யாழினியிடம் உரைத்திருக்கவும் கூடுமோ?

'தந்தை' என்றெண்ணி.. யாழினி தன்னைப் பார்க்கும் பார்வையில் கடுகளவாவது மாற்றம் உண்டோ? என்று களேபரத்துடன் ஆராய்ந்தது அவர் கண்கள்.

அவள் முகத்திலிருந்து எதையுமே கண்டுபிடிக்க முடியவில்லை மகேந்திரனுக்கு.

வெறும்மேல் சித்தர் பற்றி வாய் விட்டு கேட்க நாடியவர்,

"அவன்.. அவர்.. அவர் வேற என்ன சொன்னாரு..?. சொல்லு யாழினி!! ..அவரு வேறு என்ன சொன்னாரு...?" என்று தந்தை வெறும்மேல் சித்தரை ஒருமையில் அழைத்து பன்மைக்கு மாறியதையும் கூட உன்னிப்பாக அவதானித்தாள் அவள்.

அங்கே, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் வைத்து நிகழ்ந்தவை அப்படியே, அந்த பாவையின் கண்முன் விரிந்தது.

தேக்கு போன்ற உடல் வெறும்மேல் சித்தருக்கு. சிவனை நினைவுகூரும் ஜடாமுடியுடனும், கழுத்தில் உருத்திராட்சை மாலையுடனும்,

நெற்றி, கைச்சந்து எங்கிலும் திருநீறுடனும் தெய்வ கடாட்சத்துடன் அங்கே மண்டபத்தில் கண்கள் மூடி அமர்ந்திருந்த வெறும்மேல் சித்தர் மீண்டுமொருமுறை அவள் கண் முன்னே வந்து போனார்.

அவர் வாய் திறந்து நன்மொழி கூறுவதற்காக, அவரிடம் இருந்து கடைக்கண் பார்வையிலாவது

ஆசி பெறுவதற்காக பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் காத்திருக்க,

அவரோ தன் கடுந்தவம் களைந்தாற் போன்று.. படாரெனக் கண் விழித்து, சடாரென எழுந்து,

கோயிலைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த அவளை நோக்கித் தான் வந்தார்.

சற்றும் எதிர்பாராத வகையில், ஓர் தபஸ்வியொருவர் தன் முன்னிலையில் வந்து நிற்கவும், மங்கையவளோ பயந்து பின்வாங்கி.. நெஞ்சில் கை வைத்து நிற்க,

அந்த வெறும்மேல் சித்தரின் கண்கள் அவளைக் கனிவும், பாசமும், பரிவும் ஊசலாட நோக்கியதெல்லாம் ஒரு சில கணங்களுக்குத் தான்!!

தன் இடுப்பிலிருந்து அருணாக்கயிறை சரேலென உருவியெடுத்து, அவள் கைகளில் திணித்தவரை, இவள் புரியாமல் பார்க்கவும்,

தனக்கே உரித்தான இதயம் பிளக்கச் செய்யும் கிடுகிடு குரலில்,

"வருஷங்கள் பல ஆயினும்,
யுகங்கள் பல போயினும்..
உற்றவன் பொருள்..
உற்றவனையே சாரும்.." என்று இயம்பியவர்,

"இதை உன் தாயுமானவரிடம் கொடு.."என்றும் சொல்ல, தன் உள்ளங்கையில் இருந்த அருணாக்கயிறையும், அவரையும் மாறி மாறிப் பார்த்தாள் அவள்.

யாழினிப் பெண்ணோ இறைவழிபாட்டில் எள்ளளவு நம்பிக்கையே வைத்திருப்பவள்.

பாவம், அவளுக்கு சித்தர் சொன்னது புரியவுமில்லை. இருப்பினும் அவர் தந்ததை மறுதலிக்கவும் மனம் வரவில்லை.

அவள் நம்பிக்கையின்மையை அப்படியே படித்தாற் போன்று.. தன் தாடையைத் தடவிக் கொண்டே, அவளைப் பார்த்து புன்னகைத்தவள்,

அவளை வலம் வந்து கொண்டே உரத்த குரலில்,

"காதல் பிறப்பதும், இறப்பதும்
பிறந்திடாதிருப்பதும்
அதை மறப்பதும், நினைப்பதும்
மறந்ததைத் தெளிந்ததும்..
மன்னவனோடு நீ
இரண்டறக் கலப்பதும்
எல்லாம் அவன் செயலே!!" என்றவர், அதன்பின் அங்கு நில்லாமல் நடந்து சென்று கொண்டேயிருந்தார் அவர்.

ஏன் அந்த சித்தர்.. அவளைப் பார்த்து காதல் பற்றி சொன்னார்? எதை மறந்தாளாம்?.. மறந்ததைத் தெளிவதற்கு? எந்த மன்னவனோடு தான் அவள் இரண்டறக் கலக்கப் போகிறாளாம்?

ஒன்றுமே புரியவில்லை அந்த தொல்லியலாளப் பெண்ணுக்கு.

அவளோடு கூட வந்த சக தோழி தான்.. அவளையும், சித்தரையும் வித்தியாசமாகப் பார்த்தவளாக,

“அது சரி.. எந்த சித்தர் தான் புரியுற மாதிரி பேசியிருக்காங்க..”என்றதும் கூட நினைவில் வந்தது அவளுக்கு.

ஆனால் வெறும்மேல் சித்தர் இறுதியாக அவளைப் பார்த்து இயம்பியவைகளை அவள் தந்தையிடம் சொல்லவேயில்லை.

அவள் ஒருவேளை சித்தர் தன்னிடம் இயம்பியவைகளை தந்தையுடன் பகிர்ந்திருப்பின்.. இந்தக் கதையின் போக்கும் வேறாக மாறியிருக்கும்!!

ஒரு சில கணங்கள் தந்தையின் கண்கள் தீவிர யோசனை பாவத்தைக் காட்டியது. மறுவிநாடி அதிலிருந்து மீண்டு வந்தவர்,

அவசர கதியில், “அவரை எங்கே பார்த்ததா சொன்ன?”என்று தான் கேட்டார்.

பெண்ணவளோ, புருவங்கள் இரண்டும் அம்பு போல இடுங்கி விரிய, அமைதியான குரலில்,

“மதுரை மீனாட்சி அம்மன் கோவில்லப்பா.. ஏனோ தெரியலைப்பா..நான் அதிக சாமி நம்பிக்கை

இல்லாதவள் தான்.. ஆனாலும்.. அவரை திரும்ப ஒரு முறை பார்க்கணும்னு ஒரு எண்ணம் ..எனக்குள்ள இருந்தது..... அதனால் அடுத்த நாள் அவரைத் தேடிப் போனேன்.. ஆனால் அவர் அங்கே இல்லை.. விசாரிச்சப்போ வெறும்மேல் சித்தர்.. எங்கே போறார்னு யார்ட்டயும் சொல்லாமல் ராத்திரியே கிளம்பி போயிட்டதா சொன்னாங்க..'' என்று கூற,

மகேந்திரனின் விழிகள் மெல்ல தாழ்ந்து கொண்டன.

'ஏனோ தெரியலைப்பா.. அவரை திரும்ப ஒரு முறை பார்க்கணும்னு ஒரு எண்ணம் ..எனக்குள்ள இருந்தது' என்று மகள் உரைத்தது ஒரு பக்கம் கவலையைக் கொடுத்தாலும்,

மறுபக்கம் அப்படித் தோன்றுவது தானே இயற்கை!! என்ற எண்ணமும் தோன்றி மறைந்தது.

தந்தை விழிகள் எல்லாம் சிவந்து, ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டவராக இருப்பதைக் கண்டதும், உள்ளுக்குள் சிறு ஆற்றாமை தோன்ற,

அவர் முன்னங்கை மேல், தன் கை பதித்தவள், அவர் விழி பார்த்து,

“என்னாச்சுப்பா? ”- என்று கேட்டாள்.

யாழினி தந்தையின் முகத்தில் ஒரு நமுட்டுச் சிரிப்புப் பரவ,

கவலை அப்பிய குரலில், “ஒண்ணுமில்லைம்மா.. இந்த அருணாக்கயிறைப் பார்த்ததும்.. ஏதோ பழைய நினைவுகள்..!! வெறும் மேல் சித்தர் சரியா தான்மா சொல்லியிருக்காரு.. உற்றவன் பொருள்.. உற்றவனையே சாரும்னது… சரியா தான் இருக்கு..” என்று எதையோ தீர யோசித்தவர்,

அந்த அருணாக்கயிறை தன் உள்ளங்கையில் பொத்திக் கொண்டார்.

பின் தன் மகளின் விழிகளை ஆதுரத்துடன் ஏறிட்டவர், மீண்டுமொருமுறை கேட்டார்,

“அவர் வேற ஏதாவது சொன்னாராமா?”என்று.

“இல்லைப்பா..”- மென்மையாகவே மறுதலித்துத் தலையாட்டினாள் இவளும்.

தந்தையின் அமைதியான மூடைக் கெடுத்து விட்டோமே என்று தோன்றினாலும்,

தந்தையாகவே தன்னிடம் மனம் திறந்து எதையும் சொல்ல முன்வராத பட்சத்தில், தானும் எதையும் சென்று தூண்டித் துருவிக் கேட்கப் போவதில்லை என்று தீர்மானித்தவளுக்கு,

அந்தப் பணக்கார வள்ளல் யாதவ் மகாதேவனுக்கு, ஒப்படைக்க வேண்டிய கணையாழியின் ஞாபகம் வந்தது. அதனால் வலுக்கட்டாயமான புன்னகையை இதழோரம் தவழ விட்டவள்,

ஹேன்ட்பேக்கினை மீண்டும் தோள்களில் மாட்டியவளாக,

“சரிப்பா.. அப்போ நான் கௌம்புறேன்!!” என்றவளாக எழுந்தாள்.

பெரியவரும், சின்ன சிரிப்புடன் விடை கொடுக்க, அவர் கைகளோ அந்த அருணாக்கயிறைப் பலமாகப் பற்றிப் பிடித்திருந்தது.

அவர் இதழ்களோ, அவரையும் அறியாமல், “யாழினி என் பொண்ணு!!”என்று உரிமையுடன் முணுமுணுக்க, அவர் கண்கள் வாஞ்சையுடன்...

செல்லும் மகளையே அவதானித்துக் கொண்டிருந்தது.

முற்பகல் பொழுது...

கொழும்பு, பத்தரமுல்லையில் அமைந்திருக்கும் ஓர் நாற்சந்தித் தெரு.

அங்குமிங்கும் தன் தேவைகளுக்காக.. ஜெட் வேகத்துடன் நகர்ந்து கொண்டிருந்த மக்களுடன், அங்கே தான்.. கூட்டத்தோடு கூட்டமாக நின்றிருந்தாள் யாழினி.

அவள் இடது கையோ, ஹேன்ட்பேக்கின் வாரினை இறுகப்பற்றியிருந்தது.

அவள் பையிலிருக்கும் நூற்றியெண்பது கோடி ரூபா பெறுமதியான அந்த மோதிரத்தை உற்றவனிடம் கொண்டு போய் சேர்க்கும் வரை அவள் மனதில் திகில் மூட்டம் சூழ்ந்திருந்தது.

யாதவனின் கொழும்பில் இருக்கும் தலைமை செயலகம் நோக்கித் தான் அந்த சுந்தரப் பெண்ணின் பயணம்!!

அதுவரை அந்த மோதிரத்தைத் திரும்ப உற்றவனிடம் கொடுக்கும் வரை அவள் முகத்தில் மருந்துக்கும் கூட ஆசுவாசம் என்பது இருக்கவில்லை.

ஆயினும், அவளது வலது கையிலிருந்த செல்லோ அவளது காதில் அடைக்கலமாகியிருந்தது.

அவளோடு செல்லில் பேசிக் கொண்டிருக்கும் மறுமுனையாளன், அவளது மனம் கவர்ந்த கண்ணாளன் அல்லவா?

ஆகையால் யாழினிப் பெண்ணுக்கு உலகமே மறந்து தான் போனது.

அவளைக் கடந்து யார் போனார்? யார் வந்தார்? என எதுவுமே அவள் சிந்தனையில் பதியவுமில்லை;காதலன் குரல் தேனாக காதினுள் இனிக்க மற்றவை அவளுக்கு தேவையுமில்லை.

ஆனால், அவளது பேச்சும் கூட யாதவனின் வருகையினாலும், அவன் தந்த பரிசினாலும் நேற்று நிகழ்ந்தவை பற்றியே அமைந்திருந்தது.

பேசிக் கொண்டே அந்த ப்ளாட்பாரத்தில், மனிதர்களோடு இடித்து விடாமல், கொஞ்சம் வளைந்து நெகிழ்ந்து கொடுத்துக் கொண்டே நடந்தவள்,

ஆச்சரியம் தாள முடியாத குரலில், விழிகளை அகல விரித்து, “யெஸ் ராம்.. என்னால அதை இன்னும் கூட ஜீரணிக்க முடியலைடா... வீட்டுக்கு வந்தது ஒக்ஷனில் விலை போன ரிங்க்!!.. அதுவுமில்லாமல் சாக்லேட் ஓர்க்கிட் வேற??.. மெக்ஸிக்கோவிலிருந்து ஃப்ரஷ்ஷா வந்திருக்குன்னா.. அது சும்மாவா?? வெரி எக்ஸ்பென்ஸிவ் ராம்!!.. எனக்கு.. ரொம்ப பயமா இருக்கு ராம்...!!” என்று

இறுதியில் அச்சத்தில் பம்மிய குரலில் முடித்தாள் மங்கை.

எப்போதும் அவளை சீண்டிப் பார்க்கும் அவளது ஸ்ரீராமனுக்கும், யாழினிப் பெண்ணை அந்நொடியும் சீண்டிப் பார்க்கும் எண்ணமோ?

இன்றேல், சின்ன விஷயத்துக்கெல்லாம் பயம் என்பவளை டைவர்ட் பண்ணும் எண்ணமோ?

இல்லை இரண்டுமே தானோ?

அவன் குரலோ.. போலியான ஆச்சரியம் சிந்தும் குரலில்,

“என்ன?? ராணி மங்கம்மாவுக்கு பயமாஆஆ..?”என்று கேட்க, அவளுக்கு வந்ததே கோபம்!!

நல்ல வேளை ராம், அந்த அழகான முன்கோபக்காரியின் முன்னே இல்லை.

இருந்திருந்தால்.. சீரியஸ்னஸ் தெரியாமல், உசுப்பேத்தும் ராமின் தலைக்கே ஹேண்ட்பேக்கால் இரண்டு போடு போட்டிருப்பாள்!!

நடுவீதி என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டே, “ர்ர்ராம் வ்விளையாடாதே.. நான் சீரியஸா தான் சொல்றேன்.. எனக்காக எதுக்கு அவன் இத்தனையும் பண்ணனும்??...”என்று அவள் அடக்கத் துணிந்தும், முடியாத கோபத்துடன் சீற,

அந்த இதமான முற்பகல் காலைப்பொழுதில், அவள் பின்னே நிழலாடத் தொடங்கியது.

அந்த நிழலின் கதகதப்பில்.. தன்னையும் அறியாமல் இதம் காண முற்பட்டது அவள் உள்ளமும், உடலும்!!

ஏதோ தன்னைச் சூழ ஓர் அரண் போல.

மறுமுனையிலிருந்த ராமோ... எதையும் நேர்மறையான விதத்தில் கையாண்டு பழக்கப்பட்டிருப்பவனாயிற்றே??

ஆதலால், தன் முன்கோபக்குயிலை சமாளிக்கும் வண்ணம்,

“ஹேய் கூல் யாழினி.. நீயோ ஃபேமஸ் ஆர்க்கியோலஜிஸ்ட்.. ஸோ.. ஏதாவது ஆர்க்கியோலஜி சம்பந்தமா.. உன் உதவி அவருக்கு தேவைப்பட்டிருக்கலாம்.. அதனால் உன்னை இம்ப்ரஸ் பண்ண.. இப்படி அவர் வழியில் ஏதாவது செய்யறாரோ??என்னவோ..??” என்று ராமும் சொல்ல,

சட்டென அவள் மனக்கண்முன் வந்து போனது, நேற்று ஏலத்தில் வைத்து அந்த யாதவன் பார்த்து வைத்த ஆளை உருக்கும் பார்வை!!

ஸப்பாஆஆ..!! என்ன மாதிரியான பார்வை அது?? உடலுக்குள் நுழைந்து, இதயம் அடைந்து.. ஏதேதோ நினைவுகளை, உணர்ச்சிகளைக் கிளப்பி விடும் பார்வை அல்லவா அது??

என்னமோ.. அவளுடைய உச்சாதி பாதம் வரை.. அவனுக்குத் தான் உரிமை என்பது போல அவன் பார்த்த பார்வை???

நடுவீதியில் வைத்து அந்தப் பார்வை ஞாபகம் வர, ஒரு கணம் உடல் கூசி, புல்லரித்து ஏதோ செய்தது யாழினுக்கு.

நாகரிகமான பார்வையா அது?? அதை தன் காதலனிடம் வெளிப்படுத்த விரும்பாது போனாள் அந்த சுந்தரப் பெண்!!

அந்த நாற்சந்தி வீதியில், டிராஃபிக் லைட்களில் சிவப்பு விளக்கு ஒளிர, வாகனங்கள் எல்லாம் நிற்க,

பாதசாரிகள் கடப்பதற்கான அறுபது நொடி நேரமும் கவுன்ட் டவுனில் ஒளிபரப்பாக்கப்பட,

மெல்ல இறங்கி கடவையில் கால் வைத்து நடந்து கொண்டே,

“எதுன்னாலும் டிரெக்ட்டா டீல் பண்ண வேண்டியது தானே..??”என்று கேட்ட அந்நொடி தான் அந்த விசித்திரம் நடந்தேறியது.

ஓர் வலிய முரட்டுக்கரம்.. சேலை அணிந்திருந்தவளின் வெற்றிடையில் ஊர்ந்து,

நச்சென்று அழுந்தப் பதிந்து..அவள் இடுப்பை உரிமையுடன் தொட்டு இழுக்க,

அந்த கணம் சாலை விதிகளை மீறிய ஓர் அதிநவீன காரொன்று மின்னல் வேகத்தில்,

அவளைக் கடந்து செல்ல,

அந்த அதிர்ச்சியில் கையிலிருந்த ஃபோன் நழுவி விழுந்து, பாகம் பாகமாக உடைந்தும் போனது.

சடாரெனத் திரும்பி.. தன் இடையில் உரிமையுடன் இன்னும் கைகள் பதிந்திருக்கும் உரிமையாளனைப் பார்த்தாள் யாழினி.

மிகமிக அருகாமையில்... அவள் இதழின் மூச்சுக்காற்று, அவன் பரந்த கழுத்தில் பட்டு மோத,

அவனது சுகந்தமான சுவாசம்.. இவள் நுரையீரல் தீண்ட,

அவனது திண்ணிய மார்புகள், இவளது தனங்களோடு தில்லாய் நின்று பொருதிட,

அனல் தெறிக்கும் விழிகளுடன் நின்றிருந்தான் அவன்!!

அவன் சாம்ராட் யாதவ் மகாதேவன்!!

அவனது அடர்ந்த கருநயன விழிகள் கோபத்துக்கும் மேலாக,

தனக்குரியவளை இழந்து விடுவோமோ என்ற அச்சமும், இன்னும் ஏதோ ஓர் உணர்வு சுடர் விடுவதையும் அண்மையில் இருந்து பார்த்தாள் அவள்.

அவனைக் காணும் போது ஏதேதோ செய்கிறது. இடுப்பில் அழுந்தப் பதிந்த விரல்களின் அழுத்தம்.. சொல்ல முடியாத உணர்வலைகளைத் தோற்றுவிக்கிறது.

இருப்பினும் ஏன்?? என்ற கேள்விக்கு விடை புரியாமல், அவன் அணைப்பில், நாற்சந்தியில் நின்றிருந்தாள் அவள்.

அந்த கணம்.. அவளுள் எழுந்த மாய உணர்வுகளை அறுக்கும் வண்ணம் கேட்டது யாதவனின் தில்லான குரல்!!

அன்று அவள் மட்டும் கேட்க கவிதை பாடிய அதே குரல்!!

அதி உச்ச கோபத்துடன் வாய் திறந்தவன் சொன்னான், ‘‘உனக்கு வேணும்னா ராமோட கால் பேசுறது முக்கியமா இருக்கலாம்.. ஆனால் எனக்கு!!... உன் உயிர் முக்கியம்!!’’என்று.

அவன் தீட்சண்யமான கண்களில் கோபத்துக்கும் அப்பால், அவளை இழந்து விடுவோமோ என்று துளிர்விட்ட அச்சம்.. அவளைக் கட்டிப் போட.. அவனது விழிகளையே மலங்க மலங்கப் பார்த்த வண்ணம் நின்றாள் மாது!

அத்தியாயம் 6

அதி உச்ச கோபத்துடன் வாய் திறந்தவன் சொன்னான், "உனக்கு வேணும்னா ராமோட கால் பேசுறது முக்கியமா இருக்கலாம்.. ஆனால் எனக்கு!!… உன் உயிர் முக்கியம்!!"என்று.

அவன் தீட்சண்யமான கண்களில் கோபத்துக்கும் அப்பால், அவளை இழந்து விடுவோமோ என்று துளிர்விட்ட அச்சம்.. அவளைக் கட்டிப் போட.. அவனது விழிகளையே மலங்க மலங்கப் பார்த்த வண்ணம் நின்றாள் மாது!

சட்டென அந்த மாயையிலிருந்து விடுபட்டு திரும்பியவளது கண்களில்,

எதேர்ச்சையாக தென்பட்டது நடுரோட்டில் வீழ்ந்து உடைந்து கிடந்த செல்ஃபோன்!!

அப்போது தான் பேசிக் கொண்டிருந்த ராமின் நினைவும் வர, 'ஐயோ செல்போன்' என்பதற்குப் பதிலாக,

அவளோ பதற்றத்தில், “ஐயோ ராம்!!”என்று உரைத்தது கூட அவன் கண்களில் சுடர்விட்டுக் கொண்டிருந்த கோபத்தை இன்னும் அதிகப்படுத்தவே செய்தது.

சட்டென நடுவீதியில் முழந்தாளிட்டுக் குனிந்து ஃபோனின் பாகங்களை அவள் பொறுக்கச் செல்ல, சிக்னலும் விழுந்து விட,

அந்த போனை எடுக்க முடியாமல் பைக்குகளும் அதன் மேலாக ஏறிச் செல்ல, பதறிப் போனாள் யாழினி.

அவள் சில்லறைத்தனமாக போனைப் பொறுக்குவதைக் கண்டு இன்னும் கொஞ்சம் கடுப்பானது அந்தப் பெரும் செல்வந்தனுக்கு.

வாகனங்களோ.. அவர்கள் இருவரையும் அநாயசமாகக் கடந்து சென்று கொண்டிருக்க , கடுப்புடன் பெருமூச்சு விட்டுக் கொண்டே அவள் கையைப் பற்றி இழுத்தான் அவன்.

“ஜானு.. அட்லீஸ்ட் ஒரு ஃபோன் தானே?.. வாங்கிக்கலாம் விடு!!” என்று அவனது கூற்றில், அவள் இதழ்கள் இகழ்ச்சியில் வளைந்தன.

இருந்த தடுமாற்றமான சூழ்நிலையில் அவன் சொன்ன ‘ஜானு’ அவள் கவனத்தில் அவ்வளவாக பதியாமல் போனது அவனது துரதிர்ஷ்டமா? அதிர்ஷ்டமா??

நவீனரக , ஐஃபோனின் விலை என்ன தெரியுமா? இவ்வளவு அசால்ட்டாக சொல்கிறான் என்றிருந்தது கொஞ்சம் அப்பர் மிடில் கிளாஸைச் சேர்ந்த அந்தப் பெண்ணுக்கு.

ஏதும் பேசாமல் போனின் பாகங்களை பரபரவென, கைகளில் பொறுக்கிக் கொண்டே எழுந்தவள், அவன் விழிகளைப் பார்த்து,

கொஞ்சம் இறுகிய குரலில், “மிஸ்டர். யாதவ் மகாதேவன்.. நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்!! ..” என்றாள்.

தன்னை யாரோ போல, ‘மிஸ்டர். யாதவ் மகாதேவன்!’ என்று ‘மிஸ்டர்’ என்று அடைமொழியெல்லாம் கொடுத்து அவள் அழைத்த தினுசில், அவன் கண்கள் மெல்ல இடுங்கியது.

‘சரி’ என்பது போல மெல்ல ஆடியது அவன் தலை.

கொழும்பு பத்தரமுல்லவில் அமைந்திருக்கும்.. ‘சேப்டர் வன்’ ரெஸ்டாரென்ட்.

முழுதும் கண்ணாடியிலான, கொழும்பிலேயே ரொம்ப எக்ஸ்பென்ஸிவ்வான உணவகம் அது.

‘பேசலாம்’ என்றதும், அதற்காக அவன் தெரிவு செய்தது ‘சேப்டர் வன்’ உணவகம் தான்.

எப்போதும் ஃபாரினர்களாலும், இலங்கையின் பணக்கார வாலிபர்களாலும் நிறைந்திருக்கும் அந்த உணவகத்தில், இன்று எந்த மனிதத் தலைகளையுமே காணவில்லை.

அங்கே வேலை செய்து கொண்டிருந்த பணியாளர்களைத் தவிர.

அவளு கண்களோ மிதமிதமான ஏசி காற்று வீசும் அந்த உணவகத்தின் சீலிங்கில் பொருத்தப்பட்டிருக்கும் சர விளக்குகள் முதற்கொண்டு, வைத்திருக்கும் க்ளாஸ், ஸ்பூனின் கலைநயம் வரை ஆராய,

இவன் கண்களோ.. தன் பாவையின் செக்கச் செவேலென சிவந்திருக்கும் இதழ்களையே மொய்த்துக் கொண்டிருந்தது.

அவனுடைய ஒரு கை பக்கத்திருக்கையின் விளிம்பில் இருக்க, கால் மேல் காலிட்டு அவன் அமர்ந்திருந்தது கூட அந்த சத்திரியனுக்கு தனி கெத்தாகவே இருந்தது.

சிறிது நேரத்தில் எல்லாம் ஏற்கனவே ஆர்டர் செய்த ஜூஸ் வர, அவளது விழிகளைப் பார்த்துக் கொண்டே அவன் கேட்டான்,

“சொல்லு என்ன பேசணும்?” என்று.

அந்தக் குரல்!! ஏகாந்தமாக ஒலிக்கும் அந்த காந்தக்குரலில் ஒரு தடவை அவன் சொன்ன கவிதை ஞாபகம் வர, இறுகிய முகத்துடன் கண்களை மூடித் திறந்தாள் அவள்.

பின் தன்னைத் தானே ஆசுவாசப்படுத்திக் கொண்டு, வாய் திறக்க முற்பட்ட கணம் மீண்டும் கேட்டது அவன் குரல்!!

“எதை வேணும்னாலும் பேசலாம்!! எத்தனை மணிநேரம் வேணும்னாலும் பேசலாம்!! எந்தவிதமான டிஸ்டர்பன்ஸும் இல்லாமல் பேசலாம்!! ஏன்னா நீயும் நானும் தனியா பேசிட்டுக் கிளம்பும் வரை… இந்த ஹோட்டல் நமக்கு!!.. என் பர்மிஷன் இல்லாமல் ஒரு ஈ, காக்கா கூட வராது.. என்ட் மோர்ஓவர், என்னை நீ ‘யாதவ்’ னே கூப்பிடலாம்.” என்று தன்னெதிரே அமர்ந்திருந்தவளின் பக்கமாக கொஞ்சம் சாய்ந்து அவன் கூற,

அவன் காதலோ, இவளுக்குத் தன் பணக்காரத் திமிரைக் காட்டுவதாகவே தோன்றியது.

அந்தப் பெரும் செல்வந்தனின் விழிகளை அலட்சியமாக நோக்கியவள்,

அவன் கெத்துக்கு சற்றும் குறையாத கெத்தான குரலில், “யாதவ்னு கூப்பிடுற அளவுக்கு எங்களுக்குள்ள எந்த நெருக்கமும் இல்லை… என்ட் அப்படியான எந்த நெருக்கமும்.. எதிர்காலத்திலும் ஏற்படாது “ம்மிஸ்டர். ய்யாதவ் ம்மகாதேவன்” … ஸோ உங்களை நான் அப்படியே கூப்பிடுறேன்..”என்றாள் அவன் பெயரை இலேசாக அழுத்திக் கூறி.

‘என்ன எந்த நெருக்கமும் இல்லையா?’ அவனது அடர்ந்த இடது ஒற்றைப் புருவம் மட்டும் அழகாக ஏறி இறங்கியது.

ஏதாவது சொல்லி அவளை “கன்பியூஸ்” செய்வதை விட,

தன்னுள் அவளை அணைக்க வேண்டும், இதழ் சுவைக்க வேண்டும் என்றெழும் காதலையும், தாபத்தையும் அமைதியாகக் கட்டுப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தான் யாதவன்!!

யாழினியோ ரொம்ப பேச்சு வளர்க்காமல், வந்த விஷயத்தை செய்ய நாடியவளாக,

தன் ஹேன்ட்பேக்கினுள் இருந்து ஒரு அடர் நீல நிற வெல்வெட் பெட்டியை எடுத்து, மேசை மீது வைத்து அவன் புறம் தள்ளியவளாக,

“இதூஉஉ…” என்று இழுக்க, அவளது விழிகளுக்குள் ஆழ ஊடுருவி நோக்கிக் கொண்டே அவனும்,

தன் பக்கம் நகர்த்தப்பட்ட அந்த வெல்வெட் பெட்டியை அவள் புறமாக நகர்த்தியவனாக,

“ஆன்டிக் ரிங்க்.. உனக்குத் தான்… என்னோட கிப்ட்..!!”என்றான்.

அவன் முகத்தில் சின்னதாக ஓர் புன்சிரிப்பு மலர்ந்திருந்தது. கண்கள் குழந்தையைப் பார்ப்பது போல மென்மையுடன் அவளை இரசித்துப் பார்த்திருந்தன.

அவன் சொல் கேட்டு, சட்டென தன் விழிகளை அகல விரித்தாள் சுந்தரப் பெண் யாழினி. கீழிமையும், மேலிமையும் களேபரத்தில் ‘‘பச்சக் பச்சக்’’ என்று முத்தம் வைத்துக் கொண்டன.

அத்தனையையும் உணர்ச்சிகளை வெளிக்காட்டா முகத்துடன் இரசித்தான் அவன்!!

‘என்ன இது அவளுக்கா?? ஏற்கனவே இது அவளுக்குத் தான் அனுப்புகிறோம் என இவனுக்குத் தெரியுமா என்ன??.. அப்படியானால் இது தவறுதலாக வரவில்லையா?’ என்று ஏகப்பட்ட கேள்விகள் அவளுள் வந்து போயின.

காய்ந்த இதழ்களை ஈரப்படுத்திக் கொண்டாள் யாழினி. தொண்டைக்குழியில் ஏதோ ஒன்று ஏறி இறங்குவது போன்ற பிரம்மையும் தோன்றியது யாழ் போன்ற இனிய மொழியுடையாளுக்கு.

இருந்தாலும் சிறு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ‘‘ஸாரி.. நூற்றியெண்பது கோடி பெறுமதியான கிப்ட்டை எக்ஸெப்ட் பண்ணிக்குற அளவுக்கெல்லாம் நான் வர்த் கிடையாது..’’ என்றபடி

மீண்டும் அந்த மோதிரப் பெட்டகத்தை அவன் புறமாக நகர்த்தினாள் அவள்.

இதுவரை கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தவனின் கால்கள் கீழிறங்கின. மேசையில் இரு முழங்கையூன்றி சற்றே முன்னே சாய்ந்து கொண்டவன் கண்கள் அவளையே ஆழ ஊடுருவி நோக்கின.

பின்பு, காதல் இழையோடும் ஹஸ்கி குரலில்,

“என் மனசுக்கும், இந்த ரிங்க்’ க்கும் சொந்தக்காரி.. நீ தான்..!! கொடுத்ததை திரும்பி வாங்குற பழக்கம் எனக்கு என்னைக்குமே கிடையாது..”என்றவன் கைகள், மீண்டும்

அவள் புறமாக அந்தப் பெட்டகத்தை நகர்த்த,

அவன் கையில் தன் கை வைத்து, அந்த பெட்டக நகர்த்தலை தடுத்தி நிறுத்தினாள் யாழினி.

அவளது தனங்களோ கோபத்தில் ஏறி இறங்கி கீழ்மூச்சு, மேல்மூச்சு வாங்கிக் கொண்டிருக்க, கண்கள் சுட்டெரிக்கும் பார்வை பார்த்துக் கொண்டிருந்தது.

“ல்லுக் மிஸ்டர். யாதவ்.. நீங்க என்ன ப்பேசுறீங்கன்னு ப்புரிஞ்சுதா ப்பேசுறீங்களா??.. முன்னபின்ன அறிமுகமில்லாம பொண்ணு கிட்ட எப்படி பேசணும்னு தெரியாதா?” என்று காண்டாகி கத்தினாள் அவள்.

அவனுக்கோ.. ஆத்திரத்தின் உச்சத்தில், தன் கை மேல் பதிந்த அவள் கையின் மென்மை இதமாக இருக்க, அதன் ஸ்பரிசத்தைக் கள்ளத்தனமாக சுகித்துக் கொண்டிருந்தான் அந்த மாயக்கள்வன்.

அவன் கண்கள் சிறு ஏளனப் பார்வையுடன், அவள் கையில் பதிய, அப்போது தான் சிந்தை தெளிந்தவளாக, சட்டெனத் தன் கையை இழுத்துக் கொண்டாள் யாழினி.

அவள் கை நீங்கியதும், மன்னவனின் விழிகளில் ஓர் கடுமை பரவியது. அடுத்து அவன்

செய்ததெல்லாம் கொஞ்சம் அதிகப்படியல்ல. ரொம்பவே அதிகப்படி தான்!!

அவனை விட்டும் நீங்கிய அவள் முன்னங்கையை, அவள் திமிறத் திமிற வலுக்கட்டாயமாகப் பற்றிக் கொண்டவன்,

பெட்டகம் திறந்து, மோதிரம் எடுத்து, “என் அதிரடியைத் தாங்க மாட்டேன்னு தான் இதுவரை என் காதலையெல்லாம் அடக்கிக்கிட்டு அமைதியாக இருக்கேன்.. பட் உன்கிட்ட அந்த அமைதி செல்லாதுன்னு தோணுது..” என்றவனாக மோதிரத்தைப் போட்டு விட எத்தனிக்க பதறிப் போனாள் யாழினி.

ஏசி அறையிலும் கூட நெற்றியெங்கும் முத்து முத்தாக அரும்பியது வியர்வைத்துளிகள்!!

தனக்கு மோதிரம் அணிவிக்கும் அவன் கோர்ட் காலரைப் பிடித்துத் தள்ளி விட முயன்றவளாக, “என்ன பண்றீங்க??.. ட்டேய் இட்டி.. ய்யட்!!... ல்லூஸூஊஊ.. வ்விடுடா..!!” என்றெல்லாம்

திட்டியவளுக்கு முதலில் இருந்த மரியாதை எங்கோ பறந்து விட்டிருந்தது.

கொஞ்சம் கூட தயவு தாட்சண்யம் பாராமல், எத்தனையோ செல்லப்பெயர்கள் வைத்து அர்ச்சித்த போதும் கூட அவளைப் பற்றியிருந்த அவன் பிடி வலிக்கவுமில்லை.

அவன் பிடி தளரவுமில்லை

மன்னவன் கையால் சுந்தரப் பெண்ணவள், கணையாழி ஏற்ற அந்நொடி ஒரு செக்கன் அந்த மோதிரம் செந்நிறமாக ஒளிர்ந்து அடங்கியதை..

அவளுடைய துரதிர்ஷ்டமான கண்களோ அவனைத் தான் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்ததால் அந்த விந்தையை பார்க்கும் பாக்கியம் இழந்தது.

அவளுக்கு மோதிரம் அணிவித்த திருப்தியுடன், அவளை நிமிர்ந்து பார்த்தவன், சற்றே காட்டமான குரலிலேயே சொன்னான்,

"இதை நீ எப்போவுமே கழட்டக்கூடாது.."என்று.

தன் சம்பந்தமின்றி..வலுக்கட்டாயமாக மோதிரம் அணிவித்தவனை சுட்டெரிக்கும் விழிகளுடன் நோக்கினாள் யாழினி.

அவள் கண்கள் கலங்கவாரம்பித்தது. இதழ்கள் ஏதேதோ சொல்லி விடத் துடிக்கின்றன. இயன்றளவு தன் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்று தோற்றவள்,

"என்னடா பண்ணி வைச்சிருக்க??.. நான் ஏற்கனவே இன்னொருத்தனுக்கு நிச்சயமான பொண்ணூஊஊஊ..!!"என்றாள் இரைந்த குரலில்.

அவனோ அவள் கத்தல், கதறல் எல்லாவற்றையும் அசிரத்தையுடன் ஏற்றவனாக,

ஸ்ட்ராபெர்ரி ஜூஸிலிருந்து ஒரு மிடர் பருகியவனாக, மிக மிக் கூலான வாய்ஸில்,

"நீ யாருக்கு வேணும்னாலும் நிச்சயிக்கப்பட்ட பொண்ணா இருக்கலாம்.. . ஆனால் நீ எனக்கு

சொந்தமானவள் ஜானு!! … நீ என்னோட ஜானு..!! எனக்கிருக்கும் பணத்துக்கும், அந்தஸ்த்துக்கும்… அந்த ராமை விட.. உன்னை நல்லா பார்த்துப்பேன்.. கடைசி வரை பார்த்துக்கவும் முடியும்..!!"என்று கூற,

அவன் காதல் பேச்சுக்கள் அத்தனையும், கர்வப் பேச்சுக்களாக உருமாறியது தான் விதியோ??

அவன் முகம் பார்ப்பதையே வெறுத்தாள் யாழினி.

அவனோ, தன்னை எரிக்கும் விழிகள் ஒரு காலத்தில் காதல் சிந்தியதை எண்ணிக் கொண்டே, .. தன் கையால் சுடக்கிட,

எங்கிருந்தோ வந்து நின்றான் ஓர் பணியாள். அவன் கையிலும் கூட ஓர் பெரிய வெல்வெட் பெட்டகம்!!

அவன் கண்ணசைவை, தலை மேல் கொண்ட கட்டளையாக ஏற்ற அந்தப் பணியாளும் அந்தப் பெட்டகம் திறக்க, அதற்குள் இருந்து பளபளத்துக் கொண்டிருந்தது நேற்று அவள் ஆசையாய் ரசித்துப் பார்த்த நெக்லஸ்!!

அவளது விழிகளைப் பார்த்துக் கொண்டே சொன்னான்,

"இதோ நீ ஆசைப்பட்ட நெக்லஸ்!! .. ஆசையா பார்த்ததையே கொண்டு வந்து உன் காலடியில் வைப்பவன்.. உன்னையே நீ அவனுக்கு முழுசா கொடுத்தால்.. எப்படியெல்லாம் உன்னை கவனிச்சுப்பான்.. யோசிச்சுப் பாரு..!!" என்று ஓர் பெண்ணின் உடல் தரும் சுகத்தை அனுபவிக்கக் கேட்பவனை எந்த பெண்ணுக்குத் தான் பிடிக்கும்!!

பாவம் யாதவன்!! அவள் ஆசைப்பட்டதையெல்லாம் அவள் கண் முன் வைக்க தயாராக இருந்தவனுக்கு... தன் காதலை எப்படி உணர்த்துவது என்று தான் தெரிந்திருக்கவில்லை.

அதற்கு மேலும் பொறுக்க மாட்டாமல்.. நாற்காலியிலிருந்து ஆவேசத்துடன் எழுந்தாள் யாழினி. அவள் விழிகள் அந்த நெக்லஸின் பக்கம் மறந்தும் கூட திரும்பவில்லை.

"உன் பணத்தையும், அந்தஸ்த்தையும் தூக்கி குப்பையில் போடு..!!"என்று கண்களில் அனல்

தெறிக்கக் கத்தியவளுக்கு, அவளையும் மீறி உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

அவன் அணிவித்த ஆத்திரத்தைப் பார்க்கப் பார்க்க… ‘இதை நீ எப்போவுமே கழட்டக்கூடாது’ என்று அவன் சொன்னது ஞாபகம் வர,

அவளா அதைக் கேட்பாள்?? நம் யாழினிப் பெண்ணா அதைக் கேட்பாள்??

இதோ உன் முன்னேயே இதைக் கழற்றி தூர எறிகிறேன் பார் என்று அவனுக்கும் மேலாக வீண்பிடிவாதத்துடன் கங்கணம் கட்டிக் கொண்டவள்,

அந்த மோதிரத்தைக் கழற்ற முற்பட்டாள்.

யாதவன் அணிவித்த மோதிரமாயிற்றே?? அவனைப் போலவே இருந்தது. அவள் விரலை விட்டும் வருவேனா என்று அடம்பிடித்தது. இவளும் விடுவாளா??

மூச்சை அடக்கி.. தம் பிடித்தது அதைக் கழற்ற முனைந்தாள் அவள். மோதிரத்தின் இறுக்கத்தில்

வலித்தது அவளுக்கு. ஆனால் அவள் வாய் விட்டுக் கத்தவேயில்லை.

அவன் முன்னே வலியில் கத்துவது தன் கௌரவத்துக்கு இழுக்கு என்று கொண்டாளோ அந்தப் பெண்!

கீழுதட்டை அழுந்த அவள் கடித்துக் கொள்ள, வலியின் வீரியம் தாளாமல், கண்களில் நின்றும் கண்ணீர் மட்டும் அமைதியாக வழிந்தது.

அவள் இழுத்த இழுப்பில் தோலோடு கிழிந்து கொண்டு மோதிரமும் வந்த அதேவேளை, இரத்தமும் எட்டிப் பார்க்க,

இத்தனை நேரம் அமைதியாக அமர்ந்திருந்தவன், கண்களில் வலி அதிமிதமாகப் பரவத் தொடங்கியது.

தன்னை அவமதிப்பதாக எண்ணி.. அவளை வருத்திக் கொள்கிறாளே?? என்றதும் ஓர் வேதனை உள்ளமெங்கும் பரவ,

சடாரென இருக்கையை விட்டும் எழுந்தான் யாதவ்.

அவனும், அவள் வலியை உணர்ந்தானோ?? அந்த மன்னவனின் கண்களும் இரத்த சிவப்பு நிறங்கண்டிருந்தது.

“ஜானுஊஊ!!” என்று அவன் கலங்கியவனாக உரைக்க, அவளோ அவனை ஏறிட்டும் பாராமல், மோதிரத்தைத் தூக்கி தூர எறிந்தாள்;

அதன் பிறகு, ஒரு சில கணங்கள் அவனது விழிகளைப் பார்த்து முறைத்தவள், ஒன்றும் பேசாமல் அவனுக்கு புறமுதுகிட்டவளாக வாயிலை நோக்கி நடந்தாள்.

அவளது இதழ்கள் உரைக்க வேண்டியவற்றைத் தான், அவளது நயனங்கள் உரைக்கின்றனவே!!

அதில் இருந்த வெறுப்பு, கோபம் எல்லாமும் யாதவ் மகாதேவனை ஆட்டிப்படைத்தது.

முதன் முறையாக அவனை நிராகரிக்கும் பெண்!! அதுவும் அவன் ரொம்ப ரொம்ப நேசம் வைத்திருக்கும் அவனது ஜானு!!

கை முஷ்டி இறுக்கி, தொடையில் ஓர் குத்து விட்டுக் கொண்டே நின்றவன்,

“ஜ்ஜான்னூஊஊ.. இது தான்.. உன் முடிவா??..” பற்களைக் கடித்துக் கொண்டே கேட்டான்.

தன் பின்னாடி அவன் குரல் கேட்டதும் ஒரு கணம் தாமதித்து நின்றவள், அவன் பேசி முடித்ததும் மீண்டும் தன் நடையைத் தொடர்ந்தாள்.

அவனுக்கோ, தன்னை நிராகரிப்பவளை எப்பாடு பட்டாயினும், தன்னருகில் வைத்துக் கொள்ளும் எண்ணம் பிறக்க, “அப்படின்னா நீ மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்!!... உன்னை அடையணும்றதுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடியவன் நான்..!!” என்றான் அவன்.

அவள் காதுகள் அவன் சொன்னவைகளை உள்வாங்கிக் கொண்டன. தோல் கிழிந்து தொங்கும் விரல் வேறு எரிகிறது. கண்களில் நில்லாமல் கண்ணீர் வழிகிறது. உடலோ நடுங்குகிறது.

இருப்பினும் அவள் நடை மட்டும் நிற்கவேயில்லை.

பூரணை நிலவு.. மந்தகாச முகத்துடன் ஒளிர்ந்து கொண்டிருந்த ஓர் அழகான இராக்காலம் அது.

தூரத்தில் எங்கேயோ ஓர் கோட்டான் தூங்காமல் விழித்திருந்து கத்தும் ஓசை கேட்கிறது.

முழங்கால் வரை உயரமுள்ள புற்செடிகளின் நடுவே.. இடையிடையே விட்டு விட்டு ‘மினுக் மினுக்’ என்று மின்னி மின்னி மறைந்தன மின்மினிப்பூச்சிக் கூட்டம்.

காதலோடு தன் மேகக் காதலனைத் தேடி அலைந்து கொண்டிருந்தது இதமான குளிர்காற்று.

மணல்தரையிலே அவளது வெற்றுப் பாதங்கள் பதிந்திருக்க, கன்னியவளின் கண்களோ, அந்த நடுநிசியில், பூரணை ஒளியில் யாரோ ஒருவனைத் தேடி அலைப்புற்றுக் கொண்டிருந்தது.

யாருமேயில்லாத ஓர் வனாந்திரம் அது!!

அந்த வனாந்திரத்தில்.. சுந்தரப் பெண்ணைத் தவிக்க விட்டு சென்றவன் எங்கே??

அவள் மனம்.. பெண்ணுள் உறங்கிக் கிடக்கும் ஆழ்மனம்.. யாரோ ஒருவனைத் தேடியது.

பற்றிப்படர கொழுக்கொம்பின்றி தவிக்கும் முல்லைக் கொடி… மராமரத்தண்டை தேடுவது போல!!

முட்டையீனும் பறவை..தன் கூட்டைத் தேடுவது போல..!!

அவளும் யாரோ ஒருவனைத் தேடுகிறாள்!!

அந்த கணம்… அவள் எதிர்பார்த்திராத வண்ணம் ஏதேதோ நடைபெறத் தொடங்க.. சித்தம் கலங்கிப் போய் நிற்காத குறையில் நின்றாள் அவள்!!

முழங்கால் வரை உயரமுள்ள அந்த புற்செடிகளின் மத்தியிலிருந்து, ஐந்து வயது மதிக்கத்தக்க ஓர் ஆண்குழந்தை,

"அம்மாஆஆஆ!!"என்ற வண்ணம் ஓடி வந்து, அவள் முழங்கால்களைக் கட்டிக் கொள்ள, நாடி, நரம்பெங்கும் "தாய்மை" என்னும் உன்னத உணர்வு அவளை ஆட்கொள்ள,

அது ஏனென்று தெரியாமல் தடுமாறிப் போனாள் யாழினி!!

யார் இந்தப் பையன்!! அந்தத் துவாரகாவின் கண்ணன் போல, தலையில் மயிலிறகு சூடி, இடுப்புக்குக் கீழே தோட்டி அணிந்திருக்கும் இந்தப் பையன்.. அவளை 'அம்மா' என்று ஏன் அழைக்கிறான்??

அவனுக்கும், அவளுக்கும் தான் எந்தவித ஒட்டும் இல்லை. உறவும் இல்லை என்று அவளுக்குத் தெள்ளத் தெளிவாக தெரிந்திருந்தும்.. முழங்காலைக் கட்டிக் கொண்டவனை..ஏன் உதறி விட முடியாமல் தவிக்கிறது உள்ளம்???

அந்தோ பரிதாபம்.. அந்த சிறுவனின் கண்களில் தாரைதாரையாக நீர் கோர்க்கக் கண்டு, ஏன் பதறுகிறது அவள் உள்ளம்??

வந்த சிறுவனோ அழுகையுடனேயே, “அம்மா.. என் அப்பா யாரும்மா?? .. நான் தந்தையில்லாமல் பிறந்தவனாம்மா??” என்று கேட்க திடுக்கிட்டது அவளுள்ளம்!!

அவள் என்ன பதில் சொல்வாள்?? ‘யார் நீ!!’என்று கேட்பாளா? இல்லை ஏதேனும் பொய்கள் தான் சொல்லப் போகிறாளா??

முதலில் அந்த சிறுவனின் கண்ணீர் துடைக்க நாடி, அவள் மண்டியிட குனிந்த கணம், முதுகுக்குப் பின்னிருந்து கேட்டது இன்னோர் குரல்..

அவளைத் திடுக்கிடச் செய்யும் ஓர் கிடுகிடு குரல் அது.

மெல்ல திரும்பிப் பார்த்தவள், அங்கே.. ஜடாமுடியுடனும், உருத்திராட்ச மாலையும் அணிந்து வெறும்மேல் சித்தர் நிற்கக் கண்டு அதிர்ந்தாள்.

இ.. இவரெப்படி இங்கே?? மெல்ல திரும்பி.. குழந்தையைப் பார்த்தாள்..அங்கே, அவளை அம்மா

என்று பாசத்துடன் அழைத்த அந்தக் குழந்தை இல்லை!!

‘குழந்தை எங்கே?’ என்று களேபரத்துடன் அவள் கண்கள் தேட, அங்கே அந்த குழந்தை இல்லை!! சுற்றுமுற்றும் கண்கள்.. அந்தப் பாலகனை இருட்டினில் தேட··· நாடி, நரம்பெங்கும் விரவிப் பரவியது ஓர் நடுக்கம்!!

ஆனால் சித்தரோ.. அவளது நடுக்கம், பயம் பற்றி கிஞ்சித்தும் அலட்டிக் கொள்ளாமல்,

அவளை நோக்கி வந்து.. அன்று சொன்ன அதே பாட்டையே பாடினார்..

அவளையே முன்னும், பின்னும் சுற்றிச் சுற்றி வலம் வந்தவராக,

“வருஷங்கள் பல ஆயினும்

யுகங்கள் பல போயினும்

உற்றவன் பொருள்

உற்றவனையே சாரும்..” என்றவர்.. தன் தாடையை நீவிக் கொண்டே அவளைப் பார்த்து விஷமமாக நகைத்தார்.

அவள் விழிகளும், புருவங்களும் ஒருங்கே சுருங்க அவரைப் பார்க்க, அவரோ, அவள் கையை உரிமையுடன் பற்றி சுட்டிக்காட்டி,

“உற்றவள் பொருள்.. உற்றவளையே சார்ந்தது” என்று சாந்தமாகக் கூற, அவர் சுட்டிக்காட்டிய கையை கூர்ந்து நோக்கினாள் யாழினி.

என்னேவொரு அதிசயம்!! அவள் கழற்றியெறிந்த மோதிரம்!! அதே மோதிரம்!! அவள் கை விரலில்!!

தடுமாறிப் போய்.. இரண்டெட்டுப் பின்வாங்கியவள்… ஏதோ பெரிய மராமரத்துடன் தான் இடித்துக் கொண்டாளோ?? திரும்பிப் பார்த்தால், அவன்!!

யா.. யாதவ் எப்படி இங்கே??

வெற்று மேனியுடன்.. பரந்து விரிந்த மார்புடன்… கட்டுமஸ்தான உடலுடன், திண்ணிய புஜங்களுடன்.. ஆகர்ஷிக்கும் விழிகளுடன்..

அந்த சிறுவன் போலவே தோட்டி அணிந்து.. ராஜதோரணையில்

ஆகர்ஷிக்கும் விழிகளுடன் நின்றிருந்தான் அவன்.

மனதுக்குள் ஏதோவொன்று தோன்ற.. சட்டெனத் திரும்பி.. சித்தரைப் பார்த்தாள் யாழினி. அவள் சந்தேகித்தது போலவே அங்கே அந்த வெறும்மேல் சித்தர் இல்லை.

வந்து போன தடயமே இன்றி.. காற்றோடு காற்றாக.. மாயமாக மறைந்து விட்டிருந்தார் அந்த ஜடாமுடிக்காரர்.

அவளுக்கு அவளைச் சூழ என்ன நடந்தேறுகிறது என்பது தானும் புரியவில்லை.

அந்த பேரிளம்பெண்ணின் இதயம் தடக்தடக் என்று துடிக்கும் ஓசை.. அவள் காதுகளுக்கும் கூட கேட்குமளவுக்கு பதற்றமாக இருந்தாள் அவள்.

யாதவனோ.. அவள் இதழ்களைத் தாபப் பார்வை பார்த்துக் கொண்டே முன்னேற,

இவளோ அச்சத்தில் பின்னடைந்து கொண்டே சென்றாள்.

இரவு!!

இருவர் மட்டுமே தனிமையில் இருக்கும் மர்மமான காடு!!

என்ன நடந்தாலும், அவளை அவளே பாதுகாக்க முடியாத நிலை!!

எதிரே, அவளை விட பலமடங்கு வலுவான ஆண்மகன்!!

அவளும் தான் என் செய்வாள்?? அச்சத்தில் பயந்து போய் பின்வாங்குவதைத் தவிர??

ஒரு கட்டத்தில்.. அவளை ஓரெட்டில் தாவி இடையோடு அழுத்திப் பிடித்து, இதழ்களோடு வாய் வைத்தான் யாதவன். அதிர்ந்து போனாள் மங்கை!!

இதழ்களில் அவன் ஸ்பரிசத்தின் ஈரம் பட்டதும்.. சட்டென அலறியடித்துக் கொண்டு கண் விழித்தாள் யாழினி!!

அவள் கண்டது கனவா?? அத்தனையும் கனவே தானா?? அந்த சிறுவன், சித்தர் இன்னும் ஏன் இந்த பாழாய்ப்போன யாதவ்.. எல்லாருமே கனவு தானா??

நெஞ்சில் கை வைத்து பெருமூச்சு விட்டவளுக்கு, ஏதோ ஞாபகம் வர சட்டென தன் கை விரலைத் தான் பார்த்தாள் யாழினி.

இல்லை.. சர்வநிச்சயமாக அது கனவே தான்!! கனவில் மீண்டும் வந்து சேர்ந்த மோதிரம் இல்லையாயினும்.. மோதிரத்தால் கிழிந்த அவள் கை விரலுக்கு இட்ட கட்டு மட்டும் இருந்தது.

ஒரு நிமிஷம்.. அந்த கனவின் தாக்கத்திலிருந்து வெளிவர முடியாது நின்றாள் யாழினி.

அதே சமயம் அவளது வலப்புறமாக.. ஏதோ நிழலாடுவது போல இருக்க.. திரும்பிப் பார்த்தவள்.. நனவிலும் அதிர்ந்தாள்.

அங்கே இருக்கையில் அமர்ந்திருந்தது யாதவ்!! மோதிரத்தை அதிரடியாக மாட்டிவிட்ட பணக்காரத் திமிர் பிடித்த யாதவ்!!

“நீந் நீ.. எப்படியிங்கே..?”- அவனை நோக்கி சுட்டுவிரல் காட்டி, நடுக்கத்தில் நாவும் சேர்ந்து தள்ளாட, திக்கித் திணறியவளாகக் கேட்டாள் அவள்.

அவனோ காலையில் இருந்த இறுக்கம், கோபம் எதுவுமின்றி அவளைப் பார்த்து சொன்னான்,

“ஆத்திரத்தில மோதிரத்தைத் தூக்குப் போட்டுட்டு.. நீ பாட்டுக்கு வந்துட்ட!! .. ஆனால் அங்கே··· நான் நானாக இல்லையே?? உன் விரல்ல இரத்தத்தை பார்த்த நொடியில் இருந்து.. இப்போ வரைக்கும் உன் ஞாபகமாகவே இருந்தது.. அதான்.. வந்துட்டேன்!!” என்று.

யாதவனின் கண்களில் தான் எத்தனை காதல்!! அவன் குரலில் தான் எத்தனை உருக்கம்?? உணர்ந்தாளா அவள்?? இல்லையே..

காதல் உணர்த்துவதாக சொல்லி.. மீண்டும் மீண்டும் தப்பு செய்தான் அவன்.

தனிமையில் இருப்பவளை.. நள்ளிரவில் பார்க்க வந்தது தவறு அல்லவா?

அது போக தூக்கம் களைந்த எரிச்சல் வேறு.. முத்தமிட வந்த அவன் கனவின் தாக்கம் வேறு.. எல்லாமும் சேர்ந்து உச்சபட்ச கோபத்தையே அவளுள் கிளறி விட்டது.

தன் நைட்டி வழியாகத் தெரியும், மார்புக்கு மேலான பிரதேசத்தை கைகளால் மறைத்துக் கொண்டே, பின் வாங்கியவள்,

“யாதவ்.. மரியாதையா வெளியே போயிடு..தனியா இருக்குற ஒரு பொண்ணோட ரூமுக்கு வர்றது தப்பு..”என்று கூற அழகாய் மலர்ந்தது அவன் முகம்.

அவன் மலர்ச்சிக்கு காரணமும் தான் என்னவோ? இதோ அவனே சொல்வான்!!

“பரவாயில்லையே??..நெருக்கமானா தான் யாதவ்னு கூப்பிடுவேன்னு சொன்ன??..” என்றவன், கொஞ்சம் முன்னே சாய்ந்து.. தேனூறும் அவளது அதரங்களை கிறக்கத்துடன் நோக்கியவன்,

ஹஸ்கி குரலில், “நெருங்கிட்டேனா?”என்று கேட்டான்.

கோபத்தில், அவன் முகத்தைத் தன்னிலிருந்தும் தள்ளி விட்டவள், வளியைப் பிடித்து நெறித்தவளாக,

“ய்ய்யாஆஆதவ்வ்வ்!!…”என்று கண்கள் மூடிக் கத்தினாள்.

“நான் என் பொண்டாட்டி ரூமுக்கு தான் வந்தேன்..”என்று ரொம்ப ரொம்ப கூலாக, அதே சமயம் ஒட்டு மொத்த காதலையும் கண்களில் தேக்கியவனாகச் சொன்னான் அவன்.

“ய்யாருக்கு ய்யார் ப்பொண்டாட்டி..?”- கட்டிலை விட்டும் எழுந்தவளாக எகிறினாள் யாழிலும் இனிய மொழியுடையாள்.

“ஆமா நீ என் பொண்டாட்டி தான்!! .. நீ மிஸஸ். யாதவ் மகாதேவன் தான்..!”என்று கற்பூரம் அடித்து சத்தியம் செய்யாத குறையாக அறுதியிட்டுக் கூறினான் யாதவ்.

ஏதேதோ உளரும் அவனை அடித்து விடும் ஆத்திரம் மிக, தலையணை எடுத்து அவன் மேல் எறிய முனைந்தவளாக, ட்ரஸ்ஸிங் டேபிளோடு ஒன்றியவள்,

“குக்.. குடிச்சிருக்கியா?? இப்போ.. நீ··· போறியா இல்லையா..???” என்று கேட்க,

தன்னை நோக்கி அவள் எறிந்த தலையணையை லபக்கென பிடித்துக் கொண்டான் யாதவன்!!

தன்னைக் கண்டு அஞ்சும் அவள் விழிகளை கவலை மீதூறப் பார்த்தவன்,

தலையணையை மெதுவாகக் கட்டிலிலேயே வைத்து விட்டு, “கூல்!! .. போறேன்.. ஹேப்பி..??”என்று கைகள் ஆட்டிக் கேட்டவன், அவளைப் பார்த்துக் கொண்டே வாசலை நோக்கி நகர்ந்தான்.

அவன் சென்றதும் போய் கதவடைத்தவள், கதவில் முதுகு சாய்த்து.. பெருமூச்சு விட்டுக் கொண்டாளாயினும் இன்னும் அந்த பதற்றமும், நடுக்கமும் அவளுக்கு குறைந்தபாடில்லை.

அவன் எப்படி உள்ளே வந்தான்?? என்று யோசித்தவளுக்கு.. பின்னே பால்கனி பக்கமிருக்கும் ஜன்னல் சரிவர மூடாதிருப்பது புரிய..

இறுக்கி மூடி விட்டு வந்து மஞ்சத்தில் அமர்ந்து கொண்டவளுக்கு, தூக்கம் வருவேனா என்றது.

“அப்படின்னா நீ மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்!!… உன்னை அடையணும்றதுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடியவன் நான்..!!” என்று கோபம் கமழ அவன் சொன்னது ஞாபகம் வர விடுக்கென்று நிமிர்ந்தாள்.

நடுநிசி என்பதெல்லாம் அவள் கவனத்தில் இல்லை. எப்படியாவது யாதவனிடமிருந்து ஓர் பாதுகாப்பு வேண்டும் அவளுக்கு.

ராமைத் தொலைத்து விட்டு கைசேதப்படாமல் இருக்க வேண்டும் அவளுக்கு.

சற்றும் யோசிக்காமல் ராமிற்கு அழைப்பெடுத்தாள் அவள். பல ரிங்குகளுக்குப் பிறகு அழைப்பு ஏற்கப்பட, பட்டெனக் கேட்டாள் இவள்,

“ராம்.. நாம் உடனே கல்யாணம் பண்ணிக்கலாமா..?”என்று.

பாவம் ராம். தூக்கத்தின் உச்சத்தில் இருந்திருப்பான் போலும். தெளிவற்ற குழறிய குரலிலேயே வெளி வந்தது அவன் குரல்.

“இப்போ மணி ஒன்றரை யாழி.. பேசாமப் போய் தூங்கு.. நாளை காலையில் பேசலாம்…” என்று சொல்ல, அதையெல்லாம் கேட்கும் ஆசுவாச நிலையில் அவள் இல்லை.

யாதவன் பற்றிய பயம்.. அவளை அடியோடு புரட்டிப் போட்டது. அதற்கும் மேலாக அவனது பணமும், உயரமும், அதனால் விளைந்த கர்வமும், திமிரும் அவனை வெறுக்க வைத்தது.

அதனால் ராமை அப்படியே விடாமல், உறுதியான குரலில், “ராம்.. நாம உடனே கல்யாணம் பண்ணிக்கலாம்..!!”என்றாள்.

அவள் குரலில் இருந்த உறுதி அவனையும் அசைத்துப் பார்க்க, மஞ்சத்தில் இருந்தும் எழுந்து அமர்ந்தவன், தன் தாடையைத் துடைத்துக் கொண்டே,

“ஹேய் யாழி என்ன பேசுற? .. ஆர் யூ சீரியஸ்??..” என்று கேட்டான்.

யாதவன் காலையிலிருந்து கொடுத்திருந்த அதிரடி வைத்தியத்தின் விளைவாக, இப்போது கூட கண்கள் கலங்கி, குரல் கமறியது அவளுக்கு.

“பி சீரியஸ்!!... ராம்.. நாம கல்யாணம் பண்ணிக்கலாம்!! .. இதுக்கு மேல என்னால உன்னை

விட்டு இருக்க முடியாது.. நாம கல்யாணம் பண்ணிக்கலாம் ராம்..!'' என்று கூற,

நடுநிசியில் 'கல்யாணம் பண்ணிக்கலாமா?' என்று கேட்கும் காதலிக்கு என்ன பதில் சொல்லலாம் என்று புரியாமல் நின்றிருந்தான் ராம்!!

அத்தியாயம் 7

இரண்டு வாரங்களுக்குப் பிறகு.

யாழினியின் அப்பார்ட்மெண்ட் கதவை சாவி கொண்டு மூடிக் கொண்டிருந்த ஸ்ரீராமின் வதனத்தில் நிலைத்திருந்த பிரகாசம், அந்த சூரியனையும் தோற்கும் வண்ணத்தில் இருக்க..

அவன் இதழ்களோ மென்மையாக புன்னகைத்துக் கொண்டிருந்தன.

அவனுடைய அகன்ற கைகளில் ஓர் வெல்வட் பெட்டகமொன்று அடைக்கலமாகியிருக்க.. அதனுள் இருந்ததோ “மெட்டி” .

தனக்கே தனக்கென்று சொந்தமாகப் போகும், தன் சுந்தரப் பெண்ணின் பஞ்சன்னப் பாதங்களை அவன் ஒரு உள்ளங்கை தாங்க, மறுகையால் அவன் அணிவிக்கப் போகும் மெட்டி தான் அது.

அந்த அழகிய ஆடவனுக்கு,

சற்று நேரத்திற்கு பின் நடக்கப்போகும் திருமணக் கனவுகள் மனதுக்குள் வந்து போக, சந்தோஷத்துடனேயே தலை கோதிக் கொண்டே, திரும்பினான் ஸ்ரீராம்.

அங்கே.. அந்த அப்பார்ட்மெண்ட் காவலாளி சீருடையில் நின்றிருந்தான் ஓர் இளம் வாலிபன்.

ராமோ, அந்த வாலிபனை என்ன ஏதென்று புரியாமல், மேலும் கீழும் ஒரு பார்வை பார்த்து வைக்க, அந்த வாலிபனோ சற்றே பணிவான குரலில்,

“சார்.. ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினி மகேந்திரன்..???”என்று சந்தேகத்துடன் இழுத்துக் கேட்க, ராமுக்கோ வாலிபனின் கேள்வி புரிந்து போனது.

ராம் கட்டி வந்திருந்த புத்தம் புது வேஷ்டியின் பாக்கெட்டில் மெட்டியின் பெட்டகத்தை இட்டுக் கொண்டே அவனை நோக்கி,

“ஆமா இது அவங்க ப்ளேட் தான்.. நான் அவங்க ஃபியன்சி..”என்று சொன்னவனின் முகத்தில் பரவியது கொள்ளை அழகு சிரிப்பு.

இப்போது அவன் யாழினியின் ஃபியன்சி. இன்னும் கொஞ்ச நேரத்தில்.. அவளது கழுத்தில் முறைப்படி தாலி கட்டி.. மனைவி எனும் அந்தஸ்து கொடுத்து கணவனாகப் போகிறவன் அவன்!!

அதனால் விளைந்த சிரிப்பே அது!!

அந்த சிரிப்புடனேயே அவன் கேட்டான், “சொல்லுங்க என்ன விஷயம்..?”என்று.

அந்த காவலாளியும் தன் பேன்ட் பாக்கெட்டில் இருந்து ஓர் வெள்ளை உறையில் இருக்கும் காகிதத்தை எடுத்துக் கொடுத்த வண்ணம்,

“சார்.. நான் இங்கே புதுசா வேலைக்கு சேர்ந்திருக்குற வாட்ச்மேன்.. பழைய வாட்ச்மேன் அவருடைய திங்க்ஸ் எல்லாம் காலி பண்ணி போனதுல.. ஒரு லெட்டர் கிடந்தது. மூணு மாசத்துக்கு முன்னாடி வந்தது.. கொடுக்க மறந்துட்டாரு போல

இருக்கு.. அதில் ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினி மகேந்திரன் னு மேடம் பேர் இருந்தது.. இதை அவங்க கிட்ட கொடுத்துட்றீங்களா?..”என்றுரைக்க,

புதுமாப்பிள்ளைக் கலை முகத்தில் அப்பட்டமாக வழிய நின்றிருந்த ஶ்ரீராமும்,

“கொடுங்க…கொடுத்துட்றேன்..நீங்களும் பழைய வாட்ச்மேன் பண்ண தப்பைப் பண்ணாதீங்க..”என்று ஓர் இலவச அறிவுரையையும் கொடுத்து விட்டே அப்பார்ட்மெண்ட்டை விட்டும் நகர்ந்தான்.

எப்போதும் கரடுமுரடாக தாடி வளர்ப்பவன் இன்று க்ளீன் ஷேவ் செய்திருப்பது கூட அவளுக்காகத் தான்.

முதலிரவில் அவளை முத்தமிடும் நேரம்… ‘தாடிக் குத்துது ராம்’ என்று அவன் மனைவி கம்ப்ளைன்ட் பண்ணக் கூடாதில்லையா?? அதற்குத் தான் இந்த முன்னேற்பாடு!!

அந்த லெட்டரை வாங்கிக் கொண்டு ஓரிரண்டு எட்டுக்கள் புன்னகைத்துக் கொண்டே நடந்தவனுக்கு,

அந்த லெட்டருக்குள் அப்படி என்ன தான் இருக்கிறது என்று பார்க்கும் எண்ணம் வரவே,

அந்தக் காகிதத்தை ஆராய்ந்த போது ஓரத்தில், கொழும்பின் புகழ் பெற்ற ஓர் தனியார் வைத்தியசாலையின் முத்திரையும், முகவரியும் இருக்கக் கண்டு உள்ளூற ஓர் நடுக்கம் பரவியது புது மாப்பிள்ளைக்கு.

அந்த வலிய ஆண்மகனுடைய அடர்ந்த புருவங்கள் இரண்டும் மெல்ல மேலுயர, இதழ்களோ தனக்குத் தானே கேட்கும் வண்ணம் முணுமுணுக்கலாயிற்று.

“இது என்ன டாக்டர் ரிப்போர்ட்.. ஓ.. ஒருவேளை.. யா.. யாழினுக்கு ஏதாவது…” என்று யோசித்தவனுக்கு மேற்கொண்டு யோசிக்கக் கூட முடியாமல் போகவே, ஸ்ரீராமின் நெற்றியெங்கிலும் குபுக்கென வியர்க்கத் தொடங்கியது.

அவள், தன் மனைவியாகப் போகிறவள். அவளுடைய ஹெல்த் கண்டிஷன் பற்றி கட்டாயம் கணவன் அவன் அறிந்திருக்க வேண்டுமல்லவா?

காகித உறையைப் பிரித்தவன், உள்ளுக்குள் பிரின்டட் எழுத்துக்களால் எழுதப்பட்டிருந்தவற்றைக் கண்டு.. கண்கள் இரண்டும் வெகுவெகுவாகக் கலங்கி நின்றான்.

கொழும்பின் நாவலர் மணி மண்டபம்!!

அந்த மண்டபத்தின், பூந்தோரணைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் மாடிப்படிகளில் இருந்து,

“வந்தது அந்த மேனகையே தானோ?” என்று பார்ப்பார் ஐயுறத்தக்களவுக்கு, அழகுடன் பட்டுச்சேலை உடுத்தி, உச்சி முதல் பாதம் வரை ஆபரணங்கள் சூட்டி, மாடிப்படியிறங்கி வந்து கொண்டிருந்தாள் யாழினி.

அவள், இதோ கொஞ்சம் தள்ளி அவளுக்காகக் காத்திருக்கிறதே மணமேடையும், அக்னிக்குண்டமும்.. அங்கே போய் அமரத் தயாராகவே வந்தாள்.

ஆனால், அவளுடைய கண்ணாளன் தான் எங்கே??

யாழினியின் பிடிவாதத்தின் பேரில்.. இந்த இரண்டு கிழமைகளுக்குள்ளாக திடுதிடுப்பென்று ஆயத்தம் செய்யப்பட்டிருந்த திருமணமேயாயினும்.. அநேகம் பேர் வந்திருக்கவே செய்தனர்.

தந்தை வேறு அவள் பக்கத்தில் நில்லாமல், பம்பரமாகச் சுழன்று சுழன்று வந்தோரை வரவேற்க, இவள் கண்களோ மெட்டி எடுக்கச் சென்ற கண்ணாளனையே எதிர்பார்த்திருந்தது.

அந்த கணம்.. முன்கோபியான யாழினியின் முகத்தில் அரும்பியிருந்த வெட்கத்தை இந்திரன் கண்டிருப்பின்,

அந்த வெட்கப் புன்னகையில் மனமும், மதியும் மயங்கி.. ஸ்ரீராமாக உருவெடுத்து.. அவளோடு கலவியில் இணைந்திருக்கவும் கூடும்!!

இந்திரனின் துரதிர்ஷ்டமோ.. இவளின் அதிர்ஷ்டமோ.. இந்திரன் இந்த பூலோக மேனகையைக் காணாது போனான்!!

தன்னை மணமேடை நோக்கி அழைத்து வந்து கொண்டிருந்த சக தோழியர்களுடன் சிரித்துப் பேசி, முத்து மூரல்கள் பளீரிட வந்த மங்கை,

எதேர்ச்சையாக திரும்ப, அங்கே நின்றிருந்தான் அவளின் கண்ணாளன்.

தன் ராமனைக் கண்டதும் ஜானகியின் கண்கள் சொல்லொணா ஆனந்தம் அடைய, அகல விரிந்தது அந்த மலர் விழியாளின் கணைத் தொடுக்கும் கண்கள்!!

ஆனால் ஸ்ரீராமின் கண்கள்?? பெண்ணின் ஜோடிக் கண்களுக்கு அப்படியே நேர்மாற்றமாய்..!!

கண்களில் அனல் தெறிக்கும் கோபத்துடன், அந்தக் கோபத்தின் உஷ்ண மூச்சு தாங்க முடியாமல் விடைத்து விடைத்து அடங்கும் நாசியுடன் யாழினியை மேலிருந்து கீழே வித்தியாசமாகப் பார்த்தான் ராம்.

அவன் கண்களில் காதல் இல்லை;அவளுக்கான கனிவு, பரிவு என எதுவுமே இல்லை.

அவன் பார்வையின் மாற்றம், அந்த சுந்தரப் பெண்ணின் விழிகளை சுருங்கச் செய்ய, முயன்று வரவழைக்கப்பட்ட சிறு புன்னகையுடன் இவள் கேட்டாள்,

"என்ன ராம்?? .. மெட்டியை கரெக்ட்டா எடுத்து வந்துட்டேல்ல???" என்று.

ராம் எதுவும் பேசவில்லை; பேசும் நிலையிலும் அவன் இல்லை; ஆனால் அவன் திண்ணிய புஜங்கள் மாத்திரம் ஏற, இறங்கிக் கொண்டே இருந்தது அவன் விட்ட பெருமூச்சுக்களின் விளைவாக.

கடினப்பட்டு கோபத்தை அடக்கியவன், அவன் கைகளில் இருந்த ரிப்போர்ட்டை எடுத்து, அவளது கைகளில் திணித்தான் ராம்.

அதில் எழுதப்பட்டிருந்த மருத்துவமனை முகவரி கண்டதுமே.. மூன்று மாதங்களுக்கு முன்பு நடந்தவை அனைத்தும் ஞாபகத்துக்கு வரவே,

அதைப் பிரித்து, லெட்டரை வெளியே எடுத்த வண்ணமே, "ஓஹ்··· மூணு மாசத்துக்கு முன்னாடி.. வெக்கேஷனுக்கு இங்கே வந்தப்போ···. என் ஃப்ர்ண்ட் டாக்டர் தியா தெரியும்ல? அவ ஹாஸ்பிட்டல்ல ப்ளட் டொனேட் பண்ணலாம்னு போயிருந்தேன் ராம்.. ப்ளட் டொனேஷன் அப்படி நினைச்ச உடனே பண்ண முடியாதாமே? ப்ளட்

ஸாம்பிள் செக் பண்ணனும்னு தியா சொல்லவும்.. சாம்பிள் கொடுத்துட்டு வந்துட்டேன்..அப்புறம் திரும்பவும் இந்தியா போறதுக்காக, இமிகிரேஷன் ஆபிஸ் வழியா அலைஞ்சதுல இதை சுத்தமா மறந்தே போயிட்டேன்··· இப்போ தான் ரிசல்ட் வந்திருக்கா ராம்..'' என்று நடந்திருப்பது அறியாமல் ஏதேதோ பேசிக் கொண்டே,

உள்ளே எழுதியிருப்பவற்றில் கண்களை ஓட விட்டவள் அப்படியே அதிர்ந்து நின்றாள்.

இது எப்.. எப்படி சாத்தியம்? பெண்ணுள்ளம்.. பெண்ணவளையே கேள்வி கேட்கலானது.

முகம் பேயறைந்தாற் போன்று இருளத் தொடங்கியதைக் கண்ட ராம், செக்கச் செவேலென சிவந்து செந்நிறம் கண்ட விழிகளுடன்,

``இதுக்கு என்ன அர்த்தம் ய்ய்யாழினி? .. இதில் நீ ப்ரெக்னன்ட்னு போட்டிருக்கு.. அப்படின்னா..!! நீ மூணு மாசம் கர்ப்பம்னு போட்டிருக்கு..''என்று இயம்ப,

அங்கே அவளைச் சூழ நின்றிருந்த சேடியர் கூட்டத்திலே ஓர் சலசலப்பு மிகவாரம்பித்தது.

மாப்பிள்ளையும், பெண்ணையும் மணமேடை நோக்கி அழைத்து வருமாறு ஐய்யர் பணிக்க, அங்கே வந்து நின்ற மகேந்திரனும் இத்தனையும் கேட்டு அதிர்ந்து தான் நின்றார்.

யாழினியின் கண் மை அஞ்சனம் தீட்டப்பெற்ற காந்தல் விழிகளிலிருந்து.. ஒரு துளி நீர் சரேலென வழிந்து··· காகிதத்தில் விழுந்தது நீர்ச்சுவடாய்!!

தன் பெண்ணின் அழுகையைத் தாங்க மாட்டாத மகேந்திரனும்,தான் உள்ளுக்குள் நிலைகுலைந்து போனதைக் காட்டாத கம்பீரமான குரலில், “ராம்.. அப்படியெல்லாம் எல்லை மீறுற அளவுக்கு என் பொண்ணு தப்பானவ இல்லை!!.. இது ஏதோ மிஸ்டேக் ஆகி வந்திருக்கும்..”என்று மகளுக்கு ஆதரவாக பேசவே செய்தார்.

மணக்கோலத்தில் நின்றிருந்த யாழினிக்கு, அந்த மண்டபத்தில் எல்லார் பார்வையும் தற்போது

அவளை நோக்கித் திரும்பியதைக் கூட அறியும் அளவுக்கு திராணி இருக்கவில்லை.

எப்போதும் தைரியமாக இருக்கும் பெண்ணுக்குமே உள்ளே ஓர் உதறல் இருக்கத் தான் செய்தது.

வாழ்க்கைப் பிரச்சினையாயிற்றே??

காகிதத்திலிருந்து சட்டென தலை தூக்கி, அவனைப் பார்த்தவள், சற்றே கலங்கிய குரலில், “ராம்.. இது.. என்னான்னு எனக்கும் தெரியல?? .. வெயிட்!! தியா கூட கல்யாணத்துக்கு வந்திருக்கா.. அவள் கிட்டேயே கேட்டிரலாம்…” என்றவள்,

மணப்பெண்ணுக்கேயுரிய அன்னநடையை மறந்தாள்.

விடுவிடுவென நடந்து போய்.. முன்வரிசையிலேயே அமர்ந்திருந்த டாக்டர் தோழி தியாவின் முன்னேயே போய் நின்றாள்.

கையிலிருந்த ரிப்போர்ட்டை சுட்டிக்காட்டி, இயன்றவரை சாதாரணமான குரலில்,

“தியா என்ன இது?.. ப்ரேங்க் பண்றியா?? .. அதுக்கு இப்போ நேரமில்லை!! … பாரு!! ராம் வேற ரொம்பவே டென்ஷனாயிட்டான்.. போதும் விளையாடினது.. உண்மையை சொல்லிரு..”என்று கூற,

இதுவரை நடந்தது அத்தனையையும் பொறுமையாகப் பார்த்திருந்த தியா முற்றிலும் குழம்பிப் போனாள்.

அதிலும் ராம், அந்த ரிப்போர்ட்டை அனைவர் முன்னிலையிலும் காட்டி, தன் தோழியைக் கொச்சைப்படுத்துவது போல பேசியதில், உள்ளே கோபம் ஜிகுஜிகுவென பற்றியெறிந்தது அவளுக்கு.

ஆம், ராம் கொஞ்சம் உணர்ச்சி வசப்படுவதை நிறுத்தி விட்டு, அந்த ரிப்போர்ட்டைத் தனிமையில் அவளிடம் காட்டி விசாரித்திருக்கலாம் தான்!!

நீண்ட பெருமூச்சை வெளிவிட்டுக் கொண்டே அவளைப் பார்த்த டாக்டர் தியா,

“எது நான் ப்ரேங்க் பண்றேனா?.. உன் ப்ளட் சாம்பிள்ஸ்ல எச். சீ. ஜி அதிகமாக இருக்குறதால.. ஐ மீன் நீ ப்ரெக்னன்ட்றதால.. யாருக்கும் நீ ப்ளட் டொனேட் பண்ண முடியாது யாழி..

இதை சொல்ல முன்னாடி.. நான் யு. எஸ்க்கு ஒரு சர்ஜரி பண்ண போக வேண்டிய நிர்ப்பந்தம்..

இப்போ உன் கையில் இருக்குற இந்த ரிப்போர்ட் மூணு மாசத்துக்கு முன்னாடி நான் யு. எஸ் போக முதல், உனக்கு மட்டும் பர்சனலா அனுப்ச்ச ரிப்போர்ட் யாழி..

யாராவது உன் மெயில் பார்த்துருவாங்களோன்னு.. உன் அபார்ட்மென்ட் அட்ரஸுக்கு ரொம்ப கான்பிடன்ஷியலா அனுப்ச்சேன்..

அது உன் கையில் இப்போ எப்படி வந்து சேர்ந்ததுன்னு எனக்குத் தெரியாது..

என்ட் நானே நேத்து தான் யு. எஸ்ல இருந்து லங்கா வந்தேன்.. வந்ததும் உன் வெட்டிங்க் ஃபங்ஷன் கேள்விப்பட்டு வந்திருக்கேன்டீ..

பட்.. ‘நீ ராம் குழந்தைய சுமந்திட்டிருக்க’ ன்னு தெரிஞ்சதும்..ராமும், நீயும் சேர்ந்து தான் காதும், காதும் வைச்ச மாதிரி கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்றீங்கன்னு தான் நான் நெனச்சிட்டிருக்கேன்..” என்று தான் இந்த அவசர கல்யாணத்துக்கு பின்னுள்ள காரணத்தை நினைத்துக் கொண்ட விதத்தை சொல்ல அதிர்ந்து போனது யாழினி மட்டுமல்ல.

ஸ்ரீராமும், யாழினியின் தந்தை மகேந்திரனும் தான்!

எப்போதும் விரதங்களை கையாண்டு, மனதையும், உடலையும் ஒரு கட்டுக்குள் அடக்கி வைத்திருப்பவனா ராம்? என்று பிறர் அஞ்சத்தக்களவுக்கு..

அன்று கல்யாண மண்டபத்தில் ராம் நடந்து கொண்டதெல்லாம் கொஞ்சம் அதிகப்படி தான்.

“என்ன நடக்குது.. இங்க?”- தன் பெருங்குரலெடுத்து அந்த மண்டபமே அதிரும் வண்ணம் கத்தினான் ராம்.

எதற்கும் அஞ்சா நெஞ்சுடன் முகம் கொடுக்கும் யாழினி தடுமாறிப் போனாள்.

அவள் ஓர் குழந்தையை சுமந்து கொண்டிருக்கிறாளா? எப்படி?

எந்த ஆடவனின் ஸ்பரிசமும் தான் அவளைத் தீண்டியதே இல்லையே?

அப்புறம் எப்படி அவள் மூன்று மாத கர்ப்பிணியாக இருக்கக் கூடும்??

ஆனால் ராமோ பெண்ணவளின் மனம் பாடும் அல்லலை அறியாமல், இதுவரை யாழினியிடம் காட்டாத ஓர் முகத்தை தன் முன்னாள் காதலியிடம் காட்டிக் கொண்டிருந்தான்.

ஆம், நிகழும் களேபரத்தின் முடிவு.. யாழினி ஸ்ரீராமின் முன்னாள் காதலி என்பது தானே??

"யாழினீஈஈ... என் தலையில் மிளகாய் அரைக்கலாம்னு பார்க்குறியாஆஆ..?எவ்வ.. னோ ஓர்.. ருத்தன் குழந்தைக்கு என்ன அப்பாவாக்கப் பார்க்குறியாஆஆ?? "என்று கத்திக் கேட்க,

அந்தக் கத்தலில் தூக்கிவாரிப்போட்டுக் கொண்டு நிமிர்ந்தவள் தன் சுயம் இழந்தாள்.

கல்லென இறுகி நின்றவனின் கையை, தன்னிரு கைகளாலும் பற்றிக் கொண்டவளின் கண்களில்,

கண் மை அஞ்சனம் கலைந்து கண்ணீர் கரும்நீராக ஓடுகிறது. இருப்பினும் தன் கெஞ்சலை நிறுத்தினாளா அவள்?

இல்லையே?? அவள் ராம் மீது கொண்ட காதல் பெரிதல்லவா?

“ராம்.. ராம் சொல்றதைக் கேளு ராம்!!.. எனக்கே என்னான்னு புரியலை ராம்.. ப்ரெக்னன்ட்னு எனக்கே எந்த சிம்டம்ஸூம் தெரியலை.. உனக்கே தெரியும் என்னோட இர்ரெகுலர் பீரியட்ஸ்… சத்தியமா என்ன சுத்தி என்ன நடக்குதுன்னு புரியலை ராம்” என்று ராமை மலையிறக்க படாது பாடுபட,

உள்ளுக்குள்ளேயே கனன்று கொண்டிருந்த எரிமலைக்குழம்பு படாரென சீறிட்டு வெடித்தது ராமுக்குள்.

அவள் கையை உதறித்தள்ளியவன், “வ்விடுடீ… என் க்கைய்ய!!” என்று அவள் பூமேனி நடுக்குறச் செய்யும் வண்ணம் கத்த,

நின்ற கண்ணீருடன், நிர்மலமான முகத்துடன் தன் மன்னவனை ஏறிட்டாள் யாழினி.

ராமுக்கும் அவள் அதிர்ந்த முகம் ஏதோ செய்திருக்க வேண்டும். அவளைப் பாராமல் விட்டத்தை வெறித்துப் பார்த்த படி,

“இங்கே உன்னை ந்நம்பி நான் இருக்க.. நாடு நாடா அகழ்வாராய்ச்சி பண்ண போறேன்ற பேரில் எனக்கே த்துரோகம் ப்பண்ணிட்டேல்ல?? .. என் உண்மைக் காதலுக்கு துரோகம் ப்பண்ணிட்டேல்ல?? .. எவ்வ்.. வனோ ஒருத்தன் குழந்தைக்கு என்னை அப்பாவாக்கலாம்னு முடிவு பண்ணிட்டேல்ல??..”என்று கைமுஷ்டியை இறுக்கிக் கொண்டே அவன் கேட்க,

அவள் விழிகளோ சோர்ந்து போனது. இதயவறைகளை யாரோ சம்மட்டியால் தாக்கியது போல வலித்தது.

அவளை அண்ணாந்து பார்த்தவள், உடைந்து போன குரலில், ‘‘ராம்.. என்னை நீ புரிஞ்சிக்கிட்டது அவ்வளவு தானா?.. இது.. இந்த.. ரிப்போர்ட்.. பிழையாகவும் இருக்கலாம் ராம்..’’என்று கூற, இடையே இடையிட்டாள் டாக்டர் தியா.

டாக்டர் தியாவின் குரலில் இருந்த உறுதி.. யாழினியின் மனதையும் தான் சிறிது ஆட்டம் காண வைத்தது.

‘‘இல்லை யாழி.. நீ அம்மாவாகத் தான் போற.. உனக்கு வெளிப்படையா எந்த சிம்டம்ஸூம் காட்டலைன்னாலும் நீ ஒரு குழந்தையை மூணு மாசமா சுமந்திட்டிருக்குறது உண்மை..!!!.. நீ எந்த ஹாஸ்பிடல் போய் செக் பண்ணாலும் நீ ப்ரெக்னன்ட்ன்றது பொய்யாகப் போவதில்லை’’ என்று சொல்ல,

உச்சாதி பாதம் வரை அவளுடைய மயிர்க்கால்கள் எல்லாம் சிலிர்த்து அடங்கியது.

‘‘எஎஎ.. ன்‶ ன.. என்ன சொல்ற தியா??..’’- திக்கித் திணறிக் கேட்டாள் யாழினி.

சொன்னது யாவும் உண்மை என்பது போல தியாவின் கண்கள் மூடித் திறந்தன. பின்பு ஆழமான குரலில், "ஆமா யாழி.. நீ இந்தியா போக முன்னாடி… என்னை ஒரு தடவை வந்து பார்த்திருந்தால் இந்த பிரச்சினையே வந்திருக்காது.."என்று கூற,

அவர்கள் கூற்றை எல்லாம் கேட்டு.. இருபக்கமும் தலையைப் பிடித்து யாரோ நெறிப்பது போல இருக்க,

தலைவேறு விண் விண்ணென்று வலிக்கவாரம்பித்தது அவளுக்கு.

அவளது கண்ணாளன் ராம், டாக்டர் தியா மற்றும் ஆசிரம ஆயா லக்ஷ்மியம்மா என அனைவரையும் சுற்றி வரப் பார்த்தது யாழினியின் ஒளியிழந்த கண்கள்!!

பின்பு அவை தன்னைப் பெற்றவரின் வதனத்தில் சரணடைந்தது. இத்தனை பேரும் சேர்ந்து ஏதோ சூழ்ச்சி செய்வதாகவே தோன்ற,

தவழும் குழந்தை போல தந்தையை நாடி ஓடியவள், அவர் கையைப் பற்றி கெஞ்சும் குரலில்,

“அப்பா.. இங்க எல்லாரும் ஏதேதோ சொல்றாங்கப்பா.. நான் கெட்டுப் போனவள்னு சொல்றாங்கப்பா… ஆனால் நான் அப்படிப்பட்டவள் இல்லைப்பா…” என்று சொல்லிக் கொண்டே போனவளுக்கு,

மேற்கொண்டு வசனத்தைத் தானும் முடிக்க முடியவில்லை. மடைதிறந்த வெள்ளம் போல கண்களை விட்டும் மளமளவென இறங்குகிறது உவர்நீர்!!

அவள் அழுகையைக் கண்டு இரங்கிய மனம்.. அடுத்த கல்லாகிப் போனது. அவள் பற்றியிருந்த அவர் கையும், உடலும் நிமிடத்துக்கு நிமிடம் விறைத்துக் கொண்டே செல்ல,

“என்னை “அப்பா” ன்னு கூப்பிடாதே.. என்ன அத்தனை பேர் முன்னாடியும் தலை குனிய வைச்சுட்டியே..??”என்று தந்தையும் அவமானத்தால் கன்றிய முகத்துடன் கேட்க,

ஒரு முறை நின்று வந்தது யாழினியின் மூச்சு!

"அப்பா..!!"- அநாதரவாக வெளி வந்தது அவளது ஈனக்குரல்.

மீசைத் துடிக்க செந்நிற விழிகளுடன், கனல் கக்கியவராக, "அப்பான்னு கூப்பிடாதே..!!" என்று திரும்பியவரின் சீற்றம், அவள் பிறந்தது முதல் காணாத ஒன்று.

"சொல்லு!! யார் இந்தக் குழந்தைக்கு அப்பா..!"- தந்தை தொடுத்த கேள்வியில், அப்படியே அந்த சீதையாய் மாறி மண்ணோடு, மண்ணாகப் போயிருக்க மாட்டோமா? என்று எண்ணத் தோன்றியது அவளுக்கு.

இல்லை.. கௌதமனின் சாபம்.. அகலிகை மீது இறங்காமல் இவள் மீது இறங்கியிருக்கக் கூடாதா??

அவள் எப்படி சொல்வாள்??

அவளின் அமைதி, அவரின் சீற்றத்தை இன்னும் இன்னும் அதிகப்படுத்த, ஆத்திரத்தில் மதி மறந்தவர்,

பற்களைக் கடித்துக் கொண்டே, ''சொல்லப் போறியா இல்லையா?'' என்ற வண்ணம் கை ஓங்கினார் அவளை அறைவதற்கு.

இதுவரை கை நீட்டாத தந்தை!! வளர்ந்த பெண்ணைக் கை நீட்ட கை உயர்த்துகிறார்.. எந்தப் பெண்ணுக்குத் தான் அது ருசிக்கும்!!

தந்தையின் கோபத்தைத் தாளமாட்டாமல், இறுக கண்கள் மூடியவளாக, தந்தையின் அடியைத் தாங்க முற்பட்டாள் அவள்.

அவள் மீது தந்தையின் அடி இறங்கவேயில்லை.

மெல்ல கண் திறந்த போது.. அங்கே அவள் மீது இறங்கக் காத்திருந்த தந்தையின் முறுக்கேறிய கையினைப் பற்றிப் பிடித்திருந்தது இன்னோர் கை.

அது யாதவ் மகாதேவனின் கை!!.

அவன் எப்போது இங்கு வந்தான்?இல்லை ஆரம்பத்திலிருந்து இங்கு தான் இருக்கிறானா??

ஆம், யாழினியின் கல்யாணம் கேள்விப்பட்டு மண்டபம் நோக்கி ஓடி வந்தவன், நடக்கும் கூத்துக்கள் அத்தனையையும் அமைதியாக அவதானித்துக் கொண்டு தானிருந்தான்.

ஆனால் தன்னவளுக்கு, மகேந்திரன் கை நீட்டுவது பொறுக்க மாட்டாமல் தான்.. இடையே பாய்ந்தான் யாதவன்!!

அவன் விழிகளில் வீசிக் கொண்டிருந்த அனல் காற்றின் உஷ்ணம்.. காட்டுச்செடிகளையும் கறுக வைக்கும் வல்லமை கொண்டதாக இருக்குமாயின்..

அவன் கோபத்தின் அளவை மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்!!

பின்னே மகேந்திரன் கை நீட்டியது அவன் ஜானுவுக்கு அல்லவா??

மகேந்திரனின் முன்னங்கைக்கு அவன் கொடுத்த அழுத்தம், அவருக்கு கொஞ்சம் வலிக்கவே செய்தது.

ரொம்ப ரொம்ப அழுத்தமான குரலில், ‘‘ஸாரி ம்மிஸ்டர். ம்மகேந்திரன்.. என் குழந்தையை சுமந்திட்டிருப்பவளை அடிக்குற உரிமை உங்களுக்குன்னு இல்லை.. இங்கே ய்யாருக்கும் இல்லை..’’என்று சொன்னவனின் கண்கள்,

ராமையும் கூட சீற்றத்துடன் பொசுக்கி விட்டே மகேந்திரனிடம் மீண்டு வந்தன.

அவன் உரைத்த சொற்கள் கேட்டு.. கூட்டத்தில் சலசலப்பு மிகுந்த அதேவேளை··· அவள் மனதும் கொஞ்சம் சலனப்பட்டது.

அவள் கரங்களோ..தோளில் இருந்த கல்யாண மாலையை இறுக்கிப் பிடிக்க, யாதவனைப் பார்த்து விழிகள் அகல விரித்துக் கேட்டாள் இவள்,

‘‘என்ன சொன்ன?? .. உன் குழந்தையை சுமந்திட்டிருக்கேனா..??’’என்று.

அவனோ, அவளை காதல் கனிய ஆழமாக ஓர் பார்வைப் பார்த்தான். பின்பு தன்னெதிரே நின்றிருந்தவளை, தன் திடகாத்திரமான கைகள் நீட்டி,

அவளைத் தன் தோளோடு இறுக்கி அணைத்துப் பிடித்தான்.

எல்லாமும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து விட, இவளோ தன் தோளில் பதிந்த அவன் கையை அகற்றப் படாதபாடு பட்டாள்.

ஆனால் அவனது வலிய தேக்குமரம் போன்ற கை, இம்மியளவும் அவளை விட்டும் அசையவுமில்லை. இவளால் அசைக்கவும் முடியவில்லை.

பின் அந்தக் கூட்டமே கிடுகிடுங்கச் செய்யும் உறுதியான மற்றும் கம்பீரமான குரலில், “ஆமா.. யாழினி வயிற்றில் இருக்குற சிசுவுக்கு அப்பா நான் தான்!!” என்றவன் அவளுடைய வயிற்றில், அவள் சம்மதமின்றி கை வைத்து,

“இது .. யாதவ் மகாதேவனின் குழந்தை!!”என்று சொல்ல, அத்தனையும் மறந்து போய் யாதவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் யாழினி.

யாதவனின் கையணைப்புக்குள் பாந்தமாக அடங்கி நிற்கும் யாழினியை வெறுப்பு உமிழப் பார்த்தார் மகேந்திரன்.

அடுத்து மகேந்திரன் சொன்னவை அனைத்தும்… அவளின் பிறப்பு இரகசியமாக இருக்க ஆடிப் போனாள் யாழினி.

சபையோர் அனைவரையும் முழுமையாக ஒரு தரம் பார்த்தவர், காட்டமான குரலில்,

"இப்போ இந்த சபையில் வைச்சு சொல்றேன்.. நீ என் மகள் கிடையாது!! யாழினி என் மகள் இல்லை!! .. மதுரை மீனாட்சி அம்மன் கோவில்ல பார்த்தேல்ல வெறும்மேல் சித்தர்.. அவர் தான் உன் அப்பா!!

என்னுடைய உயிர் நண்பன் சதாசிவம்!!

நான் கல்யாணம் பண்ண வேண்டிய முறைப்பெண்ணான உன் அம்மாவை.. காதல் வலையில் வீழ்த்தி.. என் நட்புக்கு துரோகம் பண்ணி..உன் அம்மாவைக் கல்யாணம் பண்ணி..

அவள் கூட வாழ்ந்து.. ஒரு குழந்தையையும் கொடுத்துட்டு..

என்னையும், உன் அம்மாவையும் சந்தேகப்பட்டு.. பிறந்த குழந்தையாக நீ இருக்கும் போதே விட்டுட்டுப் போனானே சதாசிவம் அவன் தான் உன் அப்பா..!!'' என்று சொல்லவும்,

ஓர் பெண்ணுக்கு ஒரே நாளில் எத்தனை அதிர்ச்சிகள் தான் தாங்க முடியும்? அவள் கால்கள் துவளத் தொடங்கின.

அவள் வயிற்றில் ஓர் சிசுவா? அதுவும் மூன்று மாதமாக இருப்பது தெரியாமல் சுற்றியிருப்பது ஓர் அதிர்ச்சி.

அந்த குழந்தைக்கு அப்பா நான் என்று யாதவன் ஊரார் முன் சொல்வது இன்னோர் அதிர்ச்சி.

அதே ஊரார் முன் நான் அப்பா இல்லை. வெறும்மேல் சித்தர் தான் உன் அப்பா என்பது இன்னோர் அதிர்ச்சி.

அந்தப் பெண் எத்தனை அதிர்ச்சி தான் தாங்குவாள்??

இத்தனை நாள் தந்தையென எண்ணியவரை விழித்திரைக் கலங்கப் பார்த்தாள் அவள்.

அப்படியானால் இவள் அனாதையா என்ன?

வெறும்மேல் சித்தரைத் திரும்ப ஒருமுறை பார்க்க வேண்டும் என்று அவள் மனம் உந்தியதும் இந்தக் காரணத்தினாலா என்ன?

வெறும்மேல் சித்தர், அந்த அருணாக்கயிறை 'தந்தையிடம் கொடு..' என்று சொல்லாமல் 'தாயுமானவரிடம் கொடு' ன்னு சொல்லவும் இது தான் காரணமோ?

அவரோ இன்னும் முடிக்கவில்லை என்பது போல தொடர்ந்து சொன்னார்.

"கணவன் துறவறம் போன சோகத்தில்.. உன்னை என் கையில் ஒப்படைச்சுட்டு.. 'கடைசி வரைக்கும் இவளுக்கு ஒரு நல்ல அப்பாவா இருங்க

மாமா' ன்னு சொல்லிட்டு அவளும் போய் சேர்ந்துட்டாள்.. அவள் சொன்ன ஒரு வார்த்தைக்காக எனக்குன்னு ஒரு குடும்பத்தே அமைச்சுக்காமல் உனக்காவே வாழ்ந்தேன்.." என்றவருக்கும் அந்தக் கால நினைவுகள் வந்திருக்க வேண்டும்!!

அவர் கண்கள் வெகுவெகுவாகக் கலங்கியிருந்தன.

திடுமென விழியுயர்த்தி அவளைப் பார்த்தவர், ஆக்ரோஷமான பார்வையுடன்,

"ஆனால் நான்!! இதுவரை ஒரு நல்ல அப்பாவா தான் இருந்தேன்.. ஆனால் நீ!! .. இத்தனை பேர் முன்னாடி தலைகுனிவை ஏற்படுத்தி ஒரு "நல்ல மகள்" னு நிரூபிச்சிட்டேல்ல?" என்று அந்த "நல்ல மகளை" இழிவு சிறப்பு குரலில், இகழ்ச்சி இழையோட சொன்னவர்,

அடுத்து,

“இன்னைக்கு சொல்றேன்.. உன் அப்பாவுக்கு, என் நட்பின் ஞாபகார்த்தமாக நான் கொடுத்த அருணாக்கயிறும் வேணாம்.. நீயும் வேணாம்..” என்றவர் இடுப்பிலிருந்து அருணாக்கயிறை உருவி எடுத்து.. தரையில் விசிறி அடித்தவர்,

அவளை நோக்கி, “ப்போயிரு” என்றார் உக்ரமாக.

‘இங்கே ஏதோ சூழ்ச்சி நடக்குது..?’ என்று அவள் உள்மனம் வேறு சொல்லிக் கொண்டே இருக்க,

அவள் காதோரம் எதேர்ச்சையாக ஒலித்து அடங்கியது அவன் குரல்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர், சேப்டர் வன் உணவகத்தில் வைத்து, அவன் இறுமாப்புடன் கூறிய அதே வார்த்தைகள்.

“அப்படின்னா நீ மோசமான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்!!… உன்னை அடையணும்றதுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடியவன் நான்..!!” — என்ற அவனுடைய குரல்.

அப்படியானால் எல்லாமே அவனுடைய ஏற்பாடு தானா? அவனுடைய பணம் பாதாளம் வரை பாய்ந்திருக்கிறதா??

அவன் கையணைப்பை உதறி விட்டுக் கொண்டே வெளியே வந்தவன்,

“இது உன் குழந்தை தான்றதற்கு என்ன ஆதாரம்?? சொல்லு!!.. உனக்கும், எனக்கும் பழக்கம் அப்படின்னு காட்ட என்ன ஆதாரம் இருக்கு.. சொல்லு!!” என்று கேட்டாள்.

அவன் முகத்திலோ, அவள் கேட்ட கேள்வியில் மென்மையான ஓர் புன்னகை பரவியது. தலை சிலுப்பிக் கொண்டே கிளுக்கி நகைத்தவன்,

அவளை நாடி அழுத்தமான எட்டுக்கள் எடுத்து வைத்து வந்தான்.

அவன் கைகள் கொஞ்சம் அத்துமீறி.. சேலையின் வழியாகத் தெரிந்த கழுத்துவளைவுப் பிரதேசத்தின் குழிக்குள் தஞ்சமடையப் பார்க்க மெல்ல பின்னடையலானாள் அவள்.

அவனோ அசராமல், அவள் மார்புக்குழிக்குள் பட்டும் படாமல் கையிட்டு, ஓர் தங்க மாலையை வெளியே எடுத்து

சுட்டுவிரலால் இழுத்துக் காட்டி, “.. இதோ உன் கழுத்தில் இருக்குற “யா” வடிவ மாலை தான் ஆதாரம்!! உனக்கும், எனக்கும் நிகழ்ந்த அழகிய கூடலுக்கும், காதலுக்கும் சாட்சியா.. உன் கழுத்தில் போட்ட தாலி இது..!!”என்று சொல்ல,

அவள் நாக்கு மேலதிக கேள்விகள் கேட்காமல் மேலண்ணத்துடன் போய் ஒட்டிக் கொண்டது.

“இந்த மாலை இவன் தந்ததா??” என்ற ஒரேயொரு கேள்வி மட்டும் தான் தற்போது அவளுள்.

இத்தனை பிரச்சினை ஓடிக் கொண்டிருக்கும் போது, தலையிடாமல் இருப்பது நல்லதல்ல என்று கொண்ட கொழுக் மொழுக் என்றிருந்த ஓர் ஆன்ட்டியும்,

முன்னாடி வந்து..

“இரண்டு வீக் முன்னாடி.. நான் கூட இந்தத் தம்பி யாழினி வீட்டில் இருந்து.. நைட் ஒன்னரை மணி போல இருக்கும்.. அப்போ வெளியே போறதைப் பார்த்தேன்.. இப்போ என்னம்மா தெரியாது தெரியாது சொல்ற..? இதெல்லாம் ஊருலகத்துல நடக்காததா?? .. ஆனால் தம்பி இத்தனை பேர் முன்னாடியும் குழந்தைக்கு அப்பா நான்னு ஒத்துக்கிட்டாங்கல்ல? இந்த மனசு யாருக்கு வரும்??”என்று கேட்க,

யாதவனோ, ‘மெய்யாலுமே கடவுள் இருக்கான் குமாரு’ என்று எண்ணிக் கொண்டான்.

அவளுக்கோ.. அன்று பின்வாசல் வழியாக வந்து.. முன்வாசல் வழியாக போனதும்.. நாலு பேர் கண்ணில் விழுந்து வைக்கத் தானா? என்றே தோன்றியது.

அவளோ மனதுக்குள் ஓர் மனப்போராட்டத்துடன் நிமிர, அவள் முன்னெ விரித்து வைத்த தாலிக் கயிறுடன் நின்றிருந்தான் அவன்!

காதல் கமழும் குரலில், “உனக்கும், எனக்கும் எப்போவோ கல்யாணம் ஆகிருச்சு ஜானு..நீ என்னைக்கோ என் பொண்டாட்டி.. ஆனால் இது

ஊருக்காக··· ஊருக்கு நீ தான் என் பொண்டாட்டின்னு அறிவிக்குறதற்காக” என்றவன்

இமைக்கும் நேரத்தில் அவள் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு, நெற்றியில் குங்குமமும் இட்டிருந்தான் யாதவ் மகாதேவன்!!

பின் சபையோருக்கு அவளைத் தன்னோடு அணைத்துக் காட்டி, “இது யாழினி மகாதேவன்.. இனி என் பொண்டாட்டியைக் குத்தம் சொல்ல எவனுக்கும் உரிமை கிடையாது..”என்று ராமையும் ஓர் பார்வை பார்த்தான் யாதவன்.

யாதவன் பார்வையில் அப்படி என்ன இருந்ததோ? மற்றவரைக் கட்டுப்படுத்தும் அந்த விழி வீச்சைத் தாங்க மாட்டாமல், ராமின் தலை மெல்ல தாழ்ந்தது.

அவளை மையலுடன் நோக்கியவன், “இனி உனக்கு ஒரு அப்பாவா, அம்மாவா.. நல்ல தோழனா, உன்னை உயிருக்குயிரா நேசிக்குற கணவனா.. எல்லாமுமா நான் இருப்பேன்.. இவங்க

யாரும் உனக்கு தேவையில்லை.. வா போகலாம்” என்றவன்

உரிமையோடு அவன் முன்னங்கைப் பற்றி அழைத்துச் செல்லலானான்.

அவன் தன் கைப்பற்றியதும்.. இது நாள் வரை இல்லாத சிலிர்ப்பு பரந்து அடங்கியது அவளுக்கு.

ஆனால், யாதவன் ஓர் ராஜதோரணையுடன்.. அவள் கைப்பற்றி அழைத்துச் செல்ல.. அவன் தலை கம்பீரமாக நிமிர்ந்து தான் இருந்தது.

தன்னை அத்தனை பேர் முன்னாடியும் அவமானப்பட விடாமல், தாலி பாக்கியம் தந்து திலகமிட்டு அழைத்துச் செல்பவனை,

நன்றிப் பெருக்குடன் அவள் பார்த்திருந்தாள் என்றால் அது தவறு!!

இதோ கணவனாகக் கொண்டு.. முன்னே செல்கிறானே யாதவன்!!

அவன் பணத்திமிரைக் காட்டி விட்டான். பணத்தால் எதைச் செய்ய முடியும் என்று காட்டி விட்டான்!!

ஆனால் பணத்தால் செய்ய முடியாததை.. நான்.. இந்த யாழினி காட்டத் தான் போகிறாள்!!

அவனுடைய உயர்ரக ரோல்ஸ்ரோய்ஸ் கார்..கொழும்பின் பாதைகளில் ஸ்மூத்தாக வழுக்கிக் கொண்டு செல்ல,

அதனுள் அமர்ந்திருந்தவனின் பார்வை, தன்னருகில் அமர்ந்திருந்த தன் மனங்கவர்ந்தவளையே தான் இமைக்காமல் பார்த்திருந்தாலும்,

அவன் இதழ்களோ கொஞ்சம் கோபத்தில் தான் சிடுசிடுத்துக் கொண்டிருந்தது.

“அந்த ராம்.. உன்னைப் பார்த்து, “நாடு நாடா அகழ்வாராய்ச்சி பண்ண போறேன்ற பேரில்… துரோகம் பண்ற” ன்னு.. உன்ன கேள்விக் கேட்டு.. அத்தனை பேர் முன்னாடியும் உன் கேரக்டரை

ஸ்பாய்ல் பண்றான்.. நீயும் அதை உண்மையாக்குறதைப் போல.. அமைதியா கேட்டுட்டு இருக்க… “என் கூடவே ஒண்ணா வளர்ந்தவன் தானே நீ.. நான் அப்படி போறவளா இல்லையான்னு உனக்குத் தெரியாது?”ன்னு… கன்னத்துல ஒண்ணு வைக்க வேணாம்..”என்று கத்திக் கொண்டே வந்தவனை ஏறிட்டும் பார்க்கவில்லை அவள்.

அவன் தொணதொணப்பு தாங்க மாட்டாமல் பல்லைக் கடித்துக் கொண்டு வந்தவள், வண்டி சிக்னலில் நிற்கவும், சட்டென வண்டியை விட்டும் இறங்கி.. மணக்கோலத்தில் வீதியில் நடக்கவாரம்பித்தாள்.

இவனோ, பெருமூச்சு விட்டுக் கொண்டே, அவள் பின்னால் ஓடி சென்று, அவள் கையைப் பற்றி இழுத்து,

“வா.. வண்டியில் ஏறு… எதுவா இருந்தாலும் நம்ம வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்” என்று கூற,

அவளோ அவன் கையை உதறியபடி, “விடு.. நான் உன் கூட வர மாட்டேன்.. என்னை வ்விடு.. உன் பணத்தை வைச்சு.. எதை வேணாலும்

அடையலாம்னு மனக்கோட்டை கட்டிக்கிட்டே இரு.. நான் செத்தாலும் உன் மனைவியாக மாட்டேன்..

இதுக்குப் பின்னால உன் சூழ்ச்சி தான் இருக்குன்னு எனக்குத் தெரியாதுன்னு மட்டும் நினைக்காதே.. நீ தான் ப்ளான் பண்ணி ஏதோ பண்ணிட்ட…

என்னை நம்பாமல் கேள்வி கேட்ட அந்த ராமும் வேண்டாம்.. 'நீ என் மகள் இல்லை' ன்னு சொன்ன என் வளர்ப்பு அப்பாவும் வேண்டாம்…

என்னை தூக்கிப் போட்டுட்டுப் போன என்னோட ரியல் அப்பா அந்த வெறும்மேல் சித்தரும் எனக்கு வேண்டாம்..!!

பணத்தை வைச்சு.. ஏதோ செய்து என்னை அடையணும்னு நினைக்குற நீயும் வேண்டாம்..

என்னை எல்லாரும் நிம்மதியா விடுங்க…!!

நீ தாலி கொடுத்ததும்.. கல்லானாலும் கணவன்.. புல்லானாலும் புருஷன்னு உன் பின்னாடி வருவேன்னு

நினைக்காதே.. எனக்கு நீ வேண்டாம்..உன் தயவில்லாமல் என்னால வாழ முடியும்.. என்னை விடு” என்றவளாக தொடர்ந்து முன்னேறியவளை,

அதற்கு மேலும் ஒரு அடி எடுத்து வைக்க விடாமல், அவளை அசால்ட்டாக கைகளில் ஏந்திக் கொண்டான் அவன்.

இமைக்கும் நேரத்தில், அவனது மார்புக்கூட்டுக்கு அருகே வந்தது அவள் சிரம்!!

“வ்விடு.. என்னை விடு” என்று அவள் திமிற, இவனோ, “என் ஜானுவை இவ்வளவு சீக்கிரம் விட்டுடவா.. ஊர் அறிய உன் கழுத்தில் தாலி கட்டினேன்.. நீ பார்க்க வேண்டியது எவ்வளவோ இருக்கு ஜானு” என்றவன்,

தன் காரை நோக்கி மீண்டும் நடந்தான்!!

புதுமணப்பெண்ணை.. மாப்பிள்ளை நடுரோட்டில் தூக்கிச் செல்லும் காட்சி.. இன்றைய ஸ்மார்ட் போன் தலைமுறை இளசுகளின் செல்லில் அழகாக பதிவாகியது..

நாளைய ஃபேஸ்புக்கில் குவியப் போகும் லைக்ஸ்களிற்காக!!

அத்தியாயம் 8

அவனறை.

அந்த அறையைப் பார்ப்போருக்கு, ‘நாம் என்ன இலங்கையில் இருக்கிறோமா? இல்லை வெளிநாட்டின் உயர்ரக விடுதியில் தான் வாசம் செய்கிறோமா?’ என்ற சந்தேகத்தைக் கிளப்பி விடுவதாக இருந்தது அந்த அறையின் பிரம்மாண்டம்!!

அறைக்கு நடுநடுவே இந்தோ-சாராசேனிக் அமைப்பின் கலை மரபை எடுத்துக் காட்டும் பூவேலைப்பாடுகள் செதுக்கப்பட்ட தூண்கள்!!

வெள்ளை வெளேரென்ற சுவரெங்கிலும் இருபத்தோராம் நூற்றாண்டின் த்ரீடி வண்ண சித்திரங்கள்!!

முகலாயர் கலை மரபைக் கொண்டு செய்யப்பட்ட தளபாடங்கள்!!

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

இத்தாலியின் கை தேர்ந்த வல்லுநர்களின் கலையாம்சத்தில் மிளிர்ந்து கொண்டிருந்த.. பார்ப்பாரை மயக்கும் சர விளக்குகள்!!

உயர்ரக வெல்வட் போர்வை கொண்டு விரிக்கப்பட்டிருக்கும் மஞ்சம்!!

அந்த அழகிய மஞ்சத்தின் விளிம்பில்.. கைகள் இரண்டையும் கோர்த்தவாறு.. மணப்பெண் கோலத்தில்.. அழுதழுது சிவந்து போன கண்களுடன் அமர்ந்திருந்தாள் சுந்தரப் பெண் யாழினி!!

இத்தனை கலைநயத்தையும் இரசிக்கத் தான் பெண்ணின் மனம் கூடி வரவில்லை.

அந்த அறையின் ஒவ்வொரு அணுவும் பறைசாற்றிக் கொண்டிருந்தது அந்த சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தானது செல்வச் செழிப்பை!!

அவள் அழுததின் விளைவாக.. செங்காந்தள் மலரின் மை எடுத்துத் தீட்டப்பெற்ற அந்த நயனங்கள் கொஞ்சம் வீங்கிப் போயிருந்தது.

அவள் இதழ்களோ.. கொஞ்சம் காய்ந்து போயிருந்தது. இருப்பினும் அவை மென்மையாக முணுமுணுத்துக் கொண்டே தான் இருந்தன.

அவள் கன்னம் விட்டு வந்த கண்ணீர் கொங்கை வரை சரம் கோர்க்க, உடைந்து போன குரலில்,

“உலகமே என்னை கைவிட்ட மாதிரி இருக்கு.. நேத்து வரைக்கும் என் உலகம் வேற.. ஆனால் இன்னைக்கு.. இந்த உலகத்துலேயே நான் வெறுக்குற… முகத்தைக் கூட பார்க்க பிரியப்படாத ஒருத்தனின் மனைவியா இருக்கேன்.”என்றது எல்லாம் யார் காதில் விழுந்து தொலைத்ததோ இல்லையோ?

விழுந்து தொலைக்க வேண்டியவன் காதுகளில்.. நன்றாகவே விழுந்து தொலைத்தது.

ஆம், அவனும் அதே அறையில் தான் இருந்தான். இரவு நேரத்தில் குட்டிக் குளியலொன்றைப் போட்டுவிட்டு..

சாதாரண பைஜாமாவுக்கு மாறி.. அறைக்குள் வந்தவனின் கண்களில் விழுந்தாள் அவள்!! காதுகளில் விழுந்தது அவள் உரைத்த சொற்கள்!!

மெல்ல அவளருகே நடந்து வந்தவன், அவள் பாதங்களுக்கு அருகில் குனிந்து, ஒரு காலை குந்த வைத்தும், மறுகாலை மண்டியிட்டும் அமர்ந்து கொண்டான்.

யாதவனின் முகம், தன் மதிநிலவைக் காதலோடு நோக்கும் ஆதவ முகமென பிரகாசமாக இருந்தது.

அவன் எப்போதும் மயங்கும் அஞ்சனங்களில் இருந்து உருண்டு திரண்ட இரு கண்ணீர்த்துளிகள் அட் அ டைமில் சரேலென இறங்க, அதைப் பார்த்த யாதவனின் முகம் இருள் சூழ்ந்தது.

பெண்ணவளின் அழுகையை.. காதலிக்கும் எந்த ஆணுள்ளம் தான் தாங்கும்??

அவளுடையை நாடியை மென்மையாக தன் கையில் ஏந்தியவன், அவள் வதனம் பார்த்து கவலை மீதூற சொன்னான்,

“ஜானு.. ப்ளீஸ் அழாதே..!! நீ அழுதா எனக்கு கஷ்டமா இருக்கு!! இப்படி நீ அழுதுட்டே இருக்குறதைப் பார்த்து.. எங்கே நானும் மனசு கேட்காமல்.. உன்னை..என்னை விட்டுப் போக அனுமதிச்சிருவேனோன்னு என் மேலேயே எனக்கு பயமா இருக்கு!!”என்று.

பல்லாயிரம் கோடிக்கு உரிமையாளன்.. அவன் முன்னே உலகமே மண்டியிட்டு நிற்க..

அவனோ போயும் போயும் ஓர் ஐந்தரையடி உயர பெண்ணின் முன் மண்டியிட்டு நிற்கிறான்!!

கலங்கிப் போன விழித்திரையுடன் நிமிர்ந்து அவனை முறைத்துப் பார்த்தவளின் நெஞ்சை.. அவன் காதல் வசனங்கள் அடைய மறுத்தது.

தன் மீது இந்த நவீன ராவணனின் கைகள் படுவதும் தீது எனக் கொண்டாளோ? அந்த சுந்தரப் பெண்ணும்!!

ஆவேசத்துடன் அவன் கையைத் தன்னிலிருந்தும் தள்ளி விட்டாள்.

அழுகையில் நுனி சிவந்து விடைத்து விடைத்து அடங்கிய நாசியுடன்,

பெருங்குரலில், “என்னை ஜ்ஜானுன்னு க்கூப்பிடாதே!!... நா.. நான் ய்யாழினி மகே..” என்று தந்தை பெயரையும் சொல்லப்போனவள் இதழ்கள் தடைப்பட்டு நின்றது.

இப்போது தான் அவள் ‘யாழினி மகேந்திரன்’ இல்லையே?? பிறகு எப்படி தந்தை பெயரை அவள் உரிமையோடு சொல்ல முடியும்?

‘இந்த சபையில் வைச்சு சொல்றேன்.. நீ என் பொண்ணு இல்லை!!’ என்ற தந்தையின் சொற்கள் நாராசமாய் ஒலித்து ஓய்ந்தது அவள் காதுக்குள்.

கீழுதட்டை அழுந்தக் கடித்து, அழுகையை நிறுத்தி.. மெல்ல தலை குனித்துக் கொண்டாள் யாழினி.

அப்போதும் அவன், அந்த மதிவதனம் பார்த்தபடியே, தன் உணர்ச்சி மொத்தமும் கொட்டிய தொனியில்,

“எனக்கு எப்போவுமே நீ.. என் ‘ஜானு’ தான்!! .. ஏன் என்னைப் புரிஞ்சுக்க மாட்டேங்குற? .. வை. எம். டி கன்ஸ்ட்ரக்ஷன் பிஸினஸ், என் சொத்து, சுகம் எல்லாம் உனக்காக!!.. உன் கா.. காலடியில் கொணர்ந்து வைக்குறேன்!!.. எல்லாம் உனக்காக ஜானு!!.. ஆனால் அதுக்காக நான் எக்ஸ்பெக்ட் பண்றது உன்னோட..”என்று சொல்லிக் கொண்டே வந்தவனைக் கட்டிப் போட்டது சுந்தரப் பெண்ணின் சீறும் குரல்.

ஒற்றை இடது புருவம் மாத்திரம் சற்றே உயர, அவனை நோக்கி,

“என்னோட...?சொல்லு.. என்னோட? இந்த உடலை.. இந்த உடலால் கிடைக்குற சுகத்தை.. இதைத் தானே நீ எக்ஸ்பெக்ட் பண்ற? அப்படித் தானே?”என்று கேட்டாள் யாழினி.

அவளின் கேள்வியில் எப்போதும் சினந்து பழக்கப்பட்டிருந்த யாதவ் மகாதேவனுக்கும் சினம் துளிர்த்தது.

தன் கை முஷ்டி இறுக்கி, தொடையில் ஓங்கி ஓர் குத்துக் குத்திய வண்ணமே எழுந்தவனின் கழுத்து நரம்புகள் அதிமிதமாக புடைத்துத் தெரியலாயிற்று.

முழு உயரத்துக்குமாக நிமிர்ந்தவன், கொந்தளிக்கும் குரலில், ‘‘ஜ்ஜானூஊஊ!! ..நான் உன் ம்மேல வைச்சிருக்க க்காதலை க்கொச்சைப்படுத்திப் ப்பேசாதே!!..’’என்றவனின் எச்சரிக்கையை எல்லாம் சட்டையே செய்யவில்லை அவள்.

அவனைப் போலவே மஞ்சத்தை விட்டும் வீறிட்டு எழுந்தவள்,

அவனது தூய காதலை, காமமாக எண்ணிக் கொண்டவளாக, இயலாத மென்மையான குரலில், ஆயினும் அழுத்தமாக,

‘‘ஆமா அப்படித் தான் பேசுவேன்!! .. அத்தனை பேர் முன்னாடியும் நான் உன் சிசுவை சுமந்திட்டிருக்கேன்னு சொல்லி..

என் வாழ்க்கையை தலைகீழா மாத்தி.. பலவந்தமா உன் மனைவியா ஆக்கிக்கிட்டப்புறம் நீ ‘உம்’ னதும்.. அவுத்துப் போட்டுட்டு.. உனக்காக முந்தி விரிப்பேன்னு நினைச்சியா?”என்று கேட்டாள் அவள்.

யாதவனுக்கோ.. அவள் பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும் உச்சபட்ச கோபத்தைக் கொடுத்தன.

டிராயர் மேலிருந்த பூ வாஸ் என்ன பாவம் பண்ணியதோ?

வந்த ஆத்திரத்தில், வாலிபால் அடிப்பது போல பூவாஸைக் கையால் அடிக்க, சுவரோடு முத்தமிட்டு, சுரீரென்ற ஒலியுடன் தெறித்துச் சிதறி விழுந்தது அது.

அந்த சத்தத்தில் இதயம் கிடுகிடுத்துப் போனாலும், அதைக் காட்டிக் கொள்ளாமலேயே நின்றாள் அவள்.

கோபம் கனலும் விழிகளுடனேயே சொன்னான் இவன்,

“நீ சொன்ன.. அவுத்துப் போட்டு ம்முந்தி வ்விரிக்கத் தான் பெண் தேவைன்னா.. உன்னை ம்மட்டும் நான் த்தேடி வ்வரணும்னு எனக்கு அவசியம் கிடையாது!!.. ஒரு கோல் கேர்ள் போதும்..”என்று.

அவன் பேச்சுக்கள் ஒவ்வொன்றும் முன்கோபக் குயிலான யாழினிக்குத் திரும்பத் திரும்ப ஆத்திரத்தையும், ‘தன் வாழ்க்கை இப்படியாகி விட்டதே?’ என்ற கவலையையும் மிகைப்படுத்தவே,

கண்களில் நின்றும் அமைதியாக கண்ணீர் வழிந்தோட,

“அப்படியாப்பட்ட பொண்ணுக்கும், எனக்கும் உன் பார்வையில் என்ன வித்தியாசம்? அப்படியாப்பட்ட பெண்ணை உன் மஞ்சம் தேடி வரவைக்கணும்னாலும் நீ பணத்தைத் தான் யூஸ் பண்ணியிருப்ப!!

இப்போ என்னை அடையணும்ன்றதுக்காகவும் பணபலத்தைத் தான் யூஸ் பண்ணியிருக்க!!

நான் அப்போவே சுதாரிச்சிருக்கணும்.. ‘உன்னை அடையணும்ன்றதுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடியவன் நான்!!’ன்னு.. நீ சொல்லும் போதே நான் சுதாரிச்சிருக்கணும்..’’ என்றவளின் எண்ணம் எல்லாம் ராமுக்கும், அவளுக்கும் நடக்கவிருந்த திருமணத்தை நிறுத்தியவன்.. இவன்!!

இவன் தான் அந்தப் புண்ணியவான்!! என்ற எண்ணமே மேலோங்கிப் போயிருந்தது.

அவளை நோக்கி ஓரெட்டு எடுத்து வைத்து வந்தவன், “ஆனால் நான் எந்த எல்லைக்கும் போகலை!!.. நடந்தது எல்லாமே விதி..!!’’என்றான் நடந்த உண்மை அனைத்தையும் சொல்ல நாடி.

“இதை என்னை நம்ப சொல்றியா?’’- அவநம்பிக்கையுடன் ஒலித்தது அவள் குரல்!!

அவளை முழுவதுமாக அடைந்து அவள் கைச்சந்தை உரிமையுடன் பற்றி, கம்பீரமான குரலில்,

“ நீ நம்பலைன்னாலும் அதான் உண்மை!! இந்த டூ வீக்ஸா.. ஒரு முக்கியமான பிஸினஸ் மீட்டிங்

விஷயமா நான் யு. எஸ் போக வேண்டியதா போச்சு!! .. திரும்பி வந்து பார்த்தால் உனக்கும் ராமுக்கும் கல்யாணம்..!!

ஒருவேளை நான் கலம்போவில் இருந்திருந்தால் இந்த திருமண ஏற்பாடு.. மண்டபம் வரைக்கும் வந்து நின்னு போயிருக்காது..

ஏன்னா அதுக்கு முன்னாடி இந்தக் கல்யாணத்தை நான் நிறுத்தியிருப்பேன்.. பிகாஸ், ஓல்ரெடி யூ ஆர் மை வைஃப்!!''என்று அவன் அழுத்திச் சொல்ல, அந்த அழுத்தத்தில் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் யாழினி!!

அந்தக் குரலில் இருந்த ஆளுமையில், நிஜமாகவே, 'அவள் யாதவனுடைய மனைவி தானோ?' என்றொரு பொல்லாத சந்தேகம் விரவிப் பரவியது அவளுக்குள்.

அவனுடைய விழி வெண் படலத்தில் படர்ந்திருந்த செங்கோடுகள்.. அவன் கோபத்தின் வீரியத்தைப் பறைசாற்ற போதுமானதாக இருந்தது.

கோபத்தில் அவள் கைச்சந்தைப் பற்றியிருந்தவன் கொடுத்த அழுத்தம் கொஞ்சம் வலிக்கவே செய்தது யாழினிக்கு.

கீழுதட்டை இலேசாகக் கடித்துக் கொண்டு அவள் நிற்க, அவன் தொடர்ந்தான்.

“என் ப்பொண்டாட்டியை இன்னொருத்தனுக்குத் தாரை வார்த்துக் கொடுக்க சொல்றியாஆஆ? நான் ஒண்ணும் கையாலாகாத ‘ப்பொட்டை’ இல்லை!!!

யோசிச்சுப் பாரு!!.. உன்னை அவன் உண்மையா காதலிச்சிருந்தான்னா.. உன்னை அத்தனை பேர் முன்னாடியும் ‘யார் குழந்தையை நீ சுமந்திட்டிருக்கே?’ன்னு கேட்டு அவமானப்படுத்தியிருக்க மாட்டான்..!!

ஆனால் எல்லார் முன்னிலையிலும், “உன் வயிற்றில் வளர்ற குழந்தைக்கு அப்பா யார்?”னு கேட்குறப்போ.. என்னாலேயும் அமைதியா இருந்திருக்க ம்முடியும்!! .. ஆனால் ந்நான்···!! ஏத்துக்கிட்டேன்!.. ஒத்துக்கிட்டேன்!!.. ‘இது என் குழந்தை.. ‘இந்த குழந்தைக்கு அப்பா நான்’ னு

ஒத்துக்கிட்டேன்.. இதுக்கு என்ன ரீசன்னு யோசிச்சுப் பார்த்தியா ஜானு!!”என்று அவன் கேட்க,

அவனது காதல் பெண்ணவளின் இதயம் தொட மறுத்தது.

அவன் இத்தனை நேரம் உணர்த்திய.. உரைத்த காதல் எல்லாம் காற்றோடு காற்றாக வீணாகிப் போனது.

“ஏன்னா என் மேல உனக்கொரு க்கிறுக்கு!!..ம்மோகம்!!..”- அந்த வலிய ஆண்மகனின் காதலை எல்லாம், சட்டை செய்தவளாக அசால்ட்டாக சொன்னாள் யாழினி.

அந்த சுந்தரப் பெண் அப்படி நினைத்துக் கொள்ளவும் போதுமான காரணங்கள் இருந்தன.

இடையிட வந்தவனை அவசரமாக தடுத்து நிறுத்தியவள், “வெயிட்!! லெட் மீ ஃபினிஷ்.. என் வாழ்க்கையில் எந்த இணுக்கிலும் சம்பந்தப்படாதவன் நீ!! ..

அந்த ஏலம் நடக்குறப்போ தான் உன்னை முதன்முறையா நான் பார்த்திருக்கேன்..

அப்புறம்.. எப்படி எனக்கொரு ஒரு குழந்தையை நீ கொடுத்திருக்க முடியும்??.. நான் எப்படி உன் பொண்டாட்டியாகியிருக்க முடியும்??" என்று தன் குழப்பத்தை, சந்தேகத்தைக் கேட்டாள் தொல்லியலாளப் பெண்!!

அவன் கைகள்.. அவள் கைச்சந்தை மெல்ல விடுவித்தன. கண்கள் அவளது ஒளிசிந்தும் கண்களோடு இணைந்து.. இரண்டறக் கலந்து எதையோ அவளுள் தேடியது.

அவன் கண்கள் பாடிய நேசக்கவியை அவளுடைய நயனங்களும் பாடாதது ஏனோ?

அவள் மறுக்க மறுக்க.. அவளிரு கன்னங்களைத் தன் கையில் தாங்கிக் கொண்டவன்,

இதுவரை இல்லாத மிருதுவான குரலில் கேட்டான்,

“ஜானு சத்தியமா எதுவும் நினைவில்லையா? நமக்குள்ள நடந்தது எதுவுமே நினைவில்லையா?”என்று.

அவன் மூச்சுக்காற்று.. அவள் இதழ்களோடு உரச.. அவன் கண்கள், அவள் கண்களோடு கதை பேச.. அவன் கேட்ட கேள்வி ஏதோ செய்தது பெண்ணை!!

நாடி, நரம்பெங்கிலும் ஓர் அவஸ்தையான உணர்வு பரவுவது போல பிரம்மை எழுந்தது அவளுக்கு!!

அவன் கேட்ட கேள்விகள் ஒவ்வொன்றும் தன்னைச் சுற்றி ஓர் மாய ஈர்ப்பை உருவாக்குவதை அவள் மனம் உணர்ந்து.. விழிப்படைந்த வேளை, சட்டென நனவுலகம் வந்தாள் யாழினி!!

அவனைப் போலவே தானும் மிருதுவான குரலில், “இல்லை.. நீ நடிக்குற யாதவ்!! .. பேசாம இந்த பிஸினஸ் எல்லாம் தூக்கிப் போட்டுட்டு.. நீ நடிக்கப் போயிரு!! ..சினிமா உன்னை மாதிரி நல்ல கலைஞர்களை ஏத்துக்கும்..ஆனால் நான் ஏத்துக்க மாட்டேன்..!!”என்றவளின் கண்கள் திரும்பவும் கலங்கிக் கொண்டிருந்தது.

அவன், நிர்மலமான முகத்துடன்.. தன்னைப் பார்த்து முகம் சுளிக்கும் அவள் வதனத்தையே இமைக்காமல் பார்த்திருந்தான் சாம்ராட் யாதவ் மகாதேவன்!!

எல்லாமே கண்ணசைவில் காலடியில் வந்து விழ வைக்கும் ஆண்மகன் அவன்!

ஆயினும் .. இவன் இதயமோ அவள் காலடியில்!!

இதை உணரமறுப்பவளின் விழிகளை வலி நிறைந்த கண்களுடன் பார்த்தவன்,

“என்னோட காதல் உனக்கு வெறுப்பா இருக்கா? .. நான் பட்ற அவஸ்தை உனக்கு நடிப்புன்னு தோணுதா?.. இல்லை நீ தான் புரிஞ்சும், புரியாத மாதிரி நடிக்கிறியாஆஆ?” என்றவனுக்கு தன் காதலை அவளுக்கு உணர்த்தியே ஆக வேண்டும் என்ற ஓர் வெறி முகிழ்த்தது.

அவனுடைய திடாகத்திரமான ஓர் கை அவள் இடையூடு நுழைந்து அவளைப் பற்றி, அவனோடு இழுக்க,

அடுத்த கை அவள் கூந்தல் காட்டுக்குள் நுழைந்து பிடரி மயிர் அளைய,

சட்டென மின்னல் வேகத்தில் அவளது செக்கச் செவேலென்றிருந்த வரண்ட இதழ்களை ஈரமாக்க முனைந்தான் யாதவ்!!

சொற்கள் உணர்த்தாததை.. செயல் உணர்த்தும் என்று உறுதியாக நம்பினான் அவன்!!

அவனது பரந்து விரிந்த மார்புகள் இரண்டும், அவளது மென்மையான பஞ்சன்னத் தனங்களை எதிர்த்து நின்று பொருதிட,

அவளுடைய பாதி திறந்திருந்த மேலுதட்டை அதிரடியாக, அடாவடியாகக் கவ்விக் கொண்டான் யாதவ்!!

அவன் இதழ்களின் ஈரம், இவளது மென்மையான இதழ்களுக்கு ஊடுகடத்தப்பட, அதிர்ச்சியில் அகல விரிந்தன யாழினியின் நயனங்கள்!!

அவள் கைகளோ.. அவனது இரும்புக் கவசம் பூண்டாற் போன்றிருக்கும் வலிமையான மார்புகளை தன்னிலிருந்தும் தள்ளி விட முனைய,

அவன் இம்மியளவும் அசைந்தானா??

கண்கள் மூடி··· முத்த சுகத்தில் திளைத்து காதல் உணர்த்துகிறேன் பேர்வழி என்று அவளைத் திணறடித்துக் கொண்டு தானே இருக்கிறான்? முரடன்!!

கண்களில் நின்றும்.. கோபத்தின் இயலாமையில் கண்ணீர் வழிந்தது அவளுக்கு. ஒரு கட்டத்தில் இதழ்களை அவனிடமிருந்து பிரித்தவள்,

பளாரென்று விட்டாள் ஓர் அறை!!

தி க்ரேட் சாம்ராட் யாதவ் மகாதேவனை அறைந்த முதல் பெண்!! அதுவும் அவன் உயிருக்குயிராக நேசிக்கும் பெண்!!

இனிமை மயக்கத்திலிருந்து வெளியே வந்தவனின் முன்னே.. மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கிய வண்ணம் நிற்கும் தன் ஜானுவின் மிரண்டு போன முகம்!!

அந்த மிரண்ட முகமும், தடித்து சிவந்திருந்த இதழ்களும் அவனை ஏதோ செய்தது.

தன் தவற்றுக்கு இன்ஸ்டன்ட்டாகவே வருந்தினான் அவன்!! அவளுக்கு சமாதானம் சொல்ல அவன் ஓரடி எடுத்து வைக்க, அதற்கும் அரண்டவளாக பின்னாடி போனாள் அவள்.

நின்ற இடத்திலேயே நின்று, கவலை மீதூறும் குரலில், ‘‘ஐம் ரியலி ஸாரி.. நான் உன்னை ஹர்ட் பண்.. ணனும்னு இப்படியெல்.. லாம் பண்ணலை.. இனிமேல்.. உனக்கு விருப்பமில்லாத எதுவும் நடக்காது..

இது உன் வீடு!!.. நீ உன் இஷ்டப்படி இருக்கலாம்.. உன்னோட கரியர்க்கும் நான் தடையா இருக்க மாட்டேன்.. உன் இஷ்டப்படி தொடர்ந்து உன் வேலையையும் செய்யலாம்..’’என்றவன் இருண்ட முகத்துடனேயே கதவு வரை சென்றான்.

கதவுப் பிடியில் கை வைத்தவனாக, அவளைத் திரும்பிப் பார்த்தவன், நம்பிக்கை நிறைந்த குரலில்,

“ஒரு நாள் நீ என் காதலைப் புரிஞ்சுப்ப ஜானு..!!” என்றவன்,

அறையை விட்டும் வெளியே நடந்தான்.

அடுத்த நாள் முற்பகல் வேளை..

அந்தத் தனியார் மருத்துவமனையின் மகப்பேற்று நிபுணரின் கன்சல்ட்டிங்க் அறையில் அமர்ந்திருந்தாள் யாழினி.

பச்சைத் திரையை விலக்கிக் கொண்டு.. கையில் இருந்த உறையைக் கழற்றியவாறே வந்த டாக்டரை நோக்கி,

“டாக்டர்.. நான் நிஜமாகவே ப்ரெக்னன்ட் தானா? குழந்தை வயிற்றுக்குள் இருக்குற எந்த அறிகுறியும் இல்லாமல் மூணு மாசமா ஒரு பொண்ணால்.. குழந்தையை சுமந்திட்டிருக்க முடியுமா டாக்டர்? மோர்னிங்க் சிக்னஸ் என்ட் எந்தவிதமான அலர்ஜீஸூம் எனக்கும் ஏற்படலையே? அது எப்படி?” என தன் ஒட்டுமொத்த சந்தேகத்தையும் கேட்டாள் அவள்.

தான் குழந்தையை சுமப்பதற்கு பின்னாடி.. ஓர் வலிய சூழ்ச்சியொன்று இருப்பதாகவே எண்ணியது யாழினியின் மனம்!!

அதுவும் அந்த சூழ்ச்சிக்கு காரணகர்த்தா சாக்ஷாத் யாதவ் மகாதேவன் என்றும் நம்பியது அவள் மனம்!!

அதை உறுதிப்படுத்திக் கொள்ளத் தான்.. கணவன் வீட்டில் இல்லாத வேளையில் ஹாஸ்பிட்டலை நோக்கி திடீர் விஜயமும் கூட!!

அவள் முன்னாடி.. தன் இருக்கையில் வந்து அமர்ந்தாள் முப்பத்தைந்து, முப்பத்தெட்டு வயது மதிக்கத்தக்க டாக்டர். கமலினி.

டாக்டர்களுக்கே உரிய, ஜீனியஸ் லுக்கைத் தரும் ஸ்பெக்ஸுடனும், இதழ்களில் அரும்பிய மென்மையான புன்னகையுடனும் இருந்தவர்,

“ஆமா யாழினி.. நீ இப்போ மூணு மாசம் கர்ப்பம்!! .. உனக்கு இர்ரெகுலர் மென்ஸ்ட்ரூவேஷன் சைக்கிள் இருக்குறதனால.. கரு தங்கியது உனக்குத் தெரியலை..

என்ட் கரு தங்கியதும் கூட.. உனக்கு இந்த த்ரீ மன்த்ஸா பீரியட்ஸ் வராததுக்கு ஒரு காரணுமுன்னும் உனக்குப் புரியலை..

அநேகமான பெண்களுக்கு மோர்னிங்க் சிக்னஸோ.. வேறு எந்தவிதமான அறிகுறியோ காட்டாமல் குழந்தை தங்குறதுக்கான வாய்ப்பு இருக்கு..!!’’என்று கூற,

தன் அதிர்ச்சியை மறைக்க முடியாமல் அப்பட்டமாகவே அதிர்ந்தாள் யாழினி.

ஆனால் அவளுக்குத் தான் எந்த கூடல் சம்பவங்களும் நடந்தேறியதாக தான் ஞாபகமேயில்லையே?

அவள் அம்னீஷியா நோயாளியும் அல்லவே? கடந்த காலத்தில் சந்தித்த மனிதர்களை, நடந்தேறிய சம்பவங்களை மறப்பதற்கு?

முதலாம் வகுப்பில் கற்பித்த ஆசிரியையைக் கூட நினைவில் வைத்திருப்பவள், யாதவனை மறந்திருக்கவும் கூடுமோ?

பிறகு எப்படி அவள் ஒரு குழந்தையை சுமந்து கொண்டிருக்க முடியும்?

ஒருவேளை ஏதாவது செயற்கை கருத்தரித்தலாக இருக்குமோ? பணபலத்தைக் காட்டி யாதவன் தான் அதை செய்திருக்கவும் கூடுமோ? என்று சிந்தித்தவள்,
உணர்ச்சி வசப்பட்டவளாக, அவசரம் நிறைந்த குரலில்,

“டா.. டாக்டர்.. அ.. அப்படின்னா.. ஒரு ஆணோட ஸ்பெர்ம் ஒரு பெண்ணோட கர்ப்பப்பையில் செ.. செ.. செயற்கை முறையில் செலுத்தப்பட்டு அவள் கக்.. க.. கருத்தரிக்க வாய்ப்பு இருக்கா..?” என்று கேட்டாள்.

அவள் களேபரம் புரிந்தாலும் அமைதியாகவே டாக்டர் பெண்மணியும், பதில் சொல்லலானார்.

“ஆமாம்மா இருக்கு.. ஆனால் அது உன் விஷயத்தில் வர்க் அவுட் ஆகியிருக்காது யாழினி!! செயற்கையான கருத்தரித்தல் முறைன்னா ரொம்ப கேர்புல்லா இருக்கணும்.. அடிக்கடி செக்-அப்புக்கு வந்திருக்கணும் ..

ஏன்னா கொஞ்சம் கேர்லெஸ்ஸா இருந்தால் கூட.. கருக்கலைப்பு நிகழ்றதுக்கான அபாய வீதம் அதிகம்!!..

அதில் நீ வேற ஆர்க்கியோலஜிஸ்ட்!! அகழ்வாராய்ச்சிக்காக பல இடங்களுக்கு போகணும்.. மேடு, பள்ளம் பார்க்காமல் இறங்கி வேலை பார்க்கணும்..!!

இது செயற்கை முறையில் நடந்த கருத்தரித்தல்னா எப்போவோ உனக்கு அபோர்ஷன் ஆகியிருக்கும்!!..

இப்போ வரைக்கும் குழந்தை.. உன் கிட்ட பாதுகாப்பா இருக்குன்னா.. கண்டிப்பா இது நேச்சுரல் இன்டர்கோஸ்னால வந்த குழந்தை தான்..!!''என்று டாக்டர் அவர் தலையில் கல்லைத் தூக்கிப் போட நிலைகுலைந்து போனாள் யாழினி!

``எ.. எ.. என்ன டாக்டர் சொ.. சொல்றீங்க?''- திக்கித் திணறி வெளிவந்தது அவள் குரல்!!

அவளது அதிர்ச்சி, கவலை எல்லாவற்றையும் டாக்டர் நிர்மலமான முகத்துடனேயே கடந்தார்.

அவருக்குத் தான் இந்த மாதிரியான அதிர்ச்சி நிறைந்த முகங்கள் பழக்கப்பட்டனவாயிற்றே?

அதனால் யாழினியின் உள்ளக்கிடக்கையினுள் அடித்துக் கொண்டிருக்கும் எண்ணவலைகளை டாக்டர் அறிந்திருக்க வாய்ப்புமில்லை.

அவரோ தீர்க்கமான கண்களுடன் அவளை நோக்கி, ‘‘ஆமா.. இது இயற்கையான தாம்பத்தியம் மூலம் வந்த குழந்தை தான்..!!’’ என்று சொல்ல, ஏசியூட்டப்பட்ட அந்த அறையிலும் நெற்றியெங்கிலும் குபுக்கென வியர்க்கவாரம்பித்தது யாழினிக்கு.

அப்படியானால் யாதவன் சொன்னது அனைத்தும் உண்மையா? அவனும், அவளும் உடலளவில் இணைந்து செய்த பிழையால் விளைந்த குழந்தையா இது?

அவள் கைகள் முதன் முறையாக குழந்தையின் இருப்பை உணர்ந்தது போல.. அவளுடைய வயிற்றை மென்மையாகத் தடவிப் பார்த்துக் கொண்டன.

இது மட்டும்.. டாக்டர் சொல்வது போல இயற்கையாக வந்த குழந்தை என்பது உண்மையானால், அவனிடமிருந்து கழன்று கொள்வதற்கு தடையாக இந்தக் குழந்தை அமைந்து விடும்!!!

இந்தக் குழந்தையைக் காரணம் காட்டி, 'கணவன்' என்ற உரிமையை அவன் தக்க வைத்துக் கொண்டால்?

எதிர்காலம் பற்றிய பொல்லாத சிந்தனைகளில் இருந்து வெளியே வந்தவள், டாக்டரை நோக்கி,

"நோ டாக்டர்!! .. எனக்கு இந்தக் குழந்தை வேணாம்!!.. இந்தக் குழந்தை எப்படி வந்ததுன்னே எனக்குத் தெரியலை??.. எனக்கு இந்தக் குழந்தை வேணாம்!!."என்று தன்னிலை மறந்தவளாகக் கத்த,

சற்றும் எதிர்பார்த்திராத விதமாக, டாக்டர் அறையின் கதவை சடாரென திறந்து கொண்டு ஆவேசத்துடன் உள்நுழைந்தது ஓர் ஆறடி உருவம்!!

அதன் கண்கள் பதற்றத்துடனும், பரபரப்புடனும் அறையில் இருந்த அனைத்துப் பொருட்களையும் ஆராய்ந்து விட்டு.. இறுதியில்,

நாற்காலியில் அமர்ந்திருந்த தன் மனைவியின் முகத்தில் நிலைத்து நின்றது.

அந்தக் கண்களில் துளிர்த்த உச்சபட்ச சீற்றத்துக்கு சொந்தக்காரன் அவன்!! சாம்ராட் யாதவ் மகாதேவன்!!

இன்று முக்கியமான வர்த்தக கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, ஹில்டன் ஹோட்டல் வளாகத்தில் காத்திருந்தவனுக்கு,

மனைவி தனியாக.. அதுவும் அவன் நியமித்திருக்கும் டிரைவரின் துணையின்றி தனியார் மருத்துவமனைக்கு சென்றிருப்பது..

அவன் வைத்திருக்கும் ஒற்றர்கள் மூலம் தெரிய வர, கூட்டத்தை இரத்து செய்து விட்டு,

மருத்துவமனைக்கு விரைந்து வந்திருந்தான் அவன்.

டாக்டரின் அறையில் வைத்து யாழினி பேசிய பேச்சுக்கள் ஒவ்வொன்றும், அவன் காதில் விழுந்து தொலைக்க, அவன் தாண்டவம் ஆடாத ருத்ரனாகவே மாறிப் போயிருந்தான்.

கணவனின் வருகையும், அவன் கண்களில் தெறித்த ரௌத்திரமும் ஏனோ அவளை நிலை குலையச் செய்ய,

குற்றவுணர்வுடன் மெல்ல இருக்கையை விட்டும் எழுந்தாள் யாழினி.

அவள் இதயத்தைத் திடுக்கிடச் செய்யும் வண்ணம், கேட்டது அவன் குரல்!

கை முஷ்டியை இறுக்கிக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு, இரைந்த குரலில்,

“யாழினீஈஈஈ.. என் க்குழந்தையை என் அனுமதியில்லாமல் அழிக்கணும்னு த்துணிஞ்சிட்டியாஆஆ?”என்று அவன் கேட்ட தினுசில்,

தைரியமான பெண்ணான யாழினிக்கும் தூக்கி வாரிப்போடவே செய்தது.

அவன் இருந்த கோபத்தில்.. அவனுடைய திண்ணிய புஜங்கள் ஏறி இறங்க அவன் நின்றிருப்பது போர்க்களத்தில் சினம் மாறாமல் நின்றிருக்கும் யாராலும் வீழ்த்த முடியாத ஓர் போர்வீரனின் கோபத்தை ஒத்திருந்தது.

அழுத்தமான காலடிகள் எடுத்து வைத்து.. அவளை நோக்கி வந்தவன்,

அவள் விழிகளை சீற்றம் கமழப் பார்த்தபடி,

“என்ன நடந்தாலும் சரி.. நம்ம ம்முதல் க்குழந்தையை ந்நீ பெத்துக்கத் தான் ப்போற!!!..”என்றவன், அவளுடைய முன்னங்கையை அழுத்தமாகப் பற்றியபடி அழைத்துச் செல்ல,

வேண்டாத கணவனேயானாலும், அவளே அறிந்திராத வழியில் அவன் தந்த குழந்தையை.. அழிக்கவென அவன் எடுத்த முடிவு தப்பு தானோ? என்றே தோன்றியது.

அவன் இருக்கும் கோபத்தில் வீட்டுக்குப் போனதும் என்னென்ன நடந்தேறப் போகிறதோ? என்ற சின்னவொரு கலக்கம் மீதூற,

அவனுடன் வண்டியில் வீடு நோக்கிப் பயணப்பட்டாள் ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினி!!

காரின் ஸ்டியரிங் வீலில் அவன் காட்டிய அழுத்தத்தில், அதன் விளைவாக விளைந்த வேகத்தில்.. கூடிய சீக்கிரமே வீடும் வந்தது!!

அவனது அறை வரை தரதரவென அவளை இழுத்துக் கொண்டே வந்தவன், அறையின் நடுக்கூடத்தில் தன் மனைவியை விட்டு விட்டு,

அழுத்தமான காலடிகளுடன் முன்னோக்கி வர, கணவனின் சீற்றம் மிகுந்த விழிகளையே மருள மருளப் பார்த்திருந்தது ஓர் குழந்தையை சுமந்திருக்கும் வளர்ந்த குழந்தை!!

அவன் குழந்தையை அழிக்க எண்ணம் பெற்றதும் தப்பு என மனம் வலியுறுத்திச் சொல்ல,

நேற்றிரவு வரை இருந்த வாயாடல்கள் எல்லாம் எங்கேயோ ஒழிந்து கொண்டது அவளுக்கு.

அசுரவேகத்தில் அவளை நோக்கி வந்தவன், ஆத்திரத்தில் அடிப்பான் என்று எதிர்பார்த்திருக்க, அவனோ

சட்டெனத் தன் இதயக்கூட்டுக்குள் அவள் தலை சாய்த்து.. அவளை இறுக்கி அணைத்துக் கொண்டான்.

வலிய தேகம் வாய்க்கப் பெற்ற கணவன்..உள்ளே நடுங்கிக் கொண்டிருப்பது அப்போது தான் புரிந்தது யாழினிக்கு.

அவன் நடுக்கம் ஏதோ செய்ததை அவளை. முதன்முறையாக எந்தவித திணறலும், மறுப்பும் இல்லாமல்… கணவனின் அணைப்பில் பாந்தமாக அடங்கி நின்றாள் யாழினி!

கலங்கிய விழிகளுடன், அவள் கையெடுத்து தன் இதயத்தில் வைத்தவன்,

“என் இதயம் எப்படி தாருமாறா துடிக்குது பாரு.. என் குழந்தையை நீ சுமந்திட்டிருப்பது

தெரியாமல்.. ராம் கூட ஃபோன் பேசிக்கிட்டே.. அன்னைக்கு ஆக்ஸிடெண்டாக பார்த்தப்போவும் இப்படித் தான்.. தாருமாறா துடிச்சது…

இப்போ இன்னைக்கு என் குழந்தையை தெரிஞ்சே.. நீ அழிக்க ட்ரை பண்றப்போவும் இப்படி தான் துடிக்குது யாழினி..!!” என்று சொல்ல,

அவன் மார்பில் பதிந்திருந்த அவள் கை.. ஏதோ காந்த சக்தியைத் தான் பெற்றதுவோ?

அப்படியே வைத்த கை வைத்த கையாக இருக்க, கணவனின் இதயத் துடிப்பின் எகிறலை பதற்றத்துடனேயே உணர்ந்து கொண்டிருந்தாள் அவள்.

அவளிரு கன்னத்தைத் தாங்கியவன், காதல் இழையோடும் ஹஸ்கி குரலில், “எனக்கு என் குழந்தை வேணும் ஜானு!!.. எனக்கு நம்ம குழந்தை வேணும்..!!” என்றுரைக்க,

முதன்முறையாக அவன் துணுக்கம், கண்களின் பரபரப்பு, கவலை மேலோங்க கணவனின் விழிகளைப் பார்த்தபடி நின்றிருந்தாள் யாழினி!!

தன் வயிற்றில் வளரும் குழந்தைக்காக அவன் துடித்த துடிப்பு, அலறல், கண்ணீர் எல்லாம்··· கொஞ்சம் கொஞ்சமாக உருக்குலைத்துக் கொண்டிருந்தது அவளை!

அந்த விழிகள்!!.

அருகாமையில் அவள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கும் கணவனுடைய கலங்கிய விழிகள்!!

அது எங்கேயோ பார்த்த ஞாபகத்தைக் கொடுப்பது போல இருக்கவே, கலக்கமுற்ற அந்த விழிகளை விட்டும் கண்ணெடுக்க முடியாமல் நின்றாள் சுந்தரப் பெண் யாழினி!!

அத்தியாயம் 9

அன்றிரவு, அவன் மீண்டும் அறைக்கு வந்த போது.. மஞ்சத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் அவன் மனைவி!!

அவன் அறையை விட்டும் நீங்கியதும், அலுப்பு தீர குளித்திருப்பாள் போலும், எந்த விதமான அலங்காரங்களும் இல்லாமல் மென்மையாக இருந்தது அவள் மதிவதனம்!

மெல்ல, அரவமே எழுப்பாமல் நடந்து வந்த மன்னவன், அமைதியாக தன் பட்டத்து மகிஷியின் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

அவனுக்கு புறமுகிட்டுப் படுத்திருந்தவள், தன் கார் மேகக் கூந்தலை, தலையணையில் பரப்பிப் படுத்திருந்தமையானது, யாதவனின் கண்களை இரசனை பாவத்துடன் மிருதுவடையச் செய்தது.

‘சயனிக்கும் புத்தர் சிலை போல’ உள்ளங்கையில் தலை தாங்கிப் படுத்த யாதவன், தன்

வெண்ணிலவைக் காதல் கமழும் கண்களுடன் நோட்டம் விட ஆரம்பித்தான்.

ஆண்மகன் அவனுள்ளும் உணர்ச்சிகள் கரைபுரண்டு ஓட, அவளது கூந்தல் காட்டுக்குள் தன் முகம் புதைத்து, அவள் வாசத்தை தன் நாசியில் சிறை பிடித்தான் யாதவன்!!

அவனுடைய திடகாத்திரமான கையோ அவள் வயிற்றோடு கையிட்டு மென்மையாக, அவளை அணைத்துக் கொண்டது.

குளித்து விட்டு, வாட்ரோப்பில் இருக்கும் அவன் தன் மனைவிக்காவென்றே வாங்கி வைத்திருக்கும் நைட்டியை அணிந்தவாறே··· நன்றாக அயர்ந்து தூங்கும் அவள்!!

அந்த இரவின் குளிரில்.. வெண்மையான கன்னங்கள் இளஞ்சிவப்பு நிற ஸ்ட்ராபெர்ரிக் கன்னங்களாக மாறியிருந்த அதிசயத்தைக் கண்ட..

இவனின் இதழ்களுக்கோ.. அந்தக் கன்னங்களைத் தாவிக் கடிக்க வேண்டும் என்ற உந்துதல் உண்டாயிற்று.

தன்னவள் தூக்கம் களையக் கூடும் என்பதற்காக, ஆசைகளை அடக்கிக் கொண்டான் அவன்.

கையை அணையாக இட்டு.. தூங்கும் சுந்தரப் பெண்ணை சிறை பிடித்தவன்,

அவளது காதோரம் கிசுகிசுப்பு மூட்டும் தொனியில், ‘‘நான் யாருன்னு உண்மையை சொன்னால்.. நீ ஏத்துப்பியா?’ன்னு தெரியலை ஜானு..’’என்றான்.

அவளோ கணவனின் மொழிகளுக்கு எந்தவிதமான துலங்கலையும் காட்டாது அமைதியாகப் படுத்திருக்க, இவனோ தொடர்ந்து சொன்னான்.

அவனுடைய இடக்கை.. அவள் கன்னத்தை மறைத்துக் காதோரம் தவழ்ந்த முடி அதனை.. இவன் மென்மையாக அப்புறப்படுத்தியவனாக,

‘‘என் கூட பாக்ஸிங் பண்ணுற மாதிரி வாயாடிட்டு…இப்போ ஒண்ணுமே தெரியாத அப்பாவி

மாதிரி தூங்குறதைப் பாரேன்.. உன்ன்ன்ன்ன்னனனன அப்படிய்ய்யேஏஏஏ…” என்று கண்களில் உணர்ச்சிகள் பொங்கக் கூறியவன்,

அவள் பட்டுக் கன்னத்தில் முத்தமிட தொடங்கிய போது, சற்றும் எதிர்பார்க்காத வண்ணம்,

சடாரென அவனை நோக்கித் திரும்பினாள் அவன் மனதைத் திருடிய பெண்.

கொஞ்சம் தடுமாறிப் போனான் மனதைப் பறிகொடுத்த திடகாத்திரமான வாலிபன்!!

அவள் இன்னும் துயின்று கொண்டு தான் இருந்தாள். இருப்பினும் அவன் இதழ்களும், இவள் இதழ்களும் நூலளவு இடைவெளியில் சந்தித்துக் கொண்டன.

பிறந்த குழந்தை போன்ற கள்ளங்கபடமேயற்ற மிருதுவான அவள் முகத்தில் தன்வசம் இழந்தான் யாதவ்.

அவள் மூச்சுக்காற்று இவன் நுரையீரலை அடைய, தன் மூச்சுக்காற்று அவளைத் தீண்டினாலும் கூட,

‘எங்கே அவள் துயில் களைந்து விடுமோ?’ என்று தோன்ற, மூச்சு விட மறந்து கல்லென சமைந்தான் யாதவ்.

ஏற்கனவே மனைவியின் அருகாமையில் வெந்து தணியும் ஆண்மகன் அவன்.

பாவம், யாதவன்!! இந்தக் காதல் கடவுள் மன்மதனும் இவனை அன்றிரவா சோதிக்க வேண்டும்?

அவனுடைய உணர்ச்சிகளுக்கு சோதனையாக, திடீரென்று அவள் கைகள் அவன் பின்னங்கழுத்தோடு.. பாம்பு போல சுற்றி வளைத்து,

தன் மார்போடு இழுத்து அணைத்துக் கொள்ள, அவளது அதிரடித் தாக்குதலை கிஞ்சித்தும் எதிர்பாராதவன், அவள் நெஞ்சோடு புதையுண்டு போனான்.

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

ஒரே நேரத்தில் சுகமான அவஸ்தையை அனுபவிக்கலானான் யாதவ்.

அவன் நாசி.. அவளுக்கு அவளுக்கேயென்றிருக்கும் பிரத்தியேக மணத்தை நுகர, நெஞ்சுக்குழியிலேயே மாண்டு போகவும் ஆசை கொண்டான் மன்னவன்.

எப்போதும் தலையணையை அணைத்து உறங்கிப் பழக்கப்பட்டவள், தன் கணவனையும் தலையணை என்றெண்ணிக் கொண்டாளோ? .

இதற்கும் மேலாக… அவள் கால்களோ அவன் கால்களைச் சுற்றிக் கொள்ள,

மனதுக்குள், ‘பத்திரம்..நம்ம குழந்தை ஜானு’ என்று தோன்றினாலும் கூட, அவள் பஞ்சன்ன மேனி தந்த சுகம் சத்திரியனையும் கிறங்கடிக்க இதழ்கள் கம்மென ஒட்டிக் கொண்டன.

எப்பேர்ப்பட்ட வீரனும் சரி.. முனிவரும் சரி.. பெண் முன்னால் கோழைகள் தானே?

அந்தப் பாரிய கண்ணாடிச் சாளரங்கள் தாண்டி வந்து விழுந்தது சூரியக்கதிர்கள்.

முகத்திலேயே அடித்த சூரியக் கதிர்களின் வெம்மை தாங்க மாட்டாது,

துயில் களைந்து, கண்களை சுருக்கிக் கொண்டு எழுந்தவள், முதன் முதலாக உணர்ந்தது..

தன் இடையோடு இறுக்கிப் பிடித்திருக்கும், முறுக்கேறித் தெரிந்த வலிய திண்ணிய கையின் தழுவல்!!

கூடவே, அவள் காதோரம் 'புஸ் புஸ்' என்று மூச்சு விடும் சர்ப்பத்தின் அரவம் போன்ற ஓர் சத்தம்!

மெல்ல தலை திருப்பிப் பார்த்த யாழினி அதிர்ந்தாள்.

அங்கே அவள் இதழ்களுக்கு, சரி நேராக அவன் இதழ்கள் இருக்க.. கண்கள் மூடி ஆழ்ந்த நித்திரையில் இருந்தான் அவள் கணவன்.

அதிர்ச்சி தாளமாட்டாமல், அவன் கையை விலக்கிக் கொண்டே எழுந்தவள், ‘‘ஆஆஆஆஆ!!!!’’ என்று கத்த,

அரைகுறையாக தூக்கத்தில் இருந்தவனும், பதற்றத்துடன் கண் விழித்து, ‘‘என்னாச்சு ஜானு? என்ன?ஆஹ்? வாட் ஹேப்பன்ட்?’’ என்று, தன் அழகிய ஜானுவின் கைச்சந்தினைப் பற்றியபடி கேட்டான்.

அறைக்குள் ஏதாவது விஷ ஜந்துக்கள் தான் நுழைந்து விட்டதோ? மனைவி அப்படி எதைக் கண்டு தான் பயந்தாளோ? என்ற எண்ணம் அவனுக்குள்!!

ஆனால் மனைவி பயப்பட்டதே தன்னைக் கண்டு தான் என்பதை அவன் ஏனோ அப்போது அறிந்திருக்கவில்லை.

தன்னைப் பற்றிய அவன் கைகளை உதறிக் கொண்டு எழுந்தவள்,

அவனை சுட்டு விரலால் சுட்டிக் காட்டி, ‘‘நீந்.. நீ எப்படியிங்கே..?’’என்று திக்கித் திணறிக் கேட்டாள்.

மனைவியின் அச்சத்திற்கு காரணம் சரிவரப் புரியாத யாதவனும்,

‘‘ஜானு.. திஸ் இஸ் மை ரூம்!!..என் ரூம்ல.. நான் இருக்காமல்..’’ என்று பேசிக் கொண்டே போனவன் சட்டென பேச்சை நிறுத்தினான்.

ஒருவேளை நம்மிருவருக்கும் நிகழ்ந்த திருமணத்தை, தூக்கத்தின் உச்சத்தில் மறந்து விட்டாளோ? அதனால் தான் அவனைக் கண்டதும் அப்படியொரு கேள்வியும் கேட்டாளோ என்று எண்ணிக் கொண்டவன்,

முரட்டு அதரங்கள் குவிய ‘‘ஓ!!.. நீ இப்போ என் வைஃப்.!!’’என்று அனைத்தையும் தெளிவுறுத்த நாடினான் யாதவ்.

அவளுக்கோ, அவன் எப்படி தன் பக்கத்தில் வந்து உறங்கினான்? என்பதை நினைக்க நினைக்க, உடலின் நடுக்கம் கிஞ்சித்தும் குறைந்த பாடில்லை.

அந்த நடுக்கத்துடனேயே அவள்,

“அது எனக்கும் தெரியும்.. நீ தான்.. ப்.. ப்பெ.. ரிய.. இ.. இவ்வ்.. வன்.. மாதிரி, ‘அது இது’ ன்னு வசனம் பேசிட்டு வெளியில் போயிட்டியே? .. அப்புறம் எப்படி?.. ந்நீ.. ந்நீ எ··· என்··· ப்பக்கத்துல வந்த?”என்று கேட்டாள்.

மனைவியின் அச்சமொழிகள் கேட்டு, அவன் முகத்தில் மெல்லிய அரும்புநகையொன்று பரவியது.

“நான் பக்கத்துல வந்து படுத்ததுக்கே இப்படி அலர்றீயே?.. நேத்து நடந்தது எல்லாம் தெரிய வந்துச்சுன்னா..?ஆஹ்? அப்போ என்ன பண்ணுவ?”- நாக்கு நுனியால் உள்க்கன்னத்தை உப்பச்செய்த வண்ணமே, அவளைப் பார்த்து விஷமமாக புன்னகைத்தவன்,

கைகள் கோர்த்து நெட்டி முறித்த வண்ணமே கேட்டான்.

அவளுக்கோ கணவனின் சொற்கள் கேட்டதும் உள்ளூற ஓர் பதற்றம் தோன்றலாயிற்று.

சட்டென தன் நைட்டி வழியாகத் தெரிந்த, மார்பின் மேல் பாகத்தினை இரு கைகளாலும் அணைத்துக் கொண்டவள், கணவனை கன்னக்கதுப்புக்கள் இரண்டும் கோபத்தில் செம்மை கொள்ள முறைத்துப் பார்த்தாள்.

"எ..என்ன..என்ன? என்ன நடந்தது? சொல்லு? நேத்து தூங்கிட்டிருக்கும் போது என்ன நடந்தது?"- கண்களை அகல விரித்துக் கேட்டவளிடம், பொறுமை துளியளவும் இல்லவே இல்லை.

அவனோ ஏதும் பேசாமல் , குளியலறை பக்கம் விரைய, தன்னை மதிக்காமல் செல்லும் கணவன் மேல் சுருசுருவென கோபம் பொங்கியது அவளுக்கு.

குளியலறை நோக்கி விரையும், கணவன் பின்னாலேயே நாய்க்குட்டி போல விரைந்தவள்,

உச்சஸ்தாயியில், "ந்நாஆஆன் உன் கிட்ட தான் கேட்குறேஏஏன்!!.. சொல்லு என்ன நடந்தது? எதுவும் தப்பா நடக்கலையே..?"என்று கேட்டுக் கொண்டே குளியலறை உள்ளே வரை போனாள்.

மனைவியின் குழந்தைத் தனமான செய்கையில் காலையிலேயே, அவன் இதழ்கள் எக்ஸ்ட்ராவாக மலர்ந்திருந்தாலும்,

தான் நகைப்பதை அவளிடம் காட்டிக் கொள்ளப் பிரியப்படவேயில்லை!! கள்வன்!!

அவனோ, ஷவர் இருக்கும் சின்ன அறைக்குள் நுழைந்தவன், அவளை நோக்கித் திரும்பி,

“நீ என் பொண்டாட்டி யாழினி!! .. என் குழந்தை வேற நீ சுமந்துட்டிருக்க!! எனக்கும், உனக்குமான பந்தம் ரொம்ப உறுதியானது··· நான் என் மனைவியான உன் கிட்ட நெருங்கினால் அது தப்பு கிடையாது.. அது உரிமை..!!”என்றான் அவன்.

அவனது பேச்சுக்கள் வேறு.. அவளை துணுக்கமுறச் செய்ய, காற்றைப் பிடித்து இரு கைகளால் இறுக்கியவள், சீற்றத்துடன்,

“க்ர்ர்.. பேச்சை மாத்தாதே!!இந்தக் குழந்தை எப்படி வந்துச்சுன்னே எனக்கு தெரியலை.. அதில் நீ இன்னமும் என் கிட்ட அத்துமீறி நடக்குறதை நான்

அனுமதிக்க மாட்டேன்.. சொல்லு எதுவும் நடக்கலைல?”என்று களேபரத்துடன் கேட்டாள்.

அவனோ தற்போது சுவரில் சாய்ந்து , மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிய வண்ணம் நின்று, அழகாக ஒற்றைப் புருவம் உயர்த்தி,

“நடந்தது என்னான்னு சொல்லணுமா?” என்று ரொம்ப ரொம்ப கூலாகக் கேட்டான்.

“ம் ஆமா” - அவனைப் போலவே தானும் ஸ்டெடியாக கை கட்டி நின்று, உறுதியாகச் சொன்னாள் இவளும்.

இவன் முன்னாடி தைரியமாக நின்று கேள்விக்கு பதில் கேட்கும் ஒரு பெண்!! அதுவும் ஒரே பெண்!!

அடுத்து, தன் முன்கோபக் குயிலுக்குள் நிகழப் போகும் முகபாவ மாற்றங்களை உள்ளுக்குள் கற்பனை செய்தவனுக்கு,

தானாக மலர்ந்தது இதழ்க்கடையோரம் ஓர் சிரிப்பு.

அவள் அந்த சிரிப்பைக் கண்டாளேயானால் மீண்டும் இதழ்களைச் சுளித்துக் கொள்ளக் கூடும் என்று தோன்ற, கடினப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டான் யாதவன்.

பிறகு அவளை நோக்கி, சற்று முன்னே சாய்ந்து, ஹஸ்கி குரலில்,

“தென் கோல் மீ “ஹனி பியார்” என்ட் சே “ப்ளீஸ்ஸ்ஸ் நேத்து ராத்திரி என்ன நடந்ததுன்னு சொல்லு” ன்னு கேளு சொல்றேன்..” என்று யாதவ் வேறு அவளைப் போல கொஞ்சம் நளினமாகப் பேசிக் காட்ட சுரீரென பொங்கியெழுந்தது அவளுள் கோபம்.

என்ன? அவள், அவனை ‘ஹனி பியார்’ என்று கூப்பிட வேண்டுமா?

அவளுக்கு கோபம் போன விதத்தை.. உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்த அவன் பெண்மைக் கோளங்கள் பறைசாற்ற, கள்ளத்தனமாக உள்ளுக்குள் அதை இரசித்துக் கொண்டிருந்தான் அவன்.

“ம்முடியாது!!..”-ஸ்தீரமாக மறுத்தாள் பெண்.

“ம்.. அப்போ நானும் சொல்ல முடியாது!!”-விஷமச்சிரிப்பை மறைத்தவனாக அஸால்ட்டாக சொன்னவன், ஷவர் ரூமின் கதவை இழுத்து மூடினான்.

“ய்ய்யாஆஆதவ்!!..”-தனக்கு ஓர் முடிவான பதில் சொல்லாமல் கதவை மூடும் அவன் மேல் பொல்லாத கோபம் எழ, சின்னக் குழந்தைகள் போல சிணுங்கிக் கத்தினாள் யாழினி.

ஒரு சில நாழிகைகளுக்குப் பின், இழுத்து மூடப்பட்ட கதவுகள், மீண்டும் திறந்தன.

இரு கதவு முனைகளையும் பிடித்த படி, வெற்று மார்புடன், இன்டர்நேஷனல் மாடல் போல நின்றிருந்தான் அவள் கணவன்!!

முதன் முறையாக கணவனை வெற்று மேனியுடன் பார்த்தவளின் இதழ்கள் அப்படியே ஒட்டிக் கொண்டன;அவளுள் ஏற்பட்ட அதிர்ச்சியின் விளைவாக உள்ளிழுத்த மூச்சும் வெளிவர மறுத்தது.

கார் மேகத்தை வெட்டி செய்தாற் போன்றிருக்கும் அலை அலையான அழகிய சிகை!

மலைகளின் இடுக்கிலிருந்து சூரியன் உதிக்கும்!! ஆனால் என்ன ஆச்சரியம்?

அடர்ந்த மலைப்பாங்கான புருவங்களின் கீழிருந்து இரு சூரியன்கள் உதிக்கின்றதனவே?

அவை இவனது சூரியக் கண்கள்!!

சூரியனின் கண்களில் இருந்து வரும் கதிர்கள் தாள மாட்டாமல் நின்றாள் சூரியனின் மனைவி உஷை!

அருகருகே இரு மலைகளை வைத்தாற் போன்றிருந்த அவனது திண்ணிய புஜங்கள்!!

யாழிரண்டைப் பூட்டி செய்தது போல இருக்கும் அவன் திண்ணிய மார்புகள்!!

அந்த மார்புகளில் நேற்றிரவு கை வைத்து யாழ் மீட்டிய ஞாபகம் தோன்ற.. உள்ளுக்குள் ஏதேதோ

தோன்றக் கூடாத உணர்வுகள் தோன்றுவது போல இருந்தது யாழினிக்கு.

ஜிம்மிலேயே பாதி நேரம் கழித்திருக்கிறான் என்பதை பறை சாற்றும் தசைகள் சீராகத் தெரியும் வயிறு!

அந்தப் பக்கத்திலிருந்து பாதிக்கதவு வழியாக, தனக்கே தனக்கென்று பிரம்மன் படைத்த சுந்தரப் பெண்ணின்,

தன்னை இரசிக்கும் கண்களை இரசித்துக் கொண்டே, “டூ யூ வொன டேக் அ ஷவர் வித் மீ? கமான்” என்றவன் அவளைப் பிடித்திழுக்க,

அவனது வன்மையான மேனியுடன் ‘பச்சக்’ என்று மோதிக் கொண்டது இவளது மென்மையான மேனி.

கணவனின் அதிரடியில் நிமிடத்துள் தானும் ஷவருக்கடியில் நிற்பது கண்டு, செய்வதறியாது விழித்தாள் யாழினி.

ஒற்றைக்கையால் கதவை சாத்தியவன், அவளுக்கு இருபுறமும் அணைகட்டி நின்றான்.

அவன் எப்போதும் உபயோகப்படுத்தும் பாடி பர்பியூமுடன், அவன் வியர்வை மணமும் இணைந்த.. ஒரு வித புதுமையான மணம் அவனது உடலிருந்து வீச,

அந்த வாசம் அவளை ஏதோ செய்தது.

எங்கேயோ இந்த மணத்தை அவள் நாசி நுகர்ந்திருப்பது போல ஓர் பிரம்மை எழுந்து கொண்டே இருந்தது அவள் ஆழ் மனதுக்குள்.

மன்மதனின் காதல் கொண்ட முரட்டு இதழ்கள், ரதியின் இதழ்களைச் சிறுகச் சிறுக நாடி வந்த வேளை, அவள் தன் சுயம் இழந்தாள்.

அந்த இதழ்கள், அதன் ஈரம் தோய்ந்த உதட்டு வரிகள்.. தன்னை அணைக்கட்டி நின்றிருக்கும் அவன் கைகள்.. எல்லாமே.. எல்லாமே.. எங்கேயே பார்த்த.. அனுபவித்த உணர்வு!!

ஆரிய உதடுகளும், திராவிட இதழ்களும் இரண்டறக் கலக்க நூலளவு இடைவெளி இருந்த வேளை,

காதோரம் அனிச்சையாய் ஒலித்தது சித்தரின் குரல்!!

"காதல் பிறப்பதும், இறப்பதும்

பிறந்திடாதிருப்பதும்,

அதை மறப்பதும், நினைப்பதும்

மறந்ததைத் தெளிந்ததும், துறப்பதும்,

தொடுப்பதும் மன்னவனோடு நீ

இரண்டறக் கலப்பதும் எல்லாம் அவன் செயலே!" என்ற சித்தரின் சொற்கள் அவை!!

அந்தச் சொற்களின் பிரம்மையில், மன்னவன் மேல் அவள் வைத்திருந்த பிரேமையில் இருந்து, ஒரு

வகையான மாய ஈர்ப்பிலிருந்து வெளியே வந்தாள் யாழினி.

அவனுடைய முரட்டு தாடையை, கைகளால் பற்றித் தள்ளி விட்டவள், ‘‘எனக்கு இது பிடிக்கலை.. நா.. நான் போகணும்!!’’என்று அவன் விழிகளை சந்திக்காமல் தரை பார்த்துச் சொன்னாள் பெண்!!

அவன் புருவங்கள் இரண்டும் ஒரு நிமிஷம் இடுங்கியது. பின் அவை பழைய நிலையை அடைய, அவனுடைய கைகளை மெல்ல விடுவித்த யாதவ்,

‘‘சரி··· போ’’ என்று மட்டும் சொன்னான்.

இதழ்கள் நூலிழையளவு நெருங்க அனுமதி கொடுத்தவள், நிச்சயம் அவன் காதல், அவள் இதயம் புகவும் அனுமதி கொடுப்பாள் என்ற நம்பிக்கை வந்தது அவனுக்கு.

தன்னுடைய அரண்மனை போன்ற வீட்டில், காலை வேளையில், தான் விளையாடுவதற்காகவென்றே அவன் கட்டியிருந்த,

ஸ்னூக்கர் அறையில்.. ஸ்னூக்கர் விளையாடிக் கொண்டிருந்தான் யாதவ்.

அந்த அறை எங்கிலும் மயான அமைதி நிலவிக் கொண்டிருக்க, இடையிடையே ஸ்னூக்கர் பந்துகள் ஒன்றுடன் ஒன்று இடிபட்டுக் கொள்ளும் கோர ஒலி மட்டும் அவ்வறையின் அமைதியை அவ்வப்போது குலைத்துக் கொண்டிருந்தது.

அந்த நேரம் அவ்வறைக்குள் உரிமையுடன் நுழைந்தான் யாதவனின் நண்பன் விக்னேஷ்!!

கறுப்பு நிற பேன்ட்டும், பிளேஸரும் என பார்ப்பதற்கு பக்காவாகவே இருந்த விக்கி, அறைக்குள் நுழைந்த போதே.. நண்பனின் முகத்தை நன்கு எடை போட்டுக் கொண்டான்.

நண்பன் யாழினியைக் கரம் பிடித்த போது அவன் ஊரில் இல்லை தான். இருப்பினும் யாதவனின் திடீர் திருமணம் அவன் அறிந்தே வைத்திருந்தான்.
கல்யாணத்தின் பின்பு, யாதவனின் முகம் என்றுமேயில்லாத சூரியனைத் தோற்கும் பிரகாசத்துடன் மிளிர்ந்து கொண்டிருப்பதை அவதானித்தவன்,

நண்பனை நோக்கி நடந்து வந்து கொண்டே, கலாய்க்கும் குரலில்,

“என்ன மச்சி?.. மூஞ்சி பல்பு போட்ட மாதிரி.. இப்படி ஜொலிக்குது.. நேத்து நைட்.. ம்ம்.. ஹ்ம்?” என்று ஒருமாதிரி முணங்கும் ஒலியுடன், யாதவனின் தோளை இடிக்க,

கடைசியாக அவன் குறி பார்த்து அடித்த கறுப்புப் பந்து குழிக்குள் விழாமல் மிஸ்ஸாகிப் போனது.

விக்னேஷின் செயலில் கடுப்பு மிகுந்தாலும், “ப்ம்ச்” என்ற சலிப்புடன் நண்பனை நோக்கி நிமிர்ந்தவன்,

“நீ நினைக்குற மாதிரி எதுவும் இல்லை.. பட் அவள் பக்கத்திலிருக்கும் போது சந்தோஷமா இருக்குடா..”என்றான் தன் முத்து மூரல் பற்வரிசையைக் காட்டி.

அதன் பிறகு மீண்டும் யாதவன் கடைசிப் பந்துக்கு குறி வைக்கப் போக விக்னேஷ் தொடர்ந்தான்.

“மச்சி.. யூ ஷூட் மேக் என் அன்னௌன்ஸ்மன்ட்.! இப்போதைக்கு க்ரான்ட் ஃபங்ஷன் இல்லைன்னாலும்.. அட்லீஸ்ட் ஒரு சின்ன ஃபங்ஷனாச்சும் வைக்கலாம்ல?” என்று யாதவனின் திருமணத்தை ஊரறிய சொல்லும் படி ஆலோசனைக் கூறினான் நண்பன்.

இறுதிப் பந்தை அட்டகாசமாக, குழிக்குள் போட்டு முடித்தவன் ஸ்டிக்கை செங்குத்தாக நிறுத்தியவாறு நண்பனைப் பார்த்தான்.

பின்பு ஓர் ஆழ்ந்த யோசனை சிந்தும் முகத்துடனும், குரலுடனும்,

“வேணாம் இப்போதைக்கு எதுவும் வேணாம்!!.. அப்படியே ஒரு ஏற்பாடு பண்ணாலும், என் பக்கத்துல அவள் சிரிச்சுட்டு நிற்பாள்ன்னு நினைக்குறியா?” என்றவன் தலை தானாகவே மறுப்பாக ஆடியது.

“நோப்.. அப்படியான தர்மசங்கடத்தை நான் அவளுக்கு கொடுக்க விரும்பலை..முதல்ல அவள்.. நான் யாருன்றதை முழுசா புரிஞ்சிக்கட்டும்.. அதுக்கு அப்புறம் பார்த்துக்கலாம்” என்று அவன், நண்பனிடம் தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திக் கொண்டிருக்க,

ஸ்னூக்கர் அறைக்குள் எதிர்பாராத விதமாக நுழைந்தாள் அவனுடைய ஜானு.

சாதாரண டாப் மற்றும் டெனிமில் லூஸ் ஹேருடன் அறைக்குள் நுழைந்தவளை, அவன் பளிச்சிடும் விழிகளுடன் நோக்க,

பெண்ணவளோ, தன் ஒட்டுமொத்த படபடப்பையும் குரலில் தேக்கி, “யாதவ்..” என்றபடி வந்தவள், அங்கே கணவனோடு இன்னொரு ஆடவனாக விக்னேஷ் நின்றிருப்பதைக் கண்டுத் தடுமாறித் தான் நின்றாள்.

படபடக்க வந்த இதழ்கள் பசை பூசினாற் போன்று ஒட்டிக் கொள்ள.. அந்தப் படபடப்பை

கடன் வாங்கிக் கொண்டன அவளது அடர்ந்த கண்ணிமைகள்!!

தன் கன்னக்கதுப்பை மறைத்து வீழ்ந்திருந்த கூந்தல் கற்றையை காதுக்குப் பின் செருகியவள்,

‘மேற்கொண்டு முன்னேறுவதா? இல்லை அப்புறம் வருவதா?’ என்று தெரியாமல் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தாள் ஓர் அலைக்கழிப்புடன்.

அவளது அவஸ்தையை உணர்ந்து கொண்ட அவளது மன்னவன் தான், சிறு புன்னகையுடன், தலையால் அவளை மெல்ல அழைத்து,

“உள்ளே வா ஜானு.. இவன் என் நண்பன் விக்னேஷ்.. எதுவும் பதட்டப்படத் தேவையில்லை” என்று சொல்ல,

அவளுக்குள்ளே ஓர் கேள்வி ‘நான் எதுக்கு இவன் நண்பன் விக்னேஷ் கண்டு பதட்டப்படணும்? பேசுறதை பேசியே ஆகணும்!’ என்று முடிவெடுத்துக் கொண்டவளிடமிருந்து ஓர் பெருமூச்சு வெளிப்பட்டது.

தீர்க்கமான விழிகளுடன் கணவனை நோக்கி நடந்து வந்தவள், ஆழ்ந்த குரலில் “யாதவ்.. நா.. நான் உன் கூட தனியா பேசணும்!!”என்றாள்.

விக்னேஷை யாதவன் வெளியே செல்லுமாறு பணிக்கவுமில்லை;அங்கேயே இருக்குமாறும் கூறவில்லை.

இருப்பினும் இங்கிதம் தெரிந்த விக்னேஷோ புதுமணத் தம்பதிகளுக்கு ஓர் தனிமையைக் கொடுக்க நாடி, யாழினியை நோக்கி,

“நீ பேசுமா.. நான் வெளியே வெயிட் பண்றேன்” என்றவன், அவசரமாக நடந்து வெளியே செல்ல, அவன் நிழல் மறையும் வரை காத்திருக்கலானாள் யாழினி.

விக்னேஷின் தலை முழுதாக மறைந்ததும் தன் மனைவியை நோக்கி பார்வையைத் திருப்பியவன், தன் ஏகாந்தமான குரலில்,

“சொல்லு.. என்ன பேசணும்?” என்று கேட்டான். இருப்பினும் அவன் கண்களோ கொஞ்சம் அதிகமாகவே இடுங்கியிருந்தது.

மனைவி தன்னை நாடி வந்திருப்பது.. ஏதோ பெரிய விஷயமாகத் தான் இருக்கும் என்று அவன் எண்ணியது பிழையாகவே இல்லை.

யாழினி அவனிடம் முன்மொழிந்தவை யாவும், யாதவனின் உச்சபட்ச இரத்த அழுத்தத்தை ஏகத்துக்கும் எகிறச் செய்தது.

கை முஷ்டி இறுக்கி நின்று, கழுத்து நரம்பு புடைத்து ஆக்ரோஷமாக வெளித் தெரிய,

பற்களைக் கடித்துக் கொண்டு, “ய்யாஆஆழினிஈஈஈ!!” என்று அவன் கத்திய கத்தலில்,

யாழினியின் உளறல்கள் எல்லாம் அடியோடு நின்றது. தூக்குவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தவள், தொண்டைக்குழியில் மூச்சு சிக்கிக் கொள்ள தவிப்புடன் நின்றாள்.

அப்படி என்ன தான் அவனின் “ஜானு” உளறியிருக்கக் கூடும்? இதோ அவள் உளறல்கள் எல்லாம் இவை தான்.

ஸ்னூக்கர் போர்ட்டில் இரு கரம் ஊன்றி நின்று, முன்னே சாய்ந்தவள், தீர்க்கமான குரலில்,

“இங்கே பாரு யாதவ்.. என் சுய அறிவுக்கு தெரிஞ்சோ தெரியாமலோ… உனக்கும், எனக்கும் ஏற்பட்ட நெருக்கத்தால்.. உருவான இந்த பந்தத்துக்கு ஆதாரம்.. என் வயிற்றில் வளர்ற.. இந்தக் குழந்தை தான்..

உனக்கு இந்தக் குழந்தை எவ்வளவு முக்கியம்னு நான் நேத்து புரிஞ்சிக்கிட்டேன்.. ஆனால் எனக்கு.. இந்தக் குழந்தை என் எதிர்காலத்துக்கு ஒரு முட்டுக்கட்டை தான்..

ராமும், நானும் கூட கல்யாணத்துக்கு அப்புறம் டூ யர்ஸ் நோ பேபீஸ்னு முடிவ்..” என்று பேசிக் கொண்டே வந்தவள்,

முன்னாள் காதலன் ‘ராமின்’ பேச்சை அவள் எடுத்ததும்.. அவன் பார்வை எரிமலைச் சீற்றத்தைக் கக்கியதைக் கண்டு சட்டென, ‘ராமின்’ பேச்சை நிறுத்திக் கொண்டாள் யாழினி.

ஆயினும் அடுத்த விஷயத்துக்கு உடனடியாகத் தாவ நாடி, “அதனால இந்தக் குழந்தை எனக்கு வ்வேண்டாம்” என்று அவள் சொல்லிக் கொண்டிருந்த போதே,

யாதவன் தன் அதரங்கள் திறந்து ஏதோ இடையிட முற்படுவது தெரிந்தது.

அவன் இடையீட்டை விரும்பாது தொடர்ந்து பேச நாடிய இவளும், பேச்சை அவசர அவசரமாக பேசி முடிக்கும் குரலில்,

“வேண்டாம்னு நான் முடிவு பண்ணியிருந்தேன்.. ஆனால் அது உனக்குப் பிடிக்கலைன்னு எனக்குத் தெரியும்.. அதனால தான் யோசிச்சு ஒரு முடிவெடுத்திருக்கேன்!!” என்றவள்,

சற்றே நிமிர்ந்து மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டாள்.

இவனோ தன் ஸ்னூக்கர் ஸ்டிக்கை மறுகரத்திற்கு மாற்றியவனாக, ஒற்றைப் புருவம் மாத்திரம் உயர, ‘‘என்ன முடிவு?’’என்று கேட்டான்.

அவளோ, குழந்தைப் பற்றிய பேச்சுக்கு இவனிடம் என்ன எதிர் ரியாக்ஷன் வரக்கூடுமோ என்று சிந்திக்கவுமே தொண்டைக்குழியில் வந்து ஏதோ அடைத்தாற் போன்ற ஓர் உணர்வு தோன்றவாரம்பித்தது.

இருந்தாலும் அதை விழுங்கிக் கொண்டு, அவன் விழிகளை ஏறிட்டவள்,

தன் வயிற்றில் இலேசாக கை வைத்து, ‘‘இந்தக் குழந்தை.. உன் குழந்தை தான்னு வெளியே நீ சொல்லிட்டுத் திரியுற இந்தக் குழந்தை..

இந்தக்குழந்தையை நல்லபடியா உனக்குப் பெத்துக் கொடுத்துட்றேன்.. அதுக்குப்புறம் அதை எப்படி வளர்ப்பேன்றது உன் பாடு யாதவ்.. ஆனால்

குழந்தையை நான் பிரசவிச்சதும்..உனக்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை.. என்ன சொல்ற? ஐ நீட் டிவோர்ஸ் ஃப்ரோம் ய்யூ….”என்று சொல்லி முடித்ததும் தான் தாமதம்.

சின்னக்குழந்தையை அதட்டும் தந்தை போல, அவள் பெயரை ஆக்ரோஷத்துடன் உறுமினான் யாதவ்.

“ய்யாஆஆழினீஈஈஈ!!”-திடீர் இடிமுழக்கத்துக்கு ஒப்ப ஒலித்த அவன் குரலில் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள் யாழினி.

அசுர வேகத்தில் அழுத்தமான காலடி எட்டுக்கள் எடுத்து வைத்து வந்தவன், அவளது இரு தோள்களையும் பற்றி, சற்றே உலுக்கியவாறு,

“ந்நீ தாய்ப்பாசம் இல்லாமல் வளர்ந்த மாதிரி.. நம்ம குழந்தையும் வளரணும்னு ஆசைப்பட்றீயா?? நீ தாய்ப்பாசத்துக்கு ஏங்கின மாதிரி..நம்ம குழந்தையும் ஏங்கனும்ணு நினைக்குறியா?”என்று இரண்டே இரண்டு கேள்வி தான் கேட்டான் யாதவ்.

அந்தக் கேள்விகள் சரியாகத் தாக்க வேண்டிய இடத்தில் தாக்கவே செய்தது.

“தாய்ப்பாசம்” என்ற சொல் அசையாமல் நின்றிருந்தவளையும் ஆட்டுவித்துப் பார்த்தது. “தாய்ப்பாசத்துக்கு” ஏங்கிய மதலை தானே அவளும்?

பிறகெப்படி இந்த மாதிரியான ஓர் முடிவை எடுக்கத் துணிந்தாள்?

யாதவன் மேல் கொண்ட வெறுப்பா? இல்லை யாதவன் நெருங்கி வந்தால் ஓர் மாய வலைக்குள் நுழைந்து அவன் தீண்டலை ஏற்கத் தயாராகும் இவள் மேலேயே விளைந்த வெறுப்பா?

அவள் கண்களில் நீர் கட்டத் தொடங்க, முன்னாடி நின்றிருந்த கணவன், தெளிவில்லாத விம்பமாக உருத் தெரியலானான்.

அவன் சொன்னான், “என் உடலில் கடைசிச் சொட்டு மூச்சு இருக்கும் வரைக்கும்.. நீ என்

பொண்டாட்டி தான்.. நான் உன் புருஷன் தான்" என்று.

அந்தச் சொற்கள்.. அதே சொற்கள்.. எங்கோ கேட்ட ஞாபகம், கலங்கிய விழித்திரையில் விழும் அவன் முகமும் எங்கோ பார்த்த ஞாபகம்!!

அவன் சீற்றத்துக்கும், சொற்றொடர்களுக்கும் எந்த வித துலங்கலையும் காட்டாமல், அகலிகையாய் சமைந்து நின்றாள் யாழினிப் பெண்!!

அவனோ கோபமும், வலியும், காதல் நிராகரிப்பட்டதால் விளைந்த ஒருவித மன உளைச்சலும் சேர்ந்து எல்லாமுமாகச் சுழற்றியடிக்க,

அவளைத் தன்னிலிருந்தும் விடுவித்தவன், ஸ்டிக்கைத் தூக்கியெறிந்து விட்டு அறையை விட்டும் நகர்ந்தான்.

செல்லும் கணவனின் வலிய புறமுதுகையும், அவனது கம்பீரான நடையையும் இமைக்காமல் பார்த்திருந்தாள் அவனது ஜானு.

ஸ்னூக்கர் டேபிளிற்கு மேலாக ஒளிர்ந்து கொண்டிருந்த அளவாக ஒளி தரும் மின்குமிழோ விட்டு விட்டு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அன்றிரவு நடுக்கூடத்தில்..

அவன் வீடு இங்கு வந்த இரண்டோரு நாட்களில்.. அவளையும் அறியாமலேயே அவளுக்குக் கொஞ்சம் பழக்கப்பட்டிருந்தது. மற்றும் கொஞ்சம் தோதாகவும் இருந்தது.

காலை கோபித்துக் கொண்டு சென்றவன் தான். இன்னும் வீடு வந்து சேரவில்லை தான்!!

இருந்த போதிலும் அவளது அபார்ட்மென்ட்டை காலி செய்து.. அவள் பொருட்கள் அனைத்தையும் அவன் வீட்டுக்கு இடம்மாற்றம் செய்யும் வேலையை மட்டும் அவன் செவ்வனே செய்திருந்தான்.

அவள் இருந்த இடத்தை காலி செய்தது அவளுள் பொறுக்க முடியாத ஓர் கோபத்தைக் கிளப்பினாலும் கூட, ‘இனிமேல் நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் இது தான் உன் வீடு!! இது தான்

உன் வாழ்க்கை!’ என்று அவன் சொல்லாமல் சொல்லுவதாகவே தோன்றியது யாழினிக்கு.

வந்திருந்த பொருட்களில் அவளுடைய மடிக்கணினியும் அடக்கமாகையால்,

அவனது அரண்மனை போன்ற வீட்டின் நடுக்கூடத்தில் இருக்கும் சோபாவில் ,

இரு கால்களையும் சம்மணம் கொட்டியவளாக அமர்ந்தவள், தனக்கு வந்திருக்கும் மெயில்களைப் படிக்கவாரம்பித்தாள்.

அதிலொன்று கீழடி அகழ்வாராய்ச்சியிற்குப் பொறுப்பான தொல்லியலாளர் டாக்டர். அமர்நாத் அவர்களிடமிருந்து வந்திருப்பதைக் கண்டாள் யாழினி.

கீழடியில் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியிற்கான அழைப்பு அது.

அதைக் கண்டதும் தொல்லியல் துறை மீது அவளுக்கிருக்கும் அதீத காதலின் விளைவால், அவள் கண்கள் மிளிரவாயிற்று.

ஆயினும் அவள் கைகளோ அனிச்சைச் செயலாக, அவளது வயிற்றைத் தடவிப் பார்த்துக் கொண்டது.

குழந்தையை வைத்துக் கொண்டு அவளால் ஆய்வில் ஈடுபடத் தான் முடியுமா என்ன?

தன் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையான குழந்தை என்ற போதிலும், யாதவன் கூறிய,

“ந்நீ தாய்ப்பாசம் இல்லாமல் வளர்ந்த மாதிரி.. நம்ம குழந்தையும் வளரணும்னு ஆசைப்பட்றீயா?? நீ தாய்ப்பாசத்துக்கு ஏங்கின மாதிரி..நம்ம குழந்தையும் ஏங்கனும்ணு நினைக்குறியா?” என்ற சொற்களின் தாக்கம் ஏற்படுத்திய விளைவாக,

அவள் இதழ்கள் தானாகவே முணுமுணுத்துக் கொண்டன.

“நான் இவனையும் பார்த்துக்கணுமே?” என்று.

அன்று அந்நொடி வேண்டாமல் வந்த குழந்தையேயானாலும் அவள்,

அந்தக் குழந்தைக்கும், அவளுக்குமான பந்தத்தை அன்றே சரிவரப் புரிந்து கொண்டிருந்தால் பின்னாளில் எழப்போகும் பல பிரச்சினைகளை அவள் தடுத்திருக்கலாம்!

அகழ்வாராய்ச்சியில் தன் பங்களிப்பை வழங்க முடியாததால் 'வரமுடியாது' என்றும் அதற்கான காரணமாக தன் திருமணத்தையும் குறிப்பிட்டு,

அப்பாலஜைஸ் லெட்டர் எழுத, கீபோர்ட்டில் அங்குமிங்கும் அலைந்து நர்த்தனம் புரிந்து கொண்டிருந்தது அவளது புஷ்டியான விரல்கள்!

அந்த நேரம் தான் 'தன் வாழ்வில் இப்படியும் அதிசயம் நிகழக்கூடும்!' என்று அவள் எதிர்பார்த்திராத ஓர் அதிசயம் நிகழ்ந்தேறியது.

திடீரென மேல்மாடியில் இருக்கும் எக்கச்சக்கமான அறைகளில் இருந்து ஓர் அறையில்,

செந்நிறமான ஒளி.. மங்கலாக.. ஒளிர்ந்து ஒளிர்ந்து அடங்குவது போலவும்,

அத்தோடு ஓர் இனிய புல்லாங்குழல் நாதத்தை ஒத்த ஓர் ஒலியும், மிகக் மிகக் குறைந்த அளவு ஒலியுடன் ஒலிப்பது போலவும் இருக்க.. அவள் விழிகள் மெல்ல சுருங்கியது.

அந்த வீடு பெரிய வீடு தான். அதன் கலையமைப்பும், பழைமைத்துவமும் வழி வழியாக யாதவனின் முன்னோர்கள் வசித்த வீடு என்று புலப்படுவதும் அப்பட்டமான உண்மையும் கூட.

இங்கு வந்த சொற்ப நாட்களில் யாதவன் அறை, சாப்பாட்டு அறை, நடுக்கூடம் என்பவை மட்டுமே அவளுக்குப் பரிச்சயப்பட்டதாக இருக்க,

ஒளியும், ஒலியும் சேர்ந்து வந்த மேல்மாடி அறை அவளுக்குப் பரிச்சயப்படாத ஒன்று!!

தன் டாப்பை கைகளால் இழுத்து சரி செய்த படியே எழுதவள், உறுதியான தேக்கு மூலம் செய்யப்பட்டிருந்த கைப்பிடி வரிசை கொண்ட மாடிப்படிகளினூடாக மெல்ல மேலே செல்லவாரம்பித்தாள்.

மேலே கொரிடோர் மிக நீளமாக முடிவேயற்ற நைல் நதி போல சென்று கொண்டேயிருக்க, அதன் ஒரு மருங்கில் பாரிய கதவுகள் கொண்ட பற்பல அறைகள்!!

அறைகளுக்கு மேலாக இருந்த சாளரத்தின் வழியாக ஓர் அறையிலிருந்து மட்டும் அந்த பளபளக்கும் ஒளி ஊடுருவிப் பாய்வதைக் கண்டவளின் கால்கள்.. அந்த அறையை நோக்கி விரைந்தன.

அந்த அறை.. ஒளி ஊடுருவிப் பாயும் அந்த அறை!

அந்த அறைக்கு அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு எட்டிலும், அவள் இதய எகிறல் வீதம் அதிகரித்து, மூச்சு வாங்க கஷ்டமாகிப் போனது அவளுக்கு.

இதன் விளைவாக அவள் தனங்கள் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருக்க, நெற்றியெங்கிலும் வியர்வைப் பூக்கலாயிற்று.

பணியாளர்களை அழைத்து அந்த அறை சாவி எங்கே என்று அவள் கேட்டு நேரத்தைக் கடத்துமளவுக்கு இல்லாமல், அறைக்கதவு.. திறந்தே தானிருக்க, ரொம்பவும் இலகுவாகவே

கதவில் இரு கை வைத்துத் தள்ளித் திறந்தாள் அவள்.

திறந்ததும் அந்த அறையிலிருந்து வந்து கொண்டிருந்த செந்நிற ஒளியும், புல்லாங்குழலை ஒத்த நாதமும் அப்படியே நின்று போயிற்று.

ஒளியும், ஒலியும் நின்று போன விந்தை அறியாமல் உள்ளே வந்தவளின் கண்கள் அவ்விடம் முழுவதையும் சுற்றிப் பார்த்தன.

அந்த அறை.. அது ஓர் அறை அல்ல!!

பல அறைக்கதவுகள் கொண்ட ஓர் மண்டபம் என்பது, அவள் அக்கதவைத் திறந்ததும் புரிந்து போனது.

காரிடோரில் இருக்கும் பற்பல கதவுகளும் கூட இந்த மண்டபத்துக்கானது என்பதும் புரிந்தது.

அந்த அறை முழுவதும் இருந்தது பழங்காலப் பொருட்கள். கிட்டதட்ட ஓர் குட்டி அருங்காட்சியகம் போல.

அனைத்தும் சின்னச் சின்னக் கண்ணாடிப் பெட்டகங்களில் பல நூற்றாண்டுகள் பழைமையான வாள், கிரீடம், வெள்ளி, பித்தளைப் பொருட்கள்,

வைர அட்டிகைகள் என்று அந்த மண்டபம் முழுவதும் பழங்காலப் பொருட்கள் நிறைத்திருப்பது கண்டு அதிர்ந்தாள் அவள்.

அதையெல்லாம் பார்க்கும் போது.. இவன் மட்டுமல்ல.. இவன் பரம்பரையே பழங்காலப் பொருட்கள் சேகரிப்பதில் வல்லவர்கள் போலும் என்றே எண்ணத் தோன்றியது யாழினிக்கு.

ஆமாம் அந்த செந்நிற ஒளியும், புல்லாங்குழல் இசையும் வரக்காரணம் யாதோ? அது எப்படி சட்டென அடங்கியது என்று பெண்ணவள் குழம்பி நிற்க,

அவளுக்கு ஈசான மூலையில் கண்ணாடிப் பெட்டகத்தில் நின்று அமைதியாக சிரித்துக்

கொண்டிருந்தது நூற்றியெண்பது கோடி ரூபா மோதிரம்!!

அவள் சேப்டர் வன் உணவகத்தில் வைத்து கழற்றி எறிந்த அதே மோதிரம்!!

அன்று பூரணை!! பூரணையில் ஜொலிக்கும், இசைக்கும் அதிசய மோதிரமாயிற்றே அது!!

சந்திரனின் பூரண ஒளியில் பளபளத்துக் கொண்டிருந்த அந்த மோதிரம் விளைவித்த மாயத் தோற்றப்பாடே இது என்பது அறியாமல்,

அந்த மோதிரத்தையே சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

இவள் மாடிப்படியேறி போகும் முன்பு, சந்திரனை மேகங்கள் மறைக்க, அதன் விளைவாக மோதிரமும் தன் மாய வித்தையை நிறுத்த,

அந்தோ பரிதாபம்!! மோதிரத்தின் சாகசம் அறியாது நின்றாள் கணையாழியின் உரியவள்!!

‘இது நான் தூக்கிப் போட்டதாச்சே? இது எப்படி இங்கே? யாதவ் தான் இதை இங்கே கொண்டு வந்து வைச்சிருக்கணும்!!’ என்று முணுமுணுத்துக் கொண்டே நிமிர்ந்தவள் அதிர்ந்தாள்.

அங்கே அவள் கண்டது.. அவளை மூச்சுப்பேச்சற்று நிற்கச் செய்து .. ஓர் அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்தது ஒரு நிமிஷம்!

அவள் கண்கள் அகல விரிந்தது விரிந்தபடியே இருக்க.. அவள் கண்டது தான் என்னவோ?

ஐந்தடி உயரத்தில்.. அந்தப் பக்கச் சுவரையே அடைக்கும் படி இருந்தது ஒரு சித்திரம்!!

மஞ்சள் நிறத்தில் மார்புக்கச்சையும், இடையிலிருந்து கால்வரை ஓர் தோட்டியும் அணிந்து, பழங்காலப் பெண்கள் போல நின்றிருந்த ஓர் பெண்ணின் சித்திரம்!!

நெற்றியிலே நெற்றி மணி சரசமாட, ஆலிலை வயிற்றில் சின்னதாக ஓர் ஆபரணம் தொங்க,

அடர்ந்த புருவங்களுடனும், பார்ப்பாரை மயக்கிக் காதல் கொள்ளச் செய்யும் மன்மதனின் கணைகள் போன்ற கண்களுடனும்,

கொவ்வைச் செவ்வாயில் குமிழ்ச் சிரிப்புடனும், உயர்ந்த நிமிர்ந்த இரட்டைப் பெண்மைக் கோளங்களுடனும்,

மந்தகாசமாக சிரித்துக் கொண்டிருந்தாள் அந்தப் பேரழகி!!

அந்தச் சித்திரத்தில் இருந்த பேரழகி.. அது வேறுயாருமில்லை. நம் சுந்தரப் பெண் யாழினியே தான்!!

தன் விம்பத்தைப் பார்த்து ஸ்தம்பித்து நின்றிருந்தவளின் கைகள் தானாகவே தன் கன்னத்தையும், இதழ்களையும் தொட்டுப் பார்த்துக் கொள்ள..

ஏதோ ஓர் பொல்லாத நினைவு எழுந்தது அவளுக்குள்.

அத்தியாயம் 10

வழியில் கிடந்த, மூன்றரையடி அகலக் கட்டையை அநாயசமாகத் தாண்டிப் பாய்ந்து வந்தன அந்தப் புரவியின் வலிய திடகாத்திரமான கால்கள்!!

அதனையடுத்துக் கேட்டது அந்தப் புரவியின் உத்வேகத்துடன் கனைக்கும் ஒலி!

அப் புரவித் துள்ளிப் பாய்ந்ததில் லாவகம் கண்டு மெய்மறந்த மக்கள்.. கைதட்டி ஆரவாரம் செய்ய, அவர்கள் கண்களோ பதிந்திருந்தது அப் புரவி வீரனின் மேல் தான்.

முறுக்கேறிப் போய் தெரிந்த, அவனின் வனப்பான ஒரு கை குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திருக்க,

மறுகையோ காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்க, அவனுடைய வலிய பாதங்கள் தஞ்சமடைந்திருந்தது குதிரை சேனத்தில்.

அந்தக்காலத்தில் ஆண்கள் அணியும் உடையான இடுப்புக்கு கீழே ஓர் தோட்டி அணிந்திருந்தவனின்… வெற்று மார்புகளின் ஒரு பக்க மார்பை மட்டும் மறைத்திருந்தது அவன் அணிந்திருந்த அங்கவஸ்திரம்.

திண்ணிய கைச்சந்துத் தசையிலும், கழுத்திலும் அவன் பூண்டிருந்த ஆபரணம்.. அவன் உயர் குலத்தைச் சேர்ந்தோன் என்பதை சொல்லாமல் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

குதிரையின் உத்வேகத்தை இன்னும் கொஞ்சம் கூட்ட நாடியவன், சேணத்தை அழுத்தி, கடிவாளம் இழுத்து “ஹாஹ்!!”என்று குரல் எழுப்ப,

தலைவனின் கட்டளைப் புரிந்தாற் போன்று.. வேகமெடுத்தது அந்தக் கபில நிறப் புரவி.

அவனது அலை அலையான கேசம் காற்றில் அலைந்தாடிக் கொண்டிருக்க, அவனிலோ காற்றைக் கிழித்துக் கொண்டு செல்லும் வேகம்!

அழகிய எழில் சொட்டும் நகரத்திலிருந்த.. மாபெரும் அகன்ற வீதிகளின் இருமருங்கிலும் இருந்த கட்டிடங்கள்,

அது நாகரிகத்தின் உச்சம் தொட்ட நகரம் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது.

பக்கத்திலே உயர்ந்த தூண்களையும், சிற்ப நயத்தையும் கொண்டு அமைந்திருந்தது ஆதிமூலனுக்கான உறைவிடம்!!

அந்தக் கோயிலிலே இருந்த கன்னியர்கள், வீதியில் கேட்ட குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்டு வெளியே வந்து..

தங்கள் கையால் பலவண்ண மலரெடுத்துத் தொடுத்து.. நாராயணனுக்கு சாத்த வந்த மாலையை…

இவன் மீது சூடி அவனைக் கணவனாக அடையும் பாக்கியம் கிட்டாதா? என்ற நப்பாசையுடன்,

அந்தப் பழம் யுகத்தின் ஆண்டாளாக மாறி, தங்கள் உயர்ந்த தனங்கள் தாழ்ந்து இறங்க ஏக்கப் பெருமூச்சு விட்டனர்.

கன்னியர்கள் மனம் உணர்ந்தானோ இக்காளையனும்?

குதிரையில் பயணித்த வண்ணமே, மெல்ல திரும்பி அவர்களை நோக்கி,

அழகாக தன் முத்துமூரல் தரிசனம் தந்து, இளநகையொன்று சிந்த..

அந்தப் புன்னகையின் வீரியம் தாங்க மாட்டாத பெண்ணொருத்தி மயங்கிச் சரிந்தாள் அங்கணமே!!

வேறு நேரமாக இருந்திருப்பின் அசம்பாவிதம் நிகழ்ந்த இடத்தை நோக்கி, உதவி புரிய அவன் விரைந்திருக்கக் கூடும்.

ஆனால் இது பந்தய நேரம்!! புரவிப் போட்டிக்கான நேரம்!!ஆக அவன் கவனம் முழுவதும் அதிலேயே இருந்தது.

அவன் மனமோ தனக்குத் தானே எண்ணிக் கொண்டது.

“பாரதத்தின் இளவசரன் தோற்றான்” என்று சரித்திரம் அவன் பெயரை இழுக்காகப் பதிவு செய்திடக் கூடாதல்லவா? அதற்கான உந்துதல் பிறக்க,

அவன் வேகம் கூடியதே ஒழிய குறையவேயில்லை.

மெல்ல திரும்பி தன்னை விட்டும் காத தூரம் தொலைவில் வந்து கொண்டிருந்த தன் சக போட்டியாளன் “அஷ்வதர்மனைப்” பார்த்தான் அவன்!! .

அந்தக் கண்களில் இருந்த வீரக்கலை.. அஷ்வதர்மனை கொஞ்சம் பயம் கொள்ளச் செய்தது.

அவனின் ஆழமான பார்வை என்ன சொல்லியதோ?

அதிலும் அவன் கடைக்கண் பார்வை வீச்சு தாங்க மாட்டாது மயங்கி வீழ்ந்த, அஷ்வதர்மனின் ஒரு தலைக் காதலி இவன் பக்கம் திரும்பியும் பாராதது கூட உச்சபட்ச ஆத்திரத்தைக் கிளப்பியது.

அஷ்வதர்மனுக்குள் ஒளிந்திருந்த கபட எண்ணமும், முன்னே செல்பவனை முந்த முடியாத கையாலாகாத்தனமும் கிளப்பிவிடப்பட,

தன் குதிரை சேணத்தை ஓங்கி உதைத்தான்.

வலி பொறுக்க முடியாத குதிரையும், அலறி கனைத்துக் கொண்டு ஓட அந் நகரமே இரு வாலிபர்களின் புரவிகள் நிகழ்த்தும் கூத்தைத் தான் கண்டு களித்துக் கொண்டிருந்தது. .

இன்னும் ஏன்? அவனுக்கும், அஷ்வதர்மனுக்கும் சமவயதே இருக்கும்.

இரு வாலிபர்களும் காட்சியை மறைக்கும் புழுதியை காண்போருக்குப் பரிசளித்து விட்டு நகரின் எல்லைக்கு வந்து விட்டிருந்தனர்.

அந்த நகரின் உயர்ரக விடுதியின் மாடத்திலிருந்தான் புரவி வீரனின் உயிர் ஸ்நேகிதன் கனிஷ்கன்.

பித்தளைக் குடுவையிலிருந்த உயர்ரக மதுவை, ஒரு சொட்டு விடாமல் தன் வாயில் சரித்துக் கொண்டவன், சடாரெனத் தன் இருக்கையிலிருந்தும் எழுந்து,

விடுதியிலிருந்த சக மனிதர்களை நோக்கி, தள்ளாடிய குரலில் "அஷ்வடர்மன் டோற்கப்போவடு உறுடி.. ஆயிரம் வெள்ளிக்காசு பந்டயம்!!"என்றவன்,

தன் பையிலிருந்து ஓர் பண முடிச்சை எடுத்து மேசையில் அடிக்க, அதிலிருந்து சிதறிய ஓடின வெள்ளி நாணயங்கள்!

அந்த வெள்ளி நாணய சிணுங்கல் ஒலியின் பின்னர், அந்த விடுதியே.. "நீ, நான்" என்று போட்டிப் போட்டுக் கொண்டு பந்தயம் கட்டும் இடமாக மாறிப் போனது.

மறுபுறத்திலோ ரொம்பவும் தீவிரமாகியிருந்தது பந்தயம்.

அப்பெரு நகரின் எல்லை கடந்ததும், அதன் எல்லையாக ஓடிக் கொண்டிருந்தது குறுகலான சிற்றாறு.

அதை கடக்கக் கூடிய வகையில் குட்டிப் பாலம்.

குட்டிப் பாலம் கடந்ததும் ஓர் சமவெளி.

சமவெளி கடந்ததும் ஓர் காடு.

காட்டின் குறுக்குவழிப் பாதை கடந்து மீண்டும் நகர்ப்புறத்தின் மறு எல்லை அவன் அடைய வேண்டும். இது தான் பந்தயம்!!

அவன் ஓடுவது வெற்றிக்காகவோ, பெருமைக்காகவோ அல்ல.

அஷ்வதர்மனின் பிடியிலிருக்கும், ஓர் தள்ளாத வயது கொண்ட முதியவரை அடிமைத்தளையிலிருந்து விடுவிப்பதற்காக.

அந்தக் கொடூரனின் சாட்டையடியிலிருந்து அவரை தப்பிக்க வைப்பதற்காக.

இங்கணம் அந்தக் கோர காட்சியை நினைத்தாலும், ஷத்திரியனின் நெஞ்சும், உதிரமும் கொதிக்குறது.

நடு வீதியில், அந்த சந்தையில், தன் வயது முதிர்ச்சி காரணமாக பளு தூக்க முடியாமல், மூட்டையை தவற விட்ட முதியவரின் உடலை பதம் பார்த்துக் கொண்டிருந்தது அஷ்வதர்மனின் சாட்டை!!

சாட்டையோடு முதியவரின் பருத்தி உடைத் துணியும், துணியோடு தோலும், தோலோடு உதிரமும் சேர்ந்து வந்து கொண்டிருந்ததை அஷ்வதர்மனும், அவன் சகாக்களும் இரசித்துப் பார்த்திருக்க,

அந்நகரத்தின் மக்களோ, முணுமுணுக்கும் தொனியில் அஷ்வதர்மனை வயிறெரிய தூற்றிக் கொண்டிருந்தனர்.

அடி பொறுக்க முடியாமல் துவண்டு விழுந்த முதியவரை அடிக்க அந்தரத்தில் ஓங்கிய அஷ்வதர்மனின் கை அந்தரத்திலேயே நின்றது.

அவனை மேற்கொண்டு அடிக்க விடாமல், அவன் கையைப் பிடித்திருந்தது அவன் கை!

அவன் விழிகள்!! அந்த விழிகளில் சொட்டும் காருண்யத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் எதிரிகளை நடுக்குறச் செய்யும் ஒரு வித தீர்க்கம்.. அது அஷ்வதர்மனையும் கொஞ்சம் நடுக்குறவே செய்தது.

வந்திருப்பது.. தன்னைத் தடுத்து நிறுத்தியது இந்நாட்டின் வருங்கால பட்டத்து அரசராயிற்றே!!

அவன் பின்னால் அவன் புரவியும், காவலர்களும் நின்றிருக்க, அஷ்வதர்மனை சுட்டெரிக்கும் பார்வை பார்த்தவன், அறிவுரை பகரும் குரலில்,

“ ம்மக்களை துன்புறுத்துபவன் உண்மையான ஷத்திரியன் அல்லன் அஷ்வதர்ர்ம்மா.. .. ம்மக்களை த்தன் உயிர் நீத்தாயினும் காப்பவனே ஷ்ஷத்திரியன்.. இது சத்திரிய தர்மம் அல்ல. ஷத்திரிய லக்ஷணமும் அல்ல அஷ்வதர்மா..!!” என்றவனின் பிடியிலிருந்து தன் கையினை கடினப்பட்டு விடுவித்துக் கொண்ட கொடியவன்,

தன் முன்னே நின்றிருந்த அந்த வலிமையான உடல் படைத்தானை மேலிருந்து கீழாக இளக்காரமாகப் பார்வை பார்த்தான்.

இளவரசனை இளக்காரமாக, அஷ்வதர்மன் பார்த்ததற்கே, அவன் வீரர்கள் வாளை, உறையினின்றும், உயர்த்தப் போக கை உயர்த்தித் தடுத்தான் அவன்!!

பின்னாளில் தோன்றிய பல வீர புருஷர்களின் மூதாதையனான அவன்.

அஷ்வதர்மன் அப்போதும் கூட தன் பயத்தைக் காட்டிக் கொள்ளவில்லை.

இருப்பினும் இறுமாப்பும், செருக்கும் மிக்க குரலில்,

“இந்தளவுக்கு தர்மம் பேசும் இளவரசர்.. நம் நாட்டின் வருங்கால அரசர்.. ‘தன் முன்னே வைக்கப்படும் சவாலை எதுவரினும்.. தளராது ஏற்பதுவும் ஷத்திரிய லக்ஷணம் என்று அறிந்தவர்

அல்லவா? அப்படியானால் என்னுடன் ஓர் புரவிப் பந்தயத்துக்கு வரட்டும்! இளவரசர் வென்று.. அந்த கிழவனை தன் அடிமைத்தளையிலிருந்து மீட்கட்டும்!..”என்றான்.

அவன் எதுவும் வாய் திறந்து சொல்லவில்லை.

அந்த உன்னத வீரனின் உயர்ந்து தாழ்ந்த புருவங்கள், சொல்ல வேண்டிய பதிலை அவன் வாய் திறவாமலேயே உரைத்தன; உணர்த்தின.

நகர் முழுவதும் தீயாக பரவியது செய்தி.

“இளவசர் பந்தயத்துக்கு செல்கிறாரா?”

“இளவரசரையே பந்தயத்துக்கு அழைக்கும் தைரியம் இங்கு யாருக்கு உண்டு?”

“அஷ்வதர்மனா? பிரபல வைசியர் (வர்த்தகர்) மகனுக்கு அவ்வளவு தைரியமா?”

“பந்தயத்தில் இளவரசரின் தலை மயிருக்கு ஏதாவது ஒன்றாகினும் அஷ்வதர்மனின் தலை போகப் போவது உறுதி!!’

“ என்ன பந்தயம்..?” என்று நகர் முழுவதும் மக்களும், சாமானியர்களும் தங்களுக்குள் அங்கலாய்த்து முணுமுணுத்துக் கொள்ள,

அஷ்வதர்மனின் சவாலை ஏற்றதன் விளைவாக வந்த வினையே இது.

இரு வீரர்களின் புரவிகளும், ஒளி பூமியை வந்தடையும் வேகத்தை விட விரைவு கதியில் கானகம் அடைந்தன. கானகத்திலே யாருமே எதிர்பார்த்திராத ஓர் அதிசயமும் நடந்தது.

முன்னந்தி வெயில் சூரியனை மேகங்கள் மறைத்துக் கொண்ட கனப்பொழுது!

தேன்சிட்டுப் பறவை, தேனருந்திய மயக்கத்தில் நின்ற உன்னதப் பொழுது அது!!

இருபுறமும் அடர்ந்த மராமரங்கள் வானை நோக்கி உயர்ந்து வளர்ந்திருக்க காற்றைக் கிழித்துக் கொண்டு, அவன் மட்டும் முன்னேறிக் கொண்டிருந்த நேரம் இது.

திடும்மெனக் குட்டி மானொன்று ஓடி வந்தது காட்டுவழியின் குறுக்கே.

மருண்ட விழிகளுடன் நின்ற மான் கண்டு அவன் விழிகளில் தோன்றியது நிமிட நேரச் சலனம்.

ஆனால் அஷ்வதர்மனிடம் அப்படி எந்தவிதமான சலனமும் தோன்றாமலிருந்தது ஆச்சர்யப்படுவதற்கில்லை.

காட்டுப்பாதை கடந்த மானோ அந்தப் புரவி வீரர்களுக்கு தொந்திரவு செய்ய நாடாமல், பாதையை விட்டும் ஒதுங்கி நின்று வழி பார்த்து மருண்டு அது நின்றிருந்த நேரம்.

அவனைத் திக்குமுக்காடச் செய்தவளாகப் பாதை கடந்தாள் ஓர் சுந்தரப் பெண்.

காற்றில் தன் நீண்ட கூந்தல், அவளுடைய புஷ்டியான பின்னழகு தொட்டு அலை மோத,

நெற்றியிலே அவள் பூண்டிருந்த நெற்றி மணி சரசமாட,

தன் மார்புக்கச்சையில் அடங்கியிருந்த இரட்டைத் திமில்கள் அவள் ஓடி வந்த தாளத்துக்கேற்பத் தாவிக் குதிக்க, மானை நோக்கி ஓடி வந்தாள் அந்தச் சுந்தரப் பெண்.

நடுப்பாதை வழியே நின்றவள், தன் பொய்யோ எனும் இடையில் இரு கை வைத்து, அந்த மானை நோக்கி செல்லமாக மிரட்டும் தொனியில்,

“உன்ன்னைய்ய்ய்!!… வர வர உன் பிடிவாதத்துடன் மல்லுக் கட்டுவதே..” என்று ஏதோ சன்னமான குரலில் உரையாற்றிக் கொண்டிருந்தவளின் செவியை நிறைத்தது ஓர் கம்பீரமான ஆண்குரல்!!

“ஹேய் பெண்ணே தள்ளிப்போஓஓ!!!..”என்றவன் குரல். ..அது அவள் இதயத்தின் ஆழம் வரை சென்று

திடுக்கிடச் செய்ய, திரும்பிப் பார்த்தவள், மானை விடவும் மருண்டு போனாள்.

அங்கே இரு வாலிபர்கள் கண் மண் தெரியாத வேகத்தில் வருவது கண்டு, அந்தச் சுந்தரப் பெண்ணின் மூளை வேறு வேலை நிறுத்தம் செய்ய,

சாபம் கண்ட அகலிகையானாள் தலைவி.

முன்னாடி வந்து கொண்டிருந்த வாலிபனுக்கோ அந்தப் பெண் அச்சத்தில் இக்கட்டான நிலையில் நின்றிருப்பது புரிய, குதிரையின் கடிவாளம் இழுத்து, அவன் வேகம் குறைக்க,

பின்னாடி வந்த வாலிபனோ அந்த சொற்ப நிமிடத்தில் ஏதேதோ குரூரமாக யோசித்து வேகம் எடுத்து அவளை நோக்கி அசுர வேகத்தில் வரலானான்.

நடுவில் நின்றிருந்த சுந்தரப் பெண்ணோ திகைத்து நின்றிருந்த தருணம் அது.

வேகம் எடுத்தவன் அஷ்வதர்மன். வேகம் குறைத்தவன் அவன்.

அஷ்வதர்மனுக்கு முன்னாடி இருப்பது ஓர் உயிர் என்பதுவோ, அதுவும் அது ஓர் பெண் என்பதுவோ புலப்படவேயில்லை.

அவன் உச்சவேகத்தில், அந்த அழகிய காரிகையை நாடிப் போனவன், திடீரென்று தன் இடுப்புக் கச்சையிலிருக்கும் வாள் உருவி,

அவளுடைய மார்புக்கச்சையின் கை வாரினை இழுத்துக் கிழித்து விட, ஒருபக்கத் தனம் முழுதும் சூரிய வெளிச்சத்தில் அப்பட்டமாக தெரியக் காத்திருக்க,

எதையும் சிந்திக்காது குதிரை சேணத்தால் அவளைத் தள்ளி விட்டுக் கொண்டே முன்னேறினான் அஷ்வதர்மன்.

பெயரில் மட்டுமே தர்மம் இருக்க அவன் செயல்கள் மனுதர்மத்திலும் இல்லாதவை.

மானம் இழந்து நின்றது போதாதென்று, சேணம் இடித்து சமநிலையின்றித் தடுமாறி விழிப் போனவள், முகம் கை, கால்கள் எல்லாம்,

காட்டு வழிப் பாதையில் அகோரமாக முளைத்திருக்கும்.. கற்களில் சிராய்த்துக் கொண்டு விழப் போனவளைக் கண்டு நெஞ்சம் பதறியது அவனுக்கு.

இதற்குத் தானே அஷ்வதர்மனும் வலை விரித்தான். அவனின் காருண்யத்தை பகடைக் காயாகக் கொண்டு, பந்தயத்தில் ஜெயிக்க முனைந்தான் அஷ்வதர்மன்.

பூமியோடு விழப் போனவளின், வெற்றிடையில் இதுநாள் வரை இல்லாத ஒரு ஆண்மகனின் வலிமையான ஸ்பரிசம் அழுந்தப் பதிவதைக் கண்டாள் சுந்தரப் பெண்.

குதிரையிலிருந்த வண்ணமே அலேக்காகக் குனிந்து அவள் இடையூடு ஒரு கையிட்டு அணைத்து, அவளைத் தன் புரவியில் ஏற்றிக் கொண்டான் அவன்.

அஷ்வதர்மனின் கொடூரச் செயலில் வெளித்தெரிந்த··· அவளது வெற்றுத் தனம்,

அவன் வலிய மார்புகளோடு அழுந்தப் பதிய ஜில்லென்ற உஷ்ணம் இருவர் உடலிலிருந்தும் ஊடுகடத்தப்பட்டு.. தன் நரம்பு, நாளம் எல்லாம் பரவுவதை உணர்ந்தாள் பெண்.

அவள் விழுந்து விடுவாள் என்று கருதியோ, இல்லை அந்த சுகமான உஷ்ணம் வேண்டுமென்று எண்ணமோ, அவள் இடையில் பதிந்திருந்த கரங்கள் இன்னும் இன்னும் அழுத்தம் கூட்டின.

பார்ப்போருக்கு.. அவள் மானம் இழந்து நிற்பது புரியாமல் அவளை அழகாகத் தன்னோடு, இணைத்து அணைத்திருந்தான் அவன்.

ஒரு கை கடிவாளத்தில் இருக்க, மறுகையால் தன்னை அணைத்திருக்கும் அந்த ஆண்மகனின் திடகாத்திரம் கண்டு, அந்த அதிர்ச்சி வைத்தியத்திலிருந்து மீள முடியாமல்,

மன்மதன் கணைகள் தாக்கப்பட்ட ஓர் மகோன்னத நிலையிலிருந்து வெளிவர முடியாமல் தவித்தாள் தலைவி.

அவனோடு கானகம் கடக்கும் நொடி ஏதேதோ உணர்வுகள் தோன்றி, அவள் மனதை அலைக்கழிக்க தன் சூரியனின் அழகு முகத்தையே பார்த்திருந்தாள் சூரியகாந்தி.

அந்த சூரியனோ.. அவளது விழிகளைத் திரும்பியேனும் பார்க்கவில்லை. அவன் பார்வை தீண்டாத போதும், கை தீண்டுவதும்,

இருவர் மெய் தீண்டுவதும் வெந்து தணிய வைத்தது பெண்ணை.

காட்டின் எல்லையும் வந்தது; புரவியும் நின்றது;அநாயசமாக அவளைத் தூக்கி இறக்கி விட்டவன், முன்னாடி சுற்றமும், சுயமும் மறந்து வெற்றுத் தனத்தின் தரிசனத்தோடு அவள் நின்றாள்.

அவன் அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

பாதையை வெறித்துக் கொண்டே, தன் அங்கவஸ்திரம் களைந்தவன், அவள் பக்கமாக அதை நீட்ட, அவள் நின்றிருக்கும் கோலம் அப்போது தான் உணர்ந்தாள் காரிகை.

சட்டென இரு கைகளாலும் மார்பு மறைத்து அவனது அங்கவஸ்திரம் போர்த்திக் கொண்டவளின் நாசி முகர்ந்தது அவனது பிரத்தியேக மணம்!

அவள் வெட்கம் உணர்ந்து அவன் இதழ்களில் தவழ்ந்த புன்னகையைக் கடினப்பட்டு மறைத்தவன், புரவியின் சேணம் உதைத்து புறப்பட்டான்.

அங்கே நகர்ப்புற எல்லையில். ..

பல்லாயிரக்கணக்கான விழிகள், அவர்களது இளவரசனின் கபில நிறப் புரவியின் குளம்படி ஓசைக்காகக் காத்திருக்க, வெற்றி முழக்கக் கனைப்புடன் வந்தது என்னவோ அஷ்வதர்மனின் திமிர் பிடித்த கரும்புரவி தான்!!

அவன் வருகை கண்டு ஒட்டு மொத்த மக்களும் சோர்ந்து போய் நிற்க, அவன் சகாக்கள் மட்டும் ஒருத்தரையொருத்தர் கட்டியணைத்து ஆரவாரம் செய்யலாயினர்.

அஷ்வதர்மன் எல்லைக் கோட்டை நோக்கி வருவதை கண்ட விடுதி மக்கள் சிலர், ‘அஷ்வதர்மன்

ஜெயிப்பான்’ என்று இறுதி நொடியில் மாற்றி பந்தயம் கட்டத் தொடங்க… அவனது நண்பன் மட்டும் அசரவேயில்லை.

அப்போதும் கலங்காத நெஞ்சுடன் ரொம்பவும் தன்னம்பிக்கை நிறைந்த குரலில், சொன்னான் “அஷ்வடர்மன் டோற்கப்போவடு உறுடி..!!”என்று.

வெற்றி எல்லைக்கோட்டில், சோர்ந்த விழிகளுடன் நின்றிருந்த காவலர்களோ திடீரென ஆர்ப்பரித்து, ஒருவரையொருவர் கட்டித் தழுவி ஆரவாரிக்க,

அந்த ஆரவார அலை மக்களிடமும் பரவாரம்பித்தது.

இதுவரை மக்களிடம் எழாத கோஷம் இந்நொடி ஏன்? என்று குழம்பிப் போய் திரும்பிய அஷ்வதர்மனின் விழிகளில் விழுந்தான் புரவியில் கடந்து செல்லும் அந்த அசகாய வீரன்.

தன் நண்பன் வந்ததையும், வெற்றிக் கோட்டைத் தொடப்போவதையும் அந்த உயர்ரக விடுதியின் மாடத்திலிருந்து,

வீதியில் வைத்த கண் வாங்காமல் பார்க்கவேயில்லை கனிஷ்கன்.

இருப்பினும் மக்கள் எழுப்பும் ஆரவாரம் மூலம் அதை அறிந்தவன், மீண்டும் தன் வாயில் குடுவையை சரித்துக் கொண்டு, ‘‘நான் ஷொன்னேன் அழ்ழவா?? (சொன்னேன் அல்லவா) .. அஷ்வடர்மன் டோற்கப்போவடு உறுடி.. என்று..’’ என்றவன்,

அந்த பலகையிலான மேசை மீதிருந்த அத்தனை வெள்ளி நாணயங்களையும் இரு கையால் வாரி அணைத்துக் கொண்டான்.

எல்லைக் கோட்டுக்கு வந்து இறங்கியவனை ஓடோடி வந்து தழுவி, தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டாடினர் காவலாளிகள்!!

‘‘இளவரசர் வாழ்க!! சவாலை ஏற்று வென்ற ஒப்பற்ற வீரர் வாழ்க வாழ்க!!’’ என்று குழுமியிருந்த மக்கள் வேறு, தொண்டை வரண்டு போகுமளவுக் கத்திக் கோஷமிட,

அனைவர் வாழ்த்தையும் சிறு புன்னகையுடனேயே ஏற்றான் மானிட இந்திரன்!!

அங்கிருந்தவர்கள் அனைவரையும் பார்த்து, கையுயர்த்திக் காட்டி ஆரவாரம் செய்து மகிழ்ந்து, மக்களின் சந்தோஷத்தை ஒரு சில விநாடிகள் இரசித்தவன்,

வீரர்களிடமிருந்து இறங்கி அந்த முதியவரை நோக்கி வந்தான்.

அந்த முதியவர் கண்களுக்கோ.. அந்தத் திருமாலே மறு அவதாரம் எடுத்து வந்தாற் போன்றிருக்க, கண்களெல்லாம் நீர் ததும்பலாயிற்று.

அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்ற முதியவர், அவன் காலில் வீழ்ந்து வணங்க, சட்டென்று அவர் தோள் பற்றி தடுத்து நிறுத்தியவன் அவரைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

பின்பு கோபம் கனலும் விழிகளுடன், அழுத்தமான எட்டுக்கள் எடுத்து வைத்து, அவமானத்தில் கன்றிப் போன முகத்துடன் நிற்கும் அஷ்வதர்மனை நாடிப் போனான்.

யாரும் எதிர்பாராத வகையில் கை முஷ்டி இறுக்கி.. ஓங்கி ஓர் குத்து விட்டான் அஷ்வதர்மனின் மூக்கிற்கே.

கொடியவன் மூக்கிலிருந்து குபுகுபுவென இரத்தம் கொட்ட, அஷ்வதர்மன் மட்டும் கேட்கக் கூடிய சீற்றக் குரலில்,

"இது.. நீ ஜெயிக்க வேண்டும் என்பதற்காக.. ஓர் பெண்ணை மானபங்கப்படுத்தியதுக்காக!!" என்று.

அதீத இரத்தப் போக்குத் தாளாமல், அஷ்வதர்மன் ஒழுகும் மூக்கைப் பிடித்துக் கொண்டே, மயங்கிச் சரிய அவனை அவசரமாக அழைத்துச் செல்லலாயினர் அவன் சகாக்கள்.

அதைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல்,

தன் வீரர்களிடம் திரும்பியவன், விழிகளாலும், கைகளாலும் சைகை காட்டி, யாரையோ 'எங்கே?' என்று கேட்டான்.

அவன் வீரர்களில் சிலர் ‘தெரியாது’ என்று கை விரிக்க, இன்னும் சிலர் அந்த உயர்ரக விடுதியை நோக்கி கை காட்டினர்.

அங்கே தான் , தன் உயிர் நண்பன் ‘கனிஷ்கன்’ இருக்கிறான் என்று தெரிந்து கொண்டவன் கால்கள் அவசர அவசரமாக, தெருமுனையில் இருந்த விடுதியை நோக்கித் தான் விரையவாரம்பித்தது.

மரக்கட்டுப் படிகள் அவன் காலடி பட்டு தடதடக்க, மும்மூன்றாகத் தாவித் தாவி ஏறிப் போய் மாடத்தில், இடுப்பில் கை வைத்து, அகல கால் விரித்து நின்று தன் நண்பனைப் பார்வையால் துலாவினான் அவன்.

அங்கே கனிஷ்கனோ வென்ற பணத்தில்.. இன்னும் இன்னும் மதுக்குடுவைகள் வாங்கி மேசையை அலங்கரித்திருப்பதைக் கண்டவன்,

தலை சிலுப்பிப் புன்னகைத்த வண்ணமே போய், தன் நண்பனோடு நெருங்கி அமர்ந்து தோளில் கை போட்டுக் கொண்டு,

“என்ன நண்பா?.. இன்னும் குடியா..?”என்று கேட்டான்.

அவனை திரும்பிப் பார்த்தவனின் விழிகள், அடித்த சரக்கின் வீரியத்தில் போய் மேல் சொருகியிருக்க அசமந்தமான குரலில்,

“இழ்ழை.. வெட்றிக்கழிப்புக் கொண்தாத்தம்!!! (இல்லை வெற்றிக்களிப்புக் கொண்டாட்டம்)” என்றான்.

இதற்கு மேலும் நண்பன் அங்கு இருப்பது சரியல்ல என்று கொண்டவன், நண்பனை நோக்கி,

“போதும் வா··· போகலாம்” என்றான்.

கனிஷ்கனோ ஏதும் பேசாமல், தன்புறம் இருந்த மதுக்குடுவையை, அவன் பக்கம் தள்ளி.. ‘குடி’ என்பது போல சைகை செய்தான்.

“இல்லை வேண்டாம். போதும் வா..” என்றவனாக, மதுக்குடுவையை அப்புறத்தள்ளிய அந்த வீரன் நண்பனை அழைத்தான்.

கனிஷ்கனா, தன் நண்பன் சொல்வதைக் கேட்பான்? அந்தப் பெரிய மதுக்குடுவையை அவன் புறம் தள்ளி, 'நீ குடி.. அப்புறம் தான் வருவேன்' என்பது போல பிடிவாதமாக நின்றான்.

கனிஷ்கனையும், மதுக்குடுவையையும் மாறி மாறிப் பார்த்த மன்னவன், அந்தப் பெரிய மதுக்குடுவையைக் கையில் ஏந்தி.. அத்தனை சரக்கையும் 'மடக்மடக்' என வாயில் சரித்துக் கொள்ள,

இளவரசனை ஆச்சர்ய மிகும் விழிகளுடன் பார்த்தனர் சாமானியர்கள்.

அனைத்தையும் அருந்தி முடித்த பின்னும் மட்டையாகாமல், அப்போதும் நேராகவே நின்றவன்.. அதற்கு மேலும் கனிஷ்கனிடம் கேட்டுக் கொண்டிருக்காமல், தன் நண்பனைத் தூக்கி அநாயசமாகத் தோளில் போட்டுக் கொண்டான்.

கனிஷ்கன் ஏதேதோ போதையில் உளற, விடுதிப் படிகளைத் தாண்டிக் கொண்டே, மிருதுவான தொனியில், "ஊரே என் சொல் கேட்கும் போது.. என்

சொல் கேட்காமல் போக்குக் காட்டும் ஒரே ஆண் நீ தான் நண்பா!!..'' என்றான் அவன்.

தான் பேசிக் கொண்டிருப்பது பட்டத்து அரசன் என்ற பயம் கிஞ்சித்தும் அற்றவனாக கனிஷ்கனோ, ''பின்னே என்னை என்ன உன் காவழாளி என்று நினைட்டுக் கொண்டாயா?.. நான் உன் நண்பன்!!'' என்று சொல்ல,

கனிஷ்கனின் உரிமையான பேச்சு கேட்டு சத்தமின்றி மலர்ந்தது அவன் உதடுகள்.

''அந்த ஒரு கருமத்திற்காகத் தானே நான் உன்னை சுமந்து தொலைக்கிறேன்..''- தன் மகிழ்ச்சியை வெளிக்காட்டாது போலிக் கோபம் மீதூற சொன்னான் வீரன்.

இருள் என்னும் அரக்கன் வானைக் கவ்விக் கொள்ள, அந்த அழகிய அரண்மனை முன்றல் எங்கும் தீபச்சுடர்களும், ஒளி விளக்குகளும் ஒளிர்ந்து பகல் போல காட்சியளித்துக் கொண்டிருப்பதவும் ரம்மியம்!!

அரண்மனையில் இருக்கும் உயர் ஸ்தானிகர்கள் அறியாமல், பின்கட்டு சுவர் வழியாக, கனிஷ்கனை அழைத்து வந்து,

அரண்மனை அறையின் மஞ்சத்தில் சாய்த்தான் அவன்.

கால்களையும், கைகளையும் நீட்டிக் கொண்டு அரக்கன் போல உறங்கும் நண்பனைப் பார்த்து புன்னகைத்த வண்ணமே, அவன் அங்கிருந்து நகரப் போக, அவன் கையைப் பிடித்து எதிர்பாராத விதமாக இழுத்தான் கனிஷ்கன்!!

அவனோடு மஞ்சத்தில் புரண்டான் அந்த வலிய தேகமுள்ள வாலிபன்!

அவன் எழ முற்படாத வண்ணம், அவன் கைச்சந்தில் தலை வைத்துப் படுத்துக் கொண்ட கனிஷ்கன்,

இளவரசனின் காதோரம், கிசுகிசுக்கும் தொனியில், , ‘‘யாருக்கு வேண்டுமானாலும் உன்முகத்தில் தோன்றும் அதிகப்படி மலர்ச்சி தெரியாமல்

இருக்கலாம்.. ஆனால் எனக்கு? கானகத்தில் என்ன நடந்தது..?சொல்லு!!'' என்று கேட்க, பகீரென்றானது அவனுக்கு.

‘‘போதையில் உளறாமல் உறங்கு..!!''- படபடவென்று மொழிந்தவன் கட்டிலை விட்டும் எழ முயன்றான்.

அதற்கு விடாமல் சட்டென அவனை அமுக்கிப் பிடித்தவன், ‘‘யார் நான் போடையில் (போதை) உழறுகிறேனா..? சரி அப்படியே வைட்டுக் கொள்.. போடையில் டான் எனக்கு உணர்வுகள் அதிகம். அங்கவஸ்டிரத்தோடு கானகம் போனவன், அதை இழந்து வந்திருப்பது முடல் அதிசயம்!!

உன் இடது மார்பில், ஓர் மாலைச் சரடுத் தடம் பதிந்து.. அதிக இரத்தம் பாய்வது இரண்டாவது அதிசயம்..''என்று நண்பன் சொல்ல,

அப்போது தான் தன் மார்பை பரிசோதித்தான் அவன்.

ஆமாம். அந்தச் சுந்தரப் பெண்ணின் மாலைச்சரடு அவன் நெஞ்சோடு அழுந்தியதில், சிவந்த தடம் உருவாகியிருப்பதை அப்போது தான் கண்டு கொண்டான் அவன்.

அவனின் கைகள், அந்தத் தடத்தை மையலுடன் தடவ, இதழ்கள் புன்னகைத்தன.

இடது கையில் நண்பனின் தலை இருக்க, வலது கையை தன் தலைக்கு அடியில் வைத்தவன், மோட்டுவளையை வெறித்துக் கொண்டே,

பேசியவன் கண்கள் முன் வந்து போனாள் அந்தச் சுந்தரி.

“கழுகுக் கண்களப்பா உனக்கு..”என்று நண்பனை வியந்தவன், மிருதுவான தொனியில்,

“இழந்தது வஸ்திரம் மட்டும் அல்ல. என் மனமும் தான் நண்பா.. கானகத்தில் நான் எதிர்பாராமல் வந்த சுரூபினி..!இந்த மார்புத் தடத்துக்கு சொந்தக்காரி” என்றவன் கை தடத்தைத்

தடவ, அவன் உள்ளமோ அவள் தனங்கள் பதிந்த சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.

“சொற்ப நேரங்கள் என்னோடு அவள்!! அவளோடு நான்!! அந்தக் குதிரைப் பயணம் கடைசி வரை நீளாதா என்று ஏங்கியது என் மனம்!! எத்தனையோ அழகிகள் கண்டவன் நான், ஆனால் அவள் மருண்ட விழிகளில்.. செத்துப் பிழைத்தேன்!!.

என் தாயின் அழகை அவளிடம் கண்டேன். அவள் எனக்கு சொந்தமானவளாக ஆயின் அவளை ஓவியமாகவும் வடிப்பேன்.” என்று முதன் முறையாக காதல் வயப்பட்டவனாக ஏதேதோ உளறிக் கொண்டு,

மெல்ல திரும்பிப் பார்த்த போது கண்கள் மூடி ஆழ்ந்த நித்திரைக்கு சென்றிருந்தான் அவனது நண்பன்.

பாவம், அவன் சொன்ன சுரூபிணிக் கதை எல்லாம் காற்றுக்கு மட்டும் தான் கேட்டிருக்கும்.

அதே ஓவியம்!! அந்த சுரூபினியை தூரிகையால் தீட்டி, அவள் அழகை சட்டத்துக்குள் அடக்கிய ஓவியம்!!

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட ஓவியம் அது!

அந்த ஓவியத்தின் முன் தான், அந்த மந்தகாசமான இரவில் நின்றிருந்தாள் சுந்தரப் பெண் யாழினி.

புராதன உடையணிந்தவளாக தன் ஓவியம் இருக்கக் கண்டு, அகலப் பிரிந்தன அந்தப் பேரழகுப் பெண்ணின் அதரங்கள்!!

அந்த அதரங்களை அவள் புஷ்டியான விரல்கள் மறைத்துக் கொள்ள, அதிர்ச்சியில் ஈரெட்டு அவள் பின்வாங்க.. எதிலோ இடித்துக் கொண்ட உணர்வு!

திரும்பிப் பார்த்தவள், அங்கே ஆஜானுபாகுவான தன் கணவன் நின்றிருக்கக் கண்டு அதிர்ந்தாள்.

எத்தனை நேரமாக அவன், அங்கிருக்கிறான் என்று தெரியாது!! எப்போது அவன் இல்லம் வந்து சேர்ந்தான் என்றும் தெரியாது!!

அவள் அறிந்தது எல்லாம், அந்த ஓவியத்தில் இருப்பவள் அவள் என்பது மாத்திரமே.

கணவனைக் கண்ட மற்றுமொரு அதிர்ச்சியில் பின்வாங்கப் போனவள், பின்னாடியிருந்த புராதனப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் நீண்ட மேசையில் தன் இடையை இடித்துக் கொள்ளப் போக,

அதை முன்கூட்டியே அனுமானித்துக் கொண்டவன், அவளுக்கு அடிபடாத வண்ணம், கை நீட்டி அவள் இடையைப் பிடித்துக் கொண்டான் .

அவளுக்கோ கணவனின் தொடுகையில், உள்ளே அவள் மேனி அதிர்ந்து நடுங்க,

அவள் நடுக்கம் உணர்ந்தவன் சொன்னான், "எதை பண்றதுன்னாலும்.. கொஞ்சம் நிதானமா பண்ணு ஜானு.. இப்போ நீ என் குழந்தையை சுமந்துட்டிருக்க!!"என்று.

கணவனின் அன்பு மொழியும், கரிசனையும் அந்த சுரூபினியின் இதயத்தில் நிற்காது போக, திக்கித் திணறிய குரலில், அந்த ஓவியம் காட்டிக் கேட்டாள்,

“இது.. இது .. இந்த ப்பெ.. பெயிண்ட்டிங்ல.. இருக்குறது..?”

“நீ தான்!!..”- சற்றும் யோசியாமல் ஏகாந்தமாக வெளிவந்தது அவன் குரல்!!

அவளது மலர் விழிகள் இன்னும் சற்றே விரிந்தன.

“நானா??.. நான்.. எப்படி..??என்..என்னை எப்படி?”என்று வார்த்தைகள் தந்தியடிக்க உளறினாள் பெண்.

அவனோ தன் மனைவியின் கேள்விக்கான பதிலை விடுத்து ஏதேதோ சொன்னான். அந்தக் கதை சுற்றி வளைத்து மூக்கைத் தொட்ட கதையாயினும், அதற்குள் அவளுக்குத் தேவையான விடையும் இருக்கவே செய்தது.

மன்னவனின் விழிகள், சுந்தரப் பெண்ணைத் தாங்கியிருக்கும் ஓவியச் சட்டத்தில் நிலைத்தது.

அவன் கைகளோ, அவனுடைய பேன்ட் பாக்கெட்டுக்குள் அடைக்கலமாகியது. அவளது நிஜ உருவம் பாராது, பிரதி உருவம் பார்த்த வண்ணமே பேசினான் யாதவன்!!

அவன் கண்களில், அவ் ஓவியத்தின் விழிகள் சிந்தும் காதலை, அன்பை கரிசனையை இந் நிஜ ஓவியத்தின் கண்களும் தன் மீது காட்டாதா என்று ஏங்கவே செய்தது.

அந்த ஏக்கத்தின் விளைவாக, அவனிடமிருந்து ஒரு பெருமூச்சும் வெளிப்பட்டது.

அழுந்த மூடிய அதரங்கள் பிரித்து, ‘‘இது.. என் முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக சேர்த்து வைச்சிருக்க பொக்கிஷங்கள்….’’ என்றான் மென்மையாக.

தொல்லியலாளப் பெண்ணாயிற்றே அவள்!! மூளையில் வண்டாய் ஏதோ குடைய குறுக்கிட்டுக் கேட்டாள் ஒரு கேள்வி.

“அப்.. அப்பிடின்னா இந்த வாள்கள், குறுவாள்கள், அட்டிகைகள், மோதிரங்கள் எல்லாம் பார்க்குறப்போ.. நீங்க ராஜபரம்பரையா?” என்று கேட்டாள் சன்னமான குரலில்.

ஓவியத்தில் திளைத்த அவன் விழிகள், அவளிடம் தஞ்சமடைந்தது.

“ம்.. ஆமா.. பாரதத்தை ஆண்டவர்கள் தான் என் முன்னோர்கள்.. இங்கே இருக்குற ஒவ்வொரு பொருளும் எந்த காலத்தில் யார் உபயோகப்படுத்துனாங்க… இல்லை யார் ஏலத்தில் எடுத்தாங்கன்ற.. ஒரு வரலாறு இருக்கு.. இப்போ நீ பார்த்திட்டிருக்குற இந்த பெயிண்ட்டிங்கைத் தவிர..” என்றவன் விழிகள் அவள் விழிகளோடு ஆழ ஊடுருவி, ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுகிறதா? என்பது போல நோக்கின.

‘மாற்றங்கள்?’ அவள் பார்வை குழப்பத்தில் சுருங்கிய விதத்தில் காளையவன் நெஞ்சில் ஏமாற்றங்கள் தான் குடிகொண்டது.

“ஏன் இல்லை?”- அந்த ஓவியத்துக்கும், தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதவள் போலக் கேட்டாள் யாழினி.

எப்போதும் தன்னைப் பார்த்து சிடுசிடுக்கும் அவனது முன்கோபக் குயில் முதன்முறையாக, அவன் மொழிகளுக்கு செவிசாய்ப்பது கண்டு மெல்ல மலர்ந்தது இதழ்கள்.

புன்னகையுடனேயே யாதவனும், “ஏன்னா இது இரண்டாயிரம் வருஷங்கள் பழமையானது..

ரொம்ப பழசுன்றதால இது என் முன்னோர்கள்ல யாருக்கு சொந்தமானது?.. யார் வரைஞ்சாங்க? வரைஞ்சவங்களுக்கும், ஓவியத்துல இருக்கற பெண்ணுக்கும் என்ன உறவு? இப்படி எதுவுமே யாருக்கும் தெரியாது…” என்றவன் பார்வை, தன் மனையாளிடமிருந்து எதையோ எதிர்பார்த்து துலாவியது.

அவளோ அவன் சொல்லும் கதையில் இலயித்துப் போனவளாக,

“இஇரண்டாயிரம் வருஷங்களா?.. ஆனால் இது கொஞ்சம் கூட சிதையாமல் அப்படியே இருக்கே..?” என்று தான் கேட்டாள்.

“பல்லாயிரம் வருஷம் பழைமையான ஈஜிப்ட் மம்மீஸ் உடல்கள் எல்லாம் இப்போவும் பாதுகாப்பா இருக்குறதில்லை? அதே மாதிரி தான் இதுவும்.

இந்த பெயிண்ட்டிங்க் பாதுகாப்பா இருக்கணும்ன்றதுக்காக.. வழி வழியா என் முன்னோர்கள் பல கெமிக்கல்ஸ் கலந்து.. அந்த பெயிண்ட்டிங்கை பாதுகாத்ததனால அப்படியே இன்னும் உயிர்ப்புடன் இருக்கு..

ஆனால் அந்த ஓவியப் பெண்ணின் கண்கள் மட்டும் வரி வடிவமா.. கொஞ்சம் சிதைந்து போயிருச்சு..”என்று அந்த ஓவியத்தின் கண்களை ஒருவித ஈர்ப்புடன் பார்த்த வண்ணம் சொன்னவனின் குரலும், ஒரு கையில் ஈர்ப்பு சக்தி கொண்டதாகவே இருந்தது.

அந்த மாய ஈர்ப்பிலிருந்து வெளியே வந்தவள்,

“ஆ.. ஆனால் அந்த பெயிண்ட்டிங்ல இருக்குற பெண்ணுக்கு எப்படி என் உருவம்..?” என்று தன் முந்தைய கேள்வியிலேயே வந்து நிற்க அவனும் தொடர்ந்தான்.

“சின்ன வயசுல இருந்து இந்த பெயிண்ட்டிங்க் பார்த்தால் என்னமோ மனசுக்குள் தோணும்..

வளர்ந்து பெரியவனானதும் இந்த பெயிண்ட்டிங்க் பார்க்குறப்போ தோணின ஃபீலிங்க்ஸ் அதிகமாச்சு.. எந்த பெண்ணைப் பார்த்தாலும் இந்தப் பெண்ணின் கண்களோடு ஒத்துப் பார்க்கணும்னு தோணும்.

இன்பேக்ட் இந்த பெயிண்ட்டிங்க்ல இருக்குற பொண்ணு யாருன்னு புரிஞ்சது.. நான் ஆக்ஸிடெண்டானப்போ தான்.

நிவ்யர் ஈவ் அன்னைக்கு நடந்த ஆக்ஸிடெண்ட்.

இதே ட்ரெஸ்ல.. இதே மாதிரி.. ரோடைக் க்ராஸ் பண்ண நீ..”என்றவன் நினைவுகளில் சுரூபினியின் மதி உருவம் வந்து போனது.

அன்று கோல்ஃபேஸ் வீதியில் வைத்து நடந்த பந்தயத்தில், வெற்றி எல்லையைத் தொட சொற்ப தூரம் இடைவெளியில், பாதையை நிதானமாகக் கடந்த சுரூபினியின் உருவம்.

வெற்றுப் பாதங்களில் மணிக் கொலுசு சலசலக்க, புராதன பெண்கள் போன்று மார்புக் கச்சையும், சராயும் அணிந்து.. அவனைப் பார்த்து மையல் ததும்பும் தாபப் புன்னகை சிந்திக் கொண்டே நடந்து சென்ற அவள்!!

அவன் “தூரப்போ.. தூரப்போ” என்று பெருங்குரலெடுத்துக் கத்த, கொஞ்சமும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் பாதை கடந்த மங்கை!!

நிஜப் பெண்ணானால், பாதையை விட்டும் தூரப் போயிருக்கக் கூடும்!

வந்த சுரூபினியோ மாயை ஆயிற்றே? பின்னே எப்படி அவள் முகம் களேபரம் பூசிக் கொள்ளும்?

மாயம் அறியாத மன்னவன், அவளுக்குக் காயம்படக் கூடாது என்று.. தன் மேனியில் காயம் கொண்டது தான் மிச்சம்!!

மாய ஈர்ப்பிலிருந்து இன்னும் சரி வர வெளியே வந்திருக்காதவன், “ஆமா.. அன்னைக்கு நான் ஆக்ஸிடெண்டானப்போ கண்ட பெண் நீ தான்!! மூணு மாசத்துக்கு முன்னாடி நடந்த ஆக்ஸிடெண்ட்..!! அந்த ஆக்ஸிடென்ட்.. என் வாழ்க்கையின் நடந்த திருப்பு முனை.!!” என்று கண்களில் அன்றைய நினைவினைத் தேக்கி சொன்னான் அவன்.

“அ.. அப்போ நா.. நான் கீழடியில் இருந்தேன்!! அப்புறம் எப்படி நான் ஸ்ரீலங்காவில் இருந்திருக்க முடியும்?” என்று புரியாமல் கேட்டாள் யாழினி.

“தெரியும்.. அப்போ நீ இங்கே இல்லை.. கீழடி எக்ஸ்கவேஷன்ல இருந்தேன்னு தெரியும்.. என் கண் முன்னாடி வந்தது உன்னோட நினைவுகள்.!!”-

இப்போதாவது தன் உள்மனக்கிடக்கையை அவள் அறிந்து கொள்ள மாட்டாளா? என்ற நப்பாசையுடன் கேட்டான் வாலிபன்.

ம்ஹூஹூம்.. இத்தனை நேரம் அவன் சொன்ன அனைத்தும் காற்றிலே வீணாகிப் போனது. காற்றோடு காற்றாகிப் போனது.

ஆனால் ஆதி மனிதன் தோன்றிய காலம் முதல், உலாவும் இந்தக் காற்று கூட அறியும் இவனுக்கும், அவளுக்குமான பந்தத்தை.

பெண்ணவள் தான் மறந்து போனாள்.

“என்ன சொல்ல வர யாதவ்?”-சிறு குழந்தைகள் போல கண்சிமிட்டிக் கேட்டாள் பேரிளம் பெண்.

தன் உணர்ச்சிகளை சமநிலைப்படுத்த மீண்டும் நெட்டுயிர்த்தவன்,

“மூணு மாசத்துக்கு அப்புறம் கோமாவிலிருந்து மீண்டு வந்த எனக்கு அந்தக் கண்கள் யாரோடதுன்னு புரிஞ்சது..அந்த ஓவியத்தின் கண்களை வரைஞ்சது

நான் தான்.. ஏன்னா அந்த ஓவியப் பெண் நீ தான்னு நான் நம்பறேன்..'' என்று விஷயத்தைப் பட்டென சொல்லியதோடு நில்லாமல் ஓவியத்தில் பார்வை பதித்தான்.

பின்பு, சந்திர ஒளியில் ஜொலித்து இசைக்கும் அந்த மாய மோதிரத்தை நாடிச் சென்று அதைக் கைகளில் எடுக்கவும் செய்தான்.

ஈரெட்டில் மனைவியை நாடி வந்தவன், ''அந்த ஓவியத்தில் இருக்குற பெண்ணின் கைகளில் இருக்குற மோதிரத்தைப்பார்..இதோ அச்சு அசல் இதே மோதிரம்.''என்ற உண்மையை சொல்ல, அவள் கண்கள் ஓவியத்துக்கும், கணையாழிக்கும் மாறி மாறி இடம்பெயர்ந்தது.

உண்மை.அதே மோதிரம் தான்!

அவள் கைகளில், அவள் அனுமதியின்றியே கணையாழி அணிவித்தான் யாதவ் மகாதேவன்!

போன முறை அவளிடம் எதிர்ப்பு இருந்தது. இந்த முறை அவளிடம் அதிர்ச்சியும், குழப்பமும் மட்டுமே மேலோங்கியிருந்தது.

பிறகு விரகதாபம் முற்றிய ஆண்மகன் போல, அவளை தன் நெஞ்சோடு ஆரத் தழுவி,

தன் காதல்ப்பெருக்கை உணர்த்தினான் அவன்.

அந்த திடீர் அணைப்பில் அவள் அமைதியாக நிற்க, மெல்ல அவளை விடுவித்தவன், ''ஓவியப் பெண்ணான நீயும் என்கூட இருக்க, இதோ அந்த மோதிரமும் இருக்கு...... இந்த ரெண்டுக்கும் சொந்தக்காரனான நானும் கூடவே இருக்கேன்.. இ.. இப்போவுமா ஒண்ணும் புரியல?''என்று எதையோ எதிர்பார்த்துக் கேட்டான் யாதவன்!!

அவனுக்கும், அவளுக்குமான பந்தம் மிகவும் பழைமையானது;ஆதியானது;புராதனமானது என்றா இவன் சொல்கிறான்??

கணவனின் அகன்ற விழிகளையே பார்த்திருந்தாள் யாழினி. அவளால் அங்கணம் ஒரு முடிவுக்கு வர இயலவில்லை.

விடை பார்த்து ஆவலுடன் காத்திருந்தவன் காதில் மூக்கை நுழைத்தவள், இரகசியம் பேசும் குரலில் சொன்னாள்,

‘‘எனக்குப் பசிக்குது யாதவ்..’’என்று.

காதில் வேறேதோ இரகசியம் சொல்லக்கூடும் என்று எண்ணியவனுக்கு, மனைவியின் சொற்கள் சிரிப்பையே தந்தது.

முத்து மூரல்கள் அழகாக தரிசனம் தர, நகைத்தவன், ‘‘சரி வா..’’என்றபடி மனைவியை வழிநடத்திச் சென்றான்.

அத்தியாயம் 11

அடுத்த நாள் காலை.

புள்ளினங்கள் ஆர்த்து, கீழ் திசையில் சூரியன் உதிர்த்து.. எப்போதும் போல புலர்ந்தது பொழுது.

அழகான சிவப்பு வர்ண சேலையில், ஓர் ஐந்தரையடி உயர ரோஜாப் பூவுக்குத் தான் கை கால்கள் முளைத்து, உயிர்ப்பெற்று வந்ததுவோ? என்று அவன் சிறிது நேரம் குழம்பி நிற்குமளவுக்கு அழகுடன்..

அவனது கண் முன்னே வந்து நின்றாள் யாழினி.

வலக்கையை பின்னால் கட்டிய வண்ணம், இடக்கையால் டம்ப்பெல்லைத் தூக்கித் தூக்கி உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தவனின் பார்வையும்,

அச் சுரூபினியின் பார்வையும் ஒரே நேர்கோட்டில் சந்தித்துக் கொண்டன.

கணவன் மேல் சட்டை எதுவும் போடாமல், முறுக்கேறித் தெரிந்த திண்ணிய கைத் தசைகள் மாத்திரம் அசைந்த வண்ணம் இருக்க,

மார்புகளின் பள்ளத்தாக்கிலே.. வியர்வை மணிகள் வழிந்தோட, உடற்பயிற்சி செய்தவாறு நின்றிருந்த கணவனைக் கண்டதும் ஏதேதோ செய்தது அவளுக்கு.

பல தடவைகள் கண் சிமிட்டி, தன்னுள் எழும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த கீழுதட்டைக் கடித்து அவள் நிற்க,

கடிக்கப்பட்ட அவளது கீழுதட்டைக் கண்டு தறிகெட்டு ஓடியது யாதவனின் மனம்!

அந்த இதழ்களுக்கு அவள் பூசியிருந்த இதழ்ப்பூச்சு வேறு, அன்று கொஞ்சம் ஓவராக இருக்க..

அந்த இதழ்களையே.. தொண்டைக்குழி ஏறி இறங்கப் பார்த்திருந்தது அவனது இரசனை மிகுந்த விழிகள்!!

அவனது உடற்பயிற்சி கூடத்துக்குள் நுழையும் போதே, உற்சாகம் பீறிட்டு ஓடும் குரலில்,

“யாஆஆதவ்!” என்றவாறு வந்து ஆஃப்பானாவள் தான்.. அதன் பிறகு அவளுக்கு குரல் எழும்பியதா? என்பதே சந்தேகம் தான்!

அவன் விழிகளைக் காணும் போது மட்டும்.. ஒரு வகை மாய வலை.. ஹிப்னாட்டிசத்துக்கு ஆட்பட்டது போல ஓர் ஈர்ப்பு.. அவளைச் சுற்றி தோன்றுவதும் தான் ஏனோ?

சட்டென அவன் பார்வை வீச்சிலிருந்து வெளியே வந்தவள், அப்போது தான்.. அங்கே அவனுடன் நண்பன் விக்னேஷ் இருப்பதையே பார்த்தாள்.

இவன் இருப்பது கூட தெரியாமலா.. யாதவனை வைத்த கண் வாங்காமல் பார்த்துத் தொலைத்தோம் என்றாகியதும் அப்பட்டமாகவே அசடு வழிந்தது அவளுக்கு.

அவளது அசடு வழிதல் அறிந்து.. வாய் விட்டு நகைத்து வைக்காத குறையாக இதழ்கள் திறந்து புன்னகைத்தான் விக்னேஷ்.

கூந்தலை காதுக்குப் பின் சொருகிய வண்ணம், “ஹாய் விக்கி.. நீங்க எப்போ வந்தீங்க?..”என்று மெல்லக் கேட்டாள் அவள்.

“இப்போ தான்..”- தன் பேன்ட் பாக்கெட்டில் கையிட்ட வண்ணமே உரைத்தான் விக்னேஷ்.

தன் முகத்தில், கணவனை வைத்த கண் வாங்காமல் பார்த்ததை இன்னொரு ஆண்மகன் கண்டு கொண்டானே என்றானதும், நிமிடத்தில் அவள் கன்னக்கதுப்புக்கள் இரண்டும் செக்கச் செவேலென சிவந்தது.

கன்னங்கள் செம்மையுறுவதைத் தவிர்ப்பதற்காக, ஏதோ கேள்வி கேட்டாக வேண்டும் என்பதற்காக,

“சா.. சாப்பிட்டீங்களா?..”என்று கேட்டு வைத்தாள் அவள்.

யாதவன் கண்களோ, தன்னழகு மனையாளின் செம்மையுற்ற கன்னங்களைத் தாண்டி இங்குமங்கும் அசையவேயில்லை. முழுக்கவனமும் அவள் மீதே நிலைத்திருந்தது.

யாழினியின் கேள்விக்கு பதில் சொல்ல நாடிய விக்னேஷோ, நடந்து வந்து யாதவன் தோள் மேல் கை போட்டவனாக, “இனிமேல் தான்.. நண்பன் கூட..!!”என்றான்.

ஓ.. அவளுக்கு பசியெடுத்திருக்க வேண்டும்!! அது தான் அவள் அவனைத் தேடி வந்திருக்கிறாள். அவன் மனைவிக்கு இப்போதெல்லாம் ரொம்பவே பசியெடுக்கிறது.

நேற்றிரவு முக்கியமான விஷயம் பேசிக் கொண்டிருக்கும் போதும் இப்படித் தானே. “எனக்குப் பசிக்குது யாதவ்” என்றாள்.

எல்லாம் அவள் வயிற்றில் வளரும் இவன் வாரிசு செய்யும் வேலை! தந்தை போலவே அவனும் பலசாலி ஆயிற்றே!! என்று எண்ணிக் கொண்ட யாதவன்,

டவலை மேனியில் ஒற்றியெடுத்து, வியர்வைத் துடைத்தவனாக, அவளைப் பார்த்து,

"இதோ ட்ரஸ் பண்ணிட்டு வந்துர்றேன்..சேர்ந்தே சாப்பிட்டிரலாம்!" என்றுரைக்க, மிடுக்காகவே அவளிடமிருந்து வந்தது பதில்!

"உனக்காக யார் வெயிட் பண்ணிட்டிருப்பா?.. நான் சாப்பிட்டாச்சு.. எனக்கு இன்னைக்கு களனி யுனிவர்சிட்டியில் லெக்ச்சர்ஸ் இருக்கு.." என்று அவள் சொல்ல,

விக்னேஷின் முகத்தில் அரும்பியது குபீர் புன்னகை. பின்னே? யாதவ் முன்னாடி எப்பேர்ப்பட்டவரும் கை கட்டி, வாய் பொத்தி..நிற்க,

நண்பனை மிடுக்காக பேசும் ஒரே பெண்!

அதுவும் சுவாரஸ்யம் என்னவென்றால் அது யாதவனின் மனைவி!

'யப்பா.. அவ ஒண்ணும் நீ வர்றதுக்காக வெயிட் பண்ணலைப்பா... ஏற்கனவே

சாப்பிட்டுட்டாளாம்!'என்று கலாய்த்து நகைக்க வேண்டும் போல இருந்தது விக்னேஷூக்கு.

நண்பன் சிரிப்பது அறிந்து, யாதவன் முறைத்துப் பார்க்க, பாவம் விக்னேஷ்! சிரிப்பை மறைக்க பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

அப்படியானால், மனைவி களனிப் பல்கலைக்கழகத்தில் அவளை அழைத்துச் சென்று விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாளா என்ன? என்று தோன்ற,

"சரி அப்போ நான் ட்ராப் பண்ணிட்.."என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மீண்டும் இடையிட்டது அவள் குரல்.

"நீயொண்ணும் என்னை ட்ராப் பண்ண தேவையில்லை. என்ட் உன்னோட ஸ்பைஸ், பாடிகார்ட்ஸ் எதுவும் என் பின்னாடி அனுப்பாதே..நானே முடிஞ்சதும் வீடு வந்துருவேன். புரிஞ்சுதா?" என்று அவள் தலையாட்டிக் கேட்க,

மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டவனின் தலையும் தானாக, “ம்” என்ற வண்ணமே ஆடியது.

அவளோ, அவனை நோக்கி, “பை” என்று பிரியாவிடை கொடுக்க, அப்போதும் அவனது அழுந்த மூடிய இதழ்கள் “ம்” என்றே சொன்னது.

அவள் திமிராக பேசி விட்டு நகர்வதும், இவன் அமைதியாக நின்று அனைத்துக்கும், “உம்” கொட்டுவதும் கண்டு விழிகள் மலர்த்தி நின்ற விக்னேஷ், ஆச்சரியத்துடன் கேட்டான்,

“என்ன மச்சி? .. இவ்ளோ பேசிட்டு போறா.. நீயும் “உம்.. உம்” னு பூம்பூம் மாடு மாதிரி.. தலையாட்டிட்டு இருக்க?”என்று.

அருகிலிருந்த வாட்டர் பாட்டில் திறந்து வாயில் தண்ணீரை சரித்துக் கொண்டவன்,

நம்பிக்கை ததும்பும் விழிகளுடன், “அன்னைக்கு எங்கே போறோம்னு என் கிட்ட இன்பார்ம்

பண்ணாமல், ஹாஸ்பிடல் வரைக்கும் போனவ, இன்னைக்கு என்கிட்ட சொல்லிட்டுப் போறா.. ஸோ.. அவள் மனசுல.. என்னைப் பத்தி சின்ன அபிப்பிராயம் தோன்றியிருக்குன்னு தானே அர்த்தம்?..''என்றான்.

''அதுக்காக.. அவளைத் தனியா அனுப்பப் போறியா மச்சி..?'' என்று சிறு கவலையுடன் கேட்டான் விக்னேஷ்.

அவள் முன்னாடி வேண்டுமானால் யாழினி மகேந்திரனாக இருக்கலாம். ஆனால் தற்போது அவள் திருமதி. யாதவ் மகாதேவன்! அவளுக்குக் கட்டாயம் பாதுகாப்பு வேண்டும்.

விக்கிக்கு புறமுதுகிட்டுக் கொண்டே குளியலறை நோக்கி நடந்தவன், ''தனியா அனுப்பப் போறேன்னு யார் சொன்னா..?''என்றவனாக,

நின்று திரும்பி, விக்னேஷை நோக்கி, 'அதான் நீ இருக்கியே?' என்பது போல ஒரு பார்வை பார்த்தான் யாதவ்.

“டேய்.. நான் இன்னும் சாப்பிட கூட இல்லையேடா!!”என்று விக்னேஷ் புலம்பியதையெல்லாம், காதில் கேளாதவன் போலவே நகர்ந்தான் யாதவ்.

யாதவன் வீட்டு போர்டிகோவில் அத்தனை கார்கள் வரிசையாக நின்றிருக்க,

‘இல்லை நானாகவே போய்க் கொள்கிறேன்’ என்று வீண் பிடிவாதம் பிடித்து,

தெருவில் தனியாக நடந்து செல்லும் யாழினியை, காரை மெதுவாக அவள் பக்கம் ஓட்டிய வண்ணமே பார்த்தான் விக்னேஷ்.

“ரெண்டு பேரும் ஜாடிக்கு ஏத்த மூடி தான்” என்று மெல்லமாக முணுமுணுத்துப் பெருமூச்செறிந்தவன், அவள் பக்கமாக காரை நிறுத்தி, உள்ளிருந்த வண்ணமே,

“சிஸ்டர்.. வாங்க நானும் களனி பக்கம் தான் போறேன்..உங்களை ட்ராப் பண்ணிட்றேன்” என்று சொல்ல,

முதலில் மறுக்க வாய் திறந்தவள், பின்னர் அப்படியே அமைதியானாள்.

அவள் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கியது. 'யாதவன் பற்றி அவளறியாத கறுப்புப் பக்கங்களை அறிந்து கொள்ள அரிய வாய்ப்பாக' இதைக் கருதியவள்,

"ஓ.. தேங்க்ஸ்!!..."என்று மலர்ந்த முகத்துடனேயே ஏறி அமர்ந்தாள்.

ஸ்மூத்தாகவே பயணித்தது விக்கியின் கைகளில் இருந்த அவனுடைய கார்.

ஸ்டியரிங் வீலில் விக்கியின் கைகள் லாவகமாக சுழன்ற விதத்தைப் பார்த்த யாழினிக்கோ, ஏனோ தன் கணவன் காரோட்டும் விதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் போல தோன்றியது.

ஸ்டியரிங்கில் யாதவனின் நேர்த்தியான விரல்கள் படிந்திருக்கும் விதம்,

கியர் போடும் போது கூட உள்ள ஸ்டைல், ட்ராபிக்கில் காத்திருக்கும் போது ஸ்டியரிங்கில் அவன் விரல்கள் போடும் தாளம்,

தாடியை தடவி விட்டு கொள்ளும் அவன் கைகள், கீழுதடு கடிக்கும் அவன் பற்கள்··· அடிக்கடி ரியர் வ்யூ கண்ணாடி வழியாக அவளை மொய்க்கும் விழிகள் என எல்லாமுமே ஒரு நொடி கண் முன்னாடி வந்து போனது.

எவ்வகையில் கற்பனை செய்தாலும் யாதவன், அவளுக்கு ஒரு படி மேலாகவே தெரிய,

கணவன் அவள் மனதில் விதையாக விழுந்த விந்தையை அறியாது போனாள் யாழினி.

கணவன் பற்றிய சிந்தனையில் இருந்து வெளியே வந்தவள்,வீதியில் கண்ணாக இருந்தவனைப் பார்த்து, ‘‘யாதவ்வை உங்களுக்கு ரொம்ப நாள் தெரியுமா..?’’என்று கேட்டாள்.

அந்தக் கேள்வியில் சட்டென அவளைத் திரும்பிப் பார்த்து புன்னகைத்தவன்,

“என்ன சிஸ்டர் இப்படிக் கேட்டுட்டீங்க?.. சின்ன வயசுல இருந்து பழக்கம்!!.. எல்கேஜியில் இருந்து ப்ரண்ட்ஸ்!!..”என்று சொல்ல,

“ஓ..!!” என்று மெல்ல குவிந்தது அவள் அதரங்கள்.

அப்படியானால் இவனிடம், அவள் மனதிலிருக்கும் அத்தனை கேள்விகளுக்கும் பதில் இருக்கக் கூடும் என்று எதிர்பார்த்தவள், மென்மையாக தன் கேள்விக் கணைகளைத் தொடுக்கவாரம்பித்தாள்.

காய்ந்த இதழ்களை ஈரப்படுத்திக் கொண்டவள், “அ.. அப்படின்னா.. அவன்..என்..னை எப்போ மீட் பண்ணான்னு உங்க கிட்ட சொல்லியிருக்கானா ..?” என்று கேட்க, மலர்ந்திருந்த முகம், ப்யூஸ் போன பல்பு போல ஆனது விக்னேஷுக்கு.

“ம்ஹூஹூம் இல்லை சிஸ்டர்..!! அநேகமா எல்லா விஷயத்தையும் ஷேர் பண்றவன்.. இதை மட்டும் என்கிட்ட சொன்னதில்லை.. ” என்ற அவனது

பதிலில், யாதவனின் மனைவியின் முகத்திலும் அதே ரியாக்ஷன்.

தொடர்ந்த விக்னேஷ் ஏதோ சொல்ல அமைதியாக அதற்கு செவி தாழ்த்தலானாள் அவள்.

“மூணு மாசத்துக்கு முன்னாடி.. நிவ்யர் ஈவ் அன்னைக்கு..நம்ம கோல்ஃபேஸ் ரோட்ல.. ஒரு பந்தயம்.!!” என்று விக்னேஷ் சொல்ல,

‘நேற்றிரவு யாதவன் சொன்ன அதே பந்தயம்!’ என்றே தோன்றியது யாழினிக்கு.

இருப்பினும் தெரிந்த கதை என்பதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்,

“எதுக்கு பந்தயம்?”என்று கேட்டாள் சுந்தரப் பெண்.

அதை எப்படி விக்னேஷும் தன் வாயால் சொல்வான்? இருப்பினும் கலவரத்துடன் தலை சொறிந்தபடி, “அது.. சும்மா ஒரு பொண்ணு.. விஷயம் சிஸ்டர்..”என்றதும் தான் தாமதம்,

“வாட்??.. பொண்ணா??” என்று கோபத்துடன் வாய் திறந்தாள் அவள்.

தன் கணவன் ஓர் பெண்ணுக்காக பந்தயம் சென்றிருக்கிறான் என்ற விஷயம் கேள்விப்பட்டதும், எல்லா டிபிக்கல் மனைவி போலவும் ஓர் பொஸஸிவ் உணர்வு தோன்றியது அவளுக்குள்ளும்.

நினைத்தது போலவே தப்பாக நினைத்துக் கொண்டாளே என்று உள்ளூற வருந்தியவள்,

“ஐய்யைய்யோ.. நீ நினைக்குற மாதிரி எதுவும் இல்லைமா..?”என்று இதுவரை பன்மையில் பேசிக் கொண்டிருந்தவன், இலகுவாக ஒருமைக்கு மாறி சொன்னான்.

அவள் விழிகளில் தெரிந்த உச்சபட்ச தவிப்பை பார்க்கும் போது, அன்றொரு நாள் யாதவன், “அவளுக்கும் என் மேல லவ் இருக்குடா.. ஆனால் அதை புரிஞ்சுக்க மறுக்குறா!!”என்று சொன்னது எத்தனை உண்மை? என்றே தோன்றியது விக்னேஷூக்கு.

கணவன், மனைவிக்குள் சந்தேகத்தீயை மூட்டி விட்டு விடுவோமோ என்று பயந்தவன்,

“ என் நண்பன் யாதவ்.. எல்லார் கூடேயும் ஜாலியா பழகுவான்மா.. அதனால அவனுக்கு தோழிகள் ஜாஸ்தி..”என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மெல்ல இடுங்கியது அவள் புருவங்கள்.

அதைப் புரிந்து கொண்டவன் பரிதவிப்பான முகத்துடன், “நீ நினைக்குற மாதிரி எக்ஸ்ட்ரீமா எதுவும் இல்லை..தோழிகள்னாலும் ஃப்ரண்ட் ஸோன் தான்.. லிமிட்டா தான் பழகுவான்…

அதில் ரெஜினான்னு ஒரு பொண்ணு.. நம்ம யாதவ் கூட பழகுறது.. அவள் பாய்ஃப்ரண்ட்டுக்கு பிடிக்கலை..

அவன் பேரு பிரகாஷ்.. வந்து சத்தம் போட்டான்.. உன் புருஷனுக்குத் தான் எதிலேயும் விளையாடிப் பார்க்கணும்னு ஆசை அதிகமாச்சே..அதனால வந்த பந்தயம் தான் அது..

அவன் வாழ்க்கையையே திருப்பிப் போட்ட ரேஸ்..எல்லாரும் அவன் தான் ஜெயிக்கப் போறான்னு எதிர்பார்த்துட்டு இருந்தோம்.. சடன்லி யாரும் இல்லாதப்போ..காற்றைப் பார்த்துக்கிட்டு “ தள்ளிப்போ தள்ளிப்போ” ன்னு சொல்லிக்கிட்டே விழுந்தவன் தான்.. அப்புறம் மூணு மாசம் கழிச்சு தான் கண் முழிச்சான்.. எங்கே அவனை திரும்ப பார்க்கவே முடியாமப் போயிருமோன்னு நானும், அவன் சித்தப்பாவும் பயந்துட்டோம்..”என்று கண்களில் கவலைத் ததும்ப சொன்னான் விக்னேஷ்.

அவன் நினைவுகள் மூன்று மாதத்துக்கு முன் நிகழ்ந்த நினைவுகளிலேயே சுற்றிச் சுழல்வதை, அவன் விழிகளில் தவழும் சோகம் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் அவள் மனமோ, “நானும், அவன் சித்தப்பாவும் பயந்துட்டோம்” என்றதிலேயே நின்றது.

“என்ன சித்தப்பாவா? யாதவ்க்கு சித்தப்பா இருக்காரா என்ன?..” என்று முதன் முதலாக

கணவனுக்கு ஓர் சொந்தம் உண்டு என்பதை அறிந்து ஆச்சரியத்துடன் கேட்டாள் யாழினி.

“ம்..ஆமா.. அப்படியே அவனையே ஜெராக்ஸ் எடுத்த மாதிரி.. ஆனால் என்ன கொஞ்சம் ஓல்ட் மேன்.. பார்க்குறவங்க எல்லாரும் அப்பான்னு தான் நினைச்சுக்குவாங்க.. யாதவனாகவே வாய் திறந்து..” இது என் அப்பா இல்லை.. சித்தப்பா.. மிஸ்டர். சங்கர்தேவன்” ன்னு சொன்னாலே ஒழிய.. யாருக்குமே தெரிய வாய்ப்பிருக்காது.. அவ்வளவு உருவ ஒற்றுமை.. இப்போ முக்கியமான காண்ட்ராக்ட் விஷயமா மலேசியாவில் இருக்காரு.. சீக்கிரமே அவர் ஸ்ரீலங்கா வந்ததும் நீ அவரை சந்திக்கத் தானே போற?..” என்று சித்தப்பாவைப் பற்றிச் சொல்ல அவளுக்கு அதில் அவ்வளவாக மனம் லயிக்கவில்லை.

மனம் லயித்தது என்னவோ, யாதவனிடமே தான். மீண்டும் விக்னேஷை பழைய ட்ரேக்கிற்கு மாற்ற நினைத்தவள்,

“அப்புறம் யாதவனுக்கு என்னாச்சு?”என்று கேட்டாள்.

களனிப் பல்கலைக்கழக வளாக வீதியில் வண்டியைத் திருப்பிய வண்ணமே, அவனும்,

"அப்றம் என்ன?.. "ஜானு" ன்னு அலறியடிச்சுக்கிட்டு எழுந்து.. ஒரு பைத்தியக்காரன் மாதிரி.. ஜானுவைத் தேடி போக ஆரம்பிச்சுட்டான்..அவனைப் பிடிச்சு.. சாந்தப்படுத்தி.. திரும்பவும் தூங்க வைக்குறதுக்குள்ள போதும் போதும் ஆகிருச்சு..

திரும்பவும் கண்ணு முழிச்சதும், "நான் ஜானுவை ஒரு தடவை மிஸ் பண்ணது போதும்.. திரும்ப மிஸ் பண்ண தயாரில்லை" ன்னு சொன்னான்.. நமக்கு ஒண்ணும் புரியலை..ஆக்ஸிடெண்ட்டில் தலையில் அடிபட்டதால் ஏதாவது ஆகிருச்சோன்னு நினைச்சோம்!!..

ஆனால் அவன் உன் டீட்டெயில்ஸ் எல்லாம் கரெக்டா சொன்னான்.. "யாழினி.. ஆர்க்கியோலஜிஸ்ட்.. அங்க அடையாளம் ".. எல்லாமே..!!. அப்புறம் உன்னை கண்டுபிடிக்க ஈஸி ஆகிருச்சு..அப்போ தான், யாதவ் ஏன் தன்னைத் தேடி வந்த பொண்ணுங்கள எல்லாம் தள்ளி

வைச்சான்றதுக்கான காரணம் புரிஞ்சது.. ஏன்னா அவன் மனசுக்குள்ள உன்னைப் பத்தி ஆழமான காதல் இருந்திருக்கு… ” என்று உண்மை அனைத்தையும் சொல்ல அப்போது தான் விஷயம் முழுமையாகப் புரிந்தது அவளுக்கு.

அப்படியானால், அவள், அவனை அந்த விபத்துக்கு முன்னர் தான் சந்தித்திருக்க வேண்டும்!!

விபத்தின் பின் மறந்த அவள் நினைவுகள் தூண்டி விட்டிருக்கப்பட்டிருக்கவும் வேண்டும் என்று எண்ணிக் கொண்டவளுக்கு,

விபத்தன்று.. யாதவனின் விழிகளுக்கு மட்டும் தெரிந்த அந்த ஓவியப் பெண்ணை நினைக்கும் போது ஏனோ மயிர்க் கூச்செறிந்தது.

கேம்பஸ் நுழைவாயில் முன்னாடி இறங்கிக் கொண்டவள், “அப்போ கிளம்பறேன்… ட்ராப் பண்ணதுக்கு தேங்க்ஸ்!” என்றவளாக இறங்கிக் கொண்டவளின் விழிகள்,

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று புரியாமலேயே நடந்தாள்.

நண்பகல் நேரமாக இருப்பினும், மேகம் ஏனோ கருக்கட்டி, இருள் மூட்டமாகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வானத்தை அண்ணாந்து பார்த்த தொல்லியல் பெண், ‘இன்று அநேகமாக மழை பெய்யக் கூடும்” என்று வானிலை ஆய்வு மைய அதிகாரியாக மாறி முடிவெடுத்துக் கொண்டாள்.

இப்போதெல்லாம் கொஞ்சமே கொஞ்சம் மேடிட்டு தெரிந்தது அவளுடைய மணிவயிறு.

அவளையும் அறியாமலேயே அவள் கைகள், அவள் பிரியப்படாத குழந்தையை அணைத்துப் பிடிக்கவும் செய்திருந்தது.

களனி பல்கலைக்கழகத்தின், ‘டிப்பார்ட்மென்ட் ஆப் ஆர்க்கியோலஜி’ யில் இன்று சிறப்பு விரிவுரை ஒன்றை மாணவர்களுக்காக வழங்கி விட்டு,

கற் படிகளில் மெல்ல மெல்ல இறங்கி வந்து கொண்டிருந்தவளிடம் வந்தாள் ஓர் இளம் மாணவி.

அவளைக் கண்டதும் கொஞ்சம் எக்ஸைட்டானவளாத் தெரிந்த அம்மாணவி,

“ஓஹ் மேம்!!.. உங்களை என் கேம்பஸ்ல பார்ப்பேன்னு நினைச்சு கூட பார்க்கலை.. யூ ஆர் வன் ஆஃப் மை ரோல்மோடல்.. பியூச்சர்ல உங்களைப் போல.. ஒரு ஆர்க்கியோலஜிஸ்ட்டா வரணும்ன்றது தான் என்னோட ஆசையே.. ப்ளீஸ் என்னோட புக்ல உங்க ஆட்டோக்கிராஃப் போட்டுத் தர முடியுமா?”என்று புத்தகம் காட்டி கேட்க, அவளால் மறுக்கவும் முடியுமோ?

மென்மையாக புன்னகை சிந்தி, “ஷ்யூர்..” என்ற வண்ணம் நோட்டுப் புக்கை வாங்கியவள், தன் கையெழுத்திட்டவளாக, அந்த மாணவியைப் பார்த்து “ஆல் த பெஸ்ட்!” என்று சொல்லவும் தவறவில்லை.

“தேங்க்ஸ் மேடம்!!” என்றவாறு அதனை எடுத்துக் கொண்டு அந்தப் பெண்ணும் நகர,

புன்னகை மலர சிரித்துக் கொண்டே திரும்பியவளின் பார்வையில் பட்டான் அவன்!! ஸ்ரீராம்!!

கண்களில் ஒரு வித தவிப்புடன், இதழ்களில் எதையோ சொல்லி விடும் துடிப்புடன், பல்கலைக்கழகத்திற்கு வெளியே, வீதியில் நின்றிருந்தான் அவன்.

அவனைக் கண்டதும், சொற்ப நாட்களாக அவள் மறந்திருந்த பழைய நினைவுகள் அவளைத் துரத்தவாரம்பித்தது.

இத்தனை நாளும் அவள் சிந்தனையில் வராது, இன்று நேரில் வந்த அவன்!!

அவனைப் பார்த்ததும் இதயத்தில் எழுந்த ஓர் வினா. “நிஜமாகவே இவனைக் காதலித்தோமா? இல்லை அது ஓர் ஈர்ப்பா?” என்ற வினா.

உண்மையாக காதலித்திருந்தால், இன்னொருவனுக்கு மனைவியான பின்னும், அவன் நினைவுகள் இன்றி இவளால் இருந்திருக்கவும் முடியுமா?

அவனது விழிகளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஞாபகம் வந்து போனது அவளது தந்தையின் இறுதிச் சொற்கள்!

அதிலும் தந்தை அத்தனை பேர் முன்னாடி "நீ ஒரு "நல்ல மகள்" னு நிரூபிச்சிட்டேல்ல? இன்னைக்கு சொல்றேன்.. உன் அப்பாவுக்கு நட்பின் ஞாபகார்த்தமாக நான் கொடுத்த இந்த அருணாக்கயிறும் வேணாம்.. நீயும் வேணாம்" என்று அவளைப் பற்றிக் கொஞ்சமும் யோசியாமல்,

அவள் மனதைக் குத்திக் குதறிய நினைவுகள் எழுந்து அவளைக் கொல்லவாரம்பித்தன.

அவள் மறக்கத் துடிக்கும் ஞாபகங்கள்..அவள் கண் முன்னாடி காட்சியாய் விரிகிறது!!

எல்லாமும் சேர்ந்து அவளை நிலைகொள்ள விடாமல் தடுக்க, கண்கள் இரண்டும் கலங்கி நின்றாள் அவள்.

தூரத்தே, அவள் முகம் பார்த்து ஏக்கத்துடன் நின்றவனை ஒரு மனிதனாகக் கூட மதிக்கவில்லை அவள்.

ஸ்ரீராம் மேல் எந்தவிதமான கோபமும், வருத்தமும் அவளுக்குள் ஏற்படவில்லை தான்.

இருந்தபோதிலும், அவன் முகம் பார்க்கும் போது தந்தை ஞாபகம் எழவே, அவளால் ஸ்ரீராமை நிமிர்ந்தும் பார்க்க முடியவில்லை.

முகமோ மெல்ல மெல்ல இறுக்கமாக மாறி, கறுக்கத் தொடங்க, ராமை ஏறெடுத்தும் பாராமல் மெல்ல நகர்ந்தாள் அவள்.

பின்னே நில்லாமல் தொடர்ந்தது ஸ்ரீ ராமின் காலடி ஓசை!!

தூரத்தில், மெல்லமாக தவிப்புடன்,

"யாழினி.. ப்ளீஸ்ஸ்ஸ்!! ஒரு நிமிஷம்!!.." என்று அவன் கத்துவது இவள் காதுகளில் நன்றாகவே

கேட்டது. மறந்தேனும் திரும்பிப் பார்க்கவேயில்லை அவள்.

அவனை விட்டு அப்புற நகர்ந்திட வேண்டும் என்ற உந்துதல் பிறக்க, இவளது நடையோ துரிதமானது.

கூட்டத்தோடு கூட்டமாக பாதசாரிகள் கடவையில் பாதை மாறி அவள் வந்து விட, அந்நேரம் பார்த்து விழுந்த க்ரீன் சிக்னலில் ராம் பாதைக்கு மறுமுனையிலேயே நிற்கும் படியாயிற்று.

பாதை கடந்து மெல்லோட்டத்துடன் வந்தவள் நெஞ்சு மத்தியில் கை வைத்து, ஆசுவாசப் பெருமூச்சு விட்டு நிமிர்ந்தவளின் பார்வை, வீதியோரமே நிலைத்து நின்றது.

களனி புத்தர் விகாரை வளாக தெருமுனையோரம் தன்னுடைய, அதி நவீன ரக, கறுப்பு நிற பென்ஸ் காரில்,

முதுகு சாய்த்து, இரு கைகளையும் மார்புக்கு குறுக்காக கட்டிய வண்ணம்,

கண்களில் ஸ்டைலாக கூலர்ஸுடன் நின்றிருந்தான் யாதவன்!! யாதவ் மகாதேவன்!!

அவளது துரித நடை, கணவனைக் கண்டதும் மெல்ல மெல்ல தேம்பிய நடையாக மாறியது.

கணவனைப் பார்த்து அவள் முகம் வெளிறிப் போக, அவள் இதழ்களோ தானாக முணுமுணுக்கத் தொடங்கின.

“இன்னைக்கு நாளே சரியில்லை போல இருக்கே.. அங்கே என்னடான்னா அவன் நிற்கிறான்.. இங்கே என்னடான்னா இவன் நிற்கிறான்.” என்றவாறே திரும்பி, யாதவனைப் பாராதது போல வேறு பக்கம் நடக்க முயன்றாள் யாழினி.

இன்று காலை வரை கணவன் மீது எந்தவிதமான அதிமிதக் கோபமும் இல்லாதிருந்தவளுக்கு, ஸ்ரீ ராமைக் கண்டதும் பழைய நினைவுகள் தூண்டி விடப்பட, அவளுக்கு கணவன் முகமும் கசப்பான முகமாகவே காட்சியளித்தது.

அன்று, ராமும், தந்தையும் இணைந்து “இந்தக் குழந்தைக்கு யார் அப்பா?” என்று கேட்டு, அவளைப் புரிந்து கொள்ளாமல் அவமானப்படுத்தி வேளை,

“இது என் குழந்தை” என்று அனைவர் முன்னாடியும் பகர்ந்து, அவளை மனைவியாக ஏற்ற ஆபத்பாந்தவன் தான் அவள் கணவன்!

இருப்பினும் ‘யாதவன்’ என்னும் ஓர் பணக்காரன் அவள் வாழ்க்கையில் வராதிருந்தால், இந்த அவமானமும், கல்லெறி போன்ற சொற்களையும் அவள் கேட்கவே நேர்ந்திருக்காதே?

கல்யாண நாள் நினைவுகளில், அவளையும் மீறி கண்களில் நீர் துளிர்க்கவாரம்பித்தது அவளுக்கு.

அவளை விடாமல் பின்தொடர்ந்த யாதவன், இறுதியில் அவள் முன்னங்கையைப் பிடித்து, அவளைத் தன்னை நோக்கி திருப்பினான்.

அவள் உடல் தான் திரும்பியதே ஒழிய, அவள் முகம் அவனை நோக்கித் திரும்பவேயில்லை.

மனைவியின் கூந்தல் நோக்கிய வண்ணம், ''ஹேய் ஜானு.. நில்லு.. எங்கே கிளம்பிட்ட?.. வீட்டுக்குத் தானே போற? வா நாம சேர்ந்தே போகலாம்.'' என்றவனாக, அவளை அழைத்தான் யாதவன்.

அவள் தொண்டையில் முட்டிக் கொண்டிருந்த அழுகை, யாதவனின் அழைப்பில் சீற்றமாக வெடித்தது.

அவன் கையை தன்னிலிருந்தும் அப்புறப்படுத்த முயன்றவளாக, ''ம்முடியாது க்கைய்ய வ்விடு.. ந்நான் உன் க்கூட வர மாட்ட்.. ட்டேன்.. நான் வீட்டுக்கு வரலை.. எனக்கு நிம்மதி வேணும்.. நான் நிம்மதி தேடிப் போறேன்.. என்னை வ்விடு ய்யாதவ்..!!!'' என்று எகிறினாள் மனைவி.

அவளுடைய திணறல், திமிறல் எல்லாம் யாதவனிடம் செல்லுபடியாகவில்லை.

அவள் காதோரமாகக் குனிந்து, ''நீ ஓடி வந்ததும் விட்டுட்டுப் போக.. என்னை என்ன ஸ்ரீராம்னு நினைச்சியா? நான் யாதவ் மகாதேவன்.. உன்னை

அவ்வளவு சீக்கிரம் விடுவதாக இல்லை" என்று உறுதியான குரலில் சொன்னவன்,

அலேக்காகக் குனிந்து, அவளைக் கைகளில் தூக்கிக் கொண்டான்.

அவளுக்கோ நிமிடத்தில் கணவனின் இதயப்பக்கத்தில் அவள் தலை வந்ததில் இதயம் பக்கென்றானது என்றால், "நீ ஓடி வந்ததும் விட்டுட்டுப் போக.. என்னை என்ன ஶ்ரீராம்னு நினைச்சியா?" என்று கேட்ட தினுசில் இன்னோர் அதிர்ச்சி.

அப்படியானால் கணவன், ராம் தன்னைப் பின்தொடர்ந்து வந்திருப்பதையும் கூட கவனித்திருக்கிறானா என்ன? என்ற எண்ணமும் தோன்றலானாது அவளுக்கு.

அவளோ அவன் பிடியிலிருந்து விலக பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருக்க, இவனோ தன் காரை நோக்கி நடந்தவனாக, "என்ன தான் இருந்தாலும்.. ஶ்ரீ ராம் என்ன சொல்ல வர்றான்னு நீ

கேட்டிருக்கலாம்.. நான் ஒண்ணும் தப்பா எடுத்துக்க மாட்டேன்” என்று சொல்ல..

கணவன் ஸ்ரீ ராமின் பேச்சை எடுத்ததில் சுரீரென்று பொங்கியெழுந்தது கோபம்.

அவளை பூமாலை போல வண்டியில் அமர வைத்து விட்டு, டிரைவர் சீட்டில் வந்து உட்கார்ந்தவனிடம் ஓயாமல் கத்திக் கொண்டே இருந்தாள் யாழினி.

அவளுடைய கேள்விகள் எல்லாம் அவள் மனதளவில் எவ்வளவு நொறுங்கிப் போயிருக்கிறாள் என்பதையே காட்ட, அவள் சோகம் அவனையும் தாக்கியது.

சுந்தரப் பெண்ணின் கண்களில் தாரை தாரையாக வழிந்தது கண்ணீர். கண்ணீரின் விளைவாக விழித்திரை வேறு கலங்கித் தெரிய,

தன்னெதிரே ஸ்ரீராம் இருப்பது போல கற்பனைப் பண்ணிக் கொண்டாளோ பெண்ணவளும்?

குரல் தழுதழுக்க, ‘‘ஏன் எல்லாரும் சேர்ந்து.. என்னை டார்ச்சர் பண்றீ.. ங்க? ஏன் என்னை எல்லாரும் கை பொம்மை மாதிரி யூஸ் பண்ணிக்.. குறீங்க.. நான் எதை மறக்கணும்னு நினைக்குறேனோ.. அதை ஏன் எனக்கு ஞாபகப்படுத்துறீங்க..?’’என்று அவள் கத்தியழ, யாதவனுக்கோ ஏதோ செய்தது மனம்.

மனதுக்கு உகந்த பெண்ணின் கண்ணீர்.. அவனை என்னவெல்லாமோ செய்தது.

அவளைப் பார்த்து ஹஸ்கி குரலில், ‘‘ரிலாக்ஸ் ஜானு.. ரிலாக்ஸ்!! .. நீ எதையும் ஞாபகப்படுத்திக்கணும்னு அவசியமில்லை. ஜஸ்ட் ரிலாக்ஸ்!!.. வீட்டுக்குப் போனதும் பேசிக்கலாம். ஓகே?’’என்று சமாதானப்படுத்தியவன்,

ஒருவாறு தன் உணர்ச்சிகளை கட்டுக்குள் கொண்டு வந்து வண்டியை எடுத்தான்.

வழிநெடுகிலும் ஓயவேயில்லை மனைவியின் கண்ணீர். இவனுக்கோ வண்டியை ஓட்டுவதா?

இல்லை தன் ஜானுவை சமாதானப்படுத்துவதா? என்றே தெரியவில்லை.

வீடு வந்ததும், காரை தரித்தவன் செய்த முதல் வேளை, மனைவியை இறுக அணைத்துக் கொண்டது தான்.

காற்றுக்கு கூட இடைவெளி கொடுக்க மறுத்து, அப்படியே இறுக அணைத்து.. அவள் தலையை தன்னுள் புதைத்து, “அழாதே யாழினி.. எவ்ரிதிங் இஸ் பைன்.. உனக்காக நான் இருக்கேன்.. யார் போனால் என்ன.. நான் இருப்பேன்” என்று ஆறுதல் மொழிகள் சொல்லித் தேற்றவாரம்பித்தான் மனைவியை.

அவளின் நடுக்கமும், கணவனின் வலிய உடல் தந்த அழுத்தத்தில் கொஞ்சம் குறையத் தான் செய்தது.

ஆனால் எங்கிருந்தோ ஒரு எண்ணவலை, அவன் இதயத்தில் தலை சாய்த்திருப்பது தீயெனச் சுட, அவனை விட்டும் பிரிந்தாள் மங்கை.

அவன் என்ன? ஏதென்று புரியாமல் அவளை பதற்றமாக உச்சாதி பாதம் வரை ஆராய, அவளோ அடிக்குரலில் இருந்து சீறும் தொனியில்,

“எனக்கு உன்னைப் பிடிக்கலை!!! .. நான் வேணாம்னு ஒதுங்கிப் போனாலும்.. ஏன் என் கண் முன்னாடி வந்து டார்ச்சர் பண்ற?..”என்று கத்தியவள்,

அவனுக்காக காத்திருக்காமல் காரை விட்டும் இறங்கி மீண்டும் நுழைவாயிலை நோக்கி நடக்கவாரம்பித்தாள்.

அவள் வீட்டுக்குள் வராமல், வெளியே நடப்பதை அவதானித்தவன், அவள் பின்னால், இறங்கி ஓடிச் சென்று, கைப்பற்றி தடுத்து நிறுத்தி,

“ஆனால் எனக்கு உன்னை பிடிச்சிருக்கே ஜானு?? உன்னை மட்டும் தான் பிடிச்சிருக்கு ஜானு.. உனக்கும், எனக்குமான பந்தம்.. அது புனிதமானது.. அதை தெளிய வைக்கத் தான் நான் இவ்வளவும் பண்றேன்…அது மட்டுமில்லாமல் உன் குழந்தைக்கு அப்பா நான்..” என்று சொன்ன வேளை இடையிட்டது அவள் குரல்.

அவன் பிடியிலிருக்கும் அவள் கையை உதறி அப்புறப்படுத்தியவள், அகல விரிந்த விழிகளுடன்,

“யார் சொன்னாஆஆ? .. இந்தக் குழந்தைக்கு அப்பா நீ தான்னு நான் சொன்னேனா? நானே அறியாமல் வந்த குழந்தை உன்னுடையதுன்னு சொல்றியாஆ? இந்தக் குழந்தைக்கு அப்பா யார் வேணும்னாலும் இருக்கலாம்.” என்று சொல்ல,

யாதவன் தனக்குள் எழுந்த சீற்றம் அடக்க பெரும்பாடு பட்டான்.

கை முஷ்டி மடக்கி, பற்களைக் கடித்துக் கொண்டு, கழுத்து நரம்பு புடைத்து வெளித்தெரிய, நின்றவன்,

“ஜ்ஜானு.. ப்போதும் நிறுத்த்.. து.. ந்நீ என்னை நோகடிக்குறதா நெனச்சிக்கிட்டு.. உ.. உன்னை நீயே த்தப்பா தரம் தாழ்த்திக்குறே..!!” என்று சொல்ல, அதைக் கேட்டு அந்தப் பேச்சை அத்தோடு விட்டாளா அவள்?

அவளோ அவனை நோகடிப்பதாக எண்ணிக் கொண்டு, “நான் ஏன் வேற யார் கூடயோ படுத்து இந்தக் குழந்தையை வயித்துல வாங்கியிருக்கக் கூடா..” என்று கேட்டு முடிக்க முன்னர் அவளுடைய கன்னத்தில் ஆழப்பதிந்திருந்தன அவனுடைய ஐவிரல்கள்.

“ஜ்ஜாஆஆனுஊஊ” என்று கத்திய வண்ணமே அறைந்தவனின் சீற்றம் இன்னும் குறையவில்லை என்பதைக் காட்ட, அவனுடைய தோள்புஜங்கள் இரண்டும் அவன் விட்ட கோபப் பெருமூச்சில் இன்னும் உயர்ந்து தாழ்ந்து கொண்டிருந்தன.

குழந்தை விஷயத்தில் அவன் கறாராக நடந்து கொள்வது அவள் அறிந்ததே. திரும்பத் திரும்ப அப்படிக் கூறின், எந்த ஆண்மகனுக்கும் கோபம் போகத் தானே செய்யும்?

அடுத்த நிமிடம்.. அவள் கன்னத்தில் பதிந்திருந்த அவன் கைத்தடம் அவன் மீதே அவனை கோபம் கொள்ள வைத்தது.

உள்ளங்கையால் கண்களையும் முகத்தையும் அழுந்த துடைத்துக் கொண்டே அவளைப் பார்த்தவனின் விழிகள் கலங்கியிருந்தது.

ஓரெட்டு நெருங்கி வந்து அவள் கைச்சந்தைப் பிடித்து உலுக்கியவன்,

ஒடிந்துபோன குரலில், ‘‘ஜானு.. ஏன் இப்படி வார்த்தைகளால் என்னைக் கொல்லுற…? ஒர்.. ரு.. ஒரு டெஸ்ட் போதும்.. இது என் குழந்தை தான்னு நிரூபிச்சிட்டு… இந்தக்குழந்தை பிறந்தப்புறம் உனக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை ன்னு போயிட்டே இருக்க என்னால முடியும்!!.

ஆனால் நான் உன்கிட்ட இருந்து காதலை எதிர்பார்க்குறேன். உன் கூட காலம் பூரா சந்தோஷமா வாழணும்னு எதிர்பார்க்குறேன்..

நான் அனுபவிக்க தவறிய தாயன்பை உன் மூலமா அனுபவிக்கணும்னு எதிர்பார்க்குறேன்.. உன் மடியில் தலை வைச்சு படுக்கணும், உன் முதல் குழந்தையா நான் மாறணும்னு எதிர்பார்க்குறேன்.

இந்த உலகத்துலேயே உனக்கு நான் மட்டும் தான் முக்கியமானவனாக இருக்கணும்னு எதிர்பார்க்குறேன்··· புரிஞ்சுக்க ஜானு..” என்று தன் உள்ளத்தில் இதுகால் வரை தேக்கி வைத்த காதலை எல்லாம் ஒட்டு மொத்தமாக, பெண்ணவளின் காலடியில் கொட்டிக் கொண்டிருந்தான் அவன்.

அவனின் காதல் பெண்ணவளின் இதயம் தொட மறுத்தது. கைச்சந்தில் பதிந்திருந்த அவனுடைய அழுத்தம் வேறு அவளுக்கு வலிக்கவே, அவன் பிடியில் வளைந்து, நெளிந்து அவள் நிற்க,

அவனுக்கோ தன் காதலை அவளுக்கு உணர்த்தியே ஆக வேண்டும் என்று தோன்றியது.

சற்றும் யோசியாமல், அவள் இடையூடு கையிட்டு தன்னை நோக்கி இறுக அணைத்தவன், அவள் மறுக்க மறுக்க அவளது மென்மையான அதரங்களைக் கவ்விக் கொண்டான்.

அவளுடைய பெண்மைக் கோளங்கள், அவன் வலிய மார்புகளோடு நச்சென்று பதிந்தது. அவன்

கைவிரல்கள் இவளது கூந்தல் காட்டுக்கள் நுழைந்த் மயிர் அளைந்தது.

அவனது சுவாசம் இவள் நுரையீரல் அடைந்தது. அவனது முரட்டு இதழ்களின் வன்மையை இவள் உணர்ந்தாள். அவனது இதழ்கள் தந்த ஈரம் வேறு என்னமோ செய்தது அவளை.

இருப்பினும் அவன் ஸ்பரிசம் பிடிக்காமல் அவளைத் தள்ளி விட்டவள், அவன் கன்னத்தில் அறைந்திருந்தாள்.

அவனுக்கோ அவள் அடிகள் வலிக்கவேயில்லை. அந்த ஆண்மகனின் கண்களுக்கு அவளுடைய அதரங்கள் மட்டுமே கண்களில் பதிந்தது.

அந்தக் கள்ளூறும் இதழ்கள் அவனை இன்னும் இன்னும் வெறியேற்றுவதாக இருக்க,

அவள் அறையை பொருட்படுத்தாது மீண்டும் அவள் அதரங்களை தாபத்துடன் கவ்விக் கொண்டான் அவன்.

கணவனின் அதிரடியில் மூச்சுத் திணறியது அவளுக்கு. வீட்டு முற்றம், பணியாளர்கள் இருக்கக் கூடும் என்றெல்லாம் யாதவன் கவலைப்பட்டதாகவே தோன்றவேயில்லை.

அவன் கண்களில் தெரிந்தது.. தன் காதலை அவளுக்கு உணர்த்தியே ஆக வேண்டும் என்ற வெறி!!

அவனுடைய ஈரம், அவள் இதழ்களை குளிர்விக்க, அவனின் வன்மை ஏதோ செய்கிறது பெண்ணை.

கணவன் காட்டும் ஆவேசம் அவளுக்கு அடியோடு பிடிக்காமல் போக, தன் முகத்தை அவனிலிருந்தும் அகற்றியவள், மீண்டும் அறைந்தாள் அவன் முரட்டுக் கன்னத்திற்கு.

காதல் வந்த ஆண்மகன், தி க்ரேட் சாம்ராட் யாதவ் மகாதேவன், தன் காதலியின் முனனால் மதியிழந்து நின்றான்.

அவனுடைய விழிகள் அவளிடம் காதல் பிச்சை யாசிக்க, இதழ்களோ "ப்ளீஸ் என் காதலை புரிஞ்சுக்க ஜானு" என்றன ரொம்பவும் உணர்ச்சிப் பெருக்குடன்.

அவள் எதுவும் பேசவில்லை. அவனுடைய சிவந்த கண்களையே பார்த்திருந்தாள்.

தன்னால் உடல் உஷ்ணமாகியிருக்கும், உணர்ச்சிகள் ததும்பும் கணவனின் வெம்மை அவளையும் தாக்கிக் கொண்டு தானிருந்தது.

ஏதேதோ பொல்லாத எண்ணங்கள்!! அவனுடன் மஞ்சம் பகிரும் எண்ணங்கள்!! சொல்லத் தவிர்க்கும் எண்ணங்கள் அவன் பார்வையில் ஆட்கொண்டது இவளை!!

உணர்ச்சிகளின் வெம்மை தாங்க மாட்டாது மீண்டும் அவன் அவளது இதழ் நோக்கிக் குனிய, அவன் நெஞ்சில் கை வைத்து, தன்னிலிருந்தும் தள்ளி விட்டவள், அவன் பக்கத்தில் இருக்கும் போது தோன்றும் மாய உணர்வுகளில் இருந்து வெளியே வந்தாள்.

தன் கண்ணீரை அழுந்த துடைத்துக் கொண்டே அவனைப் பார்த்தவள், “நீயும் சராசரி ஆண்கள் மாதிரி.. இந்த உடம்புக்காகத் தானே காதலிக்குறது போல போலி வேஷம் போடுற?” என்றதும்,

அவன் விழிகளில் தோன்றிய வலி, அவன் உணர்ச்சிகளை முற்று முழுதாக இல்லாமல் செய்தது.

தன் காதலை காமமாகச் சித்தரித்து விட்டு செல்பவளை வெறித்துப் பார்த்துக் கொண்டு அவன் நிற்க, அழுது ஓய்ந்து போன விழிகளுடன் கூடத்தில் நுழைந்தவளின் கண் முன்னே,

யாதவனைப் போலவே ஓர் பெரியவர் நின்றிருப்பதைக் கண்டு அதிர்ந்தாள் யாழினி.

உள்ளே அமர்ந்திருந்தது யாதவனின் சித்தப்பா என்று சொல்லாமலேயே புரிந்தது அவளுக்கு.

அத்தியாயம் 12

யாதவன் தன்னிடம் அத்து மீறி நடந்து கொண்டதை தாங்க மாட்டாமல் விளைந்த கண்ணீரை, புறங்கையால் துடைத்துக் கொண்டே,

ஹாலுக்குள் நுழைந்தவள் கண் முன்னாடி யாதவனையே பிரதி செய்தாற் போன்று நின்றிருந்தார் ஓர் பெரியவர்.

அந்தப் பெரியவர் தன்னை யாழினிக்கு அறிமுகப்படுத்த தேவையேயின்றி.. வந்திருப்பது யாரென்று புரியலானது யாழினிக்கு.

அவரைக் கண்டதும், போர்ட்டிகோவில் நடந்தது அத்தனையையும் சித்தப்பா பார்த்திருக்கக் கூடுமோ? என்ற நடுக்கம் உடம்பெல்லாம் பரவ ஆரம்பித்தது அவளுக்கு.

அரிய பொக்கிஷத்தைப் பார்ப்பது போல அகல விரிந்த கண்களுடன், அவளது விழிகளையே பார்த்திருந்தவர்,

அதிர்ச்சி மேலோங்கியதால் கம்மிப் போன குரலுடன், ‘‘அந்தக் கண்ணில்.. லாத ஓவிய.. மே, கண் கொண்டு உயிர்ப்பெற்று வந்தது போல அப்படி.. யே இருக்க!! …யாதவன் வரைஞ்ச அதே கண்கள்.. அந்த ஓவியத்துடைய சிதைவடைஞ்ச கண்கள்!..நான் நிஜத்திலும் பார்க்கிறேன். என் மகன்.. ‘ஓவியப் பெண்ணும், ஜானுவும் ஒண்ணு தான் சித்தப்பா’’ ன்னு சொன்னதில் தப்பே.. யில்லை!!..’’என்றார்.

இவளுக்குமே அந்த ஓவியம் பார்த்து.. இவரைப் போலத் தானே அதிர்ச்சி மேலோங்கியது.

ஆகவே அவருடைய அதிர்ச்சி புரிந்தவளாக, கீழுதடு கடித்து, தரையில் அழுந்தக் கட்டைவிரல் ஊன்றியவளாக அமைதியாக நின்றாள் அவள்.

அவளருகில் மெல்ல மெல்ல எட்டுக்கள் எடுத்து வைத்து வந்தவர், அவளை நோக்கி மென்னகை சிந்தியவராக,

‘‘என் பையனுடைய ஜானு!! ..யாழினி.. மகேந்திரன்!!’’என்றதும் தான் தாமதம், ‘‘மகேந்திரன்’’

என்ற வளர்ப்புத் தந்தை பெயர் கேட்டதும் முன்கோபக் குயிலான யாழினிக்கு சுரீரென்றது.

இருந்தாலும் அடக்கப்பட்ட சீற்றக் குரலில், “அவர் ஒண்ணும் என்னோட பயோலாஜிக்கல் ஃபாதர் கிடையாது..!!”என்றாள்.

அவளது சீற்றம் கண்டு நமுட்டுச்சிரிப்பு பரவ, தாடையைத் தடவிக் கொண்டே, “உண்மை தான்! .” என்றவரின் கண்கள்,

அவளுடைய புஷ்டியான கன்னங்களில் ஒன்று.. கொஞ்சம் சிவந்து, வீங்கிப் போயிருப்பதைக் கண்டு இலேசாக இடுங்கியது.

யோசனை பொதிந்த பார்வையை அவள் மீது வீசிக் கொண்டே, “ என்னம்மா ஆச்சு? ஏன் கன்னம் வீங்கியிருக்கு?”என்று கேட்டுக் கொண்டிருக்கும் போது உள்ளே வந்தான் யாதவ்.

அழுது கொண்டே உள்ளே வந்த மனைவியை சமாளிப்பதற்காக பரபரப்புடன் உள்ளே வந்தவன், அங்கே எதிர்பாராமல் வந்த சித்தப்பாவைக் கண்டு,

அவர் மனைவியிடம் கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வியைக் கேட்டு, நடை தடைப்பட்டு நின்றான்.

அனிச்சம்பூவை விடவும் மென்மையான அவனது தேவியின் கன்னத்தின் காயத்துக்கு காரணம் அவன் தானே?

குற்றவுணர்வுக்கு ஆட்பட்டவன், மெல்ல தலை குனித்துக் கொண்டான்.

சித்தப்பாவின் பார்வை, தன் மருமகளைத் தாண்டி.. வாசலோரம் நிற்கும் மகனில் பதிந்தது.

மகன் இறுகிய முகத்துடன் தலைகுனிவதைக் கண்டதும், மருமகள் கன்னத்தில் இருக்கும் சிவந்த தடத்துக்கான காரணம் புரிய, சுருங்கியிருந்த புருவங்கள் மெல்ல சமரசம் அடைந்தது .

கைகள் இரண்டையும் பிசைந்த வண்ணம், நா தள்ளாட, “அ.. அது வந்து.. நேத்து ராத்திரில இருந்து பல்லுவலி.. அதான் வீங்கியிருக்கு” என்று கணவன் தன்மீது கை நீட்டியதைக் காட்டிக்

கொடுக்காமல், அவள் ஏதேதோ சொல்லி சமாளிக்க, யாதவனின் கண்கள் ஒளிர்ந்து அடங்கியது.

பெண்ணவளுக்கும் கணவன், மனைவி இடையே நடக்கும் ஊடலை மூன்றாவது நபரிடம் கொண்டு செல்வதில் அவ்வளவு பிடித்தம் இருக்கவில்லை போலும். அப்படித்தான் தோன்றியது அவனுக்கு.

முகத்தை சாதாரணம் போல மாற்றிக் கொண்டவன், புன்னகை ததும்ப அவரை நோக்கி நடந்து வந்தவனாக, “நீங்க எப்போ வந்தீங்க சித்தப்பா??.. வர்றதா ஒரு தகவலும் சொல்லலையே…?”என்று நாசூக்காக சித்தப்பாவிடம் பேச்சு கொடுத்து,

மனைவியின் மனநிலையை இலகுவாக்க முனைந்தான் யாதவன்.

அருகே வந்தவனைத் தாவியணைத்துக் கொண்டவர், மகனைக் கண்ட சந்தோஷத்தில் முத்து மூரல்கள் பளிச்சிட சிரித்துக் கொண்டே,

“நீ மட்டும் தகவல் சொல்லாமல் திடுதிப்புன்னு கல்யாணம் பண்ணும் போது.. நான் தகவல் சொல்லாமல் திடுதிப்புன்னு வரக்கூடாதா…?” என்றவராக அவனை விட்டும் பிரிந்தவர், முஷ்டி மடக்கி யாதவன் விலாவில் விளையாட்டாக ஓர் குத்து விடவும் செய்தார்.

வலிக்காத அடியை வலிப்பது போல பாவ்லா செய்து, விலாவைத் தேய்த்துக் கொண்டே.. அவரைப் பார்த்தவன், “அப்படியில்லை சித்தப்பா.. இது உங்க வீடு.. நீங்க எப்போ வேணாலும் வரலாம்” என்று சொல்ல,

இருவரது முகமன் விசாரிப்புக்களை சங்கடமான முகத்துடன் பார்த்திருந்தாள் யாழினி.

எனவே அங்கிருந்து கழன்று கொள்ள நாடியவள், தன் குரலைச் செருகி, அவர்கள் இருவரின் கவனத்தையும் தன்னை நோக்கித் திருப்பியவள், “நீ.. நீங்க ரெண்டு பேரும் பேசிட்டிருங்க.. நான் ரிஃப்ரெஷ்ஷாகி வந்துர்றேன்.” என்று மேலே மாடிப்படியேறி தன்னறைக்கு விரைய,

செல்லும் மனைவியின் அசைந்தாடும் பின்னழகையே யோசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

‘அழகான மனைவியை அருகில் வைத்துக் கொண்டு.. அனுபவிக்க முடியாமல் தடுமாறும் ஆண்கள் எல்லாம் பாவம்’ என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டவனுக்கு.. அவனையும் அறியாமல் வெளிப்பட்டது பெருமூச்சு.

அதேசமயம்.. என்ன தான் அவனுடைய முன்கோபக் குயில் அவசரப்பட்டு வார்த்தைகளை விட்டிருந்தாலும் கூட, இவனும் கொஞ்சம் அவசரப்பட்டு கை நீட்டியிருக்கக் கூடாது என்று அவன் மீதே அவனுக்குக் கோபம் உண்டாயிற்று.

அவனுடைய முகத்தில்.. மனைவியின் புறமுதுகைப் பார்த்த வண்ணம், ஆயிரம் உணர்ச்சிக் கலவைகள் தோன்றுவதைக் கண்ட சித்தப்பா,

யாதவன் தோளில் மெல்ல கை வைத்தார். சங்கர்தேவனின் தொடுகையில் சிந்தனாவுலகிலிருந்து

நனவுலகம் வந்தவனை கண்களோடு கண் நோக்கியவர்,

“யாதவ்.. உங்க ரெண்டு பேருக்கும் இடையே என்ன பிரச்சினைன்னு தெரியலை?..ஆனால் அவள் சின்னப் பொண்ணு..

இத்தனை நாள் அப்பான்னு நினைச்சிட்டிருந்தவர் தன்னைப் பெற்ற அப்பா இல்லைன்னதும் அவள் மனசு ரொம்ப வருத்தப்பட்டுட்டு இருக்கும்..

வயித்துல குழந்தை.. அதுவும் உன் குழந்தை!!.. அதை ஏத்துக்க முடியாமல் தடுமாறும் அவள்!!.. இத்தனை குழப்பங்களுக்கு மத்தியில் உன்னோட அன்பை ஏத்துக்குறது கஷ்டமா தான் இருக்கும்.. கொஞ்சம் பொறுமையா போ..!

நீ யாருன்னு முதல்ல அவளுக்கு தெரியப்படுத்து.. அப்புறம் கண்டிப்பா உன்னை அவளுக்குப் பிடிக்கும்..அவள் உன்னைப் புரிஞ்சுக்குவா!!..”என்று அவனுக்கு தந்தை ஸ்தானத்திலிருந்து ‘மனைவியை பொறுமையாக அணுகு’ என்று நன்மொழி கூறிக் கொண்டிருந்தார் அவர்.

யாதவனுக்கும் சிறிய தந்தை சொல்வது சரியாகவே பட்டது. எப்போதும் அவர் சொல் மீறிப் பழகாதவனின் தலையும், ‘அப்படியே செய்கிறேன்’ என்பது போல மெல்ல ஆட, அந்நேரம் கேட்டது அவள் குரல்.

அதே சேலையில் தான் மனைவி இருந்தாலும் கூட..முகம், கை கால்களை அலம்பியிருக்கிறாள் என்பதை, புருவத்தோடு வழிந்து கொண்டிருந்த தண்ணீர்த்துளிகள் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது.

பளிச்சென்றிருந்த அவள் முகத்தில்.. அவன் கொடுத்த அதிரடி முத்தத்தில் சற்றே சிவந்து வீங்கியிருந்த இதழ்களைக் கண்டதும்.. அந்த வலிமையான ஆண்மகனின் கண்களில் குடிகொண்டது காதல் மயக்கம்!!

கணவன், தன் சித்தப்பன் அறியாமல் பார்த்து வைக்கும் பார்வையோ.. பெண்ணவளுக்குள் கூஸ் பம்ப் உணர்வைத் தர, பல தடவைக் கண்களை சிமிட்டி, தன்னைத் தானே சமன் செய்து கொண்டவள்,

கணவனைப் பாராது சித்தப்பாவை மாத்திரம் நோக்கி, “சா.. சாப்பாடு ரெடியா இருக்கு.. சேர்ந்து சாப்பிடலாமே?..” என்றழைக்க, சங்கர்தேவனின் வரண்ட இதழ்கள், பூவாக மலர்ந்தது.

அருகே வந்த மருமகளின் முதுகை பாசத்துடன் தட்டிக் கொடுத்தவர், “ம்…. உன் கையால சாப்பிடணும்னு எனக்கும் ஆசையா தான் இருக்கு.. நான் தான் உலகம் சுற்றும் கிழவனாயிற்றே?..”என்று அவர் சொல்ல, சட்டென இடையிட்டாள் யாழினி.

“இல்லை.. நீங்க.. உலகம் சுற்றும் வாலிபன்னே சொல்லலாம்..இன்னும் இளமையா தான் இருக்கீங்க மாமா” என்று அவள் அவரை “மாமா” என்று முறை சொல்லி வேறு அழைக்க,

சங்கர்தேவனின் முகத்தில் இரட்டிப்பு சந்தோஷம் தாண்டவமாடலாயிற்று.

மகிழ்ச்சி தாளமாட்டாமல் வாய்விட்டே நகைத்தவர், “ஹஹா..ஹஹஹா..உன்னைப் பார்த்தா மட்டுமல்ல சந்தோஷமா இருக்கு.. உன் கூட பேசினாலும் சந்தோஷமா தான் இருக்கு.. மை சன்

இஸ் வெரி லக்கி இனாஃப் டூ ஹேவ் யூ ஏஸ் ஹிஸ் வைஃப்!'' என்று சொன்னதும்,

அவனுடைய காந்த விழிகள், தன் தேவியைத் தான் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆம், அவன் அதிர்ஷ்டசாலி தான். இப்படியாப்பட்ட பேரழகை.. தாரமாக வாய்க்கப் பெற்றால் அவன் அதிர்ஷ்டசாலியே தான்!!

கணவனின் பார்வை, அவளைத் துளைப்பது கடைக்கண் பார்வையில் தெரிய, மறந்தும் கூட அவனை நோக்கித் திரும்பவேயில்லை அவள்!

அந்நேரம் பார்த்து அவனுடைய செல் அலற, ‘‘வன் செக் சித்தப்பா..''என்று இருவரிடமும் அனுமதி பெற்றுக் கொண்டு, வெளியே போர்ட்டிகோ நாடிப் போனான் ஜானுவின் மன்னவன்.

அவன் படி தாண்டும் வரை பொறுமையாகக் காத்திருந்து, மருமகளை நோக்கித் திரும்பியவர், ‘‘யம்மா வந்தவங்களை கவனிச்சிக்குறது ஒரு ஒழுக்கமான மாதரசியோட பண்பு தான்..

ஒத்துக்குறேன்.. அதை நீ கரெக்ட்டா செய்யுற.. ஆனால் அதை விட முக்கியம்.. தன்னோட கணவனின் மனம் புரிஞ்சு நடந்துக்குற பதிவிரதையா இருக்குறது.''என்று சொல்ல, அவள் புருவங்கள் மெல்ல மேலுயர்ந்தது.

இவரது அறிவுரைகள் எல்லாவற்றையும் பார்த்தால், அவன் தன் சித்தப்பாவிடம் அனைத்தையும் சொல்லி விட்டானோ? என்றே தோன்றியது அவளுக்கு.

அவளது எண்ணவோட்டங்களை சரியாக ஊகித்துக் கொண்ட அனுபவ முதிர்ச்சியாளரான சித்தப்பாவும்,

தன் தாடையைத் தடவிய வண்ணம் அர்த்தம் பொதிந்த நமுட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்தார்.

பின் அவள் முதுகில் தாய்மையன்புடன் கை வைத்தவர், ‘‘எனக்கிருக்குறது ஒரே பையன்.. அவனைப் பற்றி கவனிச்சிக்குறதை விட எனக்கும் வேறென்ன வேலை தான் இருக்கு?.என் பையன் என்கிட்ட எதுவும் சொல்லலை..!!

ஆனால் உங்க ரெண்டு பேர் முகத்தைப் பார்க்குறப்போ··· எதுவோ சரியில்லைன்னு தோணுது.. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ன்னு பெரியவங்க சும்மாவா சொல்லி வைச்சாங்க..?’’ என்று கேட்க,

அவள் எதுவும் பேசவில்லை. தங்களுக்குள் நிலவும் பனிப்போரை சரியாக கண்டு கொண்டாரே என்று மட்டும் தோன்ற.. மெல்ல தரை பார்த்துக் குனிந்தது அவள் தலை.

அதன் பின் சித்தப்பா சங்கர்தேவன் கூறிய அனைத்தும், ஏனோ குழம்பிப் போயிருந்த அவள் மனதை இன்னும் குழப்பத்திற்குள்ளாக்கி.. கொஞ்சம் நெருடலைக் கொடுக்கவே செய்தது.

அப்படி என்ன தான் சொன்னார் யாதவனின் சிறிய தந்தை? இதோ அவர் சொன்னவை எல்லாம் கீழ்க்கண்டவை தாம்.

அவளோடு மெல்ல நடை பயின்றவராகப் போய், சோபாவில் அமர்ந்து கொண்டவர், ஆழ்ந்த யோசனை ஊடுருவும் குரலில்,

“என் பையன் ஆசை வைத்த ஒரே பெண்.. கோமாவை விட்டும் மீண்டு வந்த என் மகன்.. நினைவை ஆக்கிரமிச்சிருந்த ஒரே பெண்.. யாழினி!!”என்று சொல்ல,

இது இன்று காலை விக்னேஷ் சொன்ன அதே கதை என்று உள்ளே எண்ணம் எழுந்தாலும், அமைதியாக பெரியவருக்கு செவி சாய்க்கத் தொடங்கினாள் அவள்.

“நாங்கலாம் அவனுக்கு என்னாச்சோ.. ஏதாச்சோன்னு பதறிய நேரம்.. அவன் வாயிலிருந்து திரும்பத் திரும்ப வெளிவந்த ஒரு பெயர்.. ‘என் ஜானு.. என் ஜானு.. என் ஜானு!!’ தான்.

“ஜானு.. என் ஜானு இல்லைன்னா.. எனக்கு உலகமே கிடையாது சித்தப்பா.. ஐ லவ் ஹர் மோர் தேன் மைசெல்ப் சித்தப்பா” ன்னு சொன்னான்..

‘சரிடா.. உன் ஜானுவையே உனக்கு கட்டி வைக்குறேன்.. ஆனால் அவளை நீ எப்படி கண்டுபிடிக்கப் போற?’..ன்னு கேட்டேன்.. அப்போ

என் பையன் கரெக்ட்டா உன்னைப் பத்தி எல்லாத்தையும் சொன்னான்..

யாழினி மகேந்திரன்.. ஆர்க்கியோலஜிஸ்ட்..எல்லாமே சொன்னான்… அப்புறம் உன்னைப் பற்றி டிடெக்டிவ் ஏஜென்சீஸ் மூலமா விசாரிக்க ஆரம்பிச்சோம்.

நீ கலம்போ ஹாஸ்பிடல்ஸ்ல ப்ளட் டொனேட் பண்ண போனது தெரிஞ்சு விசாரிச்சப்போ தான்.. நீ கர்ப்பமா இருக்குறதும் தெரிய வந்தது..”என்று சொல்ல யாழினியின் கண்கள் அகல விரிந்தது.

‘அப்படியானால்.. இவள், தான் கர்ப்பமாக இருக்கிறேன் என்பதை அறிய முன்பு.. யாதவன் அதனை அறிந்து வைத்திருந்திருக்கிறானா?’ என்ற எண்ணம் உண்டானது பெண்ணவளுக்குள்.

பலமுறை இதை யாதவன் சாடைமாடையாக பேச்சுவாக்கில் கூறியிருக்கின்ற போதும், சித்தப்பா அவளை அருகே இருத்தி வைத்து, நடந்ததை சீராகச் சொன்ன போது தான்.. அவ்வுண்மையை அவளது மக்கு மரமண்டை உள்வாங்கிக் கொண்டது போலும்

அதனால் விளைந்த ஆச்சரிமன்றோ அது??

சித்தப்பா தொடர்ந்து சொன்னார்.

“நீ கர்ப்பம்னதும் எல்லா அப்பாக்கள் போலவும் எனக்கும் கோபம் வந்தது.. தாலி வாங்காமல் குழந்தை வாங்குறது வெஸ்டர்ன் கல்ச்சர்ஸ்க்கு வேணும்னா ஓகே? ஆனால் நமக்கு? அதனால் எனக்கும் கோபம் வர்றதும் நியாயம் தானேமா?”என்று அவளிடமே எதிர்க்கேள்வி கேட்க,

அவள் தலையும் ‘ஆமாம்’ என்பது போல மெல்ல ஆடியது.

ஆனாலும் அவளுக்குத் தான் குழந்தை எப்படி வந்தது என்று தெரியாதே? அப்படித் தெரிந்திருக்குமேயானால்.. தாலி வாங்காமல் ஓர் குழந்தைக்கு அன்னையாக நின்றிருப்பாளா அவள்? என்று அவள் மனசாட்சி அவளுக்கு பரிந்து பேசியது.

அவள் முகம் குழம்பியிருப்பதைக் கண்டு மென்மையாக புன்னகைத்தவர், விட்டத்தைப் பார்த்த வண்ணம்,

“கர்ப்பமா இருக்குற பொண்ணை கட்டிக்கப்போறியாப்பா?’ன்னு அவன்கிட்ட கேட்டேன்.. “அது என் குழந்தை சித்தப்பா!!”ன்னு கொஞ்சம் கூட தயங்காமல் சொன்னான்..”என்று கோமாவுக்குப் பின் நடந்த அத்தனையையும் யாதவன் மனைவி அறிய வேண்டும் என்பதற்காக சொன்னார் சித்தப்பா.

அதுபற்றி முன்னாடியே தெரிந்தவன், அவளைச் சந்தித்து நேரடியாகப் பேசி.. விஷயம் தெளிவுறுத்தி.. இருவரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்திருந்தால்…

அன்று அனைவர் முன்னாடியும் அவள் அவமானப்பட்டிருக்க நேர்ந்திருக்காது தான்.

எல்லாமே விதி. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது என்ற கீதோபசாரத்தை மனமாற ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை அவளுக்கு.

சித்தப்பாவோ சற்றே பெருமிதம் பொங்கும் குரலில், “முதல்ல எனக்கு அதிர்ச்சியாக தான் இருந்தது. ஆனால் என் பையன் ஒரு நாளும் பொண்ணுங்க விஷயத்துல கேவலமா நடந்துக்கிட்டது

இல்லை.. அப்படி நடந்துக்கிட்டதா இதுநாள் வரை எந்தக் கம்ப்ளைன்ட்டும் வந்தும் கிடையாது.. அதனால அவன் சொன்னது உண்மைன்னு நம்பினேன்.!!”என்றார்.

ஓ..பையன் கலியுக ராமன் என்பதால் விளைந்த பெருமிதமோ அது?? அப்படித் தான் போலும். முடிவெடுத்துக் கொண்டது அவள் மனம்!

ஏன் அப்போதே அவள் கர்ப்பமானதை சொல்லவில்லை என்று அவளுள் எழுந்த வினாவுக்கு தகுந்த பதில் இருந்தது அடுத்து அவர் பேசியதில் இருந்து.

“சரிடா.. அப்போ நான் அவங்க அப்பா கிட்ட போய் பேசுறேன்” னு சொன்னேன்..

‘இல்லை.. வேணாம்.. முதல்ல அவளுக்கே தெரியாமல், அவள் என் மேல இருக்குற காதலைப் புரிய வைக்கணும் சித்தப்பா.. என் குழந்தையை அவள் சுமந்துட்டிருக்குறது பத்தி அவளுக்கே இன்னும் தெரியலை..

அது தெரிஞ்சிருந்தா இப்படி கேர்லெஸ்ஸா நடந்துட்டிருக்க மாட்டா சித்தப்பா.. அதை நான் தெளிய வைக்கணும்..நான் அவள் மேல வைச்சிருக்க ஆழமான காதலை அவள் ஏத்துக்கணும்.. அதுக்கப்பறம் அவங்க அப்பாகிட்ட சொல்லிக்கலாம்" னு சொன்னான்." என்று சொல்ல சிறுகச் சிறுக அனைத்து உண்மைகளும் புலப்படலாயிற்று.

அன்று நடந்த ஏல விற்பனைக்கு வந்தது… அவளை அப்பட்டமாகவே ஜொள்ளு விட்டது, அந்தப் பெறுமதியான மோதிரப் பரிசு… சேப்டர் வன் உணவகத்தில், அவள் ஆசை வைத்த வைர நெக்லஸ் பரிசளித்தது, மோதிரம் அணிவித்தது , இரவில் சுவரேறி குதித்து வீடு வந்தது என எல்லாமே அவன் காதல் உணர்த்தத் தானா?

அவையெல்லாம் அவன் பணத்திமிரைக் காட்டி, ஓர் பெண்ணை மஞ்சத்துக்கு வரவழைக்க அவன் செய்யும் கண் கட்டு வித்தை என்றல்லவா நினைத்தாள் அப்பேதை??

அந்நொடி எழுத்தில் விவரிக்க முடியாத.. ஒரு வகை குளுகுளு உணர்வு.. நாடி, நரம்பெங்கும் பரவியோட.. அந்த சுகமான அவஸ்தை ஏன் எழுகிறது என்று புரியாமல் நின்றாள் அவள்.

அவளின் விழிகள், மெல்ல உயர்ந்து சோபாவுக்கு நேரெதிரே உள்ளே பாரிய கண்ணாடி சாளரம் தாண்டி.. போர்டிகோவில் அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கும் மன்னவன் மேல் நிலைத்தது.

அவனுடைய கூர்மையான கண்களும், அப்போது தன் மனைவியைத் தான் உணர்ச்சி துடைத்த பார்வையுடன் பார்த்துக் கொண்டிருக்க,

அந்தப் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் சட்டெனத் தலை திருப்பிக் கொண்டாள் யாழினி.

ஆனால் அப்போதும் விடாமல் தொடர்ந்தது அந்தப் புராதன புரவி வீரனின் துளைக்கும் பார்வை!!

உணர்ச்சி துடைத்த பார்வைக்கே இந்நிலையானால்?? ஆண்மகன் அவன் காதல் சிந்தும் ஆசை பார்வை அங்கணம் பார்த்திருந்தால் அவள் நிலை??

சித்தப்பாவோ இருவருக்குள்ளும் நொடிப் பொழுதில் நிகழ்ந்த, பார்வை பரிமாற்றங்கள் அறியாதவராக, பெருமூச்சு விட்ட வண்ணம்,

“ஹாஹ்!! அதுக்குள்ள உனக்கு நடந்த திருமண ஏற்பாட்டில் அனைவர் முன்னாடியும், அவன் தான் உன் குழந்தைக்கு அப்பா ன்னு அவன் வாயால சொல்ல வைச்சு, அவன் கையால உன்னைத் தாலி ஏற்க வைச்சது.. எல்லாமே விதி..”என்று சொல்ல,

அவன் மனதுக்குள் ஓர் குறுகுறு குற்றவுணர்வு.

இதையே தானே அன்று திருமணம் முடிந்த கையோடு வீடு வந்த பிறகு அவனும் சொன்னான்.

ஆனால் அப்போது அவள் நம்பவேயில்லை. காரணம்.. தி க்ரேட் சாம்ராட் யாதவ் மகாதேவன் உதிர்த்த சொற்களின் அழுத்தம் அப்படி.

“உன்னை அடையணும்ன்றதுக்காக எந்த எல்லைக்கும் போகக் கூடியவன் நான்..!!”என்ற அவன் சொற்கள்.. அவள் மனதில் ஆழமாகப் பதிய, அவன் தான் பணபலத்தை உபயோகித்து ஏதோ கபட

நாடகம் ஆடி, அனைவரையும் நம்ப வைத்து அவளை அடைய திட்டம் தீட்டுகிறாள் என்று தானே நினைத்தாள் அவள்?

சித்தப்பா சொல்லும் ஆசுவாசமான.. பணிவான தொனியோ என்னவோ? சித்தப்பா சொல்வது அத்தனையும் உண்மையாகத் தான் இருக்கும் என்று ஆணித்தரமாக நம்பத் தோன்றியது அவளுக்கு.

“ உங்களுக்கு கல்யாணம் நடந்தப்போ.. நான் சின்ன பிஸினஸ் விஷயமா மலேசியாவில் இருந்தேன்.. அப்போ திடீர் திருமணம் நடந்தது தெரிஞ்சு அவனுக்கு கால் பண்ணேன்..

அன்னைக்கு நான் கேட்ட குரல்.. என்னைக்குமே நான் கேட்டிராத யாதவன் குரல்.. இனியும் கேட்க ஆசைப்படாத யாதவன் குரல்..

அவன் ரொம்ப உடைஞ்சு போனவனா, “என் ஜானுவுக்கு என்னோட ஞாபகங்கள் எதுவும் இல்லை சித்தப்பா.. நான் யாருன்னு அவளுக்குத் தெரியலை.. செத்துரலாம்னு தோணுதுப்பா” ன்னு சொன்னான்.. அவன் அந்தளவுக்கு ஹர்ட்டாகி.. மனசுடைஞ்சு

போய் நான் கண்டதே.. யில்லைமா..”என்றவர் கண்கள் அவரையும் அறியாமல் இலேசாக துளிர்த்திருந்தது.

தான் பெறாத, தன் அண்ணன் மகன் மேல் இந்தக் கிழவருக்கு இவ்வளவு பாசமா?? என்று தோன்ற, சங்கர்தேவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தாள் யாழினி.

தன் மூக்குக் கண்ணாடி கழற்றி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டவராக சங்கர்தேவனும், “சரிப்பா.. அப்படின்னா.. நீயே மனசு விட்டு நீ யாருன்னு சொல்லிடு” ன்னு சொன்னேன்..

“இல்லைப்பா.. அப்படி நானா சொல்றதை விட.. அவளாகவே தெரிஞ்சுக்கணும்” னு சொன்னான்.. நானும் என் பையன் சொன்னால் அதில் ஆயிரம் அர்த்தம் இருக்கும்னு விட்டுட்டேன்..

என் பையன் அடிக்கடி சொல்ற ஒரு வாசகம்..” எனக்கும், அவளுக்குமான பந்தம் மிகவும் புனிதமானது சித்தப்பா” ன்னு சொல்வான்.”

என்றவராக மீண்டும் கண்ணாடியைக் கண்களில் மாட்டிக் கொள்ள அவளுக்கு சுருக் என்றது.

அவளிடம் சொல்லும் அதே வாசகம். “எனக்கும், உனக்குமான பந்தம் மிகவும் புனிதமானது..”என்னும் அதே வாசகம்!!

அவளுடைய கையை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டவர், “நான் உன்னையும் குறை சொல்லப் போவதில்லை. குழந்தை எப்படி வந்ததுன்னு நீ மறந்ததும் விதின்னு தான் சொல்வேன்.

ஆனால் இதோ உன் கழுத்துல இருக்கே “யா” வடிவ மாலை.. இது என் பையனோடது.. இது எப்படி உன் கழுத்துல வந்ததுன்னுமா நீ யோசிக்கலை??..” என்று சொல்ல, அவள் கண்கள் தாலிச்சரடோடு சரசமாடும் அந்த “யா” வடிவ பென்டன் உள்ள மாலையை ஆராயலானது.

ஆனால்.. ஆனால்.. எதையோ நினைக்க நினைத்தது மனம்!! ஆனால் ஏனோ முடியவில்லை அவளுக்கு.

“யோசி.. ஆழமா யோசி.. உண்மை புரியும்.”- அவளை யோசிக்க உந்தினார் அவர்.

அவள் சித்தப்பாவின் முகத்தைப் பார்த்தாள். அது அழகிய சந்திரனின் முகம் போல பிரகாசமாக மலர்ந்திருந்தது.

அவருக்கு இருவர் பற்றியும் அனைத்து உண்மையும் தெரியும் போல இருந்தது அவருடைய புன்னகை.

கண்ணாடி சாளரம் தாண்டித் தெரிந்த, செல்லில் யாருடனோ பேசிக் கொண்டிருக்கும் யாதவனைக் கண்களால் சுட்டிக் காட்டி,

“ஆண்கள் எல்லாமே உருவத்துல வேணும்னா வலிமையானவங்களா இருக்கலாம். தே கேன் பி ஸ்ட்ராங் இன் அப்பியரன்ஸ்.. பட் இன் ஹார்ட்? .. குழந்தையை விட வீக்கானவங்க.. என் யாதவனும் குழந்தை போலத்தான்..

குழந்தை தாய் அடிச்சாலும் திட்டினாலும் தாயைத் தான் சுத்தி சுத்தி வரும்.. அது போல தான் அவனும்..

‘கணவனே கண் கண்ட தெய்வம்’ போல அவனை நீ ஏத்துக்கணும்.. தலைமேல் வைச்சு பூஜிக்கணும் அப்படியெல்லாம் சொல்ல வரலை .. ரொம்பலாம் வேணாம்.. அவனை அன்பா ஒரு பார்வை பாரு.. அது போதும்!!!.. அவன் உன் மேல எவ்வளவு காதல் வைச்சிருக்கான்னு அப்புறம் புரியும்..”என்று தன் பையன், மருமகள் மேல் எத்துனை காதல் வைத்திருக்கிறான் என்பதைக் காட்ட வேண்டும் என்பதற்காக சொன்னார் அவர்.

அவர் பேச்சு ஏதேதோ செய்ய, நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள் யாழினி.

யாதவனோ மனைவிக்கு கை நீட்டியதில் குற்றவுணர்வில் உழன்று கொண்டிருப்பவனாயிற்றே?

கண்கள் உச்சபட்ச கவலையைக் காட்ட, மனதின் ஆழத்தில் இருந்து, “மன்னிச்சிருமா ப்ளீஸ்..” என்ற

அவன் குரல், அவள் செவிகளில் அசரீரி போல ஒலிக்க,

‘தான் கேட்டது நிஜம் தானா?’ என்று நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

சட்டென சோபாவிலிருந்து அவர் எழ, அவரைத் தொடர்ந்து இவளும் எழ,

அவள் உச்சந்தலையில் ஆதரவாக கை வைத்து, , “என்னைக்கு இரண்டு பேரும் சந்தோஷமா சேர்ந்து என் வீட்டுக்கு வந்து, “எங்க வீட்டுக்கு விருந்துக்கு வாங்க சித்தப்பா” ன்னு கூப்புடுறீங்களோ.. அன்னைக்கு வந்து சாப்பிட்றேன்…அப்போ வயிறார சாப்பிடுறேன்.. இப்போ நான் கிளம்பறேன்மா..எனக்கு அர்ஜன்ட் மீட்டிங் இருக்கு” என்றவராக விடை கொடுக்க,

வீட்டில் கை நனைக்காமல் செல்கிறாரே என்ற கவலை இருந்த போதிலும், அவளும் “சரி மாமா” என்று சொல்ல, அவரை வழியனுப்பி வைக்க வாசற்படியோரம் வரை போனாள்.

அப்போதும் கூட செல்லில் உரையாற்றிக் கொண்டே வந்த கணவன், அவளைப் பாராமல் சித்தப்பாவுடன் இணைந்து, “வீ’ ல் ஹேவ் மீட்டிங் எட் டூ…” என்றவன்,

வாட்ச் பார்த்தவனாக, “இப்போ போனால் தான் கரெக்ட்டா இருக்கும்.. எல்லா போர்ட் மெம்பர்ஸூம் வரேன்னு சொல்லியிருக்காங்க.. திஸ் மீட்டிங் வில் சேன்ஜ் எவ்ரிதிங் சித்தப்பா” என்று பேசிக் கொண்டே, அவருடன் காரில் ஏறிச் செல்ல,

முதன் முதலாக தன்னைப் பாராமல், தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் சென்ற கணவன் மேல் ஏனென்ற காரணம் சொல்ல முடியாத கோபம் எழுந்தது யாழினிக்கு.

சித்தப்பா வந்து சென்றதன் பின்னர், அவள் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்படலாயிற்று.

காலையில் அவள் கண் விழிக்கும் போது, அவனுடைய வன்மையான கைகள் அவளைச் சுற்றி வளைத்திருக்கும் அணைப்பையும்,

அவன் உஷ்ண மூச்சுக்காற்று.. அவள் காதுக்குள் சரசரக்கும் கதகதப்பையும் வேண்டா வெறுப்பாக, அனுபவித்துக் கொண்டே எழுந்து பழகியவள், தற்போதெல்லாம் கணவன் முகம் காண்பதே அரிதாகிப் போனது.

அவளுக்குப் பிடிக்காத போதும்.. அவனது நிர்ப்பந்தத்தின் பிரகாரம் இருவரும் ஒரு மஞ்சத்தையே தினந்தோறும் பகிரும் நிலை உருவானது.

காலையில் அவள் விழிக்கும் முன்பாக செல்பவன், இரவு அவள் தூங்கியதன் பின்பே வீடு வரத்தொடங்கியிருந்தான்.

சில நேரங்களில் வெறுமனே விட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டு அவள் அமர்ந்திருக்கும் வேளைகளில், அந்தப் பிரம்மாண்டமான வீட்டில், ஓர் அறையிலிருந்து,

செல்லில் பேசிக் கொண்டே இவளை மதியாது செல்லும் கணவனைக் காணும் போது, ‘‘இவன்

இத்தனை நேரமும் வீட்டிலா இருந்தான்?”என்று ஆச்சரியப்படும் நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

ஏன் கணவன் தன் மீது பாராமுகமாக நடந்து கொள்கிறான்? என்ற சின்னக் கேள்வி விதையாக விழுந்து.. அவன் வேண்டுமென்று தன்னை தவிர்க்கிறான் என்ற எண்ணம் வலுப்பெறலானது அவளுக்குள்.

முழு நேரமும் கணவன் வீட்டில் இருக்கிறானா? இல்லையா என்பது கூட தெரியாத மனைவியாக இருப்பவளுக்கு, கணவன் வேளாவேளைக்கு சாப்பிடுகிறானா? உடம்பைக் கவனித்துக் கொள்கிறானா இல்லையா? என்னும் ஐயமும் எழுந்து, அவளை ஒரு சில நாட்களாக நிம்மதியாக உறங்கவே விடவில்லை.

இருவரின் மனநிலை எவ்வாறிருந்த போதிலும்..அவன் வயிற்றுக்குள் ஆரோக்கியமாக வளர்ந்த அவன் குழந்தை வேறு.. இப்போதெல்லாம் அதன் இருப்பை தன் தாய்க்கு உணர்த்தும் நிலையும் வந்தது.

யாதவனுக்கும், அவளுக்கும் நடந்த உணர்ச்சிப் போராட்டத்தில் குழந்தையைப் பற்றி தவற விட்டவளுக்கு, கிடைத்த தனிமையில் குழந்தையைப் பற்றி எண்ணவாரம்பித்த போது,

நடந்த களேபரத்தில், நாட்கள் ஓடிய வேகத்தைப் பார்க்கும் போது, அவள் சிசுவுக்கு நான்கு.. நான்கரை மாதங்கள் இருக்கக் கூடும் என்று கணக்குப் பார்த்தாள்.

அதிலும் அவளுடைய பின்னெழில்கள் கொஞ்சம் பின் தள்ளி.. தனங்கள் இன்னும் கொஞ்சம் பெரிதாகி,இடுப்புத் தசைகளோரம் வரி வரியாக தோல் விரிந்து, வயிற்றுச் சருமம் விரிவடைந்து.. அவளுடைய வெண்மையான தோளில் பச்சை நரம்புகள் ஓடுவதைப் பார்க்கும் போது..

அவள் ஓர் குழந்தையை சுமந்து கொண்டு இருக்கிறாள் என்பதையும் எண்ணிப் பார்த்தவளுக்கு.. அவளையும் மீறி மயிர்க்கூச்செறிந்தது.

வேண்டாத குழந்தையின் ஒவ்வொரு செயல்களையும் பகிர்ந்து கொள்ள, பெண் மனம்..

அவளுக்கே தெரியாமல் கணவனை எதிர்பார்க்கத் தான் செய்தது. அது தான் காதல்!!

அவளே அறியாமல் யாதவன் மேலிருக்கும் ஜென்ம ஜென்மமாகத் தொடரும் காதல்!!

அவன் மேல் எழுந்த அந்தச் சின்ன அனுதாபத்தை அவள் அன்றே ஆழ யோசித்திருந்தால், அவளுள் முளைவிட்டிருக்கும் தவிப்புக்கு காரணம் காதல் தான் என்று புரிந்திருக்கும்.

அந்தோ பரிதாபம்! அவள் அதை உணர்ந்து கொள்ளாமல் போனாள்.

அன்றிரவு மணி ஒன்றரையைத் தாண்டியிருக்கும். குழந்தையினால் ஏற்பட்ட அசௌகரியம் காரணமாகத் தூங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் யாழினி.

இந்தப் பக்கம் புரள்கிறாள்; அந்தப் பக்கம் புரள்கிறாள். வருவேனா என்று அடம்பிடித்தது தூக்கம்!!

ஒருவேளை அவளைப் போலவே அவள் குழந்தையும், யாதவனின் கையணைப்புக்காக ஏங்கியதோ என்னவோ?

இயலாத மட்டில் மஞ்சத்தில் இருந்தும் எழுந்தமர்ந்தவள், தன் ஸ்லிப்பர்ஸினைப் போட்டுக் கொண்டு.. அந்த பிரம்மாண்டமான கூடத்திலே நடை பயிலப் போனவள் அதிர்ந்தாள்.

அங்கே கூடத்தில் இருந்த பெரிய சோபாவில் கணவன் தன் ஆறடி உயரத்தைக் குறுக்கிக் கொண்டு.. படுத்திருப்பதைக் கண்டாள் அவள்.

சரியான தலையணை கூட இல்லாமல், சோபாவின் கைவைக்கும் முனைப்பகுதியில், தலை வைத்து, இரு கைகளையும் தொடைகளின் நடுவில் வைத்த வண்ணம் கருவறைக் குழந்தை போல படுத்திருந்தவனைக் கண்டு கழிவிரக்கம் மிகுந்தது தாய்மை சிந்தும் விழிகளையுடைய பெண்ணவளுக்கு.

கூடவே நவீனரக கண்ணாடி டீபோயில், இன்னும் அணைத்து வைக்கப்படாத மடிக்கணினி திறந்தேயிருப்பதையும் பார்த்தவளுக்கு,

வேலை பார்த்துக் கொண்டே அலுப்பில் அசந்து தூங்குகிறான் போலும் என்றே தோன்றியது.

கணவனை அப்படியே விட்டுச் செல்ல மனமற்றவள், போய் தலையணையும், போர்வையும் எடுத்து வந்து,

அவன் துயில் களையா வண்ணம் மெல்ல தலை தூக்கி, தலையணையில் அவன் தலை வைத்து, கணவனைப் போர்த்தி விடவும் செய்தாள்.

மடிக்கணினியை அணைத்து வைத்து, சோபாவில் கிடந்த செல்லையும் எடுத்து அப்புறப்படுத்த நாடியவளுக்கு, எதேச்சையாக செல்லின் ஸ்க்ரீன் லாக் ஒளிர, அங்கே தெரிந்தது அவள் முகம்!!

தனக்கு என்ன நடக்கிறது என்று தெரியாமல், காதையும், கன்னத்தையும் பொத்திக் கொண்டு, சிவந்த இதழ்களைத் திறந்து கொண்டு, மாசுமருவற்ற குழந்தை போல் துயின்று கொண்டிருக்கும் அவள்!!

செல்லையும் டீபோயில் வைக்கப் போனவளுக்கு, உள்ளே என்ன இருக்கிறது என்று ஆராயும் எண்ணம்

பிறக்க, அருகிலிருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்து கொண்டவள், செல்லை நோண்டலானாள்.

அவனுடைய செல் ஃபேஸ் ரிகக்னிஷன் செய்தால் தான் லாக்கை ரிலீஸ் செய்வேன் என்று அடம்பிடிக்க, ஏதோ மனதுக்குள் தோன்ற,

திரையில் தோன்றிய பேட்டில், அவளுடைய டேட் ஆப் பர்த்தை அடித்தாள் யாழினி.

என்ன ஆச்சரியம்? அவள் நினைத்தது போலவே திறந்து கொண்டது லாக் ஸ்க்ரீன்.

ஹோம் ஸ்க்ரீனிலே கண்கள் பதித்தவளின் அதரங்கள் தானாகத் திறந்தன.

அவளா இது? அவளால் சத்தியமாக நம்பவேமுடியவில்லை. அரைத் தூக்கத்தில்.. கணவனின் மார்போடு கோழிக்குஞ்சு போல சுருண்டவளாக அவன் வயிற்றோடு ஒரு கையிட்டு அணைத்துக் கொண்டு தூங்குபவள் அவளா? என்ற சந்தேகம் உண்டாயிற்று.

தூக்கத்தில் தன் கட்டுப்பாட்டை மீறி.. அவனை ஒரு டெட்டி பெயார் போல அணைத்து உறங்கியிருப்பதை நினைக்கும் போது.. அசடு வழிந்தது யாழினிக்கு.

போதாக்குறைக்கு கேலரி முழுவதும், அவனும், அவளும் சேர்ந்து நிற்கும் புகைப்படங்களாகவே இருக்க, ஸ்க்ரோல் பண்ணி ஸ்க்ரோல் பண்ணி சோர்ந்து போயின அவள் விரல்கள்.

அவளோடு அவன் திருமணம் புரிந்த பிறகு கழித்த ஒவ்வொரு நொடிக்கும் சான்றாக இருந்தது அந்தப் புகைப்படங்கள். எல்லா புகைப்படங்களிலும், அவன் தன்னை போட்டா எடுக்கிறான் என்பது புரியாமல் பின்னாலே பேக்ரவுண்டில் அவள் பதிவாகியிருக்க..

முன்னாடி நின்று விதம் விதமான கோணத்தில் செஃல்பி எடுத்திருந்தான் அவன்.

அவள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, அவள் அறியாமல் ஒரு செல்ஃபீ.

அவள் லேப்டாப்பில் தீவிரமாக வேலை செய்து கொண்டிருக்கும் போது, தூரத்தில் நின்று உதடு குவித்து அவளை முத்தமிடுவது போல ஒரு செல்ஃபீ.

கலைந்த கூந்தலுடன் காலை எழுந்து நெட்டி முறிக்கும் போது, வாயில் கை வைத்து “இதோப் பார்ரா.. என் பொண்டாட்டி ஸ்டைல?” அப்படிங்கிற மாதிரி ஒரு செல்ஃபீ!!

என்று அனைத்தையும் பார்த்துக் கொண்டே வந்தவளுக்கு இறுதியில் தட்டுப்பட்டது அந்த செல்பீ!!

சோபாவில் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த நேரம்.. அவள் அறியாமல் அவள் மணிவயிற்றுக்கு அவன் முத்தமிடும் செல்பீ!!

அந்த செல்பீயை விட்டும் அவள் பார்வை, அங்குமிங்கும் நகரவேயில்லை. வளர்ந்த ஆறடி உயர ஆஜானுபாகுவான குழந்தை.. இன்னும் பூமிக்கு வந்திராத ஓர் குழந்தைக்காக ஏங்கும் செல்ஃபீ!!

அவன் கண்களில்.. தெரிந்த புத்திரபாசம்.. அவளை அலைக்கழிக்க, செல்லை டீபோய் மீது

வைத்து விட்டு, துயின்று கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள் அவள்.

அலையலையான கேசம்.. இலேசாக ஆடி அசைந்து கொண்டிருக்க, சோர்ந்த விழிகளுடன்.. இறுக்கமான முகத்துடன் உறங்கிக் கொண்டிருந்தவனின் கேசம் கோத வேண்டும் என்று கட்டுக்கடங்காத பேராவல் எழுந்தது அவளுக்கு.

அவள் கைகள்.. ஓர் மாயசக்திக்கு ஆட்பட்டது போல அவனது கேசம் நோக்கி நீண்டு.. மயிர் அளைந்து, கேசத்தை மென்மையாக கோதி விடவும் செய்தது.

இரண்டாவது தடவையும் தலை கோதப்போனவளின் கை பாதியில் நின்றது. திடீரென அந்த மாய ஈர்ப்பிலிருந்து வெளியே வந்தவளுக்கு,

‘ஏன் அவன் தலையைக் கோத அனிச்சையாக எழுகின்றன கைகள்?’ என்ற கேள்வி தோன்ற,

அவன் அருகே வந்தால், தன் கட்டுப்பாட்டை மீறும் தன்னைத் தானே கடிந்து கொண்டவளாக,

விருட்டென்று எழுந்து தன்னறை நோக்கி நடந்தாள் யாழினி

அடுத்த நாள் முற்பகல் வேளை, அவள் மட்டுமாக, கோயில் போய் திரும்பி வீட்டுக்கு வந்து கொண்டிருந்த வேளை தான், அவள் வாழ்நாளில் என்றும் எதிர்பார்த்திராத ஓர் சம்பவம் நடந்தேறியது.

ஆள் அரவமேயற்ற.. பாதையின் இருமருங்கிலும் வேப்பமரங்கள் தளைத்தோங்கி வளர்ந்திருக்கும் அழகிய சாலை அது!!

அவற்றின் நிழல்கள்.. தார் வீதியில் பதிந்து..நிழல்கோலம் தீட்டப்பட்டிருக்க, அவற்றைக் கலைத்துக் கலைத்து விளையாடிக் கொண்டிருந்தது தென்றல்.

நெற்றியிலே குங்குமத்துடனும், திருநீறுடனும், கடவுளை வழிபட்டதால் முகத்தில் எழுந்த ஓர் அமைதியுடனும், கார் கண்ணாடி வழியாக பாதை மருங்கில் இருந்த மரங்களை இரசித்துக் கொண்டு வந்தாள் யாழினி.

அங்கணம்.. சடன் ப்ரேக் போட்டு டிரைவர் வண்டியை நிறுத்த, திரும்பிப் பார்த்தவள், வண்டியில் ஓர் பெரியவர் வந்து மோதியதைக் கண்டு அதிர்ந்தாள்.

பயந்து போனவளாக, சட்டுப்புட்டென்று வண்டியை விட்டும் இறங்கியவள், வண்டியில் வந்து விழுந்த பெரியவரைக் காண விளைந்த போது,

அவர் காலில் அடிபட்டு இரத்தம் தசையைக் கிழித்துக் கொண்டு ஓட, வலியில் துடிப்பது தெரிந்தது.

இருந்தும், அந்த வலியை சகித்துக் கொண்டே ஒற்றைக்காலால் விந்தி விந்தி நடந்து சென்றவராக பாதையோர ப்ளாட்பாரத்தில் உட்கார்ந்த பெரியவர், தன் காயத்தை பரிசோதிக்க,

உடனே முதலுதவிப் பெட்டியுடன் அவர் அமர்ந்திருந்த ப்ளாட்போரம் போய் தானும் உடன் அமர்ந்தாள் அவள்.

வெள்ளை, வேஷ்டி சகிதம் தலை முழுவதும் நரைத்துப் போனவராக இருந்த அப்பெரியவருக்கு

வயது ஐம்பது, ஐம்பத்தைந்தைத் தாண்டியிருக்கும் என்றே தோன்றியது.

நெற்றியிலே நாமத்துடன், கழுத்திலே உருத்திராட்ச மாலையுடன் பார்ப்பதற்கு ஓர் மகான் போலக் காட்சி தந்து கொண்டிருந்தார் அவர்.

தன்னால் காயம் உண்டானவர் என்ற மனிதாபிமான அடிப்படையில் அவருடன் துக்கத்தில் பங்கு கொண்டவள், ‘‘ஸாரி சார்.. டிரைவர் எப்போவுமே கேர்ஃபுல்லா தான் வண்டியோட்டுவான்··· இன்னைக்கு ஏதோ தெரியாமல்.. நடந்த தப்புக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கறேன்..’’என்றவள்,

தராதரமே பாராது அந்தப் பெரியவரின் கால்களைப் பற்றியவள், ‘‘இருங்க.. நான் மருந்து போட்டு விடுறேன்’’ என்றவளாக இரத்தம் வந்து கொண்டிருந்த கரண்டைக் கால் பகுதிக்கு மருந்து போட ஆயத்தமான வேளை,

இதுவரை தன் காயத்திலேயே கண்கள் பதித்திருந்தவர், தன்னருகே அமர்ந்த பெண்ணின் முகத்தைப் பார்க்கலானார்.

அங்கே யாழினியைக் கண்டதும்.. அந்த மகானின் முகமோ ஏனோ கறுத்து வாடிப் போனது.

தன் பாதங்கள் பற்றியிருக்கும் அவள் கைகளை தன்னிலிருந்தும் தட்டி விட்டவர், ஆக்ரோஷமான விழிகளுடன் அவளைப் பார்த்து,

"வ்வேணாம் வ்விடு.. வ்வேணாம்!!..கணவனுடைய அன்பை புரிஞ்சு நடந்துக்காத ப்பெண்ணின் க்கையால் ஒரு சொட்டுத் த்தண்ணீர் க்குடிக்குறதே ப்பாவம்.. அப்படியிருக்க உன் கையால் எனக்கு எந்த உபசாரமும் தேவையில்லை!!" என்று இரைந்து கத்த,

அவர் காயத்துக்கு ஸ்ப்ரிட் தேய்க்க வந்த பஞ்சேந்திய கரங்கள் அந்தரத்தில் அப்படியே நின்றது.

வீதியில் சென்ற வெறும் வழிப்போக்கரான இந்தப் பெரியவருக்கு எப்படி, அவள் கணவனின் அன்பை புரிந்து நடந்து கொள்ளாதது தெரியும்?

மூச்சு விட மறந்தவளாக அதிர்ச்சியுற்று நின்றாள் யாழினி.

அவரின் விழிகளிலோ ஆக்ரோஷம் இன்னும் இன்னும் கூடிக் கொண்டே போனது. அவளைப் பார்த்து சுட்டுப் பொசுக்கும் விழிகளுடன்,

“ கர்மாஆஆ!! கர்மாஆஆ!! அவனை சும்மா விடாது.. போன ஜென்மத்துல நீ அனுபவிச்ச வேதனையை.. இந்த ஜென்மத்துல அவன் அனுபவிச்சிட்டிருக்கான்!! ..நீ அவனை மன்னிச்சு ஏத்துக்குற வரைக்கும்··· கர்மா அவனை சும்மா விடாது..!!” என்று சொன்னவர்,

அவள் நிழல் படுவதே தீது என்று கொண்டாரோ என்னவோ? ப்ளாட்பாரத்தில் இருந்து விசுக்கென்று எழுந்து, பாதங்களில் எந்த வலியும் இல்லாதது போல சாதாரணம் போலவே விடுவிடுவென்று நடக்கவாரம்பித்தார்.

அவளோ உறைந்து போனவளாக, அவளை விட்டும் செல்பவரின் புறுமுதுகையே.. உச்சாதி பாதம் நடுக்கம் பரவ பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

அவளுக்கோ நடுக்கம் இன்னும் குறைந்தபாடில்லை. இந்தக் கிடுகிடு குரலும், அவரின் முகமும் எங்கோ ஓர் தரம் பார்த்த ஞாபகம் மட்டும் வந்து வந்து போனது.

அருகே.. குத்துக்கல்லாட்டம் நின்றிருந்த டிரைவரை நோக்கியவள், அவளுக்கே சரிவரக் கேட்காத மிக மெல்லிய குரலில்,

“ஜென்.. ஜென்மம்.. ஜென்மம்ன்றது உண்மையா..?” என்று கேட்டாள்.

அவள் பேசியது சரிவரப் புரியாத டிரைவரும், சற்றே பவ்யமாகக் குனிந்து அவளை நோக்கி, “என்ன மேடம் கேட்டீங்க?” என்று கேட்க அதற்கு அவளிடம் பதில் இருக்கவில்லை.

அவள் யோசனை அந்த மகான் பேசிச் சென்றதிலேயே தான் இருந்தது.

"கர்மாஆஆ!! கர்மாஆஆ!! அவனை சும்மா விடாது.. போன ஜென்மத்துல நீ அனுபவிச்ச வேதனையை.. இந்த ஜென்மத்துல அவன் அனுபவிச்சிட்டிருக்கான்!! ..நீ அவனை மன்னிச்சு ஏத்துக்குற வரைக்கும்··· கர்மா அவனை சும்மா விடாது..!!"

அவர்களது அறையோடு ஒட்டி அமைந்திருந்த டெராஸில் இருந்த, சோபாவில் அமர்ந்திருந்தவளின் சிந்தையை முழுதும் ஆக்கிரமித்திருந்தது இன்று பகல் கண்ட மகானின் ஆக்ரோஷமான பேச்சுக்கள்!!

அகன்ற விழிகளுடன், "கர்மாஆஆ.. கர்மாஆஆ" என்று அவர் சொன்னதே, திரும்பத் திரும்பக் காதோரம் ஒலித்துக் கொண்டேயிருக்க,

அவளுடைய வெண்மையான முகம் செக்கச்செவேலென சிவந்து செந்நிறம் கண்டிருந்தது.

அந்நேரம், அவள் சற்றும் எதிர்பாராத வகையில் காதுக்குள் ஹஸ்கி குரலில், "ஜானு!!.."என்று கணவனின் அழைப்பு கேட்க, சட்டெனத் திரும்பியவள்,

“ம்..?” என்ற வண்ணம் திரும்பியவள், யாதவனின் செல்லில் செல்ஃஃபீயாகப் பதிவானாள்.

கணவன் எப்போது அவள் அருகே வந்தான்? போதாக்குறைக்கு எப்போது அவளது தோள் மீது கை போட்டு.. தன்னோடு இறுக்கி அணைத்தான்? என்று தெரியவில்லையாயினும்,

இருவரும் சேர்ந்து நிற்கும் செல்ஃஃபீ கச்சிதமாகவே இருந்தது.

யாதவன் தன்னைக் கேட்காமல் செல்ஃஃபீ பிடித்ததில் குபீரென்று கோபம் பொங்க, அவன் தன் மேல் இட்ட கையை அப்புறப்படுத்த முயன்றவளாக,

“இப்போ எதுக்கு நீ என்கிட்ட கேட்காமல் போட்டோ பிடிச்ச..?”என்று கேட்டாள்.

அவன் கையை, அவளில் இருந்து இம்மியளவேனும் அசைக்காமல், அணைத்துப் பிடித்திருந்தவன், “எல்லாத்தையும் மறந்த நீ.. இப்போ நாம வாழ்ந்துட்டிருக்குற வாழ்க்கையையும்

மறந்துட்டேன்னா?.. அதான்..எவிடென்ஸ்..!!” என்று சொன்னவன்,

அவள் திகைத்து நிற்குமளவுக்கு, அவள் மடியில் சடாரென்று தலை வைத்துப் படுத்துக் கொண்டான்.

“முதல்ல என் மடியில்.. ம்மம்…” என்று கத்தியவளுக்கு அதன்பிறகு கத்த நாவெழவில்லை. காரணம் அவளது மென்மையான இதழ்கள் தான் அவனிடம் சிறைபட்டிருந்தனவே?

அவளுடைய மென்கழுத்தோடு கையிட்டு அவளை, தன்னை நோக்கி இழுத்தவன், தன்னை எழச் சொல்லும் அவளது அதரங்களை.. தன் வன் அதரங்களால் இம்சித்துக் கொண்டிருந்தான்.

அவள் அன்று பார்த்து உதட்டுக்குப் பூசியிருந்த ஸ்ட்ராபெர்ரி ஃப்ளேவர் லிப்ஸ்ட்டிக் வேறு.. ஆண்மகன் அவனது தாபத்தைக் கூட்ட, அவளது இதழ்களைத் தாவிக் கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தது ஓர் அணில் குஞ்சு.

அவன் கடித்தல் இலேசாக வலித்தாலும், கண்களை இறுக மூடி நின்றவள், தன்னையும் அறியாமல் கணவன் தந்த எச்சில் குளிர்மையை அனுபவிக்க முடியாமல் நின்றாள்.

எத்தனை தரம் அருந்தினாலும் திகட்டாமல் கள்ளூறும் அவள் இதழ்களிலேயே முழு சுகமும் இருக்கக் கண்டவன், கண்கள் மூடி சுகமாக அந்த மெல்லிடையாளின் அதரங்களின் நீள, அகலங்களைத் தன் நாவால் அளந்து கொண்டிருந்தான்.

எதிர் எதிர் முனைக் காந்தங்கள் தான் ஒன்றை ஒன்றை ஈர்க்கும்!! இது தான் விஞ்ஞான நியதி!!

ஆனால் இங்கே என்ன ஆச்சரியம்? ஒரு காந்தம் இணையத் துடித்த வேளை, மறு காந்தம் பிரியத் துடிக்கிறதே??

அவனது வலிய மார்பில் கை வைத்து, அவனைத் தன்னிலிருந்தும் அவள் தள்ள முயன்ற நேரம் எல்லாம்.. அவள் பின்னங்கழுத்தில் பதிந்திருந்த அவன் கை, அவளை இன்னும் இன்னும் அழுந்தப் பற்றி அவனை நோக்கி இழுத்தது.

இறுதியில் அவனுடைய ஜானு.. சிலபல மணித்துளிகளாக நீடித்த அந்த முத்தத்தின் விளைவாக மூச்சுத் திணறி நிற்பதைக் கண்டு அவளை விடுவித்தவன்,

அவளது தடுமாறும் விழிகளை இரசித்த படி, தன்னிதழ்களைத் தானே சுவைத்து தன் தாபம் உணர்த்தியபடி, “திரும்ப என்னை எழுந்திருன்னு சொல்லுவ?” என்று அழகாக புருவமுயர்த்திக் கேட்டான்.

ஏற இறங்கக் கீழ்மூச்சு, மேல்மூச்சு வாங்கியவள், கணவனை நெற்றிக்கண் திறந்து சுட்டெரிப்பது போல நோக்கி, காற்றைக் கைகளால் அழுத்தி நெருக்கி,

“என்ன்..ன்னைக் க்கேட்காமல்.. நீ என்னை.. எப்படி கிஸ் பண்ணலாம்??!!” என்று கண்கள் மூடிக் கத்த அதை அவள் பொருட்படுத்தவேயில்லை.

அவள் கண்களோடு கண்கள் நோக்கிக் காதல் சிந்தும் குரலில், “ஃபிவ் டேய்ஸா ரெஸ்ட்லெஸ்ஸா வர்க் பண்ணதில் ரொம்ம்ம்ப்ப்ப டயர்டா இருக்குமா.. அதனால கொஞ்ச நேரம் உன் மடியில்

தூங்கிக்குறேன் ஜானு..”என்று அவன் சொல்ல, அதற்கு மேலும் அவனைத் தன் மடியில் இருந்தும் விரட்டும் எண்ணம் அவளுக்கு சுத்தமாக இல்லை.

அவனுடைய இளகிய குரல், யாதவனின் முன்கோபக் குயிலைக் கட்டிப் போட, இது தான் சாக்கென்று கண்கள் மூடியவன்,

அவள் ஒரு கையை எடுத்து தன் கன்னத்துக்கு அடியில் வைத்து ஒருக்களித்துப் படுத்தவனாக, “ நான் விழிச்சிருக்கும் போதும் தாராளமா நீ.. என் தலை கோதலாம்! .. உன் யாதவ் ஒண்ணும் சொல்ல மாட்டேன்” என்று சொன்னவன் இதழ்கள் கள்ளச்சிரிப்பு சிந்திக் கொண்டிருக்க, இவளுக்கோ பக்கென்றானது.

அ.. அப்படியானால்.. நேற்றிரவு அவள், அவனுக்கு போர்வை போர்த்தி விட்டு, தலை கோதியதை அறிந்திருக்கிறானா இவன்? அவன் அங்கணம் விழித்திருக்கிறான் என்று தெரிந்திருந்தால், அந்தப்பக்கமே சென்றிருக்க மாட்டாளே என்றே தோன்றியது அவளுக்கு.

அத்தியாயம் 13

சினமன் கார்டன் (கறுவாத் தோட்டம்), கொழும்பு 07 இல் அமைந்திருக்கும் “இலங்கை தொல்பொருளியல் திணைக்கள” கட்டிட்டத்தின் மூன்றாவது தளம்.

யாழினிக்கென்று வழங்கப்பட்டிருக்கும் பிரத்தியேக அறையில், தன் கணிணியை கண்ணும் கருத்துமாக நோண்டிக் கொண்டிருந்தாள் யாழினி.

ராமுடனான கல்யாணத்துக்காக அவள் வாங்கியிருந்த லீவு நேற்றுடன் முடிந்து விடவே, இன்று அவள் வழமை போல பணிக்கு வரவேண்டிய நிலைமை.

அனைவருக்கும் வேலை இருந்ததாலோ? இல்லை நாகரிகம் தெரிந்தவர்களாக இருந்ததாலோ? என்னவோ? யாரும் மாப்பிள்ளை மாறிப் போன கதையையோ, அவள் திடீர் குழந்தை சுமக்கும் கதையையோ அவளிடம் கேட்க முன்வரவில்லை.

அப்படி முன்வராததும் கூட பெரிய ரிலீஃப்பாகவே இருந்தது அவளுக்கு.

அவள் அறைப் பக்கமாகச் சென்ற சக பணியாளினி ராகவி, மெல்ல அறைக்குள் வந்தவள், அப்படி யாழினி என்ன தான் தீவிரமாக கணிணியில் வேலை செய்கிறாள் என்று பார்த்தவள் அதிர்ந்து தான் போனாள்.

யாழினி தோளில் மென்மையாக கை வைத்தவள், அதிர்ந்து போன குரலில்,

"என்னடீ இது? முன்ஜென்மம், ரிஇன்கார்னேஷன் பற்றியெல்லாம் கூகுள் பண்ணிட்டிருக்க? ஆர்க்கியோலஜியை மறந்துட்டு ஆன்மீகவாதி ஆகப் போறியா என்ன?"என்று கேட்டாள்.

ராகவியின் தொடுகையில் தான் சுயநினைவுக்கு வந்த மற்றவளும்,

தன் சகபணியாளினி பார்த்து விட்டாளே? என்று தோன்றிய அசடுவழிதலைக் கடினப்பட்டு மறைத்துக் கொண்டு, "ஹிஹி.. அப்படிலாம் இல்லை.. இது ச்சும்மா..!!"என்று நகைக்க முயன்றாள்.

ராகவியும், ‘நம்பிட்டோம்’ என்பது போல கேலிப்புன்னகையை பரிசாகத் தந்தவளாக அவ்வறையை விட்டும் வெளியேறப் போன நேரம், சட்டென அழைத்தாள் யாழினி.

“ஹேய் ராகவி!!!”

“ ம்ம்ம்..?”- தோழியின் திடீர் அழைப்பில் அனிச்சையாகத் திரும்பி புருவம் உயர்த்தினாள் ராகவி!!

கண்கள் இரண்டும் யோசனையில் இடுங்க, ராகவியை நோக்கி, மென்மையான குரலில், “இந்த முன்ஜென்மம், திரும்பவும் பிறக்குறது இது எல்லாம் உண்மையா என்ன?”என்று தன் சந்தேகத்தைக் கேட்டாள் தொல்பொருளியல் பெண்!!!

வெளியேறப் போன ராகவிக்கு தோழியின் கேள்வி குபீர் சிரிப்பை வரவழைக்கவே, சிரித்துக் கொண்டே வந்து, யாழினியின் மேசையில் கையூன்றி நின்றவள்,

“ஹஹஹா. எனக்கு சத்தியமா தெரியாது.. அதைப்பற்றி ஆராயுற மனநிலையிலேயும் நான் இல்லை..!” என்றவளிடமிருந்து வெளிப்பட்டது பெருமூச்சு.

இப்போது எதற்கு பெருமூச்சு? என்று யாழினி வித்தியாசமாகப் பார்க்க, அதற்கும் காரணம் சொன்னாள் ராகவி.

“ நானும், ஆகாஷூம் வீட்டுக்குத் தெரியாமல் ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாம்னு இருக்கோம் யாழி….”என்று முகத்தில் எந்த சந்தோஷச் சோபனமும் இல்லாமல் ராகவி சொல்ல,

முகம் மலர வாழ்த்துக் கூறப் போனவளைத் தடுத்து நிறுத்தியது ராகவியின் அலுத்துக் கொள்ளும் குரல்.

“நம்ம கல்யாணதேதி ஃபிக்ஸான அதே தேதியில்.. இந்தியா உத்தர பிரதேசத்தில் ஒரு எக்ஸ்ப்ளோரேஷன்..

களனி யுனிவர்சிட்டி பைனல் யர் ஆர்க்கியோலஜி ஸ்டூடண்ட்ஸைக் கூட்டிக்கிட்டு போகணும்னு.. நம்ம ஆர்க்கியோலஜி கமிஷனர் சார் இப்போவே சொல்லிட்டிருக்காரு.

எப்படி சார்க்கிட்ட சொல்லி.. இன்டியா எக்ஸ்ப்ளோரேஷன் போறதைத் தள்ளிப் போடலாம்னு யோசிச்சுட்டிருக்கேன்.. உன்னை கை காட்டிட்டு நான் எஸ்ஸாகலாம்னு பார்த்தா வாயும், வயிறுமா வேற வந்து நிற்குற?? என் பாடு திண்டாட்டம் தான்!!"என்று கூற,

அவளது சோபையிழந்த முகத்துக்கான காரணம் அப்போது தான் புரிந்தது யாழினிக்கு.

"ஓஹ்!!..என் உடல்நிலைமை தான் புரியுதுல ராகவி?? இல்லைன்னா கண்டிப்பா ஹெல்ப் பண்ணியிருப்பேன்··· எனிவே கங்கிராட்ஸ்..!!"என்று ராகவியின் கைப்பற்றி வாழ்த்தும், ஆறுதலும் சொல்ல ராகவியின் மனம் மெல்ல கனிந்தது.

சிந்தித்துக் கொண்டே வாய் திறந்தவள், “ம்.. யாழினி??.. எனக்கு ஒரு சாமியார் தெரியும்.. ரொம்ப சக்தி வாய்ந்தவர்னு என் அம்மா சொல்வாங்க.. அவரைப் போய் பாய் பாரேன்.. ஏதாவது ஐடியா கிடைக்கலாம்.!!” என்று ராகவி ஐடியா சொல்ல,

“சாமியார்” என்ற பெயரைக் கேட்டதுமே.. அது பத்தாம் பசளித்தனமாகத் தோன்றலாயிற்று யாழினிக்கு.

அதை வாய் விட்டு தோழியிடமே கூற நாடியவள், “சாமியாரா??... அதையெல்லாம் இன்னும் நம்புறியா நீ..??” என்று இகழ்வு தொனியில் இவள் கேட்க, ராகவியோ வேறு சொன்னாள்.

“அவரை சாமியாராப் பார்க்காதே .. சைக்காட்ரிஸ்ட்டா பாரு.. சைக்காலஜியில் பி.எச்டி முடிச்சிருக்காரு.. பாமர மக்களுக்கு அவர் சாமியார், மகான்னா.. நம்மள மாதிரி படிச்சவங்களுக்கு அவரு சைக்காட்ரிஸ்ட்.. போறதுன்னா சீக்கிரம் போய் பாரு.. இன்னைக்கு அஞ்சு மணிக்கு அப்புறம் யு. எஸ் போயிருவாரு..!!!”என்று ராகவி மேலதிக தகவலொன்றையும் வழங்க,

சற்றே குழம்பிப் போனாள் சுந்தரப் பெண்.

“அவரைப் பத்தி இவ்வளவு டீடெயில்ஸ் சொல்ற? உனக்கெப்படி தெரியும்?”என்று கேட்க,

ராகவியோ, சுந்தரப் பெண்ணைப் பாராது, செல்லை நோண்டிய வண்ணம், “அவரோட ஃபேஸ்புக் ஸ்டேட்டஸ்ல பார்த்தேன்..”என்று சொல்லி முடித்த மறு விநாடி,

மேசையிலிருந்த யாழினியின் புது செல், ‘தனக்கு நோட்டிபிக்கேஷன் வந்துடுத்து’ என்பது போல கூவி அடங்கியது.

(பழைய செல் தான்.. மோதலில் நடுவீதியில் தூள் தூளாகிப் போனதே!)

தன் செல் ஏந்திய கையால், யாழினியின் செல்லை சுட்டிக்காட்டியவள், “உன் செல்லுக்கு அவர் அட்ரஸ் அனுப்பிச்சிருக்கேன்.. எடுத்துப் பாரு” என்று கூற,

“அடேங்கப்பா இப்போ சாமியாரெல்லாம் பேஸ்புக் அக்கவுண்ட் முதற்கொண்டு வச்சிருக்காங்களா என்ன?”என்று எண்ணியவாறே தோள் குலுக்கிக் கொண்டாள் யாழினி.

வாட்ஸ்ஆப் மெஸேஜைத் திறந்த போது, அதில் இருந்தது, “டாக்டர். கோவிந்தராஜ்” என்னும் பெயர்.

அவளுடைய திணைக்களம் அமைந்திருந்த வீதியிற்கு சற்று தள்ளி.. அமைந்திருந்தது டாக்டர். கோவிந்தராஜின் க்ளினிக் கட்டிடம்!!

அவள், தன் மேலதிகாரியிடம் கேட்டுக் கொண்டு கிளம்பிய வேளையும், டாக்டர். கோவிந்தராஜ் விமானநிலையத்துக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையும் இக்கடா, அக்கடா என்று கிட்டத்தட்ட ஒன்றாக இருந்த போதிலும்,

முன்னாடியே சென்றதால்.. அவரை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றாள் யாழினி.

கொஞ்சம் நேரம் பிந்தியிருந்தாலும் கூட, அவர் அமெரிக்கா விட்டு வரும் வரை, அவள் வெகுகாலம் காத்திருக்க வேண்டியதாகியிருக்கும்.

அவருடைய க்ளினிக் வளாகம், மூடக் காத்திருந்த வேளை அவள் சென்றதால், அவ்வளவாக ஊழியர் இல்லாத பட்சத்தில், யார் தொந்திரவும் இன்றி.. நேராக அவர் அறைக்கே விரைந்தாள் யாழினி.

வெள்ளை வெளேரென்ற வர்ணப்பூச்சு பூசப்பட்டிருந்த அறை அது.

அவருடைய மேசை, சுழல் நாற்காலி, இன்னும் ஏன் அங்கே இருந்த ஓவியங்களின் சட்டங்கள் மற்றும் புத்தக ராக்கை எல்லாமே வெண்மையாக இருக்கக் கண்டாள் அவள்.

அங்கே அந்த வர்ணத்தையும், அவரையும் பிரித்தறிய முடியாத படி வெள்ளை வேஷ்டி சட்டையில் ஓர் ஆஜானுபாகுவான உருவம்,

அவளுக்குப் புறமுதுகிட்ட படி புத்தகராக்கையில் புத்தகம் எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டவள்,

“சார்??”என்று மெல்ல அழைத்தார்.

அந்த அழைப்பில் அவளை நோக்கித் திரும்பியவர் நெற்றியிலே நாமமும், கழுத்திலே உருத்திராட்ச மாலையும் அணிந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியானவள்,

தன் குரல் தனக்கே கேட்காத தொனியில்,

"நீங்களா?"என்றாள்.

ஆம், அவள் நேற்று சந்தித்த அதே மகான்!! அவள் கையால் மருந்தும், உபசாரமும் வேண்டாம் என்று கோபத்தில் தூக்கியெறிந்து விட்டுப் போன அதே மகான்.

நெற்றியிலே நாமமும், கழுத்திலே உருத்திராட்ச மாலையும் அணிந்து சிவனும், திருமாலும் வேறில்லை ஒன்றே என்ற மாபெரும் தத்துவத்தை உணர்த்தாமல் உணர்த்திக் கொண்டிருந்த மகான்!!

ஆனால் என்னேவொரு அதிசயம்? அவர் முகம் நேற்று தகிக்கும் சூரியனாய் சுட்டெரித்துக் கொண்டல்லவா இருந்தது?

இன்றோ அவர் முகம் தண்மையான மதியைப் போல சாந்தமாக, குளிர்வீசிக் கொண்டிருந்தது.

தன் முன்னே நிற்கும் இந்த மகான் ஒரு சைக்காட்ரிஸ்ட்டா?? ராகவி சொன்னது போல சாமியாரா? என்று அவள் அதிர்ந்து போனவளாக யோசித்துக் கொண்டிருந்த வேளை கேட்டது அவர் குரல்!

“யாழினி மகேந்திரன்!! ..” கணீர் என்று வந்த அவர் குரலில் சித்தம் தெளிந்து, அவர் விழிகளை நோக்க,

அவரோ அவள் ஆழ் மன எண்ணங்களை அச்சொட்டாகப் படித்தவராக,

தன் தாடியைத் தடவிய வண்ணம், “நீ சைக்காட்ரிஸ்ட்டா பார்த்தா நான் சைக்காட்ரிஸ்ட்!!.. இந்து தர்மம் முழுதும் பயின்றவன்னு பார்த்தேன்னா நான் சாமியார்..!!” என்று சொல்ல,

அவளுள்ளே ஓர் துணுக்கம் எய்திப் பரவியது. அவள் மனதில் எழுவதை எப்படி அவர் அறிந்தார்?

அவரோ ஒன்றும் பேசாமல் கையிலிருந்த, பிரித்து வைத்த புத்தகத்தை மூடிக் கொண்டே சுழல் நாற்காலியை நோக்கி நடந்து வந்தவராக, ஒருவகையான மோனத்தவம் யாசிக்கும் ஆழ்ந்த குரலில்,

“நீ என்னைத் தேடி வருவேன்னு எதிர்பார்த்தேன்.. ஆனால் இவ்வளவு சீக்கிரம் தேடி வருவேன்னு எதிர்பார்க்கலை..!!!”என்றார் .

சுந்தரப் பெண்ணுக்கோ பெருவியப்பு! இவர் தானாக உணர்ந்து சொல்கிறாரா? இல்லை அவள் மனத்தைக் குழப்புவதற்காக சொல்கிறாரா?

புரியவில்லை அவளுக்கு. கம்மிப் போன குரலில் வாய் திறந்தவள், “அப்படின்னா நான் வருவேன்னு உங்களுக்கு முன்னாடியே தெரியுமா?”என்று சொல்ல,

தன் வலிமையான எளிறுகள் காட்டி வாய் விட்டு நகைத்தவர்,

“தெரியும்!!ப்ரஸாதே ஸ்ரவது கா நாம் ஹாநிரஸ்யோபஜாயதே ப்ரஸன்னசேதஸே ஹ்யாஸு

புத்தி பர்யவதிஷ்டதே!''என்று பகவத் கீதையின் சமஸ்கிருத சுலோகத்தை உச்சரிப்புடன் ஏற்ற இறக்கத்துடன் சொல்லிக்காட்ட,

அவர் குரல்.. அந்தத் தொனி அவளை ஆகர்ஷிக்கவே செய்தது.

சமஸ்கிருத சுலோகத்திற்கு பொருள் சொல்ல நாடியவராக, " உள்ளம் தெளிவு பெற்ற… சாந்தி நிலையில்.. எல்லாத் துன்பங்களுக்கும்… அழிவு ஏற்படுகிறது. சித்தம் சாந்தி பெற்ற மனிதன்.. புத்தி.. விரைவிலேயே நிலைப்படுகிறது.

நேர்ப்பட்ட புத்தி.. பரம்பொருள் பற்றிய ஞானத்தை.. ஒரு மனிதனுக்குத் தந்தால்.. அவன் முக்காலமும் உணரப் பெறுவான்..உன் அப்பா வெறும்மேல் சித்தரும் அப்படியான ஞானம் கொண்டவர்களில் ஒருவர் தான்!!''என்று அவளுடைய தந்தையைப் பற்றியும் அவர் சொல்ல விக்கித்துப் போனாள் யாழினி.

நிஜமாகவே பரம்பொருள் பற்றிய தேடல்.. ஓர் மனிதனுக்கு இத்தகைய பெரிய அறிவாற்றலைக் கொடுக்குமா என்ன?

‘கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு!’ என்பது எவ்வளவு பெரிய உண்மை என்று தோன்றியது அவளுக்கு.

முன்னிருக்கையைக் காட்டியவர், “உட்காருமா..”என்று சொல்ல, ஏதும் பேசாமல் ஏதோ மந்திரத்துக்கு ஆட்பட்டவள் போல வந்து இருக்கையில் அமர்ந்த யாழினியைப் பார்த்தவர்,

சொற்பமான வருத்தம் இழையோடும் குரலில்,

“நேற்று உன் கிட்ட கோபமா பேசி.. ஏற்கனவே குழம்பியிருப்பவளை.. இன்னும் குழப்பியது தப்பு தான்.. ஆனால் குழப்பங்களும் நல்லதுக்கே!!.. குழப்பங்கள் தான் ஒரு மனிதனுக்கு தீர்வு வேணும்ன்ற உத்வேகம் கொடுக்கும்!... அந்தக் குழப்பம் தான் நீ இன்னைக்கு என்ன தேடி வரக்காரணமே!!கரெக்ட்டா?.”என்று சொல்லி

புன்னைக்க, பதிலுக்கு தானும் புன்னகைக்க முயன்று தோற்றாள் யாழினி.

அவள் தலை ‘ஆமாம்’ என்பது போல மெல்ல ஆடியது.

அவரும் வந்து தன் சுழல்நாற்காலியில் அமர்ந்து கொண்டவர், தன் ட்ராயரிலிருந்து ஒரு கட்டுப்புத்தகம் எடுத்து மேசை மீது வைத்தார்.

அந்தப் புத்தகத்தின் அட்டையில் கோட் சூட் அணிந்த ஓர் வெள்ளைக்காரப் பெரியவர் புன்னகையுடன் கை கட்டி நின்றிருக்க, தலைப்போ, “ஸ்டோரீஸ் ஆப் ரிஇன்கார்னேஷன்!”என்று எழுதப்பட்டிருந்தது.

அவளோ அந்த வெள்ளைக்கார மனிதன் யாரென்று பார்க்க, அந்த மகான் தொடர்ந்து சொன்னார்,

“இவர் தான் டாக்டர். இயன் ஸ்டீவன்சன்.. வெர்ஜினியா யுனிவர்சிட்டியில் சைக்காலஜி ஃப்ரோபசர்ரா பணியாற்றியவரு..இறப்புக்கு அப்புறம்

ஆத்மாவுக்கு என்ன நடக்கிறது ன்னும், மறுபிறப்பு தொடர்பாகவும் ஆராய்ச்சி நடத்திய பிரபலமான நபர்..

இவர் தன்னோட வாழ் நாள்ல மூவாயிரத்துக்கும் அதிகமான மறுபிறப்புக் கதைகளை பார்த்திருக்குறதா.. இந்த புக்ல சொல்லியிருக்காரு..'' என்று அவர் அந்த அட்டைப் படத்தில் இருந்த நபர் பற்றி சொல்ல அவள் விழிகள் அகலத் திறந்தன.

அவள் கைகளோ அரவமேயின்றி நீண்டு, அந்தப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கலானது.

அவள் விழிகள் அந்தப் புத்தகத்திலிருக்கும் அச்சு எழுத்துக்களில் ஓட, அவள் செவிகள் அம்மகான் சொல்வதை செவியேற்கலாயிற்று.

மேசையில் இரு கைகளையும் கோர்த்து வைத்தவராக, சற்றே முன்னோக்கி சாய்ந்து, ''அதிலும் குறிப்பா இருநூற்றிப் பத்து குழந்தைகளுடைய முன்பிறப்பு அனுபவங்களில்.. அந்தக் குழந்தைகள் சொன்ன விஷயங்கள் நைன்ட்டி டூ பர்சன்ட்.. முற்பிறப்புத் தகவலோட ஒத்துப்

போயிருக்குறதாகவும் சொல்லியிருக்காரு.. இது எப்படி சாத்தியம்??”என்று கேட்க,

அந்தக் கேள்வியில் சடாரென நிமிர்ந்து அவரைப் பார்த்தாள் சுந்தரப் பெண்.

யாதவன் மனம் கவர்ந்த சுரூபினிக்கு… அது எப்படி சாத்தியம் என்று சத்தியமாகத் தெரியவில்லை தான். இருப்பினும், அவருக்கு அமைதியாக செவிதாழ்த்த வேண்டும் என்று மட்டும் அவள் மனம் உந்தியது.

அவள் தான் சொல்வது அனைத்தையும் கேட்க சித்தமாயிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட டாக்டரும்,

திரும்பவும் ட்ராயரிலிருந்து நிறைய பைல்களை எடுத்து அவள் முன்னாடி தொம்மென வைத்தவர், ஒவ்வொரு ஃபைலாக அவள் பக்கமாக நோக்கி வீசியவராக,

“இது நைன்ட்டீன் ஃபிப்டிசிக்ஸ்ஸில் துருக்கியில் அடானா மாவட்டத்தில் உள்ள இஸ்மாயீல்ன்ற

இருபத்தாறு வயது இளைஞனுக்கு பழைய நினைவுகள் வந்து.. தன்னோட குடும்பம் பழைய வீட்டுக்குப் போய்.. தன்னுடைய முற்பிறவி மகளான ஐம்பத்தாறு வயது மூதாட்டியைச் சந்திச்சதைப் பற்றி விவரிக்குற.. கேஸ் ஹிஸ்ட்ரி..

இது நைன்ட்டீன் டுவென்டி சிக்ஸில் டெல்லியில் நான்கே வயதான சாந்தி தேவின்ற ஒரு குழந்தைக்கு.. முற்பிறப்பில் அவங்க அம்மா ஞாபகம் வந்து தேடிப்போனதை சொல்ற ஹிஸ்ட்ரி..!!

இது ஒரு கிறிஸ்தவ பாதிரியார்.. தான் முற்பிறப்புல ஓர் அந்தணரா பிறந்த ஞாபகங்கள் தெரிய வந்தது பற்றிய கேஸ் ஹிஸ்ட்ரி..’’என்று அடுக்கடுக்காக அவள் முன் ஃபைல்களைப் போட,

அதை ரோபோ போல உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் எடுத்தவள், அவர்களின் போட்டோ சகிதம் இருந்த வரலாற்றின் இறுதிப் பக்கங்களை படிக்கவாரம்பித்தாள்.

இறுதிப் பக்கத்தில் தானே முழுதும் தொகுக்கப்பட்ட சாராம்சம் இருக்கும்.

அவர் சொல்வது அனைத்தும் உண்மையா? விஞ்ஞானம் என்பதற்கும் மேலாக இவ்வுலகில் இந்த மாதிரி அமானுஷ்யமான மயிர்க் கூச்செறிய வைக்கும் விஷயங்களும் இருக்கிறதா என்ன??

அவரோ தன் முன்னே நிற்பவள் இன்னும் தெளியாதது கண்டு.. இன்னும் சில விளக்கங்களைக் கொடுக்க நாடினார் போலும்,

யாழினியை விழிக்கு விழி நோக்கியவர், “இன்னும் ஏன்..?மகான் ஷீரடி சாய்பாபா தான்… இப்போ புட்டபர்த்தி சாய்பாபாவாக அவதரிச்சிருப்பதாக.. சாயி பாபா பக்தர்கள் ஆழமாக நம்புறாங்க..

புட்டபர்த்தி சாய்பாபாவும்.. தன்னோட முற்பிறப்பு பத்தி.. அத்தனை தகவல்களையும் சொல்லி.. நான் தான் ஷீரடி சாய்பாபான்னு நிரூபிச்சு.. பக்தர்கள் மனதுல நிலையா நிற்கலை?? இது எல்லாம் எப்படி சாத்தியம்??”என்று கேட்க,

பாவம் அந்தப் பேதை பெண்ணிடம் விடையில்லை.

அவரைப் பார்த்து வெளிறிய முகத்துடன் மலங்க மலங்க விழித்தவள், “தெரியாதே சுவாமி!” என்றாள் அவளையும் அறியாமல்.

“அதுக்கு காரணம் ஆத்மா.. அழிவில்லாத ஆன்மா.. உடல் அழியும்!!.. ஆத்மா அழியாது!!.. அந்த ஆத்மா அவருடைய தலைமுறையில் யாருடைய பிறப்பு தன் கர்ம வினைகளை அனுபவிக்க பொருத்தமா இருக்கோ.. அந்த உடலோட இணையும்.. அப்போ பூர்வ ஜென்ம நினைவுகள் மலரும்.. இது இந்து மத சித்தாந்தம்..!!இன்னும் விஞ்ஞானம் எட்டிப்பிடிக்காத இந்து மத சித்தாந்தம்!” தீர்க்கமாக ஒளிரும் விழிகளுடன் அவர் கூற,

இதையெல்லாம் நம்பணுமா? என்று ஒருபுறமும், இந்தமாதிரியான அமானுஷ்ய விஷயங்கள் இருப்பது உண்மையோ என்ற கேள்வியும் ஒருங்கே எழுந்து.. அவளைக் கசக்கிப் பிழியலானது.

அவளை மேலும் தெளிய வைப்பதற்காக, அந்த மகானும், “இந்து மதத்தில் கர்மான்னு ஒண்ணு

இருக்கு.. கர்மா பூமராங் மாதிரி..!! நம் வினைகள் நம்மையே திரும்பத் தாக்கும்!!

நல்லவனா இருப்பான்.. ஆனால் இனி இல்லைன்ற கஷ்டம் அனுபவிச்சிட்டிருப்பான்.. ஏன் கடவுள் இப்படியெல்லாம் கஷ்டம் கொடுக்குறான்னு யோசிப்போம்!!..

அதே மாதிரி.. ரொம்ப அநியாயம் பண்றவன்.. சுகமா வாழ்வான்‧‧‧. இவனுக்கு எப்படி இந்தமாதிரி வாழ்க்கைன்னு யோசிப்போம்.. இது ஏன்னு என்னைக்காவது யோசிச்சிருக்கியா?

கர்மா.. எல்லாத்துக்கும் காரணம் கர்மா..!!! உன் புருஷனை நீ மன்னிச்சு மனசார ஏத்துக்காத வரை‧‧‧ கர்மா அவனை சும்மா விடாது..!!" என்று நேற்று கடுங்கோபத்தில் சொன்னதையே இன்று அமைதியாக சொன்னார் அவர்.

அவளோ இத்தனைப் பெரிய விளக்கங்கள் எதற்காக என்று புரியாமல் நோக்க,

அம் மகானோ, “மறுபிறவி, கர்மா இதையெல்லாம் ஏன் சொல்றேன்னு பார்க்குறியா?.. உன் குழப்பத்துல இருந்து நீ மீண்டு வரணும்னா.. நீ இதை நம்பணும்.. அப்போ தான் முழுசா உனக்கு ஒரு தீர்வு கிடைக்கும்.” என்று அவர் சொன்னவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டே அமர்ந்திருந்தவளுக்கு,

இதயத்துடிப்பு நொடிக்கு நொடி அதிகமாவது போல இருக்க.. அந்த ஏசி அறையில் குபுகுபுவென வியர்க்கலாயிற்று.

அவளுக்கு வியர்ப்பதை அறிந்தவர், தன் முன்னே இருந்த தண்ணீர் க்ளாஸை எடுத்து நீட்ட, எதுவுமே பேசாமல் திக்பிரம்மை பிடித்தவள் போல அவரது விழிகளையே பார்த்துக் கொண்டிருந்தாள் யாழினி.

அவரது விழிகளும் கூட.. இதுக்கு முதல் எங்கேயோ பார்த்த ஞாபகத்தைக் கொடுப்பது போல இருந்தது அவளுக்கு.

“நீ அவன் சொல்றதை முழுசா நம்பணும்!! .. நீ நம்ப ஆரம்பிக்கும் போது.. உனக்கு எல்லாமும்

தெரிய வரும்..!!”என்று அந்த மகான் இறுதியாக சொன்ன வார்த்தைகளே அவள் செவியில் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

சேலைத் தலைப்பின் நுனியை சுட்டுவிரலில் சுற்றிச் சுற்றிக் கழற்றிக் கழற்றிக் கொண்டே, ஏதோ யோசனையில், அவரது கன்சல்டன்சி வளாகத்தை விட்டும் நடந்து வந்து கொண்டிருந்தவளுக்கு,

வாகனங்களின் ஓசையோ, ஹாரன் ஓசையோ, மனிதர்களின் கூச்சலோ செவியை நிறைக்கவேயில்லை.

மாறாக, மனமெங்கிலும் அவர் நினைவுகளே திரும்பத் திரும்ப வந்து போய்க் கொண்டேயிருந்தது.

யாதவனுக்கும், அவளுக்குமான பூர்வஜென்ம பந்தம் இன்னது என்பதை அறியாமலேயே அவள் அதனை நம்ப வேண்டுமா??

ஆனால் அவர், அவள் மனதில் நினைத்ததையும், நினையாததையும் பற்றி புட்டுப் புட்டு வைக்கும் போது, இந்து மத சித்தாந்ததைக் கரைத்துக்

குடித்தவர் போலத் தான் தோன்றுகிறது என்று சொல்லியது மனம்.

பாதையோரமாக, தன் மணிவயிற்றை மெல்ல தள்ளியவளாக நடந்து நடந்து, தன் டிபார்ட்மென்ட்டை அடைந்து, அங்கே கார்பார்க்கிங்கில் காத்திருக்கும் டிரைவரிடம் செல்ல எண்ணம் கொண்டாள் சுந்தரப் பெண்.

அந்த கணம் பாதையோரம் முளைத்திருந்த ஏடிஎம்மிலிருந்து காசு எடுத்தவாறு வெளியே வந்து கொண்டிருந்த ராமின் கண்களில் விழுந்தாள் யாழினி.

ஏற்கனவே தன் நுனி நாவு வரை வந்து இதயம் அடைக்கும் சொற்களை அவளிடம் சொல்ல, சமயம் பார்த்துக் காத்திருப்பவனாயிற்றே அவன்?

யாழினியை அவன் கண்டது, அந்த டூ வே சாலையின் மறுபக்கத்தில். இருந்தாலும் போக்குவரத்து நெரிசலைக் கூட கணக்கில் கொள்ளாது,

வாகனங்களுக்கிடையில் குறுக்கே மறுக்கே புகுந்து.. நடுவில் இருவழி சாலையும் பிரித்திருந்த

குட்டி மதிலையும் தாண்டி, இடையில் வந்த ஆட்டோ மோதலில் இருந்து தெய்வாதீனமாகத் தப்பித்து,

அந்த சிங்கள ஆட்டோக்காரர், தன் தாய்மொழியில் அர்ச்சித்த அர்ச்சனைகளை எல்லாம் தூசு போல தூக்கியெறிந்து விட்டு,

அவள் முன்னே , ஓடி வந்து நின்று.. கைகளால் ஒரு செக்கன் ஒரு செக்கன் என்று சைகை காட்டியவன், முழங்காலைப் பிடித்துக் கொண்டு மூச்சு வாங்க,

யாதவனின் மனைவிக்கோ, ‘‘இவனெப்படி திடீரென்று வந்தான்?’’ என்றிருந்தது.

அவளுக்கோ ராமைக் கண்டதும் அந்தப் பொல்லாத மண்டபத்து நினைவுகள் எழுந்து அவளை அலைக்கழிக்க, அவனை மெல்ல கடந்து செல்ல முற்பட்ட நேரம்,

விசுக்கென்று நிமிர்ந்தவன், அவள் முன்னங்கைப் பற்றி..அவளைப் போக விடாது தடுத்தான்.

மூச்சிறைக்கும் குரலில், ‘‘யாழிஹ்!! .. நாஹ்ன் ஹூன் கூடஹ் பேசணும்!! .. உன் கூட இருக்கும் உறவைப் புதுப்பிச்சிக்க நான் இங்கே வரலைஹ்.. எனக்கு உன்கிட்ட தேவைன்றது அஞ்சு நிமிஷத்துக்கும் குறைவான நேரம் தான்!!!’’என்று தவிப்புடன் சொல்ல, அந்தக் குரல் அவளை தடுத்து நிறுத்தத் தான் செய்தது.

அவளோடு ஒன்றாக வளர்ந்தவன் என்ற எண்ணம் தோன்ற, ‘அப்படி என்ன தான் சொல்லப் போகிறான்?’என்று கேட்க, அமைதியாக மார்புக்கு குறுக்கே கை கட்டி.. விறைத்த முகத்துடன் நின்றாள் யாழினி.

அவள் காது தாழ்த்த ரெடி என்றதும், அவனும் மடை திறந்த வெள்ளம் போல கடகடவென்று பேசிக் கொண்டே போனான்.

ஐந்து நிமிடத்தில், ஒரு நிமிடம் கூடினாலும், ‘உனக்கு கொடுத்த டைம் முடிஞ்சு போச்சு’ ன்னு சொன்னாலும் சொல்வாள் என்று தோன்றவே இந்த வேகம்!!!

“யாழினி நான் பண்ணது தப்பு தான்.. மண்டபத்துல எல்லார் முன்னாடியும் அப்படி அநாகரிகமா நடந்திருக்கக் கூடாது..”என்று அதிவேகத்தில் அவன் மொழிய,

அவனை இடையிட்டுத் தடுத்தவள், தன் இடது ஒற்றைப் புருவம் மாத்திரம் மேலுயர, சற்றே காட்டமான குரலில்,

“நீ மன்னிப்புக் கேட்டா எல்லாம் சரியாகிருமா..?”என்று கேட்டாள்.

ராமோ.. அவளை ஆழ்ந்து நோக்கியவனாக, எரிச்சலான குரலில்,

“யாழினி நான் இன்னும் முழுசா பேசி முடிக்கலை.. லிஸின்..!! நான் உன்னைக் காதலிச்சேன்னா கூட எனக்கு சொல்ல தெரியலை யாழினி..??”என்று அவன் சொன்னதில், யாழினியின் விழிகள் மெல்ல மேலுயர்ந்தன.

ஸ்ரீ ராமோ தொடர்ந்து தன் நிலையை விளக்க நாடி ஏதேதோ சொன்னான். அவன் பேசி

முடித்ததும்.. இவன் பகலிலேயே குடித்திருக்கிறானா என்ன? என்ற சந்தேகம் எழுந்தது அவளுக்கு.

“ஆமா.. அதான் நிஜம்!! .. நான் உன்னை லவ் பண்ண இத்தனை வருஷத்துல.. காதல் வசனம் பேச மட்டுமே என்னால முடிஞ்சதே தவிர.. உன்கிட்ட ஆசையா நெருங்க என்னால முடியலை.. அதுக்காக என்னை இம்படன்ட்னு நினைச்சிராதே யாழி.. ஏன்னா உன் கிட்ட எனக்கு எந்தவிதமான ஃபீலிங்க்ஸூம் வரலை….

அது ஏன்னு அப்போ எனக்கு தெரியலை.. இப்போ தெரியுது.. ஏன்னா உன் மேல வைச்சது காதலே இல்லை.. !!” என்று ராம் தன்னிலையை விளக்கிச் சொல்ல, அவனை ஏற இறங்கப் பார்த்தாள் யாழினி.

அவன் கால்கள் தள்ளாடுகின்றனவா? என்பது போல பாதங்களின் ஸ்திரத்தன்மையை ஆராய்ந்தவளாக இவளும்,

“என்ன உளர்ற ராம்? .. தண்ணி கிண்ணியேதும் போட்டிருக்கியா என்ன?” என்று கேட்டாள்.

அவனோ பெருமூச்சொன்றை இழுத்து விட்டு தன் பொறுமையை இழுத்துப் பிடித்தவனாக, “உன் அப்பா என்னை குடிகாரனா வளர்க்கலை யாழினி.. நான் ஸ்டெடியா தான் இருக்கேன்.. நல்லா யோசிச்சு நிதானமா தான் பேசுறேன்!!.. ‘உனக்கு நான் தான்!!.. உனக்கு நான் தான்’ னு உன் அப்பா சொல்லி சொல்லி வளர்த்ததில் ஒரு க்ரஷ்.. இருந்ததுன்னு தான் சொல்வேன்..

நீ என்னை நெருங்கும்போதெல்லாம்.. ‘நீ எனக்கு சொந்தமானவள் இல்லை.. நான் உனக்கு ஏத்தவன் இல்லை.. உனக்கு ஏத்தவன் வேற லெவல் ஆளு’ ன்னு ஒரு குரல் எனக்குள்ளே கேட்டிட்டே இருக்கும்…

உன்கிட்ட நெருங்கும் போதெல்லாம் எனக்கு உரிமையில்லாத பொருளை கையாடுற மாதிரி குற்றவுணர்வு தோணும் ..”என்று மெய்யாகவே குற்றவுணர்வு வாட்டியெடுக்கும் கண்களுடன் சொன்னவன்,

தன் தோழியை நோக்கி, “அதனாலேயோ என்னவோ நீ அருகில் இருக்கும் போதெல்லாம்

விரதம் இருந்தேன்.. சம்டைம்ஸ் “நான் விரதம்” னு பொய்யும் சொல்லியிருக்கேன்..”என்று சொல்ல அதிர்ச்சியானாள் யாழினி.

அவள் சிந்தனைக்குள், ஒவ்வொரு தடவை அவனோடு அவள் இழையும் போதெல்லாம், சட்டென அவன், ‘இன்னைக்கு நான் விரதம்’ என்று சொன்ன தருணங்கள் எல்லாம் வந்து போனது.

அவள் அருகாமையில், அவனுக்கு எந்தவிதமான உணர்ச்சிகளும் ஏற்படாததாலா இப்படி விரதம் என்றான்??

ராம் சொல்வது எல்லாம் உண்மை என்பது சிறுகச் சிறுக அவள் புத்திக்கு உரைக்கவாரம்பித்தது.

ராமோ, சற்றே கண்கள் கலங்க, “ஆனால் அன்னைக்கு கல்யாண மண்டபத்துல.. சார் உன் கழுத்துல தாலி கட்டி , “யாழினி தான் என் பொண்டாட்டி” ன்னு சொல்லி கூட்டிப் போகும் போது..உங்க ரெண்டு பேருக்கும் எப்படி பழக்கம்னெல்லாம் எனக்கு தோணலை..

எனக்கு அந்த நொடி தோணினதெல்லாம்.. 'உனக்கேத்தவரு யாதவ் தான்!!'னு மட்டும் தான்.. அது மட்டும் தான் மனசு சொல்லுச்சு யாழினி ..''என்று மனம் திறந்து அவன் சொல்ல, தன்னுடன் பேசுவது ராமா என்று ஆச்சர்யம் கமழப் பார்த்திருந்தாள் சுரூபினி.

ஸ்ரீ ராமனோ தான் செய்த தவற்றை உணர்ந்தவனாக, ''என்னை மன்னிச்சிரு யாழினி .. அன்னைக்கு நான் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுட்டேன்.. நீ அன்னைக்கு தலைகுனிஞ்சு நிற்க நானும் ஒரு காரணம் தான்.. நான் அன்னைக்கு அத்துமீறி நடந்துக்கிட்டது.. தப்பு தான்.. ப்ளீஸ் என்னை மன்னிச்சிரு யாழினி'' என்று இறுதியில் கண்கள் கலங்க மன்னிப்புக் கேட்டான்.

ராமின் விழிகளையே உணர்ச்சி துடைத்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, 'மன்னிப்புக் கேட்டா எல்லாம் சரியாகிருமா? என் கூடவே ஒண்ணா வளர்ந்தும்.. என்னைப் பத்தி புரிஞ்சிக்காம தானே அன்னைக்கு பேசின?''என்று கேட்க வேண்டும் என்று நாவு நுனி வரை சொற்கள் வந்து தள்ளாடியது அவளுக்கு.

இருப்பினும் ராமுடன் பேசப் பிடிக்கவில்லை அவளுக்கு. விழிகளாலேயே அவனை சுட்டெரிப்பது போல நோக்கியவள்,ஏதும் பேசாமல் அவனை விட்டும் நகர முற்பட்டாள்.

ராமின் நீண்ட கைகள் நீண்டு, அவள் வளை கையை அழுத்தமாகப் பற்றி அவளை மேற்கொண்டு முன்னேற விடாமல் தடுத்து நிறுத்தியது.

அவன் இதழ்களோ இளகிய மன்றாடும் குரலில், ''ப்ளீஸ் மன்னிச்சிட்டேன்னு சொல்லிட்டுப் போ..''என்று கெஞ்ச, யாழினிக்கு அவன் உணர்ச்சிகள் பெரிதாகத் தோன்றவில்லை.

அன்று அவன், அவளுக்கு தாலி கட்டினானா? இல்லையா? என்பது இரண்டாவது கதை.

அவளது உணர்ச்சிகளுக்கு இந்த ராம் மதிப்பளித்தானா?? இதே மாதிரி கலங்கிய விழிகளுடன், 'என்னை நம்பு' என்பது போலத் தானே இவளும் நின்றாள்?

அவனிடமிருக்கும் தன் வளையல் அணிந்திருந்த கையை இழுத்துக் கொண்டு நகர முற்பட்ட வேளை அவன் அழுத்தம் கூடியது.

“யாழினி..!!”-தவிப்புடன் ராமின் குரல் அவள் செவியை நிறைக்க, அடுத்த கணம் அவள் அணுவும் எதிர்பாராத வண்ணம் கேட்டது அவளது கணவன் குரல்!

பற்களைக் கடித்துக் கொண்டு, கழுத்து நரம்பு புடைத்தெழ, “என்ன்ன்.. ன த்தைர்ர்ரியம்.. இர்ர்ருந்தால் என் ப்பொண்டாட்டி க்கையைப் ப்பிடிச்சு இழுப்ப..??”என்று கேட்டவன்,

தன் மொத்த பலத்தையும் கைமுஷ்டியில் தேக்கி.. ராமின் மூக்குக்கே விட்டான் ஒரு குத்து!

அந்த ஒற்றை அடிக்கே.. பாதங்கள் தள்ளாட.. மூக்கு பஞ்சராகி.. குபுகுபுவென இரத்தம் எட்டிப் பார்க்க, சடாரென நிலத்தில் வீழ்ந்த ராம், மூக்கைப் பொத்திக் கொண்டு அங்குமிங்கும் புரலளானான்.

கணவன் எங்கிருந்து வந்தான் என்று தெரியா விட்டானும், யாதவன் கையால் அடி வாங்கிய ராமை, அவள் காப்பாற்ற முயலவேயில்லை!!

அம் மென்மையான மனதுக்காரியின் முகமும் கல்லாக மாறி.. நிர்ச்சலனமான முகத்துடன் அவள் நின்றிருக்கக் காரணமும் உண்டோ?

உண்டு!!

இதோ அக்காரணத்தை அவளே சொன்னாள்.

“இன்னொன்னு போடு யாதவ்!! ..” என்று மனைவி கோபத்தில் சொல்ல,

முதல் பட்ட அடிக்கே புழுவாகத் துடித்துக் கொண்டிருந்த ராமை அடிக்க ஓங்கியது யாதவனின் திடகாத்திரமான கை.

“நீ என்னைக் கல்யாண மண்டபத்துல கைப்பிடிச்சுக் கூட்டிப் போகும் போது .. ‘எனக்கேத்த ஆள் நீ தான்!’னு தோணிச்சாம்..!!அவன் எப்படி அப்படி சொல்லலாம்? அவன் நொள்ளக்

கண்ணுலேயே ஒண்ணு போடு!!.. ’’என்று மனைவி சொல்ல, ஓங்கிய கையை நிறுத்தி விட்டு ஜர்க்கானவன்,

“என்ன?’’என்றவனாக அதிர்ந்தான் அந்தப் புராதன புரவி வீரன்!!

அப்படியானால் இந்த பிள்ளைப்பூச்சி.. அவளிடம் தவறாக நடந்து கொள்ள வரவில்லையா என்ன??

ராமின் சட்டைக்காலரை இன்னும் பற்றியிருந்தவன், ‘இது எல்லாம் உண்மையா?’என்பது போலத் தலையாட்டி “ம்?’’ என்று கேட்டான்.

ராமும் இரத்தக் கறை படிந்த வாயுடன், வேதனையில் முணகும் குரலில், “ஆமாஹ் சார்..’’என்று சொல்ல, சட்டென ராமின் சட்டைக்காலரை விட்டவன், அவனைக் கை கொடுத்து எழுப்பாட்டி,

“ரியலி ஸாரி ப்ரோ..ஏதோ மிஸ்அன்டர்ஸ்டேன்டிங்க் ஆகிப் போச்சு.. நீ அவள் கையைப் பிடிச்சிருக்குறதைப் பார்த்ததும் கோபம்

வந்திருச்சு··· ரியலி ஸாரி ப்ரோ..”என்றவனாக, ராமின் கசங்கிய சட்டையை எல்லாம் நேர்செய்ய ஆரம்பித்தான்.

ராமோ நில்லாமல் வழிந்த இரத்தத்தை கையை வைத்து மூட, தன் கர்ச்சீப்பை எடுத்து, ராமுக்கு கொடுத்தவன், தோள் மேல் கை போட்டவனாக,

“மூக்குல இருந்து இரத்தம் வருது.. பர்ஸ்ட் எய்ட் ஏதாவது..”என்று இழுக்க அதற்கு ஒத்துக் கொள்ளவேயில்லை.

“இல்லை வேணாம்..”என்று பேயறைந்தவனாக ராம் சொல்லிக் கொண்டே நடக்க, அவனை வலுக்கட்டாயமாகப் பிடித்து, சாலையில் செல்லும் ஆட்டோ ஒன்றை மறித்து,

“நல்ல ஹாஸ்பிட்டலாப் பார்த்து சாரைக் கூட்டிப் போப்பா” என்று அனுப்பி வைத்த யாதவ், மனைவியை நோக்கி திரும்பினான்.

தன்னையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் மனைவியைப் பார்த்ததும், இலேசாக புன்னகை தோன்ற,

தன் டையைத் தழற்றியவனாக, ‘‘உனக்கேத்த ஆள் நான் தான்னு சொன்னதுக்கெல்லாம் அவனைப் போட்டு அடிக்கச் சொல்ற? என் மேல உனக்கு அவ்வளவு இஷ்டம்??’’ என்று இதழ் வளைத்து தலையாட்டிக் கேட்க,

எதுவும் பேசாமல் இதழ் சுழித்தாள் யாழினி.

அத்தியாயம் 14

அன்றிரவு! மீண்டும் ஒரு பௌர்ணமியை வரவேற்றுக் கொண்டிருந்தது இருள் சூழ்ந்த வானம்!

நேரமோ இரவு ஒரு மணியைத் தாண்டியிருக்க, தன் மஞ்சத்தில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தாள் மங்கை.

“மீண்டும் ஒரு பௌர்ணமி” !! இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாகப் பழைமையான அந்தக் கணையாழிக்கும் மீண்டும் வந்தது வேலை!!

சாளரம் தாண்டி விழுந்த சந்திரனின் ஒளிக் கற்றைகள், பேரிகையின் கண்ணாடியில் பட்டுத் தெறிப்படைந்து, அவள் அணிந்திருந்த கணையாழியை அடைய , அடுத்த விநாடி அங்கே பிறந்தது வித்தியாசமான ஒளியும், ஒலியும்!!!

அறை எங்கிலும் ஓர் மந்தகாசமான பொன் மஞ்சள் வண்ணமும், செந்நிறமும் கலந்த ஒளி பரவ, அவ்வொளியில்..

தங்கத்தாரிகை போல மிளிர்ந்தாள் மாது!

இது போதாதென்று அம்மோதிரம் வேறு, கிருஷ்ணனின் புல்லாங்குழல் நாதத்தை ஒத்த மனங்கவரும்.. கேட்பாரை ஸ்தம்பிக்க வைக்கும் ஓர் ஒலியையும் வெளியிட.. அங்கே முகிழ்த்தது ஓர் அதிசயம்.

யாதவனின் சுரூபினியோ ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாளாகையால், அந்த ஒலி தானும் எங்கேயோ கிணற்றுக்குள் இருந்து கேட்பது போலக் கேட்கவாரம்பிக்க, அவள் கண்கள் மெல்ல சுருங்கின.

முதன்முறையாக ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வேளை இதே ஒலியைக் கேட்ட போது தோன்றாத நினைவலைகள்... இம்முறை கணையாழி ஒலித்த போது கேட்கலாயிற்று.

மஞ்சத்தில் படுத்திருந்தவளின் காதுகள் திடீரெனச் சிவந்து, சற்றே உயர்ந்து தாழ்ந்து அவளது செவிமடுக்கும் திறனைக் கூட்டியது.

அவள் எதைத் தான் அங்கணம் செவிமடுத்தாள்? அவள் செவிமடுத்தது எல்லாம் இதோ இவை தாம்!!

அடர்ந்த காட்டின் காய்ந்த சருகுகள், பாதணியில் பட்டு மிதிபடும் ஓசையே அது!!

உறங்கும் சுரூபினியின் மேனியோ இரவு நேரக் கூதல்க்காற்றின் குளிர்மையை அனுபவிக்க..

அவள் திடுக்கிட்டுக் கண் விழித்த போது, அவள் அடையாளமே காணப்பட முடியாத ஓர் இருள் மண்டிய கானகத்தில், நின்றிருந்தாள்.

அவள் எப்படி கானகம் வந்தாள்? புரியவேயில்லை யாழினிக்கு.

அவள் உடை கூட, நவீன யுகத்திற்கு சற்றும் பொருத்தமற்றாற் போல,

மார்புக்கச்சையும், இடையிலிருந்து கால்வரை பெண்கள் அணியும் பழங்கால தோட்டியும் அணிந்திருப்பதைக் கண்டாள் அவள்.

அவளிடம் எப்படி இந்த மாதிரியான மாற்றம் தோன்றியிருக்கவும் கூடும்? என்று சிந்திக்க மனமேயற்று, அவளுடைய மார்புக்கு மேலான

பிரதேசத்தையும், வெற்று வயிறையும் தழுவிக் கொண்டிருந்தது கூதல் காற்று!

கானகம் எங்கும் அடர்ந்த இருட்டுப் பரவியிருந்த வேளை தூரத்தில் எங்கேயோ ஒரு கோட்டான் மட்டும், கத்த, ஆந்தையின் அலறலில்,

திடுக்கிட்டுத் திரும்பி சத்தம் வந்த திசையை நோக்கினாள் யாழினி.

ஆகாயத்திலே இருந்த நிலவு மட்டும், அங்கே நடைபெறப் போகும் அதிசயத்தை ஏற்கனவே முன்கூட்டியே உணர்ந்தாற் போன்று,

தன் பூரணை முகம் காட்டி சிரித்துக் கொண்டிருக்க, கானகம் எங்கும் நெடிதுயர்ந்து வளர்ந்திருந்தன காட்டு மரங்கள்.

அந்த வனாந்தரத்தில் பூச்சிகள் இரையும் ஒலி மட்டும் ஓர் வித கானமாக எழுந்து கொண்டிருந்தது.

அந்தத் தனிமை!! இருள்!! எல்லாமும் சேர்ந்து பெண்ணவளுக்கு அச்சத்தைப் பரிசாகத் தர,

சுற்றுமுற்றும் தலை திருப்பிப் பார்த்த வண்ணம் நின்றிருந்தாள் அவள்.

யாருமே இல்லாத அடர்ந்த காடு!!

திடீரென்று அவள் முதுக்குக்குப் பின்னால் காய்ந்த சருகுகள் மிதிபடும் ஓசை அதீதமாகக் கேட்க, சட்டென்று திரும்பிப் பார்த்த சுந்தரப் பெண் அதிர்ந்து தான் போனாள்.

அந்தக் கானகத்தின் மத்தியில் தான் நின்றிருந்தான் வலிய உடல் படைத்த புராதனப் புரவி வீரன்!!இல்லை இல்லை அவளுடைய கணவன் யாதவன்!!

யாருமில்லா வனாந்தரத்தே.. கொண்டானைக் கண்டதும் உள்ளமெங்கும் ஓர் சந்தோஷச் சாரல் பரவியது. எல்லாம் சொற்ப கணங்களுக்குத் தான்!

யாதவன்.. அவள் முன்னே நின்றிருந்த யாதவன் சுரூபினியின் கண்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தான்.

அவனுக்கு ரோயல் லுக்கைகத் தரும் கோட்டும், சூட்டும் எங்கேயோ காணாமலாகியிருக்க.. பண்டைய காலத்தவர்களின் ரோயல் லுக்குடன் நின்றிருந்தான் அவளது கொண்டான்!!

நன்கே முறுக்கேறித் தெரிந்த கைச்சந்தில் தங்கத்தினாலான அணிகலன் அணிந்திருந்தான்!

வெற்று மார்புடன், இடுப்புக் கீழே ஓர் தோட்டியணிந்து.. புராத அரசர்கள் போல நின்றிருந்தான் அவளது கணவன்!!

இது அவள் கணவன் தானா? என்று ஆராயும் மனோநிலையில் அவள் இல்லை. காரணம் அவன் நின்றிருந்த நிலை அப்படி!

அவன் கண்களில் கருமணிகள் ஸ்தீரம் இல்லாதது போல மேலெ செருகிக் கொண்டிருக்க, நெற்றியின் ஓரத்திலிருந்து கன்னம் வரை வழிந்தது குருதி!!

அவனுடைய திண்மையான தோள்புஜங்களின் தோல் கிழிந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது இரத்தம்!

அவன் அணிந்திருந்த வெள்ளை நிற தோட்டியின் முட்டிப் பகுதி முழுவதிலும் கூட இரத்தக்கறை படிந்திருக்க,

அவள் கணவன் போர்க்களம் கண்ட வீரனாகக் காட்சியளிக்கலானான்.

இரு யாழ்களை அருகருகே பூட்டி செய்யப்பட்டது போன்ற வலிமையான அவனுடைய மார்புகளில் இடது மார்பில், கொடிய விலங்கின் அகோரமான பற்தடங்கள் தெரிய,

மார்பிலிருந்து ஊற்றெடுத்த செந்நீர்.. அவனுடைய திடகாத்திரமான மேடு பள்ளம் நிறைந்த வயிற்றைத் தாண்டியும் வழிந்து கொண்டிருந்தது !

எல்லாவற்றிக்கும் மேலாக அவனுடைய கைகளில் ஓர் வில்லும், ஒரே ஒரு அம்பும் மாத்திரம் அடைக்கலமாகியிருந்தது.

கணவனின் உதிரம் கண்டு... யாழினியின் நெஞ்சு துடிக்கலாயிற்று! அவன் விழிகளில் ஓடும் வலி.. இவளையும் தொற்று நோய் போலத் தாக்க,

தாய்மை சொட்டும் அவள் விழிகளில் இருந்தும் பெருகலாயிற்று விழி நீர்!

கால்கள் தள்ளாட அவளது விழிகளையே பார்த்த வண்ணம் நின்றிருந்தவனை கைகளில் தாங்கி, மடியில் ஏந்த வேண்டும் என்ற ஒருவகையான காதல் உணர்வு அவளுள் மிகையாகத் தோன்றியது.

காயம்பட்டுத் தள்ளாடும் கணவனை நோக்கி.. கண்ணீருடன் ஓரடி எடுத்து வைக்கப் போக, அவளை நோக்கி நாண் பூட்டி அம்பெய்ய சித்தமாகியிருந்தது அவன் கரங்கள்!!

அவள் விழிகளிலோ.. தன்னை நோக்கியா அவன் அம்பெய்ய தயாராகிறான்? அவனது ‘ஜானுவை’ நோக்கியா அவனது வில்லும் குறிபார்த்து நிற்கிறது?? என்ற கேள்வி பிறக்க, அதில் உள்ளம் அடிபட்டுப் போனவள்,

அடுத்த அடி எடுத்து வைக்காமல் கௌதமன் சாபம் பெற்ற அகலிகையாகிப் போனாள்.

பெண்ணவளின் தடுமாற்றம் கண்டேனும், அந்தப் புராதன புரவி வீரன் தன் கரங்களை இறக்கினானா? இல்லையே!!

இதுவரை ஓர் நிலையில் நில்லாமல் மேல் சொருகக் காத்திருந்த அவனுடைய காந்தக் கண்களுக்கு எங்கிருந்து தான் வலு வந்ததோ??

அவன் நயனங்களில் ஓர் தீவிரம் கூட.. சரியாக அவளது நெற்றிப் பொட்டைப் பார்த்துக் குறி வைத்தான் யாதவன்!!

அவன் கைகள் கிடையாக, முன்னோக்கி நீண்டன. அவன் நாணை பின்னோக்கி இழுத்த போது.. அவன் கைகளும் பின்னோக்கி இழுப்பட....

இரத்தம் சொட்டும் அந்நிலையிலும் அவன் வில்லெறியத் தயாரான கணம்.. காவியத் தலைவனுக்கான அத்தனை பண்பும், அவன் மெய்ந்நிலையில்(posture) தெரிந்தது.

அவனுடைய மனங்கவர்ந்த சுரூபினியோ மூச்செடுக்கக் கூட மறந்தவளாக ஸ்தம்பித்து நின்ற

வேளை, புரவி வீரன் தருணம் பார்த்து விட்டான் அம்பை.

சரியாக அவளை நோக்கி, காற்றைக் கிழித்துக் கொண்டு வந்த அம்பு, அவளது காதோரக் கார் குழலை உரசிக் கொண்டே போய்,

அவள் பின்னாடி இருந்த மணல் மேட்டில்.. இவளை நோக்கி பாயத் தயாராக இருந்த கழுதைப்புலியின் மேல் பாய்ந்தது!!

அம்பு சென்ற திசை நோக்கிப் பார்வைப் பதித்தவள், அங்கே ஈனக்குரலில் ஓர் கழுதைப்புலியொன்று செத்து விழுவது கண்டு திகைத்து நிற்க,

அவளைக் காதலுடன் மேய்ந்தன அவன் கண்கள்!

தன் இதயத்துக்கு உகந்த பெண்ணின் உயிரைக் காப்பாற்றி விட்டோம் என்ற அவன் முகமெங்கிலும் ஓர் திருப்தி நிலவ, அவன் வில்லேந்திய கைகள் மெல்ல தாழ்ந்தது நிலத்தை நோக்கி.

தன் தோள்புஜங்கள் ஏறி இறங்க பெரும் பெரும் மூச்சுக்களை எடுத்து விட்டுக் கொண்டே, அவளைப் பார்த்தவனுக்கு மீண்டும்

கண்கள் முற்றிலுமாக மேலே போய் சொருகிக் கொள்ள, அதற்கு மேலும் தாக்குப் பிடிக்க முடியாமல் சடாரென நிலத்தில் முகங்குப்புற விழுந்தான் யாதவன்!

பதறிப் போன சுரூபினியும் அவன் அருகே ஓடி வந்து, அவன் உடலைத் திருப்பி மடியில் தாங்கிய போது.. அவள் கை விரல்கள் எங்கிலும் இரத்தம்!!

அதைக் கண்டதும் இன்னும் கொஞ்சம் அழுகைப் பெருகியது சுந்தரப் பெண்ணுக்கு!!

அவனது வலிய தாடையைத் தட்டித் தட்டி, கலங்கிப் போன குரலில், “ய்யா.. தவ்.. ய்யாத..வ்..எழுந்திரு..எழுந்திருஊஊஊ..!!”என்று கொண்டவனை விழிக்க வைக்க முயல.. இறுதி வரை எழவேயில்லை அவன்!!

அந்நேரம் பார்த்து, கானகம் எங்கும் “அசரீரி” போல, டாக்டர். கோவிந்தராஜ்ஜின் கோபக் குரல்,

“க்கர்மாஆஆ... க்கர்மாஆஆ.. அவனை சும்மா விடாது!!”என்ற ஒலி கேட்க,

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

சடாரென தூக்கத்திலிருந்தும் விழித்தாள் பெண்.

விழித்த நேரம் அவள் அணிந்திருந்த நைட்டியின் புறமுதுகுப் பகுதியும், மார்புப் பகுதியும் வியர்வையில் நனைந்து போயிருக்க,

போதாக்குறைக்கு அவள் நெற்றியிலும் கூட மணிமணியாகத் தூறல் போட்டிருந்தது வியர்வை!

எழுந்த வேகத்தில், அவளுக்கு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க, எது கனவு? எது நனவு? என்ற வித்தியாசத்தை உணர முடியவில்லை அவளால்.

அடர்ந்த நயன இமைகள் கொண்ட விழிகளோ, அலைப்புறுதலுடன், தன் தலைவனைத் தான் தேடியது. பக்கத்தில் அவன் இல்லை.

எங்கே அவன்? பாதி இரவில் கண் விழிக்கும் போது.. அவளருகே வழமையாகக் கிடக்கும் அவளுடைய கணவன் எங்கே?

தண்ணீர் அருந்த வேண்டும்.. களைப்பு தீர முகம் அலம்ப வேண்டும் என்ற எதுவுமே தோன்றவில்லை அவளுக்கு.

அவள் மூளையில் ஓடிக் கொண்டிருந்தது எல்லாம், அவள் “யாதவன்” முகம் பார்க்க வேண்டும்!

கை, கால்களில் இரத்தம் வழிந்தோட நிற்பவனுக்கு ஏதும் ஆகவில்லை. அவன் நன்றாகத் தான் இருக்கிறான் என்று ஊர்ஜிதமும் செய்து கொள்ள வேண்டும்!!அப்போது அவள் மனமும் நிலைப்படும்!

எழுந்து சென்று சாளரம் வழியாக கீழே முற்றத்தைப் பார்த்தவள்,

போர்ட்டிகோவில் அவன் கார் நில்லாதிருப்பது புரிய.. இன்னும் அவன் வீடு வந்து சேரவில்லை என்பது புரிய அவள் நடுக்கம் அதிகமானது.

நெற்றியோரத்தில் கபாலம் பிளந்து.. கன்னம் வழியாக வழிந்து கொண்டிருந்த இரத்தம் தோய்ந்த அவன் முகம்!

அந்த முகமே திரும்பத் திரும்ப அவள் மனக்கண் முன் வந்து போக, நிமிடத்துக்கு எழுபத்திரண்டு

முறைத் துடிக்க வேண்டிய இதயம் தாருமாறாகத் துடித்தது.

அவன் வலுக்கட்டாயமாக, அவளது புது செல்லில் சேமித்து வைத்த அவனது நம்பரின் ஞாபகம் வர, டிராயரை நாடிச் சென்றவள், அதன் மேலுள்ள செல்லெடுத்து, கணவனுக்கு அழைப்பெடுத்துப் பார்த்துப் பார்த்து சோர்ந்து போனாள்.

“சப்ஸ்க்ரைபர் நாட் ரீச்சபிள் எட் த மொமென்ட். ப்ளீஸ் ட்ரை அகேய்ன் லேட்டர்!!”என்று கம்ப்யூட்டர் பெண்ணின் குரலே திரும்பத் திரும்ப ஒலிக்க அவளது நடுக்கம் இன்னும் அதிகமானது.

கனவின் கனம் அவ்வாறாயிற்றே?? அவனது சாந்த முகம் கண்டால் தான்.. அனைத்துமே சீராகும் என்ற பரபரப்பு திலை அவளிடம்!!

அவளால் அந்தக் கனவின் தாக்கத்திலிருந்து வெளிவர இயலவில்லை. உடம்பெங்கும் இரத்தம் வழிந்த நிலையில், உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் கணவன்.

விடிகாலையில் கண்ட கனவு பலிக்கும் என்பார்களே! நேரம் வேறு விடிகாலையைத் தொட்டிருக்க, அவளுக்கு காலும் ஓடவில்லை. கையும் ஓடவில்லை.

ஹாலிலே..சோபாவில் அமர்ந்திருப்பது பெண்ணா? கற்சிலையா என்று பிறர் அஞ்சத்தக்களவுக்குக் கல்லாகிப் போனவளாக அமர்ந்திருந்தாள் யாழினி!!

சத்தமேயின்றி வழிந்து கொண்டிருந்த கண்ணீரில், அவளது கீழிமைத் தடித்து சிவந்து போயிருந்தது.

கனவு பலித்துக் கணவனுக்கு ஏதேனும் ஆகியிருந்தால்... அந்த எண்ணம் முகிழ்த்த கணம்.. கிடுக்கிப்பிடி பிடித்தாற் போன்று.. நெஞ்சிலே ஓர் வலி எழுந்தடங்கியது சுரூபினிப் பெண்ணுக்கு!!

அந்த நேரம் அவன் காதுகள் செவிமடுத்தது.. போர்ட்டிகோவில் கார் வந்து நிற்கும் சத்தம்!!

காதுகள் இரண்டும் கூர்மையடைய, அவன் வீட்டுப் படியேறி வரும்.. அவனது அழுத்தமான காலடி சத்தம் முதற்கொண்டு கூர்மையாகக் கேட்டாள் பெண்!!

வந்திருப்பவன் முழுமையாகத் தான் வருகிறானா? இல்லை கனவில் கண்டாற் போன்று ஏதேனும் அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருக்கவும் கூடுமோ?

கண்கள் இரண்டும் மன்னவனைக் காண அலைபாய, விழிநீர் வழிந்தோட எழுந்தாள் பெண்!!

விடிகாலை முழுவதும் வேலை பார்த்த அயர்வில், சோர்ந்து போனவனாகத் தன் கோட்டைக் கழற்றி முதுகுக்குப் பின்னால் போட்டுக் கொண்டு..

உள்ளே அணிந்திருந்த இளம் நீல நிற ஷேர்ட்டின் முதலிரண்டு பட்டன்களைத் திறந்து விட்ட வண்ணம் வந்து கொண்டிருந்த யாதவன்,

அங்கே நின்றிருந்த தன் ஜானுவைக் கண்டு.. அடுத்த அடி எடுத்து வைக்காமல் நின்று விட்டான்.

இத்தனை நேரம் வரை.. கண்களில் கண்ணீர் மல்க விழித்திருக்கும் அவனது ஜானு!! அவன் தேவி!!

மன்னவனின் உச்சாதி பாதம் வரை அச்சம் பரவ, நின்ற இடத்திலேயே, இதயம் பதறிப் போனவனாக, "என்னாச்சுமாஆ?"என்று கேட்டதும் தான் தாமதம்,

தான் வயிற்றுப் பிள்ளைக்காரி என்பதை மறந்தவளாக, ஓடி வந்து.. கணவனின் இடையூடுக் கையிட்டு அணைத்துக் கொண்டவள்,

அவனது பரந்து விரிந்த மார்பில் தலை புதைத்து விசும்பலானாள்.

விசும்புகிறாள்..விசும்புகிறாள்..விசும்புகிறாள்??

அவள் விசும்பல் ஓயவேயில்லை.

முதன் முதலாக அவளாகவே தரும் அணைப்பு! எங்கேயோ வானத்தில் உயர உயரப் பறக்கும் உணர்வு அந்த வலிமையான ஆண்மகனுக்கு!!

இருந்தாலும் அவள் அழுகை? மனைவியின் விழிகளில் இருந்து வழியும் ஒரு சொட்டுக் கண்ணீரில், சர்வமும் புரியாமல் தவித்தவன்,

அவளுடைய உச்சந்தலையை மெல்ல வருடி விட்டவனாக, "ஹேய் ஜானு.. என்னாச்சுமா?.." என்று

கேட்க, அவள் அழுகை இன்னும் கொஞ்சம் அதிகமானது.

அவளின் கட்டுப்படுத்த முடியாத அழுகைக்குப் பின் யாரோ அவள் மனம் நோகடித்திருக்க வேண்டும்!! இல்லையானால் மனைவி இப்படித் தேம்பித் தேம்பி அழக் கூடுமோ??

“யாராவது ஏதாவது சொன்னாங்களா என்ன? அப்.. அப்பா உன் அப்பா ஏதாவது...??”என்று மகேந்திரனின் ஞாபகம் வர, அவனாகவே முடிவெடுத்துக் கூறியவன்,

கை முஷ்டி இறுக, பற்களைக் கடித்துக் கொண்டு, “அவர்ர்...ர” என்று சண்டைக்குச் செல்ல ஆயத்தமாக, அவள் அணைப்பின் அழுத்தம் அதிகமானது.

மனைவியின் அணைப்பில் நகராமல் நின்ற சூரியன், அவளிரு கன்னங்களைக் கையில் ஏந்தி.. தன் மனையாளான உஷையின் வதனம் பார்த்தான்.

கலங்கிய விழித்திரையுடன், அவனைப் பார்த்தவள், அனைத்தையும் சொல்லி விட நாடி,.. “நா.. நான்.. நா.. உன.. உன்னை” என்றவளுக்கு அதற்கு மேலும் பேச முடியாதளவுக்கு தொண்டை அடைத்தது.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டவளின் விசும்பல், கணவனின் அணிந்திருந்த ஷேர்ட்டின் மேலிரண்டு பட்டன்கள் போடாதிருந்ததன் வழியாகத் தெரிந்த அவனது மார்பில் நிலைத்தது!!

ஏதோ... தோன்ற.. ஆவேசத்துடன் கணவனின் மற்றைய சட்டை பட்டன்களையும் கடகடவெனக் கழற்ற முனைந்தாள் மனைவி!

துகிலுறிக்கும் மனைவியின் செய்கையில் குழம்பிப் போனவனாக நின்றிருந்தவன், சட்டென அவள் கையைப் பிடித்துத் தடுத்து,

“என்ன பண்ற ஜானு?”என்று கேட்க,

இவளோ தன் கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொண்டே, மூக்கை உறிஞ்சிய வண்ணம்,

ஞமஞமத்துப் போன குரலில், “முதல்ல ஷேர்ட்டைக் கழற்று..ஞா(நான) .. ஞான் (நான்) உன்னைப் பார்க்கணும்?” என்று சொன்னவள்,

அவன் ஷேர்ட்டைக் கழற்றுவதிலேயே குறியாக இருந்தாள்.

யாதவன் கேலியாக, “ இன்னைக்கு என் ஜானு சூடா இருக்கீங்க போல..”என்று தன் கண்களிர் ஒரு வித மோன நிலை ஏந்தி அவன் கேட்டதுவெல்லாம் அவள் செவிகளில் விழுந்ததா என்றும் தெரியாது!!

கணவனின் உள்பெனியன் முதற்கொண்டு கழற்றச் செய்தவள், இடுப்பில் கை வைத்து மாடல் போல நிற்கும் அந்த வசீகரனைப் பார்த்து காதல் பார்வை சிந்தினாள் என்று நீங்கள் எண்ணியிருப்பின் அது தவறு!

அவளோ, வரண்ட இதழ்களுடன் திக்கித் திணறி, “இர.. இர..இரத்தம்.. இரத்தம். ..கண்டேன்....நான் இரத்.. தம் கண்..கண்..டேன்...”என்று அதையே திரும்பத் திரும்பச் சொன்னவளாக,

கனவில் அவள் கண்ட... அவன் காயம்பட்ட இடங்களை எல்லாம் பரிசோதிக்க ஆயத்தமானாள்.

மனைவி ஏதோ கெட்ட கனவு கண்டிருக்கிறாள் என்பது தெளிவாகப் புரிந்து போனது யாதவனுக்கு!!

அதிலும் அன்றிரவு மனைவி அவன் மேல் வைத்திருக்கும் அதீத பட்ச காதல், அவள் அறியாமல் வெளியிட்டுக் கொண்டிருக்கும் இரவு!!

அவள் இடையூடு கையிட்டு அணைத்துப் பிடித்தவன், அவள் “உம்” மென்று சொன்னால் உயிரையும் கொடுக்கத் தயாரானவனாக அவளைப் பார்த்து,

“அப்படியெல்லாம் இல்லை ஜானுமா.. நான் நல்லா தான் இருக்கேன்..”என்று சொன்னது கூட அவளை சாந்தப் படுத்தவேயில்லை.

“ந்நீ ப்பொ..ப்பொய் சொல்ற!!.. நான்.. ந்நான்.. ப்பார்க்கணும்..”என்று தட்டுத்தடுமாறி சொன்னவள்,

அவள் கன்னம் திருப்பி நெற்றியோரம், இடது மார்பு, தோள் புஜம், முதுகுப் புறம் என்று ஒரு சின்ன இடத்தைக் கூட விடாமல் ஆராய்ந்தவள்,

கனவில் கால் முட்டியில் இரத்தக்கறை படிந்திருந்த ஞாபகம் வர, பேன்ட்டில் கை வைக்கலானாள் யாழினி.

சற்றே பதறியவன், அவளைத் தடுத்து நிறுத்தி, “ஹேய் ஜானு.. அங்கே ஒண்ணும் எனக்கு அடிபடலை... அப்படி பட்டிருந்தால் இப்படி நின்னு உன் முன்னாடி பேசிட்டிருந்திருப்பேனா? ஃபர்ஸ்ட்டு எனக்கு அடியே படலை.. நான் நல்லா தான் இருக்கேன்! ”என்று கேட்க கொஞ்சம் ஆசுவாசப்பட்டாள் ஒரு கன்டிஷனோடு.

“இனி நைன் தர்ட்டிக்கு முன்னால வீட்டில் இருக்கணும்.. இல்லைன்னா வீட்டுக்கே வராதே.. தலைக்கு மேலே வேலை இருந்தாலும் வீட்டில் பார்த்துக்கலாம்.. ”- விழியுருக்கி கறாராகச் சொன்ன அவள் செவ்விதழ்களில் மையம் கொண்டது அவன் பார்வை.

அவள் அடித்தொடைகளூடு ஒரு கை, முதுகோடு கையிட்டு அவளை அலேக்காகக் கைகளில் குழந்தை போல ஏந்திக் கொண்டவன்,

அவளது உதடுகளைப் பார்த்து உஷ்ணப் பெருமூச்சு விட்டவனாக, “வர வர.. நீ என்னோட பழைய ஜானுவா மாறிட்டே வர” என்று சொன்னவனின் குரலில் தான் எத்தனை போதை??

அவளைத் தூக்கி வந்து சோபாவில், மலர் மாலை போலக் கிடத்தியவன், டீ போய் மீதிருந்த தண்ணீரைப் பருக வைத்தான்.

அந்த கணமும் கூட மனைவி அவனை நீங்காது , அவன் முதுகை அணைத்துப் பிடித்திருக்க, பிறந்த குழந்தையைப் பார்ப்பது போன்ற பரவசத்துடன் பார்த்தான் யாதவ்.

அவள் கண்கள், வெற்று மார்புடன் அருகாமையில் அமர்ந்திருந்த, கொண்டவனின் உடலின் வனப்பை மேய்ந்தது.

அவளை மென்மையாகத் தழுவியிருக்கும் நரம்போடித் தெரியும் கை, திடகாத்திரமான அவன் புஜங்கள்,

புகழேந்தி வர்ணித்த நளன் போல.. காளையில் திமில் போன்ற இரு வலிய புஜங்கள்.. கவசமே பூணாது போருக்கு சென்றாலும் அம்பு தாக்காத வலிய மார்புகள்.. எல்லாம் அவளை ஏதோ செய்தது.

அனிச்சையாக எழுந்த அவள் கைகள்.. அவன் மார்பை மெல்ல தடவி அதன் வலிமையை உணர, உள்ளே பரவிய உணர்வுகளில் அவள் கீழுதட்டைத் தானே கடித்துக் கொண்டாள்.

அவன் இமைகள் மெல்ல உயர்ந்து தாழ்ந்தது.அவளது உஷ்ணமான மூச்சுக்காற்று.. அவன் தாடையில் பட்டு மோத, ஆண் மகன் அவனின் கண்களில் இருந்து பரவிய ஒரு வித காந்த அலை... அவளையும் தாக்கியது

.

இருவர் விழிகளும் சந்திரனும், சூரியனும் போல ஒன்றை ஒன்றை நோக்க, அங்கே முழங்கியது மாறனின் யுத்த சங்கு.

காலனின் யுத்த சங்கு உயிர்களைக் காவு வாங்கும்;மாறனின் யுத்த சங்கு?? மனங்களைக் காவு வாங்கும்!

சிவந்த செவ்வரியோடும் அவளுடைய அதரங்களையே கள்ளுண்ட மந்திக் கணக்காகப் பார்த்திருந்தவன்,

தன் இதழ்களை தானே சுவைத்துக் கொண்டே,

அவளை நோக்கி கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறியவனாக, ஹஸ்கி குரலில், ‘‘ஜானு.. என் மேல உனக்கு அவ்வளவு காதலா..?’’என்றவன்,
அவள் மூச்சு விடும் இடைவெளியில் திறந்த அவளது கீழதரங்களை தடாலெனக் கவ்விக் கொண்டான்.

இருவரது உஷ்ண மூச்சுக்காற்றும் இருவர் நுரையீரலையும் தீண்ட..தன் கணவனின் அதிரடியில் தன்னை இழந்தாள் சுரூபினிப் பெண்.

கணவனுக்கு என்னானதோ ஏதானதோ என்று பதற்றத்தில் இருந்தவளுக்கு, கணவனின் எச்சில் தன்னோடு கலப்பதுவும் இன்பமாகவே இருந்தது.

அவள் கைகள் தானாகவே மேலெழுந்து.. அவனது பின்னந்தலைக் கேசத்தில் அளைந்து.. அவனைத் தன்னோடு இறுக்கி அணைத்தன!!

இருவர் நாவுகளும்.. காதல் போர்க்களத்தில் பொருதிட.. இரு சோடி விழிகளோ கண்கள் மூடி.. முத்த சுகத்தில் திளைக்கலாயிற்று.

அவளோ இன்னும் முத்தம் வேண்டும்.. அவன் எச்சில் ஸ்பரிசம் வேண்டும் என்று எதிர்பார்த்திருக்க, சட்டென அவளது இதழ்களை விடுவித்தான் யாதவ்.

இவளோ ஏமாற்றத்துடன் கணவன் விழிகளைப் பார்க்க, புன்னகைத்துக் கொண்டே அவளது கன்னங்களைக் கையில் ஏந்தியவன்,

“உன் சம்மதத்துக்காக.. எத்தனை நாள் காத்திருந்தேன் தெரியுமா?”என்று சொன்னவன், அவளது நெற்றி, கன்னம், மூக்கு, இதழ்கள், நாடி என

ஓரிடம் விடாமல் முத்தம் கொடுத்து தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தியவன்,

அவசரமாக அவளது நைட்டியைக் கழற்ற, தோள் வழியாக பாதி நழுவியது ஆடை!!

கண் முன்னே அவனுக்கே அவனுக்கென்று பிரம்மன் படைத்த பொக்கிஷம்!!

மேனகையின் மறுஉருவாகப் பிறந்திருப்பவளின் பெண்மைக் கலசங்கள் அவன் கண்களுக்கு விருந்தாக,

அவளது வெண் சங்குக் கழுத்திலே இதழ்களை வைத்து, பெண்ணவளை சுவர்க்கத்துக்கும், நரகத்துக்கும் கூட்டிச் செல்ல அடிக்கல் நாட்டினான் யாதவ்

.

இருவர் உணர்வுகளும் பற்றியெரிந்து கொண்டிருந்த வேளை, அவனுடைய உஷ்ண மூச்சுக்காற்று.. அவள் சருமம் தீண்டி உன்மத்தம் அடையச் செய்து கொண்டிருந்தது.

அவள் கரங்கள், அவனுடைய திண்மையான முதுகை அளைய, நாசியோ அவனுக்கே

அவனுக்கென்று சொந்தமான பர்பியூமுடன் இணைந்து வரும் வியர்வை வாசனையை முகரலாயிற்று.

என்ன என்னமோ உணர்ச்சிகள் பரவ, கணவனுக்கு தன்னில் இடம் ஒதுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவனுக்கும் இது அறையல்ல கூடம் என்றோ, மஞ்சம் அல்ல சோபா என்றோ பிரித்தறிய முடியாத மகோன்னத நிலை!!

கண்கள் கிறக்கத்தில் மூழ்கியிருக்க, எக்குத்தப்பான அந்த நொடிகளில் மனக்கண் முன் வந்து போனது அவளது வாழ்வோட சம்பந்தப்பட்ட சில முகங்கள்!!

"நீ என் பொண்ணு இல்லை" என்று சாடும் மகேந்திரனின் கோப முகம்,

"உற்றவன் பொருள் உற்றவனையே சாரும்" என்று சொன்ன வெறும்மேல் சித்தரின் தெளிந்த முகம்,

“நான் உன்னைக் காதலிக்கவேயில்லை” என்று அவஸ்தையுடன் சொன்ன ராமின் கலங்கிய முகம்,

“கர்மாஆஆ.. கர்மாஆஆ.. அவனை சும்மா விடாது” என்று கோபத்தில் கத்திய டாக்டர். கோவிந்தராஜனின் முகம்,

இறுதியாக இரத்தம் தோய்ந்த யாதவன் முகம் மனக்கண் முன் வந்து போக அவளால் கணவனுடன் ஒன்ற முடியவில்லை.

மலைமுகட்டில் உச்சித் தேன் அருந்திக் கொண்டிருந்தவனை சட்டென தன்னிலிருந்தும் தள்ளி விட்டவள், தன் நைட்டியை சரி செய்து கொண்டே எழுந்து, ஏதும் பேசாமல் விரையப் பார்க்க,

போதை மயக்கம் களைந்த கோபக்குரலில் அவள் முன்னங்கைப் பற்றி, ‘‘ஜானு.. என்னாச்சு?’’என்று கேட்டான் யாதவன்!

கணவனைத் திரும்பிப் பாராமல், ‘‘நா.. நா… எனக்குப் பயமா… குழப்பமா… இல்லை.. எனக்கு தூக்கம் வருது..’’என்று தன் பதிலில் ஒரு முடிவுக்கு

வந்தவளாகச் சொன்னவள், அறையை நோக்கி விரைய,

தன் காதலை மதியாமல் செல்லும் மனைவியின் ஆடும் பின்னழகையே வெறிக்க வெறிக்கப் பார்த்திருந்தான் யாதவ்.

ஆனால் அவளுள்ளே விடையறிப்பட வேண்டிய கேள்விகள் பல இருந்தன. அந்தக் கனவு.. அந்தக் கனவின் ஆதி, அந்தம் அறியாமல் கணவனின் இச்சைக்கு இணங்குவது அவளுக்கே பிடிக்கவில்லை என்பது தான் உண்மை.

அத்தியாயம் 15

அவன் வீட்டில் அமைந்திருக்கும் லைப்ரரியோடு ஒட்டி அமைந்துள்ள டெராஸ்.

நிலாவை மறைத்து முகில் கூட்டங்கள் காவல் நின்று கொண்டிருந்த ஏகாந்தமான இரவு அது!!

கனோபியுடன் கூடிய மெத்து மெத்தென்றிருந்த சோபாவில், அமர்ந்திருந்த நிலையிலேயே கண்கள் மூடிப்படுத்திருந்தாள் யாழினி.

அவள் கைகள், “சிட்னி ஷெல்டனின் — இஃப் டுமோர்ரோ கம்ஸ்” என்ற நாவலை, தன் நெஞ்சோடு அணைத்துப் பிடித்திருக்க,

இடது கை விரல்களோ, அவளுடைய வலது கை மோதிரத்தைப் போட்டு உருட்டிக் கொண்டிருந்தது.

சோபாவுக்குக் கீழே தரையை உரசிக் கொண்டிருந்த அவள் கால்களோ, சிவந்து வீங்கிப் போயிருந்தது கூட ஓர் தனியழகே!!

அவள் கண்ணிமைகள் இடுங்கியிருந்தமையானது, அவள் தூக்கத்தில் இல்லை. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாள் என்று காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது அது.

அந்த சமயம் யாரோ அவள் நெற்றியை மென்மையாக அழுத்தி நீவி விடுவது போல தோன்ற , மெல்ல கண் திறந்து பார்த்தவளின் கண் முன்னே,

ஆகாயத்தில் தோன்றும் ஆதவன் முகமாக யாதவன் முகம்!!.

கணவனைக் கண்டதும் அவள் சட்டென்று எழுந்து கொள்ள போக, அவளது ஷோல்டரைப் பற்றி திரும்ப தடுத்து நிறுத்தியவன், “டேக் ரெஸ்ட் ஜானு… நான் உனக்கு மஸாஜ் பண்ணி விடுறேன்..” என்று சொல்ல, அவனது காந்தக் கண்களை சந்திக்காமல் எழுந்தவள்,

“ஒண்ணும் தேவையில்லை.”என்று நகர முனைந்த கணம் அதற்கு விடவேயில்லை யாதவ்.

அவளுடைய மென்மையான முன்னங்கைப் பற்றித் தடுத்து, அவளை வலுக்கட்டாயமாக அமர வைத்தவன்,

“உட்காரு.. டோன்ட் கெட் அப்..!!”என்றவாறு வெறுந்தரையில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டான்.

அவன் வலிய நரம்போடிய கைகளோ, தன் மடியில் அவள் கால்களை உரிமையோடு பற்றி வைத்தது.

குழந்தையை முழுநேரமும் சுமப்பதால் வீங்கிப் போயிருந்த அவளது அனிச்சம்பூப் பாதங்களைக் கண்டவனுக்கு, கண்களில் ஓர் கழிவிரக்கம் குடி கொண்டது.

அவளுடைய செக்கச் செவேலென சிவந்த அடிப்பாதத்தை மென்மையாகப் பற்றி அவன் மஸாஜ் செய்ய ஆரம்பிக்க.., அவன் கைவிரல் பட்டதும் என்னமோ போலானது யாழினிக்கு.

"இல்ல வ்வேணாம் வ்விடு ய்யாதவ்.. வ்விடு.."- அவன் கைகளில் இருக்கும் அவள் பாதத்தை எடுக்கப் போராடினாள் சுந்தரப் பெண்.

பாதத்தில் இருந்த விழிகள், அவள் கண்களுக்கு மேலேறியது. தவிப்புடன் அவைகளைப் பார்த்து, "ஏன் நான் பண்ணக்கூடாதா..?"என்று கேட்டான் யாதவன்.

"நீ.. என் காலை பிடிக்குறது.. எ.. எனக்கு ஒரு மாதிரி இருக்கு…" -காதை மறைத்து வீழ்ந்த கார்குழல் கற்றையை ஒதுக்கிய வண்ணம், சங்கோஜத்துடன் நெளிந்தாள் பெண்!!

என்னவோ ஏதோ என்று பதறியவன், மனைவி விஷயத்தைச் சொன்னதும் தான் இருண்டிருந்த அவன் முகம் தெளிந்தது

தன் முத்து மூரல்கள் காட்டி நகைத்தவன், "ஹஹஹா இவ்வளவு தானா..? நான் கூட.. நான் தொடுறது தான் உனக்குப் பிடிக்கலையோன்னு நினைச்சிட்டேன்..! உன்னோட கால்வீக்கத்துக்கு காரணம்.. ஓவர் வெயிட்..!! அதுக்கு காரணம் நம்ம

குழந்தை··· அப்போ அந்தக்குழந்தையோட அப்பா.. நான் இதெல்லாம் பண்ணாமல் வேறு யாரு பண்ணுவா?’’என்று அவள் மனநிலையை இலகுவாக்க பேசிக் கொண்டே, அவள் கால்களுக்கு மஸாஜ் செய்துவிடலானான்.

கணவனது விரல்கள் தந்த சுகத்தில் பாதத்தில் ஓடிய வலி குறைவது போல இருக்க, விழிகள் மூடி அவளையும் மீறி சொக்கி நின்றாள் யாழினி.

அதைக் கண்டதும் அவனுள் ஓர் புன்னகை படர்ந்தது. அதே சமயம் அன்றிரவு, அவளும், அவனும் அத்துமீறி நடந்து கொள்ள விளைந்த தருணத்தின் பின்னர், மனைவி அவனது விழிகளைப் பார்ப்பதைத் தவிர்ப்பதும் அங்கிருந்து ஓடுவதும் நினைவுக்கு வர ,

அவளைப் பார்த்துக் கேட்டான்,

“ஏன் என்னைப் பார்த்து ஓடுற? நான் உன்னைத் தேடி வர்றப்போலாம்.. ஏதாவது நொட்ட சாக்கு சொல்லி.. அங்கே இருந்து நீ எஸ்ஸாகுறது எனக்குத்

தெரியாதுன்னு நினைச்சியா? என்னைப் பார்த்தா பேய், பிசாசு மாதிரியா இருக்கு?''என்று.

கணவனின் கேள்வியில் உள்ளுக்குள் பக்கென்றாக, வேறெங்கோ பார்க்க முயன்றாள் தலைவி.

தலைவனின் தீண்டலின் பின்னர் அவளுள் புதிதாக நாணம் உருக்கொண்டதோ?

மனைவி தன் விழிகளைப் பாராதது அவனுக்குள் சின்ன கோபத்தை மூட்டி விட, அவளருகே அமர்ந்து கொண்டவன்,

தாபத்துடன் அவளது கன்னம் பற்றியவனாக அதட்டும் குரலில், ``என்னைப்பாரு.. என்னை நிமிர்ந்து பாரு!! ஏன் என் கண்களை அவொய்ட் பண்ற?? நான் என்ன பார்க்க சகிக்க முடியாதவனாகவா இருக்கேன்!!என்னை உனக்குப் பிடிக்கலையா என்ன?? ''என்று கேட்டான் அவன்.

அவனது அதட்டலில், கேள்வியில் தூக்கிவாரிப்போட மெல்ல திரும்பி அவன் கண்களைப் பார்த்தாள் யாழினி.

இந்த ஆதவ முகத்தைக் காண எந்த மங்கைக்கு தான் பிடிக்காமல் போகும்? இந்த வலிய ஆண்மகனின் வனப்பான முகம் யாருக்குத் தான் பார்க்க சகிக்க முடியாமல் போகும்??

அவளுள்ளம் அவளையே கேள்வி கேட்டது.

அவன் அருகே வந்தால், அவளையும் அறியாமல் அவனுடன் இழையத் துடிக்கும் எண்ணங்களைத் தவிர்க்கத் தானே அவனில் நின்றும் விலகி நடக்கிறாள் இவள்?

அவனது பார்வை, மருண்ட விழிகளுடன் நின்றிருந்த.. பிரபஞ்சம் இனங்காணா பேரழகியின் இதழ்களை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருக்க, அவளுக்குள் பட்டாம்பூச்சி படபடப்பு மிகவாரம்பித்தது.

கணவன் தன் பக்கம் வந்தால், அவள் உணர்ச்சி வசப்படுவதை வெளியே சொல்லாமல் மறைத்தவள்,

அவனது தாபப் பார்வையை சுட்டிக்காட்டி, திக்கிய குரலில், ‘‘இ… இப்படி ஏதாவது

நடந்துருமோன்னு தான் உன்னை.. உன் கண்களை நான் அவொய்ட் பண்றேன்..''என்று சொல்லி விட்டு எழுந்து செல்ல,

ஆண்மகனின் இதயத்தில் அவள் சொற்கள் காயத்தை ஏற்படுத்தலாயிற்று.

அப்படியானால் இவன் தன்னிடம் அத்துமீறக் கூடும் என்றா இவள் தன்னை ஒதுக்கி நடக்கிறாள் என்று தோன்ற, தன்னை விட்டும் செல்லும் மனைவியின் புறமுதுகை நோக்கி,

''ஜானு.. என் அன்பை கடைசி வரை நீ புரிஞ்சிக்கவே போறதில்லையா?''என்று மென்மையாக கேட்டான் அவன்.

அதைக் கேட்டவளின் நடையோ ஒரு நிமிஷம் நின்று தொடர்ந்தது.

அடுத்த நாள் மதியம்,

இலங்கை தொல்பொருளியல் திணைக்களம்.

மதிய உணவு இடைவேளையின் பின்னர் கையில் ஒரு மில்க் ஷேக் கப்புடன் லிஃப்ட்டில் பிரயாணப்பட்டுக் கொண்டிருந்த யாழினி,

தன் சக பணியாளினி ராகவியை நோக்கி, ''ராகவி.. எப்போ நீ உத்தரபிரதேஷ்.. எக்ஸ்ப்ளோரேஷன் போகப்போறேன்னு சொன்ன?'' என்று கேஷுவலாகக் கேட்டான்.

''ஜூன் இரண்டு..ஏன் கேட்குற?''-தன் கையிலிருந்த ஃப்ரூட் ஜூஸை ஸ்ட்ரா மூலம் அருந்திக் கொண்டே கேட்டாள் ராகவி.

உரிய தளம் வந்ததும் லிஃப்ட்டும் திறந்து கொள்ளவே, வெல்வெட் கார்ப்பெட் விரிக்கப்பட்ட தரையில் நடந்தவாறு,

நேரான பார்வையுடன், ''நீ ஆகாஷோட கல்யாண வேலையைப் பாரு.. களனி யுனிவர்சிட்டி ஸ்டூடண்ட்ஸை.. இந்தியா கூட்டிப் போற வேலையை நான் பார்த்துக்குறேன்..''என்றாள் யாழினி.

அதைக் கேட்டதும் வாயில் இருந்த ஜூஸ் வெளியில் குபீரென்று பீய்ச்சியடித்த வண்ணமே வாய் திறந்தாள் மற்றப் பெண்.

அகலக் கண் திறந்தவளாக, “வாஆஆட்?? என்ன வ்விளையாடுறியா?”என்று கேட்டாள்.

“விளையாட நீ என்ன ப்ளே க்ரவுன்ட்டா?”- பெரும் ஹாஸ்யம் பேசிவிட்டது போல க்ளுக்கி நகைத்தாள் சுந்தரப் பெண்.

அவளது பேச்சை இரசிக்காத ராகவியோ பற்களைக் கடித்த வண்ணம், “க்கடிக்காஆஆத்தே… ம்முடியலை” என்றவள்,

இறுக்கமாக முகத்தை வைத்துக் கொண்டு, “யாழினி பீ சீரியஸ்… இந்த…நிலைமையில் எக்ஸ்ப்ளோரேஷன் போறது ஒண்ணும் சரியா படலை.. இண்டியா போய் வந்து கூட கல்யாணத்தை வச்சுக்கலாம்.. ஆனால் குழந்தை? குழந்தைக்கு ஏதாவது ஆச்சுன்னா திரும்ப கொண்டு வர முடியுமாஆஆ?”என்று தோழியின் விபரீதமான முடிவில், ஏறத்தாழ கத்தியே கேட்டாள்.

யாழினியோ முகத்தில் எந்தவிதமான உணர்ச்சிகளையும் வெளிக்காட்டாமல், கையிலிருந்த டிஷ்யூவை தோழி பக்கம் நீட்டியவளாக,

“இதே குழந்தை என் வயித்துல இருக்குறது தெரியாம தான் கீழடி எக்ஸ்கவேஷன்ல இருந்தேன்.. அப்போவே கேர்புல்லா இருக்கத் தெரிஞ்ச எனக்கு.. இப்போ கேர்புல்லா இருக்கத் தெரியாதா என்ன?”என்றவள் தன்னறையை நோக்கி, மேடிட்ட வயிற்றைத் தள்ளியவளாக நடக்கவாரம்பித்தாள்.

அதிர்ச்சியானவளாக அதே இடத்தில் நின்று விட்டிருந்த ராகவிக்கு, மற்றவள் எடுத்திருக்கும் முடிவு ஒரு சிறு துளியேனும் நன்மையானதாகப் படவேயில்லை.

தடதடவென ஹீல்ஸ் ஏந்திய பாதங்களுடன் ஓடிச் சென்றவள், யாழினி கைச்சந்து பற்றி தடுத்து நிறுத்தியவளாக,

“யாழினி.. அப்போ அது வெறும் தசைப்பிண்டம்!! .. இப்போ அது இதயத்துடிப்புள்ள ஓர் உயிர் யாழி!!.. நீ எடுக்குற விபரீதமான முடிவுக்கு

ஒரு உயிரை.. பணயம் வைக்குறதை நான் ஒருபோதும் அனுமதிக்கவ்வ்வேஏஏ ம்மாட்டேஏஏன்.. நீ ஒரு ஆணியும் புடுங்க வ்வேணாம்!! நானே இந்த எக்ஸ்ப்ளோரேஷனுக்கு.. சார்ஜ் எடுத்துக்குறேன்..ந்நீ உன் வ்வேலையை ம்மட்டும் ப்பார்ரு!! ..''என்று கோபத் தொனியில் நன்மொழிகள் கூறி அவள் புத்தியை நேரப்படுத்த முனைய, விஷமமாகச் சிரித்தாள் யாழினி.

ஆகாஷின் காதலி புரியாமல் பார்க்க, நம் சுந்தரப் பெண்ணோ நமட்டுச் சிரிப்புடன், ''ஆணியைப் புடுங்கி ரொம்ப நேரமாச்சு ராகவி…!!!'' என்றாள்.

''வாஆஆட்..??''-இரண்டாவது முறையாக மீண்டும் அதிர்ச்சியின் வசம் ஆட்பட்டு வாயைப் பிளந்தாள் ராகவி.

பிளந்திருந்த வாயை, விரல்களால் மூடி விட்டுக் கொண்டே கர்ப்பிணிப் பெண்ணும், '' டோரைக் க்ளோஸ் பண்ணு!! நம்ம கமிஷனர் சார் கிட்ட பேசி… பர்மிஷன் வாங்கி.. டூ ஹவர்ஸ் ஆயிருச்சுன்னு சொல்ல வந்தேன்..''என்று இரட்டை விரல்களைக் காற்றில் ஆட்டிக் காட்டியவாறு நடந்தாள்.

அவளுடைய புறமுதுகைப் பார்த்துப் பொல்லாத கோபக்குரலில் மற்றவளும், “யாழினீஈஈஈ.. திஸ் இஸ் நாட் ஃபேர்.. அந்த சொட்டமண்டை இந்த பாடி கன்டிஷனோட அனுப்ப ஒத்துக்கிட்டானா?ஹவ் குட் ஹீ டு தேட்? அதுவும் என்னை ஒரு வார்த்தை கேட்காமல்..”என்று கத்திக் கொண்டே யாழினி பின்னால் ஓடி, யாழினியை அடைந்தாள்.

அவளோ மில்க் ஷேக்கை இரசித்து ருசித்துப் பருகியவளாக, ஆசுவாசமான குரலில், “விடு.. விடு.. உன்னை மாதிரி அவரும்.. ஃபர்ஸ்ட்டு தாம்தூம்னு தான்.. குதிச்சாரு..”என்றவள்,

அவளுடைய தொல்பொருளியல் மேலதிகாரி போலவே ஆக்ஷன் காட்டி, “ஹவ் கேன் ஐ லெட் யூ கோ? .. ஆர் யூ சீரியஸ்?டோன்ட் யூ திங்க் அபௌட் யோர் ஹெல்த் கன்டிஷன்?” அப்படி இப்படின்னு ஆயிரத்தெட்டுக் கேள்வி!!

“சார்.. உங்களுக்கு ஏதும் ப்ராப்ளம் வராதுன்னு மெடிக்கல் ஹிஸ்ட்ரியோட லெட்டர் சப்மிட் பண்றேன்.. ப்ளீஸ்” ன்னு என் ஆர்வத்தை எடுத்து சொன்னேன்.. அப்பறம் ஒத்துக்கிட்டாரு.. ஒர்ரு

வ்வழியா ஒத்துக்க வ்வைச்சிருக்கேன்! ..”என்று கூலாக சொன்னவள்,

ராகவி முதுகில் கை வைத்துத் தட்டிக் கொடுத்தவளாக, “போ.. போயி.. ஆகாஷோட கல்யாண ஏற்பாட்டை கவனி..”என்று சொல்லிய வண்ணம், தன்னறையில் நுழைய,

மெய்யாலுமே கடுப்பான ராகவி, “யாழீஈஈ…ப்பெரிய த்தியாகி ம்மாதிரி ஸ்ஸீஈஈன் (சீன்) ப்போடாதே… உன் குழந்தையைப் பத்தியாவது யோசிச்சு.. உன் முடிவை மாத்திக்க!!”என்று கத்த,

அவள் கைகளோ காதைச் சுட்டுக்காட்டி, ‘என் காது.. கேட்காது’ என்பது போல சைகை செய்ய, இன்னும் கொஞ்சம் கடுப்பானாள் ராகவி.

ஆனால் எவ்வளவோ சொல்லியும் சுந்தரப் பெண் தான் எடுத்த முடிவிலேயே நின்றாள்.

அன்று ஐந்து முப்பது மணியளவில், வேலை நேரம் முடிந்ததும், தன் காதலனுடன் ரோமிங்

செல்வதற்காக வேண்டி, ஃப்ரெஷ்ஷாகி கொஞ்சம் டச்சப் செய்து கொள்ள,

ரெஸ்ட் ரரூமுக்குள் வந்த ராகவி.. அங்கே யாழினி நின்றிருந்த கோலம் கண்டு தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நின்றாள்.

காலையில் அலுவலகம் வரும் போது.. வேலைக்கு ஏற்றாற் போல சேலை உடுத்தி வந்தவள், தற்போது பார்ட்டிக்கு செல்வதற்கு ஏற்றாற் போல,

பார்ட்டி கவுனொன்றை உடுத்தியவளாக வாஷ்பேஸின் கண்ணாடி முன் நின்றிருப்பது கண்டு அதிர்ந்தாள் ராகவி.

அதிலும் இதழ்களுக்கு கடும் சிவப்பு நிற உதட்டுச் சாயம் பூசி.. பார்ப்பதற்கு பூலோகத்து மேனகை போல நின்றிருந்தவளைக் கண்டு நின்றிருந்தவளுக்கு பேச்சும் மூச்சும் மறந்து தான் போனது.

தன்னுடைய கவுனின் முதுகுப் புற தரிசனத்தை அப்படியே வெளியுலகுக்கு காட்டிய வண்ணம்..

திறந்திருந்த முதுகை மறைத்து ஜிப்பை போட அவள் கைகள்.. உடலை பாம்பு போல சுற்றி வளைத்து பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த வேளை தான் அங்கு வந்து சேர்ந்தாள் ராகவி.

ராகவியைத் திரும்பிப் பாராமல், கண்ணாடி வழியாகத் தெரிந்த அவளது விம்பத்தைப் பார்த்த கர்ப்பிணி பெண்ணும்,

"இன்னைக்கு ஈவ்னிங் ஒரு பர்த்டே பார்ட்டி இருக்கு.. போகணும்..!! என்னை கொஞ்சம் ரெடி பண்ண உதவி பண்றியா..??"என்று கேட்க,

கதவுப்புறம் உள்ள சுவரோடு முதுகு சாய்த்து, கை கட்டி நின்றவள், கறார்க்குரலில்,

"வீண்பிடிவாதம் பிடிச்சு.. எக்ஸ்ப்ளோரேஷன் போறவங்களுக்குலாம்.. உதவி பண்ண முடியாது.."என்றாள்.

அப்போதாவது அவள் கோபத்தையும், முகத் திருப்பலையும் கண்டு தன் முடிவை மாற்றிக் கொள்ள மாட்டாளா என்ற நப்பாசை ஆகாஷின் காதலியிடம்!!

இலேசாக தலைகுலுக்கி பார்வையை தன் விம்பத்தில் பதிய விட்டவள், “சரி விடு.. நானே பண்ணிக்குறேன்” என்றவளாக ஸிப்பை மாட்ட,

சிரமப்பட்டுக் கொண்டிருந்தவளின் சிரமத்தைக் காண சகியாமல் தானாகவே உதவ முன்வந்தது ராகவியின் கைகள்.

விம்பத்தில் தெரிந்த ராகவியின் உம்மென்ற முகத்தைப் பார்த்து தன் வெண்முத்து மூரல்கள் பளிச்சென்று தெரிய நகைத்தாள் யாதவனின் மங்கை.

யாதவனின் உற்ற தோழன் விக்னேஷின் வீடு!!

சிவப்புக்கம்பளம் விரிக்கப்பட்ட படிகளைக் கடந்து, தன் கவுனை ஒரு கையால் தூக்கிப் பிடித்த வண்ணம் மறுகையால் தன் மேடிட்ட வயிற்றை அணைத்துப் பிடித்த வண்ணம் நடந்து வந்தவள்,

அப்சரஸ் தானோ என்று பார்ப்பார் ஐயங்கொள்ளுமளவுக்கு பதுமையாய் தோன்றினாள் யாழினி.

தோளிலே.. அந்தக் கவுனுக்கு சிறிதும் சம்பந்தமில்லாமல் தொங்கிக் கொண்டிருந்தது சேலையோடு அவள் அணிந்து வந்திருந்த இடையைத் தாண்டி தொங்கிக் கொண்டிருந்த ஹேன்ட்பேக்!!

அச்சோடா கையோடு ஓர் வோலட் கொண்டு வந்திருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று அவளுக்கு தோன்றினாலும் கூட, அந்த ஹேன்ட்பேக்கும் கூட புதுவகையான அழகை அவளுக்குக் கொடுக்க மறுக்கவில்லை.

வெள்ளை நிற பார்ட்டி கவுனில், அந்த வெள்ளை நிறத்திற்கு ஏற்றாற் போன்று.. பளபளக்கும் தோடுகள் அணிந்து.. வெற்றுக் கழுத்தில் ஏதும் அணியாமல்,

இடப்பக்க கூந்தலை அள்ளி வலப்பக்கம் லூஸாக விட்டு.. வந்தவளின் கூந்தல் அலங்காரம் ராகவியின் உபயம்!!

அந்த பிறந்தநாள் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டவர்கள் எல்லாரும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்த்துள்ளவர்கள் என்று காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தது அவர்களது ஆடை அணிமணிகள்!!

யாதவனின் உற்ற தோழனின் பிறந்தநாள் விருந்து. அவள் கணவன் நில்லாமல் போவானா என்ன? அவள் கண்கள் கூட்டத்தில் இருக்கும் மனிதர்களைத் துலாவி யாதவனைத் தேட, அந்த கணம் காதோரம் கேட்டது ஸ்நேகமான ஓர் ஆண்குரல்!!

“ஹாய் வெல்கம்.!!.”என்ற வண்ணம் அவளருகே நின்றிருந்தது விருந்தின் கதாநாயகன் விக்னேஷே தான்.

வெள்ளை வெளேரென்ற கோட், சூட்டில் பார்ப்பதற்கு மணமகன் போல நின்றிருந்தவன், அவளைப் பார்த்து வெள்ளந்தியாகவே சிரித்து வைத்தான்.

பார்ட்டி ஆரம்பித்து, கேக்கும் கட் பண்ணியாயிற்று என்பது போல பார்ட்டி களை கட்டியிருக்க, மன்னிப்புக் கேட்கும் குரலில், “ஸாரி நான் லேட்டா வந்துட்டேன் போல இருக்கு..”என்று விக்கி சொல்ல,

அவள் வருந்துவது பொறுக்க மாட்டாத விக்னேஷும், புன்னகைத்தவனாக, “இட்ஸ் ஓகே…

நீ வரமாட்டேன்னு நினச்சேன்.. பட் வந்ததே பெருசு!!..”என்றவனாக வீட்டின் உள்ளே அவளை வழிநடத்திச் செல்லலானான்.

அவன் வீடு யாதவனின் அரண்மனையின் செல்வச் செழிப்புக்கு சற்றும் குறையாத வண்ணம் இருந்ததை அவதானித்தவளுக்கு, ‘நானும், என் ஃப்ரண்டு விக்கியும் பிஸினஸ் பார்ட்னர்ஸ்’ என்றது நினைவுக்கு வந்து போக,

அப்படியானால் இந்தச் செல்வச் செழிப்பு சாதாரணம் தான் என்று எண்ணிக் கொள்ளவும் செய்தாள்.

கண்களோ தன்னைக் கடந்து செல்லும் ஆடவர்களுக்குள், தன் தலைவனைத் தேட, ஒருவகையான அலைப்புறுதலுடனேயே விக்னேஷுடன் நடந்தாள் யாழினி.

இடையில் ட்ரேயைத் தூக்கிக் கொண்டு வலம் வந்த பேரரிடம் இருந்து ஒரு கூல்டிரிங்ஸை எடுத்துக் காட்டி,

“கூல்டிரிங்ஸ்?..”என்று விக்னேஷ் கேட்க

தலையாட்டி மறுத்துப் புன்னகைத்து, தன் மேடிட்ட மணி வயிற்றை அணைத்துக் காட்டி, “நோ.. பேபிக்கு ஆகாது.. இவன் பால் மட்டும் தான் குடிப்பான்..”என்று கூற, விக்னேஷுக்கோ குழந்தையின் பேச்சில் உள்ளம் குதூகலமாகிப் போனது.

ஒரு கையைப் பின்னாடி கட்டு மறு கையால் குழந்தையைச் சுட்டிக் காட்டிய வண்ணமே குனிந்தவன்,

“ஓ.. இவனை எப்படி மறந்தேன்??.. இவன் அப்பா மாதிரி இருப்பானா??.. இல்ல உன்னை மாதிரி இருப்பானான்னு பார்க்க ஆசையா இருக்கு..”என்று அன்பு மல்க சொன்னவன், பேரரிடம்,

“ஒரு க்ளாஸ் மில்க்.. கொண்டு வாங்க..” என்று பணித்தவனாக அவளை அழைத்துக் கொண்டு மீண்டும் தன் நடையைத் தொடர்ந்தான்.

அந்த கணம்.. கையில் வோட்காவுடன் அவர்களை நோக்கி வந்த, தன் தனங்களையும், இடையையும் ரொம்ப நன்றாகவே எக்ஸ்போஸ் செய்த பெண்ணொருத்தி,

விக்கியைப் பார்த்து, ‘‘ஹேய் பர்த்டே பாய்.. பார்ட்டி அற்புதமா இருக்கு..’’என்ற வண்ணமே நகர,

அவளது பின்னழகை இரசித்துக் கொண்டே, ரிவர்ஸில் நடந்தவன்,

‘‘ஓ அப்படியா? எல்லாம் உனக்குத் தான்.. என்ஜாய் பண்ணு..’’என்ற வண்ணம் திரும்ப, அங்கே தன்னை ஒருமாதிரி பார்த்துக் கொண்டிருந்த யாழினியின் பார்வையைக் கண்டு ஜர்க்காகி நின்றான்.

பின்னே அந்தப் பெண்ணின் பின்னழகை இவன் பார்த்த விதம் கண்டு, ‘‘ஹீ இஸ் ஒல்ஸோ அ கைன்ட் ஆஃப் ப்ளே பாய் போல!!’’என்று எண்ணிக் கொண்டாள் யாதவனின் ஜானு.

தன் உடன்பிறவா சகோதரியிடம் இலேசாக அசடு வழிந்தவன், ‘‘தப்பா எடுத்துக்காதேமா.. என் கூட

வா.. ஐ வான்ட் டு ஷோ யூ சம்திங்” என்று சொன்னவனாக,

அந்த அழகிய அலங்காரப் படிகளில் ஏறி அவன் மாடிக்குச் செல்ல, இவளும் அந்தக் கைப்பிடி வரிசையைப் பிடித்த வண்ணம் விக்கியின் பின்னால் மாடிப்படியேறிச் சென்றாள்.

மூடப்பட்டிருந்த அறைக்கதவை இரு கைகளாலும் தள்ளித் திறந்த வண்ணமே ஓர் அறைக்குள் உள் நுழைந்தான் விக்னேஷ். அவன் பின்னாலேயே சென்றவள், அவ்வறையில் அவ்வளவாக கவனம் பதியாமல்,

தன் ஹேன்ட்பேக்கிலிருந்து சின்ன பரிசொன்றை எடுத்து நீட்டி, “ஹேப்பி பர்த்டே விக்கி.. இது என்னோட சின்ன கிஃப்ட்..!!!”என்றாள்.

அவளிடமிருந்து வந்த கிஃப்ட்டை சந்தோஷத்துடனேயே ஏற்றுக் கொண்டவன், அங்கணமே ரேப்பிங் பேப்பரைப் பிரித்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்க பிரயாசை கொண்டான்.

உள்ளே இருந்ததோ ஒரு முந்நூறு, நானூறு பக்கங்கள் கொண்ட ஓர் புத்தகம்!!

அந்த புத்தகத்தின் தலைப்பை சத்தமிட்டு வாசிக்க நாடியவன், "கோட்ஸ் என்ட் மித்ஸ்.. ஆஃப் நார்தன் எயூரோப்.. பை.. எச்ஆர் எலிஸ் டேவிட்சன்" என்றவன் சுற்றுமுற்றும் புத்தகத்தில் கண்களை ஓட்டியவனாக,

".. ஓ.. வாவ்.. இட்ஸ் அபௌட் "நோர்ஸ் மித்தோலஜி..இஸ்ன்ட் இட்? தோர், லோக்கி,ஓடின், ஏஸ்கார்ட்… படமா கூட வந்திருக்குல?"என்று எக்ஸைட்டானவனாக அவன் கூற, அவளோ வாய் மூடி கிளுக்கி நகைத்தாள்.

"நோ… இது நோர்ஸ் மித்தோலஜி தான்.. பட் டிஃபரண்ட் ஃப்ரோம் தி மூவி.. படிச்சு பாருங்க.. புரியும்!!"என்று மென்மையான குரலில், யாழினி சொல்ல,

"கவர் பிக் நல்லா இருக்கு…பட் எனக்கு தான் வாசிக்குற நல்ல பழக்கம்லாம்

இருந்ததில்லையே?..''என்று புத்தகத்தை ஆராய்ந்த வண்ணமே சொன்னான் விக்கி.

அவன் அப்படி சொன்னதில் அவளது முகம் கொஞ்சம் தொங்கிப் போக, ''ஓ ஸாரி.. அன்சூட்டட் கிப்ட் தந்துட்டேன் போல இருக்கு..''என்று தன் தலையை மெல்ல ஆட்டியவண்ணம் சொன்னாள் சுந்தரப் பெண்.

அப்போது தான் அவளது முகத்தைப் பார்த்தவன், அவளது முகபாவத்தையும் கணிப்பிட்டவனாக, நிலைமையை சுமூகமாக்கும் வண்ணம்,

''இல்லை. அப்படியெல்லாம் இல்லை.. என் தங்கச்சியோட முதல் பரிசு··· எதுவா இருந்தாலும் எனக்கு சந்தோஷம் தான்!!.. அடுத்த வருஷ பர்த்டேக்குள்ள இதை வாசிச்சு முடிச்சிருவேன்னு வாக்கு கொடுக்குறேன்..''என்று சொல்லி புன்னகைத்தான் அவன்.

அவனது ஸ்நேகமான சொற்கள் பிடித்துப் போக, ''அப்படின்னா நானும்.. அடுத்த வருஷ பர்த்டேக்கு··· இதே ஒத்தரோட நெக்ஸ்ட் பார்ட்டை கிப்ட் பண்றதா

வாக்கு கொடுக்குறேன்” என்று சொல்ல, இருவரின் முகத்திலும் தவழ்ந்தது சகோதர சிரிப்பு!!

சட்டென ஏதோ ஞாபகம் வந்தவனாக, “நான் உனக்கு ஒண்ணு காட்டணும்னு சொன்னேன்ல? அது இது தான்!!”என்று அவர்கள் எதிரே இருந்த சுவற்றை கை காட்ட,

அப்போது தான் அதன் பக்கம் திரும்பியவள் அதிர்ந்து போனாள்.

அந்த பக்கச் சுவர் முழுவதையும் நிறைத்திருந்தது விக்னேஷினதும், யாதவனதும் ‘மலரும் நினைவுகள்’ என்று சொல்லப்படக் கூடிய வாழ்நாள் ஞாபகார்த்தங்களைத் தரும் புகைப்படங்கள்!!

“இது எல்லாம்.. யாதவனோடதும், என்னோடதும் மெமரீஸ்..”என்று சுவர்ப்பக்கம் கை காட்டியவனாக சொன்னவன் முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி??

ஸ்தம்பித்துப் போனவளாக நின்றவள், பெரிய பெரிய சட்டங்களில் அடைக்கப்பட்டிருந்த புகைப்படங்களிலேயே கண்கள் பதித்தாள்.

விக்னேஷோ தன் பேன்ட் பாக்கெட்டில் கைகள் இட்டவனாக, “இது எல்லாம் நான் கலெக்ட் பண்ணதுக்கு காரணமே.. யாதவனுடைய மனைவிக்கு.. ஒரு நாள் இதையெல்லாம் காட்டணும்ன்ற சின்ன ஆசையில் தான்.. இன்னைக்கு அந்த ஆசை நிறைவேறப் போகுது” என்று சொன்னவன்,

அங்கிருந்த புகைப்படங்களில் சிற்சில புகைப்படங்களை அவளுக்குக் காட்டி ஏதேதோ சொன்னான்.

ஆகாயத்தின் கீழே பனி படர்ந்த மலை முகடுகள் தெரிய, கழுகு போல கைகளை சமாந்தரமாக நீட்டி,

சிரித்த வண்ணம் ஸ்கை டைவிங் அடித்துக் கொண்டிருந்த யாதவனும், அத்தனை அடி உயரத்தில் பயந்தவனாக, முகத்தை சுழிக்கும் விக்னேஷும் இருக்கும் ஓர் செல்ஃபீ புகைப்படம் காட்டியவன்,

“நான் பார்த்தவங்களிலேயே யாதவன் ரொம்ம்ம்ப்ப்ப டிஃபரண்ட்… அவனுக்கு ஒவ்வொரு

நொடியும் ரசிச்சு வாழணும்னு ஆசை.. அப்பப்போ த்ரில்லிங்கா ஏதாவது செய்யணும் மச்சி.. இல்லைன்னா லைஃப்பே போர்னு சொல்வான்.. நிவ்சீலேன்ட்.. ஃபோக்ஸ் க்ளேஸியர்ல பண்ண ஸ்கை டைவிங் அப்போ எடுத்தது.. அப்போ கூட சிரிச்சிக்கிட்டே செல்பீ எடுக்க உன் புருஷனாலே தான் முடியும்!!"என்று சொல்ல, அவள் இதழ்களும் மெல்ல புன்னகைத்தது.

இப்படி ஸ்கை டைவிங் புகைப்படத்தில் ஆரம்பித்து, "நிவ்யோர்க் சிட்டியில் கார் ரேஸிங்.." புகைப்படம், " நிவ்யர் ஈவ் பார்ட்டி.." உலகிலேயே மிக உயரமான கட்டிடம் புர்ஜ் கலீபாவில் எடுத்த புகைப்படம் என அனைத்தையும் அவன் காட்டினாலும்,

அத்தனையையும் பொடுபோக்காக பார்த்துக் கொண்டே வந்தவளின் கண்கள், அங்கே தனித்துத் தெரிந்த ஓர் சித்திரத்தில் பதிந்தது.

பச்சைப் பசேல் என்று ஓடும் காட்டாற்றில், வலிய தந்தம் கொண்ட யானை நீராடிக் கொண்டிருக்க, அதன் மேல் புராதன ஷத்திரியர்கள் போல

உடையணிந்து அமர்ந்திருந்தனர் யாதவனும், விக்னேஷும்.

அவள் கனவில் வந்த அதே யாதவ்!!! புராதன வீரர்களைப் போல உடையணிந்து அவள் முன்னே வில்லேந்தி நின்ற யாதவ்!!

கூடவே அவன் பின்னாடி விக்னேஷ்.. சிரித்த முகமாக இருக்க, அவர்கள் மேல் தண்ணீரை பீய்ச்சியடித்து விளையாடிக் கொண்டிருந்தது யானை.

யாதவனின் தோள்புஜ வன்மை, விலாக்களின் வனப்பு எல்லாம் ரொம்பவும் துல்லியமாக இருக்கக் கண்டு அதிர்ந்தவள், அதைக் காட்டி, திக்கித் திணறிய குரலில்,

“இ.. இ.. இந்த பெயிண்ட்டிங்?”என்று சொல்ல,

“ஓ அதுவா.. என்னுடைய பர்த்டேக்கு உன் புருஷனோட கிஃப்ட்.. அவனாகவே பெயிண்ட் பண்ணேன்னு சொன்னான்.. ரொம்ம்ம்ப்ப்ப அழகா இருக்குல்ல?? இந்த பெயிண்ட்டிங் பார்க்குறப்போ…

நம்ம நட்பு ஜென்மம் ஜென்மமா தொடர்ற மாதிரி ஒரு ஃபீலிங்க்??''என்று விக்கி உரைக்க,

அந்தச் சித்திரத்திலும் சரி, நேரிலும் சரி விக்னேஷ், யாதவனைப் பார்க்கும் பார்வையில் கனிவு தெரிவதைக் கண்டவள், அதிசயம் மீதூறும் விழிகளுடன்,

''யாதவனை உங்களுக்கு அவ்வளவு பிடிக்குமா??..''என்று கேட்டாள் யாழினி.

'யாதவன்' பற்றிய பேச்சில் அவன் இதழ்கள் இன்னும் கொஞ்சம் மலர்ந்தது.

அழகாக ஒற்றைப் புருவம் உயர்த்தியவன், ''யாதவனை யாருக்குத் தான் பிடிக்காமல் போகும்?''என்று சிரித்துக் கொண்டே கேட்க,

அந்நொடி எதிர்பாராமல் அவளுக்கு மட்டும் கேட்டது யாதவனின் ஏகாந்தமான குரல்!!

அவள் செவிப்பறை முழுவதும் எதிரொலிக்க, ''என் ஜானுவைத் தவிர எல்லாருக்கும் இந்த

யாதவனைப் பிடிக்கும்..’’என்று சொல்லும் அவனுடைய மனக்குரல்!!

சத்தம் வந்த திசையை நோக்கி அனிச்சை செயலாக தலை திருப்பிப் பார்த்தாள் யாழினி.

அங்கே அவ்வறையின் நிலைக்கதவோரம், கைச்சந்தை சாத்தி நின்று.. தன் மார்புக்கு குறுக்காக இரு கைகளை கட்டிய வண்ணம் நின்றிருந்தான் அவன்.

காற்றிலே அலைபாய்ந்து கொண்டிருந்த அலைஅலையான கேசத்துடன் அவளையே தான் ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தன அவன் நயனங்கள்!!

அவள் திரும்பக் கண்டு, தானும் திரும்பிப் பார்த்த விக்கி, அங்கே நண்பன் அமைதியாக நின்றிருப்பது கண்டு முகம் மலர்ந்தான்.

“வா டூட். கம் என்ட் ஜாய்ன் வித் அஸ்!!உன் பொண்டாட்டிக்கு உன்னோட வீரசாகசங்கள் தான்

காட்டிட்டு இருந்தேன்..’’- அகல வளைந்த இதழ்களுடனேயே நடந்ததை விவரித்தான் விக்கி.

யாதவன் எதுவும் பேசவில்லை. எப்போதும் மனைவியைக் கண்டால் காதலோடு இணைந்த தாபத்தை சிந்தும் கண்கள், அவளை ஆராய்ச்சிப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தான்.

இதழ்களில் எப்போதும் உறைந்திருக்கும் புன்னகை, இன்று எங்கேயோ காணமலாகி விட்டிருந்தது.

கணவனின் தாபப் பார்வையையே தாங்க மறுப்பவள், அவனது ஆராயும் பார்வையை எங்கணம் தாங்கிக் கொள்வாள்?

அதனால் யாதவனது விழிகளை சந்திப்பதை விடுத்து வேறெங்கோ பார்த்தபடி நின்றாள் சுந்தரப் பெண்.

நண்பனின் விழிகள், தன்னை கணக்கில் கொள்ளாது, ஜானுவையே ஊடுருவதைக் கண்ட

விக்கி, அந்தப் புதுமணத் தம்பதியருக்கு கொஞ்சம் தனிமை கொடுக்க நாடினான் போலும்.

“ந்நான் வெளியில் கெஸ்ட்டை கவனிச்சுக்குறேன்..நீங்க பேசிட்டிருங்க” என்று நண்பனின் மனதை நன்குணர்ந்தவனாக அங்கிருந்து வெளியேறினான் விக்னேஷ்.

அழுத்தமான காலடி எட்டுக்கள் எடுத்து வைத்து, அவளை நோக்கி உள்ளே வந்தவனின் மூச்சுக்காற்றின் வெப்பம் சொல்லிற்று அவன் கோபம் இத்தகையது என்பதை.

அவளோ கணவனுடனான தனிமையை மறுக்க நாடி அங்கிருந்து விரையப் பார்க்க, அதற்கு விடாமல் அவள் முன்னங்கைப் பற்றி முட்டுக்கட்டைப் போட்டவன்,

அடக்கப்பட்ட கோபக்குரலில் கேட்டான், “ய்யாரைக் க்கேட்டு அப்படியொர்ரு ம்முடிவெடுத்த..?”என்று.

அவன் அவ்வாறு கேட்க, உதட்டுக்கு மேல் பகுதியில் குபுக்கென தூரல் போடலானது வியர்வை.

இருந்தாலும் எதுவுமே தெரியாத அப்பாவி போல அவளும்,திக்கித் திணறியவளாக, ''எ.. என்.. என்ன ம்முடிவு..?''என்று கேட்க,

கோபத்தை மட்டுப்படுத்த தன் கை முஷ்டி இறுக்கி நின்றான் அவன்.

''நுநடிக்குறத்தைய்ய்ய் நிறுத்தூஊஊ..!!'' என்று கழுத்து நரம்பு புடைத்து வெளித்தெரிய கத்த, தூக்கிவாரிப் போட்டது அவள் மேனி!!

அவளது அச்சம் கண்டு பெருமூச்சு விட்டு சினம் அடக்கியவன், ''உன் ந்நடிப்பை ச்சின்னக்குழந்தைங்க க்கூட நம்பாது··· ய்யாரைக்கேட்டு இன்டியா போறேன்னு உன் கமிஷனர் சார்க்கிட்ட சொன்ன?''என்று கேட்டான் யாதவன்.

அவள் விழிகள் அவனை சந்திக்க முடியாமல் தாழ்ந்து கொண்டது. எச்சில் கூட்டி விழுங்கிக் கொண்டே அவனை நோக்கி நிமிர்ந்தவன்,

“உன்கிட்ட சொன்னது அந்த ராகவி தானே?.. எப்படிடா உனக்கு எல்லாம் இன்பர்மேஷனும் தெரியுதுன்னு நினச்சேன்.. இரு… இப்போவே அவளை ஃபோன் போட்டு கிழிக்குறேன்” என்று ராகவி மேல் கோபபப்படுவது போல பாவ்லா செய்தவள்,

போனை எடுத்து நோண்டிக் கொண்டே அவனை விட்டும் நகர முயல அப்போதும் விடவில்லை அவன்.

இம்முறை அவன் கை, அவளில் அழுத்தமாகப் பதிந்தது, அவளைப் பற்றி இழுத்து, சுவருடன் சாய்க்கவும் செய்தது.

அவனது அதிரடியில் சற்றே பயந்து தான் போனாள் யாழினி.

கண்ணோடு கண் நோக்க, மூச்சோடு மூச்சு உரச, அவளோடு ஒட்டி நின்றவன்,

“ராகவி ஒண்ணும் என்கிட்ட சொல்லலை.. சரி அவள் தான் சொன்னான்னே வைச்சுக்குவோம்.. நான்

கேள்விப்பட்டது எல்லாம் பொய்னு சொல்லு.. ப்ளீஸ்..''என்று கேட்டவன்,

அவளை சட்டென தன் நெஞ்சோடு அணைத்தான்.

நெஞ்சில் காது வைத்திருந்தவளுக்கு அவன் குரல் இதயத்துடிப்போடு கேட்க, அவன் தொனி ரொம்பவும் இளகிப் போயிருந்தது.

"ப்ளீஸ்.. 'நீ கேட்டது எதுவும் உண்மை இல்லை.. எல்லாம் பொய் யாதவ்' ன்னு சொல்லு..''என்று கேட்டான் அவன்.

அது பொய்யாக இல்லாத பட்சத்தில் எப்படி பொய் என்று கூற முடியும்? அமைதியாக கணவனின் இதயத்தோடு ஒடுங்கி நின்றாள் சுரூபினி.

அவளது அமைதியே அவனுக்கு வந்த தகவல் அத்தனையும் உண்மை தான் என்பதை உணர்த்த, அவளை தன்னிலிருந்தும் விலக்கியவன்,

தெளிவான குரலில், “என் குழந்தைய சுமந்துக்கிட்டு இந்த விபரீத விளையாட்டு விளையாட நான் அனுமதிக்க மாட்டேன்.. உனக்கோ.. இல்லை குழந்தைக்கோ ஏதாவது ஆச்சுன்னா” என்று அவன் எச்சரிக்கும் தொனியில் ஏதோ கூற சட்டென குறுக்கிட்டாள் ஜானு.

“ அப்படியொண்ணும் ஆகாது.. இது எக்ஸ்கவேஷன் இல்லை.. ஜஸ்ட் எக்ஸ்ப்ளோரேஷன் தான்..பயப்பட்ற மாதிரி எதுவும் இல்..”என்று இவள் சொல்லிக் கொண்டிருக்க இடையிட்டது அவளது மன்னவன் குரல்.

“ எனக்கு அதைப்பத்தி கவலையில்லை.. நீ ப்போகக் கூடாது..!!”- ஒரேயடியாக மறுத்துத் தடா போட்டான் யாதவ்

கணவன் போட்ட தடையைக் கண்டதும் சுருசுருவென கோபம் பொங்கியது யாதவனின் முன்கோபக்குயிலுக்கு,

“நீ தானே என் கெரியர்க்கு எந்தத் தடங்கலும் தர மாட்டேன்.. உன் வேலையை பார்த்துக்கலாம்னு

என் கழுத்தில் தாலி கட்டும் போது சொன்னே..??”என்று அவன் கொடுத்த வாக்கை நினைவுறுத்தினாள் யாழினி.

அவனோ, அவள் வார்த்தைகளில் இருந்தே அவளை கவிழ்க்க நாடினானோ? அப்படித் தான் போலும். அவன் சொற்களில் எங்கே தன் ஜானுவை இழந்து விடுவோமோ என்ற கவலைத் தொக்கி நின்றிருந்தது அப்பட்டமாகப் புரிந்தது.

“உன் முடிவு கெரியர்க்கு தடங்கல் ஏற்படுத்துறதா இல்லை··· உன் உயிருக்கும், குழந்தை உயிருக்கும் தடங்கல் ஏற்படுத்துறதா இருக்கு..”என்று சொன்னான் அவன்.

அவனது காதல், வெறும் வார்தகைகளாக செவி வழி அடைந்ததே ஒழிய, இதயவழி அடைய மறுத்தது.

அவனது மறுப்பில், தானாகவே கண்களில் கண்ணீர் துளிர்க்க,

“வார்த்தைக்கு வார்த்தை ராஜ பரம்பரை.. ராஜ பரம்பரை சொல்வே? ஷத்திரியர்கள் கொடுத்த வாக்கை மீற மாட்டாங்க.. தெரியும்ல?”என்றும் கூட கேட்டுப் பார்த்தாள் அவள்.

அவனோ அதற்கும் கூட உரிய பதில் வைத்திருந்தான். மகாபாரதத்தில் இருந்து தர்மரை மேற்கோள் காட்டி,

“அதுக்காக.. க்கொடுத்த வ்வாக்கை ம்மீறக்கூடாதுன்றதுக்கா.. சூதாட்டத்துக்கு த்தன் ம்மனைவியை ப்பணயம் வ்வைச்சானே யுதீர்ஷ்டீர்.. அவனைப் போல உன்னையும், என் குகுழந்தையும் நான் க்கொடுத்த வாக்குக்காக பணயம் வைப்பேன்னு நினைச்சியாஆஆ..?” என்று சொல்ல அவள் சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று.

ஜன்னல் திரைச்சீலைகள் காற்றில் ஆட, அவள் கூந்தலும், அவன் கேசமும் அலை பாய, இருவரும் இருவர் விழிகள் பார்த்தது பார்த்தபடி. நின்றிருந்தனர்.

அவன் தொடர்ந்து சொன்னான். அவன் குரல் ரொம்பவும் இளகிப் போயிருந்தது.

“உன்னை சந்தோஷமா வைச்சுக்கணும்னு தான்.. உனக்காக இவ்வளவு மெனக்கெடுறேன்.. அது ஏன் உனக்குப் புரிய மாட்டேங்குது??.. நீயும், நானும் சந்தோஷமா வாழலாம்.. காதல்னா என்னான்னு அடியாழம் வரை போய் பார்க்கலாம். பீ மை கேர்ள்.. பீ வித் மீ…” என்று தன் கடைசியும், முதலுமான ஆசையை சொன்னான் யாதவன்.

அவளுக்கு கணவன் அன்பை விடவும், அவள் விரும்பும் தொல்லியல் ஆராய்ச்சி முக்கியமாகப்பட்டதோ என்னவோ, முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டு,

“என்னைப் போக விடு யாதவ்..”என்றாள் அவள்.

“நான் உன்னை ப்போக வ்விட ம்மாட்டேஏஏன்!!..”-உறுதியும், கம்பீரமும் நிறைந்த குரலில் சொன்னான் இவன்.

அச்சுறுத்தும் கணவனின் விழிகளையே உணர்ச்சி துடைத்த முகத்துடன் பார்த்திருந்தாள் யாழினி.

அத்தியாயம் 16

ஜூன், இரண்டு,

இலங்கை, கட்டுநாயக்க விமான நிலையம்.

தன் ஆறு மாத வயிறு.. நன்றாக மேடிட்டுத் தெரிய, கையால் குழந்தையை அணைத்துப் பிடித்தவாறும்,

பிரசவ காலத்தின் போது இலகுவாக இருக்க.. கரண்டைக்கால் வரை நீண்ட மேக்ஸியுடனும், அதற்கு மேலால் ஒரு ஓவர் கோட்டுடனும் நின்றிருந்தாள் யாழினி.

அவளுக்கு அருகாமையிலே.. இருபத்தொன்று அல்லது இருபத்திரண்டு வயது மதிக்கத்தக்க நான்கு ஆடவர்களும், நான்கு பெண்களும் என எட்டு மாணாக்கள்,

தத்தம் கையில் ஒரு லக்கேஜூடன் நின்றிருந்தனர்.

தன் கார் குழல் கற்றையை காதுக்குப் பின் சொருகிய வண்ணம், அவர்களைப் பார்த்து,

“காய்ஸ் (guys) பாஸ்போர்ட், விசா எல்லாம்.. மறக்காமல் எடுத்துக்கிட்டீங்கள்ல? செக் இன் போனப்பறம் ‘அது மறந்துட்டேன், இது மறந்துட்டேன்’ னு பதறக்கூடாது..

உத்தரபிரதேஷின் கேப்பிட்டல் ‘லக்நவ்’ விற்கு, டெல்லி வழியா போறதுன்னா தர்ட்டீன் ஹவர்ஸ் பயணம்… இப்போ நேரம் முற்பகல் பத்தரை…. அண்ணளவா ராத்திரி பதினொன்னரை போல நாம லக்நவ்வில் லேண்டாவோம்! ”என்று தன் கீழ் ஒப்படைக்கப்பட்ட களனிப் பல்கலைக்கழக மாணவர்களிடம்,

அன்றைய பயணத்தைப் பற்றி விளக்கிக் கூறிக் கொண்டிருக்க,தன் ஷோல்டரை பின்னாடியிருந்து யாரோ சுரண்டுவது போல இருந்தது.

பேச்சை பாதியிலேயே நிறுத்தி விட்டு திரும்பிப் பார்த்த சுந்தரப் பெண் யாழினி, அங்கே கல்யாணப் பட்டில் தன் சகபணியாளினி ராகவி நின்றிருப்பது கண்டு இனிதாகவே அதிர்ந்தாள்.

ராகவி சட்டென தன் தோழியைத் தாவி அணைத்துக் கொள்ள, அவளது அணைப்பில் திக்குமுக்காடிப் போன யாழினியின் இதழ்கள் மலர்ந்தது.

ராகவி முதுகில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்த மற்றவள், ‘‘ஹேய் கல்யாண பொண்ணே!.. என்ன இந்தப்பக்கம்..??’’என்று கேட்டாள்.

சுந்தரப் பெண்ணிடமிருந்து பிரிந்து கொண்ட ராகவி, ‘‘ஆகாஷ் அங்கே எனக்காக எல்லா கல்யாண ஏற்பாடையும் பார்த்துக்குறேன்னு சொல்லிட்டான்.. அதான்.. உன்னை சென்ட்ஆப் பண்ணிட்டு… அப்படியே ரெஜிஸ்டர் ஆபிஸ் போகலாம்னு வந்தேன்..!!

உன் பிடிவாதத்துக்கு அளவே கிடையாது… கடைசியில் நீ நினைச்சதை சாதிச்சிட்டேல்ல? ப்பிடிவாதக்காரி! ’’என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் அவள்.

ஆனால் நம் சுந்தரப் பெண் யாழினியோ, யாரும் அறியா வண்ணம் மனதுக்குள், “இந்த பயணம் எனக்கு எவ்வளவு முக்கியமானதுன்னு உனக்குத் தெரியாது ராகவி… சொன்னாலும் நீ புரிஞ்சிப்பீயான்னு தெரியலை??”என்று எண்ணிக் கொண்டது ராகவி அறிய வாய்ப்பில்லை தான்.

யாழினியின் இரு கைகளோடு தன் கைகள் கோர்த்துக் கொண்ட ராகவி,

கவலை மீதூறும் குரலில், “எனக்கு உன் நினைப்பா தான் இருக்கும்..!. எட்டு பேரை எப்படி சமாளிக்கப் போறேன்னு தெரியலை..??”என்று சொல்ல,

“அவங்க ஒண்ணும் குழந்தைங்க இல்லை.. அவங்களை கவனிச்சுக்க அவங்களுக்கு தெரியும்.. நான் சும்மா கைட் பண்ணா மட்டும் போதும்..!!”என்று தன் ஓவர் கோர்ட் பாக்கெட்டில் கையிட்ட வண்ணமே சொன்னாள் யாழினி.

‘உன் கணவன் தான் உன்னைப் போக வேண்டாம் என்று ஒரேயடியாக மறுத்தானே.. பின்னே எப்படி ஒத்துக் கொண்டான்?’ என்று அடிநாவில் எழுந்த கேள்வி அடி நாவிலேயே சமாதியாகும் வண்ணம் கேட்டது,

ஒலிபெருக்கியில் ‘செக்- இன்’ னிற்கான வரவழைப்பு!!

மீண்டும் தன் தோழியைத் தாவி அணைத்துக் கொண்ட ராகவி “எனிவே அங்கே போய் சேர்ந்ததும் மறக்காமல் கோல் பண்ணு.. எனக்கு வந்த பொறுப்பை வாலண்டீயரா நீ எடுத்துக்கிட்டே.. இப்போ நீ ஒருயிர் இல்லை.. ஈருயிர்!! இண்டியா போய் பத்திரமா திரும்பி வர்ற வரைக்கும் என்னால நிம்மதியா இருக்க முடியுமான்னு தெரியலை?? ஹேவ் எ ஸேஃப் ஜர்னி..”என்று சொல்ல,

யாழினியும் புதுமணப் பெண்ணின் காதோரம், கிசுகிசுக்கும் குரலில்,

“ஹேய் கல்யாணப் பொண்ணு.. கலர் கலரா ஃபர்ஸ்ட் நைட் கனவுகளை காண்றதை விட்டுட்டு.. என்னைப் பத்தி கவலைப்படலாமா?

நான் பத்திரமா தான் இருப்பேன்.. உன் ஆகாஷைக் கவனிச்சுக்குறதை மட்டும் சிந்தி!! அட்வான்ஸ் திருமண வாழ்த்துக்கள்..!!”என்று வாழ்த்திக் கொண்டே, செக்-இனிற்குள் அவள் நுழையப் போக, அவளது காருண்யமிக்க நயனங்கள் அவளையும் மீறி,

அந்தக் கூட்டத்துக்குள் யாதவனின் விழிகளைத் தான் தேடியது.

போகும் முன் கணவனின் ஆதவ முகம் கண்களில் படாதா என்று அவள் மனம் அவளையும் அறியாமல் ஏங்கவும் செய்தது.

ஏக்கப் பார்வையுடனேயே டிபார்ச்சருக்குள் நுழைந்தாள் பெண்!!

செக்-இன் ப்ரோசீஜர் எல்லாம் செவ்வனே முடிந்ததும், அவர்களை நோக்கி வந்த, கோட் சூட்

அணிந்திருந்த ஆறரையடி உயரத்துக்கும் அதிகமான ஓர் மேலதிகாரி,

பணிவான குரலில், அவளை நோக்கி, “மேம்.. திஸ் வே.. இது தான் எஃப். பி. ஓ வழி..”என்று அதிநவீன கண்ணாடிப் படிகள் கொண்ட மார்க்கமாக, அவளை அழைக்க,

மெல்ல எழுந்து அவர் பின்னால் விரைந்தாள் யாழினி. யாழினியின் பின்னே அவள் பால் பொறுப்பு சாட்டப்பட்ட மாணவர்களும் விரைந்தனர்.

அங்கே டெர்மினலில் நின்றிருந்தது எந்த நாட்டின் ஏர்லைன்ஸ் என்று வரையறுக்க முடியாத ஓர் அதிநவீன ரக விமானம்.

மெல்ல கண்கள் சுருங்க தன்னோடு வந்த மேலதிகாரியைப் பார்த்துக் கேட்டாள், “இஸ் திஸ் த ஃப்ளைட் டூ உத்தர ப்ரதேஷ்..? ஆர் யூ ஷுர்?”என்று கேட்க,

மேலதிகாரியின் இதழ்களில் இருந்து மெல்லிய புன்னகையே தவழ்ந்தது.

"யெஸ் மேம்!!என்ஜாய் யோர் ஜர்னி!! " இரு கைகளையும் அடி வயிற்றில் கோர்த்தவாறு, விமானப் படிகளைக் காட்டிச் சொன்னான் அவன்.

இடுங்கிய கண்களுடனேயே விமானத்துக்குள் நுழைந்தவளின் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கியது.

இந்தக் கள ஆய்வுப் பயணத்துக்காக இலங்கை அரசு 'கிங்பிஷர் ஏர்லைன்ஸ்' ஊடாக, பிஸினஸ் கிளாஸில் டிக்கெட் புக் செய்திருக்கும் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு,

இலங்கை அரசு.. தொல்லியல் மாணவர்களுக்காக ஓர் சாட்டர் ஃப்ளைட்டையே ஹயர் செய்திருப்பதாகவே தோன்றியது.

மாணவர்கள் அமர இருந்த ஆசனங்களே டைனிங் டேபிள் வடிவில், இருக்க, விமானப் பணிப்பெண்கள் கூட..

எந்த ஏர்லைன்ஸின் அடையாளச் சின்னமும் இல்லாத யூனிபார்ம் அணிந்திருக்கக் கண்டாள் அவள்.

மாணவர்கள் கம்ஃஃபர்டபிளாக இருப்பதை உறுதி செய்தவள், தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர, அப்போது தான் கவனித்தாள்,

அவளுக்கெதிரே இருந்த ஆசனத்தில், சாதாரண டீஷேர்ட் மற்றும் டெனிம் அணிந்த ஓர் ஆடவன்..

தன் முகத்தை மேகஸினுள் புதைத்த வண்ணம், அதை வாசித்துக் கொண்டிருப்பதை.

டீஷேர்ட் வழியாகத் தெரிந்த, அந்த ஆடவனின் முறுக்கேறிப் போய் தெரிந்த கைத்தசைகள்.. அவளுக்கு நிதம் நிதம் பார்த்துப் பழகிய ஆர்ம்ஸினை நினைவுறுத்த,

சந்தேகக் கண்களுடன் அந்த மேகஸினையே உற்று நோக்கினாள் யாழினி.

சுந்தரப் பெண் பார்ப்பதை உணர்ந்த மேகஸின் காரனும், மேகஸினைத் தன் முகத்திலிருந்து இறக்கி,

தன் முத்து மூரல்கள் விரிய, “வெல்கம் ஜானு!! ”என்று வரவேற்க, அவ்வாடவனின் வதனம் கண்டு அதிர்ந்தாள் யாழினி.

“ஜானு??”

அவன்!!! யாரைப் பார்க்கக் கிடைக்காது என்று ஏங்கினாளோ? அவன்!!

கால் மேல் கால் போட்டிருந்தவளின் பாதங்கள் தானாக இறங்க, அதிர்ச்சி மேலோங்கியதால் திக்கிய குரலில்,

“ந்நீ.. ந்நீ.. எப்படி இங்கே??”என்று கேட்டாள்.

மனைவியின் அதிர்ச்சி முகம் கண்டு.. அந்த திடகாத்திரமான ஆண்மகனின் முரட்டு இதழ்களில் தவழ்ந்தது புன்சிரிப்பு!

புன்சிரிப்புடனேயே வாய் திறந்தவன் கேட்டான், “டிபார்ச்சருக்குள் வர முதல்.. என்னை அப்படி தேடின?? இப்போ நானே உன் முன்னாடி வந்ததும், ‘நீ எப்படி இங்கே?’ன்னு கேட்குற? எது நிஜம்??

என்னைத் தேடிய என் ஜானுவா? இல்லை இப்போ என் கண் முன்னாடி நடிக்குற இந்த ஜானுவா?''என்று கேட்க,

யாழினியின் முகத்தில் அப்பட்டமாக அசடுவழியத் தொடங்கியது.

அப்படியானால் இவன்··· அவள் தேடியதைப் பார்த்திருக்கிறான்!!

இருப்பினும் நிமிடத்தில் முகபாவனையை மாற்றியவள், விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதது போல கெத்தான குரலில்,

"ந்.. நா.. நா.. நான் உன்னைத் தேடலை!! .. அ.. அது.. எ.. என் கமிஷ். னர் சார் சென்ட்ஆப் பண்ண வரேன்னு சொன்னாரு.. அவரைத் தான் தேடினேன்?''என்று சொல்ல,

அவனது அடர்ந்த ஒற்றைப் புருவம் சட்டென மேலுயர, "பார்த்தா அப்படி தெரியலையே.. யாரையோ ரொம்பப ஃபீல் பண்ணித் தேடுற மாதிரியில்ல இருந்தது?'' என்றான் அவன்.

“பே··· பேச்சை மாத்தப் பா.. பார்க்காதே.. இ.. இப்.. இப்போ..எதுக்கு.. நீ இந்த ஃப்ளைட்டில் ஏறின??”என்று அவன் கேட்ட கேள்வியில் இருந்தும் அவனை திசைதிருப்ப அவள் கேட்க, அவன் அதற்கு உடனடியாக பதில் ஏதும் சொல்லவில்லை.

அந்தப் புராதனப் புரவி வீரன், கையுயர்த்தி சொடக்குப் போட்டு அந்த விமானப் பணிப்பெண்ணை தன்னருகே வரவழைத்தான்.

பணிப்பெண்ணும் அவர்கள் அருகே பவ்யமாக வந்து கைகட்டி நிற்க, எதையோ கண்களால் ஜாடை காட்டினான் யாதவ்.

அவன் கண் ஜாடையைப் புரிந்து கொண்டாற் போன்று, அப் பெண்ணும், யாழினியை முகமலர நோக்கி, மரியாதையான முகபாவனையுடன்,

“வெல்கம் டு வை. எம். டி க்ரூப்ஸ் ஆப் கம்பனீஸ்’ ப்ரைவட் சாட்டர் ஃப்ளைட்..!!”என்று வரவேற்ற விதத்திலேயே அதிர்ந்து போனாள் மங்கை.

விழிகள் இரண்டும் அகல விரிய, 'வாட்?? இது யாதவ்க்கு சொந்தமான விமானமாஆ?' என்பது போல கணவனை அதிர்ச்சி மல்கப் பார்த்தாள்.

அவனோ தன் கால் மேல் கால் இட்ட வண்ணம், இருக்கை கைப்பிடி விளிம்பில், முழங்கையூன்றி.. அதே கைகளால் தாடையைத் தாங்கிய வண்ணம் கம்பீரமாக அவளை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்திருந்தான்.

விமானப் பணிப்பெண் தொடர்ந்து சொன்னாள்.

"டெல்லி வழியாக லக்நவ் போகாமல், ஸ்ட்ரெய்ட்டாகவே லக்நவ் போய் லேன்ட்டாகலாம் மேம்!!

மற்ற ஃப்ளைட்டில் போறப்போ.. பதின்மூன்று மணித்தியாலங்கள்னா..

இந்த ஃப்ளைட் ட்ரேவலில், எக்ஸேக்ட்டா பத்து மணித்தியாலங்கள் இருபத்தேழு நிமிடங்களில் அங்கே இருக்கலாம்!!

இங்கே உங்களுக்குப் பிடித்த ரெஸ்டாரன்ட்டில் ஆர்டர் பண்ண உணவுகள் உங்களுக்காக தயாரா இருக்கு..நீங்க விரும்பிய நேரம் உங்களுக்காக சர்வ் பண்ண தயாரா இருக்கோம்!!

இருபத்தி நான்கு மணி நேர ஃவைஃபை’ யையும் உங்க தேவைக்கு யூஸ் பண்ணிக்கலாம்.. வேற ஏதாவது தேவைன்னாலும் தயங்காமல் கேட்கலாம்!! இந்தப் பயணம் உங்கள் மனதுக்கு இனிய பயணமாக அமையட்டும்!!”என்று முழு வசதிகள் பற்றியும் ஒரு சின்ன டெமோ கொடுத்து விட்டு, யாதவனின் முகத்தை மரியாதையுடன் பார்த்திருந்தாள் அவள்.

யாதவன் மீண்டும் கண்களில் ஏதோ ஜாடை செய்தான். அதைப் புரிந்து கொண்டாற் போன்று அந்தப் பெண்ணும் அங்கிருந்து நகர, மனைவியை நோக்கித் திரும்பியவன்,

“இது ‘நமக்கு’ சொந்தமான ப்ரைவட் சாட்டர் ப்ளைட்.. இதில் நான் இருக்காமல் யார் இருப்பா.. சொல்லு??”என்று ‘நமக்கு’ என்று அவளுக்கும் உரிமையில் பங்கு கொடுத்துக் கேட்டான் அவன்!!

அவளுக்கோ கணவனின் அதிரடி பலவித குழப்பங்களை உள்ளே கிளறி விட, “வ்வாஆஆட்?? அப்படின்னா கவர்மென்ட்டால புக் பண்ண டிக்கெட்ஸ்??? க.. கமிஷனர் சாருக்கு இதெல்லாம் தெரியுமா என்ன?”என்று அவள் பதறியபடி காச்மூச் என்று கத்தத் தொடங்க,

எதிர் ஆசனத்தில் இருந்து, மனைவியின் பக்கத்து ஆசனத்துக்கு வந்தான் யாதவ்!!

அவள் தோள் மேல் கையிட்டு, தன்னோடு இறுக அணைத்தவனாக,

“ம்.. ஆமா.. இங்கேயிருந்து டெல்லி போய்.. அங்கே இருந்து.. என் ஜானு.. லக்நவ் போய்.. கஷ்டப்படணுமான்னு தோணுச்சு.. ஸோ அதான் ஸ்ட்ரெய்ட்டா லக்நவ் போய் லேன்டாகலாம்னு.. என்னோட சாட்டர் ஃப்ளைட்டை வரவழைச்சேன்!!

.. கமிஷனர் சார்க்கு ஓல்ரெடி இன்ஃபார்ம் பண்ணியாச்சு.. உனக்கு சீக்ரெட் சர்ப்ரைஸ்ஸா இருக்கட்டுமேன்னு தான்.. உன் கிட்ட சொல்ல வேணாம்னு சொன்னேன்.. இட்ஸ் ஓல் ஃபோர் யூ

ஜானு!!!தர்ட்டீன் ஹவர்ஸ் பயணம்.. இப்போ டென் ஹவர்ஸா சுருங்கப் போகுது..!!” என்றவன் இதழ்கள்,

தன்னருகாமையில் இருந்த அவளது செக்கச் செவேலென சிவந்த அதரங்களை, தாபத்துடன் மேயலானது.

கண்களில் ஒரு வித ஆசை பொங்க.. அவள் இதழ்களை நோக்கி.. அந்த அழகிய ஆண் வண்டு வர,

அங்கே சற்று தள்ளி மாணவர்கள் குதூகலமாக அமர்ந்திருப்பதைக் கண்டு,

அவன் கையை தன்னிலிருந்தும் விலக்கிக் கொண்டே அமர்ந்தாள்.

மாணவர்கள் யார் பார்வையும் இவர்கள் மீது பதியாத வண்ணம், அப்போதே அந்தப் பயணத்தை என்ஜாய் செய்து கொண்டிருந்தனர் அவர்கள்.

அவள் கையை எடுத்து விட்டதும், யாதவனுக்குள் இன்ஸ்டன்ட்டாய் கோபம் பொங்க,

மீண்டும் அவளது தோள் மேல் பலவந்தமாகக் கையிட்டு அணைத்துக் கொண்டவன்,

அவள் காதுக்குள் நாசி நுழைத்து, அவளது நறுமுகை முகர்ந்து கிறங்கியவனாக, ஹஸ்கி குரலில்,

" "ப்போகாதே" ன்னு சொன்னேன்.. நீ கேட்கலை!!.. அதான் என் குழந்தையையும், உன்னையும் பாதுகாக்க.. நானே உன் கூட வரலாம்னு முடிவு பண்ணிட்டேன்.. கல்யாணம் ஆனதும் உன்னை ஹனிமூனுக்கு உத்தரபிரதேஷ் கூட்டிப் போகணும்னு ஆசைப்பட்டேன்.. அப்போ இருந்த சிட்ச்சுவேஷனில் முடியலைஹ்… ஸோ லெட்ஸ் ஸெலிப்ரேட் அவர் ஹனிமூன்..!!" என்று கூற,

கணவனின் "ஹனிமூன்" என்ற வார்த்தையாடல்.. அவளைத் தூக்கிவாரிப் போட்டு நிமிரச் செய்தது.

"வ்வாஆஆட்?? என்ன ஹனிமூனா?ஆர் யூ க்ரேஸி? யாதவ் இது கள ஆய்வுப் பயணம்.. உன் கூட ரொமான்ஸ் பண்ண இந்தப் பயணம் கிடையாது.. ஸோ ப்ளீஸ் உன் வேலையை மட்டும் பாரு" என்று கத்தினாள் யாழினி.

அவனை.. அவள் கத்தல், கோபம் எதுவுமே அவன் முடிவிலிருந்து மாற்றவில்லை. பாதிக்கவுமில்லை.

நெற்றியோரம் தனியாக ஆடிக் கொண்டிருந்த அவள் கார் குழல் கற்றையை.. ஒற்றை விரலால் மென்மையாக அப்புறப்படுத்திக் கொண்டே,

“புருஷனோட வேலை என்ன? தன் பொண்டாட்டியையும், குழந்தையையும் கவனிச்சிக்குறது தானே?.. நான் என் வேலையைத் தானே பார்க்குறேன்.. என் வேலையை பார்க்க விடு..”என்று சொன்ன கணம்,

கோபத்தில் கணவனைத் தாருமாறாகத் திட்டப் போனவளைத் தடுத்து நிறுத்தியது விமானியின் குரல்!!

விமானியிடமிருந்து அறிவுறுத்தல் வர, விமானமும் டேக்ஆப் ஆகக்கூடிய நேரமும் வந்தது. அவளுக்குள் உள்ளே கூஸ்பம்ப் உணர்வுகள் ஓட.. இதழ்களை அழுந்த மூடிக் கொண்டாள் யாழினி.

விமானம் மேலேறும் அதிர்வில், கண்களை மூடிக் கொண்டே, தன் கைச்சந்தை இறுகப் பற்றிய மனைவியை விழியெடுக்க முடியாமல் பார்த்து இரசித்தான் அந்தப் புராதனப் புரவி வீரன்!!

இந்தியாவின், உத்தர பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்நவ்வின் விமானநிலையத்தின் டெர்மினல்!!

அண்ணளவாக நேரம் இரவு எட்டு நாற்பத்தைந்தைத் தாண்டியிருக்கும். சுமார் பத்து மணித்தியால பயணத்தின் பின்னர் உத்தரபிரதேசத்தை அடைந்திருந்தனர் அவர்கள்.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஒரே டைம்ஸோன் (time zone) என்பதால், அங்கு வந்து சேர்ந்த நேரம்.. இலங்கையிலும் அதே நேரமாகவே இருந்தது.

டெர்மினலில் இறங்கி, விமானநிலையத்தின் அரைவலை நோக்கி, தன் மாணவர் கூட்டத்துடன் விடுவிடுவென நடந்து கொண்டிருந்தவளின் இதழ்களும் கூட விடுவிடுவெனத் தான் சொற்கள் உதிர்த்துக் கொண்டிருந்தது.

அப்படி என்ன தன் மாணாக்கர்கள் பார்த்து சொன்னாள் அவள்? இதோ அது இவை தாம்!!

“லக்நவ்விலிருந்து முந்நூற்று தொண்ணூற்றொன்பது கிலோமீட்டர் தொலைவில் இருக்க “மீரட்’ டுக்கு போயாகணும்.. நம்மை கூட்டிப் போக, “மீரட்” தொல்லியல் அதிகாரியை இண்டியன் கவர்ன்மென்ட் அரேஞ்ச் பண்ணியிருக்கு.. வெளியே அவரு நமக்காக வெயிட் பண்ணிட்டு இருப்பாரு..அநேகமாக ட்ரெயினில் தான் போயாகணும்.. கிட்டத்தட்ட எய்ட் ஹவர்ஸ் பயணம்.. கொஞ்சம் டயர்டான ஜர்னி தான்.. பட் வீ ஆர் ஆர்க்கியோலஜிஸ்ட்ஸ்..ஹேவ் டூ பியர் எவ்ரிதிங்க்.. காலையில் நாம் மீரட்டில் இருப்போம்” என்று சொல்ல,

களைத்துப் போனவர்களாக கொட்டாவி விட்டனர் ஒரு சில மாணவர்கள்!!!

அந்தக் கணம், அந்த மாணவர்களே அதிர்ந்து நிற்க, அவள் முன்னங்கையைப் பலவந்தமாகப் பற்றி நிறுத்தினான் யாதவ் மகாதேவன்!!

அவள் 'இப்போது என்ன?' என்று புரியாமல் நோக்க, அவன் ஜானு மட்டும் கேட்கும் குரலில், "இவ்வளவு அவசரம் ஆகாது ஜானு.. அதுவும் ப்ரெக்னென்ட்டா இருக்குறப்போ.. கூடவே கூடாது!!"என்று சொல்ல,

அவளும் கணவனின் விழிகள் அண்ணாந்து நோக்கி,குசுகுசுக்கும் குரலில், "க்கைய்ய விடு ய்யாஆதவ்.. ஸ்டூடண்ட்ஸ் எல்லாம் பார்த்துட்டிருக்காங்க.. வீ ஆர் கெட்டிங் லேட்.. உனக்கு அவசரமில்லைன்னா நீ பொறுமையா வா.. நாங்க போறோம்" என்று சொல்ல,

இம்முறை சட்டென உரக்கக் கேட்டது அவன் குரல்!!

"என் ஜானு.. ஏன் மீரத்க்கு ட்ரெயினில் போய் கஷ்டப்படணும்?அதான் நம்ம ஹெலிகாப்டர் இருக்குல? ஜஸ்ட் த்ரீ அவர்ஸில் போய் சேர்ந்துரலாம்!!" என்று சொல்ல,

டெர்மினலுக்கு சற்று தள்ளி.. அகோரமான ஒலியுடன், ஹெலியை நிறுத்தும் ஹெலி பேட்டில், ஓர்

வானூர்தியொன்று வந்து லேன்ட்டாகத் தொடங்கிய அதிசயத்தை மெய்சிலிர்க்கப் பார்த்தாள் யாழினி!!

பத்து பேர் பயணம் செய்வதற்கு ஏற்றாற் போல நீளமானதாகவே இருந்தது அது.

மாணவர்களை நோக்கி, “கோ.. கெட் இன்!!”என்று ஹெலிகாப்டர் ஒலிக்கும் மேலான குரலில் அவன் சொல்ல, யாதவனை ஓர் “அயன்மேன்” ரேஞ்சுக்கு பார்த்த மாணவர்கள்.. ஹெலிகாப்டரில் ஏற,

அவனது பிடிவாதமான மனையாள் மட்டும் அவனுடன் வரவேமாட்டேன் என்று அடம்பிடிக்கலானாள்.

“ம்ஹூஹூம்..ம்மீஈஈஈரட் ஆஆஆபீஸரை விட்டுட்டு… வர சொல்றீஈஈயாஆஆஆ? அவர் நம்மளுக்காஆஆக வெளிய காத்துட்டிருப்பாஆஆரு” — என்று தன் குரலை, ஹெலிகாப்டர் ஒலி மூடி மறைக்காமல் இருக்கக் கத்திச் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.

“உன் டிக்ஷனரியில் “புருஷன் பேச்சை கேட்கணும்’ ன்னு ஒண்ணு.. இல்லவே இல்லையா? உனக்கு என்னோட அதிரடி மட்டும் தான் செட்டாகும்!!” என்று சொன்னவன்,

அவளே எதிர்பார்த்திராத நேரம் அவள் அடித் தொடையூடு கையிட்டு ஓர் கை, முதுகோடு கையிட்டு ஓர் கை என அலேக்காக கைகளில் ஏந்திக் கொண்டே, ஹெலிகாப்டரை நாடிப் போனான் யாதவன்.

அவன் அநாயசமாக அவளைத் தூக்கியது கண்டு.. அவளோடு வந்த இளசுகள் சொக்கிப் போய் நிற்க, இவளோ, “அப்போ அந்த மீரட் ஆபிசர்??” என்று பதறலானாள்.

அவளை ஹெலியில் ஏற்றி அமர வைத்தவன், அந்த மீரட் அதிகாரிக்காக அவள் பதறுவது தாளமாட்டாமல், “ரிலாக்ஸ் ஜானு..உன் மீரட் ஆபிசரை வர வேணாம்.. நேரா ஹோட்டலுக்கு வந்துடுங்கன்னு சொல்லிட்டேன்..!!!”என்று சொல்லவும் தான் கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தது.

லக்நவ்விலிருந்து விடியல் சாமம் ஒன்றரை மணி போல மீரட்டை அடைந்தவர்கள், அங்கே ஹோட்டலில் தங்கியிருந்த மீரட் அதிகாரியை சந்தித்து..

ஹோட்டலில் ரிப்ரெஷ்ஷாகி, கொஞ்சம் ஓய்வெடுத்து விட்டு,

காலை உணவையும் முடித்துக் கொண்டு அங்கிருந்து, இரண்டு மணிநேரப் பயணமான “ஹஸ்தினாபுர்” க்கு கிளம்ப ஆரம்பித்தனர்!!

“ஹஸ்தினாபுர்!!”- அதே பண்டைய அஸ்த்தினாபுரம்!!

குருகுலத்தைச் சேர்ந்த பாண்டவர்களினதும், கௌரவர்களினதும் தாயகம்!!

கங்கையின் புதல்வரான பீஷ்மரையும், சூரியனின் புதல்வரான கர்ணனையும் தந்த அஸ்த்தினாபுரம்!!

உத்தரபிரதேஷின் ஹஸ்தினாபுர் அவள் வாழ்வில் சோழி விளையாடப் போவதை அறியாமல் அங்கு வந்து சேர்ந்தாள் சுரூபினிப் பெண்!!

ஹஸ்தினாபுர்" ரில் தங்குவதற்காக ஏற்பாடு செய்த ஹோட்டலை விட்டும், அவர்கள் பயணித்துக் கொண்டிருந்த வேன் வண்டி,

ரோங் டிரெக்ஷனில் பயணிப்பதாக, அவளுடைய "கூகுள் மேப்" காட்ட,

அச்சம் ததும்பிய விழிகளுடன் கணவனைப் பார்த்து கேட்டாள், "எங்களை எல்லாம் எங்கே கூட்டிட்டுப் போற யாதவ்!!"என்று.

அவன் எதுவும் உடனடியாக சொல்லவில்லை. ஒரு சில நிமிடங்களில், அந்த வேன் வண்டி, ஓர் பெரிய இரும்பு கேட் போடப்பட்ட மாளிகைக்குள் நுழைய,

அவள் அந்த மாளிகையைப் பார்த்து அதிர்ந்து விழிக்க, இவனோ தன்னுடைய கம்பீரமான குரலில்,

"இது என்னோட கோட்டை!!.."என்று சொல்ல, அவள் இதயத்தில் ஏனென்று இனங்காண முடியாத ஓர் பயம் சூழ்ந்து கொண்டது.

அவளோ அந்த மாளிகையை விட்டும் விழியெடுக்க முடியாமல் பதுமையாய் நின்றாள்.

நடுவே போர்ட்டிகோவுக்கான சலவைக்கல் அலங்காரமே… ஸ்தம்பிக்க வைக்க, போர்ட்டிகோவை இரண்டாகப் பிரித்தது.. நடுவே ஆளடி உயரத்தில் எழுந்து பீய்ச்சியடித்துக் கொண்டிருந்த செயற்கை நீரூற்று!!

போர்ட்டிகோவின் இரு மருங்கிலும் கார்டன் இருக்க.. முன்னே சிவப்பு சுண்ணக்கல் சாந்து கொண்டு கட்டப்பட்ட அரண்மனை விஸ்தாரமாக எழுந்து நின்றிருந்தது.

பணியாளர்கள் எல்லாரும் ஓடி வந்து, அவனுக்கு பணிந்து நிற்க, இவனோ, தன் மனைவியை அணைத்துப் பிடித்தவனாக,

“ஷீ இஸ் மை வைஃப்!! மிஸஸ். யாழினி யாதவ் மகாதேவன்!! உங்களுடைய எஜமானியம்மா!” என்று அறிமுகப்படுத்த, அவர்களின் கண்கள் மரியாதையுடனும், ஆவலுடனும் தன் எஜமானியம்மாவை ஆராய்ந்தது.

பின்பு எல்லாரையும் சுட்டிக் காட்டியவன், “இவங்க எல்லாம் நம்ம கெஸ்ட்ஸ் தான்.. இன்னும் வன் வீக்குக்கு இங்கே தான் இருப்பாங்க.. இவங்களுக்கு தேவையான சகலதையும்.. ஒரு குறை இல்லாமல் பார்த்துக்கணும்!!” என்று சொல்ல,

அவன் வாயால் இட்ட கட்டளையைத் தலைமேல் கொண்டு செய்யக் காத்திருந்தனர் அவர்கள்!!

மாணவர்களின் லக்கேஜ்களெல்லாம்.. அவர்களுக்கு என ஒதுக்கப்பட்ட அறைக்கு நகர, இவளும் தன் மேடிட்ட வயிற்றைத் தூக்கிக் கொண்டு உள்ளே நகர்ந்தாள்.

அரண்மனை!! .. தன் வாழ்நாளில் ஓர் நிஜ அரண்மனையில் அவள் பாதங்கள் பட்டது.

நாற்புறமும் சுவர்கள் கொண்டு.. நடுவிலே துளசி மாடம் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் பெரும்பாலான இந்திய வீடுகள் போலவே இருந்தாலும், இந்த வீடு பிரம்மாண்டமாக இருந்தது.

துளசி மாடத்துக்குப் பதிலாக, அங்கே இரு யானை சிலைகள் இருப்பதைக் கண்டு வியக்க,

இவனோ மனைவியின் வியப்பை அறிந்து கொண்டவனாக, அவள் காதோரம், “ஹஸ்தினாபுர்.. னா.. யானைகளின் பலம் பொருந்திய ஊர்னு அர்த்தம்… அதுக்காகத் தான்.. அந்த யானைகள் சிலை!!”என்று விளக்கம் கொடுத்தவன்,

மனைவி ரொம்ப களைப்பாக உணரக் கூடும் என்று சிந்தித்தவனாக, “வா நம்ம ரூமுக்கு போகலாம்… கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்!!”என்று அழைக்க, கணவனின் அழைப்பை தவறாகப் புரிந்து கொண்டவள்,

சீற்றம் கக்கும் விழிகளுடன், “நான் முன்னாடியே சொல்லிட்டேன் யாதவ்!.. நான் உன் கூட ஹனிமூனுக்கு வரலை.. எக்ஸ்ப்ளோரேஷன் தான்

வந்துருக்கேன். லெட் மீ டு மை ட்யூட்டி..நான் போய் என் ஸ்டூடண்ட்ஸ்ஸை பார்க்கணும் “என்று திரும்பியவள்,

கணவனுக்குப் புறமுதுகிட்டவளாக, மாணவர்கள் விரைந்த திசைப்பக்கம் விரைய,

தலைசிலுப்பிய படி, “சொன்னா கேட்கவே மாட்டேல்ல? சரி இரு.. நானும் உன் கூட வர்றேன்..” என்றவனாக, அவள் பின்னாடி போனான்.

அன்று மாலை..

அவனுக்கும், அவளுக்குமென ஒதுக்கப்பட்ட அறையில் துயின்றவள், துயில் களைந்து எழுந்த போது மாலை நான்கரை மணி ஆகியிருந்தது.

மனைவி துயில் களைந்தவளாக, கண்களைக் கசக்கிய வண்ணம் எழுந்ததைப் பார்த்தவன்,

அவளுக்காக டீ சகிதம் தயாராக இருந்தான்.!!

அழகான வேலைப்பாடு கொண்ட டீபோயில் சுடச்சுட டீ தயாராராக இருக்க, இவனோ முகம் மலர அவளை வரவேற்றவனாக,

“இங்கே நீ வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு.. எனக்குமே உன்னை இங்கே கூட்டி வரணும்னு ஆசை இருந்தது. ஆனால் நீயாகவே இங்கே வரணும்னு இருந்திருக்கு.. இட்ஸ் ஓல் ஃபேட்.”என்றவன்,

எழுந்து வாட்ரோப்பை நாடிச் சென்று, அவளுக்குப் புறமுதுகிட்டவனாக, ஆடை மாற்ற ஆரம்பித்தான்.

மஞ்சத்தை விட்டும் எழுந்தவளுக்கு, கணவன் குளித்திருப்பான் போலும் என்று தோன்றியது.

அவனது அலைஅலையான கேசத்தில் , நீர்த்துளிகள், மாலை மங்கும் சூரிய ஒளியில் பளபளக்க அது வேறு தனியழகைக் கொடுத்தது அவனது துண்ணிய கேளிருக்கு.

அதில் வேறு அவன் வாட்ரோப் பக்கம் போய் உடை மாற்றுவது புரிய, கணவனின் வனப்பான முதுகு பார்க்க முடியாமல், ஜன்னல் பக்கம் அவள் பார்வையை திருப்பியது தான் வினையாகப் போயிற்று!!

அங்கே… அந்த ஜன்னல் வழியாகத் தெரிந்தது அடர்ந்த காட்டுப் பகுதி!!

அரண்மனையின் எந்தவித தாழ்வார மதிலும் இல்லாது.. ஒரு பக்கம் அடர்ந்த காட்டுப்பகுதியாக இருப்பதைக் கண்டவள், அங்கே ஓர் உருவம் நின்றிருந்து அவளையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பதைக் கண்டாள் யாழினி.

முக்கியமாக அவள் கேட்க வேண்டிய கணவனின் சொற்கள், சாளரம் வழியாகத் தெரிந்த அந்த உருவத்தைக் கண்டதும், அவள் செவிகளை அடையாமல், காற்றோடு காற்றாக கலந்தது.

அந்த விழிகள் அவளை அழைப்பது போல இருக்க.. தானாகவே அறையை விட்டும் செல்ல எத்தனித்தது அவள் பாதங்கள்!!

அவனோ இன்னோரு டீஷேர்ட்டை அணிந்தவனாக, “ ‘இங்கே என்னைக் கூட்டி வரணும்னு ஆசைப்பட்டவன்.. அப்புறம் ஏன் என்னை போகக் கூடாதுன்னு சொல்லணும்?’ன்னு பார்க்குறியா?

உன் அகராதியில் தான் ‘புருஷன் சொல்லைக் கேட்கணும்’ னு ஒண்ணு இல்லவே இல்லையே..?

‘நான் ‘ரைட்’ னு சொன்னா.. நீ.. ‘லெப்ட்னு’ சொல்வ??.. அதான், உன்னை இங்கே வரவழைக்கணும்ன்றதுக்காக.. நான் உன்னை போகக் கூடாதுன்னு சொன்னேன்!அப்போ தானே கண்டிப்பா நீ போக அடம்பிடிப்பே? நான் நினைச்சது கரெக்ட்டா தான் இருக்கு !” என்றவன்,

தன் இருவர் வாழ்வையும் புரட்டிப் போடக் கூடிய, “அவன் யார்?” என்ற அடையாளத்தைச் சொல்ல நாடியவன்,

“.. ஜானு.. நான் யாருன்றதை மறைச்சுவைக்க விரும்பலை.. நான் தான்..!!” என்ற வண்ணமே மனைவியைப் பார்த்துத் திரும்பியவன்,

அங்கு அவள் இல்லாமல் வெறும் காற்றிருக்கக் கண்டு அதிர்ந்தான்.

"ஜானு.. ஜானுஊஊ??.." என்று அவன் அவ்வறையில் தன் மனைவியைத் தேட, அவனது மனைவியோ சாளரம் வழியாகத் தெரிந்த உருவத்தின் வசம் ஆட்பட்டவளாக,

அதைத் தேடி கானகத்தின் பக்கம் விரைந்திருந்தாள்.

அந்த உருவம்.. மாளிகையின் தோட்டமும், கானகமும் சந்திக்கும் எல்லையில் நின்றிருந்தது.

அது ஓர் ஐம்பது, ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆண்!! அணிந்திருந்த சட்டையும், லுங்கியும் ஆங்காங்கே கிழிந்து, அசுத்தமாகியிருக்க,

தலையிலும், தாடையிலும் எக்குத்தப்பாக வளர்ந்திருந்தது முடி!!

அந்த வயோதிபர் பார்ப்பதற்கு மனநிலை பிறழ்வானவர் போல இருக்க, அவரை நாடி.. ஓர் கைப்பொம்மை போல நகர்ந்து வந்திருந்தார் அவர்.

அவளைக் கண்டதும், மனநிலை பிறழ்வான அந்த வயோதிகரின் விழியிலே கடவுளைப் பார்த்தது போல ஓர் பரவசம்!!

கண்களெல்லாம் சிவந்து கலங்கி கண்ணீர் ஊற்றெடுக்க, அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்திருந்தவரின் கண்கள், அவள் மேடிட்ட வயிற்றில் படர்ந்தது.

என்ன ஆச்சரியம்? அடுத்த நொடி இதயப்பக்கத்தில் கை வைத்து தடாலென தரையில் மண்டியிட்டமர்ந்தார் அவர்.

கிட்டத்தட்ட தன் ராணிக்கு மரியாதை செலுத்தும் உண்மை விசுவாசியின் செயல் போல இருந்தது அவரது செய்கை.

அவர் தடாலென மண்டியிட்டமர்ந்ததில், அச்சத்தில் இரண்டெட்டு பின்வாங்கியவள், கல் தடுக்கி விழப் போக, அவளைத் தாங்கிப் பிடித்தது

அவளுக்குப் பரிச்சயமான அவளது கொண்டானின் வலிமையான கைகள்!!

அவரைக் கண்ட அச்சத்தில், கணவனின் மாரோடு மார் அவள் ஒட்டி நிற்க, மனைவி பயந்திருக்கிறாள் என்பது புரிய ஆதரவாக மனைவியை அணைத்துக் கொண்டான் யாதவன்!!

அவனோடு, தன் மனையாளைத் தேட வந்த, பணியாளர்களுக்கு, கண்களால் அவன் உத்தரவுப் போட்டதும் தான் தாமதம், உடனே ஓடிச் சென்று அந்த மனநிலை பிறழ்வானவனைப் பிடித்து,

அங்கிருந்தும் அப்புறப்படுத்த முயன்றனர்.

மனைவி நடுங்குவதைக் கண்டு “ஒண்ணுமில்லை ஜானு..ரிலாக்ஸ்” என்று அவளைத் தேற்ற முற்பட்ட கணம்,

யாதவனை அங்கே கண்டதும்.. அந்த மனநிலை பிறழ்வானவரின் முகம் அப்படியே மாறியது. யாழினியைக் கண்டதால் விளைந்த பிரகாசம் மங்கத் தொடங்க.. இருண்ட முகத்துடன்,

கண்களை அகல விரித்து,

இடிஇடிக்கச் செய்யும் கிடுகிடு குரலில், ஹிந்தியில் ஏதேதோ சொன்னார் அவர்.

கறை படிந்த பற்கள் காட்டி, கழுத்து நரம்பு புடைத்தெரிய கோபத்துடன்,

“ச்சலே ஜ்ஜாவ், தும் யஹாசே சலே ஜாவ்.. யே தும்ஹாரா குத் கா ஜகா சமஜ்கே ரக்கே ஹோ க்யா?..

ஜப் தக் தும் அப்னி பீவீ கே தில் நஹி ஜீத் லேத்தே, யஹ் ஜகா கா ஏக் முட்டி பீ தும்ஹாரா நஹி ஹோ பாயேகா…

தும் அப்னா ப்யார் உஸ்கோ ஜதானே கே லியே உசே யஹா லாயே தே, பர் அகர் வோ தும்ஹாரா ப்யார் கே பாரே மே யா தும்ஹாரே பாரே மே ஜான் லேகி தோ தும்ஹாரா ஜான் கா கத்ரா ஹை….

ஜித்னா ஜல்தி ஹோ சகே உத்னா ஜல்தி சலே ஜாவோ..”என்று ஹிந்தியில் சொல்ல, யாதவனின் முகம் வெளிறிப் போயிற்று.

மனநிலை பிறழ்வானவர் சொன்ன தமிழாக்கம் இதோ!!

“ப்போயிடு.. இங்கே இருந்து ப்போயிடு.. இது உனக்கு சொந்தமான இடம்னு ந்நினைச்சிட்டிருக்கியாஆஆ?

உன் ம்மனைவியோட இஇதயம் உனக்கு சொந்தமாகும் வரை.. உனக்கு ஒரு க்கைப்பிடி ம்மண்ணு கூட சொந்தம் க்கிடையாது ..

உன் க்காதலை உணர்த்தணும்னு ந்நீ அவளை கூட்டி வந்த.. ஆனால் உன் க்காதலை அவள் உணர்ந்தாஆஆல்.. ந்நீ ய்யாருன்னு அவள் உணர்ந்தாஆஆல்.. உன் உயிருக்கு தான் ஆபத்து..

ப்போயிடு.. இங்கே இருந்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் ப்போயிடு..!!!”என்று எச்சரிக்கும் தொனியில் கூற,

யாழினிக்கோ அவர் என்ன சொல்கிறார் என்று தெரியவில்லையாயினும்.. இதயத்துடிப்பு ஏகத்துக்கும் எகிறவாரம்பித்தது.

தன் பணியாளர்களுக்கு அவரை விட்டு விடுமாறு பணித்தவன், தன் பர்ஸில் இருந்து.. சில இந்திய ரூபா நோட்டுக்களை ஒரு பணியாளனிடம் கொடுத்தவன்,

“இவரைக் கூட்டிப் போய்..ட்ரெஸ் வாங்கிக் கொடுத்து.. நல்ல ஹோட்டல்ல சாப்பாடு வாங்கி கொடுங்க” என்று அவர்களை அனுப்பி வைத்தவன்,

மனைவியை அழைத்துக் கொண்டு மீண்டும் அரண்மனை நோக்கி நடந்தான்.

“அவர் என்ன சொன்னாரு..?”- கணவன் முகம் இருண்டிருப்பதைப் பார்த்துக் கேட்டாள் யாழினி.

நடந்து அறியாத மனைவியிடம், இன்ஸ்டன்ட்டாய் ஓர் கேலி சிரிப்பை வரவழைத்த வண்ணம், அவளைத் தோளோடு சேர்த்து அணைத்து,

“சூப்பர் ஃபிகர் உன் பொண்டாட்டியா வந்திருக்கா.. நீ கொடுத்து வைச்சவன்டா அனுபவி” ன்னு சொன்னாப்ள!!! ..”என்று சொல்ல, இம்முறை இடுங்கியது யாழினியின் விழிகள்.

விளையாட்டாக அவன் விலாவில் குத்தியவள், “அது அந்த லூஸூ சொன்ன மாதிரி தெரியலையே??.. இந்த லூஸூ.. சொன்ன மாதிரில இருக்கு?? ..”என்று எடக்குமடக்காகக் கேட்க, மனைவியின் கேலியில் பழைய துடிப்பு வந்தது கணவன் முகத்தில்!

அப்போதும் அவளில் இருந்து கையை எடுக்காமல், காதோடு குனிந்து, ஹஸ்கி குரலில், “பார்த்தியா.. நான் உன்மேல லூஸா இருக்குறது நிஜ லூஸூக்கு கூட தெரியுது.. ஆனால் லூசு மாதிரி நடிக்குற உனக்கு தான் தெரியலை..!”என்று சொல்ல, குபுக்கென போலிச் சீற்றம் பொங்கியது அவளுக்கு!!

“ய்யாரு.. நான் லூசு மாதிரி நடிக்குறேனா.??.”- தன்னைத் தானே சுட்டிக் காட்டி பற்களைக் கடித்துக் கொண்டு அவள் கேட்க, இவனோ கூலாக,

“சரி நீ நடிக்கலை.. லூசே தான் போதுமா?..”என்றவன்,மனைவி முறைப்பது கண்டு வாய் விட்டு நகைத்தவனாக,

“ஹஹஹா··· ரொம்ப நாளா சாப்பிடலை.. பசிக்குதுன்னு சொன்னான்.. அதான் சாப்பிட காசு கொடுத்தேன் ஜானு..?? ”என்று சொன்னவனாக, அரண்மனைக்குள் நுழைய,

கணவனை நம்பாதவளாக, “அவர் ஃபேஸ் ரியேக்ஷன் பார்த்தா சாப்பிட காசு கேட்ட மாதிரி தோணலையே..?”என்று சொல்ல, யாதவனின் முகத்தில் சட்டெனக் கடுமை பரவியது.

“அப்போ நான் என்ன பொய் சொய்யா சொல்றேன்..?”என்று அழுந்த மூடிய அதரங்கள் திறந்து சொன்னவன், ஏதும் பேசாமல் வேகமாக நடந்தான்.

அத்தியாயம் 17

அடுத்த நாள் காலை.. தன் உடலை இறுக்கிப் பிடித்திருந்த ஸ்லிம்ஃபிட் ஷேர்ட்டின் கஃப் பட்டன்களைப் போட்டவாறு, ரேம்ப் வாக் நடந்து செல்லும் மாடலைப் போல.. கம்பீர நடை நடந்தவனாக, தன் அறைக்குள் நுழைந்தான் யாதவ் மகாதேவன்.

மனைவியை அருகிலேயே நின்று கவனித்துக் கொள்கிறோம் என்பதுவோ,

‘ஹஸ்தினாபுர்- அவன் கோட்டை என்பதுவோ’ ?? எதுவோ ஒன்று யாதவனின் உற்சாகத்தை இரட்டிப்பாக்கியது.

உற்சாகத்தின் விளைவாக, இதழில் ஓர் வசீகரப் புன்னகைத் தவழ, “ஜ்ஜானுஊஊ.. ஜா..”என்றபடி உள்ளே வந்தவன் அழைப்பு, அவன் தொண்டைக்குழியோடு நின்று போனது.

கூடவே அவனது அழுத்தமான காலடி எட்டுக்களும்.

பேச்சு மூச்சற்றவனாக, தன் கண்களுக்கு எதிரே மோகன சிலை போல நின்றிருந்த.. மனைவியை விழியெடுக்க முடியாமல் பார்த்திருந்தான் யாதவன்.

இத்தனைக்கும் அவள் அவனை நோக்கித் திரும்பியிருக்கவில்லை.

வெண்ணெயில் குழைத்துக் குழைத்து செய்தாற் போன்றிருக்கும் அவளது மேனியின் புறமுதுகு மட்டுமே அவன் பக்கம் காட்டினாள் தலைவி.

ஆனால் மனைவி முன்னிருந்த கண்ணாடி, அவள் விம்பத்தை அவனுக்கு காட்ட, அவன் ராஜ கம்பீரத்துடன் நின்றிருக்கும் விம்பத்தை அவளுக்குக் காட்ட மறுத்துக் கொண்டிருந்தது.

யாழினி.. இப்போது தான் குளித்து விட்டு வந்திருப்பாள் போலும்.

அவளது மேனியை மறைத்தும், மறைக்காமலும் இருந்த ஒரே ஒரு அங்கி.. டவல் மாத்திரமே!!

‘ஹேர் இன் பன்’ ஹேர்ஸ்டைல் போட்டு.. தலைக்கு தண்ணீர் படாமல் என்ன தான் காத்தும், அவள் நெற்றியோரம் அமிழ்ந்து படிந்திருந்தது ஈர முடி.

ஈர முடியிலிருந்து சரேலென வழிந்த ஓர் ஒற்றைத் துளி நீர்.. அவள் கழுத்தில் விழுந்து.. நான்கைந்து துளிகளாக சிதறி.. அவளுடைய பெண்மைத் தாக்குக்குள் போய் விர்ரென்று தஞ்சம் புகுந்து கொண்டன.

அதை தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அவளது மன்னவனின் கழுகுக் கண்கள்.. காதல் கண்களாக மிளிரவாரம்பித்தது.

அழகிய செந்நிறம் கொண்ட மென் தோளையுடையாள்.. தன் ஷோல்டர்களுக்கு பாடிலோஷன் பூசிக் கொண்டிருக்க,

அந்த அறை முழுவதும் எழுந்து பரவிக் கொண்டிருந்த ரோஜா இதழ்களின் பன்னீர் மனம். அதுவும் யாதவனின் கிறக்கத்தை இன்னும் கொஞ்சம் கூட்டலானது.

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

மெல்ல அடி மேல் அடி வைத்து வந்த அந்த நவீனக் கண்ணன், தன் தேவியின் இடையூடு கையிட்டுத் தழுவி.. தன் வலிய மேனியோடு இழுத்துக் கொண்டான்.

பெண்ணவளோ அப்போது தான் கண்ணாடியில் தலைவன் முகம் பார்த்து அதிர்ந்து நிற்க, சற்றும் எதிர்பாராத வகையில், பின்னாலிருந்த படியே அவளது தோள் வளைவில் இதழ் பதித்தான் ஷத்திரியன்!!

ஏற்கனவே ஜில்லென்று இருந்தவளுக்கு.. கணவனின் இதழ்கள் வேறு சூட்டைக் கொடுக்கவே… ஜிவ்வென்று உணர்வுகள் இறக்கை கட்டிப் பறக்கலானது !!

அவனது முரட்டு அதரங்கள் தோள் வளைவு, கழுத்து வளைவு தாண்டி.. கன்னத்துக்கு இடம்பெயர கூசி நெளிந்து போய் நின்றாள் சுரூபினிப் பெண்!!

அவனோ தனக்கே தனக்கென்று பிரம்மன் படைத்த, அந்த அழகியின் காதில்.. ஹஸ்கி குரலில்,

"அதேஹ் ஜானுஹ்!! பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னாடி, என் தூக்கத்தைக் கெடுத்த என் ஜானுஹ்!!.. அழகாலே என் மனசைக் கெடுத்த ஜானுஹ்!!"என்று சொல்ல,

கணவனின் தீண்டலில் கண் மூடி ஆழ்ந்த மயக்கத்துக்கு சென்றிருந்தவள் சிந்தை தெளிந்தாள்!!

அவன் குரலைக் கேட்டு வெடுக்கென்று திரும்பியவளின் உடலை விட்டும் மெல்ல நழுவத் தயாரானதோ டவலும்?

அது பாட்டுக்கு அவிழ்ந்து விழ ஆயத்தமாக, பதற்றத்துடன் டவலைப் பற்றிப் பிடித்துக் கொண்டாள் அவள்.

அவளது மேடிட்ட வயிறு காரணமாக, கணவனுக்கும், அவளுக்கும் ஓர் இடைவெளி விழ, அவன் கண்களுக்கு ஓர வஞ்சனை காட்டாமல், வெட்ட வெளிச்சமானது அவளுடைய செந்தனங்கள்!!

அவன் கண்கள் எதிரே நிற்கும் அழகியை, சிறிதும் லஜ்ஜையேயின்றி ஏற இறங்கப் பார்த்தது.

அவன் கண்களிலும் அதிமிதமான காதல் மயக்கம் குடிகொள்ள, அவனுடைய வலிய கரம் இடையூடு பதிந்து வீணை மீட்ட, மருண்ட விழிகளுடன் கணவனைப் பார்த்தாள் மனைவி.

“எ.. என்ன..? எதுக்கு.. நீ.. இப்..இப்போ.. உள்ளே வந்த?”-கணவனின் அருகாமையில் தந்தியடித்தது அவளது சிவந்த இதழ்கள்.

அந்த இதழ்களை கிறக்கத்துடன் பார்த்துக் கொண்டே அவனும் கெத்தான குரலில்,

“இது என் ரூம்!!.. நான் வரக்கூடாதா?”என்று புருவமுயர்த்தி, விஷமச்சிரிப்பு சிரித்தான் கள்வன்!!

அவனது கள்ளச்சிரிப்பில் கோபம் உண்டாக, அவனது முன்கோபக் குயிலும்,

“நினைச்சேன்.. இப்படி ஏதாவது ஏடாகூடமாகப் பண்ணுவேன்னு நினைச்சேன்.. வெளியே போயிரு யாதவ்!! ..”என்று உள்ளடங்கிப் போன குரலுடன் எச்சரித்தாள் யாழினி!

அவன் இதழ்களை தெனாவட்டுடன் இன்னும் கொஞ்சம் நெருங்கியவன், ‘‘முடியாது.. இப்படியொரு அழகான பொண்டாட்டி எதிரே இருக்க.. சும்மா நின்னுட்டு இருக்க நான் என்ன பொட்டையா? எனக்கும் ஃபீலிங்க்ஸ் இருக்குமா??’’ என்று சொன்னவனின் கைகளில் ஒன்று மேலெழுந்து,

அவளுடைய கீழுதட்டை வருடவாரம்பித்தது.

அவளது வரியோடிய உதடுகளில்.. இவனது விரல்கள் ஓட.. பெண்ணவளின் உள்ளே பற்றியெரியத் தயாரானது தாபத் தீ!!

உணர்ச்சிகளின் மேலீட்டில், சட்டென அவன் கைப்பிடித்து அவன் வருடலைத் தடுத்தவள், ‘‘வேணாம் யாதவ்.. எனக்குப் பிடிக்கலை..!!’’என்றாள்.

அவனோ, ஒன்றுமே தெரியாத அப்பாவி போல, முகத்தை வைத்துக் கொண்டு, ‘‘எனக்குப் பிடிச்சிருக்கே..?’’ என்றவன்,

அச்சத்தில் துடிதுடித்தபடி நின்றிருந்த அதரங்களைக் குனிந்து, அதிரடியாகக் கவ்விக் கொண்டான்!!

அவளுக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சி அட் அ டைமில் பறப்பது போல படபடவென்று பதற்றம் தொற்றிக் கொள்ளவாரம்பித்தது.

அவள் விழிகளோ அந்த அதிரடியில் அகல விரிந்தன; இவன் விழிகளோ கள் அருந்தும் குடிகாரனின் விழிகள் போல.. கண் மூடி சுகத்தில் திளைத்திருந்தன.

அவள் கைகள்.. அவன் வலிய மாரில் கை வைத்து.. அவனை தள்ளி விட முனைய, தலைவனின் கைகள்.. அவளை இன்னும் இன்னும் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டன.

அவன் நாசியில் பாடிலோஷனின் ரோஜா வாசம்.. இவள் நாசியிலோ.. கணவனின் வியர்வையோடு இணைந்து வரும் பர்ஃபியூம் வாசம்!!

மெல்லினமும், வல்லினமும் புணர்வது இலக்கணமாயின்.. அங்கே நடந்தேறிக்

கொண்டிருந்ததுவும் ஓர் இலக்கணமே!! அது காதல் இலக்கணம்!!

அவளது இதழ்களில் சுரந்த ஒட்டு மொத்த தேனையும், பலநாள் பசியிலிருந்தவனுக்கு போஜனம் கிடைத்தாற் போன்று.. மிச்சம் விடாமல் சுவைத்து அருந்தினான் மன்னவன்!!

வரண்டது தலைவியின் இதழ்கள்!! அங்கணமும் கூட நிற்கவில்லை அவனது முத்த வேட்கையின் வேகம்!!

யாழினியோ.. மூச்செடுக்க சிரமப்பட்டவளாக.. அவனது இதழ்கள் சிறையெடுப்பிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ள, அவள் போராடி தோற்ற வேளை,

விழியோரம் சட்டென துளிர்த்தது விழிநீர்!!

மனைவியின் கண்ணீரில், தாபத் தீ அணைய, சட்டெனத் தள்ளி நிறுத்தியவன்.. கவலையும், பதற்றமும் ஒருங்கே தோன்ற,

அவளது மதிமுகத்தை ஏறிட்டு, “எ.. என்னாச்சு? வலிச்சிருச்சா?”என்று கேட்டான்.

நில்லாமல் தொடர்ந்து கொண்டே இருந்தது ஜானுவின் கண்ணீர்!

அழுகை அவளது விழித்திரையை மறைக்க, தேம்பியவளாக, “இதே மாதிரி… என்னை.. அத்துமீறித் தொட்டதுனால தான்.. இந்..இந்த குழந்தையும் வ.. வந்ததோன்னு தோணுது..ய்.. யாதவ்!!”என்றதும்,

அவன் நெஞ்சில் சுருக்கென்று ஆணி தைத்தாற் போன்ற ஓர் வலி எழுந்தது.

வலி நிறைந்த விழிகள், சட்டென ரௌத்திரமான விழிகளாக மாற, அவள் கைச்சந்தை அழுத்தமாகப் பற்றிக் கொண்டவன், கேட்டான்,

“ஜானு… என்னைப் பார்த்தா.. ரேப் பண்றவன் மாதிரியாஆஆ இருக்கு? சொல்லுஊஊ!!.. உன் சம்மதம் இல்லாமல்.. உன்னை ரேப் பண்ணி தான்..

இந்தக் குகுழந்தையை உனக்குக் க்கொடுத்தேன்னு நினைக்குறீயாஆ??..." என்று.

அவனது அழுத்தத்தில் கைகள் வலிக்க கண்ணீர் அதிகமானது அவளுக்கு. வலியை சுகிக்க கீழுதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள் பெண்!!

அவள் வலி கண்டு, சட்டென அவளை விடுவித்தது அவன் கைகள். அவள் வெண்மையான கைச்சந்தில் சிவந்த தடமாகப் பதிந்தது அவன் கைகள்.

வார்த்தைகள் இலேசாகத் திக்க, "நிஜ.. நிஜமாவே அன்னைக்கு நடந்தது எதுவுமே ஞாபகம் இல்லையா?"என்று கேட்டான் அவளது மன்னன்!

"ம்ஹூஹூம்…" - சின்ன விம்மலுடன் மறுப்பாகத் தலையாட்டினாள் மனைவி!!!

அன்று நடந்ததை எப்படி மறந்தாள்?? காதலும், ஆசையும் ஒன்றாக முயங்க.. அவர்களுக்குள் முகிழ்த்த காதலை அவளால் எப்படித் தான் மறந்திருக்கவும் முடியும்!

அகல கால் விரித்து நின்று, இடுப்பில் கை வைத்து, பெருமூச்சு விட்டவாறே தலை கோதிக் கொண்டவன்,

அவளை நோக்கி ஒரெட்டு எடுத்து வைத்து வந்தான்.

அவளோ அச்சத்துடன் பின்வாங்க, அதை மதியாது அவளை நாடி வந்து, தாலியோடு தொங்கும் காதலை, தன் ஒற்றை சுட்டு விரலால் எடுத்துக்காட்டி,

“ரேப் பண்றவன்··· இந்த மாலையைத் தந்துட்டு தான் ரேப் பண்ணியிருப்பான்னு நினைக்குறியாஆஆ?

அது தான் ஆரம்பத்தில் இருந்தே··· என் ம்மாலை உன் க்கழுத்துக்கு வ்வந்ததே.. நீயும், நானும் சேர்ந்ததுக்கு சாட்சி தான்னு சொல்றேன்ல? யோசிக்க மாட்டீயாஆஆ? ...?”என்று கத்திக் கேட்க, தூக்கிவாரிப் போட்டது அவள் மேனி!

அவள் கண்கள், “யா” வடிவ பெண்டன் உள்ள மாலையில் நிலைத்தது. இந்த மாலை இவன் தந்ததாக நினைவே இல்லையே??

என்ன யோசித்தும், அவன் பற்றிய நினைவுகள் வராது போக, இயலாமை மிகுந்த குரலில்,

“இல்லை யாதவ்.. என்னாலே எதையும் ஞாபகப்படுத்திக்க முடியலை! ..இந்தக் குழந்தை.. உனக்கும், எனக்கும் பாலமா இருக்குற இந்தக் குழந்தை.. எப்படி வந்ததுன்னே எனக்குத் தெரியலை…

ஏதோ கனவுல நடக்குறது போல இருக்கு.. ஒரு சமயம்.. உன்னை எனக்கு பிடிக்கலை..

நீ என் பக்கத்துல வந்தாலே வெறுப்பா இருக்கு.. இன்னோர் சமயம் .. நீ எப்போவுமே என் பக்கத்துல இருக்கணும் போல இருக்கு.. நீ மட்டும் தான் என் எதிர்காலம்னு தோணுது.. இரண்டு உணர்வுகளுக்கு நடுவில் உன்னை ஏத்துக்கவும் முடியாமல்.. ஒதுக்கவும் முடியாமல்.. சிக்கித் தவிச்சிட்டிருக்கேன் யாதவ்” என்று சொன்னவள்,

அவனை வெள்ளந்தியாகப் பார்வை பார்த்து வைக்க, அவனுக்கு வலித்தது.

அவளது விழிகளையே வெறிக்க வெறிக்கப் பார்த்தவன், ‘‘ஒருத்தருடைய காதல் நினைவு மறந்து போனால் ஏற்படுற வலியை நான் இப்போ உணர்றேன்..’’ என்று ஹஸ்கி குரலில் சொன்னவன்,

தன் மணிப்பர்ஸிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து, அவள் கையில் திணித்து, உறுதியான குரலில், ‘‘இந்த போட்டோ .. உனக்குத் தேவையான பதிலைக் கொடுக்கும்.’’என்றவன், அங்கிருந்து நகர்ந்தான்.

அவளோ ஒரு கையால் அவிழப் போன டவலையும், மறுகையால், அவன் திணித்து விட்டுப் போன புகைப்படத்தையும் வைத்துக் கொண்டு, புரியாத விழிகளுடன் நின்றிருந்தாள் .

அந்தப் புகைப்படத்தைப் பார்த்தவளுக்கு, ஒன்றுமே காட்சியில் பதியவில்லை. தன் முத்து மூரல்கள் காட்டி சிரித்துக் கொண்டிருந்த அவன் மதிமுகத்தைத் தவிர!!

ஹஸ்தினாபுர், சிட்டி சென்டர் வளகாத்திலிருந்து இரண்டரை கிலோமீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் கர்ண கோவில்!!

உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்த வெயிலில், யாழினியின் வெண்மையான சருமம், சிவந்த நிறம் கொள்ள,

கண்களில் ஓர் கூலர்ஸுடனும், தளர்வான உடையான ஓர் மேக்ஸியுடனும், தலையில் ஒரு சம்மர் ஹேட்டுடனும் நின்றிருந்தாள் யாழினி.

அவளோடு வந்திருந்த, தொல்பொருளியல் பற்றிப் பயிலும் வருங்கால தொல்பொருளியலாளர்களுக்கு, தன்னால் இயன்ற விளக்கங்களைத் தர நாடியவள், அவள் பாட்டுக்கு பேசிக் கொண்டேயிருக்க,

அவளைத் தூரத்திலிருந்து, கறுப்புக் கண்ணாடியின் பின்னிருந்து உணர்ச்சி துடைத்த பார்வை பார்த்துக் கொண்டிருந்தன யாதவனின் இலேசர் கண்கள்!!

இதை அறியாத அவளோ, தன் மாணாக்கர்களை நோக்கி, “இப்போ நீங்க நின்னுட்டு இருக்குற இடம்.. மாபெரும் காவியமான மகாபாரதத்தின் ஹீரோஸ் பாதம் பட்ட இடம்னு கூட சொல்லலாம்.. ஹஸ்தினாபுர்.. கௌரவர்களின் தலை நகரம்…

“ஹஸ்தினாபுர்” அப்படின்ற இந்த இடத்தோட வரலாறு.. எடுத்துப் பார்த்தோம்னா.. பௌரவ வம்சம்.. அல்லது புரூ வம்ச சக்கரவர்த்தி… பரத்’ துடைய காலத்தில் இருந்து.. ஹஸ்தினாபுர் னு ஒரு பிரம்மாண்ட நகரம் இருந்ததுக்கான சான்றுகள் இருக்கு” என்று மனைவி பேசிக் கொண்டே போக,

அந்த விஷயத்தைப் பற்றிப் பேசும் போது.. அவள் முகத்தில் ஏதேனும் மாறுதல்கள் உண்டா என்ன? என்பது போல உன்னிப்பாகப் பார்த்து வைத்தான் யாதவ்..

ம்ஹூஹூம்.அவன் எண்ணியது போல எந்தவிதமான மாற்றங்களும் இல்லாது போகவே,

“எவ்வளவோ சென்சிடிவ் மேட்டரை.. இப்படி அஸால்ட்டா சொல்றாளே?”என்று அவன் மனதுக்குள் எண்ண,

அவன் சொற்கள் கேட்டதுவோ அந்தச் சுரூபினிப் பெண்ணின் காதுகளுக்கும்!!

சட்டென அவனை நோக்கித் திரும்பியவள், இரு விழிகள் உயர்த்தி, கைளால், ‘என்ன?’என்பது போல கேட்க,

இவன் தலையோ, ‘ஒண்ணுமில்லை’ என்பது போல மெல்ல ஆடியது. ஆனால் அவன் பார்வை அவளை நில்லாமல் துளைத்ததை மட்டும் அவளால் நண்குணர முடியுமானதாக இருந்தது.

அதற்கிடையில் மீரட்டின் தொல்பொருளியலாளர், “மிஸ்டர். லால்” லும் வந்து விடவே, மேலதிக விவரங்கள் அவர் தர, கர்ண கோவில் பற்றிய விபரங்கள் ஆகியவற்றோடு நகர்ந்தது காலம்!!

தேவையானவற்றை குறிப்பும், மிஸ்டர். லால் சொன்ன தகவலை ரெகார்ட்டும் செய்து கொண்ட

மாணவர்கள்… சிறிது நேரத்தில் எல்லாம் செல்ஃபீ எடுப்பதில் பிஸியாகி விட,

மனைவியை நோக்கி அழுத்தமான காலடி எடுத்து வைத்து வந்தான் யாதவ் மகாதேவன்!!

தன் பேன்ட் பாக்கெட்டுக்குள் கைகளை இட்ட வண்ணம், வெறித்த பார்வையுடன் தன்னை நோக்கி நடந்து வரும் கணவனின் நடையில் குளிர் பிறந்தது அவளுக்கு.

அவனிடம் எதுவோ ஒன்று சரியில்லை என்று தோன்றினாலும் கூட, அது என்னது என்று தான் புரியவில்லை அவளுக்கு!.

யாதவனைக் கண்டதும், வாயெல்லாம் பல்லாகிப் போனது, யாழினியுடன் சீரியஸ் டிஸ்கஷனில் இருந்த மிஸ்டர். லாலுக்கு.

மரியாதையும், சந்தோஷமும் போட்டி போட யாதவனுடன் கைகுலுக்கிக் கொண்டவன், ‘‘ஹலோ மிஸ்டர். யாதவ் மகாதேவன்.. வெல்கம் பேக் டு

ஹஸ்தினாபுர்..''என்று யாதவனை, மற்றவன் வரவேற்க அதிர்ந்து விழித்தாள் பெண்!!

மிஸ்டர். லால்.. என்ன தான் ஹிந்திக்காரனாக இருந்தாலும், சென்னையில் படித்த காரணத்தால் அவனால் நன்றாகவே தமிழ் பேச முடியுமானதாகவே இரந்தது.

கணவனும் புன்னகைத்துக் கொண்டே, ‘‘ஹலோ லால்.. ஹவ் ஆர் யூ..? வீட்டில எல்லாரும் சௌக்கியமா?''என்று கேட்க, கணவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள் புரியாத விழிகளுடன்.

‘‘இவரை முன்னாடியே தெரியுமா?..''-கணவனின் காதுக்குள் கிசுகிசுத்தாள் யாழினி.

பாம்பு காதுகள் கொண்ட லாலுக்கும், அவள் கிசுகிசுத்தது புரிந்து விடவே, நமுட்டுச் சிரிப்புடன், ‘‘என்ன இப்படி கேட்டுட்டீங்க? உங்க ஹஸ்பண்டை தெரியாதவங்க.. நம்ம மீரட் ஆர்க்கியோலஜி டிபார்ட்மென்ட்லேயே இருக்க மாட்டாங்கன்னா பார்த்துக்குங்க…

இன்னைக்கு ஹஸ்தினாபுர் மியூசியத்திற்கு.. பல புராதனப் பொருட்கள் இருக்குண்ணா.. அதுக்கு காரணம்.. இவர் தாத்தா, கொள்ளுத் தாத்தா தந்த அன்பளிப்புக்கள் தான்.. இவர் அப்பாவும், இவரும் கூட நிறைய அன்பளிப்பு பண்ணியிருக்காங்க…” என்று சொல்ல, கணவனை வியந்து பார்த்தாள் மனைவி.

‘ஆச்சரியமேயில்லை தான். அவன் தான்… கொழும்பு வீட்டில் கூட.. ஓர் குட்டி அருங்காட்சியகமே வைத்திருக்கிறானே.. அவளைப் போன்ற ஓர் மங்கை சித்திரம் கூட கண்டாளே? ஆக, இவன் மூதாதையர்கள்… அருங்காட்சியகத்துக்கு அன்பளித்திருப்பதில் ஆச்சரியமே இல்லை என்று தான் தோன்றியது.

திரு. லால் அவர்கள் இன்னும் இன்னும் யாதவனின் புகழ் புராணத்தைப் பாடியிருக்கக் கூடும், இடையில் வந்த அலைபேசி அழைப்பில், அவன் அவர்களை விட்டும் நீங்கிச் செல்லும் படியாகவே,

கணவனை நோக்கித் திரும்பியவள், "ஏன்.. தூரத்துல நின்னு குறுகுறுன்னு பார்க்குற?"என்று கேட்டாள்.

கண்களில் இருந்த கூலர்ஸைக் கழற்றியவன், அவள் விழிகளை ஆழமாக நோக்கிய வண்ணம், "எதையாவது மிஸ் பண்ணிட்டியா?" என்று கேட்டான்.

அவளோ சட்டென தன் ஹேண்ட்பேக்கைப் பிரித்து துலாவி, அதில் இருந்த அவளுடைய மணிப்பர்ஸ், பாஸ்போர்ட், ஃபோன் என எல்லாமும் ஒன்று விடாமல் இருக்கிறதா என்று சரிபார்த்துக் கொண்டவளாக நிமிர்ந்தவள்,

"இல்லையே?"என்றாள்.

அவன் பார்வையின் தீவிரம் இன்னும் கூடியது.

அவனை குரல் ஆழ்ந்து ஒலிக்க, "அப்போ நீ.. எதையும் மிஸ் பண்ணலை.. அப்படித்தானே?..."என்று கேட்க, மனையாளின் விழிகளோ சுருங்கி விரிந்தது.

அவன் சும்மா எதையாவது சொல்லி நேரத்தைக் கடத்துவது போலத் தோன்ற, சுரீர் என்று கோபம் பொங்க,

“விளையாடாதே யாதவ்.. எனக்கு வேலை இருக்கு..!!” என்று சொல்ல,

கழுத்து நரம்புகள் புடைத்து வெளித் தெரிய, பற்களைக் கடித்துக் கொண்டு,

“என்ன ந்நான் வ்விளையாடுறேனாஆ?? அப்படிய்யே விட்டேன்னா.. ஒண்ணு..”என்றவாறுஅவளை அறைய கையையும் உயர்த்தியிருந்தான் அவன்.

அது சற்றே நிழல் தரக்கூடிய மரம் நிறைந்த ஒரு பகுதி என்பதால்.. இவர்களுன் ஊடல்.. பெரிதாக யார்க்கண்ணுக்கும் உறுத்தாமல் போனது.

அவளோ அச்சத்தில் மருண்டவளாக நின்றிருக்க, சட்டென தன் கையை உள்ளிழுத்துக் கொண்டவன், அவளை நோக்கி,

“உன்னோட மோதிரம் எங்கே..?”என்று கேட்டான்.

அவள் கண்கள் அனிச்சை செயல் போல கையை நோக்கி பார்க்க, அங்கே வெறும் விரல் மட்டும் இருக்கக் கண்டு அதிர்ந்தவள், இன்னும் கொஞ்சம் மலங்க மலங்க விழித்தவளாக,

“ரிங்.. ரிங்க்..???”என்று நா தந்தியடிக்க, அவள் ஏதோ யோசனை வயப்பட்டவளாக கூற, அவன் இன்னும் கொஞ்சம் எகிறினான் அவளிடம்!

“ந்நான் உனக்கு ப்போட்ட மோதிரம் ப்பத்தி உனக்கு ஒரு துளியும் க்கவலை இல்லைல? பாத்ரூம் போனப்போ வாஷ்பேஸின் பக்கத்துல கிடந்தது.. நீ வீட்டை விட்டு வரும் போதிருந்தே.. இது உன் கையில் இல்லை..!! இப்போ வரை ரிங்க் பத்திய நினைவே இல்லாமல் இருக்கிறேல்ல??

இனியொருவாட்டி இந்த மோதிரம் தொலைஞ்சது.. அப்புறம் நீ த்தொலைஞ்ச..!!”என்று கத்தியவன், அவள் உள்ளங்கையில் மோதிரம் திணித்து விட்டுச் செல்ல,

இதயம் கிடுகிடுங்க அந்த மோதிரத்தையே பார்த்திருந்தாள் அவள்.

நூற்றியெண்பது கோடி ரூபா பெறுமதியான கணையாழிக்காக அவன் திட்டல் ஞாயமானது தான் என்று தோன்றியதே ஒழிய அந்தக் கணையாழி அவள் வாழ்வில் எவ்வளவு முக்கியமானது என்று அவள் உணராமல் போனது தான் அவன் துரதிர்ஷ்டம்!!

அன்றிரவு,

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்த வேளை, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவளை யாரோ அதட்டி எழுப்பும் ஒலி கேட்டது.

அழைத்த குரல் வேறு, எங்கோ கிணற்றில் இருந்து ஒலிப்பது போல இருக்க, மெல்ல மெல்ல துயில் களைந்தவளுக்கு அழைத்த குரல், அது தன் கணவனுடையது என்பது புரிந்தது.

“ஜா.. ஜானு..”- அவள் கண்களை கசக்கிக் கொண்டு எழுந்தது கண்டதும், அவன் குரல் அப்படியே நின்று போனது.

“ம்.. என்ன?”-தூக்கக் கலக்கம் நிறைந்த குரலில், பெரும் கொட்டாவியொன்றை, கை மறைவில் வெளியேற்றிக் கொண்டே கேட்டாள் யாழினி.

அர்த்த ராத்திரியில், தைரியமாக அவள் முன்னங்கைப் பற்றி “என் கூட வா ஜானு.. ஐ ஹேவ் டூ ஷோ யூ அ ஸ்பெஷல் திங்க்!!”என்றான் கண்களில் ஆர்வம் மின்ன.

“இந்த நேரத்துலயா யாதவ்? .. என்னால முடியாது!!”என்று பள்ளிச் செல்ல, எழ அடம்பிடிக்கும் குழந்தையாக சிணுங்கிக் கொண்டே.. மீண்டும் தலையணையில் தலை வைக்கப் போக, சட்டென அவள் தலையைத் தாங்கிப் பிடித்தான் யாதவ்.

அவள் இயலாமையுடன் பார்க்க, இவனோ காதலுடன், “ம்.. ஆமா..இந்த நேரத்துல தான்

அதைக் காட்ட முடியும் ஜானு" என்று பிடித்த பிடியில் நிற்க,

அவளும் வேறு வழியின்றி.. அவனுடன் எழுந்து போனாள். அரண்மனையில் ஓர் அரவம் கூட எழுப்பாது... நடுநிசியில் முற்றத்தை நோக்கி நடந்தனர் கணவனும், மனைவியும்.

வெளியே.. அந்த இரவு நேரக் கூதல்க்காற்று.. அவள் நாடி, நரம்பெங்கும் ஊடறுத்துச் செல்ல, தன் கைகளால் தன்னுடலைத் தேய்த்துக் கொண்டபடியே நடுங்கலானாள் யாழினி.

தன் ஜானு குளிரில் நடுங்குவதைப் பொறுக்க மாட்டாதவன், தன்னுடைய மேல் சட்டையைக் கழற்றி அவளுக்குப் போர்த்தி விட்டவன்,

டார்ச் லைட்டுடன்.. மதில் இல்லாத, அன்று அந்த மனநிலை பிறழ்வானவர் நின்றிருந்த காட்டு எல்லைப் பகுதியைத் நோக்கிப் போனான்.

கணவன் எங்கே செல்ல விழைகிறான் என்று தெரியாவிட்டாலும் கூட அவன் பின்னால் தன்

மேடிட்ட வயிற்றை அணைத்துப் பிடித்துக் கொண்டு விரைந்தாள் ஜானு.

கானகம் எங்கும் கடும் இருள் சூழ்ந்து கொண்ட இருட்டு!! ஆங்காங்கே மின்மினிப் பூச்சிகள் மாத்திரம்.. புதர்களில் நின்றும் பறந்து கொண்டிருக்க, பூச்சிகள் இரையும் சத்தம் நாராசமாகக் காதைப் பிளந்து கொண்டிருந்தது.

காய்ந்த சருகுகளில் இருவர் காலடியும் பட்டு ஓசை எழ, அவளுக்கு அங்கிருந்த ஒவ்வொரு மராமரமும், புற்பூண்டுகளும் எங்கேயோ பார்த்த ஞாபகத்தைக் கொடுக்கவாரம்பித்தது.

எங்கே பார்த்தோம் என்று அவள் விழிகள் சுருக்கி யோசித்துக் கொண்டிருந்த வேளையிலே அன்று காயம்பட்ட யாதவன், கழுதைப்புலியிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டே விழுந்த கானகம் என்பது புரியலானது அவளுக்கு.

கனவில் வந்த அதே இடம்!! அதே கானகம்!!

மீண்டும் ஏதேனும் கழுதைப்புலி போன்ற கொடிய விலங்குள் வந்தால்?? என்ற கேள்வி மீதூற, கணவனின் சட்டையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள் அவள் அச்சத்தில்.

மனைவியின் எண்ணங்கள் உணர்ந்தானோ கள்வனும்? அவன் நடை தடைப்பட்டு நின்றது.

தன் இதழ்களில் ஓடும் கள்ளச்சிரிப்பை மறைக்க பகீரதப் பிரயத்தனம் செய்தவனாக, அவளை தன்னோடு சேர்த்து அணைத்து நடந்தவாறு,

“ஜானு.. நான் இருக்கும் போது.. உன்னை எந்தக் கழுதைப்புலியும் ஒண்ணும் செஞ்சிடாது..”என்று சொல்ல,

இவனுக்கு எப்படி கனவில் வந்த நிலவரம் தெரியும்?? என்று ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

“கழுதைப்புலி” என்று கணவன் உதிர்த்த சொல்லிலேயே கணவன் வயிற்றோடு கையிட்டு அவனை அணைத்துக் கொள்ள, தன் ஜானுவின் பயம்

உணர்ந்து, அவளை ஆசுவாசமாக இறுக அணைத்துக் கொண்டான்.

ரொம்ப தூரம் நடந்து சென்று கொண்டே இருப்பது போலத் தோன்ற, கணவனை நோக்கி,

"எங்கே கூட்டிப் போற என்ன?ரொம்ப கால் வலிக்குது யாதவ்" என்றாள் அவனது மனைவி.

மனைவி மேல் உயிரையே வைத்திருக்கும் காதல் தலைவனுக்கு.. தன்னுயிரானவள் 'கால் வலிக்குது' என்று முறைப்பாடு செய்தது தானும் தாங்குமோ?

யாழினியே அதிர்ந்து விழித்து, அவன் இதயப் பக்கம் எப்படி தன் தலை வந்தது என்று ஆராயும் வகையில், அவள் அடித்தொடையூடு கைகளிட்டு ஒரு கை அவள் முதுகோடு கையிட்டு ஒரு கை என, அவளைப் பூமாலையாக கையில் ஏந்திக் கொண்டான் யாதவன்!!

அவளை அலேக்காக ஏந்திக் கொண்டே நடந்தான் மன்னவன்.

முதன் முதலாக எந்த ஆரவாரமும் இல்லாமல்.. அவன் கையணைப்பில் பாந்தமாக அடங்கி நின்றவள், தன் தலைவனின் முகத்தை வெகு அருகாமையில் பார்க்கும் சூரியகாந்தி மலரானாள்.

வலிய தாடைகளுடன், அலைபாயும் கேசத்துடன் அந்த சந்திர ஒளியை நிகர்த்த கண்களுடன் நின்றிருக்கும் அவனைக் கண்டதும், ‘இப்பேர்ப்பட்ட அழகனின் அன்பையா உதாசீனப்படுத்துகிறோம்?’ என்று முதன்முறையாக ஓர் உணர்வு எழுந்தது அவளுக்கு.

இதழ்கள் குறுகுறுக்க, தன்னெதிரே இருக்கும் இலேசான தாடி அடர்ந்த அவன் கன்னத்தில்.. அனிச்சை செயல் போல முத்தம் வைத்தாள் யாழினி.

அதிர்ந்து போய் தன்னவள் முகம் பார்த்தான் யாதவ்.

அவளாகத் தந்த முதல் முத்தம்!! கன்னத்து முத்தம்!! அவனுள் உறங்கிக் கிடந்த கோடான கோடி செல்கள் எல்லாம் உயிர்ப்படைந்தது. நாடி, நாளங்களில் புது இரத்தம் பாய்ந்தது.

தலைவனின் காதல் பார்வையில், அவளுடைய கன்னக்கதுப்புக்கள் இரண்டும் அழகாக செம்மையுற்றது.

ஏனோ தெரியவில்லை. அவன் அருகாமை பிடித்தது அவளுக்கு.

அது அந்த இடத்தின் மகிமை. தலைவனும், தலைவியும் பல்லாயிரம் வருஷங்கள் கழித்து அதே இடத்தில் கால் பதிக்க, காடே ஆனது இந்திரலோகமாக.

மனைவியை மெல்ல கீழே இறக்கியவன், அந்த ஒற்றை முத்தத்தில் சர்வமும் மறந்தவனாக, அவளை மையலுடன் பார்த்து நிற்க,

அவனையே தான் இன்முகத்துடன் பார்த்திருந்தாள் தலைவி.

அச்சமயம்.. ஒருவகையான பொன்மஞ்சள் ஒளி… தலைவனின் கருவிழிகளுக்குள் ஒளிர்வதைக் கண்டவள், திரும்பிப் பார்த்த போது, அங்கே தோன்றிய அதிசயத்தில்,

கௌதமன் சாபம் கொண்ட அகலிகை சிலையாய் ஆனாள்.

அப்படி என்ன தான் தெரிந்தது அங்கே?

நிலத்திலே.. அன்னாசிப்பழத்தின் இலைகள் போல.. கூர்மையான இலைகள் படர்ந்திருக்க, அதற்கு மேலே ஆறிதழ்கள் கொண்ட, மூன்றரையடி உயரத்தில்.. இரவில் ஒளிரும் பூக்கள் கண்டாள் யாழினி.

கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து பூக்கள்.. பொன்மஞ்சள் வண்ண ஒளியில்.. பூக்களின் விளிம்பில் ஆயிரம் கோடி மின்மினிப் பூச்சிகள் தான் உட்கார்ந்ததுவோ என்று ஐயுறத்தக்களவு கொள்ளை அழகுடன்.. மலர்ந்திருந்தது பூக்கள்!!

பூக்களைக் கண்டு ஸ்தம்பித்து நின்ற மனைவியின் காதில், “ இது ஆயிரம் வருஷத்துக்கு ஒருக்கா தான் பூக்கும். போன வருஷம் டிசம்பர் மாதம் பூத்திருக்க வேண்டிய பூ.. பருவ மழை தப்பிப் பெய்ததால்.. ஜூனில் பூக்குது..”என்று விளக்கமும் சொல்ல,

“வாவ்..!!”என்று அகல விரிந்தது அவள் கண்கள்!!

ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும் பூவா? இந்த உலகம் எவ்வளவு விந்தையானது? என்று தோன்ற, அவற்றை கேமராவிம் படம் பிடிக்கும் எண்ணம் பிறந்தது அவளுக்கு.

“கேம்.. கேம்..கேமரா கொண்டு வந்திருக்கலாம்ல?”என்று ஆற்றாமையுடன் அவள் கேட்க, தன் பேன்ட் பாக்கெட்டில் இருந்து கைகளை இட்டவன்,

தன் அதிநவீன ரக கேமராவை வெளியே எடுத்து அவள் பக்கம் காட்டினான்.

சந்தோஷக் களிப்பினாலோ.. இல்லை அந்த பூக்களில் இருந்து வெளிவரும் மாய ஈர்ப்பலைகளினாலோ, “யூ ஆர் ஸோ ஸ்மார்ட்” என்றவளாக, தலைவனின் கேசம் கலைத்தாள் அவள்.

பூக்களோடு, மனைவி இதழ் சுழித்து, வளைத்து எடுக்கும் செல்ஃபீக்களை எல்லாம் மந்தகாசப் புன்னகையுடன் பார்த்திருந்தான் யாதவன்.

நேரம்.. ஆக.. ஆக.. பூக்கள் ஒளிர்வதன் வீதம் அதிகமாகத் தொடங்கியது.கேமராவில் கூட.. காட்சியாகப் பதிக்கப்பட முடியாத.. சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் போல.. நொடிக்கு நொடி கண்ணைப் பறிக்கும் வெளிச்சம் அதிகமாகிக் கொண்டே போனது.

ஒரு கட்டத்தில் எதிரில் உள்ள பொருட்கள் தெரியாது.. முழுதும் வெட்ட வெளிச்சமாகத் தெரிய, பயந்து போனவளாகத் திரும்பித் தன் தலைவனைப் பார்த்தாள் யாழினி.

அங்கே நம் காலத்துக்கு ஏற்றாற் போன்ற உடையில் யாதவன் நின்றிருந்தான் என்று நீங்கள் எண்ணியிருந்திருப்பின் அது தவறு!!

பசும் பொன் ஆபரணம் வார்த்து செய்யப்பட்ட, ராஜகிரீடத்துடன், அருகருகே இரு சூரியன்களை வைத்தாற் போன்று தீட்சணையமான கண்களுடன்,

மலைகளை நிகர்த்த தோள்புஜங்களுடன், வலிய மார்களுடன் இடுப்பில் வாள் உறை, நிலத்தைக் கீற, புரான ஆடவர்கள் அணிந்த தோட்டியுடன்,

ஆண்மைக்கு இலக்கணமாக கம்பர் சொன்ன முன்னுதாரணங்களுடன் நின்றிருந்தான் யாதவ்.

அவனைக் கண்டதும்.. ஏதேதோ நினைவுகள் அவளை பற்றி எரிக்க, அவனை நோக்கி சுட்டு விரல் நீட்டி, ‘‘நீ.. நீ.. ஹஸ்.. தினாபுர்.. அரசன்.. ரா.. ராஜ்.. ராஜ்.’’என்று ஏதோ சொல்ல வந்தவள்,

அதற்கு மேலும் யோசிக்க முடியாமல், கால்கள் துவள மெல்ல சரிந்து விழலானாள்.

மனைவி சட்டென மயங்கியது கண்ட, நம் காலத்தைய ஆடையுடன் நின்றிருந்த யாதவ், ஓடி வந்து அவள் விழாமல் கைகளில் தாங்கிக் கொண்டான்.

மேல் சொருகிய விழிகளுடன், அவள் பேச்சற்று கிடக்க, ‘‘ஜா.. ஜானுஊஊ…ஜானு..’’என்று கன்னம்

தட்டித் தட்டிப் பார்த்தவன், இயலாத மட்டில் அவள் பெயர் சொன்னான்!!

அப்படி அவன் என்ன பெயர் சொல்லியிருக்கக் கூடும்??

அத்தியாயம் 18

வெளியே நில்லாமல் பெய்து கொண்டிருந்தது மழை.

மழையின் காரணமாக கள ஆய்வுப் பயணம், அன்று இரத்து செய்யப்படவே, மாணவர்களோ மழையென்றும் பாராமல் ஸ்விம்மிங் ஃபூலில், கூட்டாகக் கொட்டமடித்துக் கொண்டிருப்பதை இலக்கேயற்று வெறித்துப் பார்த்துக் கொண்டாள் அவள்.

அவர்கள் கலகலத்துச் சிரிக்கும் சத்தமும், தண்ணீருக்குள் பந்தை மாற்றி மாற்றி அடித்துக் கொள்ளும் சத்தமும் அதிமிதமாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

அவள் நின்றிருந்த சாளரம் தாண்டி வழிந்து கொண்டிருந்த மழை நீரை, தன் கண்கள் ரம்மியமாக விரியப் பார்த்துக் கொண்டேயிருந்தாள் யாழினி.

நேற்று அவள் மயக்கம் தெளிந்து எழுந்ததன் பிற்பாடு, அவளைத் தன் நெஞ்சோடு இறுக

அணைத்துக் கொண்ட கணவன் முகம் வந்து வந்து போனது விழிகளில்.

அவனது கம்பீரமான முகத்தில் தான் எத்தனை களேபரம்? எத்தனை வாட்டம்? எத்தனை கலக்கம்??

அவளை நெஞ்சோடு இன்னும் இன்னும் இறுக அணைத்தவனாக, காதோரம் உடைந்து போன குரலில், ‘‘பயந்துட்டேன் ஜானு.. நீ இல்லாத அந்த நொடிகளை நினைச்சுப் பார்க்கவே முடியலைமா.. நீ கண்ணைத் திறக்குற வரை நா.. நானாக இல்லை.. ’’என்றவனின் சொற்கள், அவள் இதயத்தை அடையவே செய்தது.

இவனுக்குத் தான், அவள் மேல் இத்தனை அன்பா? வாய்விட்டு சொல்லா விடினும் தனக்குத் தானே கேட்டுக் கொண்டது மனம்!!

இதோ இப்போதும் கூட, ஏதோ தன் தந்தையின் பால்யகால நண்பரைப் பார்க்க வேண்டும் என்று வெளியில் சென்றிருக்கிறான்.

செல்லும் முன்னம் தான் அவளுக்கு எத்தனை அறிவுரைகள்!! அவற்றை உரைக்கும் போது தான் அவன் கண்களில் எத்தனை தவிப்புக்கள்!!

“ஜானு…இன்னைக்கு ஃபுல்லா ரெஸ்ட் எடுத்துக்க…வெளியே எங்கேயும் தனியா போயிடாதே!!அப்படியே போறதுன்னாலும் யாரையாவது கூட்டிட்டுப் போ..நான் சீக்கிரம் வந்துருவேன்..பத்திரமா இருந்துக்க” என்று காதல் தவிப்புடன் சொன்னவன்,

அவள் அவனை குறுகுறுவெனப் பார்த்திருக்க, ஓர் இறுகி அணைத்த முத்தமும் கொடுத்து விட்டுத் தானே அகன்றான்?

அவள் நேற்றிரவு கண்ட புராதன ஷத்திரியர்கள் போல உடையணிந்த யாதவன்!!

அவனைப் பார்த்த போது.. அந்தப் புராதன புரவி வீரனை எங்கேயோ கண்ட நினைவுகள்..அவள் இதயத்தில் ஓர் தீச்சுவாலையைப் பரப்பி எரிக்கச் செய்தது என்னவோ உண்மை!!

எரிக்கும் நினைவுகளின் உஷ்ணத்தைத் தாங்க மாட்டாது தானே.. மயங்கி விழுந்தாள் அவளும்??

எப்போதும் சுருசுருவென கோபம் பொங்க கணவனுடன் வாயாடுபவள் அன்று அடங்கிப் போனாள்;அமைதியானாள்.

அவள் கைகளிலோ அடைக்கலமாகியிருந்தது அவன் திணித்து விட்டுப் போன ஃபோட்டோ!!

"இந்த ஃபோட்டோ உனக்குத் தேவையான பதிலைக் கொடுக்கும்.!!"- அவன் இயம்பிய வார்த்தைகளே திரும்பத் திரும்ப அவள் காதுக்குள் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

கறுப்பு நிற ட்ரெக்கிங் ஸூட்டில், தன் முத்து மூரல்கள் தெரிய பளீர் புன்னகையுடன், பேன்ட்டில் ஒரு கையை இட்ட வண்ணம்,

மறு கையால் 'இரண்டு' விரல் அடையாளம் காட்டிய வண்ணம், யாரோ அவன் வயதையொத்த சில தோழர்களுடன், அந்தப் புகைப்படத்தில் நின்றிருந்தான் அவளது கணவன்!

அவனைச் சூழ அவள் கண்கள் சுழன்றது.

எங்கிலும் பச்சை பூத்தாற் போன்று அடர் மராமரங்கள் வளர்ந்திருக்க, மரங்களின் உச்சியை உரசிக் கொண்டிருந்தது வெண்பனி மூட்டம்!!

இடையிடையே பாரிய கற்களின் நடுவில் இருந்து பீறிட்டு ஓடிக் கொண்டிருந்தது நீர்வீழ்ச்சி.

கொட்டுவது நீரா? பாலா? என்று பார்ப்பார் ஐயுறத்தக்களவுக்கு, உச்சியிலிருந்து வழிந்து ஓடிக் கொண்டிருந்தது அது! .

அதையே மிகுந்த நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு, அவன் தன் முத்து மூரல்கள் காட்டி சிரித்துக் கொண்டிருக்கும் பளீர் வதனமே.. கண்ணையும், கருத்தையும் கவர்வதாய் அமைந்தது.

போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தவளின் சிந்தனையைக் களைக்குமுகமாக,

மாணவர்கள் ஸ்விம்மிங் ஃபூலில் விளையாடிக் கொண்டிருந்த பந்து வந்து, அவள் நின்றிருந்த சாளரத்தின்.. கம்பிகளில் பட்டு ,

நீர் அவளது முகத்தில் பட்டுத் தெறிக்க, கண்களை மூடித் திறந்தாள் மாது!

வீசப்பட்ட பந்தை எடுக்க வந்த மாணவன், விளையாடியதால் ஏற்பட்ட சந்தோஷச் சிரிப்புடனும், பெரும் பெரும் மூச்சுக்களுடனும்,

"ஸாரிஹ் மேம்.. ஸாரிஹ் மேம்.. தெரிஹ்.. யாமல் வந்துருச்சுஹ்..!!"என்று சொல்ல,

அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதவள், "இட்ஸ் ஓகே!" என்ற வண்ணமே மீண்டும் பார்வையை அந்தப் புகைப்படத்துக்குள் புதைக்கப் பார்த்தவள் ஸ்தம்பித்து நின்றாள்.

புகைப்படத்திலும் ஆங்காங்கே தெறித்திருந்தன நீர்த்துளிகள். அதில் ஒற்றைத் துளி நீர் மட்டும் கருத்தைக் கவர அகல விரிந்தன அவள் கண்கள்.

அந்த ஒற்றைத் துளி நீரில் சிறைப்பட்டிருந்தது ஓர் மாதுவின் முகம்.

யாதவனின் பின்னால் புறமுதுகுக் காட்டிய வண்ணம், ஒரு சின்ன வட்டப் பொட்டின் அளவுக்கு முகம் தெரிய யாருடனோ பேசிக் கொண்டிருக்கும் ஓர் மாதுவின் முகம் தெரிந்தது புகைப்படத்தில்!

விம்பத்தில் விழுந்த நீர்த்துளியைத் துடைத்து விட்டுப் பார்த்தவள் மூச்செடுக்க மறந்தாள்.

அது.. அது அவளே தான்!!

இளஞ்சிவப்பு நிற ட்ரெக்கிங் ஸூட்டில், யாதவனோடு கிஞ்சித்தும் சம்பந்தமேயில்லாமல்… அந்த மரங்களுக்கிடையில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள் யாழினி.

இது எப்போது??

அவனும், அவளும் வாழ்நாளில் சந்தித்துக் கொண்டதேயில்லை என்று அவள் எண்ணியிருந்த எண்ணங்களையெல்லாம் தவிடுபொடியாக்கியது அந்தப் புகைப்படம்!!

யாதவன், தன் உயிர்த் தோழனான விக்கி மாத்திரம் இல்லாது, தன் இதர தோழர்களோடு, போஸ் கொடுத்திருக்க.. எதேர்ச்சையாக அந்தப் புகைப்படத்தில் பதிவாகியிருந்தாள் அவள்.

அந்நேரம் விக்கி இல்லாததாலா.. இது பற்றி விக்கியும் அறியவில்லை?

அகல விரிந்த இதழ்களைத் தன் கையால் மூடி மறைத்துக் கொண்டே தன் அதிர்ச்சியை வெளிப்படுத்தினாள் சுரூபினிப் பெண்!!

அவளையும் மீறி கொஞ்சம் கொஞ்சமாகக் கலங்கவாரம்பித்தது அவள் கண்கள்!!

ஏதோ உள்ளுணர்வு உந்த , புகைப்படத்தை மறுபக்கம் திருப்பிப் பார்த்தவளுக்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்கவே அவள் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது தொடங்கியது.

புகைப்படத்தின் பின்னாடி பிரின்ட் செய்யப்பட்டிருந்தது கீழ்க்கண்டவாறு.

“2017, டிசம்பர், 15

வட்டக்கனல், கொடைக்கானல், தமிழ்நாடு”

டிசம்பர், பதினைந்து.. அதாவது அவளது கணவன் யாதவன் ஆக்ஸிடெண்ட் ஆவதற்கு பதினாறு நாட்களுக்கு முன்னர்… அவன் கொடைக்கானல் வந்திருக்கிறான்!!

தன் காதை மறைத்து வீழ்ந்த கூந்தலை காதுக்குப் பின் செருகிய வண்ணம், புகைப்படத்தை உற்றுப் பார்த்தவாறு,

‘என்ன நடந்திருக்கும்?’ என்று யோசித்தவளுக்கு, விழிகள் சுருங்கியதே தவிர, எதுவும் சிந்தைக்கு ஞாபகம் வந்தபாடில்லை.

அப்போது தான் அவளது எண்ணத்தில் திடும்மென்று உதித்தது, அவளது வளர்ப்புத் தந்தை சொல்லித் தந்திருக்கும் ஆழ்மனதின் எண்ணங்களை வெளிக்கொணரும் தியான யோகா!!

இதற்கு முன்னர் யாதவன் தன் வாழ்நாளில் எந்த இணுக்கிலும் சம்பந்தப்படாதவன் என்று கண்மூடித்தனமாக நம்பியிருந்தவளுக்கு, தன்னைச் சுற்றி நடந்த மர்மமான அமானுஷ்ய விடயங்களிலே கவனம் செலுத்தியவளுக்கு,

தந்தை கற்றுத் தந்த தியான முறைகள் எதுவுமே செய்து பார்க்கத் தோன்றவில்லை அப்போது.

ஆனால் இப்போது தோன்றியது!! உண்மையை அறியும் ஆவலில்.. எந்தவிதமான விபரீத முயற்சியையும் கூட செய்து பார்க்க உந்தியது மனம்.

தன் அறையின் நடுவே கண்கள் மூடி, தரையில் பத்மாசனத்தில் அமர்ந்து கொண்டவள், தன் இரு கைகளையும் தொடை மீது வைத்து, கண்கள் மூடி.. முள்ளந்தண்டு கூனாமல் அமர்ந்து, மூச்சை உள்ளிழுத்துக் கொண்டாள்.

வயிற்றில் குழந்தையையும் சுமந்து கொண்டிருப்பவளாயிற்றே அவள்?

அவ்வளவாக மூச்சை உள்ளிழுக்க முடியவில்லை. இருப்பினும், இதயத்தின் ஆழத்திலிருந்து, வந்த

அவளுடைய “ஓம்!!” மந்திரம் அவ்வறை முழுவதையும் ஆக்கிரமிக்கலானது.

“ஓஓஓஓஓம்!!” — பத்தாவது முறையாக அவள் இதழ்களில் இருந்து வெளிவந்தது உச்சாடனம்!!

“ஓஓஓம்!! ஓஓம்!! ஓம்!!” — நூற்றி மூன்றாவது முறையாக வார்த்தைகளின் வீரியம் குறைந்து .. அதன் பின் மனதுக்குள்ளேயே அடங்கிப் போனது உச்சாடனம்!!

அவளது மூடிய விழிகளுக்குள், கருமை படர்ந்திருந்த விழித்திரை… தற்போது விழித்துக் கொண்டது!!

கணவன், அவள் மயக்கத்திலிருந்து கண் விழித்ததும் அணைத்து, நெற்றியில் முத்தமிட்ட காட்சி அழகாக விரிந்தது கண்களுக்குள்.

தற்போதும் கூட அவன் எச்சில் நெற்றியில் படுவது போல ஓர் பிரம்மை தோன்றலானது அவளுக்குள்!

அப்படியே காட்சிகள்.. ரீவைன்ட் செய்தது போல பின்னோக்கி ஓட, கர்ண கோயிலில் வைத்து, அவள் பொடுபோக்காகத் தொலைத்த மோதிரத்தை கைகளில் திணிக்கிறான் யாதவன்!!

இன்னும் அவள் ஆழ்மனதுக்குள் பிரயாணப்பட, காதுகளை நிறைத்தது ஹெலிகாப்டரின் சுழலிகள் “டகடக” வென சுழலும் ஓசை!!

மீரட்டிற்கு வரும் முன்னர், அவளைத் தன் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டே, ஹெலிகாப்டரில் ஏறுகிறான் யாதவன்!

அவன் கண்களில் தன் மனைவிக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது என்ற பயம் துளிர்விட்டிருப்பதை தற்போது அவதானிக்கிறாள் யாழினி!

மீண்டும் உருவங்கள் எல்லாம் பின்னோக்கி ஓட,

விக்னேஷின் பிறந்தாளின் போது, யானை மீதேறி நீராடும் யாதவன் சித்திரம் வந்து போனது, கூடவே அந்த சாயலிலே இருந்த அவளுடைய சித்திரமும் புலனாகியது அவள் காட்சியில்!!

இறுதியில் அவள் எதிர்பார்க்காத திடீர் திருமணம், நூற்றியெண்பது கோடி ரூபா மதிப்புள்ள மோதிரத்தை அவன் விக்னேஷ் மூலம், அவளது பிளாட்டுக்கு கொடுத்தனுப்ப, முகத்தில் ஃபேஸ்பேக் போட்டுக் கொண்டே வந்து கதவைத் திறந்த சம்பவம் அவள் நினைவுகளில் மலர்ந்தது.

அத்தோடு பிரம்மாண்டமாக நடந்தேறிய ஏலம், அதன் போது அவனது கம்பீரமான வருகையின் போது அவன் நடந்த நடைகள் என எல்லாமே பின்னோக்கி ஓட,

கீழடியில் வைத்து தொல்லியல் பொருட்கள் மீது வெற்றிலைத் துப்பிய ஓர் சிங்கை, அவள் தாருமாறாகத் திட்டியது.. அவளது ப்ரோஃபசர். அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்கள் அவளைத் தடுத்தது முதற்கொண்டு அனைத்தும் ஞாபகம் வந்தது.

அத்தோடு அவளது சக தொல்லியலாளினி தியாவுடன் ஓர் மலைப்பாங்கான பிரதேசத்தில் நின்றிருக்கும் காட்சி நிழலுருவமாய் தோன்ற,

அங்கேயே தன் மனதின் எண்ணங்களை ஒட்டுமொத்தமாகக் குவித்தாள் யாழினி!!

அதே டிசம்பர் பதினைந்து, அவள் வாழ்வை தலைகீழாகப் புரட்டிப் போட்ட அதே டிசம்பர் பதினைந்து!!

யாதவன், வட்டக்கனலில் நின்றிருந்த அதே நேரம்.. யாழினியும் தெய்வாதீனமாக அங்கேயே தான் இருந்தாள்.

டிசம்பர் மாதம் முழுவதும், தத்தம் சொந்த ஊர்களுக்கு கூட கிளம்பாமல், இரவு, பகல் பாராது வேலை பார்த்த இருபத்தைந்து புதைபொருள் ஆய்வாளர்களுக்கும் கிடைத்த ஓர் ஆஃபர் தான் மூன்று நாள் கொடைக்கானல் பயணம்!!

கீழடி அகழ்வாராய்ச்சியின் பொறுப்பதிகாரி டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன், யாழினியுடைய சக ஆய்வாளினி தியா மற்றும் இதர இருபத்துமூன்று பேர் என்று கிடைத்த சலுகையை உபயோகித்து கொடைக்கானல் வந்திருந்த அழகிய தருணம் அது!!

கொடைக்கானலில் இருந்து ஏழு மீற்றர் தொலைவில் அமைந்திருக்கும் வட்டக்கனல்!!

பாதைகளே.. ஓர் மிகப்பெரும் மலைப்பாம்பின் உடல் போல வளைந்து நெளிந்து சென்றிருக்க, அதுவோர் கூஸ்பம்ப் நிறைந்த பயணமாகவே அமைந்திருந்தது.

பாதைகளின் இரு மருங்கிலும் வானை நோக்கி உயர்ந்து வளர்ந்திருந்த ஃபைன் மரங்கள் கருத்தைக் கவர்வதாக இருக்க.. அது டிசம்பர் மாதமாதலால், என்புகளையும், நரம்புகளையும் ஊடுருவித் தாக்கிக் கொண்டிருந்தது உறைபனி!!

தான் அணிந்து வந்திருந்த ட்ரெக்கிங் ஸூட்டிற்கு மேலாக, அணிந்திருந்த ஸ்வெட்டர் தொப்பியை இறுதி வரைக் கழற்றவேயில்லை யாழினி!!

ஏற்கனவே வெண்ணெய்யில் குழைத்துக் குழைத்து செய்தாற் போன்றிருந்தவளின் நாசி நுனி, அந்த உறைபனியில் செர்ரிப்பழம் போல சிவந்து போனது காலநிலையில்.

அங்கே அவர்களுக்கு என அறைகள் ஒதுக்கப்பட்ட “ஷஃபா ரிசார்ட்டில்” தங்கி… முற்பகல் வேளையில் இருந்து, மாலை நேரம் வரை தொடர்ந்தேறியது அவர்களது பயணம்!!

வந்த முதல் நாளே பாலர் அணை, லைரில் நீர்வீழ்ச்சி என சுற்றிவரப் பார்வையிட்டவளுக்கு… இயந்திரத்தனமான சுற்றுலாவாக இந்த வட்டக்கனல் பயணம் இருப்பது போல தோன்றவாரம்பித்தது.

அங்கு வந்த சேர்ந்த இரண்டாம் நாள்..

வாழ்க்கையில் எதிலும் ஓர் த்ரில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் யாழினிக்கு, வெறுமனே வட்டக்கனலைச் சுற்றிப் பார்ப்பது போரடிக்கவே செய்தது.

அதனால் டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன் அவள் மேல் வைத்திருக்கும் தனிப்பட்ட அன்பையும், மரியாதையையும் தக்க தருணத்தில் உபயோகித்து,

அவர் கையைப் பிடித்துக் கெஞ்சி, ‘‘ப்ளீஸ் சார்… இன்னைக்கு மட்டும்.. எக்கோ ரொக், வட்டக்கனல் வாட்டர்ஃபால்ஸ், போய் ஒரு ரவுண்ட் அடிச்சுட்டு.. அங்கேயே டென்ட் அடிச்சு நைட் தங்கிட்டு..

காலையில்.. வட்டக்கனல் க்ளிஃப் வீவ் பாய்ண்ட் போய்..ஜாலியா என்ஜாய் பண்ணிட்டு.. டால்பின்ஸ் நோஸ் போய் வரலாம் சார்..

ரெஸார்ட்ல இருந்து போறதை விட.. அங்கேயே டென்ட் அடிச்சுத் தங்குறது செம்ம்ம.. ஃபீலிங்கா இருக்கும் சார்.. அதுக்கு நீங்க தான் இங்கேயிருக்க ஃபாரஸ்ட் ஆஃபிசர் கிட்ட சொல்லி பர்மிஷன் வாங்கித் தரணும் சார்…ப்ளீஸ் சார்" என்று கெஞ்ச…

அவருக்கும் கொஞ்சம் மனமிளகத் தான் செய்தது.

அவளைப் பார்த்து நேசப்புன்னகை சிந்திக் கொண்டே, "சரி… சின்னஞ்சிறுசுங்க.. என்ஜாய் பண்ணுங்க.. நான் ஃபாரஸ்ட் ஆஃபிசர்ட்ட பேசிக்குறேன்" என்று இன்முகமாக சம்மதம் தந்து விட, அந்த நாள் பயணம் இனிய பயணமாகவே ஆரம்பமானது.

அந்தக் குழுவில் இருந்த இருபத்தைந்து ஆய்வாளர்களில், பத்துப்பேருக்கு யாழினியின் யோசனைப் பிடித்துப் போய் அவளோடு டென்ட் அடித்துத் தங்க ஆயத்தமாக,

மீதி பதினைந்து பேர் கீழடி அகழ்வாராய்ச்சியின் பொறுப்பதிகாரியையும் சேர்த்து… மாலையானதும் மீண்டும் ரிஸார்ட்டிக்கு திரும்பி வர திட்டமிட்டிருந்தனர்.

அவர்களுக்கு வட்டக்கனலைச் சுற்றிக் காட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வனத்துறை அதிகாரியும் கூட.. பாதுகாப்பு கருதி.. யாழினியோடு டென்ட் அமைத்துத் தங்க ஏற்பாடாகியது.

கொஞ்சம் கரடுமுரடான பாதை தான்.. எக்கோ ரொக்கிற்கு. கருங்கற் மூலமான ஓர் ஒற்றையடிப் பாதை மாத்திரமே இருக்க, இரு மருங்கிலும் காட்டுச்செடிகள் பூக்களோடு மலர்ந்திருந்த காட்சி மனோகரமானதாகவே இருந்தது.

காய்ந்த சருகுகள் ட்ரெக்கிங் ஷூவில் மிதிபட, அவள் நாசி முகர்ந்தது எங்கிலும் பசுமை பூத்த காட்டு மரங்களின் வாசம்!!

கண்ணை மறைக்கும் அளவுக்கு பனி சூழ்ந்த இடமாக அந்தக் காட்டுவழிப் பாதைகள் இருக்க,

கையில் செல்ஃபீ ஸ்டிக்கோடு கூடிய ஃபோனை ஏந்திய வண்ணம் நடந்தாள் அந்த சுரூபினிப் பெண்.

அவள் பக்கத்திலே.. யாழினி பிடிக்கும் ஒவ்வொரு செல்ஃபீக்கும் இதழ்களை வளைத்து நாக்கை துருத்திக் காட்டியவாறு போஸ் கொடுத்துக் கொண்டே வந்தாள் தியா.

தியாவுக்கு, யாழினியின் துரித நடையில் மூச்சிறைத்தாலும், அதை கணக்கில் கொள்ளாது நகர்ந்து கொண்டே, “இந்தஹ் பஹ்.. யணம் ரொம்ப சுவாரஸ்யமாஹ் இருக்குல்லஹ்? ..”என்று கேட்க,

அவளை நோக்கித் திருப்பியவள், கண்களை மூடி தலையாட்டி, “ம்.. ஆமா.. வட்டக்கனல் ரொம்பப் பிடிச்சிருக்கு…” என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவும் செய்தாள்.

அவர்கள் வந்து சேர வேண்டிய எக்கோ ரொக்கும் வரவே, இரு மலைகளின் பள்ளத்தாக்கின் மத்தியில்…மேகங்கள் பரந்தோடும் காட்சியை அகல விரிந்த கண்களுடன் பார்த்தாள் அவள்.

தன் முன்னெழில்களை வானை நோக்கிக் காட்டிருந்த பருவமங்கையின் செயலை அநாச்சார்யம் என்று கருதியதோ மேகக் கூட்டங்களும்?

ஓடி வந்து பருவமங்கையின் மலைமுகடுகளை மறைத்து, அவற்றின் மானங்காக்க ஆவன செய்தன அவை!!

மராமரங்களோ.. காற்றுக்கு அசையாமல் விறைப்பாக நிற்க, புற்ச்செடிகளிலோ… பனித்துளிகள் சொட்டு சொட்டாக வழிந்து கொண்டிருந்தது.

சூரியன் அங்கே காண்பதற்கு இல்லை தான். இருப்பினும் சூரிய ஒளி மாத்திரம் எங்கணும் பரவியிருந்தது.

“இதோ தெரியுதுல்ல.. இது எக்கோ ரொக்.. நாங்க சொல்றது எக்கோவா திரும்பக் கேட்கும்.. நிறைய சினிமாவில பார்த்திருப்பீங்க” என்று இவர்களோடு வந்த வனத்துறை அதிகாரி சொல்ல,

உற்சாக மிகுதியில் முதன் முதலாகக் கத்தியது வேறு யாராக இருக்கும்? சாட்ஷாத் நம் யாழினி மகேந்திரனே தான்.

(அப்போது அவள் யாழினி மகேந்திரன் தானே?)

“ய்யாஆஆழினீஈஈ.. ய்யாஆஆழினீஈஈ.. ய்யாஆஆழினீஈஈ!!”- அவள் சொன்னதை அவளுக்கே திருப்பிக் கொடுத்தது அந்தக்கற்பாறைப் பள்ளத்தாக்கு.

அங்கிருந்து வட்டக்கனல் நீர்வீழ்ச்சியை நோக்கித் தொடர்ந்தது பயணம்!!

அது யாதவன் புகைப்படம் எடுத்திருந்த இடம்!! அந்தப் புகைப்படத்தில் அவளும் எதேர்ச்சையாகப் பதிவாகியிருந்த இடம்!

உச்சியில் கற்பாறைகள் பிரசவித்த தண்ணீர்.. அசுரவேகத்தில் பாய்ந்து வந்து, இடையில் பல மேடுபள்ளங்களைச் சந்தித்து, அவர்கள் அருகே வரும் போது..பூனை போல பதுங்கிச் சென்று கொண்டிருந்தது .

நீர்வீழ்ச்சிக்கு இருபுறங்களிலும் வளர்ந்திருந்த காட்டுமரங்களின் உச்சியில் கூட்டாக அமர்ந்திருந்தது பல வர்ணங்கள் கொண்ட வேடந்தாங்கல் பறவைகள்!!

தன் டெனிமினை.. முழங்கால் வரை உயர்த்திக் கொண்டவள், பாதணிகளைக் கழற்றி விட்டு தண்ணீரில் இறங்கினாள்.

அடிப்பாதத்தில் பரவிய ஜில்லுணர்வு··· அவளுடைய மூளை வரைத் தாக்க··· ஜில்வென்று குளிர் பரவி.. அசதி முழுவதும் வெருண்டோடுவது போல இருந்தது அவளுக்கு.

யாழினியும், தியாவும் மற்றும் அங்கே இருந்த இன்னும் சில புதைப்பொருள் ஆய்வாளர்களும் தண்ணீரில் இறங்கி விளையாட, மாலை வரை இன்பமயமாகக் கழிந்தது நேரம்.

மாலையில் வனத்துறை அதிகாரி சஜஸ்ட் செய்த இடத்தில் ஐந்து கூடாரங்கள் எளிமையாக அமைக்கப்பட்டு.. கூடாரத்தின் நடுவே ஓர் தீப்பந்தலும் வளர்க்கப்பட்டது.

கொடைக்கானலின் அந்த மலைமுகட்டிலிருந்து சூரியன் கொஞ்சம் கொஞ்சமாக மேற்குத் திசையில் மறையும் நேரம்.. வானமே தங்க முலாம் பூசியது போல மின்னியதைப் பார்க்கக் காணக் கண் கோடி வேண்டும் என்பது போல இருந்தது.

கூடாரத்துக்கு வெளியே சக ஆய்வாளர்கள்… தீப்பந்தலைச் சுற்றி அமர்ந்து, தபேலா தட்டி இளையராஜாவின் பாடல்களைக் கூட்டாக பாடிக் கொண்டிருக்க, அவள் இருந்த கூடாரத்துக்குள் திடுமென வந்து புகுந்தாள் தியா.

கண்களில் ஸ்பெக்ஸுடன்.. ஏதோ ஓர் ஆங்கில நாவலை வாசித்துக் கொண்டிருந்த யாழினி, திடுக்கிட்டு அச்சமுற.. தொப்பென யாழினி முன் மண்டியிட்டமர்ந்தாள் தியா!!

யாழினி என்னவென்று புரியாமல் பார்க்க, வாய் திறந்த தியாவின் குரலில் தள்ளாட்டம் தெரிந்தது;கூடவே புதுமையான நெடியும் வீசியது.

"யாழி உனக்கு ஒழு (ஒரு) கிஃப்ட் வைச்சிர்ருக்கேன்" - கருமணிகள் இரண்டும்

அங்குமிங்கும் ஆட, தியா சொல்ல, அவளில் இருந்து வந்த நெடியைப் பொறுக்க மாட்டாது, சட்டென மூக்கைப் பொத்திக் கொண்டாள் யாழினி.

“குடிச்சிருக்கியா?”- சந்தேகப் பார்வையுடன் உறுதியான குரலில் கேட்டாள் ஜானு.

முதலில் மறுப்பாகத் தலையாட்டிய தியா.. பின்பு இணங்கித் தலையாட்டி, “ஆமா.. ழைட்டா (லைட்டா).. ”என்று கைகளால் சின்ன அளவைக் குறிக்கும் சமிக்ஞையை செய்து காட்டினாள் அவள்.

யாழினி ஏதும் பேசவில்லை. ஆனால் அவள் முகம் சுருங்கியதைக் கண்ட தியா, “இண்ட குழி(ளி)ரைத் டாக்குப் பிடிக்க ஒரு பெக் போட்டா நல்லாருக்கும்னு நம்ம ஜான் சொன்னான்..அடான்.. நானும் ஒரு பெக் தான் அடிச்சேன்.. ஆனால் ஓவதாப் போயிருச்சு” என்று தான் குடித்ததற்கான பழியைத் தூக்கி சக ஆய்வாளன் ஜான் மேல் போட்டவள் தொடர்ந்து சொன்னாள்.

“நா.. நான் உனக்கு கொடுக்கிழ கிப்ட்.. எப்போவுமே உன்கூடயே இதுப்பதால்.. நீ ஶ்ரீலங்கா

போனாலும் அது என்னை ஞாபகப்படுத்தும்…” என்று ஏதேதோ பேசிக் கொண்டே போனவள்,

வெளியே ஆடவர்கள், “இளைய நிலா பொழிகிறது.. இதயமதில் நனைகிறது” என்று இளையராஜா பாடலைப் பாட,

“நிழாக்காயும் நேதம்..”என்று போதையில் சிரித்துக் கொண்டே பாடிக் கொண்டே கூடாரத்தை விட்டு நகரப் போனவளைக் கட்டியணைத்துத் தடுத்தவள்,

“வேணாம்.. இந்த நிலைமையில் நீ வெளியே போய் ஒண்ணும் கிழிக்கத் தேவையில்லை” என்று இழுத்துப் பிடித்து படுக்கையில் தள்ள,

அந்தத் தள்ளலியே ஆழ்ந்த நித்திரைக்குச் சென்று விட்டிருந்தாள் தியா.

குழந்தை போல உறங்கும் தியாவுக்கு போர்த்தி விட்டவள், தன்னுடைய சீக்ரட் ப்ளானை

செயல்படுத்தத் தக்க தருணம் பார்த்துக் காத்திருக்கலானாள்.

இரவு பன்னிரண்டு மணியைத் தாண்டியிருக்கும். இசைக்கச்சேரி ஓய்ந்தது என்பதற்கான அறிகுறியாக வெளியே மயான அமைதி நிலவ,

தன் ட்ரெக்கிங் ஸூட்டையும், பேக்கையும், கூடவே கையில் டார்ச் லைட்டையும் எடுத்துக் கொண்டவள், அரவமே எழுப்பாது வெளியே வந்தாள்.

இந்தப் பயணம்… அவள் வாழ்க்கையையே மாற்றப் போகிறது என்பதை அவள் அறிந்திருப்பாளேயானால், அவள் நல்ல பிள்ளை போல கூடாரத்திலேயே இருந்திருக்கவும் கூடும்!

என்ன செய்ய? எல்லாம் விதி!!

வட்டக்கனலில் அவள் பாதங்கள் பட்டதிலிருந்து ஓர் ஆசை, வட்டக்கனல் க்ளிஃப் வீவ் பாய்ண்டினை… நள்ளிரவில் அதுவும் தனிமையில் பார்க்க வேண்டும் என்ற ஆசையே அது!!

அவளுள் துளிர்த்த ஆசை எத்தனை பயங்கரமானது என்பதை அறியாதவள், பனிசூழ்ந்த அந்த ஒற்றையடிக் காட்டுவழி.. யார் துணையுமின்றி நடந்தாள்.

ஒருவேளை தியா… சுயநினைவுடன் இருந்திருப்பின் அவளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு யாழினி சென்றிருக்கவும் கூடும்!!

யாழினியின் கெட்ட நேரமோ? தியாவின் நல்ல நேரமோ… தியா குடித்து விட்டு மட்டையானதும் கூட ஒருவகையில் நல்லதாகவே முடிந்தது.

டார்ச் லைட் உதவியுடன்.. அந்த ஒற்றையடிப் பாதையில்.. மெல்ல மெல்ல நடந்தாள் மங்கை.

அடர்ந்த மராமரங்களுக்கிடையே துளிர் விட்டுக் கொண்டிருந்த சந்திர ஒளி.. அந்தக் கானகத்தை ஓர் மனோரம்மியமானதாகக் காட்டிக் கொண்டிருந்தது.

நேரம் நேரமாக.. குளிர் அதிகரித்து.. பனி மூட்டமும் அதிகரிக்கத் தொடங்க.. எதிரே என்ன இருக்கிறது என்பதைக் காணக்கூட முடியாதளவுக்கு

இருக்க.. அப்போதும் அந்த வட்டக்கனல் க்ளிஃப் வீவ் பாய்ட்டினைப் பார்க்க நடந்தாள் மங்கை.

அவள் விட்ட மூச்சுக்கள் கூட பனிப்புகையாய் ஆக.. இடையிடையே துரிதமான மூச்சுக்கள் பல விட்டுக் கொண்டே நகர்ந்தாள்.

அங்கே தான் ஓர் ஆச்சரியம் நடந்தேறியது. பூரணையாக ஒளிர்ந்து கொண்டிருந்த விண் அப்பத்தை (நிலவு), யாரோ பாதியாக பிடுங்கித் தின்றது போல.. பாதி நிலவு மட்டும் இருக்கக் கண்டாள் யாதவனின் நங்கை!!

மேடு பள்ளம் தாண்டி தொடர்ந்தது பயணம். கூடவே··· கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தது நிலவு!!

இன்று நிலவுக்கு என்னாச்சு? ஏதேனும் சந்திர கிரகணமோ? என்று நிலவை அண்ணாந்து பார்த்துக் கொண்டே நகர்ந்தவளின் கால்கள் ஓர் பள்ளத்தாக்கில் வழுக்க, அடுத்த நொடி சறுசறுவென சறுக்கிக் கொண்டே போனாள் யாழினி!!

அவளோடு காய்ந்த சருகுகளும், கிளைகளும் சரிந்து விழ, அவள் கைகளோ.. வழியில் அகப்படும் ஏதேனும் மரத்தின் கிளைகளை இறுகப் பற்றிக் கொள்ளவே பரபரத்தது.

உருண்டு கொண்டே போனவளின் நெற்றியும், கை, கால்களும் சிராய்ந்து இரத்தம் எட்டிப் பார்க்கவே செய்தது.

முடிவேயற்று உருண்டு கொண்டே போனவளின் பிறை போன்ற அழகிய நுதல்.. ஓர் வலிய மரத்தின் தண்டில் இடித்துக் கொள்ள, நட்ட நடுசியில்.. யாருமற்ற கானகத்தில்.. மூர்ச்சயடைந்தாள் யாழினி.

அவள் கண்கள் போய் மேல் சொருகிக் கொள்ளத் தயாராகி அரை மயக்க நிலையில் இருக்க, அவள் கண்களுக்குள் விழுந்தது டார்ச் லைட்டின் ஒளி!!

அதைத் தொடர்ந்து வரிவடிவமாக ஓர் திடகாத்திரமான ஆண்மகனின் உருவம்!!

அவளை நோக்கி.. அந்த சரிவில்.. வீழ்ந்து விடாமல் வந்த அந்த வன்மையான உருவம், அவளைப் பூப்போல கையில் ஏந்திக் கொண்டது.

தெளிவற்ற விம்பமாய்.. ஓர் ஆடவன் தன்னெதிரே அமர்ந்து.. அவளுடைய கன்னம் தட்டி, ஏதேதோ சொல்லி வாயசைப்பது புரிகிறது. ஆனால் அவன் என்ன சொல்கிறான் என்று தான் புரியவில்லை.

திடும்மென ஆழப் பெருமூச்சொன்றை உள்ளிழுத்தவளது கண்கள் முழுமையாக மூடிக் கொண்டது மறுவிநாடி. ஆனால் அந்த ஆடவனின் இதயத்துடிப்போசை மட்டும் நிற்காமல் கேட்டுக் கொண்டேயிருந்தது அவள் செவிகளில்.

அவளைக் காத்த ஆபத்பாந்தவன்.. அது நம் யாதவன்!! கதையின் புராதனப் புரவி வீரன்!!

அவளைப் போலவே.. ஓர் விநோதமான ஆசை துளிர் விட்டிருந்தது அவனுக்கும்!!

வட்டக்கனல் க்ளிஃப் வீவ் பாய்ண்டினை.. நட்ட நடுநிசியில் பார்க்க வேண்டும் என்ற அதே ஆசை!!

தோழர்கள் உறங்கியதன் பின்பு.. தன்னை இருபத்துநான்கு மணி நேரமும் சிசிடிவி கேமரா போல கண்காணிக்கும் பாடிகார்ட்களின் கண்களிலும்

மண்ணைத் தூவி விட்டு… மலையேறத் தொடங்கியிருந்தான் யாதவனும்!!

அங்கணம் தான்.. கானகத்தில் ஓர் அபாயக்குரல் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி விரைந்தவன்.. தன் பொக்கிஷத்தை முதன் முறையாகக் கண்டு கொண்டது அப்போது தான்.

கார் மேகம், மதியை மறைத்தாற் போன்று.. அவள் கார்க்குழல் கற்றை மறைத்திருந்தது அவள் முகத்தை.

மெல்ல தன் கைகளால், அவள் கூந்தலை விலக்கிய சூரியன், அந்த அழகிய பெண்ணைக் கண்டு மூச்செடுக்க மறந்தான்.

காண்டீபனின் வில்லையொத்த புருவங்கள்..

பாதி மூடிய இமைகளில் ஒளி விட்டுக் கொண்டிருந்த கருமணிகள்!!

செழுமையான கன்னங்களின் அருகில், செக்கச் செவேலென சிவந்திருந்த அதரங்கள்…

அந்த அழகிய கூர் நாசியின் நுனி செர்ரிப்பழம் போல சிவந்திருக்கக் கண்டு··· ஏதேதோ உணர்வுகள்.. அந்த இரவில் அவளைப் பார்த்ததும் தலை தூக்கலானது யாதவனுக்கு.

அவள் நெற்றியிலும், இதழ்களிலும் வழிந்து கொண்டிருந்த இரத்தம் கண்டு.. அந்த வலியைத் தான் உணர்வது போல வலித்தது உடல்;பதறியது மனம்.

அவள் தன் நயனங்களை முழுவதுமாக மூடிக் கொள்ள, அவனது தீர்க்கமான விழிகளில் களேபரம் மிகுந்தது.

சற்றும் யோசியாமல் அவளைத் தன் கைகளில் பூவைப் போல ஏந்திக் கொண்டே, அநாயசமாக மலை ஏறினான் அந்த வீரன்!!

இதோ அவள் வர நாடிய வட்டக்கனலின் க்ளிஃப் வீவ் பாய்ண்ட்!!

அங்கிருந்துப் பார்க்க.. இருட்டில்.. அலைஅலையாக தொடர்ந்து சென்றிருக்கும் பர்வதங்கள் உறங்குவது புரிந்தது.

அவளை ஏந்திக் கொண்டே··· அந்த இடத்தைப் பார்த்தான் அவன்!! இத்தனை அழகான ஓர் சுரூபினிப் பெண்.. அவன் கையில் குழந்தையாய் நினைவிழந்திருக்க.. அந்த ரம்மியமான இயற்கைக் காட்சிகளை எவ்வாறு இரசிக்க முடியும்??

அங்கே தெரிந்த கற்பாறையைக் குடைந்து செய்யப்பட்ட ஓர் குகைக்குள் நுழைந்தான். தரையில் அவளைக் கிடத்தியவன் காய்ந்த சருகுகள் கொண்டு ஓர் தீப்பந்தலும் வளர்த்தான்!!

பேக்கில் இருந்து ஓர் போர்வை எடுத்து விரித்து.. சுரூபினிப் பெண்ணை போர்வையில் படுக்க வைத்தவன், அவள் நாசித்துவாரம் அருகே கை வைத்துப் பார்க்க, அவள் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டே சற்றே ஆசுவாமானான்.

அவள் நெற்றியில் காயம் பட்டிருப்பதைக் கண்டு.. அவள் காயத்திற்கு மருந்திட நாடினான் போலும்.

நெற்றியில் ஸ்ப்ரிட்டை அவன் தேய்க்க.. ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தவள் கண்கள் சுருக்க அதுவும் கூட வலியைக் கொடுத்தது அவனுக்கு.

அடுத்து இதழ் காயத்தை நோக்கி.. பஞ்சேந்திய அவன் கரங்கள் நகர```ஈரம் துளிர்த்த ரோஜா இதழ்கள் போல இருந்த அந்த அதரங்களைக் கண்டதும் ஒரு வகையான கிளர்ச்சி மனதுக்குள் கிளம்பவாரம்பித்தது யாதவனுக்கு.

ஏனென்று புரியவில்லை. அடிபட்டு மயங்கிக் கிடக்கும் பெண்.. யாரென்றும் தெரியவில்லை. ஆயினும் அவள் காயம் கண்டால் நெஞ்சு துடிக்கிறது. அந்தக் கிளர்ச்சியூட்டும் அதரங்கள் கண்டதும் உள்ளே புது இரத்தம் பாய்கிறது அவனுக்கு!!

கொஞ்சம் தண்ணீர் எடுத்து அவள் முகத்துக்குத் தெளித்து மயக்கம் தெளிவிக்க ஆவன செய்தும் தோற்றான் யாதவன்.

அந்த சுந்தரப் பெண் கண் திறக்கவேயில்லை!!

அவனுக்குள் என்னவென்று சரியாக இனங்காண முடியாத திகலுணர்வு உண்டானது. உடம்பில் எங்கேனும் உள்க்காயங்கள் உண்டாகியிருக்குமோ? என்ற ஐயம் எழ, அவளது ஆடை களைய கை வைத்தான் யாதவன்!!

புராதன காலத்தில்.. எத்தனையோ போர்வீரர்களை அசாத்தியமாக பந்தாடியவனுக்கு.. இன்று ஓர் பெண்ணைத் தொட, தயக்கம் வந்து தடுத்தது.

கூடவே ஆபத்துக்குப் பாவமில்லை என்று அவனது மனம் இடித்துரைக்க, யாழினியின் ட்ரெக்கிங் ஸூட்டைக் களைந்தான் யாதவன்!!

அதில் இருந்தது அவளுடைய ஐடி கார்ட்.

“ மிஸ். யாழினி மகேந்திரன்.. ஆர்க்கியோலஜிஸ்ட்···ப்ப்ரொம் கலம்போ, ஸ்ரீ லங்கா.. ஓ நம்மூர் பெண்ணா?”என்று மெல்ல முணுமுணுத்தன அவன் இதழ்கள்.

அவளுடைய பால் வண்ண சருமம்.. அழகாக விழித்திரைக்குள் பதிவாக.. ஓர் அழகுப் பதுமையாகப் படுத்திருந்தாள் யாழினி!!

ஓர் ஆணைக் கிளர்ச்சியூட்டும் கோலத்தில் ஓர் பெண் படுத்திருக்க.. அவன் இதயம் தடம் புரள்வது தானே இயல்பு??

ஆனால் யாதவன் இதயம்.. இரும்பாய் ஆனது. எந்த உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுக்காமல், முகத்தை இறுக்கமாக்கிக் கொண்டு அவளது உடலைப் பரிசோதனை செய்தான் யாதவன்!!

அவளது பொய்யோ என்னும் கொடியிடைப்பக்கம்.. நீலம் பூத்திருப்பதைக் கண்டவன்.. அவளது இடையில் காயம் பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தவனாக,

தன் ட்ரெக்கிங் ஸூட் பாக்கெட்டில் இருந்து.. பெயின் ரிலீஃப் ஸ்ப்ரே எடுத்து ஸ்ப்ரே செய்தான் .

சறுக்கி விழுந்ததில்.. அந்தப் பேரழகுப் பெண்ணின் இடையில் நன்றாகவே அடிபட்டிருக்க வேண்டும்.

இதுவரை வலியில் இடுங்கியிருந்த யாழினியின் புருவங்கள் மெல்ல மெல்ல பழைய நிலையடைவதைக் கண்டவனுக்குள் ஓர் ஆசுவாசம் பிறந்தது.

தன்னருகே பிறந்த குழந்தை போல உறங்கும் அந்த அழகியைத் தன் போர்வை கொண்டு போர்த்து விட்டவன், அவள் அருகிலேயே அமர்ந்து… அவளை இரசித்திருக்க சித்தம் கொண்டான்.

அவன் வாழ்வில் எத்தனையோ பெண்களைக் கடந்து வந்திருக்கிறான் தான். ஆயினும்.. இவளைக் காணும் போது மட்டும் ஏன் உணர்ச்சிகள் தடம் புரளுகின்றது??

ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தவள்.. மெல்ல சரிந்து படுக்க, அவன் போர்த்தி விட்ட போர்வையும் விலகியது. அவளது பெண்மைப் பொக்கிஷங்களும் நன்றாகக் காட்சி தரலானது அவன் கண்களுக்கு.

கூம்பிய தாமரை மலர்கள் தான் தேவி அவளின் செந்தனங்களோ? என்று கம்பனின்

கம்பரசம்..யாதவனின் மனதுக்குள் முகிழ்க்கத் தொடங்கியதும் அங்கணம் தான்.

அவளின் அழகில், பித்தம் தலைக்கேற··· சிந்தை மறந்து கள்ளுண்ட மந்திக் கணக்காய்.. அவள் எழில்களையே வெறித்துப் பார்த்தான் அவன்.

அவன் கைகளோ··· அவளது கூம்பிய தாமரை மலர்க் கலசங்களை நோக்கி நீண்டது.

அவன் நாடியிருந்தால்.. யாருமற்ற தனிமையில், சுயநினைவற்றுக் கிடந்த அந்தப் பூங்காரிகையை பெண்டாள முடிந்திருக்கும்!!

இருப்பினும் கண்ணியம் காத்து.அவளது கண்ணைப் பறிக்கும் பேரழகை போர்வையை போர்த்தி மறைத்தவன்,

மேற்கொண்டு நில்லாமல் விறைத்த முகத்துடன் எழுந்து, குகையை விட்டும் வெளியே வந்தான்.

கூதல்க்காற்று.. அவன் மேனியில் பட்டு அவனை எரித்துக் கொண்டிருந்தது. அவள் உடலில் இருந்து

வந்த உஷ்ணம் இன்னும் அவனைத் தாக்கிக் கொண்டிருப்பது போல பிரம்மையும் உருவாயிற்று.

‘எனக்கென்னாச்சு? யாதவ்.. நீ பெண்களையே பார்த்ததில்லையா? கன்ட்ரோல் யோர் செல்ஃஃப்…” - தனக்குத் தானே முணுமுணுத்தவனாகக் கூறியவன்,

இடுப்பில் கை வைத்து நின்று..வானம் பார்த்தபடியே தலைகோதி பெருமூச்செறிந்தான்.

வானம் பார்த்தவனின் கண்கள்.. அப்போது தான் நிலவைக் கண்டு கொண்டது.

அந்தச் சுந்தரப்பெண் கடித்துத் துப்பிய நகம் போல.. சிறு கீற்றாகக் காட்சியளித்தது நிலவு.

அவளில் தோன்றிய அதே சந்தேகம் முகிழ்த்தது அவனுக்குள்.

‘இன்று நிலவுக்கு என்னாச்சு? ஏதேனும் சந்திர கிரகணமா என்ன?” என்று எண்ணிக் கொண்ட மன்னவனும் சரி, அவனது சுரூபினிப் பெண்ணும் சரி..

அன்றைய இரவின் மகிமையை, அதிசயத்தை அப்போது உணர்ந்திருக்கவில்லை.

மகிமையா? அதிசயமா?

ம். ஆமாம். மகிமை தான். அதிசயமே தான்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த அதிசயம்.. மீண்டும் நிகழ்ந்து கொண்டிருந்தது அவ்விரவில்.

சூரியனைச் சுற்றி வரும் ஒன்பது கோள்களும், புளூட்டோ உட்பட, மற்றும் அதன் துணைக் கோள்களும் ஒரே நேர்கோட்டில் சந்தித்துக் கொள்ளும் அதிசயமான இரவு அது!!

அந்நேரம்.. சந்திரனில் விழும் பூமியின் நிழல் தான்.. அது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து போகக் காரணம்!!

அவ்விரவில் கடலில் அலைகளின் கொந்தளிப்பு அதிகமாகவே இருந்தது. காலநிலையும், தட்வெப்பமும் வழமையான நாட்களையும் விட அன்று கொஞ்சம் மாற்றமாகவே இருந்தது.

தென்னாசியாவைச் சேர்ந்த மக்கள்.. சந்திரனை பாம்பொன்று விழுங்குவது போல, பூமியின் நிழல் நிலா மீது விழுந்ததை தங்கள் வெற்றுக் கண்களால் பார்க்கும் அதிசயத்தைப் பெற்றிருந்தனர்.

இந்த அதிர்ச்சி அதிசயம் அறியாது தலைவனும், தலைவியும் கானகத்தில் நின்றிருக்க.. உலகமே அதை வியந்து தான் பேசிக் கொண்டிருந்தது; பார்த்துக் கொண்டிருந்தது.

அங்கே குகையினுள் இருந்தவள்.. அந்தக் கோள்களின் ஓரே நேர்கோட்டுச் சந்திப்பின் தொடக்கத்தில்.. மெல்ல விழிப்பு தட்டியது.

கண்களைக் கசக்கிக் கொண்டே வழியில் முணகிக் கொண்டே எழுந்தவளுக்கு.. தான் எங்கிருக்கிறோம் என்று புரியவில்லை. அது என்ன இடம் என்று புரியவில்லை.

தன் ஆடைகள் எதுவும் இன்றி..உள்ளே தான் அணிந்திருந்த டீஷேர்ட்டோடு மட்டும் இருப்பதைக் கண்டாள் அவள்.

தனக்கு என்ன ஆனது? ஏதானது? ஒன்றும் புரியவில்லை அந்தச் சுரூபினிப் பெண்ணுக்கு. அருகே தீப்பந்தல் மரம் மாத்திரம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருப்பதைக் கண்டவளின் பார்வை சுற்றுமுற்றும் ஆராய்ந்தது.

அவளொரு குகையில் தஞ்சமடைந்திருப்பதும் புரிந்தது. எதேச்சையாக குகையின் வாசல் பக்கம் திரும்பியவளின் கண்கள், அவனைக் கண்டு கொண்டதும் ஆனந்தத்தில் புன்னகை பூத்தது.

அவன்.. அவளுடைய மன்னன்!!

தள்ளாடிய கால்களை கடினப்பட்டு தரையில் அழுத்திப் பதிந்தவளாகத் தன் தலைவனை நோக்கி விரைந்தாள் யாழினி.

யாதவன் நிஜத்தில் அணிந்திருந்தது என்னமோ.. நம் நவீன காலத்துக்கு ஏற்ற ட்ரெக்கிங் ஸூட் தான்.

ஆனால் பெண்ணவளின் கண்களுக்கு மாத்திரம்.. வெற்று மார்புடனும், இடுப்புக்குக் கீழே புராதன ஷத்திரியர்கள் அணியும் தோட்டியுடனும் நின்றிருப்பது போல ஓர் மாயை தோன்றியது.

அவனைக் கண்டதும் வெகுநாள்க் கழித்து தன் தலைவனைக் கண்ட முல்லைநிலத் தலைவி போல ஆனாள் மாது!

அவளுள் சங்ககால இலக்கியங்கள் அழகுறச் சொன்ன பசலை நோய் மிகுந்ததுவோ?

புராதனப் புரவி வீரனை நாடி விரைந்தன சுரூபினியின் பாதங்கள்!!

ஏற்கனவே உணர்ச்சிகள் ததும்ப, அதை கடினப்பட்டு மறைத்துக் கொண்டு நின்றிருந்தவனின் முதுகில் ஜிவ்வென்று உஷ்ணம் பரவியது;கூடவே அவனது சிக்ஸ் பேக்குடன் கூடிய வயிற்றில் ஊர்ந்த இரு மெல்லிய கரங்கள் அவனை அணைத்தும் கொண்டது.

ஆண்மகனின் உடலிலுள்ள கோடான கோடி மயிர்க்கால்களும் சிலிர்த்துக் கொண்டன.

ஆச்சர்ய அதிர்ச்சி மிக, சட்டென்று திரும்பியவனின் கண்ணெதிரே…அவன் காப்பாற்றிய பெண்.

ஆண்மைக்கு எழுதிய அத்தனை புருஷ லக்ஷணங்களுடனும் நின்றிருந்த தன் தலைவனை.. கண்ணீர் மல்கப் பார்த்திருந்தாள் யாதவனின் ஜானு.

கிரகங்களின் சந்திப்போ.. சந்திர ஈர்ப்பின் தாக்கமோ.. அவ்விரவில்.. இதுவரை யாரென்றே தெரியாத யாதவன்.. பூர்வ ஜென்மத்தில்.. அவள் ஒருயிர் ஈருடலாகக் கலந்த.. காதலனாகத் தோன்றினான் அவள் கண்களுக்கு.

பெண்ணின் அணைப்பில் உடல் விறைக்க நின்றவன், ‘‘ஸா.. ரீ.. நா.. நான் தான் உனக்கு ட்ரஸ் கழற்றினேன்.. வே.. வேற வழி தெரியலை..’’ அவளது விழிகளைப் பார்க்கச் சிரிமப்பட்டுத் தட்டுத் தடுமாறி உரைத்தான் அவன்.

அவளோ தன் கலங்கிய விழித்திரைகளோடு.. அவனை கொஞ்சம் நெருங்கி வந்தாள்.

அவன் மூச்சுக்காற்று.. அவள் மூச்சுக்காற்றோடு இரண்டறக் கலந்தது. உரிமையோடு அவன் கையைப் பற்றியவள், அதை எடுத்து அவளது இடையில் வைத்தாள்.

கலங்கிய விழிகள்.. இடையில் அவள் வைத்த கை.. ஆகியவற்றைக் கண்டு.. இடுப்பில் ஏதேனும் கடும் வலியோ என்று பதறிய யாதவனுக்கும், ஏனென்று அறியாமல் கண்ணீர் துளிர்க்கவாரம்பித்தது.

அவள் இடுப்பில் பதிந்த கையை எடுக்கத் தோன்றாதளவுக்கு நடுக்கம் பரவ, "என்னாச்சு ஜானு? ரொம்ப வலிக்குதா?" என்று கேட்டவன்,

தன்னையும் அறியாமல் தான் 'ஜானு' என்னும் சொல்லை உதிர்த்திருந்தான்.

'ஜானு' .. தலைவன் வாயால் வெகுநாட்கள் கழித்து அவள் கேட்கும் ஜானு!!

உரிமையோடு அவன் கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்துக் கொண்டவள், இதழ்களில் சிரிப்பு மல்க, "ஆமா.. உன் ஜானு தான்.. எப்போவுமே உன் ஜானு தான்.. எடுத்துக்கோ.. என் எல்லாமும் உனக்குத் தான் எடுத்துக்கோ" என்றவள்,

அவன், "நான் ஏன் அவளை ஜானு என்றேன்?" என்று யோசிக்கக் கூட நேரமற்று.. அவன்

பின்னங்கழுத்தைத் தன்னை நோக்கி இழுத்து… அவனது முரட்டு மேலரதங்களைக் கவ்விக் கொண்டாள் புராதன புரவி வீரனின் ஜானு!!!

எத்தனையோ பெண்களுடன் எல்லையுடன் பழகியிருக்கும் அவனுக்குள்.. அந்தச் சுரூபினிப் பெண்ணைக் காணக் கூடாத கோலத்தில் கண்டதும் கண்டவிழ்க்கப்பட்ட உணர்ச்சிகள் அலைபாயத் தொடங்கியது.

முதலில் அதிர்ந்தவனுக்கு.. அவளது இதழ்களில் வழிந்து கொண்டிருந்த தேன் ரசம், அவனை பித்தங் கொள்ள வைத்தது. அவள் அருகாமை.. அவள் மூச்சுக்காற்று.. அவள் பஞ்சன்ன தனங்கள்.. அவனது வலிய மார்பில் அழுந்தும் போது கிடைக்கும் சுகம் ஏதோ செய்தது.

இரண்டு நொடிகள் வரை.. அவள் தந்த சுகத்தில் இருந்து விடுபட அல்லாடிய.. அந்த வீரன்.. தனக்கே தனக்கென்று பிரம்மன் படைத்த அழகியின் காதல் முன் தன்வசம் இழந்தான்.

நரம்போடிய அவன் திடகாத்திரமான கைகள், அவள் இடையூடு சுற்றி வளைத்து, அவளைத் தன் அடிவயிற்றோடு இறுக அணைத்துக் கொண்டான்.

இத்தனை நேரம்.. இதழ்களை அவள் ஆளக் கொடுத்திருந்தவன், அவள் இதழ்களைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வந்தான்.

ஆண்மகனின் அதிரடி முத்த வேட்கையில்.. இதுவரை மென்மையாக தேனருந்திக் கொண்டவள்.. கள் அருந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். அவள் இதழில் சுரந்த ஒட்டுமொத்த கள்ளையும் சொட்டு விடாமல் அருந்தினானே யாதவன்.

இருவரும் கண்கள் மூடி ஆழ்ந்த சுக நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனர்.

இடையில் பதிந்த அவன் கை வலிக்கிறது. ஆனால் அதுவும் அவளுக்கு பிடிக்கிறது.

சில பல மணித்துளிகளாக நீண்டு கொண்டே போனது முத்த யுத்தம். யுத்தத்தின் இறுதியில்.. உணர்ச்சிகள் அலைபாய.. அவன் பின்னந்தலை

கேசத்தில் அளைந்த அவள் விரல்கள்..அவன் கேசம் பிடுங்கி எறிய முனைந்தது.

தாபத்தின் உச்சத்தில்… அவள் நின்றிருப்பதை உணர்ந்தவன்.. அவளை விட்டும் பிரிந்து கொண்ட போது.. அவனிலும் ஆசை மழை பொழிந்து கொண்டிருந்த சமயம் அது!!

முன்னே பின்னே பழக்கமில்லாத இந்தப் பெண்ணைத் தீண்டும் போது.. இவள் எனக்கானவள் என்ற உணர்வு ஏன் தோன்றுகிறது? என்ற அறியும் நிலையை அவன் கடந்திருந்தான்.

வந்தவள் மேனகையோ என பிறர் அஞ்சும், கண் மை அஞ்சனம் தீட்டிய விழிகளுடன் நின்றிருந்த பெண்.. யாதவனை உன்மத்த நிலைக்கு அழைத்துச் சென்றாள்.

அவள் நெற்றியோடு.. தன் நெற்றி வைத்தவன், தாபம் நிறைந்த கிறங்கிய குரலில், ‘‘குளிருதுல்லஹ்? உள்ளே போலாமாஹ்?’’என்று கேட்டான் யாதவன்.

அவள் ஏதும் பேசவில்லை. மோகனச்சிலை போல.. மந்தகாசம் சிந்தும் விழிகளுடன் தலைவனின் கண்களையே காதலுடன் பார்த்திருந்தாள்.

அவள் கண்கள்.. தாய்மை, அன்பு, பரிவு, காதல் என எல்லாமே சரிவிகிதத்தில் கலந்து கட்டி தரும்.. அவளது கண்கள்.. அதில் ஈர்க்கப்பட்டவன்,

அடுத்த நொடி.. அவள் அடித் தொடைகளூடு கையிட்டு ஒரு கை, முதுகோடு கையிட்டு ஓர் கை என அவளைக் கையில் தூக்கிக் கொண்டான்.

அவன் விழிகளோடு..இவள் விழிகள் இரண்டறக் கலந்தன.

தன் அருகாமையில் தெரியும் அவன் வலிய கன்னங்களுக்கு.. சின்னச் சின்ன முத்தங்கள் வைத்து தன் காதல் உணர்த்தினாள் யாழினி.

அன்றிரவு.. அவன்.. அவள் கண்களுக்கு.. புராதனப் புரவி வீரனாகத் தெரிய··· காதலோடு தன்னை அவனுக்குக் கொடுக்க சம்மதித்தாள் அவள்.

இவனுக்கோ.. ஓர் பெண்.. அவன் உணர்ச்சிகளை முதன்முறையாகத் தூண்டி விட்ட பெண்ணிடம்.. யாரும் அறியாத தனிமையில் தப்பு செய்ய விளைந்தான் அவன்.

அப்போது.. அந்நொடிகள்..அவன் யாரென அவள் உணர்ந்திருந்தாள்; ஆயினும் இவள் யாரென அவன் உணர்ந்திருக்கவில்லை.

அப்படி அவர்கள் இருவரும் உண்மையில் யாரென அவன் உணர்ந்த சமயம்.. அவள், அவனை உணராமல் போனது விதி!!

அந்தக் குகையில்.. அங்கே நிகழப்போகும் காதல் கூத்தைப் பார்க்க, தெள்ளத் தெளிவாக எரிந்து கொண்டிருந்தது தீப்பந்தல்.

கட்டாந்தரை.. இருவருக்கும் சொர்க்கமாக மாறிப் போனது.

அவளைப் பூப்போல தரையில் கிடத்தியவன், அவள் கூந்தல்காட்டுக்குள் நுழைந்து வாசம் பிடித்தான். கிறங்கிப் போனான்.

தன்னையே மையல் கமழப் பார்த்திருக்கும் அந்த நயனங்களில் இருந்து வந்த ஒரு வித காந்த அலைகள் அவனை ஈர்க்க, மீண்டும் கள்ளுண்ட மந்தியாக அவளது அதரங்கள் கவ்விக் கொண்டான் அவன்.

அந்தத் தருணம் பார்த்து மன்மதனும் காதல் அம்பை விட.. அவர்களைச் சுற்றி எங்கிலும் காதல் வாசம்.

யாதவன்.. பிரம்மன் படைத்த உன்னதப் படைப்பான பெண்ணுடலில் இருக்கும் விந்தைகளைக் கண்டு கொண்ட அழகிய இரவு அது!!

கிரேக்கத்தின் வீனஸ் சிற்பமாய் அவள். அந்த சிற்பத்தை நாணக்கடலில் தள்ளப் போகும் காதலனான் இவன்!

அவன் கண்கள்.. அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தது.

அழகிய வெண்சங்குக் கழுத்தின் கீழே.. மலைமுகடுகளை நிகர்த்த அவள் தனங்கள்!!

முல்லைக்கொடி படரவிடுமளவுக்கு சிற்றிடை..

ஆலிலை வயிற்றின் நடுவில் சின்னத் துளையாய் அழகான தொப்புள்.. யானைத் தந்தத்தை ஒத்த வளவளத்த தொடைகள் என அவள் அந்த மன்மதனைக் கிறங்கடிக்கும் ரதியானாள்.

அவளது வெண் சங்குக் கழுத்தில்.. அவனுடைய முரட்டு அதரங்கள் உரச.. உணர்ச்சியின் பிடியில் நெளிந்தாள் அவ்வாண்யானையின் பிடி. (பெண் யானை)

அவனுக்குள்… அவளைப் பெண்டாள்வது குற்றவுணர்வை ஏற்படுத்தியதோ என்னவோ? சட்டென தலை தூக்கி அவள் விழிகள் பார்த்தான் அவன்.

பிடரி மயிரில் கைகள் அளைய, உஷ்ணப் பெருமூச்சு விட்டுக் கொண்டே, “என்ன?”என்று கேட்டாள் பெண்!!

அவன் எதுவும் பதிலுக்கு சொல்லவில்லை. தன் கழுத்தில் இருந்த மாலை கழற்றி.. அவனுக்கு

இட்டவன், அந்தப் பெண் மீது சொல்லவொணா அன்பு அன்றிரவு மிகையாகத் தோன்ற,

பிறை நுதலில் இனிய முத்தமும் கொடுத்தான்.

அவன் தந்த பரிசில்.. மாலை தந்து.. அவளது ஸ்தானம் உணர்த்திய அவன் அன்பில் உள்ளம் கரைந்தவள், அவனைத் தன்னோடு அணைத்து.. மார்புப் பள்ளத்தாக்கில் இடம் கொடுத்தாள்.

அதன் பின் நடந்தது எல்லாமே… காதலித்த இரு மனங்கள் மட்டும் சுகிக்கும் உன்னதமான இன்பம்!!

தன் முன்னே ரதியாகக் கிடந்தவளின் உடலில் எங்கெங்கோ அலை பாய்ந்தன அவன் இதழ்களும், கைகளும்.

தன் புராதன புரவீ வீரனின் பிடியில்.. முத்த தேடலில் தன்னை முழுவதுமாக இழந்தாள் சுரூபினிப் பெண்!!

அவன் காதோரம், அவள் முணகிய சத்தங்கள் எல்லாம் ஆண்மகன் வேகத்தை இன்னும் கூட்ட.. அங்கே நிகழ்ந்தேறியது மாறனின் கட்டில் யுத்தம்!

குளிர்!உடலை வாட்டும் குளிர்!

எதிரே ஓர் பேரழகு மங்கை!! யாருக்குத் தான் சலிக்கும்?

யாதவன் பெண்ணவள் தந்த சுகத்தில் கிறங்கிப் போனான். ஒரு சேர தேனும், பாலும் அருந்தவும் செய்தாள்.

யாரும் கண்டதில்லை ஆதாமும், ஏவாளும் செய்த காதலை. ஆனால் காதலித்த இரு மனங்கள் அனுபவிக்காமல் போனதில்லை காதல் சுகத்தை.

அவன் நெற்றியில் பட்டு உரசும் அவள் மூச்சுக்காற்று..

அவன் நாசி உணரும் அவள் பெண்மை வாசம்

அவன் இடுப்பைக் கிடுக்கிப்பிடி பிடித்திருக்கும் அவள் கால்கள்..

என எல்லாமும் அவனைப் பித்துபிடிக்கச் செய்ய.. காதலோடு கங்கையைச் சேர ஓடோடி வந்தான் சாகரன்!!

வல்லினமும், மெல்லினமும் புணர்வது இலக்கணமாயின் அங்கே நடந்தேறியதும் காதல் இலக்கணம்!!

அவனது ஒவ்வொரு அசைவுக்கும் உயிர்த்து மரித்தாள் பெண். அவளது ஒவ்வொரு தீண்டலிலும் சுவர்க்கத்துக்கும், நரகத்துக்குமாகப் பயணப்பட்டு வந்தாள் அவள்.

“ஜ்ஜானுஊஊஹ்… மை ஜ்ஜானுஊஊஹ்!!”- உணர்ச்சிகளின் உச்சத்தில் பிதற்றினான் யாதவன்!!

அவனது பெருமூச்சுக்கள் வேறு ஏதோ செய்ய… அவன் முதுகில் ஆழப்பதிந்தன அவள் நகங்கள்!!

காதலனும் காதலியும் ஒரு மனநிலையடைந்து வெற்றி எல்லையைத் தேடி வந்த நேரம்.. அவன் காட்டிய அதிரடியில்.. ஏதோ வேரோடு பிடுங்கி எறியப்பட்ட உணர்வு!!

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

அவனைத் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டு.. காதல் உணர்த்தினாள் அவனது ஜானு.

இனிய கூடல் முடிந்து.. அவன் மல்லாந்து படுத்த சமயம்.. இருவர் வெற்று மேனியும் ஒன்றையொன்று உரச, அவன் முகமெங்கும் சின்னச் சின்ன முத்தம் கொடுத்தாள் யாழினி.

அவன் கைகளோ அவளை அன்புடன் அணைத்திருந்தன.இதழ்களில் ஓர் திருப்திப் புன்னகை!

காதலின் பூரணத்துவத்தை காதலிக்காமலேயே அனுபவித்த உணர்வு அவனுக்குள் தோன்றியதே ஒழிய.. தப்பு செய்து விட்டோமே என்ற குற்றவுணர்வில்லை.

அவள் வைத்த சின்னச் சின்ன முத்தங்களில் சூடானவன், மீண்டும் ஓர் அதிரடியான காதல் யுத்தத்திற்குத் தயாராக, கிளுக்கி நகைத்துக் கொண்டே சம்மதம் சொன்னாள் அவள்!!

இரவு முழுவதும் ஆடிக்களித்த காதல் சந்நியாசிகள்.. விடிந்தது கூடத் தெரியாமல் உறங்கியும் போயிருந்தனர்.

கூடலின் களைப்பில் அவள் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்க.. முதலில் எழுந்தது என்னமோ.. யாதவன் தான்.

‘ஆர்க்கியோலஜிஸ்ட் யாழினி… கூடிய சீக்கிரமே நீ.. திருமதி. யாதவ் மகாதேவன்’ என்று மெல்லிய குரலில் அவளைப் பார்த்து சொன்னவன், அவள் பிறை நுதலில் மென்மையாக முத்தமொன்றை பரிசளித்து விட்டு,

மெல்ல எழுந்து.. வெளியே வந்து.. பிரதான பாதையைக் கண்டுபிடிக்க வெளியே போனான்.

இரவு நேரம் வரை.. பூர்வஜென்ம நினைவுகளின் பிடியில் இருந்தவள்.. காலையில் கண் விழித்த போது.. பழைய யாழினியாகவே எழுந்தாள்.

உடலெங்கும் அடித்துப் போட்டாற் போன்ற ஓர் வலி ஊடுருவ.. நெற்றியிலும் இதழ்களிலும் காயம் ஏற்பட்டிருப்பதைக் கண்டாள் அவள்.

கண்களை சுருக்கி யோசித்தவளுக்கு.. க்ளிஃப் வீவ் பாயிண்ட்டினைப் பார்க்கவென்று புறப்பட்டு.. பள்ளத்தில் சரிந்து விழுந்தது ஞாபகம் வந்தது.

அப்புறம் எப்படி இங்கே.. இந்தக் குகைக்கு வந்தாள்?? என்ன யோசித்தும் ஒன்றும் ஞாபகம் வராமல் போகவே, சறுக்கி விழுந்தவள் தான் காயத்தோடு எழுந்து வந்து குகையில் அடைக்கலமாகியிருக்க வேண்டும் என்று தோன்றியது.

மெல்ல எழுந்தவளுக்கு இடுப்பு கொஞ்சம் வலிக்கத் தான் செய்தது.

நேற்று உருண்டதில் வந்த வலி என்று எண்ணிக் கொண்டவள், குகையை விட்டும் வெளியேறி.. தன் ஆய்வாளர்கள் இருந்த இருப்பிடத்தை தேடி பயணப்பட்டாள்.

டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணன் அவளைத் தேடி வரும்முன்னர்.. தன் டென்ட்டை சென்றடைய வேண்டும் என்றே உள்ளம் பரபரக்க.. அங்கே போர்வையும், விரிப்பும் எப்படி வந்தது என்று யோசிக்க மறந்து போனாள் யாழினி.

நடந்தது அனைத்தும் ஒன்று விடாமல்.. அவள் காட்சித் திரையில் விரிய.. பட்டெனக் கண் திறந்தவளின் நெற்றியெங்கும் குபுகுபுவென வியர்த்திருந்தது.

'ஓ மை காட்''' அன்றிரவு.. அவளது ஆசைக்கு இணங்கி நடக்குமாறு அழைத்திருப்பது அவள்?? ஆனால் அவள் அந்த இனிய கூடலையும் தான் 'ரேப்!! ரேப்!!' என்று எத்தனையோ முறை சொல்லி,

அவனை அசிங்கப்படுத்தியிருந்தும், ஒரு தடவையாவது 'நீ தான் அன்னைக்கு என்னைக் கூப்பிட்ட?' என்று சொல்லிக் காட்டியிருக்கிறானா அவன்?

யாதவனின் அன்பை கொஞ்சம் கொஞ்சமாக உணரத் தொடங்கிய நேரம்.. அவளது நயனங்களில் துளிர்த்தது விழிநீர்!!

ஆனால் அன்று அவள் அறியாத சிலவும் நடந்தேறியது.

யாதவன் திரும்பி குகைக்கு வந்த போது அவள் இருக்கவில்லை. விழித்ததும் சென்று விட்டாளே? என்று உள்ளுக்குள் கவலை தோன்ற,

அவன் முகத்தைக் காணப் பிடிக்காமல் தான் சென்றாளோ? இல்லை குளிருக்கும், தனிமைக்கும் பயன்படுத்திக் கொண்டாளோ? என்று பலவிதமான யோசனை ஓடியது அவனுக்குள்.

ஆனால் அவளை அந்த மாதிரி பெண்ணாக ஏனோ எண்ண முடியவில்லை. ஓர் பெண்ணைக் கையாளும் ஆடவனுக்குத் தெரியும் அவள் எத்தகையவள் என்று! அந்த வகையில் அவள் பரிசுத்தமானவள் என்றே ஆணித்தரமாக நம்பினான் அவன்.

அவள் அவனிடம் சொல்லாமல் சென்றது சிறு கோபத்தைக் கொடுக்க.. நேற்றிரவு நடந்ததையும், அதனால் முகிழ்த்த காதலையும் தன் இதயத்தோடு பூட்டி வைக்க சித்தமானான் யாதவன்.

அவள் நடந்ததை மறந்து போனாள். அவன் நடந்ததை மறக்க முயன்றான்.

ஒருவாறு கூட்டத்தோடு வந்து சேர்ந்து, டாக்டர். அமர்நாத் ராமகிருஷ்ணனிடம், திட்டும் வாங்கி கொடைக்கானலை விட்டும் கிளம்பிய பிறகும் கூட.. யாழினிக்கு நடந்தது எதுவும் நினைவில் இருக்கவேயில்லை.

யாதவன் தந்த மாலை!! அவன் தந்த மாலையை.. தியா வேறு, "உனக்கொரு கிப்ட் வைச்சிருக்கேன்… கிப்ட் வைச்சிருக்கேன்" என்று குடித்து விட்டு சொன்ன நேரம் தந்திருப்பாள் போலும் என்று,

அந்த "யா" வடிவ பென்டன் மாலையை எண்ணிக் கொண்டாள் அவள்.

"யாழினி" என்னும் அவள் பெயரின் முதல் எழுத்து "யா" … "தியா" வின் கடைசி எழுத்து "யா" .. அதனால் தான் தான் "யா" வடிவ பென்டன் என்று எண்ணினாள் யாழினி.

தியாவோ.. கொடைக்கானலில் ஷாப்பிங் சென்ற நேரம்.. அந்த மாலையை பர்ச்சேஸ் செய்திருக்கக் கூடும் என்றெண்ணி அதைப் பற்றிக் கேட்காமல் விட்டதுவும்,

யாழினிக்காக அவள் வாங்கிய பரிசை கொடுக்க மறந்து போனதுவும் யாழினியின் துரதிர்ஷ்டம்.

திரும்பவும் கீழடி அகழ்வாராய்ச்சிக்கு அவள் திரும்பிய நேரம்.. அவளுடைய பாஸ்போர்ட் காலாவதியாகும் நாளும் நெருங்கவே செய்தது.

புது பாஸ்போர்ட்டிற்காக.. அந்த சம்பவம் நடந்து சரியாக பத்து நாட்களின் பின்னர், அவள் மீண்டும் இலங்கை வரும்படியும் நேர்ந்தது.

சரியாக டிசம்பர், இருபத்தைந்து, கிறிஸ்மஸ் நேரம் அது.

அவளது நண்பி டாக்டர். தியா வேலை பார்க்கும் ஹாஸ்பிட்டலில் இரத்த தானத்துக்கு.. இரத்த மாதிரியைக் கொடுத்து விட்டு இமிகிரேஷன் டிபார்ட்மென்ட் வழியாக அலையவும் நேர்ந்தது.

ஒரே நாளில், புது பாஸ்போர்ட் கிடைத்து விட.. டிசம்பர், இருபத்தாறு.. மீண்டும் அவள் சென்னைக்கு வந்து சேர்ந்தாள்.

அதன் பிறகே டிசம்பர் முப்பத்தொன்று.. நிவ்யர் ஈவ் அன்று யாதவனுக்கு ஆக்ஸிடெண்ட் நடந்ததும், மூன்று மாத கோமாவில் இருந்த போது பூர்வஜென்ம நினைவுகள் வந்து.. அவளைத் தேடி அவன் வந்ததும் என எல்லாமே நிகழ்ந்தது.

அப்படியானால் டிசம்பர், பதினைந்தில் நடந்த கூடல் தான், இந்த சிசுவுக்கு காரணமா?

அதிர்ச்சியில் அகல விரிந்தன அவள் கண்கள்.

அச்சமயம் அவள் யோசனையில்.. அவள் இலங்கை நண்பி டாக்டர். தியா வாட்ஸ்ஆப்பில் அனுப்பிய வாய்ஸ் மெஸேஜின் ஞாபகம் வந்தது.

தெரிந்தோ தெரியாமலோ.. அவள் வாழ்வில் வந்த இரு தியாக்களுமே.. ஒரு வகையில் அவள் வாழ்வில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தனர் என்பது என்னவோ உண்மை!!

யாதவனுடனான திடீர் திருமணத்தின் பின்பு டாக்டர். தியா அனுப்பிய மெஸேஜ்.

அப்போது.. அந்தத் திருமண மண்டபத்தில் நிகழ்ந்த நிகழ்வின் வெறுப்பில் தியாவின் கான்டாக்ட்டை ப்ளாக் செய்து வைத்திருந்த யாழினிக்கு காலம் கடந்து ஞானோதயம் பிறந்தது.

அந்த வாய்ஸ் மெஸேஜில் என்ன இருக்கிறது என்று பார்க்கும் எண்ணமும் மிகைத்தது.

டாக்டர். தியாவின் செல்லில் இருந்ததெல்லாம் இவை தாம்!!

"யாழி..நீ ரொம்ப எக்ஸோஸ்டட்டா இருப்பேன்னு தெரியும்.. பட் நான் சொல்றதைக் கொஞ்சம் நிதானமா கேளு.. ராம் அத்தனை பேர் முன்னாடி , 'உன் குழந்தைக்கு அப்பா யாரு?'ன்னு கேட்டது எனக்கும் பிடிக்கலை..

அவன் உன்னோட ஃபியான்சியாக முன்னாடியிருந்தே.. உனக்கு ஒரு நல்ல ஃப்ரண்ட்..அப்படிப்பட்டவன் உன்னைப் பற்றி

புரிஞ்சுக்காம பேசும் போது அவன் மூஞ்சிலேயே பஞ்ச் பண்ணனும்னு தோணுச்சு..

ஆனால் நீ அந்தக் குழந்தை எப்படி வந்ததுன்னு தெரியாமல் முழிச்சிட்டிருந்தப்போ.. உனக்கு தெரியாமல் தான் ஏதோ நடந்திருக்குன்னு புரிஞ்சுது..

உனக்கு ஒரு ஃப்ரண்டா.. டாக்டரா.. ஒரு வெல்விஷரா.. சில விஷயங்களை அப்போவே தெளிவாக்கணும் தோணுச்சு..

ஆனால் நான் அதை அப்போவே சொல்லியிருந்தால்.. அது உன் கேரக்டரை எல்லார் முன்னாடியும் இன்னும் ஸ்பாய்ல் பண்ணும்னு தான் அமைதியா இருந்தேன்.

ம்ம்… எப்படி சொல்றதுன்னு தெரியலை.. ஆனால் நான் இதை சொல்லியே ஆகணும்னு தான்..

நீ என் கோல்ஸ்க்கு ஆன்சர் பண்ணாததால்.. இந்த வாய்ஸ் மெஸேஜ் அனுப்புறேன்.. கண்டிப்பா கேளு..

நீ எனக்குக் கொடுத்த ப்ளட் சாம்பிள்ஸ்ல.. உன்னோட இரத்தத்துல எச். ஸீ. ஜி லெவல் ரொம்ப அதிகமா இருந்தது. அது ப்ரெக்னன்ட் லேடீஸ்க்கு சுரக்குற ஒரு வகையான ஹோர்மோன்..

எனக்கே ரொம்ப ஆச்சர்யமா இருந்தது.. ஸோ நான் உன் ப்ளட் சாம்பிள்ஸை.. ஸ்பெஸிஃபிக் ப்ளட் சாம்பிள் யூனிட்க்கு அனுப்ச்சேன்..

முன்னே மாதிரி.. ப்ரெக்னன்ட்டா? இல்லையான்னு காத்திருக்க.. எச். ஸீ. ஜி லெவல் கொஞ்சம் கொஞ்சமா அதிகரிப்பதற்காக காத்திருக்க நாற்பது நாட்கள் காத்திருக்கணும்ன்ற காலமெல்லாம் மலையேறிப் போச்சு..

ப்ளட் டெஸ்ட்ஸ் ஆர் மோர் சென்ஸிடிவ் தேன் யூரின் டெஸ்ட்.. என்ட் மே டிடெக்ட் ப்ரெக்னன்சி வெரி அக்யூரேட்லி.

"குவான்டிடேடிவ் ப்ளட் டெஸ்ட்" -இதனால் ரொம்ப துல்லியமான தரவுகளைப் பெற முடியும்..

அதில் உனக்கு கரு தங்கி “ஏழு நாள்” னு தெரிய வந்தது.. அப்படின்னா நீ ப்ளட் டெஸ்ட் தரமுதல் பத்து நாளைக்கு முன்னாடி தான் உனக்கே தெரியாமல் தப்பு நடந்திருக்கு.

ஏழு நாளில் கரு தங்குமான்னு கேட்கலாம்.

ஹேவிங் அன்ப்ரொட்டெக்டட் செக்ஸ் எட் எனிடைம் இஸ் ரிஸ்க்கி.. கேன் ரிசல்ட் இன் ப்ரெக்னன்சி. ஓல்ஸோ ஹெல்தி ஸ்பெர்ம் கேன் ஃபர்ட்டிலைஸ் என் எக் ஃபோர் ஸெவன்ட்டி டூ ஹவர்ஸ் ஆப்டர் இஜாக்யூலேஷன்.. இட் மீன்ஸ் த்ரீ டேய்ஸ்.. மூணு நாள் போதும்.. ஒரு கரு யூடரஸில் தங்கி.. தன்னை நிலைப்படுத்திக்கிறதுக்கு..

நூற்றில் எட்டு வீதமான.. பெண்களுக்கு..இப்படி நடக்க சான்ஸஸ் இருக்கு. என்ட் இட்ஸ் வெரி வெரி ரேரர்..

உனக்கும் அந்த அதிசயங்களில் ஒண்ணு தான் நடந்திருக்கு..

ஸோ.. யோசிச்சுப் பாரு.. நீ ப்ளட் டெஸ்ட் தர பத்து நாள் முன்னாடி என்ன நடந்ததுன்னு யோசிச்சுப் பாரு.. உன் குழப்பத்துக்கு ஆன்சர் கிடைக்கும்..

அதேசமயம்.. யாதவன் சாரைப் பார்க்குறப்போ.. அவர் பொய் சொல்றவரா எனக்குத் தோணலை.. அவர் கண்கள்ல உனக்கான காதலைப் பார்த்தேன்.. நீ அவமானப்பட்டு நின்னப்போ.. அவர் முகத்துல ஒரு கோபத்தைப் பார்த்தேன்..

அத்தனை பேர் முன்னாடி.. “நான் தான் உன் குழந்தைக்கு அப்பா” ன்னு சொல்லி.. உன் கழுத்தில் தாலி கட்டி தில்லா அழைச்சிட்டுப் போறாருன்னா.. கண்டிப்பா அதில் ஓர் உண்மை இருக்கும்.

எனக்கென்னவோ ராம் உனக்கேத்தவன் இல்லை.. உனக்கேத்தவரு யாதவ் சார் தான்னு தோணுது..அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காதே.. லைஃப் மேட்டர் யோசிச்சு முடிவெடு..

மெஸேஜ் உனக்கு ஹெல்ப் ஃபுல்லா இருக்கும்னு நம்புறேன்.. டேக்கேர்..”என்று முடிந்தது அந்த வாய்ஸ் மெஸேஜ்.

இத்தனை நாளும் அவள் குழம்பித் தவித்த கேள்விக்கு விடை கிடைத்தது.

அவள் கண்களில் நின்றும் நில்லாமல் வழியத் தொடங்கியது கண்ணீர். அப்படியானால் இது யாதவன் தந்த குழந்தை. இந்தக் குழந்தையின் தந்தை.. அவன் கணவன் யாதவ்!!

அந்தக் கூடலும் கூட அவளாகவே விரும்பி அவளை ஒப்படைத்த இனிய கூடல்.. பலாத்காரமோ, சுயநினைவற்றிருந்த போது நடந்தேறியதும் அல்ல!!

அவள் நம்பத் தொடங்கினாள். அவனது காதலை சிறுகச் சிறுக உணரவும் தொடங்கினாள்.

அங்கணம் அந்த மனநிலை பிறழ்வானவர் சொன்னது போல.. அவள் நம்பத் தொடங்கிய நேரம் பிரச்சினையும் தொடங்கியது.

அத்தியாயம் 19

யாழினியின் கண்களில், அன்று நடந்த உண்மை அறிந்ததன் பின்னர், சரம் சரமாகக் கண்ணீர் கோர்க்கத் தொடங்கியது.

அவள் இதழ்களோ, அவளையும் அறியாமல் சன்னமாக முணுமுணுக்கத் தொடங்கியது.

தழுதழுத்த குரலில் தனக்குத் தானே சின்னக் குரலில், “இந்த மாலை “யா” வடிவ பெண்டன் வந்த மாலை இ.. இஇது.. என்.. ராஜ்.. ராஜ்.. தந்தது?” என்று அனிச்சை செயல் போல அவளுடைய கழுத்தை வருடிய கைகள் அப்படியே நின்றது.

அவள் கழுத்தோடு சரசமாடிய மாலை இல்லை அங்கே. அவள் கைகள் இறுகப் பற்றியிருந்தது ஊர் அறிய அவன் கட்டிய தாலிச்சரடை.

இத்தனை நாட்களாக அவள் கழுத்தில் சரசமாடிய தங்க மாலை “இல்லை” யென்றானதும்.. உள்ளுக்குள் திடீர் கலக்கம் எழுந்து விரவியது அவளுக்கு.

அதிர்ச்சி தாளமாட்டாமல் திரும்பவும் முணுமுணுத்தன அவள் இதழ்கள்.

“அந்த மாலையில் தானே.. அந்த மோதிரத்தையும் கோர்த்து வைச்சேன்” -தன்னைத் தானே நொந்து கொண்டவளாக நெற்றியில் கை வைத்துக் கொண்டாள்.

என்ன கணையாழியை அதில் கோர்த்தாளா?

ஆம், நேற்று கவனயீனமாக மோதிரம் தொலைத்து,

அதை யாதவன் எடுத்து வந்து அவள் கையில் திணித்ததன் பின்பு தான், அந்த யோசனை அவளில் உதயமானது.

நூற்றியெண்பது கோடி ரூபா மோதிரத்தின் விலை வேறு அவளை உறுத்தவே, மோதிரத்தை மாலையோடு கோர்த்துக் கொண்டாள் யாழினி.

“இனியொருவாட்டி இந்த மோதிரம் தொலைஞ்சது.. அப்புறம் நீ த்தொலைஞ்ச..!!”- மனக்கண் முன் வந்து விழியுருக்கி, சுட்டு விரல் நீட்டி எச்சரித்த கணவனின் கோப முகம் வேறு அவளுள் வந்து போக, நெற்றியெங்கும் முத்து முத்தாக வியர்வை போடலானது அவளுக்கு.

“எங்கே தொலைஞ்சிருக்கும்? நேற்று நைட்.. யாதவ் தூக்கத்திலே இருந்து எழுப்பியப்போ கூட இருந்ததே?? அப்புறம் எங்.. எங்கே போ.. ப்போயிருக்கும்?” என்று திரும்பத் திரும்ப முணுமுணுத்தவாறு,

பதற்றத்துடன் சிந்தித்தவளுக்கு நேற்றிரவு மன்னவனோடு கானகம் சென்ற போது..ஓர் மராமரத்தின் அடியில் மண்ணைப் புடைத்து வளர்ந்திருந்த வேரோடு கால் இடறியது ஞாபகம் வரலானது அவளுக்கு.

சர்வ நிச்சயமாக அங்கே தான் அது விழுந்திருக்கக் கூடும் என்று ஆணித்தரமாக நம்பியது மனம்.

அவள் சிந்தனையில் மாலையோடு கோர்த்த மோதிரம் அடைய வேண்டும் என்ற வெறி மட்டுமே அவள் உள்மனக்கிடக்கையில் ஓடிக் கொண்டேயிருந்தது.

வெளியே மழையா? இடியா? எதையும் நினைத்து மருகவில்லை அவள் இதயம்.

புராதனப் புரவி வீரனின் சுரூபினிப் பெண் நொடியும் தாமதியாமல் கானகத்தை நோக்கி விரைந்தாள்.அந்த மோதிரத்தை பூதக்கண்ணாடி வைத்து தேடாத குறையாகத் தேடி.. அதை மீளப் பெற வேண்டும் என்ற அபிலாஷையுடன் விரைந்தாள்.

யாதவனின் அரண்மனையின் இருந்து ஆயிரம் வாசல்களில் அவள் எந்த வழியாக.. கானகத்தின் எல்லை அடைந்தாள் என்று கேட்டால் அவளுக்கும் கூட சொல்லத் தெரியாது. ஆனால் அவள் கால்கள் கானகத்தை நோக்கித் தான் விரைந்து கொண்டிருந்தது.

கானகத்தின் செம்மண்ணை முத்தமிட்ட மழைநீர் செந்நீராக பள்ளத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

பெரும் பெரும் இராட்சச இலைகளைக் கொண்ட மராமரங்கள் எல்லாம் மழையில் நனைந்து, புத்தம் புதிய பொலிவுடன் காட்சியளிக்க, அவ்விடத்தை சுற்றிலும் குளிர்ந்த காற்று ஆக்கிரமித்திருந்தது.

மரங்களின் பச்சிலை வாசம் எங்கணும் காற்றில் எழுந்து பரவிக் கொண்டுமிருந்தது.

அத்தகையதோர் கானகத்தை நோக்கி… சின்னச் சின்னதாக தூறிக் கொண்டிருந்த மழையில், குழந்தை சுமந்தவளாக விரைந்து வந்தவளின் விழிகள்,

அடர்ந்த புற்கள் வளர்ந்திருந்த தரையைத் தான் துலாவிக் கொண்டு வந்திருந்தது.

அங்கணம்..தரையில் மழைத்துளிகளோடு ஏதோ மினுக் மினுக்கென்று மினுமினுப்பதைக் கண்டவள், அதை உற்றுப் பார்த்த போது… அவள் இதயம் மெல்ல ஆசுவாசம் அடைந்தது.

அதே மோதிரம்.. யா வடிவ பெண்டனோடு கட்டுண்டு கிடக்கும் அதே கணையாழி!!

அதைக் கண்ட நிம்மதியில் விழியோடு வழிந்த.. கண்ணீர் மழை நீரோடு இரண்டறக் கலக்க, கணையாழியை எடுக்க காலடி எடுத்து வைத்தாள் பெண்.

சரியாக நேற்று கால் தடுக்கிய அதே இடத்தில் இன்றும் அவளுடைய கால் தடுக்கியது. நேற்றிரவு அவளைத் தாங்கிப் பிடித்துக் கொள்ள கணவன் இருந்தான்!

இன்றோ? அந்தோ பரிதாபம் யாருமே இருக்கவில்லை. அவளைப் பிடித்துக் கொள்ள.

அதே இடத்தில், மண்ணைப் புடைத்து வளர்ந்திருந்த வேர் தடுக்கி விழுந்தவளின் சிசுவேந்திய வயிறு.. அந்த வேரோடு போய் இடித்துக் கொண்டது.

அடிவயிற்றில் இருந்து.. மூச்சை நிறுத்தும் ஓர் வலி இடுப்பிலும், இதயத்திலும் எழ, வலி தாங்க முடியாமல்.. இடுப்பைப் பிடித்துக் கொண்டு,

“ஆஆஆஆஆஆ!!”என்று கானகமே அலறக் கத்தினாள் அவள்.

அங்கணம் பேரொலியாகக் கேட்ட இடிமுழக்கம் வேறு.. அவள் சத்தத்துக்கு ஈடு கொடுத்து,

அவள் கத்தலை மறைக்க, கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்துடன் வானிலிருந்து எட்டிப் பார்த்தது மின்னல்.

அந்த மின்னலின் ஒளியில் இருட்டிக் கொண்டு வந்தது அவள் கண்கள். பின்னந்தலை சுற்றுவது போல ஓர் பிரம்மை எழுந்து.. அவள் நிஜமாகவே மூர்ச்சயடைந்த நேரம்.. அவளது விழிகளுக்குள்,

எங்கும் வெள்ளை வெளேரென்ற வெளிச்சம் பரவ ஆரம்பித்தது.

அது ஓர் கருங்கற்குகை.

குகையின் ஓர் இடுக்கில் வழிந்து கொண்டிருந்த மதுரமான நீர்ச்சுனை.. யாருக்கும் எந்த தொந்தரவுமின்றி.. ஓர் அருவி போல உருவெடுத்து..

குகையின் புறுமுதுகுப் பக்கமாக வெளியே பாய்ந்து கொண்டிருந்தது.

ஏதோ ஆதிகால மனிதன் திட்டமிட்டுக் குடைந்திருப்பான் போலும்.. கட்டில் போலவே சுவரோடு குடையப்பட்டிருந்தது ஓர் மஞ்சம்.

அந்த மஞ்சத்தில் தான் சுயநினைவேயற்றுப் படுத்திருந்தான் நம் புராதனப் புரவி வீரன்!!

ராத்திரி வேளையில், அந்தச் சுரூபினிப் பெண்ணை.. கழுதைப்புலியிடம் இருந்து காப்பாற்றி விட்டு மண்ணில் வீழ்ந்த அதே வீரன்!!

அவன் மார்பெங்கும் கொடிய விலங்குகளின் பற்தடங்களும், நகத்தடங்களும் பட்டு.. இரத்தம் வடிந்த சுவடுகள் இருக்கக் கண்டாள் சுரூபினிப் பெண்.

அவன் இதயங்கவர்ந்த சுரூபினிப் பெண்ணும்.. அங்கேயே தான் அமர்ந்திருந்தாள். கையில் பச்சிலைக் களிம்புகள் கொண்ட பாத்திரத்துடன்.. அந்தப் புரவி வீரன் முன் நின்றிருந்தாள் அவள்.

அவளது சுந்தர விழிகள் அவ்வீரனை மேய்ந்தது. அலைஅலையாக அலை பாயும் கேசம், அடர்ந்த புருவ முடி.. வலிமையான தாடை..

முறுக்கேறிய புஜங்கள்.. கவசம் அணியாமலேயே அணிந்தது போல காட்சியளிக்கும் அவன் மார்புகள்..

வன்மையான வயிற்றுத் தசைகள் என.. அவன் பார்ப்பதற்கு யாராலும் வென்றிட முடியாத ஓர் போர் வீரனாகவே தெரிந்தான் அவள் கண்களுக்கு.

வில்லேந்தி அவன் நின்ற போது.. அவன் மெய்ந்நிலை தான் என்ன? அவளும் மூச்சடக்கி.. அந்த அம்புகள் தன்னைத் தான் குறிபார்க்கின்றன என்றெண்ணி.. ஸ்தம்பித்தது என்ன??

அவன் விடுவிம் அம்பு.. அவள் கார்குழல் உரசியவாறு சென்று.. கழுதைப்புலி தாக்கிய விந்தையை.. இன்னும் கூட சரிவர உள்வாங்க முடியாமல் நின்றாள் மாது.

ஓரிரு செக்கன்கள் தன்னை மறந்து அவன் வனப்பில் மெய்மறந்து நின்றவள் அடுத்த நொடி, சிந்தை தெளிந்தாள்.

‘என்ன இது..? இதற்கு முன்.. ஓர் வீரப்புருஷனை நீ கண்டதேயில்லையா?’என்று கேலி பேசியது பெண்ணுள்ளம்.

அவன் பக்கத்தில் வாகாய் அமர்ந்து கொண்டவள், அவன் காயத்தடங்களுக்கு பச்சிலைக் களிம்பு தேய்க்க நாடினாள் போலும்.

அவன் வெற்று மார்புகளை.. களிம்பேந்திய கைகள் தொட்ட போதே.. அவன் மார்புச் சூடு அவளையும் சுட்டது.

உள்ளுக்குள் இதுவரை இல்லாத நாணம்.. ஓர் அவஸ்தை எழுந்து··· உடல் முழுவதும் விரவிப் பரவ, தன் கீழுதட்டை மெல்லக் கடித்துக் கொண்டாள் அச்சுரூபினி.

அவன் கைச்சந்து, அடி வயிறு, இடை என சுற்றி வர சிரத்தையுடன் களிம்பு தடவியவள்,

அவனது திண்ணிய மாரில் விடுபட்டுப் போயிருந்த ஓர் காயத்திற்கு களிம்பு தடவி முனைந்த வேளை,

அவள் கையை திடுக்கென பிடித்து இழுத்தது புரவி வீரனின் கைகள்.

அப்படி அவன் இழுத்த இழுப்பில், அவனது வலிய திடகாத்திரமான மார்புகளோடு.. 'நச்' சென்று அழுந்தப் பதிந்தன தலைவியின் மென்மையான தனங்கள்.

அவன் மார்பில் அவள் தடவிய களிம்புகள் எல்லாம் ஓரவஞ்சனையே காட்டாது .. இவள் பெண்மைக் கோலத்துக்கு மேலான கழுத்துப் பகுதியில் ஒட்டிக் கொள்ள,

களிம்பின் ஜில்லென்ற உணர்வையும், அவன் வெற்றுமார்பின் சூட்டையும் ஒருசேர அனுபவித்தாள் பெண்.

அவனது நரம்போடிய திடகாத்திரமான கைகளோ.. அவளது சிற்றிடையை சுற்றி வளைக்க,

அவன் பட்டென்று கண் திறந்தான்; அதிர்ந்தான்.

யாரோ பகைவரோ? என்று எண்ணியவன், பஞ்சுமிட்டாய் குவியல் சுகத்தை அனுபவித்ததும் இன்னும் ஸ்தம்பித்தான்.

இத்தனை நாளும் காணக்கிடைக்காதா என்றேங்கிய அவன் உள்ளம் கவ்விய சுரூபினிப் பெண், அவன் கண்கள் எதிரே.

அவன் கண்கள்.. அவள் கண்களை ஆச்சர்ய அதிர்ச்சியுடன் பார்த்திருக்க.. இவளோ அவனது திடகாத்திரமான பிடியில் அவஸ்த்தையுடன் நெளியலானாள்.

அவள் அன்று கூந்தலில் சூடியிருந்த ஒருவிதமான காட்டுமல்லி வாசம்.. அந்த வீரனின் நாசிக்குள் புகுந்து.. புதுவிதமான கிறக்கத்தை அவள் பால் உண்டு பண்ணியது.

அதன் விளைவாக காதல் பித்து அதிகமாகி.. அவன் கண்கள் சிவந்தன. கொடியிடையை சுற்றி வளைத்திருந்த அவன் கைகளின் அழுத்தம் இன்னும் கொஞ்சம் கூடியது.

அவன் மார்புகளோடு.. அந்தப் பஞ்சுக்குவியல் இன்னும் அழுந்தும் சுகத்தை.. அவன் கண்கள் கிறங்கி கள்ளத்தனமாக அனுபவிக்க, அதற்கு இடையூறாகக் கேட்டது அவள் குரல்!!

“க்கை.. கை.. கையை எடுங்கள்.. நீ.. நீங்கள் செய்வது அநாச்சாரம் ..!!”என்றவளாக.. அவனது வலிய பிடியிலிருந்து விலகி.. எழுந்து கொண்டாள் சுரூபினிப் பெண்.

அவள் எழுவதைக் கண்டு தானும் எழுந்தவன் கண்களில் தெரிந்த சோர்வு..அவள் விலகலில் இன்னும் கொஞ்சம் அதிகமானது.

ஒரு கால் மஞ்சத்தில் கிடையாக இருக்க, மறு முழங்காலை மட்டும் உயர்த்தி.. அதில் தன் முழங்கை வைத்து அமர்ந்தவன், தன் அருகாமையில் அமர்ந்திருக்கும் சுந்தரப் பெண்ணை விழிகள் விரியப் பார்த்தான்.

அவன் முகத்தை விட்டும் கோபத்தில் திரும்பியிருந்த அவள் மதிவதனம் சிவப்பதை இரசித்துப் பார்த்தவன் கேட்டான்,

“எது அநாச்சாரம்?..” என்று.

காயமுற்றுப் படுத்தவன்.. எழுந்தவுடன் இப்படி திடகாத்திரமாக பேசவும் கூடுமோ? இவன் மனிதனா? இல்லை அசுரனா? இவன் கண்களைப் பார்த்து அசுரனென்று கூறுபவன் குருடன்!!

இவன் தேவன்!

தேவர்களின் வலிமை கொண்டு பிறந்திருப்பவன்!! என்றெண்ணிக் கொண்டது மாதுவின் மனம்.

தன் உள்மனக்கிடக்கையை வெளிக்காட்டாமல், மிடுக்கான குரலில் இவள் சொன்னாள்,

“ஒரு பெண் தனித்திருக்கும் போது.. அவள் சம்மதமின்றி செய்யும் எதுவும் அநாச்சாரம் தான்.!!”என்று.

அவள் மிடுக்கில் ஓர் குறுஞ்சிரிப்பு தவழ்ந்தது அவன் இதழோரம்.

அவள் தன்னைப் பாராததால்.. ஏற்பட்ட ஒருவித சௌகரியமான மனநிலையில்,

முள்ளந்தண்டுக் கோடு செல்ல.. பாதி மறைத்தும், மறைக்காமல் இருந்த அழகிய முதுகில் அலைபாய்ந்தது அந்த வீரனின் விழிகள்.

இவள் தனக்குரியவள் என்பதால் விளைந்த உரிமையல்லவா அது?

மகளிரை ஏறெடுத்தும் பார்க்கும் ரகம் அவன் இல்லை.

வேண்டுமென்று அவள் வாயைப் பிடுங்க, “அப்படியானால் நீ செய்தது மட்டும் எவ்விதம் சரியாகும்? ஓர் கன்னி ஆடவன் தனித்திருக்கும் போது.. என் “சம்மதமின்றி” என் ஆடைகள் களைந்திருக்கிறாய்!! .. என் உடலை என் “சம்மதமின்றித்” தொட்டிருக்கிறாய்!! .. இது அநாச்சாரம் இல்லையா?” என்று புருவமுயர்த்திக் கேட்டான்.

அந்த தீட்சயண்யமான விழிகளைத் திரும்பிப் பார்த்தவள்.. கல்லாய் சமைந்து நின்றாள்.

‘ஹப்பப்பாஆ.. அதில் இருந்து வரும் கதிர்வீச்சு’ ஏதேதோ சொல்லத்தகாத உணர்வுகளைத் தோற்றுவிப்பதில் போல இருந்தது.

நா வரண்டு இதழ்கள் காய்ந்து, வார்த்தைகள் வெளிவரமறுத்தது அவளுக்கு.

கடினப்பட்டு திக்கித் திணறிய குரலில், “அ.. அது உங்கள் உயிர் காக்க.. வேறு வழி.. தெரி.. யாமல்..”என்று தத்தளித்தாள் பெண்.

“ஆனால் என் சம்மதமின்றி நடந்தது?.. சம்மதமின்றி நடக்கும் எதுவும் அநாச்சாரம் இல்லையா?”- ஆசுவாமான மெல்லிய குரலில் கேட்டான் புரவி வீரன்.

உயிர் உருக்கும் குரலில் வாக்கு வாதம் செய்ய.. இவன் ஒருவனால் மட்டுமே முடியும்? என்று எண்ணிக் கொண்டாள் பெண்.

அவனது விளையாட்டில், அவனது பூங்காரிகைக்கும் முன்கோபம் போனது. அதுவும் வெகு அழகாய்.

அந்தக் கல்லால் ஆன மஞ்சத்தில் இருந்து எழுந்து கொண்டவள், தன் கோபத்தில் தனங்கள் ஏறி, இறங்கப் பெருமூச்சு வாங்கிக் கொண்டே,

“நான் சம்மதமின்றித் தொட்டதும், நீங்கள் சம்மதமின்றித் தொட்டதும் ஒன்றா?? நான் செல்கிறேன்..”என்று விழிகளில் கோபம் காட்டியவள்,

குகையை விட்டும் நகரப் பார்த்த வேளை, தன் விளையாட்டை விட்டு விட்டு.. அவளுடைய முன்னங்கைப் பிடித்துத் தடுத்து இழுத்தான் அவன்.

அவனது வலிய உடலோடு.. அழுந்த மோதி சித்திரவதைப் பண்ணியது அவளது பின்னெழில்கள் இரண்டும்!!

ஆண் மகன் அவனில் ஏடாகூடமாக மோதியது அறியாமல், அவள் நின்றாளே ஒழிய, அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை.

“தேவீஈஈஹ்..கோபமாஹ்??...”அவள் காதோரம் கிசுகிசுத்தான் வீரன்.

அவன் காதுக்குள் மூட்டிய கிறக்கம்.. அவளின் முன்கோபத்தை குறைத்ததோ?

“என் பெயர் தேவி இல்லை.. சகுந்தலா ..!!”என்றாள் அவள்!!

அந்தப் பெயர் தானும் அவன் காதில் மதுரகானம் மீட்டியதோ? திரும்பத் திரும்ப தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான் ஒப்பற்ற மாவீரன்!

“சகுந்தலா.. சாகுந்தலம்.. சாகுந்தலம் என்றால் புள்ளினங்கள்…என் மனத்தைக் கொள்ளை கொண்ட சாகுந்தலப் பறவை தான் பெண்ணே நீ!!”-காதல் கொண்ட ஆண்மகன் அல்லவா? ஏதேதோ பிதற்றியது மனம்.

அவன் பிதற்றல்.. இவள் காதுக்கும் இலேசாக ஈயப்பட, அவனை நோக்கித் திரும்பியவள், வெஞ்சினத்துடன் தன் மார்புப் பந்துகள் உயர்ந்து, தாழ, “என்ன?”என்றாள்.

திரும்பிய நம் சகுந்தலாவின் பார்வையும், அந்த ஷத்திரியனின் பார்வையும் இரண்டறக் கலந்தது.

அவன் கண்களில் இருந்து வரும் பொல்லாத காந்த அலை..அவளையும் தாக்கியது.

அவனது முரட்டு இதழ்களோடு தன்னிதழ் சேர்க்க வேண்டும் என்ற ஓர் ஈர்ப்பு மாயையும் தோன்ற, கொஞ்சம் கொஞ்சமாக அவன் இதழ்களை அணுகினாள் பெண்.

குகைக்குள் அமைதியாக அமர்ந்து.. அவர்களின் காதல்க்கூத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த வெளவாலுக்கும் தான் வெட்கம் வந்ததுவோ,

“நான் எதையும் பார்க்கவில்லையப்பா!!” என்பது போல கூச்சலிட்டுப் பறக்க, வெளவாலின் சத்தத்தில் அவனைப் பிரிந்தாள் தலைவி.

“விடுங்கள் கையை..”என்றவள்,அவள் மார்பில் கை வைத்துத் தள்ள,

காயம் வலித்தது போல மெய்யாகவே நடித்தான் அவள் மன்னவன்.

“ஆவ்.. வலிக்கிறதே..!!”-நெஞ்சை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டே அவன் குனிய பகீரென்றானது அவளுக்கு.

அவன் போலியாகக் காட்டிய நடிப்பை, உண்மையென்று நம்பி.. வலியில் இதழ்கள் சுருக்கினாள் சகுந்தலா.

அவன் ஒரு பக்க மாரோடு.. தன் மார்புகள் அழுந்த அவன் தோளோடு கையிட்டு, கைத்தாங்கலாக அழைத்துச் சென்று, கல்லாலான மஞ்சத்தில் அமர வைத்தவளின் கண்கள் ஏகத்துக்கும் கலங்கியிருந்தது.

தான் யாரென்று அறிந்து அன்பு செலுத்தியவர்களின் மத்தியில், தாம் யாரென்று தெரியாமல் உண்மை அன்பு காட்டும் அவளின் கரிசனையில் கலங்கிப் போனான் வீரன்.

போதாக்குறைக்கு, அவன் விழிகளை வேதனையுடன் பார்த்தவளாக, “அதிகம் வலிக்கிறதா?.. கண் விழித்ததும்.. எழவே வேண்டுமா என்ன? அப்படி எந்தக் கோட்டையைப் பிடித்து விடும் அவசரம் உங்களுக்கு..”என்று கேட்டாள் சகுந்தலா.

சற்றும் தாமதியாமல், முணுமுணுக்கும் குரலில், அவளது கள்ளூறும் இதழ்களைப் பார்த்த வண்ணமே சொன்னான், “காதல் கோட்டையை..”என்று.

“என்ன?”- அவன் சொன்னது விளங்காமல், அகன்ற விழிகளுடன் கேட்டாள் சகுந்தலா.

அகல விரிந்த விழிகளுக்குள் தன்னைத் தொலைத்தவன், பேச்சை மாற்றும் முகமாக, தன் வயிற்றைத் தடவியவனாக அப்பாவி போல, “பசிக்கிறது என்றேன்..” என்று சொன்னான்.

கானகத்தில் உயிரைக் காத்த வீரன்.., ‘பசி’ என்றதும் சர்வமும் மறந்து போனது அவளுக்கு.

கண்களில் ஓர் சோகம் குடிகொள்ள, நகத்தைக் கடித்துக் கொண்டு, ஏதோ யோசித்தாள் சகுந்தலா.

இரவில், தான் வளர்க்கும் மான்குட்டியைக் காண வந்தவள், அது தொலைந்திருப்பது கண்டு.. கானகத்தின் உட்புறம் வந்தாள். வந்தவள் மானைக் காணவில்லை. வில்லேந்தி நின்ற வலிய ஆணைத் தான் கண்டாள்.

கழுதைப்புலியிடம் இருந்து அவளைக் காப்பாற்றி வீழ்ந்தவனை, இரவோடிரவாக அவனை அழைத்து வந்து குகையில் வைத்து, மருந்தும் இட்டு அவனை உபசரிப்பது எல்லாம் தபோவனத்தில் இருக்கும் அவள் தந்தை அறியாமல் தான்.

அவள், அந்த வீரனை உபசரிப்பதை தந்தை குற்றம் சொல்லாவிடினும், நடு இரவில் கானகம் வந்ததற்கு நிச்சயம் திட்டு விழும்.

இப்போது பசியென்று சொல்லும் வீரனை அழைத்துச் சென்றால், “அவரை எங்கணம் நீ கண்டு கொண்டாய்?”என்று கேள்வியெழுந்தால், என்ன பதிலிறுப்பாள்??

விழிகள் நிலத்தில் அலைபாய யோசிக்கும் பெண்ணை..தலை சரித்து.. இரசித்துப் பார்த்திருந்தான் அவன்!!

சட்டென்று அவனை நோக்கி நிமிர்ந்தவள், “நீங்கள் இங்கேயே இருங்கள்.. சிறிது நேரத்தில் திரும்புகிறேன்!!”என்று மெல்லிய குரலில் சொன்னவள், சிறிது நாழிகைகள் கழித்துத் திரும்பிய போது, அவள் கைகளில் பழங்கள் அடங்கிய கூடையொன்று அடைக்கலமாகியிருந்தது.

அடுத்த நாள் காலை,

தபோவனக் குடிலின் அருகாமையில்.. கங்கை நதி அமைதியாக ஓடிக் கொண்டேயிருந்தது. கங்கையின் இக்கரை.. அடர்ந்த அத்தி மரங்களையும், ஆல மரங்களையும்,பல புதர்களையும் கொண்டு அமைந்திருக்க,

கங்கையின் மறுகரையோ.. ஹஸ்தினாபுரத்தின் பசுமையை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. பச்சைப் பாய் விரித்தாற் போன்று வயல்வெளி..

அதிலே தங்காபரணத்தை தலைக்கு அணிந்தாற் போன்று..பொன்மஞ்சள் நிறத்தில் செழித்து வளர்ந்திருந்தது நெற்கதிர்கள்!!

கங்கையில் மிதந்த மீனை.. லாவகமாகத் தன் கால்களில் கவ்விப் பிடித்துக் கொண்டு பறந்தேறியது ஓர் கழுகு!!

ஆற்றயல் எழுந்த அத்தி மரத்தின் கிளையில் கூடு கட்டியிருந்த மீன்கொத்திப் பறவைக் குஞ்சுகள்.. தன் தாயைக் கண்டதும் ‘கீச்கீச்’ என்று கத்திகு கொண்டேயிருந்தது.

ஆக மொத்தத்தில் அன்றைய ஹஸ்தினாபுரி.. தன் நிறைவு கண்ட, எல்லா உயிரினங்களும் சந்தோஷமாக வாழும் ஓர் நாடாக இருந்தது அன்று.

இத்தனை அழகையும் ஒருமித்துத் தரும்.. அந்தக் கங்கையில் தான்.. தன் தோழி பிரியம்வதையுடன், நீச்சலடித்து நீராடிக் கொண்டிருந்தாள் அவனின் சகுந்தலா.

மார்பிலிருந்து.. முழங்கால் வரை ஓர் உடுத்தாடை உடுத்தி, கங்கையில் இறங்கியிருந்தவளின் காதருகே.. ஓர் கனகாம்பரப் பூ!!

இவள் நீராடியதால் தான் கங்கையும் புனிதமானதாக மாறியதோ?

நீராடி விட்டு மேலேறி வந்தவளின் மேனியிலிருந்து.. விழுந்த நீர்த்துளிகள் நிச்சயம் மோட்சம் அடைந்திருக்கும்.

அந்த தேவலோகத்து மேனகையின் மறு விம்பமானவள், ஆற்றங்கரையோரம் இருக்கும் நாற்பக்கமும் செடி, கொடிகளால் சூழப்பட்ட ஓர் புதர்ப்பற்றையை நாடிப் போய்.. யார் கண்ணுக்கும் உறுத்தாமல்.. ஆடை களைய ஆரம்பித்தாள்.

தன் மேனி சுற்றியிருந்த வெண்ணிற ஆடையைக் கழற்றியவள், தன் கூந்தலில் ஈரம் சொட்டச் சொட்ட நிற்க, மாற்றுடை கொண்டு தலை துவட்டிக் கொண்டே ஆடை புனைய ஆயத்தமானாள்.

அங்கணம் அவள் எதிர்பார்த்திராத வேளை.. புதர்ப்பக்கம் மண்டிக்கிடந்த காய்ந்த சருகுகள்

காலடியில் நசுங்கும் சத்தத்தை துல்லியமாகக் கேட்டது பெண்ணின் செவிகள்.

“யாரது?”என்று சன்னமான குரலில் அவள் கேட்க, அவள் இடையூடு அழுந்தப் பதிந்தது ஓர் கரம். நேற்றிரவு அவளிடையைச் சுற்றி வளைத்த அதே கரம்!!

அவன் வலிய மார்புகளோடு.. இவளது வெற்றுத்தனங்கள் போய் நச்சென்று மோதிக் கொள்ள, பாதி உடுத்திருந்த ஆடையும் அவள் மானம் காக்கும் கடமையைக் கைவிட்டு நழுவ, ஏடாகூடமாக அவனோடு ஒட்டி நின்றிருந்தாள் பெண்.

அவனைக் கண்ட பயத்தில்.. அவள் அச்சத்தில் கத்தப் போக, சட்டென்று அவள் வாய் பொத்தியவன், “உஷ்ஷ்!!” என்றான்.

அவன் உள்ளங்கையில் விரும்பியோ.. விரும்பாமலோ.. ஆழ முத்தமிட்டுக் கொண்டிருந்தன அவள் இதழ்கள்!!

அருகாமையில் ஓர் தேவலோகத்து சுந்தரத்தை நிகர்த்த சுரூபினிப் பெண் இருந்தும்.. அதுவும் ஏடாகூடமாக நின்றிருந்தும், அவன் எண்ணங்கள் தடம் புரள்வது தானே இயற்கை??

அவன் எண்ணங்கள் தடம் புரண்டதா? அது அவன் மனதுக்கு மட்டுமே வெளிச்சம்!!

அவன் கண்களில் ஓர் தீவிரம் தான் கூடியிருந்தது. அந்த கணம் யாரும் எதிர்பாராத வகையில், புதரின் மேலிருந்து ஓர் சர்ப்பம், தன் நாக்கைத் துருத்திக் கொண்டு, கீழே மெல்லமாக இறங்கலானது.

சர்ப்பத்தைக் கண்டதும் பெண்ணின் ஒட்டு மொத்த செல்லும் அச்சத்தில் துடிக்க, அவனது முறுக்கேறிய கைச்சந்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டே.. கண்களை இறுக மூடிக் கொண்டாள் அவள்.

சர்ப்பம் தன்னைத் தீண்டியிருக்கக் கூடும் என்று அவள் எண்ணியிருந்த கணம், எதுவும் நடந்தேறாமல் போகவே, மெல்லக் கண் திறந்தவள் பேச்சு மூச்சற்று நின்றாள்.

அவனுடைய ஏகாந்தமான விழிகள்… அவளையே தான் மந்தகாசப் பார்வையுடன் பார்த்திருக்க, அவனுடைய திண்ணிய கரத்தில் அடைக்கலமாகியிருந்தது அவளைத் தீண்ட வந்த சர்ப்பத்தின் தலை!!

சர்ப்பத்துக்கும், அவன் பிடி வலித்ததுவோ? அது அவன் மீது என்ன கோபத்தில் இருந்ததோ.. தன் அகோரமான பற்களைக் காட்டி சீறிய அது.. அடுத்த நொடி.. பாய்ந்து அவன் புறங்கையை கடிக்கலானது.

பாம்பு அவனைத் தான் தீண்டியது. ஆனால் தன்னைத் தான் கடித்தது போன்ற வலியுடனும், பதற்றத்துடனும் கத்தினாள் அவன் சகுந்தலை!!

"ஆஆஆ!!"- அவள் கத்தலோடு கலங்கிய கண்களை, ஆகர்ஷிக்கும் விழிகளுடன் பார்த்திருந்தான் அவ்வீரன்.

பக்கத்துப் புதரில் இருந்து தோழி கத்துவது அறிந்து, வேறோர் புதரில் இருந்து உடைமாற்றிக் கொண்டே வெளியே வந்த தோழி பிரியம்வதை,

"என்னானது..சகுந்தலா??"என்று களேபரத்துடன் கேட்டாள்.

அந்த வீராதி வீரனோ, சர்ப்பம் தீண்டியதும் அசராமல், நின்றவன், அதன் வாலை லாவகமாகப் பிடித்து, அதன் உடலை முழுவதுமாக உலுக்கினான்.

சர்ப்பத்தின் வாலை உலுக்கினால்.. அதன் பலவீனமாக படைக்கப்பட்ட என்புகள் உருக்குலையும்;அதன் விளைவாகத் தோன்றும் அசதியில் சர்ப்பம் ஓரிரு நாழிகைகள் மூர்ச்சையுற்று நிற்கும் என்பது பெரியவர்கள் ஐதீகம்.

அதையே செய்தான் மன்னவனும்.

உலுக்கலில் மூர்ச்சையுற்ற சர்ப்பத்தை புதரின் புறப்பக்கமாக தூக்கி எறிந்தான் அவன்.

அவள் விழிகள் அவனை கலக்கத்துடன் ஆராய, மீண்டும் கேட்டது பிரியம்வதையின் குரல்.

"சகுந்தலா.. என்னானது??"

அவளில் ஓடும் கலக்கமே.. அவனுக்கு ஆயிரம் யானை பலத்தைக் கொடுப்பது போல இருக்கவே,

தன் நெஞ்சம் தொட்டுக்காட்டி, ஹஸ்கி குரலில், “நான் நலம் தேவி.. நீ உன் தோழியோடு செல்மின்” என்றவன், இன்னும் அதிர்ச்சியில் அசையாது நிற்பவளை,

புதரிலிருந்து வெளியே தள்ளியும் விட்டான் .

அரைகுறை ஆடையுடன் வெளியே வந்த சகுந்தலை கண்டு, பிரியம்வதை துணுக்குற்று நிற்க, இவளோ திக்கித் திணறியவளாக,

“ஒ.. ஒன்றுமில்லை.. பூச்சி.. சிலந்திப் பூச்சி கண்டதில் அச்சத்தில்.. அலறி விட்டேன்” என்று கூறியவள், பிரியம்வதையோடு நடக்க,

அவள் இதயமோ புதரோடு நின்று போனது.

தபோவனத்தில் தபஸ்விகளும், ரிஷிகளும் வந்த வண்ணமே இருக்க… அவர்களை உபசரிக்கும்

பொருட்டு.. முழு நேரமும் தபோவனத்திலேயே இருக்கும் படியானது அவளுக்கு.

அவனைத் தீண்டியது மகாக் கொடிய விஷம் கொண்ட சர்ப்பம்!! முதலுதவிகள் ஏதும் செய்யாமலேயே நின்றானே?

அவனுக்கு என்னவாகியிருக்கும்? மதியம் வேறு சாப்பிட்டானா என்ன? உடலை அந்தக் கொடிய விஷம் இறங்கியிருக்கவும் கூடுமோ? பயம் வந்து ஆட்கொண்டது மங்கையை.

அவன் பற்றிய நினைவுகளிலேயே.. அன்றைய பொழுது.. மிக மிகக் கடினமான பொழுதுகளாகக் கழிந்தது அவளுக்கு.

அன்றைய இரவு…

கங்கையின் வேகம், அசுரவேகமாக மாறி.. விரைந்து கொண்டிருந்தது. கானகத்தைச் சூழ்ந்திருந்த மரங்கள் எல்லாம் ஆடாமல், அசையாமல் ஒருவித மோனத்தவம் காத்துக் கொண்டிருந்தது.

அதீத ஒளியுடன் ஒளி விட்டு பிரகாசித்துக் கொண்டிருந்தது வெண்ணிலவு!!

அந்தத் தபோவனத்தில், தனக்கென்று ஒதுக்கப்பட்ட குடிலின் மோட்டுவளையை வெறித்துப் பார்த்துக் கொண்டே உறக்கமற்று நெளிந்து கொண்டிருந்தாள் சகுந்தலை.

அவள் உயிர் காக்கத் தானே அந்தச் சர்ப்பத்தைக் கையில் பிடித்தான் அவன்?? அவன் உயிருக்கு ஏதாவது ஒன்றாகில், அவன் உயிரைக் கொன்ற பாவம் இவளைத் தானே வந்து சேரும்?? என்று ஏதேதோ பொல்லாத எண்ணங்கள் வந்து போக,

அடுத்த நொடி.. தன் மஞ்சத்தில் இருந்து எழுந்து கொண்டாள் மங்கை.

கூதல்க்காற்று.. தீவிரமாக வீசிக் கொண்டிருந்த அந்நள்ளிரவில்.. தபோவனத்தில் இருக்கும் யாரும் அறியாமல்.. அவனை நாடி நடந்தாள் சகுந்தலா.

என்புகளில் இருந்து நாடி, நரம்பு வரை ஊடுருவி வாட்டியெடுத்தது குளிர். இருப்பினும் அதை அவள் பொருட்படுத்தியதாக தெரியவேயில்லை.

நொடிக்கு நொடி.. அவனைக் காணும் ஆவல் அதிகரிக்க அவள் நடையும் தானாகவே துரிதமானது.

எதேர்ச்சையாக வானை நோக்கி நிமிர்ந்த கண்கள்..முழுமையாக இருந்த வெண்ணிலவு பாதியாக இருக்கக் கண்டு புருவம் சுருக்கினாள்.

அவளில் எழுந்தது அதே உணர்வு··· “இன்று வெண்ணிலவுக்கு என்னானது? ஏதேனும் சந்திர கிரகணமா என்ன?”அவள் இதழ்கள் தான் முணுமுணுத்தாலும் நடை தொடர்ந்து கொண்டே தானிருந்தது.

செல்லும் வழியில்.. மூன்றரை அடி உயரத்தில்.. செந்நிறத்தில் மினுமினுக்கும் இராட்சதப்பூக்கள் பூத்திருப்பதைக் கண்டவள் அதிர்ந்து நின்றாள்.

இந்தக் கானகம்.. இன்னும் எத்தனை அதிசயங்கள் ஏந்தி நிற்கிறதாம்?? அந்த இராட்சதப்பூக்களின் அதிசயத்தை விடவும்.. இன்னோர் அதிசயம் இருந்தது குகைக்குள்.

குகையில் தலை இடித்து விடாமல்.. மெல்ல குனிந்து உள்நுழைந்தவளின் கண்கள்.. அந்த வீரனையேத் தேடியது.

குகையின் புறப்பக்கத்தில் இருந்து வந்த சுவரில் விழுந்த சந்திர ஒளியில்.. குகையில் சாதாரணமாகவே வெளிச்சம் நிலவியிருந்தது.

அது போக.. குகையின் ஓரத்தில்.. யாருக்கும் காத்திருக்காமல் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது காய்ந்த மரக்கட்டைகள் கொண்டு செய்யப்பட்ட தீப்பந்தல்!!

அது தந்த ஒளி.. அந்தக் கருங்கற்குகையை, தங்கக் குகையாக உருமாற்றம் செய்து கொண்டிருந்தது.

வெளியே வாசலில் இருந்து வந்த குளிருக்கு.. இதமாக இருந்தது உள்ளே இருந்து வந்த தீயின் உஷ்ணம்!

உஷ்ணமா பெரிது?? அந்த வீரப் புருஷரைக் கண்ணாறக் காண்பது தானே பெரிது!

குகையில் தேடியவன் இல்லை;சோர்ந்து திரும்பியது பெண்ணின் விழிகள்!!

அழகிய தனங்கள் ஏறி இறங்க.. ஓர் துக்கப் பெருமூச்சும் அவளிடமிருந்து வெளிவரவும் செய்தது.

அந்நொடி.. அவளுடைய சிற்றிடையில் இரு வலிய கரங்கள் ஊர்ந்து வந்து, அவள் வயிற்றோடுத் தழுவிக் கோர்த்துக் கொள்ள, மூச்சடங்கி நின்றாள் சகுந்தலை.

அந்த வலிமையான கரங்களுக்கு சொந்தக்காரன்.. அவளைத் தன்னோடு இழுத்து அணைக்க, அவள் பின்னெழில்கள் ஏடாகூடமாக மோதுண்டது அவன் மேனியுடன்.

காதோரம் அவள் கூந்தல் மணம் முகர்ந்து கிறங்கிப் போனவனாக, மென்மையான குரலில், "சகுந்தலாஹ்.. வந்து விட்டாயாஹ் தேவீஈஈஹ்!.."என்றான்.

பிற நேரமாயிருந்தால்.. அவனது அத்துமீறல் அவளுக்கு வெஞ்சினத்தை உண்டு பண்ணியிருக்கும்.

இன்று அவளுக்காக சர்ப்பக் கடி வாங்கிய காட்சிகள் மனக்கண்ணில் வந்து போக, அவள் கோபம் எங்கு சென்று ஒழிந்து கொண்டது என்று தெரியவில்லை.

ஒருவேளை வீரன் அவனின் தீண்டலை.. அவள் இரசிக்கிறாளா என்ன?

அவன் பிடியிலிருந்து விலகி.. அவனை நோக்கித் திரும்பியவள், களேபரத்துடன் அவன் கையை எடுத்து ஆராய்ந்தவளாக,

“தங்களின் வடு??..”என்று இழுத்தாள் சகுந்தலா.

அவன் புறங்கையில், பாம்பு தீண்டிய இடத்தில் பச்சிலைக் களிம்புகள் இருக்கக் கண்டதும் தான், இவன் பாம்புக் கடிக்கு மருத்துவம் செய்திருக்கிறான் என்று ஆசுவாசம் எழுந்தது அவளுக்குள்.

அவள் நாடியை ஒற்றைக்கையால் உயர்த்தி, அந்த ஈரம் தோய்ந்த உதடுகளைத் தாபத்துடன் பார்த்தவன் கேட்டான்,

“நீ எந்த வடுவைக் கேட்கிறாய் தேவி? .. கையில் உண்டான வடுவா?.. அன்றேல் நெஞ்சில் உண்டான வடுவா..?”என்று.

அவளில் ஓர் களேபரம் மிகுந்தது. தன்னையும் அறியாமல் அவனது பரந்து விரிந்த மார்பில் கை வைத்துக் காயம் தேடியவள்,

“என்ன?.. நெஞ்சில் உண்டான வடுவா?.. சர்ப்பம் அங்கேயும் தீண்டியதா என்ன?”என்று கேட்டாள்.

தன் நெஞ்சில் பதிந்த அவள் தளிர் விரல்களில் புது சுகம் கண்டான் அந்த ஒப்பற்ற வீரன்.

அவள் கையை மெல்லத் தழுவியவனாக, காதல் ஆசைப் பெருக்கெடுத்த குரலில், “அது சர்ப்பம் தீண்டி வந்த வடுஅல்ல. தேவி.. ஓர் பெண் தீண்டி வந்த வடு..!!”என்றான்.

அந்தப் பெண் யாரென்று சரிவர அறியாத அந்த முன்கோபக் குயிலுக்கும் உடலில் ஓர் வெஞ்சினம்

வலுத்தது. அந்த வெம்மை அவள் முகத்தில் பீய்ச்சியடிக்க சிவந்தது கன்னம்.

சட்டென அவன் மாரிலிருந்து கையை வெடுக்கென்று எடுத்தவள், முகம் சுழித்தவளாக, “பெண்ணா..??”என்றவளாக அவனுக்கு புறமுதுகிட்டு நின்றாள்.

அவள் சீற்றம் இரசித்தவனாக.. இன்னும் இன்னும் சீண்ட ஆசை கொண்டான் மன்னவன்!

அவள் அழகைக் கண்களால் அள்ளிப் பருகிக் கொண்டே, “ஆம், என் மனதைத் தீண்டிய பெண்ணவள்!!.. ஏழுலகமும் கண்டு வியக்கும் சுரூபினி அவள்!!.. இந்தப் பூலோகம் கண்டதேயில்லை.. அது போல பேரழகை.. அவள் கண் பார்வை வீச்சுக்கு இந்திரனும் தவம் கிடப்பான்… எமதர்மனும்…” என்று அவன் இரசித்து இரசித்துச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே இடையிட்டுக் கேட்டது அவள் குரல்.

அவன் இன்னோர் பெண்ணைப் பற்றித் தன்னிடம் வர்ணிப்பதைத் தாங்கமாட்டாது, இரு காதுகளையும் பொத்திக் கொண்டவள்,

“போதும்.. போதும் நிறுத்துங்கள்..!! மனதில் ஓர் பெண்ணை வைத்துக் கொண்டு.. என்னிடம் இழையும் நீங்கள்.. பொல்லாத மோசக்காரர்!!”என்றவள்,

வெஞ்சினத்துடன் பின்னெழில்கள் ஆட, அங்கிருந்து விரைய ஆயத்தமான நேரம், நமுட்டுச் சிரிப்பு பரவியது அவன் இதழ்களில்.

அவள் கோபத்தையும் இரசித்தவன், அவளை அங்கிருந்து செல்ல விடாமல், அவள் கையைப் பற்றி இழுத்து.. பின்னோடு அணைத்தான்.

அவள் திணறல் திமிறல் எல்லாம் அந்த வீரனின் பிடியை இம்மியளவும் அசைக்கவில்லை.

அவளது திமிறலில்.. தன் மேனியோடு உறவாடிய.. அவள் தளிர் மேனியில் ஒருவித மின்சாரம் உடலெங்கும் பாய்வது போல இருந்தது அவனுக்கு.

அவள் காதுக்குள் நுனி மூக்கு நுழைத்தவன், தாபம் சிந்தும் குரலில், "அந்தப் பெண் யாரென்று அறிய விருப்பம் காட்டவில்லையாஹ் உன் மனம்?"என்று கேட்டவன்,

அவளை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று, குகையில் ஓடும் நீரோடையில், சகுந்தலையின் முகம் காட்டினான் அவன்.

குகையில் எரிந்து கொண்டிருந்த தீயில், நீரோடையில் விழுந்த அவள் முகம் தங்கமுலாம் பூசியது போல ஜொலிக்கக் கண்டாள் சகுந்தலை.

அவள் உள்ளத்தில்.. அந்த வீரன் மேல் சொல்லவொணா காதல் எழுந்தது அந்நொடி.

அவள் காதலை அதிகரிக்கும் வண்ணம் மீண்டும் சொன்னான், "இதோ என்னைத் தீண்டிய பெண் சர்ப்பம்.. கண்களால் காதல் விஷத்தை நெஞ்சில் கக்கி.. வடுவாகத் தந்த பெண்.. இவள் தான்..!!!" என்று.

அவள் இடையில் உரிமையோடு தவழ்ந்தது அவன் கை. கொஞ்சம் அழுத்தி அவள் இடையை உடும்புப் பிடியாகப் பிடிக்கவும் செய்தது.

ஆண்மகனின் கரம் தந்த சுகத்தில் அவள் கீழுதடு கடித்து சொக்கி நிற்க மீண்டும் தொடர்ந்தான் அவன்.

“எத்தனையோ பெண்களை கடந்து வந்திருந்தும்.. அன்று நான் புரவியில் வந்த போது.. என் நெஞ்சில் ஆழப்பதிந்தது உன் மாலைச் சரடு மாத்திரமல்ல. உன் நினைவுகளும் தான்.. சகுந்தலாஹ்.. என் தேவி நீ..!!”என்று அவன் கிறங்க.. அவளும் அந்தக் காதலில் கிறங்கித் தான் போனாள்.

அவன் இதழ்கள் தற்போது அவள் செம்பவளக்கன்னத்தில் ஊர, கிறங்கிப் போனவளாக இவளும் கேட்டாள், “எதைக் கண்டு என் மேல் மையலுற்றாராம் இந்த வீர புருஷர்..??” என்று.

“வீர புருஷனா அது யார்?”- அவளில் இருந்து விலகிக் கொண்டவனாகக் கேட்டான் அவன்.

“தாங்கள் தான்..திண்ணிய விஷம் கொண்ட சர்ப்பத்தையும் கையால் பிடித்தீர்களே…?”- அவள் விழிகள் கேள்வியைப் போல அழகாய் விரிந்தது.

அன்றிரவு ஹஸ்தினாபுரத்தின் மன்னவன் விழிகளில் காதல் ரசம் சொட்டச் சொட்ட வழிந்து கொண்டிருந்தது. தன் எதிரே நிற்கும் பெண்ணுக்காக.. தன் நாட்டையும், பொன்னையும், பொருளையும், இன்னும் ஏன் உயிரையும் கூட உவந்தளிக்க தயாராக இருந்தான்.

அதற்கு பிரதியுபகாரமாக அவன் கேட்டது எல்லாம்.. அவள் காதலை மட்டும் தான்!

அவன் சொன்னான், “எத்தனையோ வீரர்களை வாள் வீச்சில் வீழ்த்தியவன் நான்.. இன்று உன் விழி வீழ்ச்சில் கட்டுண்ட சர்ப்பமாக நிற்கின்றேன். நானா வீரன்..?”என்று.

அவன் தன்னைத் தானே தாழ்த்திப் பேசுவது பிடிக்காமல், “என்னுயிரை மூன்று தரம் காப்பாற்றியிருக்கிறீர்களே..? புரவியின் தாக்குதலில் இருந்து அன்று.. கழுதைப்புலியிடம் இருந்து நேற்று..

சர்ப்பத்திடம் இருந்து இன்று.. தன்னுயிரை துச்சமாக மதித்து என்னுயிர் காத்தவருக்கு.. கைம்மாறாக நான் என் செய்வேன் தலைவா?''நன்றிப் பெருக்குடன் சொன்னாள் சகுந்தலை.

அவளுடைய தளிர் விரல்களை காதலுடன் பற்றிக் கொண்டவனின் கோரிக்கைள் எல்லாம் ரொம்ப ரொம்ப எளிமையானது.

''கைம்மாறு வேண்டாம்.. உன் காதல் தா பெண்ணே..!!''- அவன் விழிகள் எதிர்பார்ப்புடன் பேரழகியின் மதிவதனத்தில் மேய்ந்தது.

அவளுமே.. அவன் புரவியில் இருந்த வண்ணமே லாவகமாகப் பற்றித் தூக்கிக் காப்பாற்றியதிலிருந்து காதல் கொண்டவள் அல்லவா?

விரைந்தே சொன்னாள், ''என் காதல்.. என் எதிரே நிற்கும் சந்திரனை நிகர்த்த ஆண்மகன்!!.. அவரை உங்களிடம் தந்து விட்டு நான் என்ன செய்வதாம்??''என்று.

அவளது சொல்லையும், அது தாங்கி வந்த காதலையும் கேட்டு, தன் முத்து மூரல்கள் பளிச்சிட.. மின்னல் மின்னி மறைவது போல சந்தோஷ நகை புரிந்தான் அவன்.

“ஹஹஹா” - அந்த நகையின் வனப்பில் கட்டுண்டு நின்றாள் சகுந்தலை.

அவள் அடர்ந்த கண்ணிமை கொண்ட நயனங்களைப் பார்த்தவனின் விழிகளில் காதல் பெருக்கெடுத்தது. அவள் இடையூடு கையிட்டு தன்னை நோக்கி இழுத்து அணைத்தவன்,

காதல் கை கூடிய மகிழ்ச்சியில் அவளது ரோஜா இதழ்களைக் கவ்விக் கொண்டான்.

சர்ரென்று திகைப்பூண்டை மிதித்தாற் போன்று ஓர் மின்சாரம் பாய்ந்தது அவளுக்குள். அடுத்த கணம் செயலிழந்தது மூளை.

தான் உயிருக்குயிராக நேசிக்கும் ஆண்மகனின் தீண்டல்.. எந்த பெண்ணுக்குத் தான் கசக்கும்?

அவளுக்கும் இனித்தது. அவன் முரட்டு அதரங்களின் இனிப்பு அது!!

போதாக்குறைக்கு அவன் கைகள் வேறு.. சற்று கீழிறங்கி, அவள் பின்னெழில்களின் மேடுபள்ளங்களை ஆராய, கண்கள் மூடி… சங்கீத நாதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் மங்கை.

அரண்மனையில் வீணை மீட்டத் தெரிந்தவனுக்கு.. அதை விட பக்குவமாக அவள் இதழ் மீட்டவும் தெரிந்தது.

அவன் தனங்களும், அவள் மார்புகளும் அழுந்த மோதிக் கொள்ள, அவன் இதழ்களில் தீவிரமாக வேட்டையாடிக் கொண்டிருந்தான் அவன்.

அந்த முத்த வேட்டையைத் தொடர்ந்து கொண்டே, அவள் மார்புக் கச்சையில் கை வைத்தான் அவன். விழித்துக் கொண்டாள் இவள்.

“ம்.. இது தவறு..?”-சட்டென அவன் கையைப் பற்றி தடுத்து நிறுத்தியவளாகச் சொன்னாள் அவள்.

அவன் புருவ மத்தியில் ஓர் முடிச்சு விழுந்தது.

“எது தவறு?.. காதலித்த பெண்ணோடு இரண்டறக் கலப்பது தவறா?.. ஆண்மகன் நான் உன் மேல் கொண்டிருக்கும் அளவில்லா காதலின் அளவை உணர்த்த முயல்வது தான் தவறா..?”என்று ஆற்றாமையுடன் கேட்டான் ஆண்மகன்.

அவன் கவலை இவளையும் தாக்க, “இல்லை.. நீங்கள் அங்கணம் பொருள் கொள்ளலாகாது.”என்ற போது, மீண்டும் இடையிட்டது அவன் குரல்.

“அப்படியானால்.. தன் சமுத்திரக் காதலனோடு சங்கமிக்க வெட்கமேயற்று ஓடுகிறாளே கங்கை!! .. அவள் செய்வதும் தவறு தான்!..

வீட்டில் உஷை என்னும் மனைவியிருக்க, தாமரைக் காதலியைக் காண பகலவன் வருகிறானல்லவா?? அவன் செய்வதும் தவறுதான்!! ..

காதலோடு மனம் சேர, வருவது தவறல்ல.. அது இயற்கை தேவி..”என்றவன்,

அவள் வெண்சங்குக் கழுத்தில்.. தன் முரட்டு அதரங்கள் பதித்து.. குளுகுளு முத்தம் கொடுத்து.. அவன் தேவியைக் குளிர்விக்க முயன்றான்.

அவன் தீண்டலில் கண் மூடி கிறங்கியதெல்லாம் ஓரிரு கணங்கள் தான்.

அவன் வலிய தாடையை தன்னிலிருந்தும் பற்றித் தூக்கியவள், தன் உணர்ச்சிகளை கடினப்பட்டு அடக்கிக் கொண்டு,

“காதலோடு.. தலைவியைத் சேர்வது தவறல்ல தலைவா!!.. முறையின்றி கூடுவது தான்.. தவறு..”என்றாள்.

“தலைவனின் கட்டளைக்கு இணங்குவது தானே தலைவிக்கு முறையாகும்.?”- காதல் தாங்க முடியாமல் அவளது ஈரம் தோய்ந்த கள்ளூறும் அதரத்தோடு.. தன் அதரம் ஒற்றி எடுத்தவன் சொன்னான்.

அவள் முகத்தில் கவலையும், கலக்கமும் ஒன்றாகத் தோன்றியது.

“இல்லை.. தலைவனானவன்.. தலைவிக்கு இதுவரை பாதுகாவலராக இருந்தவரிடம் அனுமதி கோர வேண்டும் அவர் சம்மதத்துடன் என்னைப் பெண்டாள வேண்டுகிறேன்..”- அவன் காதலை ஏற்க முடியாமல் திண்டாடினாள் பெண்.

“என் தலைவியின் பாதுகாவலளர்??.. உன் தந்தை..!!”-தாபம் குறையாமல் சொன்னாள் பெண்.

“ம்.. கண்ணுவ முனிவர்.. தபோவனத்தின் பொறுப்பதிகாரி.. அவர் வளர்ப்புத் தந்தை..

உண்மையில் நான் தபஸ்வி விசுவாமித்திரருக்கும், தேவமங்கை மேனகைக்கும் பிறந்தவள்..

சாகுந்தலப் பறவைகளால் சூழப்பட்ட என்னைக் கண்டெடுத்து “சகுந்தலா — பறவைகளால் காக்கப்பட்டவள்” என்று பெயரும் இட்டார்..

தாய், தந்தையறியாத அனாதையை தாயுமானவராக வளர்த்தாரே அவர் சம்மதம்

வேண்டுவது தானே முறையாகும்..??"-அவன் விழிகளைக் காதலுடன் பார்த்துச் சொன்னாள் அவள்.

அடுத்த கணம் அவனில் ஓர் வேகம் குடிகொண்டது, "அப்படியானால் எங்கே அவர்? இப்போதே விரைந்து சம்மதம் கேட்கின்றேன்.. உன்னை என்னில் பாதியாக்கிக் கொள்கிறேன் தேவி" என்றவனாக, குகை வாயிலை நோக்கி அவன் விரைய,

இம்முறை அவன் இரும்புக் கரத்தைப் பற்றித் தடுத்தது அவளுடைய மெல்லிய கை.

"உங்களுக்கு எதிலும் அவசரம் தான்!! .. என் தந்தை கண்ணுவ ரிஷி.. காசிக்கு சென்றிருக்கிறார்.. திரும்பி வர நாளை மதியம் ஆகும்.."என்று கடிந்து கொள்ளும் குரலில் அவள் சொல்ல, அவனிடமிருந்து வந்தது ஆயாசப் பெருமூச்சு.

தன் வலிமையான கால்களை அகல நீட்டி நின்றவன், தன் அலைஅலையான கேசத்தை கோதிக் கொண்டான்.

பெருமூச்சும் விட்டான்.

பின்பு காதல் நோய் கொண்டவனாக, அவள் கையை எடுத்து தன் நெஞ்சோடு அணைத்து வைத்து,

"அதுவரை தாங்குவேனா? என் இதயம் உடைப்பெடுத்து நிற்கும் ஆசையை நீ அறியவேயில்லையா??

தேவி.. இதுவரை அவனியில் பெண்சுகம் தேடாதவன் நான்!!.. நான் காதல் கொண்டதும், கொள்வதும் உன்னில் மட்டுமே!!..

உன்னைக் கண்டால் எந்தப் பெண்ணைப் பார்க்கும் போதும் தோன்றாத உணர்வுகள் எழுவதும் ஏனோ??. அறிகிலன் நான்!!

பொன்னையும், பொருளையும் உன் காலடியில் கொட்டியாவது.. உன் காதலைப் பெற வேண்டும் என்று துடிக்கிறது மனம்.. என் காதல் புரிகிறதா?"என்று சொல்ல, சகுந்தலைக்கும் அந்த ஆண்மகன் காதல் புரிகிறது. இருப்பினும் கையாலாகாதவளாக தவிப்புடன் நின்றாள்

அவள் கண்கள் இலேசாகக் கலங்கியது.

அடுத்த கணம் அவ்வீரனின் கண்கள் பளிச்சிட்டது. புன்னகை ததும்ப சொன்னான், “தேவி.. ஷத்திரியர்களுக்கு காந்தர்வ மணம் புரிய அனுமதி உண்டு.”என்று.

“ஷத்திரியர்கள்??? .. தாங்…கள்..???”என்று புரியாமல் இழுத்தாள் சகுந்தலை.

அவன் முன்னே நின்ற வீரன்.. தன் அடையாளம் திறந்தான். தன் முழு உயரத்துக்குமாக நிமிர்ந்து நின்றவன், அரசர்களுக்கே உரிய கம்பீரமான குரலில்,

“நான் அரசர் இலிலனுக்கும், அரசி ரதந்தரிக்கும் பிறந்தவன்!! அசுரர்களுக்கு எதிராகப் போர் தொடுத்து, தேவர்களுக்கு வெற்றிவாகை சூடிக் கொடுத்தவன்!! தேவலோகத்து இந்திரனின் நட்பைப் பெற்றவன்!! ..அஸ்தினாபுரியின் அரசன்!!! துஷ்யந்தன்… ராஜ் துஷ்யந்த்!! .. ஷகுந்தலா” என்று சொன்னதும், அவனிலிருந்தும் சட்டெனப் பிரிந்து நின்றாள் சகுந்தலை.

அவள் முன்னே நிற்பது எப்பேர்ப்பட்ட ஆண்மகன்? அரசன்?

அதனால் விளைந்த அதிர்ச்சியில், ‘‘என்ன????’’ என்ற வண்ணம் பிரிந்தாள் அவள்.

இத்தனை நேரம் ஒட்டி நின்றவள், தன் அடையாளம் திறந்ததும் காட்டிய விலகல் துஷ்யந்தனை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

‘‘ஏன் அரசன் என்றானதும் இந்த ஒதுக்கம்..?’’- அவளை மீண்டும் நெருங்கியவனாகக் கேட்டாள் அவள்.

‘‘அரசன் என்றதும் வந்த பணிவு இது மன்னா!!’’- என்றவள், அவன் விழிகளைப் பாராமல் கலங்கி நின்றாள்.

அவனுள் ஓர் காதல் நகை முகிழ்க்க, ‘‘ஆம், பெண்ணே.. வேட்டையான கானகம் வந்த நான்.. என் சேனைத் தொலைத்தேன்.. அது மட்டுமா?? ஓர் பெண்ணருகில் என்னையும் தொலைத்து

நிற்கின்றேன்.. எல்லாம் அவள் காதல் படுத்தும் பாடு” என்றவன் கொஞ்சம் பெரிதாகவே நகைத்தான்.

அவன் கையில் இருந்த ஓர் ராஜ மோதிரம் களைந்தான் துஷ்யந்தன். பல்லாயிரம் வருஷங்களுக்கு பின் யாழினி கைக்கு வந்தடைந்த அதே மோதிரம்!!

சந்திரவொளியில் பாடும், ஜொலிக்கும் அதே அற்புத மோதிரம்!

தன் கையிலிருக்கும் கணையாழி கழற்றி, அவளுடைய அழகிய வெண்ணிற விரலில் அணிவித்தவன், “இன்றிலிருந்து வானம் சாட்சியாக.. பூமி சாட்சியாக.. நவகிரகங்களும் சாட்சியாக.. நீ என்னில் பாதி.. நீ என்னவள்…நீ என்னுயிர்!!”என்றவன், மீண்டும் அந்தக் கள்ளூறும் அவளது அதரங்களை அசுரவேகத்தில் கவ்விக் கொண்டான்.

துஷ்யந்தன், அன்றிரவு சகுந்தலையை முறைப்படி காந்தர்வ மணம் புரிந்து கொண்டான்.

அதே இரவு.. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு.. நவகிரகங்களும், அதன் துணைக்கோள்களும் ஒரே நேர்கோட்டில் ஒன்றையொன்றை சந்தித்துக் கொண்ட அதே இரவு..

ஆயிரம் வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும் அந்த அதிசய இராட்சதப் பூக்கள் பூத்த அதே இரவு!!!

தன் வாழ்வில் விதி விளையாடப் போவதை அறியாமல்.. அந்த திண்ணிய ஆண்மகனின் பிடியில் கொஞ்சம் கொஞ்சமாக தன்னைத் தொலைத்து நின்றாள் பெண்.

அவளுடைய உடைகள் களைந்து.. ராஜா ரவிவர்மன் தீட்டிய சகுந்தலையானாள் பெண்!! அந்தக் கல் மஞ்சம்.. இருவரையும் சொர்க்கத்துக்கு அழைத்துச் செல்ல தயாராகவிருந்தது.

அவன் இதழ்களோ.. அவளுடைய மலைமுகடுகளை நிகர்த்த தனங்களை நோக்கித் தடம் பதிக்க முயல.. மெல்லத் தடுத்தாள் அவள்.

அவன் புரியாது விழிக்க, இவள் சொன்னாள், “பயமாக இருக்கிறது!!” என்று.

அவனில் மீண்டும் பெண்ணவளின் மனம் மயக்கும் மாயச்சிரிப்பு.

“என்ன பயம்??.. எதிலுமே அறியாமை தான் பயம் தேவீஈஈஹ்..”என்றான் தன் அனல்மூச்சுக்கள் அவள் தளிர் மேனியில் பட்டு மோத.

“அறிந்ததன் பின்பு..?”- அந்த சுப வேளையிலும் சந்தேகம் கேட்டாள் அவன் தேவி!

“அது சுகம்!!..”- என்றவன்.. அவள் ஆலிலை வயிற்றில் மூக்கு வைத்துத் தேய்க்க, கூச்சத்தில் கலகலத்துச் சிரித்தாள் சகுந்தலா. துஷ்யந்தனின் சகுந்தலா!!

அந்தச் சிரிப்பையே காதல் போர்க்களத்தின் யுத்த சங்காகத் கொண்டவன், மெல்லினத்தோடு சமர் புரியத் தயாரானான்.

அந்நொடி காதலோடு கலந்தது கங்கை. சந்திரனோடு கலந்தாள் அவன் மனைவி தாரை; சூரியனோடு கலந்தாள் உஷை!!

நவகிரகங்களும் காதல் புரிந்த சமயம்.. இங்கே சகுந்தலையும், துஷ்யந்தனும் அழகான காதல் புரிந்த சம்பவமும் நடந்தேறிக் கொண்டிருந்தது.

அந்த அழகிய கூடலும், அதன் பின்னான சம்பவங்களையும் காளிதாசன் காவியமாக வடிக்கப் போவது தெரியாமல்.. தன் தலைவன் சுகம் காண தன்னையே மதகாக அமைத்துக் கொடுத்தாள் அவள்.

“சகுந்தலாஆஆஹ்··· சகுந்தலாஆஆஹ்” -என ஒவ்வொரு அசைவுக்கும் தாபத்தோடு பிதற்றினான் அவன்.

அவன் தந்த சுகத்தில் இதழ்கள் கடித்து.. அவன் பிடரி மயிர்க்கேசத்தைப் பிய்த்தெறிந்தாள் அவள்.

உயர உயர காற்றில் பறந்து··· இந்திரலோகத்தின் கதவை.. இருவரும் தட்டும் சந்தர்ப்பமும் வந்தது. இந்திரலோகத்தின் கதவு திறக்கப்படும் சமயம்..

உடலில் இருந்து ஓர் உணர்ச்சிப் பிரவாகம் பீறிட்டு கிளம்புவது போல இருக்க.. மீண்டும் மண்ணையே வந்தடைந்தனர் அந்தக் காதல் சந்தியாசிகள்.

அன்றிரவு முழுவதும்.. துஷ்யந்தனும், சகுந்தலையும் காதல் புணர்ச்சி இலக்கணம் பயின்ற ஓர் மகோன்னதமான இரவு!!

கூடலின் களைப்பில்.. அவனது வலிய கைச்சந்தில் தலை சாய்த்து உறங்கும் தேவியை.. திகட்டத் திகட்டப் பார்த்தான் துஷ்யந்தன். அது தான் அவளைப் பார்க்கும் கடைசிச் சந்திப்பு என்பதை அறியாமல்!!

அடுத்த நாள் காலை…

குகைக்கு வெளியே தன் கபிலநிறப் புரவியின் பக்கத்தில் நின்றிருந்தான் ஹஸ்தினாபுரத்தின் வீர மன்னன் துஷ்யந்தன்!!

அவன் குணமடையும் வரை புரவியும் பொறுத்திருந்ததுவோ? என்னவோ?

குகைக்கு வெளியே வந்து.. ஓர் இனிய பறவையின் குரலில் கூவி ஒலியெழுப்ப.. அடுத்த கணம்.. கானகமே அதிரக் கனைத்துக் கொண்டு துஷ்யந்தன் இருப்பிடம் நாடு வந்து விட்டிருந்தது அது!

துஷ்யந்தனின் மார்பிலே.. அன்று அவள் மானம் காக்க.. இவன் தந்துவிட்டுப் போன சால்வை.. அடைக்கலமாகியிருந்தது. மீளவும் அதை அவனிடமே கொடுத்திருந்தாள் சகுந்தலை.

அவன் அருகே கண்ணீருடன் நின்றிருந்தாள்.. அவன் மேல் உயிரையே வைத்திருந்த சகுந்தலை..!!

காதல்ப் பெண்ணின் கண்ணீர் உகுத்தல் பொறுக்க முடியாமல், அவளை காதலுடன் அணைத்துக் கொண்டான் துஷ்யந்தன்.

“தேவி.. அசுரர்களின் செந்நீர் கண்டு அசராமல் நின்றவனை.. அசைத்துப் பார்க்கிறது நீ உகுக்கும் கண்ணீர்!!..

நீ ‘உம்’ என்று சொல் பெண்ணே.. நாடு துறந்து··· அரசாட்சி துறந்து.. அனைத்தும் துறந்து.. இதோ உன் மாடமாளிகையான தபோவனத்தில் உன் பணியாளனாக ஜீவித்து விடுகிறேன்..”என்று அவன் சொல்ல மெல்லக் கனிந்தது அவள் உள்ளம்.

இவனுக்குத் தான்.. அவள் மேல் எத்தனை அன்பு??

அவன் மார்பில் சின்ன முத்தம் பதித்தவள், “அரசன் ஷத்திரிய தர்மத்தைக் காப்பதே புருஷ லக்ஷணம்.. தலைமையற்ற நாட்டை உருவாக்கக் காரணமானவள் என்ற அவப்பெயர் வேண்டாம் மன்னா··· நீங்கள் செல்வது தான் முறை!!”என்றவள் கண்ணீர் துடைத்துக் கொண்டாள்.

அவன் இறுதியாக இன்னும் உன் மேல் இருக்கும் காதல் அடங்கவில்லை. உயிர் உள்ளவரை அடங்கவும் செய்யாது என்பதைப் போல..

அவள் தனங்கள் தன் வலிய மார்போடு அழுந்த மோத.. இழுத்தணைத்து.. அவள் உதடுகளைக் கவ்வி கள்ளூறிஞ்சலானான்.

சில பல மணித்துளிகளாக நீண்டு கொண்டே போனது முத்தம். முத்தவேட்கை தீரலாம்? காதல் வேட்கை. காதலுடன் நிமிர்ந்தவன்,

வேண்டா வெறுப்பாக புரவியில் ஏறினான்.

அவள் விழிகளை மையலுடன் நோக்கி, “வருவேன்.. அஸ்தினாபுரியில் இருந்து சேனையோடு வருவேன்.. என் தேவியை அழைத்துச் செல்ல வருவேன்..!!!”என்றவன்,

குதிரை சேணத்தைக் கால்களால் உதைத்து.. புரவியின் வேகத்தை அதிகரித்துக் கொண்டே.. கானகத்தை ஊடறுத்து விரைந்தான்.

அத்தியாயம் 20

இத்தனை நேரம் பெய்து கொண்டிருந்த மழை ஓய்ந்து. வானத்திலே முழுமையாக சந்திரன் பளபளத்துக் கொண்டிருந்த ஓர் இரவும் புலர்ந்தது.

சந்திரனில் இருந்து பூமியை அடைந்த.. அதன் கிரணங்கள் நேரடியாகத் தாக்கிக் கொண்டிருந்தது பல்லாயிரம் வருஷங்கள் பழைமையான அந்தக் கணையாழியை.

உத்தரபிரதேசத்தில் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட பாண்டவர்களின் மூதாதையரான, அரசன் துஷ்யந்தன் உபயோகித்த அதே அழியாக் கணையாழி!!

இலங்கை-இந்திய நல்லிணக்கத்தின் பேரில் ராஜீவ் காந்தி அரசு, பிரேமதாசா அரசுக்கு அன்பளிப்பாக அளித்த அதே மோதிரம்!

அன்று..யாதவனின் கொழும்பு வீட்டில், அவள் தனிமையில் இருந்த போது.. அரிய பொருட்கள்

சேமித்து வைக்கும் அறையில் இருந்து ஒலித்த அதே கணையாழி!!

அந்தக் கணையாழியும் அன்று போல இன்றும் தக்க தருணத்தில் சந்திரனின் ஒளியைத் தனக்குள் உள்வாங்கி ஒருவிதமான மயக்கும் புல்லாங்குழல் நாதத்தை எழுப்பலாயிற்று.

அந்தப் புல்லாங்குழல் நாதம், அந்தக் கானகம் எங்கணும் விரவிப் பரவ,

கூடவே அம்மோதிரக் கல்லும், சந்திரனின் ஒளியை, செந்நிற ஒளியாக வெளியிட, அக் கானகம் இந்திரலோகமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

மண்ணை விட்டும் புடைத்து வளர்ந்திருந்த வேர் தடுக்கி விழுந்தவள், இன்னும் கண் திறந்திருக்கவில்லை.

அவளது காதுகளில், அந்த மயக்கும் மாய ஒலி இன்னிசையாகப் பாய, அவளுக்கு மெல்ல விழிப்புத் தட்டலாயிற்று.

அவள் சுயநினைவடைந்து மெல்லக் கண் விழித்த போது, சிசு சுமந்து நிற்பவளின் தோற்றமே பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இதழ்களின் ஓரத்தில் இருந்து இலேசாக இரத்தம் வழிந்து, வீங்கிப் போயிருக்க,

நெற்றியின் முனையிலே நீலம் பூத்து, கை, கால்கள் எங்கும் சிராய்ந்து, இடுப்பு வேறு விண் விண்ணென்று தெறித்துக் கொண்டிருந்தது அவளுக்கு.

தற்போது அவள் ஓருயிர் அல்லவே… ஈருயிர் ஆயிற்றே!!

விழுந்ததில் மூச்சு கூட விடமுடியாதளவுக்கு.. இதயத்தில் ஓர் முடிச்சு எழுந்து அவளை அலைக்கழிக்க,

சிரமப்பட்டு எழுந்து, அந்த மராமரத் தண்டோடு முதுகுசாய்த்து அமர்ந்து கொண்டவள் திறந்த அதரங்களுடன்

“ஹாஹ்.. ஹாஹ்” என்று மூச்சு வாங்குவது அதையும் விட பரிதாபமாக இருந்தது.

சில, பல மூச்சுக்கள் விட்டு, அவள் ஒருநிலையடைந்ததும் தான் சுற்றுச்சூழல் பற்றி ஞாபகமே வந்தது அவளுக்கு.

அங்கணம் அவள் செவிக்குள் கவனத்தைக் கவரும் விதமாக நுழைந்தது புல்லாங்குழலை ஒத்த இன்னிசை நாதம்.

அத்தனை வலியிலும், அடிவயிற்றைத் தாங்கிப் பிடித்துக் கொண்டே, அந்த ஓசையின் மூலம் தேடி சுழன்றது அவளுடைய செங்காந்தள் மலர் விழிகள்!!

அவை, அம்மோதிரத்தின் அதிசயத்தைக் கண்டன;அகல விரிந்தன;ஸ்தம்பித்தும் போயின.

இத்தனை நாட்களாக அவள் விரல்களில் இருந்த மோதிரம் இசைக்கிறதா? ஜொலிக்கிறதா? என்ற அதிர்ச்சியுடன் அவள் அனைத்தையும் பார்த்திருந்தாள்.

வேர் தடுக்கி விழுந்ததில்.. கையில் எல்லாம் செம்மண் ஒட்டியிருந்தாலும் அதைப்பற்றியும், அடிவயிற்றில் உயிரை உருக்கும் ஓர் வலி எழுவதைப் பற்றியும் கவலை கொள்ளாது

அவள் கைகள் தரையில் நத்தைப் போல ஊர்ந்தது அந்த மோதிரத்தை கைப்பற்றுவதற்காக.

அவ்வேளை தான் அந்த அதிசயம் நிகழ்ந்தேறியது. கனவிலும், நனவிலும் இது போல நிகழும் என்று அவள் எதிர்பார்த்திராத அதிசயம்!!

அவ்விடம் முழுவதும் பரவியிருந்த வளியில் சில நிழலுருவங்கள் தோன்றவாரம்பிக்கவே அவள் விழிகள் மெல்ல சுருங்கியது;மோதிரத்தைக் கைப்பற்றத் துணிந்த கை அந்தரத்திலேயே நின்றும் போனது!!

அக்கணையாழியில் முகிழ்த்த செந்நிற ஒளியின் துகள்கள் சின்னச் சின்னதாக காற்றில் பறந்து அசைய, அந்தத் துகள்களின் ஒன்றிப்பில்,

ஓர் விஸ்தாரமான ஓர் உருவம் அவள் முன்னே தோன்றலானது!!

அவளுள் எழுந்து கொண்டிருந்த கடும் வலியை மறந்து, அந்த முகத்தைக் கண்டதும் ஓர் அச்சம் எழுந்தது அவளுக்குள்.

அந்த உருவம் காவி உடையில் ஜடாமுடியுடனும், மாரளவு தாடியுடனும் இருக்கக் கண்டாள் துஷ்யந்தனுக்காகப் பிறந்த நவீன சகுந்தலை.

அவள் கண்களின் முன்னாடி வந்து, தீர்க்கமான விழிகளுடன் நின்றது அந்த உருவம்.

அந்த் தாடிக்குள் ஒழிந்திருந்த அந்த முகம்!! அந்தக் கண்கள்!! அதை இதற்கு முன்னாடி எங்கோ பார்த்தது போன்ற ஓர் மாயை அவளுக்குக் கொடுக்க, அவள் விழிகள் இன்னும் கூர்மையாகின.

இரவின் இருளில் தவித்துக் கொண்டிருந்த மங்கைக்கு, அவள் காட்சிப் புலத்தில் சட்டென விரியலானது பகலின் வெட்ட வெளிச்சத்தில் பலவிதமான மணம் மிக்க மலர்களும், அவற்றில் உறையும் வண்டுகளும்,

பலவகையான பழம் தரும் மரங்களும், அதில் உலாவும் அணில்களும், பறவைகளும்.. சூழ்ந்திருந்த ஓர் தபோவனக்குடில்!

அது.. பல்லாயிரம் வருடங்களுக்கு முதல் துஷ்யந்தனின் சகுந்தலை.. தன் இளமைப் பராயத்தைக் கழித்த அதே குடில்!!

அதற்குள் அந்த ஜடாமுடி முனிவர் நுழையக்கண்டாள் அவள்.

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது? அ.. அவள் என்ன இன்னும் மயக்கநிலையிலா இருக்கிறாள்??

அவள் அந்த மராமரத்துக்கு அருகே படுத்திருக்க, அவளைக் காணாதது போல அம்முனிவரும் செல்லக் காரணமும் யாதோ??

அம்முனிவர்.. சிசு சுமந்து, காயங்களுடன் நிற்பவளை புறக்கணிக்கிறாரே? நெஞ்சிலே ஈவிரக்கம் இலாதவர் போலும்!! என்று ஏதேதோ சிந்தனைகள் அவளுள் எழலாயிற்று.

மூச்சுக்கள் மட்டும் வெளிவர, அமைதியாக அமர்ந்திருந்தவளுக்கோ.. தபோவனக்குடிலின் உள்ளே நிகழ்பவையும் கூட, அவள் குடிலுக்குள் செல்லாமலேயே தெரியவாரம்பித்தது.

அவள் இன்னும் மயக்கத்தில் இருந்து விழித்துக் கொள்ளவில்லை போலும் என்று எண்ணியிருந்த வேளை, அவளெதிரே வந்தது அவள் போலவே ஓர் உருவம்!!

கூந்தலிலே மனம் மயக்கும் காட்டுமல்லிகைச் சரம் சூடி.. தனங்களிலே கச்சிதமாக மார்புக்கச்சைப் பொருந்தி நிற்க, பல குறும்புக்கார புலவர்கள் வர்ணித்த, ‘பொய்யோ என்னும் இடையாள்’ என்னும் வரியின் நிதர்சனமாக,

தரையில் பதிந்த விழிகளுடன் நன்மாதருக்கான அத்தனை வரன்முறைகளையும் தன்னுள் உள்ளடக்கி நடந்து வந்தாள் அவள்!!

அவள் போலவே இருந்த அந்தச் சுரூபினிப் பெண்ணின் கைகளில் இருந்தது… யாதவன் தந்த

அதே மோதிரம்!! கானகத்தில் யாழினி தொலைத்த அதே மோதிரம்!!

அவள் எதிரே நின்றது அவளே தான்!!

ஆம், யாதவன் அரண்மனை ஓவியத்தில் இருந்த அதே பெண்!.

துஷ்யந்தனின் சகுந்தலை!!

பணிவடக்கத்துடன் வந்தவள், ஜடாமுடி முனிவரை நமஸ்கரித்து, அவரது தாள்களை ஜலம் கொண்டு கழுவி, பணிவிடை செய்யும் காட்சி யாழினியின் கண் முன்னே அப்படியே விரிந்தது.

சகுந்தலையின் அருகில் நின்றிருந்தது அவள் தோழி பிரியம்வதை!! சகுந்தலை, தன் இரகசியக் காதலனைப் பற்றி பகிர்ந்து கொண்ட ஒரே ஜீவன்!!

அந்தப் பிரியம்வதை.. அவளைப் பார்க்கும் போது கூட.. எங்கோ பார்த்த மாய அலைகள் எழுவதும் ஏனோ??

இடுங்கிய கண்களுடன் பழங்காலப் பெண்டிர்களின் ஆடையமைப்பில் நின்றிருந்த பிரியம்வதையை உற்றுப் பார்த்தவள், மூச்சுவிட மறந்தாள்!!

அ.. அது.. அது.. அவள் தோழி.. யாழினியின் தோழி, சக பணியாளினி ராகவியல்லவோ அது??ஆம், ராகவியே தான் அது!

முனிவருக்கான வாழை இலையை பிரியம்வதை வந்து தரையில் வைக்க, சாதம் பரிமாறத் துணிந்தாள் சகுந்தலா.

அந்நேரம் சகுந்தலையின் சிந்தனை முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது.. நேற்றிரவு யாரும் அறியா வேளையில்.. அந்த மந்தகாசமான இருள் சிந்திய குகையில்.. அவள் உடலில் சுகமான பற்தடங்களையும், முத்தங்களையும் பரிசாகத் தந்த ஹஸ்தினாபுரத்தின் அரசன்!!

காதல் கொண்ட பெண்டிர்கள்.. தலைவனுடனான காதல் கூத்தின் போது நிகழ்ந்த உரையாடல்களை மீள அசை மீட்டும் அவர் தம் இதயங்கள்!!

அது போலவே சகுந்தலையின் இதயமும் அசை மீட்டலாயிற்று!!

அவளைக் கட்டியணைத்து விழியோடு விழி சேர்த்து, காதல் ததும்பும் மென் குரலில், “நீ ‘உம்’ என்று சொல் பெண்ணே.. நாடு துறந்து… அரசாட்சி துறந்து.. அனைத்தும் துறந்து.. இதோ உன் மாடமாளிகையான தபோவனத்தில் உன் பணியாளனாக ஜீவித்து விடுகிறேன்..”என்ற அவனின் ஞாபகம் அவளுள் துளிர்க்கலாயிற்று.

‘அவள் மன்னவன் வருவான்.. அவள் விரகதாபம் தீர இதழோடு இதழ் சேர்த்து உயிரையும் ஈய்வான்’ என்று துஷ்யந்தனின் நினைவுகளிலேயே உழன்று தவித்தவளுக்கு உலகம் மறந்து போனது.

காதல் மிகுதியில் ஆட்பட்டு இருந்தவளுக்கு தன் முன்னாடி அமர்ந்திருப்பவர், அகத்தையும் அலசும் பொல்லாத மோசக்கார முனிவர் என்பதையறிந்திராத மங்கையோ,

வாழை இலையில் சாதம் அள்ளி வைக்காமல், ஒரு கரண்டி உப்பள்ளி வைக்க, திடுக்கிட்டு நிமிர்ந்து

சகுந்தலையை சுட்டுப் பொசுக்கும் விழிகளுடன் நோக்கலானர் முனிவர்.

(உப்பா? சாதத்தோடு உப்பெதற்கு? என்னும் வாசகர்கள் மனக்கேள்விக்கு பதிலளிப்பதே உசிதம்.

முன்னைய காலத்தில், வாழை இலையில் உணவு பரிமாறும் போது.. முறைக்காக, உணவில் எழும் ருசி ஏற்றத்தாழ்வுகளை அவரவருக்கேற்ப சமாளிப்பதற்காக உப்பு வைப்பது வழக்கம்!! அது தான் அங்கே, முனிவரின் இலையில் சகுந்தலை வைத்த உப்பு)

அவர் கோபத்துடன் நிமிர்ந்தது கூட அறியாமல்… காதல் சிந்தும் கமல விழிகளுடன், 'சேனையோடு வருவேன்!!'என்று சொல்லி விட்டுச் சென்ற துஷ்யந்தனின் நினைவுகளிலேயே நின்றிருந்தாள் அப்பாவி சகுந்தலா!!

இல்லை இல்லை!! அடப்பாவி சகுந்தலா!!

விருந்துபசாரத்தில் பிழை செய்தது மட்டுமல்லாமல், பிழை நேர்ந்தது கூட அறியாமல் இருக்கும், மேனகையின் புதல்வி மேல்.. வந்தவருக்கும் போனதே கோபம்!!.

தன் தோள்புஜங்கள் ஏறி இறங்க உஷ்ணத்தீ மூச்சு விட்டவர், கடுங்கோபத்தில், ‘‘நீ யாரை மனதால் நினைத்தாயோ.. அவன் நினைவுகளில் இருந்து நீ அழியக் க்கடவது!!..’’என்று சாபமும் கொடுக்க,

அதையும் கூட அறியாதளவுக்கு.. துஷ்யந்தனின் கூடலின் போது அவன் காட்டிய காதலில் மீண்டும் மூழ்கிப் போயிருந்தவள், திரும்பவும் ஒருபிடி உப்பள்ளி வைக்கவே செய்தாள்.

இதைக் கண்டு தோழி பிரியம்வதை அதிர்ந்து நிற்க, சகுந்தலையின் உப்பேந்திய கரத்தினைத் தடுத்தது, தவத்தினால் உரமேறிப் போயிருந்த முனிவரின் கரங்கள்!!!

அப்போது தான் சிந்தனை தெளிந்தவள், முனிவரை புரியாது நோக்க, அவரோ இன்னும் இன்னும் தனக்குள் வெஞ்சினம் வலுக்க,

கை முஷ்டி இறுக்கி நின்று கோபத்தை அடக்க முற்பட்டவராக,

அவளிடமிருந்த உப்புக்கரண்டியைப் பிடுங்கியவராக, பற்களைக் கடித்துக் கொண்டு,

“வ்வேண்டாம் வ்விடு.. வ்வேண்டாம்!!..புனிதமான இடத்தில் இருந்தும், அகத்தால் சுத்தமில்லாத எண்ணங்களை எண்ணும் ப்பெண்ணின் க்கையால் ஒரு சொட்டுத் த்தண்ணீர் க்குடிப்பதே ப்பாவம்!!!.. அப்படியிருக்க உன் கையால் எனக்கு எந்த உபசாரமும் தேவையில்லை!!என்றவர், தபோவனத்தை விட்டும் விடுவிடுவென வெளியேற அதிர்ந்து நின்றது புராதன சகுந்தலை மட்டுமல்ல!!

இந்த நவீன சகுந்தலையும் தான்!!

வெளியேறிய முனிவரின் கழுத்திலே இருந்த உருத்திராட்ச மாலையும், பரந்த நெற்றியிலே இருந்த நாமமும் வேறு, அவளது கவனத்தைக் கவர, மெல்ல இடுங்கியது நவீன சகுந்தலையின் கண்கள்!!

அவள் காதோரம் ஒலித்தது அந்த வசனங்கள்!!

காரில் மோதுண்டு கிடந்தவரின் பாதங்களைப் பிடித்து, அவள் காயத்துக்கு பணிவிடை செய்யப்போக, அதை ஏற்க மறுத்து,

“வ்வேணாம் வ்விடு.. வ்வேணாம்!!..கணவனுடைய அன்பை புரிஞ்சு நடந்துக்காத ப்பெண்ணின் க்கையால் ஒரு சொட்டுத் த்தண்ணீர் க்குடிக்குறதே ப்பாவம்!!!.. அப்படியிருக்க உன் கையால் எனக்கு எந்த உபசாரமும் தேவையில்லை!!” என்று இரைந்து கத்திய, டாக்டர். கோவிந்தராஜின் அதே குரல்!!

சைக்காட்ரிஸ்ட் சாமியாரா? புராதன சகுந்தலையின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட துர்வாச முனிவர்??

அவரைப் பார்த்த போது.. எங்கோ பார்த்த ஞாபகம் வந்ததும் இதனாலேயா?? அதிர்ந்தாள் நவீன சகுந்தலா!!

துர்வாச முனிவரைத் தொடர்ந்து வெளியே வந்த தோழி பிரியம்வதை, அவர் காலில் வீழ்ந்து சகுந்தலைக்காக மன்னிப்புக் கேட்கும் நிழலுருவம் காட்சியில் தற்போது விரியலானது.

சாபம் கொடுக்கப்பட்ட கதை கூட தெரியாத சகுந்தலை, பணியுபசாரத்தில் பிழை நேர்ந்ததில் உள்ளே மருகிக் கொண்டிருக்க, வெளியே அவளுக்காக மன்றாடும் பிரியம்வதையின் பாசத்தை எண்ணி நெகிழ்ந்து போனாள் நவீன சகுந்தலை!!

துர்வாசர் ஏதோ முடியாது என்பது போல தலையசைப்பதும், அங்கிருந்து அவர் நகர முனைவதும், அதற்கு விடாமல் பிரியம்வதை அவர் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதையும் கண் கூடாகப் பார்த்தாள் நவீன சகுந்தலை.

பின் முயன்று தன் கோபத்தை அடக்கிய துர்வாசர் பிரியம்வதை நோக்கி, ‘‘பெண்ணே.. உன் தோழியின் தலைவன், தந்த நினைவுப் பொருள் உன் தோழி வசம் இருக்கும் வரை அவனுக்கு, அவள் நினைவுகள் இருக்கும்..!!’’என்று விட்டு நகர,

பிரியம்வதையும் சகுந்தலை கையில் துஷ்யந்தனின் மோதிரம் இருக்கும் வரை எந்த பயமும் இல்லையென்றெண்ணி..

ஆசுவாசப்பெருமூச்செறிவதும் யாழினியின் கண்களில் தெரிந்தது.

மீளப் பிறந்த சகுந்தலைக்கும் அன்று நடந்தது அனைத்தும் சிறுகச் சிறுக சிந்தையில் மலரலாயிற்று.

அப்படியானால் நவீன துர்வாசமுனிவரான டாக்டர். கோவிந்தராஜ் தந்த சாபமா இது??

“ கர்மாஆஆ!! கர்மாஆஆ!! அவனை சும்மா விடாது.. போன ஜென்மத்துல நீ அனுபவிச்ச வேதனையை.. இந்த ஜென்மத்துல அவன் அனுபவிச்சிட்டிருக்கான்!! ..நீ அவனை மன்னிச்சு ஏத்துக்குற வரைக்கும்··· கர்மா அவனை சும்மா விடாது..!!” என்று ஆக்ரோஷம் ததும்பும் விழிகளுடன் சொன்னவர் சட்டென வந்தார் அவள் மனக்கண்முன்.

போனஜென்மத்தில் பிரியம்வதையே நேரடியாக, துர்வாசரைச் சந்தித்து சாபத்துக்கான விமோசனம் பெற்றாள். ஆனால் நவீன பிரியம்வதையான ராகவியோ,

சைக்காட்ரிஸ்ட் சாமியாரான டாக்டர். கோவிந்தராஜிடம் யாழினியை ஆற்றுப்படுத்தி, அவளது நவீன சாபத்துக்கான விமோசனத்தை மறைமுகமாகப் பெற்றுக் கொடுத்திருக்கிறாள்.

டாக்டர். கோவிந்தராஜினை சந்தித்த பின்பு தானே.. “மறுபிறவி, கர்மா” பற்றிய தெளிந்த அறிவை அவள் பெற்றாள்??

“மறுபிறவி, கர்மா இதையெல்லாம் ஏன் சொல்றேன்னு பார்க்குறியா?.. உன் குழப்பத்துல இருந்து நீ மீண்டு வரணும்னா.. நீ இதை நம்பணும்.. அப்போ தான் முழுசா உனக்கு ஒரு தீர்வு கிடைக்கும்.” என்று அவர் சொன்னவையெல்லாம், மீண்டும் ஒலித்து ஓய்ந்தது அவள் செவிகளில்.

அப்படியென்ன வினைப்பயன், அவளது துஷ்யந்தனை துரத்துகிறது?? துஷ்யந்தனின் மனைவிக்கு அப்போது அந்தக் கேள்விக்கு விடை கிடைக்கவில்லை.

அதைப் பற்றி யோசிக்கும் முன்னம், அக்காட்சிகள் மறைய, வேறோர் காட்சிகள் விரியலாயிற்று கண்ணெதிரே.

****

தன் இடையில், கங்கையிலிருந்து சுமந்து வந்த நீர்க்குடத்துடன், பூமிக்கு வலித்து விடுமோ என்றஞ்சி.. மென்னடை நடந்து வருபவளும் அவள் தானோ??

இம்முறை அந்தச் சகுந்தலையும், தானும் இருவரல்ல என்ற உண்மையை அவள் உணர்ந்து கொண்ட தருணம் அது!!

அவள் வெறுமனே பார்வையாளினியாக அன்றி, அந்தச் சகுந்தலையாகவே மாறிப் போனாள்.

நீர்க்குடம் ஏந்தி வந்தவளின் இடை சுமந்த பாரத்தை அந்த நவீன சகுந்தலையும் சுமந்தாள். அவளில் ஏற்படும் மாற்றங்களை இவளும் அனுபவித்தாள்.

யாழினி, டாக்டர். கோவிந்தராஜ் கூறியது போல அதை அவள் முழுமையாக நம்பத் தொடங்கிய

நேரம்.. அவளுள் பல அதிசயங்கள் நிகழத் தொடங்கியிருந்தது.

மெல்ல நடந்து வந்தவள், தபோவனக் குடிலின் கூடத்திலேயே மயங்கி விழ எத்தனிக்க, அதற்கு விடாமல் அவளை ஆதரவாகப் பற்றிக் கொண்டது அவளுக்கு நன்கு பரிச்சயமான இரு கரங்கள்!!

தன்னை தாங்கிப் பிடித்த கரங்களுக்கு சொந்தக்காரனை அவள் உற்று நோக்க, அங்கே நின்றிருந்தது ஆசிரமத்தில் அவளோடு ஒன்றாக வளர்ந்த அவளது நண்பன் ஸ்ரீராம்!!

அப்படியாயின் ஸ்ரீ ராம், தபோவனத்திலே அவளோடு ஒன்றாக வளர்ந்த சம வயதுத் தோழன் “விஷ்ணுவர்தனா” அவன்?

அதனால் தான் அவனால் ,இந்த ஜென்மத்தில்.. இவள் மேல் கல்யாணக் கனவுகளை இயற்கையாக வரவழைத்துக் கொள்ள முடியாமல் போனதுவோ?

அவன் பக்கத்திலே பதறிய களேபரமான முகத்துடன் நின்றிருந்தார் அவளுடைய தாயுமானவரான ஆருயிர்த் தந்தை மகேந்திரன்!!

இல்லை.. அது அவளுடைய கண்ணுவ முனிவர் அல்லவோ??

பெற்ற தந்தை கூட இத்தனை பாசம் அவள் மேல் வைத்திருக்கக் கூடுமா என்ன? அவர் கண்களில் தான் எத்தனை கலக்கம்??

தபோவனத்திற்கு வந்த மருத்துவச்சிப் பெண்.. அ.. அது அவள் தோழி டாக்டர். தியா அல்லவா??

இப்பிறப்பில் அவளோடு நெருங்கிய தொடர்பில் இருக்கும் அனைவரும் முற்பிறப்பிலும் அவள் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவர்களா என்ன?

மருத்துவச்சி அவளை பரிசோதிக்க, ‘‘சகுந்தலை மணமாகாமலேயே கருவுற்றிருக்கும் செய்தி’’ அறிந்தது தபோவனம்.

தீ புகைவதை மறைத்து வைத்தலும் கூடுமோ? அதன் பின் காட்டுத் தீ போல, சகுந்தலா கருவுற்றிருக்கும் செய்தி பரவவும் செய்தது.

அனைவரும் அதிர்ந்து நிற்க, அவள் நடத்தைப் பற்றி பல ஐயங்களையும், கேள்விகளையும் சுமந்து நிற்க, அவள் மட்டும் அவர்களில் நின்றும் மாற்றமான மனநிலையில் உழன்று கொண்டிருந்தாள்.

அவளுள் சுகமான ஓர் உணர்வு எழுந்தோடியது. கைகள் அடிவயிற்றை வாஞ்சையுடன் தடவிக் கொண்டன

அவள் இதழ்களோ தாய்மையுடன் கூடிய காதலுடன், முணுமுணுக்கும் குரலில், “இது துஷ்யந்தன்.. அவளுக்குத் தந்த பரிசு.. இது அவளுடைய துஷ்யந்தனின் குழந்தை!!” என்ற போது, ஆனந்தக் கண்ணீர் வழிந்தது அவள் விழிகளில் இருந்து!!

சுற்றத்தாரோ அவள் நடத்தையைக் கேள்விக்குறியாக்கி, அவளை நோக்கி கல்லெறி போன்ற மனதைக் குதறும் சொற்களை வீச, அதைப்

பொருட்படுத்தாமல்.. உள்ளூற மகிழ்ந்து கொண்டாள் அவள்.

அவள் மகிழ்ந்தாள்;ஆயினும் அவள் வளர்ப்புத் தந்தை?? அவர் மகிழவில்லையே??

பெண்ணோடு சேர்த்து.. அவரின் வளர்ப்புக்கும் அல்லவா பங்கம் நேர்ந்து விட்டது??

ஒரு பக்கம் மகளுக்கு இப்படியானதே என்ற கவலை.. பரிதவிப்பு! மறுபுறம் ஊரார் தன் வளர்ப்பைக் கேவலப்படுத்திப் பேசும் அவச்சொல் கேட்டு வந்த கோபம்!!
இரண்டும் அலைஅலையாக முகத்தில் போட்டி போட சிவந்த விழிகளுடன்,

அவள் கைப்பற்றி உலுக்கி, ‘‘உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு யார் தந்தை? சொல் சகுந்தலா..

தாய், தந்தை அறியாத உன்னைக் கண்டெடுத்து.. வளர்த்ததற்கு நீ காட்டும் நன்றிக்கடன்.. இந்த அவச்சொல் தானா? யார் அந்தக் கயவன்.. சொல்

சகுந்தலா??” என்று கண்ணீர் வழியக் கேட்கும் அவரின் சொற்கள் சுடுகின்றது அவளை!

எப்பேர்ப்பட்ட முனிவர்.. அவரையும் கண்ணீர் சிந்தி உணர்ச்சிவசப்பட வைத்து விட்டாளே இந்தப் பொல்லாத சகுந்தலை!!

இப்பிறவியில்.. கல்யாண மண்டபத்தில் வைத்து.. தந்தை இதே கேள்வியைக் கேட்ட போது.. சத்தியமாக அந்தக் கேள்விக்கு விடை தெரியவில்லை அவளுக்கு!! காரணம் நடந்தது எதுவுமே அவள் நினைவில் இல்லை!!

ஆனால் இன்று.. இந்நொடி அவள் அனைத்தையும் அறிந்திருந்தாள். துஷ்யந்தனுடனான கூடலில் அவன் தீண்டிய ஒவ்வொரு தீண்டலையும், இன்னும் ஏன் அவன் விட்ட ஒவ்வொரு பெருமூச்சையும் கூட நினைவில் வைத்திருந்தாள் சகுந்தலை.

கல்யாண மண்டபத்தில் கேட்ட கேள்விக்கும் சேர்த்து.. புராதன சகுந்தலை வாயிலாக,

தந்தை கேள்விக்கு விடை அளித்தாள் சகுந்தலை!!

கண்ணுவ முனிவரின் கைகளை, மயக்கத்தினால் உண்டான ஆயாசத்துடன் பற்றிக் கொண்டவள், மென்மையான குரலில்,

“உங்கள் சகுந்தலை தவறானவள் அல்ல தந்தையே!! இந்தக் குழந்தையும் தவறான வழியில் வந்ததும் அல்ல!! உங்கள் வளர்ப்பு முறையற்றதும் அல்ல! .. காந்தர்வ மணம் புரிந்து கொண்டேன் எந்தையே..!!”என்றாள் அவள்.

“யாரை?”- சட்டென்று ஒலித்தது அவளது தோழன் விஷ்ணுவர்தனின் குரல்!!

அன்றும் கூட.. இவள் நிலையைக் கண்டு இரங்காது.. கேள்வி கேட்டிருக்கிறானே இவன்? என்றே எண்ணத் தோன்றியது நவீன சகுந்தலைக்கு!

அத்தனை சோர்விலும் தயங்காது நெஞ்சு நிமிர்த்தி சொன்னாள் அவள்.

"என் காந்தர்வ மணத்தின் தலைவன்.. என் நெஞ்சு நிறை காதலன்!! என் குழந்தையின் தந்தை.. ஹஸ்தினாபுரத்தின் பேரரசன்.. மகராஜ் துஷ்யந்த்!!"- அவள் விழிகளில் தெரிந்த காதலைக் கண்ட, கண்ணுவ முனிவருக்கும் மகள் மெய்யே சொல்வதாகத் தோன்றிற்று.

மராமரத் தண்டில் சாய்ந்திருந்தவளுக்கு.. இதழ்களிலே சிறு புன்னகை படர்ந்தது. தந்தை இந்த ஜென்மத்தில் கல்யாண மண்டபத்தில் கேட்ட கேள்விகளுக்கு..

அந்த ஜென்மத்தில் அவள் தயங்காது, அசராது விடை பகர்ந்திருக்கிறாளே என்பதால் விளைந்த ஆசுவாசப் புன்னகை அது.

அவள் மெல்லக் கண்களை மூடித் திறந்த போது.. மீண்டும் காட்சிகள் புதிதாகத் தோன்றியிருந்தது.

அவள் அமர்ந்திருந்தது என்னவோ மராமரத்தின் அடியில் தான்.. ஆனால் அந்த மோதிரத்திலிருந்து வந்த அமானுஷ்ய ஒளி.. அவளுடைய பூர்வஜென்மத்தை ஒன்று விடாமல் அவளுக்கு

காட்சிப்படுத்திக் கொண்டிருந்தது. அது தான் உண்மை!!

அவை.. பென்னாம்பெரிய.. பூவேலைப்பாடுகள் கொண்ட ஓர் கற்றூண்கள்!! அந்தக் கற்றூண்கள் தாங்கிப் பிடிக்க,

ஆயிரம், இரண்டாயிரம் ஜனங்கள் நிற்கக் கூடிய அளவுக்கு.. பிரம்மாண்டமான அரசவை ஓலக்க மண்டபம் அது!!

அத்தகைய ஓர் ஓலக்கமண்டபத்தை.. நவீன சகுந்தலை தன் வாணாளில் பார்த்ததே கிடையாது

அவள் கண்கள் அந்த அரண்மனையின் அரசவையைச் சுற்றி வரச் சுழன்றது.

அழகழகான பெண்களின் பிரம்மாண்ட ஓவியம் இருக்க, அங்கே இருந்த அரியணைக்கு பக்கத்தில் இரு சேடிப் பெண்கள் சாமரம் வீச, ஓலக்க மண்டபத்தின் இருமருங்கிலும் உயர்ந்த ஆசனங்கள் இருக்கக் கண்டாள் அவள்!!

அவ்வாசனங்களிலே.. இரத்தினங்களும், வைரங்களும் பதிக்கப்பெற்ற பாதுகைகள் அணிந்து..

உயர்ந்த ஆடை அணிமணிகளுடன் நடுத்தர வயதை ஒத்த பல வீரக்களை பொருந்திய ஆடவர்களையும் கண்டாள் அவள்.

ஓ.. இவர்கள் அரசவை மந்திரிகளோ.. எண்ணிக் கொண்டது மாதுவின் மனம்!!

அனைவரையும் ஆராய்ந்தவளின் கண்கள், அரியணையில் நடுநாயகமாக வீற்றிருந்த அவனில் பதிந்தது. அரியணையில் ஓர் அரிமா போல கம்பீரத்துடன் அமர்ந்திருந்தான் அவன்!! அவளது யாதவன்!! இல்லை அது அவளுடைய ஆருயிர் துஷ்யந்தன்!!

அவனைக் கண்டதும் பளிச்சென்று மதிநிலவைத் தோற்கும் பிரகாசத்துடன் மிளிர்ந்தது அவள் முகம்!

பக்கத்திலே அவள் நன்கறிந்த முகமாக யாதவனின் சித்தப்பா சங்கர்தேவனும், அவன் நண்பன் விக்னேஷும்..ஷத்திரிய வம்சத்திற்கே உரிய கம்பீரமான உடையில்!!

இந்த ஜென்மத்தில் யாதவனின் சிறிய தந்தையாகப் பிறந்திருப்பவர்.. பூர்வ ஜென்மத்திலே அரசன் துஷ்யந்தனின் தந்தை இலிலன்’ னாக.

அதனால் தான் யாதவனின் சித்தப்பாவும், அவனும் ஒரே முகசாயல் உள்ளவர்களாக இருக்கக் காரணமோ? என்றெண்ணியது மடந்தையின் மனம்!!

அவன் நண்பன் விக்னேஷ், துஷ்யந்தனின் உற்ற தோழன் கனிஷ்கனாக.

அவள் விழிகள்.. வேறு யாரிலும் அதிகம் கவனம் செலுத்தாது தன் மன்னவனையே தான் ஆராய்ந்தது.

சந்திரனும், சூரியனும் ஒரு சேரத் தோன்றும் போது நிலைக்கும் பிரகாசத்தை ஒத்து இருந்தது அவளுடைய யாதவனின் வதனம்!!

அதில் தெரிந்த வீரக்களை.. எப்பேர்ப்பட்ட வீராதிவீரனாக இருந்தாலும்.. அவன் முன்னே தூசு தான் என்பதை ஐயந்திரிபற உணர்த்திக் கொண்டிருந்தது.

காற்றிலே அலைபாய்ந்து கொண்டிருந்த அவன் கேசத்தை, அன்றிரவு குகையில் வைத்து அளைந்து விளையாடியது போல இன்றும் அளைந்து விளையாட வேண்டும் என்று எண்ணங் கொண்டது அவன் மேல் பித்தான சகுந்தலையின் மனம்!!

அவளை துஷ்யந்தனின் அரசவைக்கு, அழைத்து வந்திருந்தது, அவளது தாயுமானவரான கண்ணுவ முனிவரே தான்!!

துஷ்யந்தனின் விழிகளோ கண்ணுவ முனிவருக்கு அருகாமையில் நின்றிருந்த சுரூபினிப் பெண்ணையே இடையறாது கண்காணித்தது.

‘என்னேவொரு சுந்தரச் சுரூபினிப் பெண் இவள்!! இந்திரன் கண்டால்.. தேவலோகத்து அந்தப்புரத்தின் பெண்டிர் பட்டியலில்.. இன்னோர் பேர் சேர்ப்பான்.. நிச்சயம் இப்பெண் பெயர் சேர்ப்பான்!!ஆனால் இப்பெண் பெயர் என்னவாக இருக்கும்? சுந்தரப் பெண்ணின் பெயர்.. நிச்சயம் சுந்தரமாகத் தான் இருக்கும்!!’ என்று மனதுக்குள் எண்ணியவனாக, அவள் அழகை வியந்து நின்று பார்க்க,

அதைக் காதல் பார்வையாக எண்ணிக் கொண்ட சகுந்தலை, நாணத்தில், சூரியகாந்தி பூவாக தலை குனிந்து கொண்டாள்!!

அந்த சபையின் முன் கேட்டது கண்ணுவ முனிவரின் கணீர் குரல்!! அந்தக் குரலில் நனவுலகம் வந்தான் துஷ்யந்தன்!!

அவையோருக்கு வணக்கம் வைத்த கண்ணுவ முனிவர், “அஸ்த்தினாபுரம் என்னும் யானையின் பலத்தை நிகர்த்த அசுரபலத்தை தன் வசம் வைத்து ஆளும் அரசே!!.. நான் கண்ணுவ முனிவர்.. உம் எல்லைக்குள் ஓடும் கங்கையின் படுக்கையில்.. தபோவனக்குடில் அமைத்து.. தவம் செய்து வாழ்பவன் .. நான் ஈசன் சொத்து!!”என்று தன்னை அறிமுகப்படுத்தியவர்,

நாணத்தோடு தரை பார்த்து நின்றவளை சுட்டிக்காட்டி,

“ஆனால் இதோ உங்கள் முன் நிற்பவள்.. இவள் நும் சொத்து…” என்று சொன்ன போதே, புராதன

யாதவனின் ஒற்றைப் புருவம் மெல்ல மேலுயரத் தொடங்கியது.

அதைக் கவனியாத கண்ணுவ முனிவரோ, ‘‘நும் குழந்தையை சுமந்து நிற்பவளை.. உரிய இடத்தில் சேர்ப்பது தானே தகும்??’’என்று சொல்ல,

சட்டென அரியணையில் இருந்தும் எழுந்து நின்றான் புராதன யாதவன்!!

‘‘என்ன? மறுபடியும் கூறுமின்??’’- வெஞ்சினத்தில் செக்கச் செவேலென சிவந்து போனது யாதவனின் முகமும் கழுத்தும்.

கண்ணுவ முனிவரோ உண்மை சொல்ல அஞ்சாதவராக, ‘‘நும் குழந்தையை சுமந்து நிற்பவளை.. உரிய இடத்.. தில்’’ என்று சொல்ல,

இம்முறை கையுயர்த்தி, ‘போதும்’ என்பது போல தடுத்தான் துஷ்யந்தன்.

சகுந்தலையோ அதிர்ந்து நிற்க, அரியணைப் படிகளை விட்டும் இறங்கி…அவளை நோக்கி

அழுத்தமான எட்டுக்கள் வைத்து நடந்து வந்தவன், அவள் உள்ளம் கலக்கமுற்று நிற்கும் வண்ணம் கேட்டான்,

“இது என் குழந்தை தான் என்பதற்கு என்ன ஆதாரம்?? சொல்!!.. உனக்கும், எனக்கும் பழக்கம் என்று காட்ட என்ன ஆதாரம் இருக்கிறது.. சொல் பெண்ணே!!”என்று.

இந்த ஜென்மத்தில், “இவள் வயிற்றில் வளர்றது என் குழந்தை தான்” என்று யாதவன், கல்யாண மண்டபத்தில் வைத்து ஒப்புக் கொண்ட நேரம், அவனைப் பார்த்து யாழினி கேட்ட அதே கேள்வி!!

“இது உன் குழந்தை தான்றதற்கு என்ன ஆதாரம்?? சொல்லு!!.. உனக்கும், எனக்கும் பழக்கம் அப்படின்னு காட்ட என்ன ஆதாரம் இருக்கு.. சொல்லு??”- என்ற அதே கேள்வி!!

பூர்வ ஜென்மத்தில் அந்தப் புராதன சகுந்தலை ஆதாரம் காட்ட, கையில் அவன் அணிவித்த மோதிரம் அங்கணம் இருக்கவில்லை.

அரண்மனை வர ஆற்றைக் கடந்த சமயம்.. ஆற்றோடு சென்று விட்டிருந்தது அந்த கணையாழி!! அது தான் விதி!

ஆனால் இந்த ஜென்மத்தில்.. யாதவன், யாழினிக்கு அணிவித்த, அந்த “யா” வடிவ பெண்டன், யாதவன் ஆதாரமாகக் காட்ட.. அவள் கழுத்திலே கிடந்தது!

நினைவுப் பொருள் இருக்கும் வரை நினைவுகள் இருக்கும் என்பது தானே சாபவிமோசனம்??இந்த ஜென்மத்தில் அவள் கழுத்தில், அவன் தந்த நினைவுப்பொருள் இருக்க,

அவளெப்படி அவனை மறந்தாளாம்?? அதற்கும் வலிய காரணம் இருக்கத் தான் செய்தது.

அவளை கேசாதி தாள் வரை இழிவாக ஓர் பார்வை பார்த்தவன், “எவனுக்கோ உதயமான குழந்தையை.. என் குழந்தையென்று சொல்லி.. அரசாளும் என்னமா? இல்லை எனையாளும் எண்ணமா??”என்று கேட்க,

சட்டென காதுகளைப் பொத்திக் கொண்டாள் சகுந்தலா.

பூமாதேவி தன்னை உள்ளிழுத்துக் கொள்ள மாட்டாளா? என்று எண்ணத் தோன்றியது அவளுக்கு.

கண்ணுவ முனிவர்.. திகைத்து நிற்க, தன் காதல் ஜீவன் துஷ்யந்தனை கண்ணீர் மல்கப் பார்த்தாள் அவள்.

அன்றிரவு குகையில் அடிபட்ட கணம் தேவனாகத் தெரிந்த அதே மன்னவன், இன்று அசுரனை விடவும் இழிவானவனாகத் தோன்றினான் அவள் கண்களுக்கு
துர்வாச முனிவரின் சாபத்தையும், மோதிரம் தொலைந்ததால் தான் இவன் என் நினைவுகள் தொலைத்திருக்கிறான் என்பதையும் அறியாத சகுந்தலை மனம் வெதும்பிப் போனாள்.

அவனை காதலும், கவலையும் இதயத்தை ஒரு சேரத் தாக்க, சிவந்த விழிகளுடன் பார்த்தவள்,

தொண்டையில் அடைத்த அழுகையை விழுங்கிக் கொண்டு, “மூவுலகும் ஆளும் நீதி நெறி வழுவாத மன்ன!! கானகத்தில் அடிபட்டுக் கிடந்த போது.. நுமக்கு பணிவிடைகள் செய்தேன்!! என்ன என்னமோ பேசி மனதைக் கலைத்து.. “கைம்மாறு வேண்டாம் பெண்ணே.. காதல் தா ?” என்று நீர் என்னிடம் சொல்லவில்லையா?”என்று கேட்டாள்.

“இல்லை!!”- சட்டென அவளிடமிருந்து பாய்ந்து வந்தது துஷ்யந்தனின் வார்த்தை!!

அவன் மறுப்பில், அவளது இடது கண்ணோரம் சரேலென வழிந்தது ஒற்றைத் துளி கண்ணீர்!!

வரண்ட இதழ்களுடன் வாய் திறந்தவள், “கற்பொழுக்கம் கற்ற என்னையும்..அவ்விரவே.. காதலோடு பேசி களவாடத் துணியவில்லையா?”என்று கேட்க, அதற்கும் நொடியும் தாமதியாமல் அவன் உறுமிய படி சொன்னான்,

“இல்லை!!” என்று.

இம்முறை இரு கண்களிலும் ஒரு சேர நீர்வழியலானது.

அவள் விட்ட கண்ணீர்.. தனங்கள் வரை கோர்க்கத் தொடங்கியது.

“தந்தை ஊரில் இல்லை.. கா.. காக்.. காத்திருக்க சொன்னே.. ன்.. காந்தர்வ மணம் புரிய அனுமதி உண்டு என்று என்னோடு ஒன்றாகக் கலந்தீரி.. ல்லைய்?”என்று அவள் உடைந்து போனவளாக வார்த்தைகளை முடிக்கும் முன்னர் கேட்டது துஷ்யந்தனின் குரல்!

“இல்லைஐஐஐ..!!”

“சேனையோடு வருவேன்.. உன்னை அழைத்துச் செல்ல வருவேன்!! என்று என்னை.. க் காத்தி… ருக்கும்படிக் கூறிச் செல்லவே.. யில்லையா??”என்று நிராதரவாக சொன்னவள், அவனது ஏகாந்தமான விழிகளையே பார்த்திருந்தாள் அவள்.

அங்கணம் துஷ்யந்தனின் விழிகள் விகாரமாக மாறியது. கழுத்து நரம்புகள் விஸ்தாரமாகப் புடைத்து

வெளித்தெரிய, அனல் வீசும் பார்வையுடன், அந்த மண்டபமே அதிரக் கத்தினான் அவன்!!

“இல்லை.. இல்லை.. இல்லை.. இல்லவேயில்லை!!”- அவன் இட்ட சத்தத்தில்.. அவையில் இத்தனை கணம் எழுந்து கொண்டிருந்த சலசலப்பு அடங்கிப் போயிற்று.

ஊசி முனை விழுந்தாலும் கேட்கும் எனுமளவுக்கு நிசப்தமானது ஓலக்க மண்டபம்!!

அன்றிரவு.. யாருமில்லாத தனிமையில்.. குகையில்.. காதல் சிந்திய அவன் கண்கள்.. அங்கணம் வெறுப்பைக் கக்கிக் கொண்டிருந்தது.

இது என் பிராண நாதனா? என்ற ஐயம் எழ.. அவனை வலி சுமந்த கண்களுடன் பார்த்தாள் சகுந்தலை!!

அவளைச் சுட்டுப் பொசுக்கும் கோபம் அவனுள். பெண் என்பதால் பொறுத்துக் கொண்டவன்,

தன் திடகாத்திரமான கைகளை அவள் பால் நீட்டி, “ உன்னை நான் க்கண்டது இக்கணம் தான்.. க்கண்டதும் ‘சுரூபினி’ என்று எண்ணம் க்கொண்டேன் ப்பெண்ணே!!

ஆனால் உன் நாவில் இர்ருந்து வ்வரும் ப்பொய்மைகளும், க்கயமைகளும்.. சர்ப்பவிஷத்தை விடக் கொடியது!!

இந்த துஷ்யந்தன் இதுவரை எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பாராதவன்!!

இது அபத்தம்!! .. உன்னைப் போல **ப் பெண்களை பார்ப்பதும் தீது..!!

‘ஏழ்மை!’யென்று உண்மை சொல்!!.. உன் குடிலை பொன்னால் நிரப்புகிறேன்··· பொய்மையைக் கலைந்து விடு!!”என்று சொல்ல, அத்தனையும் விஷமாகத் தீண்டியது அவள் உயிரை.

இத்தனை வார்த்தைகளையும் மொழிந்தது அவள் மேல் உயிரையே வைத்த துஷ்யந்தனா? இல்லை அவன் உருவில் இருக்கும் வேறு யாருமா??

நிர்மலமான முகத்துடன்… கலங்கிய விழித்திரைகளுடன்.. ஆஜானுபாகுவான அந்த ஷத்திரியனை பார்த்தபடியே நின்றிருந்தாள் அவள்.

உடல் மட்டும் தான் அங்கு நின்றிருக்க.. உயிரோ மாண்டு போனது காதல் தலைவன் இயம்பிய சொற்களில்!

அவள் கற்புநெறி காத்த போது… அவள் மனதைக் கலைக்க இழைந்தவன்.. அவளை '**ப் பெண்' என்கிறானா??

அவையோர் எல்லாரும் அவள் மேல் வெறுப்பை உமிழ, அவள் பக்கம் ஆதரவாக நின்ற ஒரே ஜீவன்!! அவள் தந்தை!! கண்ணுவ ரிஷி!!

மகளை ஆதரவாகத் தோளோடு தோள் சேர்த்துப் பற்றிக் கொண்டவர், துஷ்யந்தனை தீர்க்கமான பார்வை பார்த்து,

"என் மகள்… அப்படியானவள் அல்ல!!.. அவள் உடலில் ஓடும் இரத்தம் தபஸ்வி விஸ்வாமித்திரர்

உடையது. ஏழ்மையிலும் எளிமையாக வாழும் எங்களுக்கு எதற்கு நும் பொன்னும், பொருளும்??…. காலம்.. பதில் சொல்லும்.!!!''என்று துஷ்யந்தனைப் பார்த்து தைரியமாகக் கூறியவர்,

அவள் முன்னங்கைப்பற்றியவராக மண்டபத்தை விட்டும் அழைத்துச் செல்லும் காட்சித் தெளிவாகப் புரிய, நவீன சகுந்தலைக்கும் பொலபொலவென கண்ணில் வடிந்தது கண்ணீர்!!

போன ஜென்மத்தில் பக்க பலமாக நின்ற தந்தை ஏன்.. இந்த ஜென்மத்தில் அனைவர் முன்னிலையிலும் தூக்கியெறிந்தார்?? புரியவேயில்லை அவளுக்கு

ஆனால் நெஞ்சம் நிறைய வலி!! யார் முன்னிலும் தலை குனியாத தந்தை.. அஸ்தினாபுரத்தின் அரசவையில் தலை குனிந்த வலி!.. அந்த வலி மட்டும் கொட்டிக் கிடந்தது அவளுள்.

அஸ்தினாபுர அரண்மனையில் நிகழ்ந்தது நகரத்து மாந்தர்களிடையே காட்டுத்தீயாகப் பரவ, அடுத்தநொடி ''நீதி நெறி வழுவாத துஷ்யந்தன் மேல் பழி சுமத்திய விசித்திரப் பெண்ணைப் பார்க்க வீதியெங்கும் அணுகுற்றனர் மக்கள்!!

வீதியில் இருந்த மாந்தர்கள் எல்லாம், அவளை தீண்டத் தகாத பெண்ணைப் பார்ப்பது போல, அருவெறுப்பு பார்வைப் பார்த்தபடி..

தங்களுக்குள் ஏதேதோ குசுகுசுப்பது புரிகிறது.

காதல் ஒன்றைப் பரிசாகக் கொடுத்து விட்டு.. அவள் வாங்கிய சிசுவுக்காக அத்தனையும் தாங்கி நின்றாள் சகுந்தலை. அவள் கண்கள் யாரையும் நிமிர்ந்து பார்க்கத் துணியவில்லை.

உப்புத் தின்றவன் அவன்!! தாகமெடுத்துத் தண்ணீர் குடிப்பவளோ இவள்!!

தப்பு செய்தது அவன்!! தண்டனை அனுபவிப்பது இவள்.

அஸ்த்தினாபுரத்து வீதியில் நின்றிருந்த சில மாதர்கள், அவள் முகமெதிரேயே, “நம்.. மகாராஜாவுக்கே வலை விரித்த ** ப் பெண் இவள்..” என்று ஏதேதோ வாய்க்கு வந்தபடி சொல்ல,

கல்லெறி போன்ற சொற்கள்… அவள் பாழும் இதயத்தைக் குடைந்தது.

நெஞ்சிலே பாறங்கல் ஏற்றி வைத்தாற் போன்று வலிக்கிறது. இத்தனை ஊரார் அவலச் சொற்களும் ஆளானவளாக.. அந்த ஹஸ்த்தினாபுரத்தின் பாதை வழி.. மென்மையாக அவள் நடந்து சென்றாள்.

பெண்களை கண்கள் போல் மதித்துக் காக்கும் தங்களின் அரசன் மேல் அடாத பழி சுமத்தியவள் என்ற கோபத்தில், மக்கள்.. அவள் மீது கல்லெடுத்து எறிந்தனர்

நெற்றியில் பட்ட கல்லில்..இரத்தம் குபீரிட, கண்ணிலோ கண்ணீர் மல்கியது.

“வெளியே போ.. வெளியேறு” என்று கூச்சலிட்டனர் மக்கள். அவர்கள் முன்னிலையில் செய்யாத குற்றத்துக்காக தலை குனிந்தவராக, தன்னுடன் வரும் தந்தையை எண்ணும் போது இன்னும் நெஞ்சு கனத்தது அவளுக்கு.

நகரத்தின் எல்லையை அடைந்தவள், திரும்பி அரண்மனையை வலி நிறைந்த கண்களோடு

பார்த்தாள். அரண்மனை மாடத்தில் நின்று.. நடக்கும் அத்தனையையும் நிர்மலமான முகத்துடன் பார்த்திருந்தான் துஷ்யந்தன்.

“அந்தப் பெண் யாரென்று தெரியவில்லை தான்.. இருப்பினும் அவளை ஊர் மக்கள் தூற்றும் போதும்.. அடிக்கும் போதும்.. அவள் கண்ணீரைக் காணும் போதும்.. ஏன் துயருகிறது நெஞ்சம்?? அவளை அள்ளி அணைத்து தேற்ற வேண்டும் என்ற விசித்திர சிந்தனையும் என்னுள் முகிழ்ப்பதுவும் ஏனோ??”- தனக்குத் தானே கேட்டுக் கொண்டவன்,

அவள் அனுபவிக்கும் வலியைக் காணப் பிடிக்காமல் உள்ளே விரையலனான்.

அன்று, அஷ்வதர்மனுடனான புரவிப் பந்தயத்தில் வென்ற பின், கனிஷ்கனிடம் சகுந்தலையைப் பற்றி வர்ணித்த போது.. கனிஷ்கன் போதையில் அன்றி நிதானமாக இருந்திருப்பின்… கனிஷ்கன் ஒருவேளை சகுந்தலைக்கு உதவியிருக்கக் கூடும்!!

எல்லாமே விதி!!

‘சேனையோடு வருவேன்’ என்றவன் தந்த மரியாதையை எண்ணி.. உள்ளம் கசந்தது அவளுக்கு.

அன்று அவள் பட்ட வலி!! அவளா வழியச் சென்றாள்?? அவளா கண்டதும் காமம் யாசித்தாள்?? அவளா அவனை அடையத் துணிந்தாள்??

செய்வதெல்லாம் செய்து ஓர் குழந்தையையும் தந்து விட்டு.. அவளைப் பரத்தைப் பெண் என்றல்லவா சொன்னான் அவன்??

அவளுக்கு அவன் காதல் தேவைப்பட்ட போது, “பணிவிடைகள் செய்து ஜீவிதம் செய்து கொள்கிறேன்” என்றான்!!

தேவை முடிந்தபின் தூக்கியெறிந்த அவன் கடைநிலை ஆணா?இன்றேல் அவள் இழி நிலைப் பெண்ணா??

நகர்ப்புறத்தை விட்டு வெளியே வந்தவளை, ஓரத்தில் இருந்த கல்லில் அமரவைத்து, தண்ணீர்ப்பருக்குவித்தார் அவளது தந்தை கண்ணுவ முனிவர்!!

அவள் தொண்டை வரண்டு தான் இருந்தது. ஆனால் நாவு தண்ணீரை ஏற்க மறுத்தது.

அழுது அழுது ஓய்ந்து போன விழிகளுடன் சொன்னாள் சகுந்தலை.

“நான் பிறந்தவுடன் என்னைத் தூக்கியெறிந்த எந்தை தபஸ்வி விசுவாமித்திரரும் வேண்டாம்···

அரசனென்று சொல்லி··· என் கற்பை களவாடி.. காதல் பேசிய வாயால், இகழ்ந்து பேசிய துஷ்யந்தனும் வேண்டாம்.. எனக்கு யாருமே வேண்டாம்!!”என்றாள்.

அந்த ஜென்மத்தில் அவள் உரைத்த மொழிகள் கேட்க, அவள் தந்தை இருந்தார்.

ஆனால் இந்த ஜென்மத்தில் அவள் உரைத்த அதே மொழிகள் கேட்க, யாதவன் இருந்தான். அவள் வெறுப்பில் உமிழ்ந்த அத்தனை மொழிகளையும் கேட்க அவன் கூடவே இருந்தான்.

“என்னை தூக்கிப் போட்டுட்டுப் போன என்னோட ரியல் அப்பா அந்த வெறும்மேல் சித்தரும் எனக்கு வேண்டாம்..!!

பணத்தை வைச்சு.. ஏதோ செய்து என்னை அடையணும்னு நினைக்குற நீயும் வேண்டாம்..

என்னை எல்லாரும் நிம்மதியா விடுங்க…!!”-அதே சொற்கள்!!

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னரும் உரைத்திருக்கிறாள் நவீன சகுந்தலை!!

எல்லாமே சிறுகச் சிறுக உணரவும் தொடங்கினாள் அவள்.

அப்படியானால் வெறும்மேல் சித்தர் தான்.. அவள் தந்தை விசுவாமித்திரரா??

பூர்வஜென்மத்தில்.. இந்திரன் விரித்த வலையில் சிக்கி.. மேனகையோடு வாழ்ந்து… இந்திரன் மாயை உணர்ந்த பின்பு.. மேனகையை நீங்கிச் சென்றார் அவள் தந்தை.

ஆனால் இந்த ஜென்மத்தில்··· மனைவியை அவள் முறைமாமனோடு சந்தேகப்பட்டு.. இல்லறம் வெறுத்துத் துறவறம் சென்றிருக்கிறார் அவள் தந்தை!!

புராதன சகுந்தலா, ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் தனக்கென ஓர் குடிலமைத்துத் தங்கினாள்.

உள்ளே இருந்த சிசுவோ.. தந்தையின் பலத்துக்கு சற்றும் குறையாமல்.. அசுரபலத்துடன் வளரவும் செய்தது

கருவுற்ற குழந்தையை நல்லபடியாக பிரசவித்து எடுத்தவள், “சர்வதமனன்” என்னும் அழகான பெயரும் இட்டாள்.

அவளோ குழந்தையை வேதங்கள் கற்றுணர்ந்த அந்தணர் போல அந்தக் குழந்தையை வளர்க்க முயல, குழந்தையோ அதன் ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் தந்தையை அவளுக்கு அடிக்கடி நினைவுகூரச் செய்தது.

ஆனால் அவளறியாத சிலவும் நடந்தேறவே செய்தது. சகுந்தலையை விரட்டியவன் அத்தோடு அவளைப் புறக்கணித்தானா என்ன?

இல்லை!!

அந்தப் பெண்ணைக் காணும் போது.. உள்ளுக்குள் ஏதோ அவளுக்காக உருகுவதை நன்குணர்ந்தான் துஷ்யந்த மன்னன்!!

அன்றிரவில்.. அவளது கண்கள்.. அவனைக் காதலுடனும், காருண்யத்துடனும் பார்த்த அதே கண்கள்!!! அவன் கோபத்தில் வரம்புமீறி பேசிய போது..

‘இத்தனையும் சொன்னது என் பிராண நாதன் தானா?’’என்று பார்த்த அவள் கண்கள்.. அவனைத் துயில விடாமல் கொன்றது.

அன்றிரவில் இருந்து… அந்தச் சுரூபினிப் பெண்ணை அவளறியாமல் தூரத்தில் இருந்து பின்தொடரவும், கண்காணிக்கவும் செய்தான் புராதன துஷ்யந்தன்!!

அவன் கவனித்த வரையில்.. எந்த ஆணுடனும் காதல் கொள்ளாத.. நன்மாதராகவே.. அவள் இருக்கக் கண்டதை.. அவதானித்தவன்,

இந் நல்லொழுக்கமுள்ள மங்கையர்க்கரசி ஏன்? தன்னை அவள் சுமக்கும் குழந்தைக்கு தந்தை என்றாள்? என்று குழம்பியும் போனான்.

மணிவயிற்றில் குழந்தையை சுமந்து கொண்டு.. கங்கையில் இருந்து தண்ணீர் சுமக்கும் போது… யாரென்றே தெரியாத பெண் மேல் கழிவிரக்கம் மிகுந்தது அவனுக்கு!!

வழியில் செல்லும் போது அவள் அனிச்சம்பூ பாதங்களில் முள் தைத்தால், அந்த முள்ளின் மேல் அநியாயக் கோபம் போனது துஷ்யந்தனுக்கு!!

‘துஷ்யந்தா… ஓர் இழிநிலைப் பெண் மேல் உனக்கென்ன ஈர்ப்பு??அவள் அழகில் ஈர்க்கப்பட்டு.. அவளோடு ஓர் சமயத்தில் இரண்டறக் கலக்கத் துடிக்கிறாயோ?? ’-அவனையே எள்ளி நகையாடியது மனம்.

“இல்லை.. இல்லவேயில்லை.. என் மேல் பழிசுமத்தியவளின் நடத்தையைக் கண்காணிக்கிறேன்!! பெண்கள் என்றால் இயல்பாக மீதூறும் என் இரக்கசுபாவம் தான் இத்தனைக்கும் காரணம்!!”என்று முணுமுணுத்தவனாக, தன் மனசாட்சியை சமாளித்தவனின் பின்தொடர்தல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஓர் நாள் இரவில் கடும் பிரசவ வலியில், அவள் கத்திய போது கூட, அவனுள் ஒருவகையான அலைப்புறுதல் எழுந்து அவனை இருக்கவிடாமல் செய்ததின் காரணமும் யாதோ??

சொல்லத்தெரியவில்லை!!

ஓடிச் சென்று.. ஊரின் எல்லையில் இருந்த மருத்துவச்சிப் பெண்ணின் கதவு தட்டி, அழைத்து வந்தது துஷ்யந்தன் தான் என்று சகுந்தலை அறிந்திருக்க வாய்ப்பேயில்லை!!

குழந்தையின் அழுகுரல் தூரத்தில் இருந்து ஒலிக்கும் போது.. அவனுள் எழுந்த ஓர்

சந்தோஷமனநிலை.. அசுரர்களுடனான போரில் கூட, அவன் அடைந்திராதது.

இப்படியிருக்க.. விவரம் தெரியும் அளவுக்கு வளர்ந்த சர்வதமனனும் ஓர் நாள், சகுந்தலையை நோக்கி, “தாயே எந்தை யார்?”என்று கேள்வி கேட்கும் நிலையும் வந்தது!!

விவரம் அறியத் தொடங்கும் வயதில் என்ன சொல்லி சமாளிப்பாள் சகுந்தலை??

தன் நெஞ்சோடு குழந்தையை அணைத்துக் கொண்டு.. பரதன் அறியாமல் கண்ணீர் உகுப்பதைத் தவிர??

அதைத் தூரத்தில் இருந்து கண்டு மனம் வெதும்பி, அந்தக்குழந்தையை அணைத்து, “நான் தான் உன் தந்தை!!” என்று சொல்லி விடவும் ஏனோ துடித்தது மனம்!!

ஆற்றாமையோடு அவன் அரண்மனை திரும்பிய சமயம் தான்.. அந்த அதிசயம் நிகழ்ந்தேறியது.

ஆற்றோடு போன அந்த மோதிரத்தை விழுங்கியிருந்தது ஓர் மீன்!! அம் மீனை வலையோடு பிடித்தான் ஓர் மீனவன்!! மீன் வயிற்றில் அதிசய உயர் ரக மோதிரம் இருக்கக் கண்டு.. ஹஸ்தினாபுர மன்னவனிடம் ஒப்படைக்க,

அம்மோதிரம் கண்டு, சாபம் தெளிந்து, "நான் பரத்தைப் பெண் என்று எள்ளி நகையாடிய பெண்..என் அரசவைத் தேடி வந்து "இது உங்கள் குழந்தை" என்றது.. என் ஆருயிர் சகுந்தலை!! "என்று காலங்கடந்து உணர்ந்தான் துஷ்யந்தன்.

அன்று அவன் சொன்ன அத்தனை "இல்லை" களும், மக்களிடத்தே அவள் வாங்கிய கல்லடியும், சொல்லடியும் அவனை உயிரோடு கொன்றது.

'எத்தனைப் பெருந்துயர் அனுபவித்திருப்பாள் என் தேவி?? அவளை மறந்த நான்.. அவள் தந்த சுகத்தை மறந்த நாம்··· எத்துணைப் பெரும்பாவி!!"என்று மௌனமாகக் கண்ணீர் விட்டவன், நொடியும் தாமதியாமல், மீண்டும் சகுந்தலையை நாடி வந்தான்.

தலைவனின் வருகையைக் கண்டு உள்ளம் திக்குமுக்காடி நின்ற சகுந்தலை அவனை ஏற்க மறுக்க,

அங்கணம் வந்த பிரியம்வதை.. இத்தனை வருடங்கள் மறந்து போன துர்வாசரின் சாபம் பற்றிக் கூறி, சகுந்தலையைத் தேற்ற.. மன்னவனுடன் இரண்டறக் கலந்தாள் மங்கை!!

அதன்பின் முகிழ்த்தது ஓர் மகா பாரத வரலாறு!! அதற்கு அடித்தளமே சகுந்தலை துஷ்யந்தன் மீது வைத்த மாறாக்காதலும், துஷ்யந்தன் சகுந்தலை மீது வைத்த அழிவில்லா காதலுமே!!

துஷ்யந்தனிலிருந்து சர்வதமனன் என்னும் ‘‘பரதச் சக்கரவர்த்தி’’ வந்தான். பரதனிலிருந்து ‘‘சாந்தனு’’ வந்தான். ‘‘சாந்தனு’’ விலிருந்து பீஷ்மன் வந்தான். குருகுலம் உதயமானது. குருஷேத்திரமும் நிகழ்ந்தது.

துர்வாசரின் சாபத்துக்கு ஆளானதால் தான், மன்னவன் தன்னை மறந்தான் என்பதை அறியாத சகுந்தலை.. அனுபவித்த வலி!!

துஷ்யந்தனின் வாரிசான “சர்வதமனனை” , மகா பாரத நாட்டின் உன்னதச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த.. பரத மகாராஜானை அவள் சுமந்த போது நாள் தோறும், நொடி தோறும் அனுபவித்த வலி!!

“எந்தை யார் தாயே?” என்று பரதன் கேட்ட கேள்விக்கு அவள் நாவு வரை வந்த பெயரை, தனக்குள்ளே மென்று விழுங்கிக் கொண்டு.. விழி பிதுங்கி நின்ற அவ்வலி!!

அவ்வலி.. அவ்வலி தான்.. இத்தனை ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னர்.. துஷ்யந்தனையும், சகுந்தலையும் மீளப் பிறக்கச் செய்யக்காரணம்!!

துஷ்யந்தன் அவனளவில் சுத்தவாளி தான். சகுந்தலைக்கு எப்பிழையும் செய்யாதவன் தான்!! அவனை அவள் மறந்ததும் ஊழ்வினையே!!!

இருப்பினும் அவள் அனுபவித்த வலி.. இப்பிறவியில் அவனுக்கு எமனாகிப் போனது.

அதே துஷ்யந்தரின் வம்சத்தில் உதித்த கங்கையின் புத்திரர் பீஷ்மரின் கதையை சொல்கிறேன் கேளுங்கள்.

தன் சிற்றன்னையின் மகன் “விசித்திரிய வீரியனு” க்காக, காசி நாட்டு அரசனின் அரசிளங்குமரிகள் அம்பை, அம்பிகை, அம்பாலிகை போன்ற மூ தேவியர்களை கவர்ந்து வந்து மணம் செய்விக்க நாடினார்.

அம்பையோ சால்வநாட்டு மன்னனிடம் காதல் கொண்டதால், விசித்திரிய வீரியன் அவளை மணக்க எண்ணம் கொள்ளவில்லை.

பீஷ்மர், விசித்திர வீரியனின் ஆணைப்படி.. அம்பையை சால்வ நாட்டு மன்னிடமே அழைத்துச் சென்றார். ‘சுயம்வர மண்டபத்தில் பீஷ்மன் என்னும் வீரபுருஷரால் கவரப்பட்ட அம்பையை’ ஏற்கவில்லை சால்வ நாட்டு மன்னன்.

அங்கணம் தன் வாழ்க்கை இருண்டதை எண்ணி.. அதற்கு காரணமான பீஷ்மரிடமே வாழ்வுப் பிச்சை கேட்டாள் அம்பை.

பிரம்மச்சரிய விரதம் காத்த பீஷ்மரோ.. அம்பையை மணமுடித்து சம்சார சாகரத்தில் குதிக்க முடியாது என்றார். எத்தனையோ முறை மன்றாடியும் கேளாத அம்பை.. மனம் உடைந்து போனாள்.

அப்போது அவள் அடைந்த வலி!!.. அவ் வேதனை!!.. அது அவளை அடுத்த ஜென்மத்தில், பாஞ்சால அரசரின் மகள் சிகண்டியாக அவதரிக்கச் செய்து.. குருஷேத்திரத்தில் பீஷ்மருடன் போரிடவும் வைத்தது!!

ஆக, இங்கே பீஷ்மர்.. அம்பையின் கற்பைக் களவாடி தீது செய்தவரா என்ன?? இல்லையே?? அவரளவில் அவர் சுத்தவாளி. தந்தைக்கு செய்து கொடுத்த பிரம்மச்சரிய விரதச் சத்தியம் காத்தவர்!!

அது போலத் தான் இங்கேயும்.. சகுந்தலை அனுபவித்த வலி! துஷ்யந்தன் அவனளவில் ஊழ்வினைக்கு ஆட்பட்ட தூயவனாக இருந்தும்..

சர்வதமனனை தனியாகப் பெற்றெடுத்து, ஊரின் அவலச்சொல் கேட்டு வளர்த்தெடுத்த போது அவள் அனுபவித்த வலி··· அந்த வலி தான்..

இப்பிறவியில் துஷ்யந்தனை சகுந்தலா மறந்து போகச் செய்தது!!

அவள், ஓலக்க மண்டபத்தில் தடுமாறி நின்றிருந்தாள் பூர்வஜென்மத்தில்… எந்த வாய் இழிவாகப் பேசியதோ?

அதே வாய்…கல்யாண மண்டபத்தில்,

அந்தக் கூட்டமே கிடுகிடுங்கச் செய்யும் உறுதியான மற்றும் கம்பீரமான குரலில், "ஆமா.. யாழினி வயிற்றில் இருக்குற சிசுவுக்கு அப்பா நான் தான்!!" என்றவன் அவளுடைய வயிற்றில், அவள் சம்மதமின்றி கை வைத்து,

"இது .. யாதவ் மகாதேவனின் குழந்தை!!"என்று சொல்லவும் செய்தது.

நவீன சகுந்தலையின் நினைவில், காதல் கமழும் குரலில், "உனக்கும், எனக்கும் எப்போவோ கல்யாணம் ஆகிருச்சு ஜானு..நீ என்னைக்கோ என் பொண்டாட்டி.. ஆனால் இது ஊருக்காக… ஊருக்கு

நீ தான் என் பொண்டாட்டின்னு அறிவிக்குறதற்காக" என்றவன்

இமைக்கும் நேரத்தில் அவள் கழுத்தில் மூன்று முடிச்சிட்டு, நெற்றியில் குங்குமமும் இட்ட யாதவ் மகாதேவனின் நினைவு நினைவுகளில் வந்து போனது!!

பின் சபையோருக்கு அவளைத் தன்னோடு அணைத்துக் காட்டி, "இது யாழினி மகாதேவன்.. இனி என் பொண்டாட்டியைக் குத்தம் சொல்ல எவனுக்கும் உரிமை கிடையாது.."என்று ராமையும் ஓர் பார்வை பார்த்த நவீன துஷ்யந்தன் அவள் கண்முன்னாடி வந்தான்.

எதை அன்று எதிர்பார்த்தாளோ.. அதை யாதவன்... கல்யாண மண்டபத்தில் வைத்து.. தான் துஷ்யந்தன் என்பதை உணர்ந்தவனாகவே செய்திருக்கிறான்!!

பூர்வ ஜென்மத்தில் மோதிரம் தொலைத்ததால், அவள் நினைவுகள் தொலைத்தான் அவன்!!

ஆனால் இந்த ஜென்மத்தில் அவன் அணிவித்த, மாலை அவளோடு இருந்தும் ஏன் அவனோடு கொடைக்கானலில் கூடிய நினைவையும், அன்று அவளுக்கு பூர்வ ஜென்ம நினைவுகள் வந்து போன நினைவையும் மறந்தாள் சகுந்தலை??

அவள் அனுபவித்த வலி… கர்மா… துஷ்யந்தனை இந்த ஜென்மத்தில் அனுபவிக்கச் செய்தது.

‘இது என் குழந்தை என்கிறான் அவன்?? ஆனால் குழந்தை சுமப்பவள்.. நீ யாரென்றே தெரியாது என்கிறாள்?? அப்படியானால் ‘இன்னோருவரின் குழந்தைக்கு தந்தை’ என்று சொல்வதில் ஓர் ஆண்மகனுக்கு தானே இழுக்கு? அந்த இழுக்கையும், காதல் மறந்து போன வலியையும் கொடுத்தது இந்த மறதி!!

எத்தனையோ முறை அவளை நாடி வந்து காதல் சொன்ன நேரம்.. வார்த்தை என்னும் சாட்டை கொண்டு சுழற்றி அடித்தாள் அவள்!! அதனால் அவன் அடைந்த வேதனை கூட போன ஜென்மத்தில் அவள் அடைந்த வலியால் எழுந்த வினைப்பயனே!

நவீன துர்வாச முனிவரும் அதே தானே சொன்னார், “போன ஜென்மத்தில் நீ அனுபவிச்ச வலியை.. இந்த ஜென்மத்தில் அவன் அனுபவிச்சிட்டிருக்கான்.. நீ அவனை மன்னிச்சு ஏத்துக்காத வரை கர்மா அவனை சும்மா விடாது..!!”

அவன் தந்த நினைவுப் பொருள் இருந்தும்.. அவனை மறக்கக் காரணம் அன்று புரிந்தது அவளுக்கு.

எல்லாமே புரிந்தது அவளுக்கு.

அங்கணம்.. அவள் விழிகள் சொக்கத் தொடங்கிய நேரம், அவள் கண்ணெதிரே வரி வடிவமாக விழுந்தது ஓர் விம்பம்..

அது.. பதற்றத்துடனேயே அவளருகே அமர்ந்து, “அம்மா.. உங்களுக்கா இந்த நிலைமை??”என்று தமிழில் கேட்க, அவ்வுருவத்தின் விழிகளைக் கூர்ந்து பார்த்தாள் அவள்.

அது, அன்று அவளருகே மண்டியிட்டமர்ந்து ராஜமரியாதை செய்த.. அதே மனநிலை பிறழ்வானவர் தோற்றத்தில் இருந்த நபர்.

அவரது விழிகளை உற்றுப் பார்த்தவளுக்கு.. அந்தக் கண்களை எங்கோ பார்த்த ஞாபகம் வந்து போனது!!

துஷ்யந்தனும், சுற்றமும் அவளை நீங்கிய நேரமும்.. அவளோடு இருந்த.. அவள் வளர்த்த மான் “விபாங்கன்” னின் விழிகளை ஒத்திருந்தது அந்த மனநிலை பிறழ்வானவரின் விழிகள்.

அவரின் கிழிந்த சட்டையை உள்ளங்கையால் பற்றிக் கொண்டவள், அடிவயிற்றில் எழும் வலியை, கீழுதடு கடித்து சுகித்துக் கொண்டு,

“வி.. வி.. விபாங்கன்!! நீயாஆஹ்?” என்று கேட்டாள் யாதவனின் சகுந்தலை!!

அவளின் நிலை கண்டு.. அவனுள் கண்ணீர் முகிழ்த்தாலும் கூட, தன் எஜாமனியம்மாள் தன்னை அடையாளம் கண்டு கொண்டாள் என்பதில் விளைந்த சந்தோஷத்தில்,

‘ஆமா’ … என்பது போல மெல்ல ஆடியது அவன் தலை.

அங்கணம் தூரத்தில் கேட்டது அவன் குரல்!!அந்தக் குரலில் புத்துணர்ச்சி பரவுவது போல மாயை எழ, மராமரத்தை விட்டும் எழப்பார்த்தவள், முடியாமல் மீண்டும் பெருமூச்சு விடலானாள்.

“ஜ்ஜானூஊஊ…ஜ்ஜானூஊ….எங்கேயிருக்க…?”- அந்த இருளையும் ஊடறுத்துக் கேட்டது அவளது துஷ்யந்தனின் குரல்!!!

இருளில் வழி தெரியாமல் கணவன் அல்லாடுகிறானோ? என்ற ஐயம் எழ, விபாங்கனைப் பார்த்தவள், மூச்சு விட சிரமமான குரலில்,

தன் இடுப்பைப் பிடித்துக் கொண்டு,

“அஹ்.. அஹ்.. அவரைஹ்.. என்கிட்ட கூட்டி வாஹ்…!!”என்று சொல்ல, அவ்விடத்தை விட்டும் நகர மறுத்தான் விபாங்கன்!!

தனிமையில் சகுந்தலை.. தன் துஷ்யந்தன் செய்த துரோகத்தை எண்ணி வடித்த கண்ணீர் அத்தனையையும் அருகில் நின்று பார்த்த விபாங்கனுக்கு… துஷ்யந்தனை அழைப்பது பிடிக்கவில்லை.

இயலுமான மட்டும் தெளிவான தமிழில், "வேணாம்மா… அவர் வேணாம் உங்களுக்கு.. உங்க கூட இருந்து நீங்க அனுபவிச்ச வேதனையைப் பார்த்திருக்கேன்.. அவர் உங்களுக்கு வேணாம்மா…" என்று கண்ணீர் மல்க சொன்னான் விபாங்கன்.

ஆனால் சகுந்தலைக்கோ.. இடுப்பில் எழுந்த வலியில்.. விபாங்கனின் சொற்கள் மூளையை அடையவில்லை. அவன் சட்டையைப் பிடித்து தள்ளிவிட்டவள்,

வலி நிறைந்த குரலில், "ஆஹ்!!! நான் சொல்றதை செய் விபாங்கன். ப்போஓஓஹ்.. .. அவரை… க் கூட்டி வாஆஆ!!.."என்று சொல்ல, தன் எஜாமனியம்மாள் வலி பொறுக்க மாட்டாது.. துஷ்யந்தனை நோக்கி விரைந்தான் விபாங்கன்.

உள்ளுக்குள் கிளுக்கென உருண்ட குழந்தையை கையிட்டு அணைத்துக் கொண்டவள், அத்தனை வலியிலும் புன்னகையுடன்,

"இந்த ஜென்மத்தில்.. நீ பிறக்கறப்போஹ்.. உன் அப்பாஹ் உன் பக்கத்திலேயேஹ்.. இருக்கப் போறாருடாஹ்!!"என்று சொல்லிக் கொண்டவள்.. வலியின் உச்சத்தில்.. மண்ணை அழுத்திப் பிடித்து,

கண்களை இறுக மூடிக் கொண்டாள்.கைக்குள் அடைக்கலமானது நினைவுப்பொருட்கள்!!

அவளின் கட்டளைக்கு இணங்க…காட்டில் தன் சகுந்தலையைத் தேடும் துஷ்யந்தனை அழைத்தும் வந்தான் விபாங்கன்.

விபாங்கனோடு.. தன் மனைவியை நாடி சர்வ நாடியும் வேகமாக இரத்ததைப் பாய்ச்ச, ஓடோடி வந்தவன்..மராமரத்தின் அடியில் சாய்ந்தமர்ந்திருந்த மனைவியின் கோலம் கண்டு பதறிப் போனான்.

அவனைக் கண்டதும் தான்.. அவள் விழிகள் ஆசுவாசம் எய்தினவோ?? அவன் வந்து அவள் தலையை மாரில் தாங்கிக் கொள்ள, மெல்ல மூடிக் கொண்டன விழிகள்!!

நேற்று கானகத்தில் ஆயிரம் வருஷங்களுக்கு ஒரு முறை பூத்த மலர்கள் கண்டு அவள் மூர்ச்சையுற்ற போது வந்த அதே பெயர் சொன்னான் அவன். அன்றுரைத்த பெயரே சொன்னான்..

அவளை நீங்கி விடுவோமோ என்ற உயிர்ப்பயம் எழ, அடித் தொண்டையிலிருந்து கத்தி அழைத்துச் சொன்னான் அவன்,

“சகுந்தலாஆஆஆஆ!!!”என்று.

அத்தியாயம் 21

மூன்று நாட்களுக்குப் பிறகு,
காதல் பிறப்பதும், இறப்பதும்

பிறந்திடாதிருப்பதும்

அதை மறப்பதும், நினைப்பதும்

மறந்ததைத் தெளிந்ததும்..

மன்னவனோடு நீ

இரண்டறக் கலப்பதும்

எல்லாம் அவன் செயலே!!'' என்ற வெறும்மேல் சித்தர் சொன்னது அவள் செவிகளில் கோரமாக ஒலிக்க பட்டென்று விழிப்பு தட்டியது அவளுக்கு.

அவள் கண் விழித்த போது.. அவள் செவிகள் தன் இதயத்துடிப்பு எகிறல் ஒலியைத் துல்லியமாகக் கேட்கலானது .

அவள் நாசியோ தன்னைச் சூழ ஒரு வித்தியாசமான மருந்து நெடியை நுகரவே, மெல்ல விழிகளைச் சுழற்றிப் பார்த்தவள், தன்னெதிரே ஓர் ஆடவன் நிர்மலமான முகத்துடன் அமர்ந்திருக்கக் கண்டாள்.

தாடைகளிலே சரிவர சவரம் செய்யப்படாத மூன்று நாள் தாடி!!

மூன்று நாட்களாக ஒழுங்கான நித்திரையின்மையால்.. அந்த தீட்சண்யமான கண்கள் குழிவிழுந்தும், கலை இழந்தும் போயிருப்பதைக் கண்டாள் யாழினி!!

பெரும்பாலானவர்கள் மயக்கத்திலிருந்து கண் விழிக்கும் போது கேட்கும் அதே கேள்விகளை கேட்டாள் அவள்.

“நான் யாரு? .. நா.. எங்கே..இருக்‥‥.?” என்று அவள் வரண்ட இதழ்களுடன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே,யாதவனின் வலுவான மற்றும் இறுக்கமான அணைப்பில் சிறைப்பட்டாள் சகுந்தலா.

அவள் காதோரம் அழும் ஹஸ்கி குரலில் கேட்டுக் கொண்டிருந்தது அந்த வலிமையான ஆண்மகனின் கம்பீரக்குரல்!!

அவன் கைகளோ அவளை இன்னும் இன்னும் அழுத்த, அவள் பிடரி தடவியவனாக, அவள் பட்டுக் கன்னத்தில்.. காதலுடன் எண்ணற்ற முத்தங்களை "ம்ச்.. ம்ச்" என்று பதித்துக் கொண்டே சென்றான் நவீன துஷ்யந்தன்.

அவளுக்கோ.. அவனது முத்தத்தில் தான் பழைய நினைவுகள் அவள் சிந்தையை முட்ட, கணவனின் அதிரடி அணைப்பில் பாந்தமாக அடங்கி நின்றாள்.

அவன் கண்களில் இருந்து வரும் கண்ணீர், அவளுடைய தோளில் விழுந்து, தன் சருமம் நனைவதை உணர்ந்தவளுக்குள்ளும் கவலை மீதூறியது.

குழந்தையை தாய் அணைப்பது போல.. தனது நீண்ட மற்றும் அகலமான கைகளுக்குள் அவளை அடக்கியிருந்தவன்,

“ஜானுஊஊ.. நா.. ஹ்..ன் பஹ்..யந்துட்டேன்.. நீ..கண்ணு முழிக்கிற வரைக்கும் என் உயிர் என்கிட்ட இல்லை.. ப்ளீஸ்.. டோன்ட் லீவ் மி அகேய்ன்.. ஜானுஊஊ… எனக்கு நீ இல்லாத நொடி.. களில் என்னாலே மூச்சு கூட விட முடியலை..”என்றவன் கண்ணீர் விடுவது, சுட்டது நவீன சகுந்தலையை.

இப்போது தான் துஷ்யந்தனின் தலைவியும் அனைத்தும் அறிவாளே?? தன்னுடைய இன்னுயிரில் பாதியான அஸ்த்தினாபுரத்து அரசன் அழுவதை பொறுக்க மாட்டாதவள்,

அவன் காதுக்குள் நுழையாத மிக மிக மெல்லிய குரலில், “எனக்குஹ் ஒண்ணுமில்லைஹ்.. நான் நல்லா தான் இருக்கேன்..”என்றாள் அவள்.

அப்போதும் கூட அவளது துஷ்யந்தனின் அணைப்பு தளர்ந்ததே ஒழிய, விலகவில்லை!!

அவன் இதயத்துடிப்பின் எகிறல் தாருமாறாக இருப்பதை..அவன் மார்களோடு.. தன் தனங்களை அழுந்தப் பதிந்திருந்தவள் உணர்ந்தாள்!!

அச்சத்தில் நடுக்குறும் குழந்தை.. ஆசுவாசம் எய்துமட்டும்.. தாய் அதை அணைப்பிலேயே வைத்திருப்பது போல.. அவனையும் அந்த அணைப்பு மூலம் ஆசுவாசப்படுத்த முயன்றாள் அவள்!!

பிறகு அவள் ஞாபகத்தில், அவள் அழைத்து வந்த மாணவர்கள் பற்றிய நினைவுகள் எழவே, “ஆமா என்னோட எக்ஸ்ப்ளோ.. ஹ்ரேஷன் ஸ்டூடண்ட்ஸ்..??”என்றதும் தான் தாமதம், இதுவரை கலங்கியிருந்த யாதவனின் முகம் மெல்ல மெல்ல இறுகியது.

அவனது சகுந்தலை.. கண்கள் விழித்தவுடன் குழந்தையைப் பற்றிக் கேட்கவில்லை. அவன் கானகத்தில் இருந்து அவளைக் கண்டெடுத்த போது விரல்களிலே இல்லாத மோதிரத்தைப் பற்றிக் கேட்கவில்லை.

மிக முக்கியமானவைகளான குழந்தையும், கணையாழியும் ஆக மொத்தத்தில் அவளுடைய நினைவில் முதன்மையாக இல்லைவேயில்லை!!

அப்படியானால் அவளுடைய காதலும், நேசமும் இருப்பது அவனிடத்திலோ குழந்தையிடத்திலோ அல்ல. மாறாக அவளுடைய தொழிலிடத்தில்!!

புதைபொருள் ஆராய்ச்சியில்!!

நினைவுகள் கசந்தது யாதவனுக்கு. உணர்ச்சிகள் துடைக்கப்பட்ட முகத்துடன் தன்னவளை மீண்டும் தலையணையில் வைத்தவன்,

வெறித்த பார்வையுடன், “உனக்கு கொஞ்சம் கூட நம்ம குழந்தையைப் பத்திக் கவலையே இல்லைல?”என்று கேட்டான்.

அங்கணம்.. மூன்று நாள் கழித்து கண் விழித்திருந்தவளுக்கோ.. இருந்த ஆயாசத்தில்… தலைவனின் மொழிகள் தானும் சரியாக சென்றடைய முடியாத வண்ணம்,

பெருமூச்சுடன் கண்களை மூடிக் கொண்ட தருணம் அது!!

அவள் தாய்!! தாயின் இரத்தத்தோடு இரத்தமாக, சதையோடு சதையாக வளரும் குழந்தையின் நலம் பற்றி அவள் அறிய மாட்டாளா? இல்லையா?

குழந்தை நலமாகத் தான் இருந்தது;தெய்வாதீனமாக உயிரும் பிழைத்திருந்தது.

அதனால் தான் குழந்தையைப் பற்றிக் கேட்பதை விடுத்து தன் மேல் பொறுப்பு சாட்டப்பட்ட மாணவர்களைப் பற்றிக் கேட்டாள் அவள்.

மெல்ல அவளிலிருந்தும் பார்வையைப் பிரித்துக் கொண்டவன், கவலைகள் முட்ட வேறெங்கோ பார்த்தபடி, “நோ நீட் டு வொரீ அபௌட் தெம்.. அவங்களுக்கு வேற இன்சார்ஜ் ஏற்பாடு பண்ணியாச்சு.. மோர்ஓவர், எக்ஸ்ப்ளோரேஷன் முடிஞ்சதும் ஸேஃபா ஊர் திரும்பி போயிட்டாங்க.. யூ ஜஸ்ட் ரிலாக்ஸ்..!!”என்று அவன் சொல்ல, அவள் முகத்தில் மெல்லிய புன்னகை பரவியது.

இன்னொரு கைட்டிற்கு ஏற்பாடு செய்து.. அவர்களின் பயணம் முடிந்ததும் பத்திரமாக

ஊருக்கும் அனுப்பி வைத்திருக்கிறானே அவள் தலைவன்??

அத்தனையும் சொல்ல வேண்டும்!! அவனைக் காதல் கமழ "துஷ்யந்த்!!" என்றழைத்து.. அவளுடைய மன்னவனுக்கு, ஆனந்த அதிர்ச்சி கொடுக்க வேண்டும்!! என்ற பல கனவுகள் அவளுள்!!

மன்னவனோடு பகிர பல கதைகளை அவளிடம் இருந்தது.ஆயினும் உடல்தான் ஒத்துழைக்க மறுத்தது.தன் வயிற்றில் இருக்கும் குழந்தையை தாய்மையுடன் அணைத்துக் கொண்டவள், அமைதியாக கண்களை மூடிக் கொண்டாள்.

துஷ்யந்தனின் மனைவி, தனக்கு ஏற்றபட்ட மருந்தின் வீரியத்தால் மீண்டும் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்று விட்டிருந்தாள்.

அவனோ அவளது மூடிய விழிகளையே ஆத்திரத்துடனும், கவலையுடனும், கோபத்துடனும் இலக்கேயற்று வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

அவளை அந்த மராமரத்தின் அடியில் கை, கால்கள் எங்கிலும் இரத்தம் வழிய, தன் மாதுவைக் கண்ட போது அவனுள் எழுந்த வலி, பதற்றம், களேபரம் எழுத்தில் வடிக்கும் தரமன்று.

மருத்துவமனையில் அவளை அனுமதித்து உள்ளே சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்த தருணமும் அவன் அவனாக இல்லை.

குறுக்கும் நெடுக்குமாக அவன் முடிவேயற்று, களேபரத்தில் நடந்த நடையில்.. பிற நோயாளிகளுக்கும், ‘என்னமோ ஏதோ?’என்று நிச்சயம் பதற்றம் தொற்றியிருக்கும்.

சிகிச்சை அறையில் இருந்து டாக்டர் வெளியே வர, அவரிடம் விரைந்து சென்றவனுக்கு, “எ.. என்.. ஜானூஊ.. ஜானூவுக்கு என்னாச்சு டாக்டர்?”என்று கேட்கக் கூட, இதழ்கள் பிரிய மறுத்தது.

அவன் தவிப்பை உணர்ந்த டாக்டரோ, அவன் கையை ஆதரவாகத் தட்டிக் கொடுத்தவராக,

“போன ஜென்மத்துல நீங்க என்ன புண்ணியம் பண்ணீங்களோ மிஸ்டர். யாதவ் மகாதேவன்.. உங்க

பேபிக்கு எதுவும் ஆகலை.. பேபி இஸ் ஸேஃப்.. கரெக்ட் டைமில் நீங்க உங்க மனைவியைக் கொண்டு வந்ததுனால எங்களால முடிஞ்சதைப் பண்ணோம்.. இந்த மாதிரி கிரிட்டிக்கல் கன்டிஷனில் குழந்தை பாதுகாப்பா இருக்குறது இட்ஸ் அ மெடிக்கல் மிராக்கிள்னு தான் சொல்லணும்..''என்று வியந்து சொன்ன போது, அவனுள் எழுந்த ஆசுவாசப் பெருமூச்சு அப்படியே அடங்கியது.

அடுத்தநொடி அவனுள் ஓடியது எல்லாம் இந்த துஷ்யந்தனுக்காகப் பிறந்த நவீன சகுந்தலையைப் பற்றிய எண்ணங்கள் தான்..!

யாரிடமும் இரந்துப் பழக்கமில்லாதவன், டாக்டரின் கையைப் பற்றிக் கொண்டு கேட்டான், தன் காதலுக்காக, மனைவிக்காகக் கேட்டான்.

"டாக்டர் என் ஜ்ஜானு.. எ.. என் மனைவிக்கு ஏதும் இல்லையே.. அவ.. அவள் நல்லா தானே இருக்கா??''என்று.

மீண்டும் ஓர் புன்னகை மலர்ந்தது டாக்டர் முகத்தில். தன் மனைவி, குழந்தை மீது அதீத பாசம்

வைத்திருக்கும் அழகான இளம் வாலிபன்!! அவர் முன்னே!!

அவருக்கு, யாதவ் மேல் தனி மரியாதை ஊற்றெடுக்க அவன் கைச்சந்தில் ஆதரவாகத் தட்டி, "ஷிஸ் ஸ்டேபிள்..நத்திங் டு வொரீ" என்றதும் தான்.. அவனுள் கேசாதி தாள் வரை விரவியோடியது அமைதி!!

பெருமூச்சு விட்டுக் கொண்டே, தன் கேசத்தைக் கோதிக் கொண்டவன் மனதில் எழுந்த சந்தோஷம்.. அது எத்தனைக் கோடி கொட்டிக் கொடுத்தாலும் வருமா? கிடைக்குமா??

ஆனால், அதன் பின் அவள் முழுமையாகத் தேறிவர மூன்று நாட்கள் பிடித்தது.

அவள் உடலில் இழந்த சத்துக்கள் திரும்பி வர, ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டு அவள் கண் விழிக்க எடுத்துக் கொண்ட மூன்று நாளும், துஷ்யந்த மன்னனுக்கு ஏனோ அன்னந்தண்ணி ஆகாரம் கசந்தது. தூக்கத்துக்கும், அவனுக்கும் ஏழாம் பொருத்தமும் ஆனது!

இடையில் தன் மருமகளின் நிலை கேள்விப்பட்டு வந்த யாதவனின் சித்தப்பா.. சங்கர்தேவன் இருவரின் நிலை எண்ணியும் கவலையாக இருந்தது.

அதிலும் புதல்வன் சாப்பிடாமல், கொள்ளாமல் இருந்தது அதிக கவலையைக் கொடுக்க, அவளிடம், “நீ கண்ணு முழிக்கும் வரை சாப்பாடு, தூக்கம் இல்லாமல் பித்துப் பிடிச்ச மாதிரி இருந்தான்மா என் பையன்.. ஈவனை மாதிரி ஒரு கணவன் கிடைக்க நீ கொடுத்து வைச்சிருக்கணும்··· இனிமேலாவது பார்த்து, பத்திரமா நடந்துக்கம்மா..”என்று ஆறுதலும், தேறுதலும் சொல்லி விட்டு நகர,

கணவனின் அன்பில் மயிர்க்கூச்செறிந்தது அவளுக்கு.

எப்போதும் கம்பீரம் குழையாமல், கட்டுமஸ்தான தேகத்துடன் அலைபாயும் மன்னவன்.. கொஞ்சம் இளைத்துப் போயிருப்பதாகவும் தான் அவளுக்கும் தோன்றியது.

அவள் கண் விழித்த பின், முழுதாகத் தேறி வர எடுத்துக் கொண்ட பதினேழு நாட்களும் அவள்

பக்கத்திலேயே இருந்து பணிவிடைகள் செய்தான் அவன்.

அவளுக்கு சேவகம் செய்யவென மருத்துவமனை நிர்வாகம் பணியாட்களை ஏற்பாடு செய்திருந்தும், அதை மறுத்து தன் சகுந்தலைக்கு தானே செய்ய முன்வந்தான் அவன்!!

போன ஜென்மத்தில் அவள் குழந்தை சுமந்து நின்ற போது.. ஊழ்வினையால் தள்ளியிருந்தவனுக்கு, இப்போதும் அவளிடமிருந்து தள்ளி நிற்க முடியவில்லை.

காலையில் அவள் துயில் கலைந்ததும், அவளை அலேக்காக ஒரு குழந்தை போல அள்ளி அணைத்துக் கொண்டு, குளியலறை அழைத்துச் செல்பவன்,

அவளுக்கு வலிக்கவேயாமல் நீராட்டினான்;அவளது அடர்ந்த தலைமயிரை வாரி பின்னலிடவும் செய்தான்;அவளுக்கு ஊட்டி விட்டான்; அவள் வலியால் அவதியுறும் சமயங்களில், மார் சாய்த்து, தவிப்புடன் தலை கோதி விட்டான்;இரவில்

தூக்கம் வராமல் அவள் உழன்ற போது.. மெல்லிய ஹஸ்கி குரலில், அவளுக்காக கதையும் படித்தான்!!

ஆக மொத்தத்தில் அவன் ஒரு நல்ல கணவனாக எல்லாமும் செய்தான்;ஆனால் அவளுடைய கண் பார்த்து நிமிர்ந்து பேசுவதை மட்டும் ஏனோ தவிர்த்தான்.

அவளோடு சகஜமாக அவன் புரியும் கேலியும், கிண்டலும், காதலுடனான சிறு சிறு சீண்டலும் முற்றிலுமாக காணமலாகியும் விட்டிருந்தது.

கூடவே.. அவன் தாடையின் இறுக்கமும், புருவ மத்தியில் எந்நேரமும் விழுந்திருந்த முடிச்சும்..துஷ்யந்தனை இன்னோர் மனிதன் போலத் தான் காட்டியது.

ஆனால் சகுந்தலைக்கோ.. துஷ்யந்தன் தான் கருவுற்றிருக்கும் போது அருகில் இருப்பதே சந்தோஷத்தைக் கொடுக்க, கணவனின் புருவமத்தியில் விழுந்த முடிச்சை அவதானிக்காமல் போனதும் அபலையின் குற்றமே!!

கடைசி நாள், ஹாஸ்பிட்டல் விட்டு அவள் டிஸ்சார்ஜ் ஆகி போகும் போது..

இறுதியாக அவளுடைய இரத்த அழுத்தத்தை பரிசோதிக்க வந்திருந்தாள் நர்ஸ்.

டாக்டரிடம் பேச வேண்டும் என்றவனோ.. அவ்வறையை விட்டும் அங்கணம் தான் நீங்கியிருந்தான்.

அவள் அழுத்தத்தை தன் நோட் பேடில் எழுதிக் கொண்டே அவளைப் பார்த்த நர்ஸ், நல்ல தமிழிலேயே, “நீங்களும் சாரும் லவ் மேரேஜாஆ?”என்று கேட்டாள்.

காதலோடு கலந்து, காந்தர்வ மணம் புரிந்து தானே.. பரதனைத் தன் வயிற்றில் தந்தான் .. அவளுடைய மன்னவன் துஷ்யந்தன்??

“ம்.. ஆமா” - பூர்வ ஜென்ம கூடல் நினைவுகள் சட்டென அவள் மனக்கண் முன் விரிய, அளவான சிரிப்புடன் சொன்னாள் அவள்!!

அதைக் கேட்டதும் தாதியின் கண்கள் அகல விரிந்தன.

“அதான் நானும் பார்த்தேன்! .. உங்க மேல சாருக்கு என்னா லவ்வு?? .. நீங்க கண்ணு முழிச்சதும்..அன்னைக்கு அவருக்கிருந்த சந்தோஷத்தில் ஹாஸ்பிடல்லில் அன்று பிறந்த அத்தனை குழந்தைகளுடைய பிரசவ செலவையும் அவர் ஏத்துக்கிட்டாரு மேம்..” என்று இந்த நவீன துஷ்யந்தன்.. தன் சகுந்தலை மீது கொண்ட காதலை வியந்து பாராட்ட,

யாழினியின் கண்களும் அகல விரிந்தது இம்முறை!

சட்டென வாய் திறந்தவள், உள்ளுக்குள் தன் மன்னவனுக்கான காதல் ஊற்றெடுக்க, “உண்மையா? அன்னைக்கு நடந்த அத்தனை பிரசவத்துடைய செலவையும் ஏத்துக்கிட்டாரா??”என்று கேட்டாள் அவள்!!

நர்ஸூக்கோ உத்தரபிரதேசம் போன்ற பிறமொழி பேசும் மாநிலத்தில், தன் தாய் மொழி பேசும் இரு காதல் சந்நியாசிகளைக் கண்ட சந்தோஷம் பிறக்க,

“ஆமா மேம்.. இந்த மாதிரி தன்னோட லேடிலவ்வை இப்படி பார்த்துக்குற ஆண்களை ராஜா காலத்தில் தான் கேள்விப்பட்டிருக்கிறேன்.!!”என்று சொன்னதும், அவளையும் மீறி மெல்ல முணுமுணுத்தன சகுந்தலையின் இதழ்கள்!!

“அவரும் ராஜா தான்..!”- அவன் மனக்கண் முன், கிரீடம் தரித்து, இரு மலைக்குன்றுகளை அருகருகே வைத்தாற் போன்று என்று கம்பர் ராமனை வர்ணித்த உடல் திண்மையுடன்,

நடந்து வந்தால் அசுரர்கள் நடுங்கும் நடையுடனும் சிரித்தால் அந்த மின்னலின் பளிச்சிடலைத் தோற்கும் வெண்முத்து மூரலுடனும் நிற்கும்.. தன் ஆசைக் காதலன் துஷ்யந்தனின் நினைவுகளில் சொன்னாள் அவள்.

“என்ன சொன்னீங்க மேம்..?”- அவள் குரல் சரியாக தாதியின் காதுகளை சென்றடையாமல் போகவே மீண்டும் கத்திக் கேட்டாள் தாதிப்பெண்!!

“அவர்ரும் ராஜபரம்பரை தாஆஆன்!..”- இம்முறை கொஞ்சம் தெளிவான மற்றும் உரத்த குரலில் சொன்னாள் யாழினி.

அந்நொடி அறைக்குள் நுழைந்த தன் துஷ்யந்த மகாராஜனை ஆசைகமழப் பார்த்தன அவள் விழிகள்.

எதேர்ச்சையாக கதவைத் திறந்து கொண்டே.. தன் மனைவியின் விழிகளைப் பார்த்தவன், பார்த்தபடி நின்றான்.

அதே கண்கள்!! அவனை எஞ்ஞான்றும் காதல் மல்க நோக்கும் செங்காந்தள் நயனங்கள்!! அவனை தாய்மையுடனும், நேசத்துடனும் நோக்கும் கண்கள்!!

அவள் கண்களில் தொலைந்தவன் பித்தாகி நிற்க, தன் துஷ்யந்தனைக் கண்களாலேயே அருகே வருமாறு அழைத்தாள் யாழினி!!

அழைப்பது அவள் தானோ? இல்லை இரவுகளில் தினந்தோறும் முளைக்கும் கனவுகளில் இதுவும் ஒன்றா?

பிரித்தறிய தோன்றவில்லை யாதவனுக்கு. அந்தக் கண்களின் காந்தவிசையில் ஈர்க்கப்பட்ட ஆறரையடி உயர ஆண்மகன், அவளை நோக்கி அனிச்சையாய் நடந்தான்.

அவர்களின் கண்ணாலேயே சரசம் புரியும் அழகிய காதலைக் கண்டு வெட்கிய தாதிப்பெண்ணும், அங்கிருந்து நாணப்புன்னகையுடனும் நகர, யாருமில்லாத தனிமை கூட பெண்ணவளுக்கு ஓர் அசாதாரண தைரியத்தைக் கொடுத்தது.

கண்களால் அவனை 'அருகே வா' என்று இமைகள் மூடித் திறந்து அழைத்தவள் , அவன் அருகே அமர்ந்ததும், அவனுடைய தாடி அடர்ந்த கன்னங்களை இரு கைகளிலும் தாங்கிக் கொண்டவள், அவன் விழிகளையே குறுகுறுவெனப் பார்த்திருந்தாள்.

பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னர் அவள் பார்த்துத் திளைத்த அதே வீரக்கலை கொண்ட கண்கள்!!

சற்று எம்பி அவள் நெற்றியில் முத்தமிட்டவள், அவள் மூச்சுக்காற்றும், இவன் மூச்சுக்காற்றும் இரண்டறக் கலக்க, அவனுடைய இதழ்களையே பார்த்திருந்தாள்.

ஒரு கட்டத்தில்.. இருவரின் அண்மையும்.. இருவரின் உணர்வுகளையும் தடம் புரளச் செய்ய, அவள் பக்கத்திலிருந்தால் இயற்கையாக எழும் உணர்வுகளை அடக்கமாட்டாமல், அவளுடைய இதழ்களைத் தாவிக் கவ்விக் கொண்டான் யாதவன்!

பல நாட்கள் கழித்து கணவனின் எச்சில் குளிர்மை தீண்டியதில், உள்ளம் குளிர்ந்து போனவள், அவனுக்கு இணையான வேகம் காட்டி.. அந்த முரட்டு இதழ்களில் அவளுக்கிருந்த தாபத்தை உணர்த்தினாள் பெண்!!

அவன் கைகள்.. அவள் காதுகளைப் பொத்தியிருக்க.. அவன் முரட்டு இதழ்களோ.. அவள் மெல்லிய இதழ்களில் வீணை மீட்டலாயிற்று!!

அவள் இதழ்களில் வழிந்த தேன் அத்தனையையும் சொட்டு விடாமல் அருந்தியவன், மதி மயங்கி நிற்க, அவனிலிருந்துப் பிரிந்து

கொண்டவள் சொன்னாள், “நான் கண் முழிச்சேன்றதுக்காக.. இந்த ஹாஸ்பிடல்லில் அன்னைக்கு பிறந்த அத்தனை குழந்தைகளுடைய பிரசவ செலவையும் ஏத்துக்கிட்டதுக்காக..தேங்க்ஸ்” என்று.

அதைக் கேட்டதும்.. அவனுள் ஒருவகையான இறுக்கம் எழுந்து பரவியது. அப்படியானால் அவள் மனைவி அவனோடு இழைந்தது??..

இது காதல் அல்ல.. நன்றிக்கடன் என்று எண்ணிக் கொண்டவன் கண்களில் புதுமையான சோகம் குடிகொண்டது.

அவள் தான் சொல்வாளே ஒருகணம் விரும்புகிறேன்.. மறுகணம் வெறுக்கிறேன் என்று.. அப்படி ஏதாவது மாய ஈர்ப்பா இதுவும்!!

நொடியில் அவனில் எழுந்த சந்தோஷம், காதல் எல்லாம் எங்கோ போய் ஒளிந்து கொண்டது.

சட்டென எழுந்து.. அறையை விட்டும் வெளியே சென்றவன், அதற்குப் பிறகு அவன் வெகுநேரமாகியும் அறைக்குள் நுழையவேயில்லை.

அவன் வருவான்.. வருவான் என்று மையலுடன் காத்திருந்து சோர்ந்து போனாள் யாழினி!

மொத்தமாக இருபது நாட்கள் கழித்து அவள் இலங்கை திரும்பிய பின்னர், அவள் பழைய யாழினியாக அன்றி புது யாழினியாக மாறிப் போயிருந்தாள்.

அவன் காதல் அவளை மாற்றியமைத்தது. எப்போதும் வெடுக்கென்று கோபப்படுபவளின் முன்கோபம், இப்போதெல்லாம் அவளை விட்டும் எங்கோ சென்றிருந்தது.

குழந்தையை சுமந்து நின்றவளின் கண்கள் மென்மையாகி..தாய்மையின் ரசத்தை, சுகத்தை அவளையும் அறியாமல் இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருந்தது.

ஆனால் அந்தத் தாய்மையோடு காதலை அனுபவிக்கத்தான் அவள் தலைவன், அவளோடு இருக்கவேயில்லை!! இலங்கை வந்த பின் யாழினியின்

கண்களில் படாமல் போக்குக் காட்டிக் கொண்டிருந்தான் துஷ்யந்தன்!!

அது வேறு அவளுக்கு வருத்தத்தைக் கொடுக்கவே.. தனிமையில் உழன்று தவித்தாள் சகுந்தலை அப்போதும், இப்போதும்.

அவள் உத்தரபிரதேசத்தில் இருந்து வீடு திரும்பி விட்டாள் என்பதையறிந்த புது மணப்பெண்ணான ராகவியும், அவள் கணவனான ஆகாஷும் அவளைச் சந்திக்க வரவே,

ராகவியைக் கண்டதும் அகமகிழ்ந்து போனாள் யாழினி.

அவளுடைய ஆருயிர்த் தோழி பிரியம்வதை அல்லவா அது?

வந்தவளை இறுகக் கட்டியணைத்து… கன்னத்தில் முத்தமும் வைத்த யாழினியை கோபம் மீதூறும் கண்களுடன் நோக்கிய ராகவி,

“உன் முத்தமும் வேணாம்.. ஒரு மண்ணும் வேணாம்.. நான் சொல்ற பேச்சைக் கேட்டு அமைதியா லங்காவிலேயே இருந்திருந்தால்.. உனக்கு இந்த நிலைமை வந்திருக்குமா?”என்று உரிமையுடன் கடிந்து கொள்ள, முத்து மூரல்கள் காட்டி சிரித்துக் கொண்டே தொடர்ந்தாள் யாழினி.

அவள் தோளோடு தோள் சேர்த்து தழுவிய வண்ணம், “விடு.. அப்படி நடந்ததும் ஒருவகையில் நல்லது தான்… இல்லைன்னா.. இந்த லூசு ராகவி என் மேல வைச்சிருக்க அன்பு எனக்குத் தெரிய வந்திருக்குமா..?” என்று தனக்கு பூர்வ ஜென்ம நினைவுகள் வந்து, அதனால் ராகவியான பிரியம்வதை தன்மேல் வைத்திருக்கும் அன்பை அறிந்து கொள்ள நேர்ந்ததை அவள் கூற, அது புரியாமல் தடுமாறினாள் ராகவி.

“நீ என்ன சொல்ற..?”- புருவம் சுருக்கிக் கேட்டாள் நவீன பிரியம்வதை.

சட்டென தன் சொற்களை மாற்றியவள், “எனக்கு ஏதும் ஆகியிருக்கலைன்னா.. நீ என்னைப் பார்க்க இப்படி ஓடோடி வந்திருப்பீ.. யான்னு கேட்டேன்..!!

சரி என்னை சாப்பிட்ற?? முதன்முறையாக ஜோடியா வீட்டுக்கு வந்துருக்கீங்க.. என் கையால சாப்பிட்டுட்டுத் தான் போகணும்!!”என்று அன்புக் கட்டளையிட்டவள், ராகவியையும், அவள் கணவனையும் அவர்கள் மறுக்க மறுக்க உபசரிக்க ஆயத்தமானாள் யாழினி.

அடுத்த நாள் மதியம்…உத்தரபிரதேசத்தில் இருந்து வந்ததில் இருந்து பல விஷயங்கள் அவளுக்குத் தெளிவாகிய பின்னரும் கூட, இன்னும் சரிவரத் தெளிவாகாத ஒரேயொரு விஷயத்துக்காக, ‘மேனகா ஆசிரமம்’ சென்றாள் யாழினி!!

அவளுடைய வளர்ப்புத் தந்தை கண்ணுவ ரிஷியிடம் அவள் கேட்டறிய வேண்டிய ஓர் கேள்வி பாக்கி இருந்தது.

முன்றலிலே செடி, கொடிகளுக்கு இடையே இருந்த மரபெஞ்சில் அமர்ந்து, தன்னைச் சூழ இருந்த விதம் விதமான புறாக்களுக்குத் தீனி அள்ளி விசிறிக் கொண்டிருந்தார் அவளுடைய தந்தை.

பாதணி அணிந்த கால்களில் நடைபாதையில் அழகுக்காக போடப்பட்டிருந்த சலவைக்கற்கள்

மிதிபடும் சத்தம் கேட்டு, உள்ளத்திலே ஓர் சலனம் தோன்றியது அவருள்.

‘அவள் தானோ?’ என்று. அது எப்போதும் அவருள், அவள் நினைவாக எழும் மாயை.. என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டவரின் நாசி.. என்றுமேயில்லாமல்.. அன்று.. அவளுக்கே அவளுக்கென்றிருக்கும் பிரத்தியேக நறுமணத்தை முகர,

ஓர் ஆர்வத்துடன் நிமிர்ந்து பார்த்த மகேந்திரன் இனிதாக அதிர்ந்தார். அவர் இதழில் உறைந்த புன்னகை அடுத்த நொடி, சட்டென காணாமல் போக அவர் முகம் இறுகி ஓர் தீவிரம் பரவ ஆரம்பித்தது.

“நீ ஏன் இங்கே வந்த?”- கண்களில் கவலை சொக்குகிறது; ஆனால் இதழ்களோ பொல்லாத கோபம் காட்டுவதைப் போல நடிக்கிறது.

தன் பூர்வஜென்ம நினைவுகள் முற்றும் அறிந்திருப்பவளுக்கு.. தந்தையின் போலிக்கோபம் அப்பட்டமாகப் புரிய,

“இது.. நான் வளர்ந்த இடம்.. இங்கே நான் வரக்கூடாதா?”என்று கேட்டவள், அடுத்த நொடி அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டாள்.

அது மட்டுமா.. புறாவுக்குப் போடும் தீனிப் பாத்திரத்தை.. தந்தை கையில் இருந்து வெடுக்கென்று உரிமையோடு பிடுங்கி எடுத்தவள், தற்போது அவள் கையால் புறாவுக்குத் தீனி போடவும் செய்தாள்.

பல மாதங்கள் கழித்து.. மகளின் இந்த உரிமையும், வெடுக்கென்ற பேச்சும் அவர் இதயத்தைக் குளிர்விக்கவே செய்தாலும், அவள் கையிலிருந்து பாத்திரத்தை மீளப் பெற்றுக் கொள்ளப் பார்த்த, தந்தையின் கரங்களுக்கு செல்லமாக விழுந்தது ஓர் சின்ன அடி!!

“கையை எடுங்க.. எனக்கும் புறாவுக்குத் தீனி போட தெரியும்!!” என்று சொன்ன மகளின் செல்லமான எடுத்தெறியும் பேச்சும் அவருக்கு உள்ளுக்குள்ளே இன்பமயமாகத் தான் இருக்கிறது!!

ஆனால் வெளியே காட்டிக் கொள்ளாமல் விறைப்புப் பேர்வழி போல அமர்ந்திருந்தார் மனிதர்!!

அவரின் கடைக்கண் பார்வையோ.. தற்போது நன்றாகவே மேடிட்டுத் தெரிந்த.. ஏழு மாதங்களான சிசு வயிற்றைக் கள்ளத்தனமாக வாஞ்சையுடன் தழுவிக் கொண்டிருந்தது.

ஆயிரம் தான் இருந்தாலும்… மகள் சுமந்து நிற்பது அவருடைய பேரக்குழந்தையை அல்லவா??

ஒரு சில கணங்கள் மௌனமாகக் கழிய,புறாவை வெறித்துப் பார்த்துக் கொண்டே, உணர்ச்சி சுத்தமாக துடைக்கப்பட்ட குரலில்,

“ஏன்பா அன்னைக்கு மண்டபத்துல என்னை வெறுக்குற மாதிரி நடிச்சீங்க?”என்று கேட்க,

பட்டெனத் தடுமாறிப் போனார் அவர்.

“ந.. நடிப்பா…? யார் நடிச்சா?”- முதலில் அதிர்ந்தவர், பின் தன்னை சுதாகரித்துக் கொண்டு மீண்டும் கோபம் காட்ட முயன்றார் மகேந்திரன்.

தற்போது புறாவை விடுத்து தந்தையை கண்களில் கண்ணீர் பளபளக்கக் கேட்டாள், “எனக்கு எதுவும்

இன்னும் தெரியாதுன்னு நினைச்சிட்டிருக்கீங்களாப்பா?.. பூர்வஜென்மத்தில் யாதவ் என்னை யாருன்னே தெரியாதுன்னு சொன்னப்போ.. எனக்கு ஆதரவா இருந்தது நீங்க மட்டும் தான்.. ஆனால் ஏன் இந்த ஜென்மத்தில் என் கிட்ட அப்படி நடந்துக்கிட்டீங்க..ப்பாஆஆ?’’என்று.

மகளின் சொல்லாடல்கள் இன்னும் கொஞ்சம் அவரை அதிரச்செய்ய, ‘‘ந்நீ என்ன சொல்ற? ப்பூர்.. பூர்வ ஜென்மம்….மாஆ?..அப்படின்…னா… உனக்கு?’’என்று திக்கித் திணறியவராக அவர் கேட்க, அவள் குரலோ நிதானமாக ஒலித்தது.

‘‘தெரியும்.. எனக்கு எல்லாம் தெரியும்ப்பா.. நீங்க யார்னும் தெரியும்.. நான் யார்னும் தெரியும்…நான் மீண்டும் ஹஸ்தினாபுர் போனதில்.. என் பூர்வஜென்ம நினைவுகள் எனக்குத் தெரியும்ப்பா…. இப்போவாவது உண்மை சொல்லுங்க..நான் யாருன்ற உண்மை உங்களுக்கு முன்னாடியே தெரிஞ்சிருக்கு.. எப்படிப்பா? எனக்கு எல்லா உண்மையும் தெரிஞ்சாகணும்!!’’என்று கேட்டதும், அவர் விழிகளில் ஓர் சந்தோஷம் ஊடுருவிப் பாய்ந்தது.

இத்தனை வருடங்கள் தியானம் செய்பவரல்லோ அவர்? மகளின் விழிகளையே ஆழ்ந்த யோசனையுடன் பார்த்துக் கொண்டே இருந்தார்.

அவர் மனதில் யாரும் அறியாமல், மூடி வைத்திருந்த கறுப்புப் பக்கங்களைத் திரும்பப் புரட்ட வேண்டிய அந்நொடியும் வந்தது.

தன் போலிக்கோபம் ஆச்சரிய அதிர்ச்சி, திக்கல் திணறல் என எதுவுமே இல்லாமல்.. தெளிந்த நிதானமான குரலில்.. தன் மகள் சகுந்தலையைப் பற்றித் தெரிந்ததை எல்லாம் சொல்ல ஆயத்தமானார் நவீன கண்ணுவ ரிஷி.

குறுக்கிடாமல் அமைதியாகக் கேட்க ஆர்வம் காட்டினாள் அவளும்.

“உன் அம்மா.. உன்னைக் குழந்தையா இருக்குறப்போ.. என் கையில் தந்து, “இவளுக்கு கடைசி வரை ஒரு நல்ல அப்பாவா இருந்து இவளைப் பார்த்துக்குங்க மாமா” ன்னு சொல்லிட்டுக் கண்ணை மூடியப்போ.. நான் குழந்தையா இருந்த உன் விழிகளைப் பார்த்தேன்மா..

என் நண்பன்.. உங்க அப்பா சதாசிவம்.. எனக்குப் பண்ண துரோகத்துக்காக உன்னை நான் வெறுக்கத்தான் போறேன்னு நினைச்சது எல்லாம் உன் கண்ணைப் பார்த்தப்போ.. தூள் தூளாகப் போச்சு.. அப்போவே.. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு..

உன் விழிகளை உத்துப் பார்க்குறப்போ.. உனக்கும், எனக்குமான பந்தம்.. எப்போவுமே புனிதமானதுன்னு தோணும்.. உன் விழிகள் தான்.. என்னோட பூர்வ ஜென்ம நினைவுகளையும், 'நீ யார்?'ன்ற உண்மையை எனக்குக் கொடுத்தது..

திரும்பவும் துஷ்யந்தன் உன் வாழ்வில் வந்து.. நீ கஷ்டப்படக்கூடாதுன்றதுக்காக.. நம்ம ஆசிரமத்தில் வளர்ந்த ஸ்ரீ ராமை… உன் மணாளனாக்க முடிவு பண்ணேன்..

இயல்பிலேயே ஸ்ரீராமுக்கு உன் மேல நாட்டம் இல்லாதது தெரிஞ்சாலும்… திரும்பவும் ஊரார் பழிச்சொல்லுக்கு ஆளாகி..உன் வாழ்க்கை இளமையிலே குட்டிச்சுவரா போகக் கூடாதுன்னு மட்டும் தீர்மானமா இருந்தேன்..

பூர்வ ஜென்மத்தில் தபோவனக்குடிலைத் தவிர உன்னை வேறெங்கேயும் அனுப்பாத நான்.. இந்த ஜென்மத்தில் பெண்கள் அப்படி இருக்கக் கூடாதுன்னு.. உனக்கு உலகத்தைப் பத்திப் பலதும் தெரியணும்.. நாலு மனிஷங்களோட பழகி.. மனிதர்களின் கொடூர முகத்தையும், காருண்ய முகத்தையும் நீ பார்க்கணும்னு.. உன்னை ஆர்க்கியோலஜிஸ்ட்டாக கைட் பண்ணேன்..

ஆனால் அதுவே.. தான் உனக்கு பூர்வ ஜென்ம நினைவுகளை மீட்டிக் கொடுத்திருக்கு..''என்றவரின் முகத்தில் ஓர் நமுட்டுச் சிரிப்பு!!

தந்தையின் உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துக்கு பின்னாடி, இத்தனை இரகசியங்களா? அதிசயித்து நின்றிருந்தாள் துஷ்யந்தனின் சுரூபினிப் பெண்!!!

அவளுடைய கைகளை வாஞ்சையுடன் பற்றிக் கொண்டவர்,கண்கள் கலங்க, ‘‘யம்மாடி..அன்னைக்கு அரசவையில் வைச்சு.. உன் துஷ்யந்தன் நீ யாருன்னு தெரியாதுன்னான்.. அப்போ ஒரு தந்தையா நான் என் கடமையை செய்தேன்.. உன்னை நம்பி.. உன் பக்கம் நின்னேன்..

ஆனால் இந்த ஜென்மத்தில்??.. நிலைமை அப்படியே தலைகீழாக இருந்தது.

துஷ்யந்தன் நிலைமையில் நீ நின்ன.. அந்தக் குழந்தை எப்படி வந்ததுன்னே தெரியாதுன்ன.. அப்போ உன் துஷ்யந்தன் கல்யாண மண்டபத்தில் நின்னிருப்பதைப் பார்த்தேன்..

நான் உன்னை நம்பாமல் கேள்வி கேட்குற மாதிரி நடிச்சப்போ.. அவர் முகம் கோபத்தில் சிவப்பதையும் பார்த்தேன்..

என் கேள்விகளால் வெறுப்படைஞ்சவர்..'இது என் குழந்தை தான்' னு கூட்டத்தில் ஒத்துக்க முன்வருவார்னு தான் நான் அப்படி செய்தேன்.. உன் பிறப்பு இரகசியத்தையும் வெளியிட்டேன்..

அதே போல அவர் ஒத்துக்கிட்டாரு.. 'உன் வயிற்றில் வளர்ற குழந்தை சர்வமதமனனுக்கு தந்தை அவர் தான்' னு ஒத்துக்கிட்டாரு..

ஒரு ஆண்மகன்.. ஆயிரம், இரண்டாயிரம் பேருக்கு நடுவில், 'இது என் குழந்தை தான்' னு

சொல்றப்போ.. அதில் உண்மை இருக்கும்னு கொஞ்சம் கூட யோசிக்காமல் நீ முரண்டு பிடிச்சு நின்ன?

‘என் மகளை நான் நம்புறேன்’ னு ஹஸ்தினாபுர் நடந்தது போல நான் இந்த ஜென்மத்திலும் சொல்லியிருந்தேன்னா.. ‘எனக்கு தான் அப்பா இருக்காரே!’ன்னு வீண் பிடிவாதத்தில் உன் துஷ்யந்தனோடு வாழ்க்கை நடத்தாமல் என் கூடவே இருந்திருப்ப? உன் வாழ்க்கையை நீயே பாழாக்கிக்கிட்டிருப்ப?

அதான் நான் அன்னைக்கு அப்படி நடந்துக்கிட்டேன்.. அவரோடு போய் நீ வாழணும்ன்றதுக்காகத் தான் அப்படி நடந்துக்கிட்டேன்..”என்று உண்மை அனைத்தையும் சொல்ல,

அடுத்த நொடி தொண்டை கமற, தந்தையை, “அப்.. பாஆஆ..” என்ற வண்ணம் தாவி அணைத்துக் கொண்டாள் யாழினி.

நுனி நாக்கில் அமிர்தமும், அடி நாக்கில் நஞ்சும் தடவி பேசும் எத்தனையோ உறவுகளுக்கு மத்தியில் வினோதப் பிறவியல்லவா இவர்!!

மகள், அவனோடு சென்று வாழட்டும் என்றா.. அவளை நம்பியும், அவள் பற்றிய அத்தனை உண்மையையும் தெரிந்தும் தெரியாதது போல பேசினார் அவர்?

தன் தோளில் மாலையாகக் கோர்த்த மகளின் கைகளை வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தவர், “நான் என்னைக்குமே உன் அப்பா தான்மா!!”என்று சொல்ல.. இருவர் கண்களிலும் நீர் துளிர்த்தது.

அன்றிரவு.. அவளுக்கே அவளுக்கென்று சொந்தமான சந்திரனின் வருகைக்காக காத்திருந்தாள் சந்திரனின் மனைவி தாரை.

இதுநாள் வரை இருந்த குழப்பங்கள் நீங்கி அவள் முகம் ரொம்பத் தெளிவாகி இருந்தது. கணவனிடம் அவள் கொண்ட அன்பை இன்று திறந்து காட்ட எண்ணம் கொண்டாளோ மங்கையும்??

என்றுமே இல்லாதவாறு.. அன்று அவளுள் வித்தியாசமான சிந்தனை முகிழ்த்தது.

இன்று வீடு வருபவனுக்கு.. தான் அவன் கண்கள் விரும்பிய.. பழங்கால சகுந்தலை போலவே நிற்க எண்ணங் கொண்டவள்,

தன் பியூட்டிஷியனை வீட்டுக்கு அழைத்து, மார்புக்கச்சையும், பழங்காலப் பெண்கள் அணியும் சராயும், அணிமணிகளும் என.. சகுந்தலையாகவே தயாரானாள்.

தன் முகத்துக்கு ஒப்பனை செய்து கொண்டவள், பேரிகையின் முன் அமர்ந்து, தன் கள்ளூறும் அதரங்களுக்கு சாக்லேட் ப்ளேவர்ட் லிப்ஸ்டிக் பூசி.. தன் புராதனப் புரவி வீரனை மயக்கும் எண்ணத்திலேயே குறியாக இருந்தாள் துஷ்யந்தனின் சுரூபினிப் பெண்!!

ஏற்கனவே சுரூபினிப் பெண்ணாயிற்றே அவள்? அழகுக்கலை நிபுணரின் கை வன்மையில் அதிசுரூபினியாகிப் போனாள் அவள்.

போர்ட்டிகோவில் அவனுடைய கார் சத்தம் கேட்டதும் உள்ளே அலைபாயத் தொடங்கியது மனம்!! இந்தக் கோலத்தில் அவள் நின்றிருப்பது கண்டு.. அவள் சொல்லாமலேயே புரிந்து கொள்வான் அவள் மனதை!!

காதல் பொங்க, மாடியிலிருந்து சாளரம் வழியாக எட்டிப் பார்த்தவள், அவனோடு, அவன் நண்பன் கனிஷ்கன்.. அது தான் நம் விக்னேஷும் வந்திருப்பது அறிந்து.. உடனடியாக தன் ஆடைக்கு மேலே ஓவர்கோர்ட் போன்ற ஓர் நீள அங்கியை அணிந்து கொண்டு கீழே படியிறங்கி வந்தாள் கணவனை எதிர்கொள்ள.

அவள் ஆசை கமழ வர, மன்னவனோ வந்திருந்தது போதை கமழ. ஆம், அவன் வந்திருந்ததோ போதையில்..!!

அவனைக் கைத்தாங்கலாகக் கடினப்பட்டு நிறுத்தி வைத்திருந்தான் நண்பன் விக்னேஷ்.

மன்னவனின் கோலம் கண்டு, கண்களின் கீழிமையிலேயே கண்ணீர் கட்டி , அவள் கவலையில்

நின்றிருக்க, அவளின் கவலை அதீத கவலையைக் கொடுத்தது கனிஷ்கனுக்கு.

கர்ப்பவதியாக நிற்பவள் கவலைப்படுவது தாங்காது, ‘‘ஸாரிமா..எப்போவுமே குடிக்க மாட்டான்.. அப்படியே குடிச்சாலும் லிமிட்டா தான் குடிப்பான்.. இன்னைக்கு ரொம்ப ஜாஸ்தியாகிருச்சு..’’என்று சொல்ல, சட்டெனக் கேட்டது போதையில் உளறும் நவீன துஷ்யந்தனின் குரல்!!

தொங்கியிருந்த தலை சட்டென் உயர, ‘‘(டேய்) ட்ரேய்.. கனிஷ்க்!!..நீ ஏன்டா அன்னைக்கு ஷகுந்தழாவைப் பத்தி நான் சொன்னடை சொழ்ழலை…??’’என்று கேட்க,

அதற்கு வேண்டா வெறுப்பான குரலில், ‘‘ஸாரிடா.. தப்புதான்டா’’ என்று கனிஷ்கனும் சொல்ல, ரியல் சகுந்தலாவின் விழிகள் அகல விரிந்தது.

அப்படியானால் கனிஷ்கனும்.. அவர்களின் பூர்வஜென்ம நினைவுகள் எய்தப் பெற்றிருக்கிறானா என்ன

திரும்பவும் கேட்டது யாதவனின் குரல்!

“அன்னைக்கேன்டா நீ குடிச்சி..த்து ம்மட்டையாகின? .. இல்லைன்னா.. என் ஷகுந்டலா என்ன டேதி வந்டப்போ.. ‘நீ சொன்னடு இந்டப் பொண்ணா மச்சி?’ன்னு எடுத்து சொழ்ழியிருப்பேல்ல??” என்று ஆற்றாமையில் கேட்க,

இவனும் முகத்தை சுழித்துக் கொண்டு, அலுத்துக் கொள்ளும் குரலில்,

“ஆமாடா.. ஸாரிடா.. இனி குடிக்கவே மாட்டேன்.. குடிச்சாலும் மட்டையாகுறளவுக்கு குடிக்கவ்வேஏஏ ம்மாட்டேன்.. ப்போதுமா..?”இறுதியில் கடுப்பான குரலில் மொழிந்தான் கனிஷ்கன்.

அப்படியானால் இவளைப் பற்றி அப்போதே கனிஷ்கனிடம் கூறியிருக்கிறானா? என்று அதிர்ந்தவளாக அவள் நின்ற வேளை, அவளை அழைத்தான் கனிஷ்கன்!!

மூச்சை அடைத்த இறுகிய குரலில், ‘‘யம்மா.. இந்த பாடிபில்டர்.. பாரம் தாங்க முடியலைஹ்.. ஒரு கை ப்பிடியேன்..’’ என்று சொல்ல, ஓடி வந்து சுயாதீனமாகத் தொங்கிக் கொண்டிருந்த கணவனின் கையை எடுத்துத் தன் மேல் போட்டுக் கொண்டவள் மாடிப்படி நோக்கிப் போனாள்.

நண்பனின் மனைவி புருவ மத்தியில் முடிச்சு விழுந்திருப்பதைக் கண்டு தவறாக எண்ணிக் கொண்டவன்,

‘‘இவன் எந்தப் பொண்ணை சகுந்தலா.. சகுந்தலான்னு சொல்றான்னு பார்க்கிறியா??.. அது உன்னைத் தான்மா.. அவனுக்கு இன்னைக்கு ஓவரானதும் நான் கனிஷ்கன் ஆயிட்டேன்.. நீ சகுந்தலா ஆயிட்ட.. சாரு தான் துஷ்யந்தன்!!’’என்று சொல்ல, அப்படியானால் கனிஷ்கனும் பிரியம்வதை போல நடந்ததை இன்னும் அறியாதவர்கள் தான் என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

அவளுடைய மனங்கவர் துஷ்யந்தனின் நாசியில்.. அவள் சகுந்தலையிடமிருந்து மட்டும் வரும் காட்டுமல்லி வாசம் வந்தது. போதையில் கண்கள்

திறவாமல், அவள் கழுத்து வளைவில் முகம் புதைத்து, அவன் கிறங்கிப் போக,

நண்பன் முன்னிலையில் கணவன் நடந்து கொள்வதில் கூச்சமாகிப் போனது அவளுக்கு.

நல்லவேளை கனிஷ்கன்… அவனின் பாரத்தை சுமப்பதிலேயே முழுக்கவனமும் செலுத்தியிருக்க… மறுபக்கம் நடந்த சின்னக்கூத்து அவன் கண்களில் விழாமல் தப்பித்தது.

வாசம் வைத்து தன் சகுந்தலாவைக் கண்டு பிடித்தவன் இதழ்களில் சிறு புன்னகை மலர்ந்தது. வலப்புறமும், இடப்புறமும் மாறி மாறித் திரும்பியவனாக,

“மை கனிஷ்கன்.. மை ஷகுந்டலா..” என்று அவன் உளறவாரம்பிக்க, யாழினியை நோக்கித் திரும்பியவன்,

“நான் சொன்னேன்ல? சத்தியமா நான் என்னைக்கு குடிச்சு மட்டையாகினேன்னு தெரியலை??.. ஆனால் இன்னைக்கு என்னை குடிக்க

விடாமல்.. இதையே சொல்லி சொல்லி என்னை ஒரு வழி பண்ணிட்டான்மா…” என்றவன் ஒருவாறாக, யாதவனை அழைத்து வந்து படுக்கையில் போட்டான்.

பெரும் மலையை பெயர்த்தது போல பெருமூச்செறிந்தவன், “ஹப்பாடாஹ்.. .. பார்த்துக்கம்மா நான் காலையில் வந்து பார்க்கிறேன்.”என்று யாதவன் வீட்டை விட்டுக் கிளம்ப, அவ்வறை அவனும், அவளுமென தனிமைப் பட்டுப் போனது!!

கட்டிலிலே.. அப்பாவி முகத்துடன், தன் அலை அலையான கேசம் காற்றில் அலைபாய.. வளர்ந்த ஆறரையடி உயரக்குழந்தையொன்று படுத்திருப்பதைக் கண்டாள் அவள்.

அப்போதும் சரிவர ஆழ்ந்த உறக்கத்திற்கு செல்லாமல், அரை போதையில்,

“ஷகுந்டலா.. என் ஷகுந்டலாஹ்!..”என்று அவன் புலம்புவதைக் கண்டு.. அவளுக்குள் காதல் உணர்ச்சிகள் கிளறி விடப்படவே, தன் கணவனின்

ஷூக்களை மெல்லக் கழற்றி விடத் தயாரானாள் அவள்.

பின்பு மெல்ல பக்கத்தில் அமர்ந்து கொண்டவள், அவனுடைய கேசத்தை தாய்மையுடன் கோதி.. நேசத்துடன் அவனது பரந்து விரிந்த நுதலில் முத்தமும் வைத்தாள்.

அவனுடைய விஸ்தாரமான கைகளில் ஒன்று எழுந்து.. அவள் இடையூடு சுற்றி வளைத்து.. அவன் பால் இழுக்க, அவளுடைய பெண்மைக்கோளங்கள் இரண்டும் நச்சென்று போய் மோதுண்டது..அவனுடைய பரந்த போர்க்கவசம் போன்ற.. வலிமையான மார்புகள்!!

அவள் அவஸ்த்தையுடன் அவனது முகத்தைப் பார்க்க, அவனோ கண்கள் மூடியிருந்தான். அவன் சொற்கள், செயல்கள் எல்லாமே சுயநினைவில் அன்றி.. போதையில் வெளிவந்து கொண்டிருந்தது.

தன் பூர்வ ஜென்ம நினைவுகள் தெரிய வந்ததன் பின் அவன் அடைந்த அத்தனை வேதனைகளையும் உள்ளுக்குள் மருகியவனாகச் சொல்லித் தீர்த்தான் அங்கணம்

“டப்புத்தான்.. ‘ஏழ்மையென்று சொல்.. குடிலை பொன்னால் நிரப்புகிறேன்’ ன்னு பெரிய்ய வீற வஷனம்ழாம் பேஸ்னது டப்புத்தான்.. சொன்னடு தப்பு தான்..

நான் தான் ஏழை!.. கோடி கோடியா காசு கொத்திக்கிடந்தும் நான் உயிரையே வைச்சிருக்குற பொண்ணு.. என் அன்பைப் புரிஞ்சிக்காமல் நடந்துக்குற வலியை..தினம் தினம் அனுபவிக்கிறேன் இல்லையா?? நான் தான் இந்த உலகத்திலேயே ஏழை..!!” என்று அவன் சொல்லிய அத்தனை உளறல்களையும் கேட்டுக் கொண்டிருந்தவளின் இதயத்தைக் கிழித்தது அவன் பேசிய வசனங்கள்!!

அவனும் தான் எத்தனை நாட்களாக, மாதங்களாக இந்த வலியை சுமந்திருப்பான்??

அவனது மூடிய விழியோரம் சரேலென வழிந்து அவன் காதுப்பக்கம் ஓடியது ஒற்றைக் கண்ணீர்த்துளி!!

கணவனின் கண்ணீர் கண்டு அவளுள்ளும் இதயம் வலிக்க, அந்தக் கண்ணீர் துடைத்தவள், தலை கோதியவளாக, “துஷ்யந்த்.. சகுந்தலா உன்

பக்கத்திலேயே தான் இருக்கேன்…அமைதியா தூங்கு.. காலையில் பேசிக்கலாம்.’’என்று சொல்ல,

அரை போதையில் பாதிக் கண்கள் திறந்தவனுக்கு, எல்லாமே கனவாகத் தான் தோன்றியது.

பின்னே அந்தக்கால உடையில் நின்றிருக்கும் சகுந்தலா.. இவ்வுலகில் தோன்றுவதானால் அது கனவு தானே? கனவென்றெண்ணி.. தன் மனம் திறந்தான் அவன்!!

‘‘இந்ட டுஷ்யந்தனோட உடல், பொருள், ஆவி அம்புட்டும் உனக்குத் தான்.. எடுத்துக்கோ.. எழ்ழாம் உனக்கு த் டான்…

நான் என்ன வேணும்னா உன்னை மறந்தேன்?.. எல்லாம் சாபம்.. விதி..!!ஆனாழ் இப்போ.. உன்னைப் பார்த்த என் கண்கள் இழந்து போனாழும்.. என்னாழ.. என் ஷகுந்டலாவை அடையாளங்காணத் தெரியும்.. ஏன்னா அந்தளவுக்கு நீ என் நாடி, நரம்பெல்லாம் ஊறிப் போயிருக்க ஜானு..

ஜானுஊ.. நான் ஏன் உன்னை ஜானுன்னு கூப்பிடறேன் தெரியுமா..??

ஜானுன்னா ஹிந்தியில்.. கண்மணின்னு அர்த்தம்.. அப்போ நம்ம குழந்தையும், நீயும் என்கிட்ட வந்து சேர்ந்தப்பறம் உன் மேல நான் வைச்சுருக்குற காதல் இன்னும் ஜாஸ்தியாச்சு..

அப்போலாம் துஷ்யந்தன்.. உன்னை மூச்சுக்கு முன்னூறு தடவை 'ஜானு.. ஜானு' கூப்பிட்ட அழைப்பு கூடவா… என் காதலை உனக்கு உணர்ட்டவேயில்லை??.. கடைசி வரை என் அன்பை நீ புரிஞ்சிக்கவேயிழ்ழைல?''என்று இறுதியில் அவன் கேட்ட போது தான்.. அவன் சொற்களில் எத்தனை வலி??

மனதில் இருந்த அனைத்தையும் உளறிக் கொட்டி, மனம் இலேசானதும் அவன் அவளை அணைத்துக் கொண்டே உறங்கி விட,

அவனது மார்புப் பகுதிச் சட்டையை ஈரமாக்கிக் கொண்டிருந்தது அவள் உகுத்த கண்ணீர்!!

அவள் உடல் முற்றாகத் தேறி வரட்டும்.. அவனுடன் நல்லநாள் பார்த்து நிதானமாகப் பேசலாம் என்று எண்ணி எண்ணி காலங்கடத்தியது அனைத்தும் தப்போ என்று காலங்கடந்து வருந்தலானாள் நவீன சகுந்தலை!!

அடுத்த நாளே.. அவனிடம் உண்மையெல்லாம் சொல்ல அவள் எண்ணியிருக்க, அவளுடைய பாழும் விதியோ.. வேறேதோ எண்ணியிருந்தது போலும்!!

அடுத்த நாள் காலை.. கண்ணாடியின் முன் நின்று.. தன் கேசத்தை கைளால் சரி செய்த வண்ணமே, கை கஃப்பின் பட்டன்களைப் போட்டுக் கொண்டிருந்தான் அவளுடைய கணவன்!!

குளித்து சுத்தமாகி.. பாதி உலர்ந்தும், உலராத கூந்தலில் மல்லிச்சரம் சூடி.. அடர் சிவப்பு நிறத்தில் சேலை உடுத்தி.. கை கால்கள் முளைத்த ரோஜாவைப் போல, தன் கணவனின் புறமுதுகுப் பக்கம் வந்து நின்றாள் யாழினி!!

கஃப்பினை போட்டுக் கொண்டே நிமிர்ந்தவன்.. தன்னெதிரே கண்ணாடியில் விழும் சகுந்தலையின் விம்பம் கண்டு.. அந்த அழகில் நின்றும் கண்களை எடுக்க முடியாமல் நின்றிருந்தான் துஷ்யந்தன்!!

கணவன் தன்னை இரசிப்பதில் வெட்கப் புன்னகை பூக்க,கன்னக்கதுப்புகள் இரண்டும் சிவக்க மெல்லத் தலை குனிந்தாள் யாழினி.

அவன் முகமோ நிமிடத்தில் ரசனைபாவம் மறந்து.. இறுக்கமாக மாறியது.

அறையை விட்டும் அவன் நகர முனைய, சட்டென்று குரல் உயர்த்தி, ‘‘நான் உன் கூட கொஞ்சம் பேசணும்..’’ என்று சொல்ல பட்டென்று தடைப்பட்டு நின்றது அவன் நடை.

அவன் முகம் இன்னும் இன்னும் இறுக்கமாக மாற, அவளை நோக்கி வெடுக்கென்று திரும்பியவனின் கண்களில் தேங்கி நின்றிருப்பது கண்ணீரா? இரத்தமா? என்று ஐயுறத்தக்களவுக்கு சிவந்திருந்தது அவன் கண்கள்.

‘‘நீ என்னக் கேட்கப் போறேன்னு தெரியும்??..’’என்று அவன் வரவழைக்கப்பட்ட நிதானத்துடன் சொல்ல, அவள் வதனத்தில் முதலில் தோன்றியது மலர்ச்சி.

அதன் பின் அவனிலிருந்து வந்த வார்த்தைகளின் பின் அவள் வதனத்தில் தோன்றியதோ அயர்ச்சி!!

கை முஷ்டியை இறுக்கிக் கொண்டே, ‘‘டிவோர்ஸ் தானே?..நீ என்கிட்ட கேட்கணும்னு நினைக்கிறது டிவோர்ஸ் தானே?? இந்தக் குழந்தையை சுமக்கப் பிரியமேயில்லாமல் தானே.. முன்னாடி இருந்தே கருவைக் க்கலைக்க ட்ரை ப்பண்ண..??’’என்று அவன் இறுதியாகக் கேட்ட கேள்வியில் அதிர்ந்து போனாள் அவள்.

என்ன உளறுகிறான் இவன்??

அவனோ தன் மாது.. உள்ளம் கனிந்து அவன் பால் வந்திருப்பது அறியாமல் ஏதேதோ பேசிக் கொண்டே போனான்.

‘‘ஆரம்பத்திலிருந்தே உனக்கு என்னைப் பிடிக்கலை..ஆனால் ஒரு நாள் உன் மனம் மாறும்னு எதிர்பார்த்தேன்.. அதுக்காக நீ கொடுத்த சொல்லடிகள் தந்த வலியையெல்லாம் தாங்கிட்டேன்..

உனக்கு மணவிடுதலை வேணும்ன்றதுக்காக.. எப்போ என் குழந்தை உயிரை மாய்க்க துணிஞ்சியோ.. அப்போவே.. நீ என் சகுந்தலா இல்லைன்னு புரிஞ்சிக்கிட்டேன்…என் சகுந்தலா எப்போவும் ஒரு உயிரைக் கொல்றளவுக்கு மோசமானவள் இல்லை!!"என்று அவன் கழுத்து நரம்புகள் ஆத்திரத்தில் புடைத்துத் தெரியக் கூற,

கண்ணீர் மல்க வாய் திறந்தவள், "என்ன உளர்ற??"என்று கேட்க வர, அதற்கு விடாமல் கையுயர்த்தித் தடுத்தான் துஷ்யந்தன்.

தரை பார்த்த அவன் விழிகள், வலியுடன் அவளைப் பார்த்தது.

அஸ்த்தினாபுரத்தில் அவள் மூர்ச்சையுற்று, ஹாஸ்பிடல்லில் கண் விழித்த கணத்தில் இருந்து.. அவன் மூளையை வண்டாய்க்குடைந்து கொண்டிருந்தவற்றை எல்லாம் ஆத்திரத்தில் கொட்டித் தீர்த்தான் அவன்.

"அப்போவே சொன்னேன்..வெளியே ப்போறதுன்னா த்தனியா ப்போகாதேன்னு..

வ்வெளியே ம்மழை வ்விடாமல் பெய்திட்டிருக்கும் போது.. ந்நீ ஏன் க்காட்டுக்குப் ப்போனேன்னு எனக்குத் த்தெரியாதுன்னு ந்நினைச்சிட்டிருக்கியாஆஆ??'' என்று துஷ்யந்தன் கத்திக் கேட்ட தினுசில் தூக்கிவாரிப் போட்டது மெல்லியலாளின் மேனி!!

வெஞ்சினத்தில் அவன் முகமும், கழுத்தும் செக்கச் செவேலென சிவந்து போக, “ உனக்கு என்ன்.. னைய்யும், என் க்காதலையும் வ்விட ம்முக்கியமானது உன் க்கெரியர்.. அதுக்கு த்தடங்கலா இருக்குறது என் க்குழந்தை.. உனக்கும் எனக்கும் பாலமா இருக்கிறது என் குழந்தை.. அந்தக் குழந்தையை அழிச்சிட்டேன்னா..என் கிட்ட இருந்து மணவிடுதலை எதிர்பார்க்க.. லாம்னு தானே நி.. னச்சே?

என் குழந்தை..யை நீ சுமக்குறது உனக்குப் பிடிக்கலை.. என் கு···ழந்தையை கொல்றது..க்காகத் தானே நீ அவ்வளவும் பண்ண??''என்று கேட்க, சட்டென இடையிட்டு “இல்லை!''என்று கத்த வேண்டும் போல இருந்தது.

ஆனால் அதற்கு விடாமல் உடைந்து போன குரலில் துஷ்யந்தனோ,

“எனை எரிக்கும் ஈர நினைவுகள்.. உன்னையும் ஒரு நாள் எரிக்கும்னு எதிர்பார்த்தேன்…

நான் யாருன்னு கடைசிவரை உனக்குத் தெரியப் போறதில்லை.. என் காதல் எவ்வளவு உயர்ந்ததுன்னும் உனக்குத் தெரியப் போறதில்லை..

ஏன்னா நீ என் சகுந்தலா இல்லை!!..”என்று சொன்னவன், கொஞ்சம் அவசரப்படாமல் இருந்திருக்கலாம்!! அவள் சொல்ல வருவதையும் சற்று நிதானித்துக் கேட்டிருக்கலாம்!!

ஆனால் எங்கே அவன் அவளைப் பேச விட்டான்? இத்தனை நாளும் கருங்கற்பாரமென மனதில் இருந்த சுமைகளை எல்லாம் சினத்தில் கொட்டிக் கொண்டிருந்தான் அவளிடம்!!

தன் தாடையை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டவன், தன் முழு உயர்த்துக்குமாக நிமிர்ந்து நின்று, அவளை நிர்மலமான முகத்துடன் பார்த்தான்

இதற்கு முன் அவன் உணர்ச்சி வசப்பட்டது எல்லாம் பொய் தானோ என்றிருந்தது அவன் இறுகிய முகம்!!

“நீ ஸ்ரீ லங்கா வந்ததில் இருந்து.. என்னிடம் டிவோர்ஸ் கேட்கத் தான் துடிச்சிட்டிருக்கேன்னு எனக்குத் தெரியும்.. உன் மனசு மாறும்னு.. மாறணும்னு.. உன் கண்ணில் படாமல் நானும் போக்குக் காட்டிக்கிட்டு இருந்தேன்.. ஆனால் உன் மனசு மாறாதுன்னு இப்போ எனக்குத் தெளிவாகிருச்சு..”என்று சொல்ல, அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

அப்படியானால் இவன் பிஸினஸ் விஷயமாக அலையவில்லையா?? இவள் அவனுடன் பேச விழைவதை, விவாகரத்து கேட்க சித்தமாகிறாள் என்றா எண்ணியிருக்கிறான்??

அவள் வாய் திறக்கப் போன கணம் மீண்டும் கேட்டது அவள் குரல்!

“உனக்கு வேணும்ன்ற டிவோர்ஸ்ஸை நான் தர்றேன்.. குழந்தை பிறந்ததும் நீ இந்த சிறையை

விட்டுப் போகலாம். ஆனால் குழந்தைக்கு ஏதாவது ஆச்சு??''என்று வெஞ்சினத்தில் எகிறியவன், அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டு அங்கிருந்து நகர,

''இல்லை.. நான் சொல்றதைக் கேளுங்க..''என்ற போது ஒலித்தது அவனுடைய செல்.

எடுத்துக் காதில் வைத்தவன், ''இஸிட்? ஐல் பி தேர்!!''என்று இறுக்கமான வதனம் மாறாமலேயே சொன்னவன், அவள் சொல்வதைக் காது கொடுத்துக் கேளாமலேயே நகர்ந்தான்.

இவன் ஏன் புரியாமல் பேசிட்டுப் போறான்.. அவள் சொல்ல வருவதையும் தான் கேட்டால் என்ன? சோர்ந்தது பெண்ணின் மனம்!!

அவன் விவாகரத்துத் தந்தாலும்.. அதை ஏற்றுக் கொள்ள முடியுமா இவளால்??

**

கையும் ஓடாமல், காலும் ஓடாமல் ஓரிரு மணித்தியாலங்கள் வெறிச்சோடிய பார்வையுடன்

மஞ்சத்தில் ஒடிந்து போனவளாக அமர்ந்திருக்க சட்டென ஒலித்தது டெலிபோன் மணி.

பல ரிங்குகளின் பின்னர், சுயநினைவடைந்து அவள் ரிசீவரை எடுத்துக் காதில் வைக்க, மறுமுனையில் கேட்டது தோழன் விஷ்ணுவர்தன் ஆகிய ஸ்ரீ ராமின் குரல்!!

“யாழினி.. யா.. யாதவ்..”என்றவனுக்கு மேற்கொண்டு பேச்சு வராமல் திக்கத் தொடங்க, பக்கென்றானு அவளுக்கு.

கைகளோ அனிச்சை செயலாக அவள் தாலிச்சரடைப் பற்றிக் கொள்ள, “யாதவ்க்கு என்னாச்சு ராம்?..”என்று பதற்றத்துடன் அவள் நாவிலிருந்து வெளிவந்தது சொற்கள்!

ஸ்ரீ ராமோ, அவளை விடவும் பதற்றமான குரலில், “நிவ்ஸைப்பாரு..புரி…” என்று பேசிக் கொண்டிருக்கும் போதே ரிசீவரை வைத்தவள், கைகள் ரிமோட்டைத் தான் தேடியது.

அந்த கணம் டிவியில் ஓடிக் கொண்ட பரபரப்பான ப்ரேக்கிங் நிவ்ஸில், தலை சுற்றலே வந்தது அவளுக்கு.

கடவுளே!! இரண்டாக மடிந்து.. இடிந்து போனவளாக தரையில் அமர்ந்து கொண்டவளுக்கு.. வாழ்க்கை சூன்யமயமாகிப் போனது போல தோற்றம் எழுந்தது.

காதோரம் அசரீரியாகக் கேட்டது அன்று அவனைப் பார்த்த விபாங்கன் முதன் முதலாகக் கூறிய மொழிகள்!!

“ப்போயிடு.. இங்கே இருந்து ப்போயிடு.. இது உனக்கு சொந்தமான இடம்னு ந்நினைச்சிட்டிருக்கியாஆ?

உன் ம்மனைவியோட இஇதயம் உனக்கு சொந்தமாகும் வரை.. உனக்கு ஒரு க்கைப்பிடி ம்மண்ணு கூட சொந்தம் க்கிடையாது ..

உன் க்காதலை உணர்த்தணும்னு ந்நீ அவளை கூட்டி வந்த.. ஆனால் உன் க்காதலை அவள்

உணர்ந்தாஆஆல்.. ந்நீ ய்யாருன்னு அவள் உணர்ந்தாஆஆல்.. உன் உயிருக்கு தான் ஆபத்து..

ப்போயிடு.. இங்கே இருந்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ.. அவ்வளவு சீக்கிரம் ப்போயிடு..!!!''- அவள் கண்களில் சத்தமேயின்றி வழிந்தது கண்ணீர்.

அவள் இதழ்களோ முணுமுணுக்கும் குரலில், ''விபாங்கன்.. நான் அனுபவிச்ச வலி.. அந்தக் கர்மா அவனைக் கொன்னுட்டிருக்குறது பத்தாதுன்னு நீ வேற..ஏன்??''என்றவளுக்கு அழுகை அதிகமாகியதே தவிர குறையவேயில்லை.

அத்தியாயம் 22

உணர்ச்சிகள் சுத்தமாகத் துடைக்கப்பட்ட அவள் கண்களில் நில்லாமல் வழிந்து கொண்டிருந்தது நீர்!!

அவர்களது அறை எங்கணும் ஓயாது ஒலித்துக் கொண்டேயிருந்தது "ப்ரேக்கிங் நிவ்ஸின்" நாதம்!!

பெரிய சோடாபுட்டிக் கண்ணாடியை அணிந்திருந்த அந்த நிவ்ஸ் ரிப்போர்டர், "ரிப்போர்ட் ஃபஸ்ட்" சேனலின் சின்னம் பொருத்தப்பட்ட மைக்கில், ஏதோ அவசர கதியில் பேசிக் கொண்டிருக்க,

அவள் கண்கள் எல்லாம், அந்நபரை விடுத்து.. பின்னாடி எரிந்து கொண்டிருந்த ஏழு மாடிக் கட்டிடத்தையே ஊடுருவிப் பார்த்துக் கொண்டே இருந்தது.

அதனிலிருந்தும் தீயோடு சேர்த்து எழுந்து கொண்டிருந்தது கோர கரும்புகை மண்டலம்!!

அந்த பிரம்மாண்டமான கட்டிடத்துக்குக் கீழே, தரிக்கப்பட்டிருந்த கார்களும், இதர வாகனங்களும் கண்ணுக்குத் தெரியாதளவுக்கு மூடியிருந்தது புகை!!

அங்குமிங்கும் மனிதர்கள்.. இருமிக் கொண்டும், மூக்கைப் பொத்திக் கொண்டும் விரைய, பெரிய சைரன் ஒலியுடன் வந்து நின்றன இரண்டு மூன்று தீயணைப்பு வாகனங்கள்.

செய்தி அறிவிப்பாளரோ, அவற்றை நோக்கியவாறு, பரபரப்பு நிறைந்த குரலில்,

" 'கடவத்தை' யில் இருக்கும் இலங்கையின் பிரம்மாண்டமான ஆடைக்காட்சி நிறுவகமான "டாஸிலிங்" (dazzling) பில்டிங் தீப்பிடிச்சு எரிஞ்சிட்டிருக்கு.. தீ விபத்துக்கான காரணம் இன்னும் சரியாக தெரிய வரவில்லை.. ஆனால் அதுக்கு முன்னாடியே 'டாஸிலிங் ஓனர்' உள்ளே மும்முரமா உதவி பண்ணிட்டிருக்குறது புரிகிறது… ஃபயர் ஃபைட்டர்ஸ் இப்போ தான் வந்திருக்காங்க.. ஆடையகத்துக்குள்ளே இருந்த ஏராளம் பேர் தீக்குள் மாட்டியிருக்குறதா தெரிய வந்திருக்கு…."என்று சொல்லிக் கொண்டே போக, அவள் கண்ணீர் அதிகமானது.

அவளது காதலை சரிவரப் புரியாதவன், வாழ்வில் எந்த பிடித்தமும் இல்லாதவன்.. துயிரைத் துச்சமாக மதித்து.. தீக்குள் இறங்கியிருக்கிறான் என்றால்.. அவளுக்கு அது இனிக்குமா என்ன?

நவீன சகுந்தலைக்கு, ஸ்ரீ ராம் நடப்பவைகளை அழைப்பெடுத்து சொன்ன கணமே.. உள்ளே ஏதோ சரியில்லை என்றே எண்ணத் தோன்றியது.

அவன் வேண்டுமென்றே தான் சென்றிருக்கிறான்;தனக்கு ஏதாவது ஆகித் தொலைத்தாலும் பரவாயில்லை என்று விரக்தியுடனே தான் சென்றிருக்கிறான் என்பது மாத்திரம் புரிந்தது அவளுக்கு.

விபாங்கனின் மொழிகளும் கூட அவனுக்கு யமனாக மாறி விட்டால்?? என்று எண்ணுகையிலேயே நெஞ்சு துடித்தது.

அந்த கணம்.. சடாரென்று திறக்கப்பட்டது அவள் இருந்த அறை!! அங்கே அந்த செய்தி அறிவிப்பாளரை விடவும் பரபரப்பாக நெற்றியெங்கும்

வியர்வை வடிய நின்றிருந்தான் துஷ்யந்தனின் தோழன் கனிஷ்கன்!! இல்லை அது விக்னேஷ்.

கட்டிலுக்கு அருகில் தரையில் இரண்டாக மடிந்து அமர்ந்திருந்த, தன் நண்பனின் மனைவியைக் கண்டதும் அவனது உடலில் ஓடிக் கொண்டிருந்த நடுக்கம் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே செய்தது.

அவள், கனிஷ்கனை இயலாமையுடன் பார்க்க, அவனோ துன்பமயத்துடன் பார்த்தான் அவளை. கனிஷ்கனின் கண்கள் ஒரு நொடிக்கும் குறைவாக, தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருந்த, 'ப்ரேக்கிங் நிவ்ஸில்' பதிந்து அவளிடம் மீண்டது.

அவசரமான எட்டுக்கள் எடுத்து வைத்து வந்து, நவீன சகுந்தலையிடம் மண்டியிட்டமர்ந்து கொண்டவன்,

"நீ எதுக்கும் கவலைப்படாதேமா.. அவனுக்கு ஒண்ணும் ஆகாது.."என்று தைரியமாக சொன்னவனுக்கு, அடுத்து பேசும் போது துக்கம் தொண்டையை அடைக்கலானது.

யாழினியின் விழிகள் பாராது, டைல்ஸ் தரையைத் துலாவிய வண்ணம்,

“ஆனால்.. கடைசியா என்கிட்ட பேசும் போது.. ‘என் மனைவியையும், குழந்தையையும் பார்த்துக்க’ ன்னு ஃபோனில் சொன்னான் யா.. ழி…அதான் கொஞ்சம் உறுத்தலா இருக்கு.. நான் அங்கே தான் போகப் போறே.. நம்ம யாதவ்க்கு ஒண்ணும் ஆகாது..”என்றபடி கனிஷ்கன் எழுந்து கதவை நோக்கி நகர முயல,

தன் வயிற்றில் குழந்தை சுமப்பதையே மறந்தவளாக, வெடுக்கென எழுந்தாள் யாழினி.

வெறிச்சோடிய விழிகளுடன் கணவனின் நண்பன் விழிகளைப் பார்த்தவன், “யா.. யாதவ்வை நான் பார்த்தாகணும்..!!”என்றாள்.

அதைக் கேட்டதும் நவீன கனிஷ்கனுக்குள் ஓர் பதற்றம் மிக, “வாட்??.. நீ வீட்டிலேயே இரு.. நான் போய் பார்த்துட்டு வர்றேன்..நான் தான் சொல்றேன்ல? அவன் ஹெல்ப் பண்ண தான் அங்கே போயிருக்கான்.. கண்டிப்பா அவனுக்கு எதுவும்

ஆகாது.. அவன் நல்லெண்ணமே அவனைக் காப்பாத்தும்” என்று யாழினியை எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றான் கனிஷ்கன்.

ஆனால் சகுந்தலைக்கோ, விபாங்கனின் மொழிகளே திரும்பத் திரும்ப வந்து கொள்ள, அவளுக்கு வீட்டிலேயே சும்மா இருக்க முடியவில்லை.

கண்களில் வழிந்த கண்ணீர் கொங்கை வரை கோர்க்க, துடித்துப் போன குரலில், “இல்லை. நான் உன் கூட வர்றேன் கனிஷ்கன்··· எ.. எனக்கு என் துஷ்யந்.. தனைப் பார்த்தாகணும்..!!”என்றாள் சகுந்தலா.

அன்று, நண்பன் குடித்து விட்டு ‘துஷ்யந்தன்-கனிஷ்கன்-சகுந்தலா’ என்று ஏதேதோ உளறினான்.

ஆனால் இன்று அதையே யாழினி உணர்வது உள்ளுக்குள் நெருடலைக் கொடுத்தது பூர்வஜென்ம உணர்வுகள் சரிவரப் பெற்றிராத விக்னேஷுக்குள்.

இருந்தாலும் தீர்க்கமான குரலில், “நான் சொல்றதைக் கேளு யாழினி.. நீ இங்கேயே இரு..”என்று சொல்லி முடிக்கும் முன்னரே

தன் ஒட்டு மொத்த குரலையும் திரட்டி, அவ்வறையே அதிரக் கத்தினாள் யாழினி.

“ந்நான் என்ன்.. த்துஷ்யந்தனைப் பார்த்தாஆஆகணும்..!!”

நண்பன் மனைவியின் பிடிவாதம் அவனும் அறிந்ததே!! அவளைத் திட்டுமளவுக்கு கோபம் அவனுள் முகிழ்த்தாலும்,

கர்ப்பிணியாக இருப்பவளைத் திட்ட முடியாமல் போக, அமைதியாக அவளையும் வருமாறு கண்ணால் சமிக்ஞை கொடுத்து விட்டு போய் வண்டியில் ஏறினான் விக்னேஷ்.

காரில் விக்னேஷுக்குப் பக்கத்தில் அமர்ந்து வந்தவளுக்கு… அழுகையில் இதழ்கள் வளையவில்லை. தொண்டை கமறவில்லை.இருப்பினும் கண்களில் சுரந்த உவர்நீர் மட்டும் ஓயாது வழிந்து கொண்டேயிருந்தது.

வழிநெடுகிலும் ஆடையகத்தின் மேனேஜர், தனக்குத் தெரிந்த ஊழியர்கள் என அனைவருடனும் பரபரப்புடன் அழைப்பெடுத்துப் பேசிக் கொண்டே வந்தவன், எதேச்சையாக யாழினியைத் திரும்பிப் பார்த்தவன், அவள் கண்ணீர் கண்டு இளகிப் போனான்.

செல்லை டேஷ்போர்ட்டில் வைத்து விட்டு, அவளைத் திரும்பி நோக்கி,

“இப்போ தான் ஃபயர் ஃபைட்டர்ஸ் எல்லாரும் வந்திருக்காங்க.. யாதவ்வுக்கு ஒண்ணும் ஆகாது..இதுவொண்ணும் சீரியஸ் மேட்டர் கிடையாது..”என்று அவளை ஆசுவாசப்படுத்த முயல, இருந்த அசுமூகமான நிலையில் மனதில் இருப்பதை அனைத்தையும் மடை திறந்த வெள்ளம் போல கனிஷ்கனிடம் கொட்டித் தீர்க்கலானாள் அவள்!!!

துக்கம் தொண்டையை அடைக்க, ஈனஸ்வரத்தில், “இல்லை.. எனக்குத் தெ.. ரியும் இது சீரியஸ் தான்!! .. மகாபாரதக் கர்ணன் தெரியுமா??..

பாவம்.. தன்னோட அந்தஸ்து தெரியாமல்.. தன்னோட உரிமை தெரியாமல்.. அவ்வளவு பழிச்சொல்லுக்கு மத்தியில.. சுயமா நின்னு…. திறமைக்கு தகுந்த அங்கீகாரத்.. துக்காக ரொம்ப போராடினான்…

பரசுராமரும் அவனைப் புரிஞ்சிக்கிட்டிருக்கலாம்.. தான் ஒரு தேரோட்டி மகன்னு மறைச்ச ஒரே.. கா.. காக்.. காரணத்துக்காக.. 'உரிய நேரத்தில்.. நீ கற்ற வித்தை மறந்து போகட்டும்' னு சாபம் கொடுத்தாரு..

எப்போவுமே பொறுமையா இருக்குற பூமி மாதாவும்… மண்ணில் சிந்திய நெய்யை பிழிஞ்சு அவளைக் காயப்படு.. த்தினதுக்காக.. 'நான் அனுபவிச்ச இதே வலியை நீயும் ஓர் நாள் அனுபவிப்ப' ன்னு சாபம் கொடுத்தாள்..''என்று கார்க்கண்ணாடியையே வெறித்துப் பார்த்துக் கொண்டே பேச, சரேலென வழிந்தது ஒற்றைத் துளி கண்ணீர்!!

அவளின் உணர்ச்சி துடைக்கப்பட்ட குரல் வேறு கனிஷ்கனின் நெஞ்சை ஏதோ கசக்கிப் பிழிகிறது. இருப்பினும் அமைதியாகவே யாழினியின்

மனக்குமுறல்களுக்கு காது தாழ்த்திக் கொண்டே வண்டியை ஓட்டினான்.

"ஆனால் கர்ணன் தெரிஞ்சு எந்த பாவமும் பண்ணலை.. என்னுடைய துஷ்யந்தனுக்கும், கர்ணனுக்கும் பெரிய வித்தியாசமேயில்லை..

போன ஜென்மத்துல நான் அனுபவிச்ச வலி, கர்மா.. இந்த ஜென்மத்திலேயும் அவன் அனுபவிச்சிட்டிருக்கிறது போதாதுன்னு…

அதே மாதிரி என் கூடவே இருந்த விபா..ங்கன் அவனைப் புரிஞ்சுக்காமல்.. அவனுக்கு கொடுத்த சாபத்தில்..இப்போ என் து.. துஷ்யந்த்.. உயிரை விடவும் துணிஞ்சிட்டான்.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு கனிஷ்க். ." என்று ஏதேதோ உளறிக் கொண்டே வந்தாள் யாதவனின் யாழினி.

அவளைப் பார்க்கும் போது இருந்த களேபரத்தில் இன்னும் கொஞ்சம் பரிதாபமாக இருந்தது. ஆயிரம் தான் அவர்களுக்குள் உட்பூசல் இருந்தாலும் அது அவள் கணவன் அல்லவா?

கணவனுக்கு என்று ஒன்றானதும்.. இயல்பாக மீதூறும் பதைபதைப்பு இவளுள்ளும் எழத்தானே செய்யும்? அதனால் தான் சிந்தையிழந்து பேசுகிறாள் என்று எண்ணிக் கொண்டான் நண்பன் விக்னேஷ்.

உரிய இடத்துக்கு சற்றுத் தொலைவிலேயே வண்டியை நிறுத்தியவன்,

தான் தங்கையாக மதிப்பவளை நோக்கி, அவள் பாணியிலேயே அவளுக்கு ஆறுதல் சொல்ல நாடியவனாக, ‘‘ரிலாக்ஸ்.. உன் துஷ்யந்தனுக்கு ஏதும் ஆகாது..நீ கார்லேயே வெயிட் பண்ணு.. நான் போய்.. உன் துஷ்யந்தனோடு வர்றேன்.. பிலீவ் மீ!!’’என்றே கூறியவன், காரை விட்டும் இறங்கி.. தீ விபத்துச் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்தை நோக்கி ஓடினான் கனிஷ்கன்!!

தலைவன் உயிர் மீது விருப்பமில்லாமல், சாகத் துணிய நெருப்பில் நுழைந்திருக்க.. இவள் மட்டும் எங்கணம்.. காரினுள் சொகுசாக அமர்ந்திருக்க முடியும்?

அவள் கால்களோ காரை விட்டும் அனிச்சையாய் இறங்கி.. ‘டாஸிலிங் பில்டிங்கை’ நோக்கி நகரவாரம்பித்தது.

அந்த இடம் முழுவதும்.. சுவாசிக்க முடியாமல் புகை மூட்டமாக இருக்க, சிறிது நேரத்தில் மிகப் பெரும் பெரும் சைரன் ஒலியோடு,

ஒன்றன் பின் ஒன்றாக வந்து வரவாரம்பித்தது விஷேட அதிரடிப்படையினரின் வாகனங்கள்!!

அங்கே சம்பவ இடத்தில் நின்றிருந்த தீயணைப்புப்படை வீரர்களில் பாதி பேர், அங்கிருந்த மேலதிக பொதுமக்களை வெளியேற்ற பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்க,

இன்னும் சில வீரர்கள்.. தீயை அணைக்க முயன்று கொண்டிருக்க..

மீதி வீரர்கள் தீக்குள் புகுந்து உயிர்களைக் காப்பாற்ற முனைந்து கொண்டிருந்தனர்.

அங்கே தான் யாதவனும் இருந்தான். தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயை அணைக்கும் முன்னரே, நிமிடமும் தாமதியாமல், உள்ளே நுழைந்து.. இயலுமான மட்டும் தீக்குள் சிக்கித் தவித்தவர்களை எல்லாம் வெளியேற்றிக் கொண்டிருந்தான்.

அவனது இரத்தத்தில் இயல்பிலேயே ஊறிப் போயிருந்த ஷத்திரிய இரத்தம்.. மக்களுக்கு உயிர் பங்கம் வரும் போது கைகளை கட்டிக் கொண்டு காத்திருக்கச் சொல்லவில்லை. அப்படி அமைதி காக்கவும் முடியவில்லை துஷ்யந்தனால்!!

சம்பவ இடத்துக்கு ஓடி வந்த கனிஷ்கன் தன் ஆருயிர் நண்பனை கண்டு கொண்டான். யாதவன் அணிந்திருந்த மேல்சட்டை தீக்கு இரையானதோ என்னவோ? வெற்று மார்புடனும், பேன்ட்டுடனும் நின்றிருந்தவனின் உடலெங்கும் புகைக் கரி!!

யாதவனா? இல்லை வேறு யாருமா? என்ற வினா உள்ளத்துக்குள் ஊடுருவத்தக்களவுக்கு உருமாறி, கருத்துப் போனவனாக நின்றிருந்தான் நவீன துஷ்யந்தன்!!

தீக்குள் இருந்து··· ஓர் பதினைந்து, இருபது வயது மதிக்கத்தக்க வாலிபனோடு வெளியே வந்தவனைக் கண்ட கனிஷ்கன், துஷ்யந்தனை நோக்கி விரையப் போக,

அதற்கு விடாமல் அவனை நான்கைந்து கரங்கள் பற்றித் தடுக்கலானது.

அந்தக் கரங்களுக்கு சொந்தக்காரர்கள்.. காக்கிச் சட்டையில் இருந்த போலிஸ் அதிகாரிகள்!

அவன், அவர்களை விட்டும் மீண்டும் முன்னேற முயல, "அங்கே போக முடியாது சார்··· சொன்னா கேளுங்க சார்" என்று காவல்துறை அதிகாரிகள், அவனைக் கட்டுப்படுத்த, இயலாத மட்டில் வாய் திறந்து கத்தலானான் கனிஷ்கன்!

அவர்களின் பிடியில் இருந்து வெளிவரத் துடித்தவன், "என்னை விடுங்க.. நான் யாதவ் கிட்ட போகணும்···. என்னை விடுங்க.. யாஆஆதவ்···யாஆஆதவ்..!!"என்று, யாதவனை நோக்கிக் கத்தியும் பார்த்தான் கனிஷ்கன்.

அங்கே இருந்த சன நெருக்கத்தில் கடைசி வரை.. துஷ்யந்தனுக்கு நண்பன் அழைத்தது காதில் விழவேயில்லை.

அந்நேரம் தான் யாரும் எதிர்பார்த்திராத அந்த சம்பவம் நிகழ்ந்தேறியது.

ஆம்புலன்சில் மயக்க நிலையில் .. கைகளில் பாதி முழுவதும், நெருப்பில் எரிந்து, முதலுதவி செய்யப்பட்டுக் கொண்டிருந்த ஓர் பெண்மணி.., சட்டென்று மயக்கம் தெளிந்து எழுந்து,

ஓடி வந்து, வயிற்றிலும், மாரிலும் மாறி மாறி அடித்துக் கொண்டவராக, ‘‘ஐய்யோஓஓ என் குழந்தை.. என் குழந்தை.. யாராவது காப்பாத்துங்களேன்!! .. ட்ரையல் ரூம்ல என் குழந்தை..’’என்று கதறவாரம்பித்தார்.

பெற்றவள் அல்லவா? இருந்த களேபரத்தில் கையைத் தீச்சுட்டது கூட அவளுக்குப் புரியவேயில்லை.

அடி வயிற்றில் இருந்து கத்திப் புலம்ப, யாதவனின் உடலுக்குள் உச்சாதி பாதம் வரை,

“அந்தக் குழந்தையை காப்பாற்ற வேண்டும்” என்ற உத்வேகம் எழுந்து பரவியது துஷ்யந்தனுக்கு.

அடுத்த நொடி, படையினர் விரைவதற்குள் அவன் உள்ளே அசுர வேகத்தில் நுழைவது புரிய,

காவல்துறையின் பிடியில் இருந்த கனிஷ்கன், கலக்கமுற்றவனாகக் கத்தத் தொடங்கினான்.

“ப்போகாதே ய்யாஆஆதவ்..!!”.

அந்நொடி தன் குரலுக்கு இணையான, நன்கு பரிச்சயப்பட்ட இன்னோர் பெண்குரலும் கேட்க, திடுக்கிட்டுத் திரும்பியவன் அதிர்ந்தான் கனிஷ்கன்.

எந்தப் பெண்ணை.. இங்கே வரவேண்டாம் என்று காரிலேயே நிறுத்தி விட்டு வந்தானோ அவள்!! நண்பனின் மனைவி, கர்ப்பிணியான யாழினி!!

தூசி மண்டலத்தை.. வளியெங்கும் பரவ விட்டுக் கொண்டு குபுகுபுவென எரிந்து கொண்டிருந்தது கட்டிடம்!! தீயணைப்புப்படையினரின் நீண்ட நேர போராட்டத்துக்குப் பிறகு,

கட்டிடத்தின் பாதி மட்டும் அணைந்திருக்க, அடுத்த பகுதியோ.. அனல் சுவாலைகளை வெளித் தள்ளிக் கொண்டு எரிந்து கொண்டிருந்தது.

அப்படிக் கொழுந்து விட்டெரியும் இடத்தில் இருந்தே அவன் உள்நுழையப் பார்க்க, அவனது இன்னுயிர் சகுந்தலாவும் தான் எங்கணம் தாங்குவாள்??

அவளை இரு பெண் காவலாளிகள் போக வேண்டாம் என்பது போல தடுத்து நிறுத்த, தன் மன்னவன் தீக்குள் நுழைந்ததும்,

அடி நெஞ்சில் இருந்து குரலெழுப்பி கத்திக் கொண்டே நிலத்தில் வீழ்ந்தாளே ஓர் வீழல்!!

கர்ப்பிணிப் பெண்ணின் வீழ்தலில், கல் நெஞ்சம் படைத்தாருக்கும் இதயம் கசிந்துருகிப் போகும் படி இருந்தது அந்தக் காட்சி!!

“யாதவ்.. போகாதே.. யாஆஆதவ்.. போஓஓ··· காஆஆஆ.. தேஏஏ..”என்று கத்திக் கொண்டே அவள் விழ ஆயத்தமாக, அதிர்ச்சியுடன் திரும்பி

நவீன சகுந்தலையை நோக்கி ஓடி வந்தான் கனிஷ்கன்.

நிலத்தில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டே, அரைகுறையாக மூர்ச்சையுற்றவளைத் தாங்கிப் பிடித்துக் கொள்ள, கருவுற்ற மணிவயிற்றுடன் மயங்கி வீழ்ந்தவளின் அதே சோபையிழந்த முகத்தை.. எங்கேயோ பார்த்த ஞாபகம் வந்து போனது கனிஷ்கனுக்கு.

சுற்றி வர ஆட்கள் அலறிக் கொண்டும், பதறிக் கொண்டும் ஓட ஆம்புலன்ஸ் சைரன் ஒலியும், விசேட அதிரடிப் படையினரின் காலடிச் சத்தங்களும் கோரமாகக் கேட்க, அது எதுவுமே காதில் விழாதவளுக்கு.. கனிஷ்கனின் சிந்தை முழுவதையும் ஆக்கிரமித்திருந்தது சகுந்தலையின் முகம்!!

அத்தனை வீரர்கள் நின்றிருக்க.. இவன் முதன்மையாளனாக, அந்தக் குழந்தையைக் காப்பாற்ற, ட்ரையல் ரூமுக்குள் நுழையக் காரணமும் இருந்தது.

படிக்கட்டு வழியாக.. இரும்புப் படிக்கட்டுகள் சுற்றி சுற்றி அமைக்கப்பட்டருக்கும் ஓர் குறுக்கு

வழியாக சென்றால், மூன்றாம் தளத்தில் இருக்கும் குழந்தைகளின் ட்ரையல் அறையினை ஈஸியாக அடைய முடியும்.

அதனை தீயணைப்புப்படையினரிடம் சொல்லிக் கொள்ள நேரமேயற்று பட்டெனத் தானே உள் நுழைந்தவனின் உடல் உணர்ந்து கொண்டிருந்தது அனல் வெப்பத்தை!!

உள்ளே எங்கும் காபன் டயாக்ஸைட் புகை மூட்டமாக இருக்க, அவனது வலிய பாதங்கள் மும்மூன்றாக கடந்தேறின படிக்கட்டுக்களை!!

ட்ரையல் ரூமுக்கு செல்லும் வளைவான இரும்புக் கம்பிப் படிகளில் பாதி தற்போது தான் தீப்பற்றிக் கொண்டிருக்க, பாய்ந்து அதன் மேல் தொங்கி ஏறியவன், ஒருவழியாக மூன்றாம் தளத்தின் ட்ரையல் ரூமை அடைந்திருந்தான்.

சடாரென்று காலால் எட்டி உதைத்து கதவைத் திறக்க, உள்ளே நிலவிய புகை மூட்டத்தில் சுயநினைவிழந்து மயங்கி விழுந்திருந்தது ஓர் நான்கு அல்லது ஐந்து வயது மதிக்கத்தக்க பெண்குழந்தை!!

குழந்தையை நெஞ்சோடு அள்ளி அணைத்துக் கொண்டவனுக்கு, கண்கள் எரிகிறது. தாரை தாரையாக எரிச்சலினால் கண்ணீரும் வருகிறது. சூரியனின் வெப்பத்தை நிகர்த்த அனல் சுவாலையும் அவன் மேனி மேல் தெறிக்கிறது!!

அதீத புகையினால் மூச்செடுக்க சிரமமாகி தொண்டையும் புகைகிறது. இத்தனைக்கும் நடுவே அந்தக் குழந்தையை தாய்ப்பறவை போல அணைத்துக் கொண்டவன்,

அந்த ருத்ரதாண்டவம் எடுத்தாடும் நெருப்பை விட்டும் வெளியே வர, விரைந்தான்.

சரியாக அவன் படிகளை விட்டும் இறங்க முனைந்த நேரம், கீழ்த்தளத்தின் கண்ணாடி முதற்கொண்டு தூள் தூளாக வெடித்துச் சிதறுவது புரியவே,

இரண்டாம் தளத்தின் சாளரம் வழியாக, குழந்தையைத் தூக்கிக் கொண்டே கண்ணிமைக்கும் நொடியில் பாய்ந்தான் யாதவன்!!

அந்த கணம் உள்ளே டமால் என வெடித்துச் சிதறியது இரண்டாம் தளமும்.

பாதி அணைத்தும், அணைக்க முடியாமலும் முற்றிலும் நாசமானது அவனது ஆடைக்காட்சியகம்!!ஆனால் ஓர் உயிரையாவது அநியாயமாக தீயில் வெந்து கருக விடவில்லை அவன் என்னும் போது அவனுள் ஓர் அமைதி நிலவியது!!

ஏற்கனவே இரு வருடங்கள் தன் இளமைக் காலத்தை சாரணர் பயிற்சியில் கழித்தவனுக்கு, உயரத்திலிருந்து குழந்தைக்கு எந்த சேதாரமும் இன்றி லாவகமாகவே குதிக்கவும் தெரிந்திருந்தது.

குழந்தையோடு குதித்தவனுக்கு முழங்காலில் அடிபட்டாலும் அவன் கைகள் குழந்தையை கெட்டியாகப் பிடித்திருந்தது.

கடைசி உயிராகக் காப்பாற்றப்பட்ட குழந்தையைக் கண்டதும் தீயணைப்புப்படையினரும், பொதுமக்களும் ஒருவரையொருவர் தழுவி ஆரவாரம் செய்ய அடுத்த நொடி, சட்டென குழந்தையை அவனிலிருந்தும்

எடுக்கப்பட்டு, அதற்கு ஆக்ஸிஜன் மாஸ்க் வைக்கப்பட்டது.

குழந்தையின் தாய் அவன் முன்னே வந்து கையெடுத்துக் கும்பிடுவது எல்லாம் இரட்டை விம்பங்களாகத் தெரிய, மெல்ல சரிந்தவனின் தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டது இரு மென்மையான கரங்கள்!!

அவன் முன்னே அவன் எஞ்ஞான்றும் விரும்பிய மதிமுகம்!! அவனது ஆருயிர் சகுந்தலையின் முகம்!!

அந்த நிலையிலும் அனிச்சையாய் மேலெழுந்த அவன் கைகள் சகுந்தலையின் கண்ணீரைத் துடைக்க, மெல்ல மூடிக் கொண்டது அந்த வீர ஆண்மகனின் கண்கள்.

அவளோ.. அவன் கண்கள் மூடிய பிறகு, அவன் தினம் தினம் எதிர்பார்த்த அன்பையெல்லாம் கொட்டி வழங்கிக் கொண்டிருந்தாள்.

அவன் முகத்தை அள்ளி தன் மார்புகளுக்கு இடையில் புதைத்துக் கொண்டவள்,

“துஷ்யந்த்.. துஷ்யந்த்.. உன்னை நான் மன்னிச்சிட்டேன்.. என் உயிரே நீ தான்.. என் பரத்தை சுமக்கும் போதும்.. அவன் வளரும் போதும்.. நான் எந்தவிதமான விபரீத முடிவும் எடுக்காதததுக்கு காரணமே.. உன்னோடு வாழ்ந்த அந்த ஒரு இரவு தான்..ப்ளீஸ் என்னை விட்டுப் போ..காதே துஷ்யந்த்..”என்று அவள் கெஞ்ச, அவன் நிர்ச்சலனமேயின்றி படுத்திருந்தான்.

தன் நண்பனை.. அன்று வித்தியாசமான விழிகளுடன் பார்த்துக் கொண்டிருந்த கனிஷ்கனுக்கு.. யாழினியின் ‘துஷ்யந்த்’ என்ற ஓயாத அழைப்பு வேறு.. ஆழ்மனதில் முட்டுவதாகவே இருந்தது.

அடுத்த நாள் காலை..

யாதவனின் இல்லத்தில்.. யாதவனின் பிரம்மாண்டமான அறையில்!!

துஷ்யந்தனுக்கு மெல்ல விழிப்புத் தட்டத் தொடங்கியிருந்தாலும், இன்னும் அவன் கண்கள் திறந்தபாடில்லை.

ஆனால் அவனுடைய உச்சந்தலை கேசத்துக்குள் ஓர் மெல்லிய கரம் அளைவதும், அவன் காதுக்குள் தான் விரும்பும் பெண்ணின் விசும்பும் ஒலியும் காதாறக் கேட்கிறது அவனுக்கு.

அவன் நாசியோ, அவனுக்கேயென்று பிரம்மன் படைத்த பெண்ணின் காட்டுமல்லி சுகந்தத்தை முகர்கிறதும் கூட!!!

அவன் இதழ்கள் அத்தனை சோர்விலும், அவளின் அருகாமையை எண்ணி மெல்ல விரிந்தது. அந்த கணம் அவள் சற்றும் எதிர்பாராத விதமாக பட்டென்று அவனுடைய வலிய கரம், அவளுடைய மெல்லிய முன்னங்கை பற்றி இழுக்க,

அன்று போல இன்றும் அவளுடைய புராதன புரவி வீரனின் பரந்த மாரில், இவளது பஞ்சன்ன தனங்கள் 'நச்' சென்று மோதிக் கொள்ள.. அவனில் அடைக்கலமானாள் நவீன சகுந்தலை.

அவனது ஆதவ விழிகளும், இவளுடைய கண் மை அஞ்சனம் தீட்டப்பெற்ற அழகிய விழிகளும்

ஒன்றையொன்றை ஒரே நேர் கோட்டில் சந்தித்துக் கொண்டன.

அன்று.. இருந்த அதே துஷ்யந்தனின் வலிமையை.. தன் இடையைச் சுற்றியிருந்த கைகளில் அவன் காட்டிய அழுத்தத்தைக் கொண்டு கண்டுபிடித்தாள் அவள்.

ஒரு நிமிஷம் அவன் தந்த அணைப்பில் கிறங்கி நின்றவள், அடுத்த கணம் சுதாரித்துக் கொண்டு, ‘‘வ்விடு.. வ்விடு.. என்னை வ்விடு..’’என்று சினத்தில் தவித்தவளாக அவனில் நின்றும் பிரியத் துடித்தாள்.

‘‘நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு ஜானு..’’-அன்று போலவே இன்றும், காயமுற்று எழுந்து வந்தவன் போலவா பேசினான் அவளது துஷ்யந்த மகாராஜன்??

காயமுற்றவன் இப்படி ஸ்தீரமாக உரையாற்றவும் கூடுமோ? இவன் அசுரனா? மனிதனா? இல்லை இவன் தேவன் அன்று போல இன்றும் சொல்லிக் கொண்டது மனம்!!

இருந்தாலும் அவன் மார்பில் கை வைத்துத் தள்ளியவளாக எழுந்து கொண்டவள், கோபத்தில் நாசிநுனி சிவக்க,

“நீ ஒண்ணும் சொல்ல வேணாம்.. நான் சொல்ல வர்றதை நீ கேட்டியா??”என்று ஆரம்பித்தவள், அவன் பேச இடம் கொடுக்காமல் அடுக்கடுக்காக கேட்டுக் கொண்டே போனாள் கேள்விகள்!!

துஷ்யந்தனோ, மனைவியின் அதிரடியில் நாக்குத் தள்ளாத குறையாக நின்றிருந்தான்.

“நான் எதுக்கு ஹஸ்தினாபுர் எக்ஸ்ப்ளோரேஷனுக்கு வாலண்டியரா போனேன் தெரியுமா? ..

நான் எதுக்கு காட்டுக்கு போனேன் தெரியுமா? .. அங்கே என்ன நடந்திச்சு தெரியுமா?

‘நான் தான் உன்னோட சகுந்தலா’ ன்ற உண்மை தெரியும்னு ஆசையா சொல்ல வந்தால்.. நீயா இஷ்டத்துக்கு கற்பனை பண்ணி ஏதோ பேசிட்டுப் போற..

நான் உன் கிட்ட ‘டிவோர்ஸ்’ வேணும்னு அப்போ கேட்டேனா?? அப்படியே கேட்டாலும்.. என்னை நீ போக விட்டிரு..வியா?நீ என் மேல் வைச்ச காதல் அவ்வளவு தானா? இல்லை எல்லாமே வெறும் நடிப்பாஆ? ”என்று அவள் தன் துஷ்யந்தனுடன் உரிமை சண்டைகள் போட, பல நாள் கழித்து மனைவியின் முன்கோபத்தை, கண்கள் சுருங்க இரசித்துக் கொண்டே இருந்தான் துஷ்யந்த்.

“ஸாரி ஜானு” - தாயிடம் திட்டு வாங்கிய குழந்தை.. வெள்ளந்தியாக சிரித்து வைப்பது போலவே சிரித்தான் அவனும்.

அப்போதும் கோபம் தணியாமல் எரிந்து விழுந்தாள் சகுந்தலா.

“ஸாரி சொன்னால் எல்லாம் சரியாகிருமா?? அந்த மோதிரம்.. பழைய பஞ்ச பாண்டவர்களின் முன்னோர்கள் யூஸ் பண்ணது..

ஹஸ்தினாபுர் போனால்.. என் குழப்பங்களுக்கு எல்லாம் ஏதாவது க்ளூ கிடைக்கும்னு நம்பினேன்..

அதனால் தான் ராகவிக்கு வந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக்க முன்வந்தேன்..

அங்கே நான் காட்டுக்கு போனது கூட தொலைஞ்ச மோதிரத்தை தேடத் தான்.. அப்போ தான் நான் யாருன்ற உண்மையும் எனக்குத் தெரிய வந்தது..

ஆனால் நீ என்னமோ பெரிய்ய இவன் மாதிரி.. "எனை எரிக்கும் ஈர நினைவுகள் உன்னையும் ஒரு நாள் எரிக்கும்" னு எதிர்பார்த்தேன்.. ஆனால் நான் நினைச்சது பொய்.. அது இதுன்னு டயலாக்லாம் விட்டுட்டுப் போன..??

கொஞ்சம் நிதானமா நின்னு.. நான் என்ன சொல்ல வரேன்னு கேட்கணும்னு கூட தோணலைல? அன்னைக்கும் என்ன புரியாமல் நடந்துக்கிட்ட... இன்னைக்கும் என்னை புரிஞ்சுக்காமல் தான் நடந்துக்கிற.. என்னைக்குமே என்னைப் புரிஞ்சுக்கவே ம்மாட்டேல்ல?" என்றவளின் கண்களில் மீண்டும் உகுக்கத் தயாரானது கண்ணீர்.

மனைவியின் கண்களில் இருந்து வழியும் நீரில்.. படுத்திருந்தவனுக்கும் சகலதும் ஆட்டம் கண்டு போனது. சட்டென எழுந்து அமர்ந்தவன்,

“நான் சொல்றதைக் கேளு ஜானு” என்றவனாக அவளைத் தோளோடு கையிட்டு அணைத்துக் கொள்ள, கணவனின் அணைப்பை ஒதுக்கியவள், அவன் கையைத் தன்னிலிருந்தும் தள்ளி விடலானாள்.

மனைவியின் ஒதுக்கம் தாளாமல், ‘‘நான் உன் புருஷன்.. ஹஸ்தினாபுர் மன்னன் துஷ்யந்தன்டீ!!..’’என்றான் கன்னியர்கள் மனம் மயக்கும் மென்மையான குரலில்.

அதில் இன்னும் கொஞ்சம் கோபம் பொங்க, ‘‘ம்மண்ணாங்கட்.. ட்டி.. மனைவியோட மனசு புரியலை..நீ பெரிய மன்னனா?’’என்று அவள் மீண்டும் திட்ட,

அவளது திட்டல்கள் அனைத்தும் காதல் மொழிகளாகவே மொழிபெயர்ப்பாகி விழுந்தது அவனது செவிகளுக்குள்.

அவளை மறுக்க மறுக்க அவளது மலரினும் மிருதுவான கரங்களை தன் கைக்குள் அடைக்கலமாக்கிக் கொண்டவன்,

காதல் மல்க ஹஸ்கி குரலில் சொன்னான்,“ஜானு கேட்டிச்சு.. நான் அந்தக் குழந்தையைக் காப்பாத்திட்டு வெளியே வரும் போது.. உன் மடியில் என்னை தாங்கிக்கிட்டு நீ என்னை ‘துஷ்யந்தன்’ னு கூப்பிட்டது கேட்டிச்சு.. நீ! .. என் ஜானு!!சொன்னது எல்லாம் கேட்டிச்சு..” என்று.

சும்மாவே துஷ்யந்தனின் ஒற்றைப் பார்வைக்கு தாங்க மாட்டாத சகுந்தலை.. அவனுடைய ஹஸ்கி குரலில் மதி மயங்கிப் போனாள்.

அவள் விழிகள் அவனுடன் இரண்டறக் கலக்க, அவனது விழிகளோ.. தன்னெதிரே இருக்கும் பளபளத்துக் கொண்டிருந்த ரோஜா நிற இதழ்களையே தான் கள்ளுண்ட மந்திக் கணக்காக பார்த்துக் கொண்டே இருந்தது.

இது தான் சமயம் என்று தன் ஒட்டு மொத்த காதல் ஆசைகளை எல்லாம் அவள் இதழுக்கு காண்பிக்க நாடியவன்,

அதைக் கவ்விக் கொள்ள முன்வர, சட்டென அந்தக் காதல் மாய வலையில் இருந்து வெளியே வந்தாள் சகுந்தலா.

அவனோ, ‘என்னாச்சு?’ என்பது போல தாபம் சொட்டும் விழிகளுடன் பார்க்க, இவளோ அப்போதும் கூட தன் மனதின் நெருடலைப் பிடித்துக் கொண்டு,

“வேணாம் விடு.. குழந்தையையும், என்னையும் விட்டுட்டு.. இந்த உலகத்தை விட்டே ஒரேயடியா போற எண்ணத்தில் தானே போன?

அங்கே ஃபயர் பைட்டர்ஸ் நின்னுட்டிருக்கும் போது.. உனக்கென்ன அவ்வளவு ஹீரோயிஸம்?

.. உனக்கு ஏதாவது ஆச்சுன்னா.. எ.. என்னையும், பரத்தையும் பத்தி கொஞ்சமாவது நீ யோசிச்சுப் பார்க்கவேயில்லைல??..

இப்போ கூட.. உனக்கு ஒண்ணும் இல்லை.. நீ நல்லா தான் இருக்க' ன்னு டாக்டர் சொன்னப்போ கூட நான்.. நானா இல்லை.. கண்ணு முழிக்கிற வரைக்கும்.. ஒரு பைத்தியக்காரி மாதிரி உட்கார்ந்துட்டிருக்கும் என் நிலை உனக்குத் தெரியவே போறதில்லை!!''என்று அவள் குறைப்பட்டுக் கொள்ள மீண்டும் அவனிடமிருந்து வந்தது பெருமூச்சு.

அவனுடைய அந்தச் சகுந்தலை.. 'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று ஏற்றுக் கொள்ளும் ரகம். ஆனால் இவனுடைய இந்த நவீன சகுந்தலை..??

தந்தை கண்ணுவ முனிவர்.. காலத்துக்கு ஏற்றாற் போல வளர்த்திருப்பதில் இவளை சமாளிக்கும் இவனுக்கல்லவா தலை சுற்றுகிறது!!

மீண்டும் அவள் மறுக்க மறுக்க கையிட்டு அணைத்துக் கொண்டவன்,

``இல்லை.. அப்படியாவது என் ஜானு மனசு மாறாதான்னு தான் போனேன்.. அந்தக் குழந்தையை

காப்பாத்தினா.. என் குழந்தை கண்டிப்பா பத்திரமா இருக்கும்னு தான் போனேன்.. குழந்தையை அழிக்கணும்னு நினைக்குற உன் எண்ணம் அப்பவாவது மாறாதான்ற நப்பாசையில் தான் போனேன்” என்று சொன்னவன் முகத்தில் கவலையும், காதலும் மண்டிக் கிடப்பதைக் கண்டாள் அவள்.

கண்களில் மிகுதியாக நீர் சுரக்க ஆரம்பிக்க, தலைவனையே காதல் கமழப் பார்த்திருந்தவள், துஷ்யந்தன் முன்னிலையில் ஓர் குழந்தையாக மாறிப் போனாள்.

மிருதுவான முகத்துடன் அவனை நோக்கி, “நிஜமா அதுக்குத் தான் போனியா?”என்று கேட்க, அவளையே இமைக்காமல் பார்த்திருந்த அவனது ஒளி சிந்தும் கண்களும் ஒருமுறை இமைத்தன ‘ஆம்’ என்பது போல.

அவளுள் அங்கணம் தாருமாறாக காதலைச் சிந்தும் ஹோர்மோன்கள் சுரக்க, தன் கணவனை மையலுடன் தாவி அணைத்துக் கொண்டாள் சகுந்தலை

அவள் கைகள் அவனுடைய பரந்த முதுகை இன்னும் இன்னும் இறுக்கி அணைத்துக் கொள்ள, அவள் இதழ்களோ.. அவளுடைய முரட்டுக் கன்னத்தில் சின்னச் சின்ன ஈரம் தோய்ந்த இடையறாத முத்தங்களைப் பதித்துக் கொண்டே போனது.

அந்த அணைப்பில்.. அவனுக்கான காதல் இருந்தது. அவன் நல்லபடியாகத் திரும்பி வந்ததில் ஓர் ஆசுவாசம் இருந்தது. இத்தனைக்கும் மேலாக.. அவர்களின் காதலை ரொம்பவும் சோதித்த விதியும், தளர்ந்து போய் அவர்களை விட்டும் வெருண்டோடியதில் ஓர் திருப்தி நிலவியது.

அவனோடு இன்னும் இன்னும் புதைந்தவள், அவனுடைய செவிகளுக்குள் கிசுகிசுப்பாக, “இந்த ஜென்மத்திலும்.. எனக்காக.. எனக்காக மட்டும் பிறந்திருக்க.. உ... உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன்னு தெரியலை??”என்றாள்.

இதுவரை மனைவியின் அதிரடி முத்தங்களை.. இதழ்களில் உறையும் சின்னச் சிரிப்புடன் இன்பமாக

ஏற்றுக் கொண்டிருந்தவன் முகம் இன்னும் பிரகாசமானது.

அவளைத் தன்னிலிருந்தும் பிரித்தவன், அந்தக் கள்ளூறும் அதரங்களைப் பார்த்துக் கொண்டே ஒன்று கேட்டான். அதில் கீழ்வானச் சிவப்பைக் கடன் வாங்கிக் கொண்டது அவள் முகம்.

அப்படி என்ன தான் கேட்டான் அவன்??

அன்று அந்தக் கருங்கற்குகையில் வைத்து, தன் சகுந்தலையிடம் கேட்டதையே இன்றும் கேட்டான் துஷ்யந்தன்!!

“கைம்மாறு வேண்டாம்.. காதல் தா பெண்ணே!!”

அவனது அந்த ஒற்றை வசனத்தினால் காதலில் வீழ்ந்த சகுந்தலை தான்.. அதன்பிறகு இத்தனை ஆண்டுகள் கடந்தும்.. அவனது அன்பில் இருந்து வெளிவரத் துணியவேயில்லையே?

இன்றும்.. அந்த வசனத்தில் உயிர் கரைய ஊனுருக தன் மன்னவனின் இதழ்களைத் தாவிக் கவ்விக் கொண்டாள் சகுந்தலா!!

மனைவியின் எதிர்பாராத முத்தத்தில் விர்ரென்று ஷாக் அடித்தது போல நிமிர்ந்தவனுக்கு.. அவளது அதிரடி பிடித்திருந்தது.

உயரத்திலிருந்து குதித்ததில் முழங்காலிலே கட்டு!! உடலிலே சிற்சில காயங்கள்!!

இருப்பினும் இளமை!! அவனோடு இரண்டற ஒட்டியிருக்கும் பெண்மை?? இரண்டும் அவனைப் பித்தங்கொள்ள வைக்க, அவள் இதழ்களைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வரத் துணிந்தான் துஷ்யந்தன்.

அவன் கைகள், மனைவியிடம் இதுநாள்வரை இருந்த தடை நீங்கியதும்.. அவளுடலில் உள்ள மேடுபள்ளங்களில் அத்துமீறி நுழைந்து நீள, அகல, உயரம் என முப்பரிமாணங்களை ஆராய அழுத்த,

அவனிடம் இதழ்களைக் கொடுத்திருந்தவன்.. அவன் தந்த இரட்டை சுகத்தில் மெல்ல முணகினாள்.

அவளது முணகல் சத்தமும் ஆண்மகனின் தாபத்தை இன்னும் கூட்ட.. அவள் இதழில் சுரந்த அத்தனை கள்ளையும், சொட்டு விடாமல் அருந்தியது அந்தப் பொல்லாத மந்தி.

மனைவி மூச்செடுக்க சிரமப்படுவது கண்டு மெல்ல அவளை அவன் விடுவிக்க, அந்த இதழ் ரசம் அருந்தலில் கொஞ்சம் சிவந்து வீங்கி.. இலேசாகத் துடித்துக் கொண்டிருந்தது அவளது அதரங்கள்!!

அவனோ மனைவியின் முகத்தில் ஓடிய திருப்தியைக் கண்டு புன்னகையுடன் சொன்னான், ‘‘சிங்கிள் கிஸ்க்கே.. இப்படி மூச்சு வாங்குது.. இனி இந்த துஷ்யந்தனோட அதிரடிக் காதலையும் நீ ஒட்டு மொத்தமா பார்க்கும் போது அதைத் தாங்கிப்பியா?’’என்று அவன் தாபத்துடன் கண்ணடித்துக் கேட்ட தினுசில், மெல்லச் சிவந்தது அவள் முகம்.

சகுந்தலையின் முகச் சிவப்பில் மீண்டும் காதல் பெருக்கெடுக்க, அவள் கன்னங்களை இரு கைகளால் தாங்க விளைந்த நேரம் கேட்டது, துஷ்யந்தனின்

நண்பன் கனிஷ்கன்.. தொண்டையை செருகிக் கொண்டே உள்ளே வரும் காலடிச் சத்தம்!!

"வாடா கனிஷ்க்.."- மனைவியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டவன் முகம் மலரவே நண்பனை வரவேற்றான்.

'கனிஷ்கன்' என்றழைத்தால் முகம் சுழிக்கும் விக்கி முகத்திலோ இதுநாள்வரை பார்த்திராத ஓர் பிரகாசமும், அமைதியும் நிலவிக் கொண்டிருந்தது. அதுமட்டுமின்றி அவன் 'கனிஷ்கன்' என்னும் அழைப்பை உவந்தேற்றுக் கொள்வது போலவே தோன்றியது அவளுக்கு.

அப்படியானால் கனிஷ்கனும் தன் பூர்வஜென்ம நினைவுகள் அடைந்தானோ? ஆமாம், அதே தான். அந்தத் தீ விபத்துச் சம்பவம்.. அவனுக்குள், அவனது ஆன்மா பற்றிய ரகசியங்களைக் கொடுத்திருந்தது தான் தெய்வாதீனம்.

ஓடி வந்து துஷ்யந்தனை ஆற்றாமையுடன் தாவி அணைத்துக் கொண்டவன், "ஆமாடா.. உன் கனிஷ்கனே தான்.. உன் தோழன் கனிஷ்கனே தான்..

கொஞ்சம் நேரத்தில் ரொம்ப பயங்காட்டிட்டியேடா..''என்றவனின் அணைப்பு ஒரு சில செக்கன்கள் தொடர்ந்து நீடித்துக் கொண்டேயிருந்தது.

துஷ்யந்தனும் நண்பன் அணைப்பில் அமைதியாக ஓரிரு கணங்கள் நிற்க, கனிஷ்கன் சொன்னான், ''உன்னை நினைச்சா ரொம்ப பெருமையா இருக்கு துஷ்யந்த்.. டீவி, பேப்பர், ஸோஷல் மீடியான்னு… உன்னோட வீரச்செயல் பத்தி தான் பேசிட்டிருக்காங்க.. அன்னைக்கும் சரி.. இன்னைக்கும் சரி.. மக்களை நேசிக்குற உன் குணம் மாறவேயில்லை'' என்று.

அதில் திடுக்கிட்டவனாக, கனிஷ்கனை தன்னிலிருந்தும் பிரித்தவன், ''அப்படின்னா உனக்கு??''என்று சந்தேகத்துடன் இழுக்க, கனிஷ்கனின் புன்னகை இன்னும் அகலமானது.

கண்களை மூடித் திறந்து ''ஆமா.. தெரியும்.. என் பர்த்டேக்கு நீ தந்த பெயிண்டிங்கின் அர்த்தம் இப்போ புரியுது துஷ்யந்த்.. உன் மனைவி மேல நீ

வைச்சிருக்க காதல்.. என்னாலே நல்லாவே புரிஞ்சிக்க முடியுது மச்சி” என்று சொல்ல,

காதலுடன் சகுந்தலையைப் பார்த்து புன்னகைத்தான் துஷ்யந்த்.

அத்தியாயம் 23

மூன்று மாதங்களுக்குப் பிறகு,

கொழும்பின் அதிநவீன தனியார் மருத்துவமனையின் லேபர் அறை!!

டாக்டர்.. முகத்துக்கு மாஸ்க்கும், கைகளுக்கு கையுறையும் அணிந்து நிற்க, அவரைச் சுற்றி இரண்டு தாதிமார்கள் நிற்க, அந்தக் கட்டிலில் தன் கால்களை விரித்துக் கொண்டு, வலியில் கத்திக் கொண்டிருந்தது நம் நவீன சகுந்தலையே தான்.

அழுது.. அழுது அழுகையின் உச்சத்தில் கண்மடல்கள் வீங்கிப் போயிருந்தாலும் கூட, யாழினியின் அழுகை நின்றபாடில்லை.

அவளுடைய ஒற்றைக்கை.. கட்டில் போர்வையை இறுகப் பற்றியிருக்க, மறு கையோ.. பச்சை நரம்போடிய ஓர் வலிமையான முரட்டுக் கரத்தினை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது.

குழந்தையோ இந்நொடியோ.. அந்நொடியோ என பூமியில் ஜனிக்கத் தயாராகி··· தாயின் கருவறை வாசலை முட்ட, அதன் தாய் தான்.. அந்த

இன்பமான வலியைத் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

எதற்கும் அஞ்சானாகிய.. துஷ்யந்த மகாராஜனின் கண்கள்.. மனைவியின் கத்தலில்.. நன்றாகவே கலங்கிப் போயிருந்தது.

இயலுமான மட்டும் மனைவியைத் தேற்ற நாடியவன்.. அவளது புறங்கைக்கு குட்டிக் குட்டி முத்தங்களை அழுந்த அழுந்தப் பதித்தவனாக, அவள் தலைகோதிக் கொண்டே சொன்னான்,

“ஜானு..உனக்கொ.. ண்ணும் ஆகாது…. தைர்.. தைர்யமா இரு” என்று.

“என் பக்கத்திலேயேஹ் இருங்கஹ் ப்ளீஸ்..”- கண்களில் வழிந்த நீர் பக்கவாட்டில் சரிந்து.. காதுக்குள் நுழைய.. வலியில் முனகிக் கொண்டே சொன்னாள் யாழினி!!

அவனா நீங்குவான்? தனக்கென ஓர் வாரிசைத் தருவதற்காக இத்தனை சிரமங்களுக்கு ஆளாகும் மனைவியை அவனா நீங்கிப் போவான்?

பூர்வ ஜென்மத்தில் தன் குழந்தையை அவள் பிரசவித்த போது..ஊழ்வினையால் அங்கே இருக்கப் பெறாதவன்.. இன்று அந்த பாக்கியம் பெற்றான்.

கண்களை இறுக மூடி, அவள் புறங்கையால் அழுத்தமான முத்தம் பதித்தவன், “இ. ல்லை… எங்கேயும் போக மாட்டேன்.. இங்கேயே தான் இருப்பே.. ன்.. வலியைப் பொறுத்.. துக்க..!!”என்றவன், அவளை விட்டும் இம்மியளவும் நகர்வதாக இல்லை.

அந்த அழகான இளம் தம்பதியர்களின் ஆழமான அன்பைக் கண்ட டாக்டருக்கும், நர்ஸ்களுக்கும் கூட , ‘என்னேவொரு அழகான அன்புள்ள தம்பதியர்கள்’ என்ற எண்ணம் தோன்றாமலில்லை.

அடுத்த நொடி.. யாழினிக்கோ..நெஞ்சில் ஏதோ முடிச்சு விழுந்தது போல வலிக்க, உடலெல்லாம் அந்த ஏசி அறையிலும் பொல்லாத உஷ்ணத் தகிப்பு வாட்டியெடுத்தது.

இடுப்பு என்பின் உள்ளே அடிபட்டது போல ஓர் வலி எழுந்து பரவவாரம்பித்தது.

இது தான் தருணம் என்று டாக்டரும் சைகை காட்ட, கணவனின் கையைப் பற்றிக் கொண்டு, கண்களை இறுக மூடிக் கொண்டு.. இறுதியாக, “ஆஆஆஆஆஆஆ!!”என்று கத்தினாள் அவள்.

வெண்ணைய்யில் குழைத்து குழைத்து செய்தாற் போன்றிருந்த அவளுடைய மேனி நிறம்..

அவளுடைய வலியில்.. செக்கச் செவேலேன சிவக்க, அவள் படும் பாடு கண்டு.. அவளுடைய கணவனின் இடது விழியில் இருந்து சரேலென வழிந்தது ஒற்றைத் துளி நீர்!!

எப்பேர்ப்பட்ட ஆண்மகன்.. அவனையும் அழ வைத்தது அவனுடைய இதயத்துக்கு உகந்த பெண்ணே தான்!!

இரத்தத்தோடும் நீண்ட தொப்புள் கொடியோடும் வந்த குழந்தையை டாக்டர் கையிலேந்தியவராக, அவளைப் பார்த்துப் புன்னைக்க,

பெருமூச்சு விட்டுக் கொண்டே தலையணையில் தலை சாய்த்தாள் யாழினி.

தாய்மை.. அது இன்பமான வலி!! வலிக்காமல் கிடைக்கும் இன்பமும் தான் இன்பமோ?? குழந்தையின் ‘கீச்’ என்ற அழுகுரலில்.. அவள் இத்தனை நேரம் அனுபவித்த வலி எல்லாமும் எம்மாத்திரம் என்றாகிப் போனது யாழினிக்கு.

யாதவன்.. தாய்மையை அறியாதவன் தான் இருந்தாலும், அந்நொடி.. மனைவி மேல் காதல்

சுமந்தவனாக அவன் அங்கே நின்றிருந்த நொடி… தாய்மை எத்தனை மகோன்னதமானது என்பதை உணர்ந்தான்.

அழுத குழந்தை.. அவளது வெற்று மார்பில் சட்டெனக் கிடத்தப்பட.. தாயின் இதயவொலி கேட்டு.. மெல்ல மெல்ல ஆசுவாசமடையத் தொடங்கியது.

அடுத்த நிமிடம்… குழந்தையை சுத்தப்படுத்த தாதிமார்கள் அந்தச் சின்னப் பஞ்சுக்குவியலை.. துணியில் சுற்றி எடுத்துக் கொண்டு செல்ல, ஆனந்தக் கண்ணீரில் இரட்டை இரட்டை விம்பங்களாகத் தெரிந்த மனைவியைக் கண்ணீர் மல்கப் பார்த்திருந்தான் அவன்.

அவளோ.. களைத்துப் போன மதிவதனத்துடன், கணவனின் காதுக்குள் ஹஸ்கி குரலில், “இது.. போதும்.. இது போதும் எனக்கு… நம்ம பரத் பிறக்கும் போது.. பரத் பக்கத்திலேயே நீ.. நீங்க.. இருந்தீங்கள்ல.. இது போதும் எனக்குஹ்!!”என்று சொல்ல,

அவளை ஓர் பூக்குவியலைப் போல மென்மையாக அள்ளி அணைத்துக் கொண்டான் துஷ்யந்தன்.

அவன் விட்ட ஆனந்தக் கண்ணீர்.. அவளுடைய தோளை நனைக்கின்றது. ஆனானப்பட்ட ஆண்மகன்.. அவன் உடல் துணுக்கம் எய்திக் கொண்டிருப்பதுவும் புரிகிறது.

“ஐ வில் நெவர் லீவ் யூ.. நெவர்..நெவ!!” என்றவனின் குரல் மெல்ல மெல்ல தேய்ந்தது.

உடல் அசதியில்.. திரும்ப அவனை அணைப்பது முடியாமல் போக.. கன்னத்தால்.. அவன் முரட்டுக் கன்னம் உரசி.. தன் காதலை வெளிப்படுத்தினாள் யாழினி.

அழகான குழந்தை.. தாயின் மாரில்.. தன் இதழ்கள் குவித்து..கண்களை மூடிக் கொண்டு பால் அருந்திக் கொண்டிருந்த குழந்தை!!

அவன் கைகளில் குழந்தை தரப்படவும்.. இத்தனை நாளும் தனக்கே உரித்தான முரட்டுத் தனத்துடன் இருந்தவனுக்கு.. ஓர் அழகிய மென்மை குடி கொண்டது.

அது தந்தையான ஒவ்வொரு ஆண்மகனும் அனுபவிக்கும் மென்மை!!

தன் மூச்சுப்பட்டால் கூட நோகுமென்றெண்ணி.. மூச்சடக்கி முத்தமிட்டவன்.. அந்தப் பஞ்சுக்குவியலையே கண்குளிரப் பார்த்திருந்தான்!!

"பரத்!!"-குழந்தை பெயர் சொன்னதும் சட்டெனக் கண் திறந்து பார்த்த அது.. அடுத்த நிமிடம் தன் கூசும் விழிகளை மூடிக் கொள்ள.. எல்லையில்லா ஆனந்தம் துஷ்யந்தனுக்கு.

குழந்தையை ஏந்திக் கொண்டே மனைவியைப் பார்த்தவன், "இப்போ தான் என்னோட வாழ்க்கையே முழுமையான மாதிரி இருக்கு ஜானு… என்.. என்னோட பரத்.. அவன் பிறக்கும் போது.. அப்பா.. நான்.. கூ... கூடவே இருந்திருக்கேன்" என்று அவன் உற்சாகத்துடன் சொல்ல,

கணவனின் வதனம் காட்டிய அத்தனை உணர்ச்சி பாவங்களையும் தன் கண்களுக்குள் நிறைத்துக் கொண்டே, மெல்ல புன்னகைத்தாள் சகுந்தலை.

அதன் பின் விஷயம் கேள்விப்பட்டு மகேந்திரன், யாதவின் சித்தப்பா சங்கர்தேவன்.. நண்பன் விக்னேஷ்.. ஸ்ரீராம்.. தோழி ராகவி என ஒட்டுமொத்த பட்டாளமும் வர.. அவ்வறை முழுதும் சந்தோஷத்தில் திளைத்துத் தான் போனது.

அவள் கண்களோ.. வானத்தில் அத்தனை நட்சத்திரங்கள் இருந்தும்.. சூரியனையே கண்கள் பார்ப்பது போல.. அவனையே தான் இமைக்காமல் இரசித்துப் பார்த்துக் கொண்டேயிருந்தது.

ஒன்றரை மாதங்களின் பின்னர்!!

அவர்களின் பிரம்மாண்டமான அறை!!

வெளியே இருந்தும் உள்ளே வீசிக் கொண்டிருந்தது இரவு நேர ஊதல்க்காற்று!!

பனியும், காற்றும் பச்சுடம்புக்காரியான மனைவிக்கும், குழந்தைக்கும் சரியில்லை என்றஞ்சியவன், அறைக்குள் நுழைந்த அடுத்த நொடி செய்த முதல் வேலை.. டெராஸ் பக்கம் திறந்திருந்த பாரிய கண்ணாடிக் கதவுகளைச் சாத்தி.. திரைச்சீலைகளை இழுத்து விட்டது தான்.

மெல்லப் புன்னகைத்துக் கொண்டே திரும்பியவனின் பார்வையில் எக்குத்தப்பாக விழுந்து தொலைத்தது.. பிள்ளைப் பேற்றால் கொஞ்சம் தொளதொளத்திருந்த.. அழகிய இடை!!

சயனிக்கும் புத்தர் சிலை போல அமர்ந்து.. அவனுக்கு புறமுதுகிட்டவனாக, குழந்தைக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்த மனைவியின்

மேடுபள்ளங்களைக் கண்களால் அளந்தவனின் உடலினுள் தாறுமாறாக ஹோர்மோன்கள் சுரக்க,

கள்ளுண்ட மந்தி போல.. அந்த வெள்ளிடையையே சுற்றம் மறந்து போனவனாக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் யாதவன்.

அழகான மனைவி!!

அவளுடைய ஆசிரம ஆயாவின் கை வன்மையில் செய்யப்பட்ட காயகல்பம் எல்லாம் வேளாவேளைக்கு சாப்பிட்டு.. உடல் மெழுகு பூசிய சிலை போல மாறி இன்னும் இன்னும் அழகாகிப் போயிருந்த அவனுடைய மனைவி!!

தன் ஜம்பர் பாக்கெட்டில் இரு கைகளையும் போட்டுக் கொண்டு நின்றவனின் கண்கள் மனைவியையே மேய்ந்தது.

யாதவன் வந்து நிற்பதை அரவம் வைத்துக் கண்டு பிடித்தவள், அவனை நோக்கித் திரும்பாமல், கைகளால் அருகே வருமாறு அழைத்தாள்.

அவனும் மெல்ல சென்று கட்டிலில் அமர, சட்டென திரும்பியவளின் மென்மையான இதழ்கள்.. இலேசாக உரசியது அவனது முரட்டு அதரங்களோடு.

அவனோ அதில் பெருமூச்சு விட்டு தன் தாபம் அடக்கி நிற்க, இவளோ கணவனின் இத்தனை நாளைய விரக தாபம் அறியாமல்,

கிசுகிசுக்கும் குரலில், குழந்தையை சுட்டிக்காட்டி, “இங்கே பாருங்களேன்··· அப்படியே உங்களை மாதிரி..”என்று குழந்தை பரத்தின் முகச்சாயலை, அவள் சுட்டிக் காண்பிக்க மனைவியின் அவதானிப்பில் மவுனமாக நகைத்தான் துஷ்யந்தன்.

அவனோ அவள் அருகாமையில் கிறங்கி நிற்க.. அவள் குழந்தையின் மென் நெற்றியில் முத்தம் வைத்துக் கொண்டே ,

“உங்களை மாதிரியே..”என்று அவள் ஏதோ சொல்ல வர, மெல்லக் குறுக்கிட்டான் நவீன துஷ்யந்தன்.

அவள் இடையூடு கையிட்டுக் கொண்டே அணைத்தவன், அவள் காதுக்குள் அவள் வாசம் முகர்ந்தவனாக, “என்னை மாதிரி ராஜாவாஹ்..??”என்று கேட்டான்.

“ம்ஹூஹூம் இல்லை.. உங்களை மாதிரியே.. அதிரடியா.!!! .”-குழந்தையின் வனப்பை இரசித்துப் பார்த்துக் கொண்டே சொன்னாள் அவள்.

மனைவியின் வர்ணிப்பில் சிரிப்பு வர, கிறங்கிய குரலில், “ம்.. சரி.. அதிரடியாஹ்..”என்று ஒத்துக் கொண்டான் துஷ்யந்தன்.

அவன் கைகள்.. தாபத்தின் எல்லையில்.. அவளது இடையை அழுத்திப் பிடிக்க, இவளோ கண்கள் மூடி அதை இரசித்தவளாக இன்னும் பட்டங்கள் கொடுக்க நாடினாள்.

“ரவுடியா..!!”

“ம்.. சரி.. ரவுடியா..!!.. எது??”என்று முதலில் ஒத்துக் கொண்டவன்.. பிறகு அவள் கேலியுணர்ந்து அதிர்ந்து கேட்க,

இவளோ தன் வெண்முத்து மூரல்கள் தெரிய, “ஹஹஹா” என்று கிளுக்கி நகைக்க.. இன்னும் கொஞ்சம் தாபம் ஊறியது அவனுள்.

குழந்தை பால் குடித்து முடிய அவன் பக்கம் முழுதாக திரும்பியவள், அவனுடைய முரட்டுக்கன்னம் பிடித்தாட்டி,

"ஆமா நீங்க ரவுடி இல்லையா?? உங்க ரவுடிஸம் அறிஞ்ச ஒரே ஆள் நான் தான்..ரவுடி மாதிரி தான் மண்டபத்தில் புகுந்து எனக்கு தாலி கட்டினீங்க? .. ரவுடி மாதிரி தானே இந்த மோதிரம் கூட போட்டு விட்டீங்க..? உங்க பையன் உங்களை மாதிரி ரவுடியா இல்லாமல்.. சாந்தமாவா இருப்பான்? .." என்று சொல்ல, வலிக்காத அவள் பிடியை வலிப்பது போல பாவ்லா காட்டினான் யாதவ்!!

அவளிடமிருந்து கன்னம் விடுவித்துக் கொண்டவன், தன் முழு நீளக்கை டீஷேர்ட்டை மேலேற்றியவன்,

"நீ வேணா பாரு.. என் மகன் பரத் நம்மை விட பெரிய ஆளா வருவான்.."என்று வீராப்பாகச் சொல்ல, அவள் மீண்டும் நகைத்தாள்.

"அது தான் தெரியுமே..!! நீங்க எட்டடி பாய்ந்தால்.. என் பரத் பதினாறடி பாய்ற ரகம்னு !!"என்று, கணவனின் முரட்டு விரல்களைப் பிரித்து, இணைத்து .. சிறு குழந்தைகளைப் போலவே விளையாடியவளாக சொன்னாள் அவள்.

இரவு நேரத்தில்.. ஊரே அடங்கி விட்ட பிறகு உண்டான அமைதியில்.. தனிமையில்.. மஞ்சத்தில்.. கணவனும், மனைவியும் கிசுகிசுப்பான குரலில் பேசிக் கொள்ளும் ‘ஸ்வீட் நத்திங்’ குகள் அழகு!!

அத்தகைய ஓர் அழகிய சுகத்தைத் தான் அனுபவித்துக் கொண்டிருந்தனர் நவீன துஷ்யந்தனும், சகுந்தலையும்.

அந்நேரம் தான் வித்தியாசமான எண்ணம் முகிழ்த்தது அவளுள்.

கணவனின் மூச்சோடு தன் மூச்சு கலந்து கொண்டிருக்க, அவனுக்கு இன்னும் கொஞ்சம் கிறக்கமூட்டும் விதமாக இவள் கேட்டாள்,

“தி க்ரேட் எம்ப்ரர் பரத்.. நம்ம பரத்.. பிறந்துட்டான்.. அவன் வாரிசினால் தான் குருகுலம் உதயமாச்சு.. அப்படீன்னா திரும்பவும் ஒரு குருஷேத்திரம் நடக்குமா பேபி?”என்று.

அவள் அழைத்த ‘பேபி’ . அவள் வாயிலிருந்து உதிரும் ரொம்ப அரிய வகை முத்தும் கூட!! அவன் மீதான காதல் பெருக்கெடுக்கும் வேளைகளில் அவன் அழைக்கும் அழைப்பு. “பேபி” .

அந்த அழைப்பில் கிறங்கிப் போனாலும் கூட, தீர்க்கமான விழிகளுடன் அவன் சொன்னான், ‘‘நீயும், நானும் திரும்ப பிறந்திருப்பது உண்மையானால்.. கலியுக குருஷேத்திரம் நடக்கிறதும் உண்மையாகத் தான் இருக்கும்.. ஆனால் அதைப் பார்க்க நாங்க இருக்கப் போறதில்லை!!’’. என்று.

தங்கள் வம்சாவளிக்குள் பிறக்கப் போகும் குழந்தைகள்.. ஒருத்தரையொருத்தர் வீழ்த்திக் கொள்வது சற்றும் பிடிக்காமல் போக.. மெல்ல சுருங்கியது அவளது மதிவதனம்.

அதற்குள் பரதனும் விழித்துச் சிணுங்கவாரம்பிக்க, ‘‘இல்லைடா கண்ணா.. அம்மா வந்துட்டேன்.. வந்துட்டேன்’’ என்றவளாக குழந்தைப் பக்கம் திரும்பவாரம்பித்தாள் அவள்.

அவன் கண்களோ.. வேற்றுப் பொருளைப் பார்ப்பது போல கள்ளத்தனமாக மனைவியின் அழகுகளை வெறித்து இரசிக்க.. அவன் உணர்ச்சிகள் கரை புரள்வதை உணர்ந்தான் அவன்.

இன்னொரு நிமிடம் இங்கிருப்பது ஆபத்து என்று எண்ணியவன், அங்கிருந்தும் வெளியே விரைந்தான்.

குழந்தை ஈரமாக்கிய ஆடை களைந்து.. வேற்றணியாடை மாட்டி விட்டு நிதானமாக.. அவள் திரும்பிய போது.. அங்கே அவன் அமர்ந்திருந்த இடம் காலியாக இருந்தது.

“பேபி..?”மெல்ல அழைத்துப் பார்த்தவள், அவன் பதிலளிக்காமல் போகவே.. எழுந்து அவனைத் தேடிச் செல்லவாரம்பித்தாள்.

‘எங்கே போனான்..?’என்று தனக்குத் தானே முணுமுணுத்தவளாக, அவனைத் தேடிய போது.. தோட்டத்தில் அங்குமிங்கும் குட்டிப் போட்ட பூனைக் கணக்காய் அலைந்து கொண்டிருப்பது புரிந்தது.

கணவனை நாடிப் போனவள், “ஏன் இந்த ராத்திரியில் இங்கே வந்திருக்கீங்க?”என்று புரியாமல் கேட்க, அவளை நோக்கித் திரும்பியவனின் கண்கள், அதீத பட்ச தாபம் தாங்க முடியாமல் சிவந்திருந்தது.

“அது ஒண்ணுமில்லை..”என்று தன் மனதை அவளிடம் திறந்து வெளிக்காட்டாமல்,

அவளது மயக்கும் விழிகளை ஏறிட்டுப் பார்ப்பதை தவிர்த்து,மென்மையாக, “வெளியே பனியா இருக்கு.. உள்ளே போ..”என்றான்.

வானத்தின் அழகிய பதினைந்தாம் பிறை நிலவில், அவன் கண்கள் ஜொலித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தவளுக்கு.. கணவனின் முக மாறுதல் அப்போது தான் புரிந்தது.

ஓரெட்டு அவனை நாடி வந்து.. அவனுடைய வயிற்றோடு கையிட்டுக் கட்டிக் கொண்டவள், நெஞ்சில் உரிமையோடு சாய்ந்தவளாக,

“முடியாது துஷ்யந்தன் இருக்குமிடம் தான் சகுந்தலாவுக்கு ஹஸ்தினாபுர்..”என்றாள்.

அவளது செயலும், சொல்லும் உணர்த்திய அன்பில்.. மன்னவன் முகத்தில் அழகாய் அரும்பியது ஓர் நகைப்பூங்கொத்து!!

அவனது ஓர் கை.. அவளது முதுகை ஆரத் தழுவ இவன் குறும்பாகக் கேட்டான்,

“ராமன் இருக்குமிடம் தான் சீதைக்கு அயோத்தி மாதிரியா..??”என்று.

அவனது பாதணி தாங்கிய பாதங்கள்.. பனித்துளி அரும்பிய புல்லில் நடக்கத் துணிய, அவனோடு கூட நடந்தாள் பெண்!!

இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

எனை எரிக்கும் ஈர நினைவுகள்!

யாருமில்லா தனிமையில்.. நடுசாமத்தில்.. உற்றவனோடு கைகோர்த்து நடப்பதும் ஓர் சுகம்!! அது அனுபவித்தவருக்கே புரியும் என்று எண்ணிக் கொண்டது அவள் மனம்.

கணவன் வெகுநேரமாக உறையும் பனி இரவில் நிற்பதைக் கொஞ்சம் கூட சகியாதவள், ‘‘இப்போ ஏன் கொட்டும் பனியில வெளியே நிற்கணும்? .. உள்ளே வரலாம்ல..?’’என்று கேட்க, அவளிலிருந்தும் பிரிந்து கொண்டான் அவன்.

அவள் அணிந்திருந்த மெல்லிய சேலையும், லோ கட் ப்ளவுஸூம்..

கூடவே தன் தோட்டத்து மின்விளக்கு கம்பங்களில் இருந்து அடித்துக் கொண்டிருந்த மஞ்சள் நிற ஒளியும்..

சகுந்தலையின் அங்கலாவண்யங்களை அப்பட்டமாக எடுத்துக் காட்ட.. அவளை மீனை விழுங்கத் துணியும் பூனை போல பார்த்து நின்றான் ஓரிரு விநாடிகள்.

பின்பு தன்னைத் தானே சுதாரித்துக் கொண்டே.. பிடரியைக் கோதிக் கொண்டே வேறெங்கோ பார்த்தபடி,

“கஷ்டமா இருக்கு.. அழகான என் ஜானுவை வச்சிக்கிட்டு தள்ளி நிற்கிறது.. ரொம்ப்ப கஷ்டமா இருக்கு..”என்றவன், அவளைப் பார்க்கத் துணியவில்லை.

பார்த்தால் எங்கே எல்லை மீறி விடுவோமோ என்ற பயம் தான் அவனையும் ஆட்டிப் படைக்கிறது.

இம்முறை சகுந்தலையாகவே துஷ்யந்தனை நாடிப் போனாள்.

அவனுடைய கழுத்தில் மாலை போல தன் கரங்களைக் கோர்த்துக் கொண்டவள், அவன் மூக்கோடு மூக்கு உரசி, மிக மிக மெல்லிய குரலில்,

“யாரு உங்களை தள்ளி நிற்க சொன்னா?.. இன்னைக்கு காலையில் தான் குளிச்சேன்..”என்றாள்.

மனைவி சொன்னது கேட்டதும் அவனது அடர்ந்த புருவங்கள் கொண்ட விழிகள் அகல விரிந்தது. இதழ்கள் அழகாய் வளைந்தது.

“ம்?”- உண்மையா என்பது போல கேட்டான் அவன்.

“ம்..!!”என்று தலையாட்டியவளின் கரு நயனங்கள்.. ஒரு வகையான மந்தகாசமான கதிர்வீச்சை சிந்தவாரம்பித்தது.

அந்தக் கண்கள் இருக்கின்றன அல்லவா? அந்தக் கண்கள்..!! அதில் அவனுக்கான காதல் அழைப்புப் புரிய.. அவன் இதழ்க்கடையோரம் அரும்பியும் அரும்பாமலும் தோன்றியது கள்ளச்சிரிப்பு.

“இதையில்ல நீ முதல்ல சொல்லியிருக்கணும்.. என்றவன், அதிரடியாக அவள் இடையூடு கையிட்டவன், அவளைத் தன்னை நோக்கி சட்டென இழுத்தான்.

அவனது பரந்த மார்போடு ஒன்றியது அவளுடைய மென்மைக் கோளங்கள்.

குழந்தை பிறந்ததிலிருந்து.. இத்தனை நாட்கள் தள்ளி இருப்பவனுக்கு.. அவள் விழிகளின் அழைப்பு உன்மத்தம் கொள்ள வைத்தது.

அந்த சுகத்தில்.. இன்னும் சிவப்பாக மாறின அவன் விழிகள். அவளை நெருங்கி அணைத்து இதழோடு இதழ் கவ்வி வேகம் காட்ட, வேரோடு சாய்ந்தது பெண் மனம்.

அவன் ஒரு கை.. இடையில் ஜாலங்கள் காட்ட, மறுகை.. அவளுடைய பின்னழகின் மேடுபள்ளங்களை ஆராய்ச்சி செய்ய கர்மசிரத்தை எடுத்துக் கொள்ள,

இதழ்களை அவனுக்கு கொடுத்து கண் மூடி கிறங்கி நின்றிருந்தாள் துஷ்யந்தனின் சகுந்தலை!!

சிலபல மணித்துளிகளாக நீண்டு கொண்டே போன முத்தத்தின் முடிவில்.. தாபம் தாளாமல்.. அவளுடைய கழுத்து வளைவில் முகம் புதைத்து முத்தம் கொடுக்கலானான் மன்னவன்.

கணவனின் அடுத்த கட்ட முன்னேற்றத்தில், சூரியன் முன் இட்ட பனித்துளியாக கிறங்கிப் போய் நின்றவள், அவனைத் தடுத்து, ‘‘பேபிஹ்.. இதுஹ் கார்டன்…!!’’என்றாள் சகுந்தலை.

அவள் விழிகள் பரபரப்புற்றிருக்க.. இவன் விழிகளோ.. அவளிடம் ஓர் நிம்மதி நாடி யாசித்துக் கொண்டிருந்தது.

ஆசைகளின் உச்சத்தில் இடம், பொருள், ஏவல் பார்க்கும் நிலையில் இல்லை அவன்.

"ஸோ வாட்?.."என்று கேட்ட அந்த ஆண்மகனுக்கு.. அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாமல் போனது.

அவளின் கையை உரிமையோடு பற்றிக் கொண்டவன்.. அடர்ந்த புதர்களின் மறைவை நாடிப் போனான்.

யாதவ் வீட்டு, தோட்டக்காரன்..அந்தப் புதர்களை பதின்மூன்றரையடி உயரத்தில்.. நளினத்தில் நெளிந்து நிற்கும் பெண்களாக வளர்த்திருக்க, அந்த ஏடாகூடமான மறைப்பும் கூட.. இந்தக் காதல் ஜீவிகளுக்கு இனிமையாகவே போயிற்று.

புல்வெளி ஆனது விண்வெளியாக!!

கொடி தான்.. மராமரத் தண்டில் படரும்.. அது இயற்கை!! ஆனால் இங்கே கொடி மீது படர்ந்தது ஓர் மராமரத் தண்டு!!

பிரம்மன் அவனுக்காகயென்றே படைத்த அழகிய பொக்கிஷத்தை.. தன் கண்களுக்குள் ஆசை ஆசையாக நிரப்பிக் கொண்டான் நவீன துஷ்யந்த மன்னன்!!

நெற்றியில் அவன் வைத்த முத்தத்தின் உஷ்ணம் சொல்லியது.. கணவன் அவள் மேல் வைத்திருக்கும் காதலை!!

அவன் தொடங்கும் வரை பொறுமையற்றவள்.. இம்முறை தானாகவே அவனுடைய முரட்டு அதரங்களைக் கவ்விக் கொண்டாள் .

அவனுக்குள்ளே ஓர் மின்சாரம் பாய்ந்த உணர்வு வர… தன் ஒட்டுமொத்த வேகத்தையும், அவளிடம் காட்ட முன்வந்தான் அந்தக் காதல் ராட்சசன்!!

அவனுடைய கைகள்.. அவள் உடலில் எங்கெங்கோ பவனி வர.. இவள் இதழ்களோ.. அவன் காதுக்குள் விட்டுக் கொண்டிருந்தது சுகமூச்சு.

அவள் கைகள்.. அவனது பின்னந்தலை கேசத்தினை அளைய, அவளது கால்கள் அவனது இடுப்பை சுற்றி வளைத்திருக்க.. பூச்சிகளின் ரீங்காரத்துக்கும் மேலாக கேட்டது அவர்களுடைய காதல் ஓசைகள்!!

“ஜ்ஜானூஊஊஹ்..”-உன்மத்த நிலையில் தன் காதலை உணர்த்திக் கொண்டே பிதற்றியவன், முடிவில் அவளது மார்பிலேயே சாய்ந்தான்.

அவனை ஆரத்தழுவி..நெற்றியில் சின்னச்சின்ன முத்தங்கள் பதித்து தேற்றிக் கொண்டிருந்தது சகுந்தலையின் இதழ்கள்.

காதலுக்கு வேண்டுமானால் நிரந்தரத் தீர்வு உண்டு!! ஆனால் காமத்துக்கு? என்றும் தற்காலிகத் தீர்வு தான் என்றார் கவிப்பேரரசு வைரமுத்து.

காதல் நோய்க்கு ஆட்பட்டிருந்தவர்களும்.. தற்காலிகத் தீர்வையே எட்டியிருந்தனர்!!

கணவனின் தோள்புஜத்தில் தலை சாய்த்திருந்தவள்.. கூடலின் களைப்பில் மென்மையான விழிகளுடன் பிறை நிலவைத் தான் பார்த்திருந்தாள்.

“எனக்கொரு ஐடியா..”-அந்த இரவின் அமைதியைக் கெடுத்தவளாகச் சொன்னாள் அவள்.

“என்ன?”-சீரியஸாகக் கேட்டான் புராதனப் புரவி வீரன்.

அவனுடைய அதிரூப சுந்தரியோ, தன் கையில் இருந்த அந்தப் புராதனக் கணையாழியை காட்டி,

“பௌர்ணமி அன்னைக்கு சப்போஸ் பவர் கட்டான இந்த ரிங்கையே டார்ச்சைலட்டா யூஸ்

பண்ணிக்கலாம்ல?’’என்று கேட்க, அவனுள் தோன்றியது குபீர் சிரிப்பு.

எத்தனை பெறுமதி வாய்ந்த கணையாழி.. அதன் பெருமை கடைசி வரை இவள் அறிய வாய்ப்பே இல்லை.. என்று எண்ணியவனாக,

“அறிவுக் கொளுந்துடீ என் ஜானுஊஊ!! .’’என்றவாறு மீண்டும் அவளை அணைத்துக் கொண்டே.. அடுத்த வேட்டைக்குத் தயாரானான் நவீன துஷ்யந்தன்.

ஐந்து வருடங்களுக்கு பிறகு,

காரில், ‘மேனகா ஆசிரமத்தை’ நோக்கித் தன் தவப்புதல்வனோடு பயணப்பட்டுக் கொண்டிருந்தாள் யாழினி.

அவள் அணிந்திருந்த சிங்கள பாணியில் அமைந்த ‘ஒஸரி’ சேலை வேறு.. அவள் ஏதோ முக்கியமான பணி நிமித்தம் செல்லவிருக்கிறாள் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது.

அவளுடைய புதல்வன் பரத்.. பக்கத்திருக்கையில் அமர்ந்து ‘ஐ பேடில்’ திருக்குறள் காணொளியைப்

பார்த்துக் கொண்டு வர, அவனை இரசித்துப் பார்த்தாள் யாழினி.

தந்தையைப் போலவே தீட்சண்யமான கண்கள் அவனுக்கு. அது மட்டுமா தந்தையைப் போல.. அவனுடைய அலை அலையான காற்றில் ஆடும் கேசமும் கூட பரத்திற்கு உண்டு!!

துஷ்யந்தன் சாமானிய தந்தைகளை விடவும்.. பரத் மேல் ஒரு படி மேலான அன்பை சொறிந்ததைக் காணும் போது.. பூர்வ ஜென்மத்தில்.. பரதன் வளரும் போது.. துஷ்யந்தன் அருகில் இல்லையே என்ற நெருடல் காணாமல் போனது அவளுள்.

இவனின் நினைவில் துஷ்யந்தனின் நினைவுகள் ஊற்றெடுக்க, மகனை நெஞ்சோடு அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள் யாழினி.

பதிலுக்கு அவனும் தாயின் கன்னத்தை ஈரமாக்க, இவள் கேட்டாள், “உனக்கு மேனகா ஆசிரமம் பிடிச்சிருக்கா பரத்?”என்று.

ஆசிரமத்தைப் பற்றி பேச்செடுத்ததும் ஐந்து வயது சிறுவனின் வாயெல்லாம் பல்லாக ஆனது.

“ஆமா.. எனக்கு ஆஸ்ரமம் ரொம்ப பிடிச்சிருக்குமா.. விபாங்கன் கிட்ட இருந்து

சமஸ்கிருதம் கத்துக்கறேன்··· தாத்தாக்கிட்டேயிருந்து யோகா கத்துக்கறேன் ... க்ரேன்ட் பாக்கிட்டேயிருந்து கராத்தே கத்துக்கறேன்···" என்று அவன் அவள் வாழ்வில் முக்கியமானவர்களைப் பற்றி விழிகள் விரித்து கதை பேச.. மெல்ல மலர்ந்தது அவள் முகம்

விபாங்கன்.. உத்தரபிரதேசத்தில் இருந்தவனை இலங்கை அழைத்து வந்தது.. அது துஷ்யந்தனின் உபயம்!!

தொல்பொருளியல் ஆய்வாளரான இவள்.. சில சமயம்.. பரத்தை விட்டு செல்ல நேரிடும் போது.. சிறுவனைத் தாயாக இருந்து பார்த்துக் கொள்வது விபாங்கனே தான்!!

பரத்திற்குத் தான் இரண்டு தாத்தாக்களாயிற்றே?

அவன் "தாத்தா என்றழைத்தால் அது இவளின் வளர்ப்புத்தந்தை மகேந்திரன். அதுவே 'க்ரேன்ட்பா' என்றழைத்தால் யாதவனின் சிறிய தந்தை சங்கர்தேவன்!!

ஆசிரமம் வரவும்.. குழந்தையோடு இறங்கியவளை வரவேற்க ஓடி வந்தனர் இரு தாத்தாக்களும். மகேந்திரனும், சங்கர்தேவனும்!!

யாதவனின் சிறிய தந்தை.. தன் பங்கு பிஸினஸ் பொறுப்பை நவீன கனிஷ்கனிடம் ஒப்படைத்து விட்டு, மேனகா ஆசிரமத்தில் யாழினியின் வளர்ப்புத்தந்தையோடு வந்து.. தியானம், யோகா என்று காலத்தைக் கழித்தாலும்.. அவரின் முகத்தில் தேஜஸ் இன்னும் ஒளிர்ந்து கொண்டு தானிருந்தது.

குழந்தை ஓடி வந்து.. இரு பெரியவர்களின் காலையும் கட்டியணைக்க, அவர்களின் கண்கள் மிருதுவாக ஆனது.

குழந்தையை அள்ளித் தூக்கிக் கொண்ட 'க்ரேன்ட்பா' குழந்தை கன்னத்தில் இறுக்கி முத்தம் வைக்க,

யாழினியின் வளர்ப்புத் தந்தையோ.. அவன் தலையில் கை வைத்து கேசம் கலைத்து, 'ஹேய் குட்டிப்பையா… இன்னைக்கு தாத்தா சொல்லித் தந்த குரல் மனப்பாடம் பண்ணியாச்சா?'' என்று கேட்க, அவசரமாக ஆடியது அவன் தலை.

குழந்தையைப் பார்த்தவள், ''பரத்.. தாத்தா சொல்ற பேச்சைக் கேட்டு சமத்தா இருக்கணும்.. ஓகேயா..? அப்பா ஆஃபீஸ் போய்.. லன்ச் கொடுத்துட்டு.. அம்மா ஆபிஸ் போறேன்.. எனக்கு

இன்னைக்கு இம்போர்டன்ட் மீட்டிங் இருக்கு..ஈவ்னிங் அப்பாவோட வந்து உன்னை பிக்அப் பண்ணிக்குறேன்..''என்று சொல்ல,

''ம் சரிமா..''என்று மெல்ல தலையாட்டி.. தாய்க்கு விடை கொடுத்தான் அவன்.

பெரியவர்களின் பாதம் தொட்டு ஆசி வாங்கியவளாக அங்கிருந்து, தன் கணவனின் அலுவலகம் நோக்கிக் கிளம்பினாள் யாழினி.

ஐந்து வருடங்களுக்கு முன்பு எரிந்த அதே டாஸிலிங்க் ஆடையகம்!!.

அதை விடவும் கூடிய மிளிர்வுடன்.. பத்துமாடி அதிநவீன கட்டிடமாக திடகாத்திரமாக நின்றிருந்தது அது!!

ஒவ்வொரு தளமும்.. அதற்குரிய கை வண்ணத்தில்.. அவனைப் போல மிளிர்ந்து கொண்டிருந்தது. இத்தனை குறுகிய காலத்தில்.. அவனது ஆடையகத்தை மீண்டும் தூக்கி நிறுத்தியிருந்தான் அவன்.

அது தான் நம் துஷ்யந்தன்!!

வாஷ்ரூமிற்குள் இருந்து, டிஷ்யூ பேப்பரால் கை துடைத்துக் கொண்டே.. தன்னறைக்குள் நுழைந்தவனின் விழிகள் சற்றே இடுங்கியது.

அவனது அலுவலக அறையில்.. அன்று ஏதோ ஓர் வித்தியாசத்தை உணர்ந்தவன்.. அழுத்தமான காலடி எட்டுக்கள் எடுத்து வைத்து,

சாளரத்தின் திரைச்சீலைகளை நாடிப் போனவனது கை, அதற்குள் இருந்து எதையோ ஒன்றைப் பற்றி இழுத்தது.

இழுத்த இழுப்பில்.. அவன் இதழ்களில்.. தன் நெற்றியை இடித்துக் கொண்டு வந்து நின்றவள்.. வேறு யாராக இருக்க முடியும்? அது அவனது சுரூபினிப் பெண்ணே தான்!!

கணவன் தன்னைக் கண்டதும்.. அதிர்வான் என்று ஆவலாக எதிர்பார்த்தவள் ஏமாந்தாள். அவன் முகம் எந்தவிதமான அதிர்ச்சி பாவத்தையும் காட்டவில்லை.

அவளது பிறை நுதலோடு.. தன் நெற்றி முட்டியவன், “என்ன இது சின்னப்பிள்ளைத்தனமா??ஒழிஞ்சிருந்தா கண்டு பிடிக்க முடியாதா என்ன?”என்று கேட்டான்.

"எப்படி என்னைக் கண்டுபிடிச்சீங்க பேபி?"- கணவனின் அணைப்பில் கிறங்கிப் போனவள்.. அவன் சட்டை பட்டன்களை திருகியவளாகக் கேட்டாள்.

உடனே பதில் சொல்லாமல் அதிரடியாக அவளது கழுத்து வளைவை நோக்கிக் குனிந்தவன்.. தன் தாடை மயிர்கள் குத்தும் இலேசான கிசுகிசுப்பு மூட்டினான்.

அந்த பிடியில்.. கொஞ்சம் நெளிந்தாள் பெண். இவனோ அவள் வாசத்தை இழுத்து முகர்ந்தவனாக, "உன் வாசம் தான்.. உன் காட்டுமல்லி வாசம்.. அது தான் காட்டிக் கொடுத்திச்சு" என்றான் அவளது மன்னவன்.

உலகமே பார்த்து வியக்கும் அத்தனை புருஷ லக்ஷணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற ஆண்மகன்.. தன்னெதிரே.. தன் கடைக்கண் பார்வைக்கு கிறங்கிப் போய் நிற்பதை… காதல் கமழ பார்த்துக் கொண்டேயிருந்தாள் அவள்.

அவளது இதழும், இவனது இதழும் சேர இம்மியளவு இடைவெளியில் தன் ஜானுவை நாடிப்

போனவன்,“இப்படியேபார்த்திட்டிருந்தேன்னா” என்றதும் தான் தாமதம்,

அதற்கு மேலும் கணவனைப் பேச விடாமல்.. அவனது முரட்டு அதரங்களை சிறை செய்திருந்தன அவளது மென்மை அதரங்கள்.

மனைவியின் அன்பில்.. அவளது சின்ன அதிரடியில் நெகிழ்ந்து போய் நின்றிருந்தவனின் கைகள், காதலுடன் அவளை அணைத்துக் கொண்டன.

இருவருக்குள்ளும் இருக்கும் காதல் கொழுந்து விட்டு எரியும் வரை.. அவர்களது ஈர நினைவுகளும்..பசுமையாக எரிந்து கொண்டே தான் இருக்கும்!!